# மெஹர் பிரபு

## (MEHER PRABHU)

### இக்கால அவதார புருஷரின் வருகை

**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின்

# வாழ்க்கை வரலாறு

## (MEHER BABA'S LIFE HISTORY)

### குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு ஏழு

## (VOLUME SEVEN)

### 1939 - 1941

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, ஜூலை 2021
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/27.01.2025

# பாபாவைப் போல் எவரும் இல்லை

'உலகில், பாபாவைப் போல் எவரும் இல்லை!' ஹெடி மெர்டென்ஸின் (HEDI MERTENS) இந்த வார்த்தைகள், மெஹர் பாபாவின் தனிப்பட்ட தொடர்பில் இருந்த ஒரு சுவிஸ் பெண்மணியின் உள்ளார்ந்த உணர்வின் ஆழத்தை விவரிக்கின்றன. மெஹர் பாபாவை சந்தித்த எவரும், அவரைப் போன்ற ஒருவரை இதுவரை சந்தித்ததில்லை; மெஹர் பாபாவைப் போல் எவரும் வாழவுமில்லை. மெஹர் பாபா நேசித்ததைப் போல் ஒருவர் எவரையும் இதுவரை நேசித்ததுமில்லை. மெஹர் பாபாவின் மௌனத்தில் மறைந்திருக்கும் அறிவுடன், எந்தக் கல்வித்திறன் அல்லது ஞானத்தையும் ஒப்பிட முடியாது. மெஹர் பாபாவைப் போல் எவரும் இல்லை! மெஹர் பாபாவைப் போல் எந்த ஒரு துறவியும், போதகரும் வாழ்ந்ததும் இல்லை. கடந்த காலகட்டத்தின் அவதார புருஷர்களான ஸொராஸ்டர், ராம், கிருஷ்ணா, புத்தா, இயேசு, முஹம்மது ஆகியோரைத் தவிர இதுவரை வாழ்ந்த எந்த குருநாதரையும் மெஹர் பாபாவுடன் ஒப்பிட முடியாது.

ஏற்கனவே தமிழ் மொழியில் வெளிவந்த ஏறக்குறைய 2000 பக்கங்கள் மேலும் எதிர்வரும் ஏறக்குறைய 4000 பக்கங்களை ஒருவர் படித்து அறிந்து கொள்ளும் தருணத்தில், இந்த வாழ்க்கை வரலாறு வெளிப்படுத்துவதை அவர், மெஹர் பாபாவின் எல்லையில்லா பெருங்கடலை நோக்கி அழைத்துச் செல்லும் உள் பயணமாக ஏற்றுக்கொள்கிறார். மெஹர் பாபாவைத் தவிர, வேறு எந்த மனிதனும் அத்தகைய பணிக்குத் தகுதியானவர் அல்ல, ஏனெனில் கடவுளுக்காகவும், மனித குலத்திற்காகவும், பிரபஞ்சத்திற்காகவும் வேறு எந்த மனிதனும், தன்னை இந்த அளவிற்கு அதிகமாக அர்ப்பணிக்கவில்லை. மெஹர் பாபாவின் மௌனம் கலைக்கப்பட்டு, அது அனைத்து வார்த்தைகளையும் கடந்து செல்லும் அந்த நாள் வரும். கடவுள் வெவ்வேறு காலகட்டங்களில், யுகம் யுகமாக வேறு வேறு நபருடன் பேசியுள்ளார் என்று அறியப்படுகிறது. கடவுள் பேசுகிறார், தொடர்ந்து பேசுகிறார் என்பது அதன் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது; ஆழ் இதயத்திலிருந்து வரும் அந்த வார்த்தைகளும் அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. கடவுள் பேசுவது என்பது காலவரம்பற்ற தருணமாகும். மெஹர் பாபாவின் மௌனத்தையும் அன்பையும் உணர்ந்தவர்கள் இதுபோன்ற தருணங்களை அனுபவித்திருக்கிறார்கள்.

மெஹர் பாபாவின் அன்பின் ஆழத்தை உணர்ந்தவர்களுக்கு ஒருவர் என்ன சொல்ல முடியும்? இந்தப் புத்தகம், மெஹர் பாபா, அவரை வெளிப்படுத்த அழைப்பு விடுக்கிறது; இந்தப் புத்தகம், அவரது சத்குருக்கள் ஐவரும் அவரது மகிமையை வெளிப்படுத்த அழைப்பு விடுக்கிறது; மேலும் இந்தப் புத்தகம், அவருடைய புனிதர்கள் மற்றும் மஸ்துகள் அவரது வாழ்வின் உண்மை தன்மையை அறிந்து, அவரது விருப்பத்தை வெளிப்படுத்தவும் நிறைவேற்றவும் அழைப்பு விடுக்கிறது. மெஹர் பாபாவின் வாழ்க்கை நம் அனைவருக்கும் ஒரு

சவாலாகத் திகழ்கிறது: “நீங்கள் எவ்வளவு ஆழமாக சிந்திக்க முடியும்? எவ்வளவு ஆழமாக உணர முடியும்? எந்த அளவிற்கு உள்ளூர கிரகிக்க முடியும்?”

இந்தத் தொகுப்பு இரண்டாம் உலகப் போரின் காலகட்டத்தைப் பிரதிபலித்து விவரிக்கிறது; ஆனால் அந்தப் போர்கள், அந்தக் கொடூர சம்பவங்கள், அந்தத் தீமைகள் அனைத்தும் மனிதனின் உள்ளளவிலான போராட்டத்தின் பயங்கரமான பிரதிபலிப்பு, அவனது மனக்கொந்தளிப்பு அவனுள் நரகமாக உருவெடுக்கின்றன. ஒவ்வொரு மனிதனின் உள்ளளவிலான போராட்டத்தில் மெஹர் பாபா அதீத அக்கறை கொண்டுள்ளார். தன்னைத் தானே எதிர்த்துப் போராடுபவர்கள், பொய்யும், போலியுமான ‘நான்’ எனும் அகந்தையைக் கட்டுப்படுத்த அல்லது நிர்மூலமாக்க முயற்சிப்பதன் அர்த்தத்தை அவர்கள் எவ்வாறு விவரிக்க முடியும்? புனிதர்கள் மற்றும் மஸ்துகளின் கந்தல் உடையும், நிர்வாண நிலையும் ஒரு சுல்தானின் செங்கோல் மற்றும் உடை வாளை விட மதிப்புமிக்கது: “கடவுள் நிர்வாணமாக மாறும் நிலைக்கு மட்டுமே அஞ்சுகிறார்.”

இந்த வரலாற்றுத் தொகுப்பு, மெஹர் பாபாவின் ‘**உலகளாவிய வெளிப்பாட்டை**’ ஒரு நீண்டகால எதிர்பார்ப்போடு அன்பர்களைத் தயார்படுத்தும் திட்டங்களுடன் நிறைவுறுகிறது. ‘**வெளிப்பாடு**’ மர்மத்தால் நிரப்பப்பட்ட ஒரு வார்த்தை; மேலும் கடவுள் மற்றும் அவரது படைப்பைப் போலவே அதுவும் ஆழமான மர்மமாகும். இந்த மர்மத்தை ஆழ்ந்து ஆராயும்போது, ஒருவர் வேறுபட்ட அர்த்தங்களைக் கண்டுகொள்ள முடிகிறது. ‘**வெளிப்பாடு**’ என்பது ஒரு தெய்வீக ஜீவன் வெளிப்படும் ஒரு வடிவம் என்பதும் தெளிவாகிறது, மேலும் இது பரமாத்மாவின் பொருள் வடிவமாகும். மெஹர் பாபாவின் வாழ்க்கையை வெளிப்படுத்துவது அவரது தெய்வீகத்தின் படிப்படியான வெளிப்பாட்டுடன் மர்மமாக இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் ஒருவர் ஏற்றுக்கொள்ள முடிகிறது. மெஹர் பாபாவின் வாழ்க்கை கதை அவரை வெளிப்படுத்துகிறது அல்லது வெளிச்சமிட்டுக் காட்டுகிறது என்பதை ஒருவர் நம்ப முடிகிறது; மேலும், ஒருவர் மெஹர் பாபாவின் வரலாற்றுப் புத்தகங்களைப் புரட்டும் போது, அவரது அளவிறுதியற்ற அன்பு, அறிவு, ஆனந்தம் அனைத்தும் நம் கைகளில் ஒரு குழந்தையைப் போலத் தவழ்வதை அனுபவிக்க முடிகிறது.

# நிகழ்வுகளின் காலவரிசை

**1939**
- ஆகஸ்ட் 02 - 14, மெஹர் பாபா ஆண், பெண் மண்டலியுடன் மைசூரை நோக்கிப் பயணம், ஷோலாபூர், பெங்களூர் ‘லிங்க்ஸ்’ பங்களா வருகை

**1939**
- நவம்பர் 28 - 29, மஸ்துகளைத் தொடர்புகொள்ள மெஹர் பாபா, தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி பயணம்.

**1939**
- டிசம்பர் 17, பைரமங்களாவில் மெஹர் பாபாவின் உலகளாவிய ஆன்மீக மையத்திற்கான அடித்தளம் அமைக்கும் விழா

**1939**
- டிசம்பர் 25 - 31, கிறிஸ்துமஸ், மெஹராவின் பிறந்தநாள் மற்றும் புத்தாண்டை ஒட்டி பெண்மணிகளின் குறுந்நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன

**1940**
- ஜனவரி 4 - 10, தென்னிந்தியாவுக்கு ரயிலில் பயணம் - திருவிதாங்கூர், திருவனந்தபுரம், கேப் காமரின் (கன்னியாகுமரி), மதுரை, திருச்சூர்

**1940**
- ஜனவரி 15, ஹாஸன் - நீலப்பேருந்தில் குறுகிய பயணம் ‘ஆனந்த்’ பள்ளத்தாக்கு - சுற்றுலா

**1940**
- பிப்ரவரி 15, மெஹர் பாபாவின் 46ஆவது பிறந்தநாள் லிங்க்ஸ் பங்களாவில் இசை நிகழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது

**1940**
- ஏப்ரல் 1 - 11, நீலப்பேருந்தில் கோவா பயணம் - அர்சிகேரே, ஷிமோகா, கெர்ஸோப்பா, கார்வார் வழியாக பன்ஜிம்

**1940**
- ஏப்ரல் 15 - 28, அம்போலி, ஸாவந்த்வாடி, பெல்காவ்ம், சிப்லூன், மஹாபலேஷ்வர், பஞ்ச்கணி டைகர் வேலி குகை விஜயம்

**1940**
- ஏப்ரல் 29 - மே 3, பஞ்ச்கணியிலிருந்து அஹமதுநகர், ஹேப்பி வேலி விஜயம் பின்னர் மெஹராபாத் வருகை

**1940**
- ஜூன் 1, மெஹராபாத் மேல்மலையில் அமைந்த மஸ்த் ஆசிரமத்தில் பாபாவின் ஏகாந்தவாசம் ஆரம்பம்

**1940**
- ஜூலை 3, மெஹர் பாபா ஆண், பெண் மண்டலி, மஸ்துகளுடன் ரயிலில் ராஞ்சி பயணம்

**1940**
- ஜூலை **19 - 25,** மெஹர் பாபா குழுவுடன் கொல்கத்தா விஜயம்; சக்ரதார்பூர் வழியாக மெஹராபாத் வருகை.

**1940**
- நவம்பர் **1 - 4,** இலங்கை பயணம் - தனுஷ்கோடி - தலைமன்னார் - (ரயில், படகு வழியாக) வெயங்கோடா வருகை.

**1940**
- டிசம்பர் **5 - 8 ,** காலிகட் பயணம் - மன்னார், தனுஷ்கோடி, ராம்நாடு - பின்னர் நீலப்பேருந்தில் திண்டுக்கல், பழனி, பொள்ளாச்சி, பாலக்காடு வழியாக காலிக்கட்.

**1940**
- டிசம்பர் **23 - 26, 42** பேர் அடங்கிய குழுவுடன் ஆக்ரா வழியாக ஜெய்ப்பூர் பயணம்.
- **1941,** ஜனவரி **03 - 08,** மஸ்துகள் தொடர்பு - ஜோத்பூர் வருகை.

**1941**
- பிப்ரவரி **03 - 18,** ஜெய்ப்பூரிலிருந்து (**5000** மைல் மஸ்த் பயணம்) டெல்லி, லக்னோ, பெனாரஸ், ஜகந்நாத் பூரி, மதராஸ் (ராம்நாடு, திருச்சி), நாக்பூர் பயணம்.

**1941**
- பிப்ரவரி **25** - மார்ச் **11,** நீலப்பேருந்தில் மலைவழி பயணம் - ஜெய்ப்பூர், லூதியானா, லாஹூர், மாண்ட்கோமெரி, முல்தான், லோரலாய், குவெட்டா

**1941**
- ஏப்ரல் **10,** லாஹூர், லக்ஸர் வழியாக டெஹ்ரா டூன் வருகை
- மே **15,** அஜ்மீர் வருகை

**1941**
- ஜூன் **11,** மேற்கத்தியர்களில் இருவர் (எலிஸபெத், நோரினா) அமெரிக்காவில் ஆன்மீக மையம் நிறுவும் நோக்கத்தில் தாயகம் திரும்பினர்

**1941**
- ஜூலை **18,** மெஹராபாத் வருகை
- ஆகஸ்ட் 01, கடுமையான ஏகாந்தவாசம் ஆரம்பம்

**1941**
- செப்டம்பர் **03** - அக்டோபர் **24,** பஞ்ச்கணி ஏகாந்தவாசம், இரண்டு வாரங்களில் இந்தியாவில் **3000** மைல் மஸ்த் பயணம், மீண்டும் பஞ்ச்கணி வருகை

**1941**
- அக்டோபர் **17,** மெஹர் பாபா - உபாஸனி மஹாராஜ் இறுதி சந்திப்பு (தஹிகாவ்ம்)

**1941**
- அக்டோபர் **28** - நவம்பர் **12,** பஞ்ச்கணியிலிருந்து நீலப்பேருந்தில் பயணம் - கார்வார் - பெல்காவ்ம் - தார்வாட்.

**1941**
- நவம்பர் **14 - 17,** மெஹர் பாபா குழுவுடன் ரயிலில் தமிழ்நாடு, நாகப்பட்டினம் மஸ்த் (சட்டி பாபா) சந்திப்பு

**1941**

- நவம்பர் **17 - 24,** பெங்களூரிலிருந்து மெஹர் பாபா குழுவுடன் பெல்லாரி, பீஜாப்பூர் வழியாக தார்வாட் வருகை.

**1941**

- நவம்பர் **27 - 28,** நீலப்பேருந்தில் மெஹர் பாபாவின் கடைசி பயணம் - தார்வாட் - சத்தாரா - மெஹராபாத் வருகை.

**1941**

- டிசம்பர் **12,** துனி நாள் - தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இந்த தேதியை துனி தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது

**1941**

- டிசம்பர் **24,** சத்குரு உபாஸனி மஹாராஜ் பௌதீக உடலைத் துறந்தார்

**1941**

- தொடரும்...

# பொருளடக்கம்


நீலப்பேருந்து பயணம் - பெங்களூர் ஆசிரமம் .................... 3

நீலப்பேருந்து பயணம் - கோவா ............................................ 94

ஏகாந்தவாசம் - மெஹராபாத்...............................................107

ராஞ்சி பயணம்.........................................................................129

மீண்டும் ஏகாந்தவாசம் - மெஹராபாத் .............................150

இலங்கையில் ஏகாந்தவாசம் ................................................187

ராம்நாடு, காலிகட், ஜெய்ப்பூர் பயணம்................................217

குவெட்டா பயணம் ..................................................................245

டெஹ்ரா டூன், அஜ்மீர் ...........................................................263

மெஹராபாத், பஞ்ச்கணி ஏகாந்தவாசம்............................281



பெங்களூர் ‘மஸ்த்’ ஆசிரமத்தில் மெஹர் பாபா - **1940**
**(**MEHER BABA IN BANGALORE ‘MAST’ ASHRAM - 1940**)**

# நீலப்பேருந்து பயணம் - பெங்களூர் ஆசிரமம்

**(Blue Bus Tour – Bangalore Ashram)**

இங்கிலாந்தில் மருத்துவ கல்வியில் தேர்ச்சி பெற்ற பின்னர், 28 வயதான டாக்டர் வில்லியம் டான்கின் (DR. WILLIAM DONKIN), 1939 ஜூலை 27ஆம் நாள் மும்பைக்கு வந்தார். காக்கா பாரியா, சாஞ்சி இருவரும் அவரை சந்தித்து, டாக்டர் அலு கம்பட்டாவின் (ALU KHAMBATTA) அழைப்பை ஏற்று, மறுநாள் டாக்டர் டான்கினை அவரது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, பின்பு மூவரும் பூனா வழியாக மெஹராபாத் வந்து சேர்ந்தனர். ஜூலை 29ஆம் நாள், டாக்டர் டான்கின், மெஹர் பாபாவின் மண்டலியில் ஒருவராக இணைந்தார். அன்று முதல், பாபாவும் பிற அனைவரும் அவரை 'டான்' (DON) என்று அழைத்தனர். காலம் இதைக் குறித்து இவ்வாறு கருத்துரைத்தது: 'லண்டனில் தனது அன்பிற்குரியவரின் முதல் பார்வையில் இருந்த போதை தரும் மதுபானத்தை ருசித்தது, டான் அனைத்து உலக இன்பங்களையும், முயற்சிகளையும் கைவிடுமாறு கட்டாயப்படுத்தி, அவரை என்றென்றும் பாபாவின் பாதங்களில் பணிய வைத்தது.'

மெஹர் பாபா, விரைவில் மெஹராபாத்தை விட்டு வெளியேறவிருந்ததால், 1939 ஜூலை 30 அன்று நௌரோஜி, அவரது குடும்பத்தினர், சாஞ்சியின் சகோதரி உட்பட பலர் பாபாவைப் பார்க்க வந்தனர்.

ஜூலை 30 வரை, ஆண் பெண் மண்டலியின் ஆசிரமத்தை ஜபல்பூருக்கு (JABALPUR) மாற்றுவது குறித்த விவாதம் தொடரவே, ஜால் கேரவாலா அங்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். ஆகஸ்ட் 1 முதல் ஜபல்பூரில் தங்கப் போவதாக, பாபா, கேரவாலாவிற்குத் தெரிவித்திருந்தார்; மேலும் மாண்ட்லாவில் (MANDLA) ஆன்மீக மையம் ஒன்றை நிறுவுவது குறித்த நீண்ட விவாதங்கள் நடத்தப்பட்டன. ஆனால், ஜால், திடீரென இந்தியாவின் இன்னொரு பகுதிக்கு மாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டது, பாபா ஜபல்பூரை விரும்பினாலும், அவர் தனது திட்டத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலையில், அதற்கு பதிலாக அவரது தலைமையகத்தை மைசூருக்கு மாற்ற முடிவு செய்தார்; அங்கு அவரும் மண்டலியும் முன்பு மூன்று ஆண்டுகள் தங்கியிருந்தனர்.

ஜபல்பூரில் ஏற்கனவே அனைத்து ஏற்பாடுகளும் முடிவுற்ற நிலையில், மண்டலி அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். மைசூரில் எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை என்றாலும், பாபா அங்குப் பயணம் செய்ய முடிவு செய்தார். ஆகஸ்ட் 1ஆம் நாள் பாபா இப்படிக் குறிப்பிட்டார்: **"எல்லா குழப்பங்களுக்கும் மத்தியில் எனது சுத்திகரிக்கும் பணி துல்லியமாகச் செய்யப்படுகிறது. ஜால்**

**கவலைப்படத் தேவையில்லை; அனைத்தையும் எனது திறவுகோல் இந்த வழியில் திருப்பியது.**"

மைசூரில் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய சாஞ்சி, காளேமாமா இருவரும் உடனடியாக அனுப்பப்பட்டனர், மேலும் மாண்ட்லா சொத்து சம்பந்தமான விவகாரங்களை சமாளிக்க, எரச், பப்பா ஜெஸவாலா இருவரும் ஜபல்பூருக்குப் புறப்பட்டனர்.

1939 ஆகஸ்ட் 2ஆம் நாள் காலை 6:30 மணிக்கு, பாபா மெஹராபாத்திலிருந்து எலிஸபெத்தின் புதிய காரில் மெஹரா, மணி, நாஜா, கோர்ஷெத் ஆகியோருடன் புறப்பட்டார், மேலும், நீலப்பேருந்து இதர பெண்மணிகளை அழைத்துச் சென்றது.

ஆதி சீனியர், காக்காவுடன் முன் இருக்கையில் அமர்ந்தபடி ஷோலாபூர் வரைப் பேருந்தை ஓட்டிச் சென்றார். விஷ்ணு, பைதூல், குஸ்தாஜி, ஒரு சில மண்டலி மற்றும் பெண் ஊழியர்கள் ரயிலில் மைசூர் நகருக்கு (ஆகஸ்ட் 13 அன்று) அனைத்து பொருட்கள் மற்றும் சில செல்லப்பிராணிகளுடன் அனுப்பப்பட்டனர். டாக்டர் கனி பூனா சென்றார்.

பாதையில், பேருந்து ஒரு நதிக்கரையில் நெடுநேரம் மாட்டிக்கொண்டது; இறுதியில் விவசாயி ஒருவரின் பல காளைகளைக் கொணர்ந்து பேருந்தை மீட்க வேண்டியிருந்தது. பாபாவும் பெண்மணிகளும் ஷோலாபூரில் பயணிகள் விடுதியிலும், மண்டலி பக்கத்து பங்களாவிலும் ஒரு நாள் தங்கியிருந்தனர். திரள்திரளாக வந்த கொசுக்களின் காரணமாக, அவர்கள் ஆகஸ்ட் 4 அன்று, ஏக்ருக் டேங்கிற்கு (EKRUK TANK) அருகில் ஹிப்பர்காவ்ம் (HIPPERGAON) கிராமத்தில் அமைந்த பயணிகள் பங்களாவிற்கு மாற்றப்பட்டனர். டான், நீலு இருவரும் இங்கிருந்த குழுவுடன் வந்திணைந்தனர். சகன் உணவிற்கு ஏற்பாடு செய்வதற்காக, ரயிலில் ஷோலாபூருக்கு அனுப்பப்பட்டார். அவ்வேளையில் காடேக்கர் (GADEKAR), அவரது மனைவி குணாதாய் (GUNATAI) ஆகியோர் ஷோலாபூரில் வாழ்ந்து வந்தனர், அங்கு, காடேக்கர் மாவட்ட கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்தார். அவர்கள் குழுவின் உணவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, மெஹர் பாபாவின் சகவாசத்தில் இருக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

மைசூரிலிருந்து சாஞ்சியின் தொலைத்தந்திக்காக, பாபா ஷோலாபூரில் காத்திருக்க வேண்டியிருந்தது. சாஞ்சி அங்குப் பல பங்களாக்களை ஆய்வு செய்தார், ஆனால் பாபாவின் அனுமதியின்றி எதையும் வாடகைக்கு எடுக்க முடியாத நிலை. சாஞ்சி, பாபாவிற்குத் தகவலைத் தெரிவித்து, மிக்க சிரமத்துடன் குழு, பெங்களூரில் விடுதிகளில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார், இதற்கிடையில் மைசூரில் பல பங்களாக்களை, தனிப்பட்ட முறையில் சாஞ்சி ஆய்வு செய்ய முடிந்தது.

துக்காராம் ஷோலாபூர் வந்ததும், பாபா, ஆதி சீனியரை மெஹராபாத்திற்குத் திருப்பி அனுப்பினார். இக்குழு 1939, ஆகஸ்ட் 9 அன்று பயணத்தைத் தொடர்ந்து சத்தாரா, கோலாபூர், ஹரிஹர் (HARIHAR) வழியாக

பெங்களூர் சென்று சேர்ந்தனர்; பேருந்தை ஓட்டுவதில் டான் உதவியாக இருந்தார். கிழக்கத்திய பெண்கள் ஒரு பார்சி ஹோட்டலிலும், மேற்கத்தியர்கள் வேறு சில இடங்களிலும் தங்க வைக்கப்பட்டனர்.

அடுத்த நாள், ஸர் மிர்ஸா இஸ்மாயில் (SIR MIRZA ISMAIL), மெஹர் பாபா அவரது ஆசிரமத்தை பெங்களூரில் நிறுவுமாறு பரிந்துரைத்தார். பாபா அவ்வாறு செய்யத் தீர்மானித்தால், ஸர் மிர்ஸா ஆசிரமத்திற்குரிய ஒரு நிலத்தை ஏற்பாடு செய்ய உதவ முடியும் என்றார். அவர் உடனடியாக, பாபாவை பெங்களூரிலிருந்து 22 மைல் தொலைவில் அமைந்த 'பைரமங்களா' (BYRAMANGALA) என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றார்; பாபா, அந்த இடத்தைப் பெரிதும் விரும்பி, ஏற்றுக்கொண்டார். பெங்களூர் 'ஹை கிரவுண்ட் ஸங்கி சாலை'யில் (SANKEY ROAD, HIGH GROUND) அமைந்த இஸ்மாயிலின் சகோதரருக்குச் சொந்தமான 'லிங்க்ஸ் பங்களா'வை (LINKS BUNGALOW) வாடகைக்கு எடுத்து, ஆகஸ்ட் 14ஆம் நாள் பாபாவும் பெண்மணிகளும் அந்த பங்களாவில் தங்கினர்.

பெங்களூரில் தங்குவதற்கான முடிவு திடமானதும், மெஹராபாத்திலிருந்த ஏனைய மண்டலி அழைக்கப்பட்டனர். அதன்படி, காளேமாமா, அவரது மகன் முரளி, சிது, மனைவி மற்றும் குழந்தைகள், சுவாமிஜி ஆகியோர் ஆகஸ்ட் 15 மதியம் வந்தனர். விஷ்ணு, பைதூலின் குழுவுடன் மைசூரிலிருந்து அதே நேரத்தில் வந்தார்; தொடர்ந்து சகன், மனைவி ஷாந்தா, மகள் சகுந்தலா ஆகியோருடன் மெஹராபாத்திலிருந்து அழைக்கப்பட்டார். லிங்ஸ் பங்களா (LINKS BANGALOW) அருகில், எண் 4 'பாலஸ் சாலை' (PALACE ROAD) சந்திப்பிலிருந்து கால் மைல் தொலைவில் அமைந்த ஒரு பெரிய வீடு ஆண்களுக்காக வாடகைக்கு எடுக்கப்பட்டது; இதுவும் இஸ்மாயிலின் சகோதரருக்குச் சொந்தமானது, அவர் பல முறை பாபாவை சந்தித்தார், மேலும் அவரது பங்களாக்களை, கௌரவமான ஒரு குழுவிற்கு வழங்கியது அவரது பாக்கியம் என்பதை வெளிப்படுத்தினார். மேலும் சிலர் பெங்களூர் பங்களாவிற்கு அழைக்கப்பட்டனர். எரச் தனது தந்தை, தாய், இரண்டு சகோதரிகள் மற்றும் சகோதரருடன் ஆகஸ்ட் 14 அன்று வந்தார்; அவரது சித்தி பானுமாசி கேரவாலா மற்றும் அவரது மகன்கள் தாதி, ஸாம் அவர்களும் உடன் வந்தனர்.

லிங்க்ஸ் பங்களாவில், பாபாவுடன் 24 பெண்கள் வாழ்ந்து வந்தனர்: கிழக்கத்திய பெண்கள் மெஹரா, மணி, நாஜா, மன்ஸாரி, கேட்டி, ஸூனாமாசி, அவரது மகள் கோர்ஷெத், வாலு, விஷ்ணுவின் தாயார் காக்குபாய், பைதூலின் குடும்பம் (ஸொல்டூன், ஸர்வர், டவ்லா), மூன்று சகோதரிகள் (குலாமாசி, பானுமாசி, கெய்மாய்) மற்றும் கெய்மாயின் மகள்கள் மனு, மெஹரு. ஏழு மேற்கத்திய பெண்கள் எலிஸபெத், நோரினா, கிட்டி, ரானோ, நான்னி, நதீன் மற்றும் ஐரீன்.

பைரமங்களா நிலத்தைப் பார்வையிட்ட பிறகு, நோரினா, சாஞ்சி இருவரும் ஆசிரமத்திற்கான திட்டங்களை வகுப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர்.

லக்கி (LUCKY) எனும் குரங்கை கவனிக்கும் பொறுப்பு நோரினாவிற்கு வழங்கப்பட்டது; அது ஒரு குறும்புக்கார குரங்கு. ஆகஸ்ட் 19 அன்று மாலை, ஸர் மிர்ஸா, லிங்க்ஸ் பங்களாவிற்கு வந்து பாபாவின் முன்னிலையில் தரையில் அமர்ந்தார். பாபா, நோரினாவையும் உடனடியாக வருமாறு அழைத்தார். அந்த நேரத்தில், நோரினா, லக்கி உருவாக்கிய ஒரு குளறுபடியில் அறையை சுத்தம் செய்து கொண்டிருந்தார். பாபாவின் அழைப்பு வந்ததும், அவர் ஒரு கையில் துடைப்பம் இன்னொரு கையில் வாளியுடன் அவரிடம் ஓடினார்; அப்போது நோரினா பழைய, கந்தலான ஆடையை அணிந்திருந்தார். திவானைப் பார்த்து, **"இளவரசி நோரினா மாட்சபெல்லியை சந்தியுங்கள்"** என்று பாபா கூறியதும் அவர் தடுமாற்றத்தில் சங்கடமாக உணர்ந்தார். பாபா, நோரினாவிற்கு, சுத்தம் செய்யும் பணியை வழங்கவில்லை என்பதும் அவருக்குத் தெரியும்.

ஸர் இஸ்மாயில், மாறாக, நோரினா, அந்தஸ்துமிக்க பெண்மணி ஒருவர் இப்படித் துடைப்பத்தைக் கையில் ஏந்திச் செல்வதைப் பார்த்துத் திகைத்துப்போனார்! அவர் பாபாவிடம், "உங்கள் அன்பு அற்புதமானது! ஒரு செல்வந்தர் பின்னணியில் வாழ்ந்து, கற்றறிந்த மேற்கத்திய பெண்மணி இதுபோன்ற வேலையை செய்கிறாரா? அற்புதம்! அவர் டஜன் கணக்கில் ஊழியர்களை ஈடுபடுத்த முடியும், ஆனால் உங்கள் அன்புதான் அவரை இப்படிச் செய்யத் தூண்டுகிறது. உங்கள் அவையில் ஒரு துடைப்பத்தைக் கையில் பிடிப்பது அவர் அதிர்ஷ்டம்!" இதைக் கேட்ட நோரினாவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து, அவர் உணர்ந்த காயத்தைத் துடைத்தது. பாபா ஏன் அந்த சந்திப்பிற்குத் தன்னைத் தயார்ப்படுத்தவில்லை என்பதை அவர் இப்போது உணர்ந்தார்.

பாபா, திவானிடம் குறிப்பிட்டார், **"இங்கே நீங்கள் பொருள் வளத்தின் சக்தியைக் கொண்டுள்ளீர்கள்; ஆன்மீக ரீதியில், எல்லா இடங்களிலும், எனது சொந்த வழியில் நான் சக்தியாக வியாபித்திருக்கிறேன். எனவே நாம் 'சக்திகள்' குறித்து பேச வேண்டாம். உங்களை எனது சொந்தங்களில் ஒருவராக பாவித்து, நான் உங்களுடன் மிகவும் வெளிப்படையாகப் பேச விரும்புகிறேன்; நான் இந்த மையத்தைத் தனித்துவம் மிக்கதாக நிறுவ விரும்புகிறேன்."** பாபா அவருடன் திட்டம் மற்றும் அதன் நிதி குறித்து விவாதித்தார். திவான் அனைத்தையும் புரிந்துகொண்ட உணர்வுடன் மிக்க ஒத்துழைப்புடன் இருந்தார்.

இதற்கிடையில், டாக்டர் தேஷ்முக் ஆகஸ்ட் 20ஆம் தேதி ஸேகாவ்மில் (SEGAON) மஹாத்மா காந்தியை அவரது ஆசிரமத்தில் சந்தித்ததாக, பாபாவிற்குக் கடிதம் எழுதினார். பாபாவைப் பற்றிய தேஷ்முகின் சமீபத்திய புத்தகத்திற்கு ஓர் அறிமுக முன்னுரையை எழுத காந்தி மறுத்துவிட்டார். தேஷ்முக் கூறியபடி, காந்தி இன்னும் பாபாவுடன் நல்லிணக்கமுள்ளவராக இருந்தார், மேலும் மெஹர் பாபா ஜர்னலைப் (MEHER BABA JOURNAL) படித்து மகிழ்ந்தார்; தேஷ்முக் அவருக்கு ஒவ்வொரு மாதமும் அதை அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்.

கிழக்கத்திய தத்துவத்தில் அறிஞரான பார்சி இனத்தைச் சார்ந்த ஜஹாங்கிர் வான்கேடியாவுடன் (JEHANGIR WANKEDIA) 1939 ஆகஸ்ட் 23 அன்று ஆதி சீனியர் பெங்களூருக்கு வந்தார். வான்கேடியா தனது வாழ்க்கையில் சில நெருக்கடிகளை எதிர்கொண்டதால் மூன்று வாரங்கள் பெங்களூரில் தங்க அனுமதிக்கப்பட்டார்.

பப்பா ஜெஸவாலா அவரது பணியிலிருந்து ஓய்வு பெற்று, பெங்களூருக்கு வந்து குடும்பத்துடன் ஆசிரமத்தில் வசித்து வந்தார். ஆகஸ்ட் 24ஆம் தேதி, மெஹர் பாபா, பப்பாவிடம் காக்கா, ஆதி சீனியர் இருவருடன் சென்று, ஒரு மஸ்தைத் தேடி 'லிங்ஸ்' பங்களாவிற்கு அழைத்து வருமாறு கூறினார். மஸ்தின் பெயர் 'சாதர்வாலா' (CHADDARWALLA) - ஆறாவது ஆன்மீகத் தளத்தில் வாழ்ந்து, பெங்களூரின் பொறுப்பாளராக இருந்தார். "காக்காவும் ஆதியும் என்னை விட அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள் இதைச் சிறப்பாகச் செய்வார்கள்" என்று மழுப்பி முணுமுணுத்தார் பப்பா.

ஆனால் பாபா, "இந்த மஸ்த் பணியில் நீங்கள் பங்கேற்க விரும்புகிறேன். உங்கள் மூலம் செய்ய எனக்கு பல பணிகள் உள்ளன. மஸ்த் உங்களைக் கடித்தாலும் பயப்பட வேண்டாம்!" என்றார்.

பப்பா பயந்து, "பாபா, எனக்கு நீரிழிவு நோய் உள்ளது. அவர் என்னைக் கடித்தால் நான் நோய்வாய்ப்படுவேன்!" என்றார்.

பாபா வலியுறுத்திக் கூறினார், "நீங்கள் சென்றாக வேண்டும். நீங்கள் இங்கே மஸ்த் ஆசிரமத்தின் பொறுப்பில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், எனவே நீங்கள் இந்த வேலையைச் செய்ய வேண்டியது அவசியம்."

இந்த யோசனை பப்பாவிற்குச் சரியாகப்படவில்லை, இருந்தாலும் அவர், அதே நாளில் காக்கா மற்றும் ஆதியுடன் நகரத்திற்கு காரில் புறப்பட்டுச் சென்றார். அவர்கள் காலையிலிருந்து மாலை வரை மஸ்தைப் பின்தொடர்ந்து, அவர்களுடன் வருமாறு அவரை வற்புறுத்தினர். இறுதியில் பொழுது சாய்ந்த பின்பு, மிக்க சிரமத்துடன், மஸ்த் அவர்களுடன் காரில் வருமாறு தூண்டப்பட்டு, லிங்ஸூக்கு அழைத்து வரப்பட்டார். வழியில், மஸ்த் பப்பாவை அறைந்து சாபமிடத் தொடங்கினார், ஆனால் அவர் அதைப் பொறுத்துக் கொண்டார். அவர்கள் பாபாவைப் பார்த்தபோது, பப்பா அறிவித்தார், "இதோ உங்கள் மஸ்த்! மிகப் பெரிய சிரமத்திற்குப் பிறகு மட்டுமே எங்களால் அவரை அழைத்து வர முடிந்தது, இப்போது நீங்கள் அவருடன் உங்கள் வேலையைச் செய்ய முடியும்!"

"நீங்கள் என்னை அல்லாவின் இல்லத்திற்கு அழைத்து வந்தீர்கள்!... நான் நெருப்பில் எரிகிறேன்!... என்னை இங்கிருந்துப் போக விடுங்கள்" என்று சாதர்வாலா உரத்த குரலில் கத்தினார். அவர் சமையலறையை நோக்கி விரைந்து, பின்பு திரும்பி வந்தார்; மிகவும் அமைதியற்றவராகவும், எப்படியேனும் விரைவில் வெளியேறும் நோக்கத்திலும் இருப்பதாகத் தோன்றினார். பாபா அவரை நீராட்ட விரும்பியும் மஸ்த் மறுத்துவிட்டார்.

பாபாவின் சைகையைப் புரிந்துகொண்ட காக்கா, மஸ்தை அழைத்துச் சென்று மீண்டும் காரில் அமர வைத்தார். "**நான் மீண்டும் வருவேன்**" என்று கூறி, குறிப்பிடத்தக்க விதத்தில் அந்த மஸ்த் "எனது கணக்கு தீர்க்கப்பட்டது!" எனக் கூறினார்.

மஸ்த் வெளியேறுவதைக் கண்ட பப்பா, வருத்தத்தில் பாபாவிடம், "அவருடன் பணிபுரியாமல் அவரை ஏன் திரும்பிச் செல்ல அனுமதித்தீர்கள்? அவரை இங்கு அழைத்து வர நாங்கள் எவ்வளவு சிரமப்பட்டோம் என்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு துளித் தண்ணீர் கூட அருந்தாமல், நாள் முழுவதும் அவரைப் பின்தொடர்ந்தோம்; அத்தகைய உழைப்புக்குப் பிறகு, நீங்கள் அவருடனான உங்கள் பணியைச் செய்யாமல், அவரைத் திருப்பி அனுப்புகிறீர்கள்? இது என்ன?" என வினவினார்.

பப்பாவின் எரிச்சலூட்டும் தன்மையால் பாபா அவரது சிரிப்பை அடக்கமுடியாமல் அகமகிழ்ந்து விளக்கினார், "**மஸ்த் நல்ல மனநிலையில் இல்லை**, **இப்போது நான் அவருடன் பணிபுரிய முடியாது**."

ஆகஸ்ட் 25 அன்று மஸ்தை வற்புறுத்தி அழைத்துவரும் நோக்கத்தில், பாபா மீண்டும் காக்கா, ஆதி சீனியர் இருவரையும் சாதர்வாலாவிடம் அனுப்பி வைத்தார், ஆனால் அவர் பாபாவின் பங்களாவிற்கு வர மறுத்துவிட்டார். அவர் காக்காவைத் தலையில் அடித்து, இருவர் மீதும் எச்சிலை உமிழ்ந்தார்!

பெங்களூரின் காலநிலைத் திடீரென மாறி, குளிரத் தொடங்கியது; ஏழு பெண்களும் இரண்டு ஆண்களும் ஜுரத்தால் அவதிப்பட்டனர்; பாபாவின் உடல்நிலையும் சரியில்லாமல் காணப்பட்டது. ஆனால் 102° உடல் உஷ்ணமும், குறைவான தூக்கமும் இருந்தபோதிலும் அவர் வழக்கம்போலத் தனது பணியைத் தொடர்ந்தார். பெங்களூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் காக்காவால் கண்டுபிடிக்கப்பட்ட ஒவ்வொரு மஸ்தையும் பாபா நீராட்டி, உணவூட்டினார்.

நௌரோஜி தாதாசாஞ்சி, மகள் நர்கிஸுடன் ஆகஸ்ட் 24ஆம் நாள் பெங்களூருக்கு வந்தார். அடுத்த நாளிலிருந்து, பைரமங்களா திட்டம் குறித்து, மெஹர் பாபா, நௌரோஜிக்கு (அவர் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரராக இருந்தார்) அறிவுறுத்தல்களை வழங்கினார். அறைகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு கட்டமைப்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் பலவற்றைக் குறிக்கும் வகையில், அங்குக் கட்டப்படும் கட்டிடங்களை எவ்வாறு 'குறியீடாக' உருவாக்க விரும்பினார் என்பதை விரிவாக விளக்கினார். "**எந்தவொரு குறிப்பிட்ட மதத்திற்கும் இணங்காமல்**, **வடிவமைப்பு உலகளாவியதாக இருக்க வேண்டும்**" என்று பாபா முடித்தார், மேலும் கட்டிடங்களின் வெளிப்புற தோற்றத்திற்கு இடைநிலை கால கூர்மாட சிறப்பு பாணி (GOTHIC - கோதிக்) மற்றும் பழைய இந்திய பாணிகளின் கலவையை, பாபா பரிந்துரைத்தார். ஐந்து நாட்களுக்குப் பிறகு, மும்பைக்குத் திரும்புவதற்கு முன்பு நௌரோஜி சில கடினமான ஓவியங்களை உருவாக்கினார்.

1939, ஆகஸ்ட் 28ஆம் நாள், ஆண்களுடன் நிகழ்த்திய வழக்கமான உரையாடலின் போது, மெஹர் பாபா திடீரென அறையில் இருந்த ஒவ்வொருவரிடமும், **“கடவுள் எங்கே?”** என வினவினார்.

அனைவரும் தன்னிச்சையாக பதிலளித்தனர். “எல்லா இடங்களிலும்” என்று ஜஹாங்கிர் வான்கேடியா கூறினார்.

டாக்டர் நீலு மார்பைச் சுட்டிக்காட்டி, “இதயத்தில்!” என்றார்.

விஷ்ணு, “ஆத்மாவில்!”

“இது நித்திய கேள்வி” என்று ஒருவர், சரியான பதிலை அளிக்கும் இயலாமையை வெளிப்படுத்தினார்.

கடைசியாக, பாபா, டானிடம் கேட்டார். படுக்கையில் அமர்ந்திருந்த பாபாவைச் சுட்டிக்காட்டிய டான், “பாபாவில்! பாபா கடவுள்” என்று பதிலளித்தார்.

ஒரு கணம் அந்த பதில் அனைவரையும் திக்குமுக்காடச் செய்தது. டானின் பதில் மிகவும் எளிமையானது, மிகவும் இயல்பானது. பின்பு பாபா எழுத்துப்பலகை வழியாக விளக்கினார்:

**நீங்கள் என்னை, உங்கள் குருநாதராக ஏற்றுக் கொண்டு, என்னை பரிபூரணமானவராகவும், எல்லையற்ற ஒருவராகவும் உறுதியாக நம்பினால், டான் கூறியது மட்டுமே சரியான மற்றும் தர்க்கரீதியான பதில்.**

**‘நீங்கள்’ எங்கு இல்லையோ அங்குக் கடவுள் இருக்கிறார்! ‘உங்கள்’ என்பதன் அர்த்தம் உங்களின் பொய்யும், போலியுமான ‘நான்’, அதாவது காக்கா, ஆதி, எரச், பைதூல் போன்ற உங்களின் போலி தோற்றமிக்க மாய வாழ்க்கை. ‘நீங்கள்’ எங்கு இருக்கிறீர்களோ அங்குக் கடவுள் இல்லை! கடவுளிடமிருந்து நீங்கள் பிரிந்து இருப்பதெல்லாம் கற்பனை. உங்களின் பொய்யான ‘அகந்தை’ நீங்கள் அப்படிப்பட்டவர்கள் என்று நினைக்க வைப்பது மட்டுமின்றி கடவுள் உங்களுக்குள் ஒருபோதும் வாழ முடியாது என்று நம்பும் விதத்தில் உங்களை வழிநடத்துகிறது! உங்கள் போலியும் பொய்யுமான ‘அகந்தை’ மறைந்து, ‘நான்’ போகும்போது, ’கடவுள்’ வருகிறார்!**

குழுவின் பல்வேறு பதில்களைக் குறிப்பிட்டு, பாபா மேலும் விளக்கினார்:

**கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்று சொல்வது பொதுநிலைப்பாடு; இது ஒன்றும் புதிதல்ல. உலகெங்கிலும் உள்ள பண்டிதர்களும், பாதிரியாரும் இதைத்தான் சொல்கிறார்கள், வேதாந்தம் இப்படிப்பட்ட விளக்கங்களால் நிரம்பியுள்ளது. வெறுமனே சொல்வதில் பயனில்லை. நீங்கள் கடவுளைத் தேட வேண்டும், கடவுளைக் கண்டுகொள்ள வேண்டும், கடவுளை உணர வேண்டும், கடவுளை (எல்லா இடங்களிலும்) அனுபவிக்க வேண்டும்.**

**கடவுள் இதயத்தில் இருக்கிறார் என்று சொல்வது, மீண்டும் உண்மையின் சிறிய பாகம் மட்டுமே. கடவுள் எல்லா இடங்களிலும் இருப்பதானால், நீங்கள் அனைவரும் அறிந்ததும் சொல்வதும் போல், இரத்தத்தை உந்தித் தள்ளும் இருதயத்தின் எல்லைக்குள் மட்டும் அவரை**

ஏன் அடைத்து வைக்க வேண்டும்? அவர் ஏன் உங்கள் தலை, விரல், கால்விரலில் இருக்க முடியாது? நீங்கள் ஏன் அவரை ஒரு குறிப்பிட்ட பகுதியில் பார்க்க முயற்சிக்க வேண்டும், அதே நேரத்தில் மற்றொரு பகுதியில் இல்லை?

வானை நோக்கிக் கண்களை உயர்த்தி, உச்சத்திலும் உச்சத்திலான, பிரியமான இறைவனை, வானுலகில் எங்காவது பார்க்க முயற்சிப்பது ஒரு பொதுவான தவறு மட்டுமின்றி, குறிப்பிடத்தக்க மனித பலவீனமாகும். அல்லது, உடலில் தேடும்போது, மனிதர்கள் அதிகமாக விரும்பும் பாகங்களில் மட்டுமே அவரைக் கண்டுகொள்வது: அதாவது, இதயத்தில் அல்லது கண்களில், இதர பாகங்களில் சமமாக வேறு எங்கும் இல்லாதவர் போல் - உடலின் பின்புறம் அல்லது எலும்புகளில், நகங்களில் அல்லது சதைகளில்; கடவுள் ரோஜாவில் மட்டும் இருக்க, முள்ளில் இல்லையா? அல்லது மலர்களில் மட்டும் இருக்க, அசுத்தத்தில் இல்லையா?

நீங்கள் விரும்பும் பொருட்களில் கடவுளைப் பார்ப்பதும், நீங்கள் விரும்பாத அல்லது வெறுக்கும் ஒன்றிலும் கடவுள் இருப்பதை நினைத்து நடுங்கும் இந்த பலவீனத்தைக் கடந்துசெல்ல வேண்டும்.

நல்லது, தீயது என்ற இந்த எல்லா யோசனைகளுக்கும் மேலாக நீங்கள் உயர்ந்து, மலர்கள், மாசுக்கள் அனைத்தையும் ஒன்றாகப் பார்த்து, உணர்ந்து, கடவுளை எல்லாவற்றிலும் சமமாகக் காணும்போதுதான், நீங்கள் உண்மையான ஒன்றை அறிந்துள்ளீர்கள், கற்றுக்கொண்டீர்கள் என்று கூறலாம். இல்லையெனில், இதுவெல்லாம் கூண்டுக்கிளியின் தவறான கருத்தாக, மாயையாகவே இருக்கும்.

இதைத் தவிர, மனித உடலில், கடவுள் வாழ்வதற்கான மிகச் சிறந்த, உன்னதமான உறைவிடம் இதயம் என்பதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டாலும், மனிதர்கள், கடவுளால் குடியிருக்க அர்ப்பணிக்கப்பட்ட இந்த சிறந்த உறைவிடத்தில் கூட, எவ்வளவுதான் தன்னிச்சையான அன்போடும் பாசத்தோடும் அது வழங்கப்பட்டாலும், தூய்மையிலும் தூய்மையான இறைவன், அந்த இதயம் எந்த ஒரு மாசும் படியாமல், அப்பழுக்கற்ற நிலையில் இருப்பதுவரை, அதில் நுழையமாட்டார் என்பதைத் தெளிவாக நினைவில் கொள்ளவேண்டும். சிறிதளவிலான மனம் அல்லது உடலின் அசுத்தங்களும் தடைகளும் கூட அவர் நுழைவதைத் தடுக்கிறது! ஆகவே, கடவுள் தங்கள் இதயங்களில் குடியிருக்க வேண்டும் என்று உண்மையிலேயே விரும்புபவர்கள், முற்றிலும் சுத்தமாகவும், வெறுமையாகவும், சுயநல ஆசைகள், காமம், கோபம், பேராசை, வெறுப்பு இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

கடவுள் ஆத்மாவில் இருக்கிறார் என்பது, அதை உண்மையில் அனுபவிக்கும் வரை, மீண்டும் முழுமையற்றது, தெளிவற்றது, வெறும் வெற்றுப்பேச்சு. விஷ்ணு பிறரிடம் பாபா கடவுள் என்று கூறுகிறார். அவர் அதை முழு மனதுடனும், ஆழமான உணர்வுடனும் கூறுகிறார்; ஆனால் நான்

அவரிடம், ‘கடவுள் எங்கே?’ எனக் கேட்கும்போது அவர் ஆன்மாவைச் சுட்டிக்காட்டுகிறார்!

இது எல்லாமே தத்துவம், உலர்ந்தது, எந்தப் பயனுமற்றது. வேதாந்தம் முழுவதும் இதுவாக நிறைந்துள்ளது. எல்லா சமூகத்தின் மரபுவழி பிரிவுகளுக்கும், எல்லா இடங்களிலும் உள்ள பண்டிதர்கள் அதை உளறித் தள்ளுகிறார்கள்; அவர்கள் தங்கள் மனதிற்கு இதமான நம்பிக்கைகளுடன் உறுதியாக ஒட்டிக்கொண்டு, சடங்கு சம்பிரதாயங்களின் நான்கு சுவர்களைத் தாண்டிச் செல்ல விரும்பவில்லை. பண்டிதர்கள் தங்கள் வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தைப் பற்றி சிறிதளவும் வழிகாட்டும் குறிப்பின்றி மறைந்து விடுகிறார்கள். மதகுருமார்களின் குருட்டு நம்பிக்கையால் வெகுஜன மக்கள் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள், அவர்கள் உண்மையான அனுபவமுள்ளவர்களிடமிருந்து உண்மைகளைப் பேசவோ அல்லது கேட்கவோ கூட மறுக்கிறார்கள், மேலும் அதைப் பற்றி யோசிப்பதைக் கூட அவதூறாகக் கருதுகிறார்கள். அவர்கள் தத்துவப் பேச்சுக்களிலும் கற்றுத் தேர்ந்த சொற்பொழிவுகளிலும் மட்டுமே ஆர்வம் காட்டுகிறார்கள், அவற்றில் திருப்தி அடைகிறார்கள். அதனால்தான் இதை நான் அனுபவம் இல்லாத மேடை நாடகம் என்று கூறுகிறேன். இது அனைத்தும் பயனற்ற உலர்ந்த தத்துவம். ஒருவர் கற்று, அறிந்து கொள்வது மட்டுமின்றி, உணர்ந்து அனுபவிக்க முயற்சிக்க வேண்டும்.

(வான்கேடியா மீண்டும் கூறினார், “இது கடவுளை உணரத் துடிக்கும் ஒரு நித்திய போராட்டம்!”)

இது உண்மை. ஆனால் ஒருவர் வெறுமனே அமர்ந்து முயற்சி செய்யக்கூடாது என்று அர்த்தமல்ல!

பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாது என்று நினைத்து ஒருவர் நம்பிக்கையற்றவராக வளரக்கூடாது, அதை அடைய எந்த முயற்சியும் எடுக்காமல் இருக்கக்கூடாது. கடவுளுக்கான போராட்டமும் தேடலும் ஒவ்வொரு அடியிலும் அதிக ஆற்றல், உறுதிப்பாடு மற்றும் வீரியத்துடன் தொடர வேண்டும். மேலும், அவரைத் தேடுவதைத் தவிர, வேறு எந்த உலக சிந்தனையும் இருக்கக்கூடாது என்பதற்கான ஏக்கம் மிகவும் தீவிரமாக வேண்டும். இறை ஞானத்தின் அனைத்து ஆதாரங்களையும் தேடித் துருவுவதில் எந்தவொரு வாய்ப்பையும் நழுவவிடாமல், இந்த நோக்கத்தை அடையும் ஒரே எண்ணத்தில் ஆர்வலர் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

ஆனால் இறைநிலையை அடைந்த ஒரு குருநாதரைக் கண்டுகொள்வதே சிறந்த, எளிதான மற்றும் விரைவான வழி. இருப்பினும், இது அனைவருக்கும் எளிதானது அல்ல, ஏனெனில் சிலர், ஒரு பரிபூரண குருநாதரைக் கண்டுகொள்ளும் முன், தவறாக வழி நடத்தும் போலி குருக்கள் மற்றும் புனிதர்களின் செல்வாக்கின் கீழ் வருகிறார்கள். ஆனாலும், அந்த நித்திய தேடலுக்கான ஏக்கம் எல்லா நம்பிக்கையுடனும்,

**உற்சாகத்துடனும் இருக்குமானால், அவரை நேராக இறுதி இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் பரிபூரண குருநாதரை நிச்சயமாகக் கண்டுகொள்வார்!**

**ஒரு குருநாதரின் சகவாசத்தில் இருப்பவர்கள், மன நிறைவுடன் இருப்பதால், அனைத்தையும் கண்டுகொண்டதாகக் கருதக் கூடாது. ஏனெனில், அது உண்மைதான் என்றாலும், அவர்களுக்கு உண்மையான அனுபவம் இல்லை. முயற்சி இல்லாமல், அனுபவத்தை ஒருபோதும் அடைய முடியாது. ஆகவே, உங்கள் குருநாதர் வெளியளவில் தோற்றமளிப்பதைப் போலல்லாமல், அவருடைய உண்மை நிலையைக் காண முயற்சி செய்யுங்கள். எங்கும் வியாபித்திருக்கும் குருநாதரின் இறை வாழ்வைக் கண்டுகொள்ள மனமார முயலுங்கள்.**

பின்பு பாபா ஒவ்வொருவரிடமும், "**கடவுள் எங்கே இல்லை?... கடவுள் எங்கு இல்லாமல் இருக்கிறார்?**" எனக் கேட்டார்.

இது அனைவரையும் மீண்டும் சிந்திக்க வைத்தது; எவரும் திருப்திகரமான பதிலை அளிக்க முடியவில்லை. இறுதியில் சாஞ்சி, "எங்கும் இல்லாமல் இல்லை!" என்று பதிலளித்தார்.

பாபா விளக்கினார், "**எங்கு 'அகந்தை' இருக்கிறதோ அங்குக் 'கடவுள்' இல்லை! இருமைத்தன்மை இருக்கும் இடத்தில் கடவுள் இருக்கமாட்டார்! ஆனால் கடவுள் எங்கும், எல்லா இடங்களிலும் வியாபித்திருப்பதால், இருமைத்தன்மை வாழ வழியின்றி மாயையாகத் திகழ்கிறது.**"

கடவுளைப் பற்றிய இந்த விவாதம் எழுந்ததன் காரணம் என்னவெனில், தத்துவம் மற்றும் இறையியல் தலைப்புகள் குறித்து வான்கேடியா, பாபாவிடம் பல கேள்விகளைக் கேட்க விரும்பினார். ஆனால் அவற்றைக் கேட்பதற்கு முன்னரே, பாபா, எல்லா கேள்விகளுக்கும் பதிலளித்தார். இறுதியில், பாபா அவரிடம், "**ஆசிரியர் ஒருவரின் பாத்திரத்தை வகிப்பதற்கு பதிலாக, எப்பொழுதும்** (கற்றறியும் ஆர்வத்துடன்) **ஒரு மாணவராக இருப்பது நல்லது**" என்று கூறினார்.

ஆகஸ்ட் 31 அன்று ஆதி ஜூனியர், மெமோ மற்றும் டாக்டர் கனியின் குடும்பத்தினருடன் ஜால்பாய், பூனாவிலிருந்து பெங்களூருக்கு வந்தார். அர்னவாஸும் வந்து 'லிங்ஸ்' பங்களாவில் தங்கினார்.

ஒன்பது மாதங்களுக்கு முன்பு 'நீலப்பேருந்து' பயணத்தின் தொடக்கத்திலிருந்து, எதிர்வரும் போரைப் பற்றி மெஹர் பாபா தினமும் குறிப்பிடுவது வழக்கம்.

1939, செப்டம்பர் 1ஆம் நாள், அடோல்ஃப் ஹிட்லரின் கீழ் இருந்த ஜெர்மன் இராணுவம், போலந்தை ஆக்கிரமித்தது. அன்றைய தினம் பாபா, ஆதி சீனியர், ஜால்பாய், எலிஸபெத், டான் ஆகியோரை, ஒருவருக்குப் பின் ஒருவராக, அருகிலிருந்த கடைக்கு அனுப்பி அண்மை கால வானொலி செய்தியைக் கேட்டுவரச் செய்தார். இது முழு நாள், இரவு மற்றும் மறுநாள் வரைத் தொடர்ந்தது, ஆதி சீனியர், ஜால், ரூஸி (பெங்களூரில் குழுவுடன்

தங்கியிருந்தவர்) மூவரும் ஒரு வானொலியை வாடகைக்கு எடுத்து வந்து, ‘லிங்ஸ்’ பங்களாவில் நிறுவியதால் ஒவ்வொரு மணி நேரமும் செய்தியைக் கேட்க முடிந்தது.

செப்டம்பர் 1ஆம் நாள், மெஹர் பாபாவின் ஆரம்பகால ஆதரவாளர்களில் ஒருவரான பெஸு ஈரானியின் (PESU IRANI) திடீர் மரணம் குறித்து, பூனாவிலிருந்து தொலைத்தந்தி வந்தது. செய்தியைக் கேட்டு பாபா புன்னகைத்த போது மண்டலி அதிர்ச்சியடைந்தனர், ஆனால் பாபா இவ்வாறு விளக்கமளித்தார், “**இது, நீங்கள் ‘வாழ்க்கை’ என்று அழைப்பதன் முடிவாகும், ஆனால், இது, உண்மையில் உங்கள் உலக வாழ்க்கையின் முடிவாகுமா? இதுபோன்ற ஒரு நல்ல, இளம், வலிமையான சக தோழர் திடீரென, எதிர்பாராத விதமாக மரணத்தை சந்திக்கிறார்... பலர் போரில் இறந்துவிடுகிறார்கள்... ஆனாலும், அவர்கள் என்றென்றும் வாழ்வார்கள் என்று எதிர்பார்ப்பது போல, மக்கள் அழுது புலம்புகிறார்கள், சுயநலத்துடன் நடந்துகொள்கிறார்கள்.**”

அடுத்த நாள் தொடர்ந்து பாபா குறிப்பிட்டார், “**வாழ்க்கை என்பது தொடர்ந்து வரும் அனுபவங்களுக்குத் தேவையான எண்ணற்ற வடிவங்களை உள்ளடக்கியது. மரணம் அந்த நீண்ட வாழ்க்கையில் ஒரு இடைவெளி.**”

பின்னர் அவர் துடுக்காக, “**வாழ்க்கை, நான் முன்பு கூறியது போல, பத்தினி, கத்தி மற்றும் கலவரத்தால் நிரம்பியது**” என்றார்.

1939, செப்டம்பர் 3ஆம் நாள், மாலை 5:30 மணி உலகச் செய்தியில், ஜெர்மனிக்கு எதிரான போரை அறிவிக்கும் சேம்பர்லினின் (CHAMBERLAIN) உரையைக் கேட்ட பாபா இவ்வாறு கூறினார்:

**ஆசீர்வதிக்கப்பட்ட வயதான மனிதரின் பேச்சு என்னைத் திருப்திப்படுத்தி உள்ளது. போர் அறிவிக்கப்பட்டுள்ளதை நினைத்து நான் மகிழ்ச்சியடைகிறேன். பெரிய பாரம் குறைந்து நான் நிம்மதியாக இருக்கிறேன். போரைக் குறித்த முடிவிற்கு வராத பட்சத்தில், சந்தேகத்திற்கு இடமின்றி, நான் அந்தப் பொறுப்பை உணர்ந்தேன். இறுதியில் இங்கிலாந்து தனது வார்த்தையை நிலைநிறுத்தியது. சேம்பர்லின், வயதாகி, வேகம் குறைந்தவராக இருந்தாலும், உறுதியாக இருக்கிறார். ஹிட்லரின் அதிகாரம் ஒடுக்கப்படும் வரை ஓய்வெடுக்க மாட்டார் என்று அவர் கூறியதற்கு இது ஒரு சான்று. இப்போது அது ஜெர்மனி மற்றும் நாஸிஸத்திற்கு எதிரான போராட்டமாக இருக்கும். இது ஒரு நீண்ட நெடிய போராகவும் இருக்கும்.**

**அப்பாவி முஸோலினி** (MUSSOLINI) - **ஆனால் அவர் அதற்கு தகுதியானவர். ஹிட்லர்** (HITLER) **சுத்த பைத்தியம், ஆனால் முஸோலினி ஒரு கஞ்சன்.**

**ஜெர்மனி பீதியில், “நான் போராட மாட்டேன்” என்று கூறி பின்வாங்காவிட்டால், இப்போது, போர் இறுதி வரைத் தொடரும். அது**

**பின்வாங்கினால், ஜெர்மனிய மக்கள் ஹிட்லரையும் பிற (நாஸி - NAZI) தலைவர்களையும், அழிவிற்குக் கொண்டு சென்றதற்காகக் கண்டந்துண்டமாக வெட்டுவார்கள்.**

**இது அனைத்தும் எனது திருவிளையாடல். நான் இங்கே அமைதியாக அமர்ந்திருப்பதை நீங்கள் காண்கிறீர்கள், ஆனால் இந்த மூலையில் நான் அமைதியாக என்ன செய்கிறேன் என்பதை எப்படி அறிந்து கொள்வது? இப்போது முழு உலகமும் பரபரப்பான உணர்வு நிலையில் உள்ளது.**

**இந்த நேரத்தில், குறிப்பாக ஐரோப்பாவில், மக்களின் நிலை என்ன என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாது - ஓய்வில்லை, தூக்கம் இல்லை - தொடர்ந்து கவலை மற்றும் பதற்றம் நிலவுகிறது.**

**இந்த யுத்தம் நீரிலும் நிலத்திலும் போராடிய கடைசி யுத்தம் போலல்லாமல், இப்போதைய இந்த யுத்தம் அனைத்தும் வான்வெளியில் நிகழும்.**

இந்தியா மீது படையெடுப்பதற்கான சாத்தியம் குறித்து கேட்டபோது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**ரஷ்யாவின் உதவியின்றி இந்தியா போன்ற தொலைதூர இடங்களுக்கு விரைந்து செல்லும் அளவிற்கு ஹிட்லர் வெறிபிடித்தவர் அல்ல. ஆனால் ஜப்பான் தனது கண்களை இந்தியா மீது வைத்துள்ளது, அதை விரும்புகிறது.**

**இங்கிலாந்திற்கு எனது ஆசீர்வாதங்கள். இந்த முறை தோல்வியடைந்தால், அது முடிவாக இருந்திருக்கும். இந்த நிலையில் ஹிட்லர் பின்வாங்குவது இப்போது சாத்தியமில்லை. அவர் 'நிறுத்து!' என்று கூறினாலும் இதர நாடுகள் அவ்வாறு செய்யாது, ஏனெனில் அவர்கள் நாஸிஸத்தை நாசம் செய்வதில் உறுதியாக உள்ளனர்.**

**அமெரிக்கா இப்போது போர் வீரர்களை அனுப்பாவிட்டாலும், பணம் மற்றும் பொருள் உதவிகளைச் செய்யும் என்று நம்பலாம். அது நிச்சயமாக, நிறைய உதவும்.**

பாபா மீண்டும் இரவு 9:30 மணி செய்தியைக் கேட்டு இவ்வாறு கருத்துரைத்தார்:

**கடைசி 'மியூனிக் ஒப்பந்தம்' (**MUNICH PACT**) சமாதானத்திற்காகக் கையெழுத்திடப்பட்ட போது, நிச்சயமாக ஒரு போர் நிகழும் என்று நான் உங்களுக்குச் சொன்னேன். அது தொடங்கியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் - நான் சொன்னதால் அல்ல, ஆனால் அது உலகின் பெரும் எழுச்சிக்கு முன்னோடியாக, தவிர்க்க முடியாததும் இன்றியமையாததுமாக இருக்கும் என்பதால்.**

**யுத்தம் அதன் முழு வீச்சில் நடந்தால், இதுவரை அறியாத பேரழிவையும் இடர்பாடுகளையும் உலகம் சந்திக்கும். இது எல்லா இடங்களிலும் பரவி, ஆச்சரியங்கள் நிறைந்ததாக இருக்கும். அது கொண்டு**

**வரும் பேரழிவு மற்றும் பாதகங்கள் உலகின் முழு வரலாற்றையும், வரைபடத்தையும் மாற்றும். இது இந்தியா, பெர்சியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற போர் மண்டல பாகங்களிலிருந்து வெகு தொலைவில் உள்ள நாடுகளையும் பாதிக்கும்.**

**எனக்கு நிச்சயமாகத் தெரிந்த ஒரு விஷயம் என்னவெனில், இந்தப் போர் முழு பலத்துடன் நடத்தப்பட்டால், அது விரைவில் முடிவடையாது.**

மெஹர் பாபா தனது முக்கியமான ஆன்மீக உள்பணிக்காக எங்கேனும் ரகசியமாக விலகிச் செல்வதற்கான வாய்ப்பைக் குறிப்பிட்டார்.

**ஒரு மாதத்திற்குள் போர் முடிவிற்கு வரவில்லை என்றால், உலகின் பாதி மக்கள் உண்மையிலேயே கொல்லப்படுவார்கள். இந்தியாவிற்குக் குடி உரிமை வழங்கப்படும்; ஜப்பான் சீனாவால் தோற்கடிக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்படும்; ஜெர்மனி நசுக்கப்படலாம் மேலும் ஆப்கானிஸ்தான், பலுச்சிஸ்தான் மற்றும் பெர்சியாவின் தொலைதூர நாடுகளும் பாதிக்கப்படும். ஒரு மாதத்தில் போர் முடிவடைந்தால் (அதற்கான வாய்ப்புகள் வெகு தொலைவில் உள்ளன), உலகம் முழுவதும் ஒரு பொருளாதார போர் உருவெடுக்கும் (நாடுகளுக்கு இடையிலான போட்டியின் பொருளாதார பதற்றம்).**

**எனது திட்டங்கள் அனைத்தும் போர் அறிவிப்பைப் பொறுத்தது. அனைத்தும் அப்போது அதற்கேற்ப சரிசெய்யப்படும்.**

**நான், எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஏகாந்தவாசம் மேற்கொள்ளலாம் அல்லது ஓர் அறையில் என்னை அடைத்துக் கொள்ளலாம் அல்லது உபவாசத்தைத் தொடங்கலாம். இப்போது நீங்கள் (ஐரோப்பிய அன்பர்கள்) மீண்டும் இங்கிலாந்து செல்ல முடியாது, உங்களை நான் எங்கு, எப்படி இருக்கச் செய்தாலும் அங்கேயே தங்கி இருக்கவேண்டும். இவை அனைத்தும் நான் பேசுவதற்கு முன்பு நிகழும்.**

அடுத்த நாள் அவர் மேலும் கூறுகையில், **"இந்தப் போர் அனைவரிடையிலும் என்ன விளைவை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது ... அனைத்தும் மாறும்"** என்றார்.

செப்டம்பர் 9ஆம் தேதி பாபா கருத்துத் தெரிவிக்கையில், **"இது ஒரு நீண்ட போராக இருக்கும், மேலும் இது உலகம் முழுவதும் இணையற்ற பேரழிவை ஏற்படுத்தும்."** சில வாரங்களுக்குப் பிறகு, 24 **அன்று, "இறுதியில் ஒருவரும் வெற்றிவாகை சூடப்போவதுமில்லை, தோல்வியால் வீழ்ந்து போவதுமில்லை. அனைவருமே சோர்வடைந்து துவண்டுப் போவார்கள். ஆனால் இது உலகில் ஒரு புதிய ஒழுங்கான அமைப்பை நிலைநாட்டும்"** என்று கூறினார்.

இந்த முறையில், பாபா தொடர்ந்து போரைப் பற்றிய கருத்துத் தெரிவித்துக் கொண்டிருந்தார். பாபாவின் சகவாசத்தில் இருந்தவர்கள், மஸ்துகளுடன் அவர் செய்த பணி, மஸ்துகளின் எதிர்வினைகள், போர் தொடர்பான நிகழ்வுகள் அனைத்தும் பல்வேறு மாற்றங்களுடன்

சம்பந்தப்பட்டிருப்பதை கவனித்தனர். போர் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பு, பாபா உடல்நிலை சீரில்லாமல் ஜுரத்தால் அவதிப்பட்டதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால், குறிப்பிட்டுள்ளபடி, இது மஸ்துகளுடனான அவரது அன்றாட பணியில் எந்தத் தடையையும் ஏற்படுத்தவில்லை.

காலம், கிருஷ்ணா, முஹம்மது போன்ற அவதார புருஷர்களின் காலகட்டங்களுடன் ஓர் ஒற்றுமையைக் கண்டது: “முழு உலகமும் பிரபஞ்சமும் அவதார புருஷரின் ஆட்சியின் கீழ் இருப்பதால், மெஹர் பாபாவின் ஆணைப்படி போர் ஆரம்பமானது!”

இந்தியாவில் மருத்துவராகப் பணிபுரியும் அனுபவத்தை அடையப் பெற, பெங்களூரில் அமைந்த ‘விக்டோரியா மருத்துவமனை’க்கு (VICTORIA HOSPITAL) தினமும் செல்லுமாறு டாக்டர் டானுக்கு அறிவுறுத்தப்பட்டது. நீலுவும் சில சமயங்களில் அவருடன் சென்றார். எரச், மண்டலிக்கு பஜாரிலிருந்து வேண்டிய பொருட்களை வாங்கி வந்ததோடு சாஞ்சியின் உதவியாளராகவும் பணிபுரிந்தார்; சாஞ்சி ஊருக்கு வெளியே இருக்கும் போதெல்லாம் தனது செயலக கடமைகளில் கலந்துகொண்டார். காக்கா மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களைத் தேடித் திரிந்தார்; லிங்ஸ் பங்களாவிற்கு அழைத்து வந்தவர்களை, பாபா நீராட்டி, உணவூட்டி, பின்னர் வீதிகளில் அவர்கள் தங்குமிடங்களுக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். ஆதி சீனியர், டானை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதோடு காக்காவிற்கு மஸ்த் பணியில் உதவியாகவும் இருந்தார்.

ரானோ, காம்பவுண்டில் ஒரு சிறிய குடிசை அமைத்து, அதை ஒரு தனியார் ஸ்டுடியோவாகப் (STUDIO) பயன்படுத்தி, அங்கு அவர் பாபாவின் முழு உருவ ஓவியம் ஒன்றை வரைந்து கொண்டிருந்தார், அவர் தலைப்பாகை மற்றும் துண்டு அணிந்திருந்தார். ஆனால் சில வாரங்களுக்குப் பிறகு, பாபா அவரிடம் வேறு இடத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று தெரிவித்தார், ஏனெனில் மெஹராபாத்திலிருந்து வரும் மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்காக, ‘லிங்க்ஸ்’ காம்பவுண்டில் ஒரு மஸ்த் ஆசிரமத்தை நிறுவ விரும்பினார்.

1939, செப்டம்பர் 2ஆம் நாள், காக்கா, சுவாமிஜி இருவரும் மஸ்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டு வர மைசூருக்கு அனுப்பப்பட்டனர், ஆனால் அவர்களால் ஒருவரையும் அழைத்து வர முடியவில்லை.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், அதே நோக்கத்துடன் பாபா அவர்களை ஆதி சீனியருடன் மதராஸ் (MADRAS) நகருக்கு அனுப்பினார். செப்டம்பர் 7 அன்று, கஃபூர் ஷா (GHAFUR SHAH) என்ற மஸ்தை மீண்டும் அழைத்து வந்தனர். அவர் லிங்க்ஸ் பங்களாவிற்கு வந்த நேரத்தில் மஸ்த் முற்றிலும் சோர்ந்துபோய், ஜீவனற்றவர் போலத் தென்பட்டார்; ஆனால் பாபா அவரை நீராட்டிய பிறகு, புத்துயிர் பெற்று சாதாரணமாக இருந்தார். செப்டம்பர் 9ஆம் நாள் அவர் மதராஸுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அந்த நாளில், ஆதியும் ஜால்பாயும்

கவாலி பாடகனான ஒரு சிறுவனை ஏற்பாடு செய்தனர், அவனை பாபா பெரிதும் விரும்பி, ஒரு மாதம் கவாலி பாடும் பணியில் அமர்த்த விரும்பினார்.

செப்டம்பர் 7 அன்று, பைரமங்களா நிலத்தின் விலை குறித்து, பாபாவிற்குச் செய்தி வந்ததும், பரிவர்த்தனையைத் தீர்வு செய்யும் விதத்தில், ஸர் இஸ்மாயிலுக்கு உடனடியாக, காசோலை ஒன்றை அனுப்பி வைத்தார். அடுத்த நாள், மையம் அமைப்பது பற்றி விவாதிக்கவும், அவரது சட்ட நிபுணத்துவத்தை வழங்கவும் சம்பத் ஐயங்கார் மதராஸிலிருந்து வந்தார்.

செப்டம்பர் 11ஆம் நாள் இரவு பத்து மணியளவில், ஆதி சீனியர், காக்கா இருவரையும் ஃபிரீனியை கவனித்துக்கொள்ள பாபா, நாசிக் நகருக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் மறுநாள் காலையில் புறப்படுவதாக இருந்தது, ஆனால் பாபா, திடீரென, அவர்களை உடனடியாகப் புறப்படுமாறு அறிவுறுத்தினார்; அவர்கள் அங்கிருந்து செல்லவேண்டியது முக்கியமானதாகத் தோன்றியது. ஆதி, காக்கா இருவரும் பத்தொன்பது நாட்களுக்கு முன்னர் பாபாவைத் தயக்கத்தோடு சிறிது நேரம் சந்தித்த, சாதர்வாலா (CHADDARWALA) என்ற மஸ்தின் பிரதான தொடர்புகளாக இருந்தனர். அவர்கள் பெங்களூரிலிருந்து புறப்பட்ட ஏறக்குறைய அதே நேரத்தில், மஸ்த் ஒரு மருத்துவமனைக்கு முன்னால் சென்று, வாயில் விரலை வைத்து வாந்தியெடுத்து, பின்னர் ஓர் இளம் வயது பக்தரிடம், "நான் சொர்க்கத்திற்குச் செல்கிறேன்... ஒரு படுக்கையைத் தயார் செய்யுங்கள், நான் தூங்க வேண்டும்" என்று கூறி, பின்பு சாதர்வாலா, வீதியின் நடைபாதையில் உயிரைத் துறந்தார். பாபா அவரை சந்திக்க வேண்டியது அவசியம் என்று விளக்கி, அவருக்கு இறுதி உந்துதலை அளித்தார். உண்மையில், மஸ்த், லிங்க்ஸ் பங்களாவில் வந்தபோது, அவர் தனது 'கணக்கு' தீர்த்து வைக்கப்பட்டதாகக் காக்காவிடம் தெரிவித்தார்.

பாபா, இதைக் குறித்து ஆதி சீனியருக்கு எழுதினார், "**சாதர்வாலாவின் மரணம், உலகத்திற்கான எனது ஆன்மீகப் பணியுடன் தொடர்புடையது**."

1939, செப்டம்பர் 19 அன்று, மெஹராபாத்திலிருந்து மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும், பெங்களூருக்கு அழைத்துவரப்பட்டனர். லிங்க்ஸ் காம்பவுண்டின் ஒரு மூலையில் புல் குடிசைகள் அமைக்கப்பட்டு, பாபா அவர்களுடன் பணிபுரியத் தொடங்கினார்; மேலும் சுற்றுப்புற பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட மஸ்துகளும் அங்கு இருந்தனர். ஏராளமான நபர்கள் இப்போது பங்களாவை ஆக்கிரமித்துள்ளதாலும், எல்லாவற்றிற்கும் மேலாக, பின்புறம் அமைந்த சிறிய குடிசைகளில் மஸ்துகள் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் இருந்ததாலும், நோரினா பக்கத்து வீட்டுப் பெண்மணியின் உதவியை நாடவேண்டியிருந்தது. அவரது புதிய அண்டை வீட்டில் 'விசித்திரமாக' எதுவும் நிகழாது என உறுதியளித்தார்.

செப்டம்பர் 21ஆம் தேதி முதல், மெஹர் பாபா தினமும் ஏகாந்தவாசத்தில் அவரது பணிகளை, காலை ஆறு முதல் எட்டு மணி வரை மற்றும் மதியம் 11:30 முதல் 1:00 வரை, ஒரு வேளை உணவு மட்டுமே உண்டு, மஸ்துகளுடன் பணிபுரிந்தார். அடுத்த 30 நாட்களுக்கு, பாபா இந்த அட்டவணையைக் கடைப்பிடித்து வந்தார், இந்தக் காலகட்டத்தில் போர் ஒரு திட்டவட்டமான போக்கைக் கொண்டிருக்கும் என்பதை இது குறிக்கிறது. பாபா வானொலி மற்றும் செய்தித்தாள்களில் போர் பற்றிய புள்ளிவிபரங்களைத் தொடர்ந்து கவனித்து வந்தார். செப்டம்பர் 21 அன்று செய்தித்தாளில் வந்த ஒரு கட்டுரைக்குப் பின்னர், அவர் மீண்டும் '**இது ஒரு நீண்ட நெடிய போராக இருக்கும்**!' என்று குறிப்பிட்டார்.

மெஹர் பாபாவுடன் வாழ்ந்த கிழக்கத்திய பெண் மண்டலி, எந்தவோர் ஆண்மகனையும் பார்க்கவோ அல்லது பெயரைக் கேட்கவோ இயலாத வகையில் ஒதுங்கிய தனிமை வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்; மேற்கத்திய பெண்மணிகள் கூட, பாபாவின் முன்னிலையில் செய்தித்தாள்களை வாசிக்கும் போது, அவர்கள் எந்தவோர் ஆண், இளம் அல்லது வயதானவரின் பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்ற நிலையான கட்டளை அமலில் இருந்தது.

நெளரோஜி தாதாசாஞ்சி சில நாட்கள் பெங்களூரில் இருந்து, ஆன்மீக மையத்தின் பணிகளைத் திட்டமிட உதவி புரிந்து, 23ஆம் நாள் மும்பைக்குப் புறப்பட்டார். அடுத்த நாள் இரவு, ஒரு மகிழ்ச்சிகரமான மனநிலையில், பாபா மண்டலிக்கு இவ்வாறு குறிப்பிட்டார்:

**பிறரிடமிருந்து மகிழ்ச்சியை எதிர்பாராத ஒருவர், மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறார். அன்பு, அதை வழங்குவதில் மகிழ்ச்சியையும் மகிமையையும் அடைகிறதே தவிர, அதைப் பெறுவதில் அல்ல. ஆகவே, அன்பு செலுத்தி அள்ளிவழங்கக் கற்றுக்கொள்ளுங்கள், பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க வேண்டாம்.**

**நீங்கள் மாயாவை விட்டு விலகி, ஒரு சத்குருவிடம் சரணடைந்த மனிதர்கள் மத்தியில், மிக்க மகிழ்ச்சியாக இருக்கும் பேரதிர்ஷ்டசாலி என்பதை உண்மையில் உணர வேண்டும். நீங்கள் இப்போது கவலைகளிலிருந்து விடுபட்டு, ஒருவர் தலையிலிருந்த பெரும் பாரத்தை இறக்கியதுபோல் இலகுவாக இலேசாக உணர வேண்டும்.**

**நீங்கள் செய்யும் மிகப் பெரிய தவறு என்னவெனில், உங்கள் தலையிலிருந்த சுமையைத் தூக்கி, அதை எல்லா பொறுப்போடும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் குருநாதரின் தலையில் வைப்பதற்கு பதிலாக, அதைக் காற்றில் தொங்கவிட்டு, 'மதிப்புமிக்க' பொருளாகக் கருதி, இழக்க விருப்பமில்லாமல் அவரிடம் கொடுக்கத் தயங்குகிறீர்கள்! இவ்வாறு நீங்கள் சுமையைச் சுமக்கவும் செய்யாமல், அதை உளமார ஏற்றுக்கொள்ள விரும்புபவரின் (பாபா) தலையிலும் வைக்க அனுமதிக்காமல் இருக்கிறீர்கள்.**

**இப்படி, நீங்கள் இருவருக்கும் இடையில் அதை ஊசலாட விட்டு, உங்கள் துன்பத்தை அதிகரிக்கச் செய்கிறீர்கள். ஒன்று அதை நீங்களே வைத்திருக்கலாம் அல்லது அதை முழுவதுமாக விட்டுவிடலாம்!**

அக்டோபர் முழுவதும், பாபா வானொலியில் உலக நிகழ்வுகளின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கேட்டுவந்தார். பாபா ஒவ்வொரு நாளும் சில முறை, போரைப் பற்றிய செய்திகளை விசாரித்தும், அவ்வப்போது அதில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்தும் கருத்துத் தெரிவித்தார். 1939, அக்டோபர் 7ஆம் நாள், பாபா, இப்போது பல்வேறு நாடுகளுக்கு இடையே உலகில் உருவாகும் வெவ்வேறு கூட்டணிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்: **“இதுவெல்லாம் புரியாதது, புதிரானது, தொடர்ச்சியாக உருவெடுக்கும் சிக்கல்கள் அனைவரையும் பைத்தியம் பிடிக்கச் செய்யும். என்ன செய்வது, இவற்றிலிருந்து எப்படி வெளிவருவது என்று தெரியாமல் திகைத்துப் போவார்கள். உலகின் ஏக்கத்திற்கும் அழுகைக் குரலுக்கும், நான் பதிலளிப்பேன் - குரல்கொடுப்பேன்!”**

அடுத்த நாள் மெஹர் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **“எதிர்வரும் 21ஆம் தேதிக்குள், இது ஒரு நீண்ட யுத்தமாக இருக்குமா என்பதை நான் நிச்சயமாகத் தீர்மானிப்பேன். அப்படியானால், இது வரலாற்றில் மிகப் பெரிய போராக இருக்கும். இல்லையென்றால், உலகளாவிய புரட்சிகள் ஏற்படும்.”**

அக்டோபர் 23 அன்று, “**முழு உலகமும் போரில் ஈடுபடும்**” என்பதை வெளிப்படுத்தினார்.

மாஸாஜி, டாக்டர் கனி, பெண்டு, ஜங்க்ளே ஆகியோர் அக்டோபர் 6ஆம் நாள் எஞ்சியிருந்த இதர பொருட்கள், பெட்டிகள், மருந்துப் பொட்டலங்கள், விலங்குகள் ஆகியவற்றுடன் பெங்களூருக்கு ரயிலில் வந்தனர். பாதிரி, ஆதி சீனியர், டாலி ஆகியோர் டாலியின் ‘கோபியா’ (GOPIA) எனும் பூனையுடன் அக்டோபர் 7ஆம் நாள் காரில் வந்தனர். பாபா தனது தலைமையகத்தை அங்கு நிறுவுவதாக அறிவித்ததால், அனைத்து மண்டலியும் பெங்களூரில் நிரந்தரமாகத் தங்கத் தயாராக இருந்தனர். இந்தக் காலகட்டத்தில், ஜமதார், மெஹராபாத் மலையில் சத்ய மாங்குடன் (SATYA MANG) தங்கியிருந்து கண்காணிக்கும்படி கூறப்பட்டது, மேலும் ஸரோஷ் வாரத்திற்கு ஒரு முறை மெஹராபாத்தைப் பார்வையிடவும் அறிவுறுத்தப்பட்டார். மெஹராபாத் குடியிருப்பில் இருந்தவர்கள் அனைவரும் பெங்களூரில் பாபாவுடன் இருந்தனர்.

ஆதி சீனியர் தனது சகோதரி டாலியுடன் தனியாகத் தங்கியிருந்தார். ஃபிரீனி, தவ்லத்மாய் ஆகியோரின் தற்போதைய நிலைமை குறித்து, பாபாவிடம் தெரிவிக்க ராம்ஜூ அக்டோபர் 10ஆம் நாள் பெங்களூருக்கு வந்து, தவ்லத்மாய் நாசிக் நகரிலும், ஃபிரீனி பெங்களூருக்கு வரத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். ஃபிரீனிக்கு ஒரு தனி வீடு ஏற்பாடு செய்யுமாறு ஆதி சீனியருக்கு அறிவுறுத்தி, ஒன்றைத் தேர்ந்தெடுக்க பாபாவும் அவருடன் சென்றார்.

விஷ்ணுவின் உறவினர் விஸ்வநாத் ஹல்தங்கர் (VISHWANATH HALDANKAR), மெஹர் பாபாவிற்கு ஃபூல்வாலா (PHULWALA - பூக்களின் நாயகன், எப்பொழுதும் அவரை பூக்களால் அலங்கரிப்பதை விரும்பினார்) என்று அழைக்கப்படும், பெல்காவ்மில் வாழும் ஒரு தனிச் சிறப்புமிக்க மஸ்தைப் பற்றி எழுதினார். அவரை அழைத்து வர, பெண்டு, டாக்டர் நீலு இருவரையும் பாபா அனுப்பி வைத்தார். அக்டோபர் 10 அன்று அந்த மஸ்தை, பெங்களூருக்கு அழைத்து வந்து, மஸ்த் ஆசிரமத்தில் தங்க வைத்தனர். பாபா இந்த புனித மஸ்தை மிகவும் விரும்பினார், மேலும் மண்டலிக்கு, "**ஃபூல்வாலாவைப் பாருங்கள் - உங்கள் கன்னத்தில் அறை ஒன்றை வழங்குவதன் மூலம், அவர் உங்களை ஆறாவது ஆன்மீகத் தளத்திற்கு ஒரே நொடியில் உயர்த்த முடியும்!**" என எடுத்துரைத்தார்.

அடுத்த நாள், பிற்பகல் இரண்டு மணிக்கு, மெஹர் பாபா, ஃபூல்வாலாவுடன் மண்டலியின் பங்களாவில் ஓர் அறையில் அமர்ந்தார். ஆனால் அரை மணி நேரத்தில் அந்த மஸ்த் அமைதியிழந்து, அறையை விட்டு வெளியேறி, வாசலை நோக்கி நடக்கத் தொடங்கினார். அவரை மீண்டும் அழைத்து வர பைதூல் மிக்க சிரமத்துடன் சமாளிக்க வேண்டியதாயிற்று. "**அவர் ஒரு நல்ல மஸ்த்,**" என்று பாபா கருத்துத் தெரிவித்து, "**ஆனால் அவர் இங்குத் தங்க மாட்டார்**" எனவும் தெரிவித்தார்.

அவர் திறந்த வெளியில், சாக்கடைகளில் கூட சுற்றித் திரிவது வழக்கம். இத்தகைய 'கவுஸ்' (GOUSE) வகையைச் சார்ந்த மஸ்துகள், நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைக்கப்படுவதையும், ஆண்களின் மத்தியில் இருப்பதையும் விரும்புவதில்லை, ஏனெனில், சில இரவுகளில், தங்கள் உடலின் பாகங்களைத் (கைகால்களை) தனித்தனியாகப் பிரித்து வைக்கும் தன்மை படைத்தவர்கள் என்பதே இதற்குக் காரணம்."

மெஹராபாத்தின் பறவைகள் மற்றும் விலங்குகளின் பராமரிப்பு மையம், பெங்களூருக்கு எடுத்து வந்து லிங்க்ஸ் வளாகத்தில் நிறுவப்பட்டது. புதிய இனங்களும் வந்திணைந்தன: எலிஸபெத் ஒரு நாள் பஜாரிலிருந்து ஒரு மயிலை வாங்கி வந்தார், அதற்கு 'மோத்தி' (MOTI) என்று பெயரிடப்பட்டது. இந்த செல்லப்பிராணிகளைச சுத்தம் செய்து, உணவளித்து, வேண்டிய நீர் வசதிகளைச் செய்வதில் பெண்கள் இப்போது பெரும்பாலான நேரத்தைச் செலவிட்டனர். பல வாத்துகள், கோழிகள் மற்றும் ஒரு சேவலும் இருந்தன; அவற்றின் தண்ணீர் குட்டைகள் தினமும் சுத்தம் செய்யப்பட்டு மீண்டும் நிரப்பப்பட்டது. ஒரு நாள் மழை நீர் நிரம்பிய குட்டையில் கோழி ஒன்று விழுந்து மூழ்கியது. எலிஸபெத் அதைக் கண்டதும், கண்கலங்கி அழுதபடி உயிரிழந்த பறவையை, பாபாவிடம் எடுத்து வந்து, "அன்பான பாபா, கோழி குளிரால் மயக்கமடைந்துவிட்டது. இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?" என்றார்.

பாபா, கோழியுடன் கேட்டியும் மனுவும் உணவு தயார் செய்து கொண்டிருந்த சமையலறைக்குச் சென்று அவர், "**இந்தக் கோழி குளிரில் உறைந்துள்ளது, அதை நெருப்பின் மேல் பிடித்துக் கொள்ளுங்கள்!**"

என்றார். கேட்டி, பாபாவிடமிருந்து கோழியைக் கையில் வாங்கி, குஜராத்தி மொழியில் (இது எலிஸபெத்திற்கு புரியவில்லை) கோழி ஏற்கனவே இறந்துவிட்டது என்று பதிலளித்தார். பாபா கண் சைகையால் கேட்டியிடம் அமைதியாக இருக்கக் கூறி, எலிஸபெத்தை நோக்கி, "**இந்தக் கோழி எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று உங்களுக்குத் தெரியுமா? நான் எனது கையில் பிடித்திருப்பதே அதன் மிகப்பெரிய அதிர்ஷ்டம். என் முன்னிலையில் அது உயிரைத் துறந்தால், அடுத்த பிறப்பில் இன்னும் மேம்பட்ட பிறவியை எடுக்கும்**" என்றார்.

உடனே, கேட்டி அப்படியே பாசாங்கு செய்து, "பாபா, கோழி இறந்துவிட்டது!" என்றதும், எலிஸபெத் அதன் தற்செயலான மரணத்தை ஏற்றுக்கொண்டார். அதிர்ஷ்டம் மிக்க கோழி பாபா முன்னிலையில், விழா கோலத்துடன் அடக்கம் செய்யப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், நான்னி பெங்களூரில் கடுமையாக நோய்வாய்ப்பட்டார், டாக்டர்கள் டான், நீலு இருவரும் மெஹர் பாபாவின் வழிகாட்டுதலின்படி, சிகிச்சை அளித்தனர். பாபா, அவ்வப்போது சென்று பார்த்தது, அவருக்கு ஆறுதலாக இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, ரானோவிடம், "**நான்னி உயிரைத் துறந்தால், நீங்கள் வருத்தப்படுவீர்களா?**" என வினவினார்.

"உங்கள் விருப்பம் எதுவாக இருந்தாலும் அது நடக்கும்" என்று ரானோ பதிலளித்தார். இருப்பினும், அதற்குப் பிறகு, ரானோ கண்கலங்கி அழுதபோது, பாபா அவரிடம் அழுகையின் காரணத்தை வினவினார். நான்னியின் மரணம், அமெரிக்காவில் வாழும் தனது சகோதரரை சோகத்தில் ஆழ்த்தும் என்று அவர் விளக்கினார். "அவரைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், நான் கவனித்துக் கொள்வேன்" என்று பாபா உறுதியளித்தார்.

1939, அக்டோபர் 13 அன்று, நான்னிக்கு மாரடைப்பு ஏற்பட்டது; மறுநாள் மாலையில், 64 வயதில், அவர் முகத்தில் இனிமையான ஒளிர்ந்த புன்னகையுடன் நிரந்தரமாகக் கண்களை மூடினார்.

பாபா, அன்று பைரமங்களாவிற்கு வந்திருந்தார். லிங்க்ஸுக்குத் திரும்பும் வழியில், பலத்த மழையில் கார் சேற்றில் சிக்கியதால், பாபா உட்பட அனைவரும் காரைத் தள்ள வேண்டியதாயிற்று. பின்னர், அவர்கள் தொடர்ந்த வேளையில், பாபா ஒவ்வொரு நிமிடமும் மீண்டும் மீண்டும் சாஞ்சியிடம் நேரத்தைக் கேட்கத் தொடங்கினார். சரியாக மாலை 6:40 மணிக்கு, "**நான்னி காலமானார்**" என்று சைகையால் தெரிவித்தார். இருப்பினும், பத்து நிமிடங்களுக்குப் பின்னர் அவர்கள் லிங்க்ஸ் பங்களாவிற்கு வந்தபோது, நான்னி உயிரைவிடும் இறுதிக் கட்டத்தில் இருந்தார்.

பாபா, நேரடியாக நான்னியின் அறைக்குச் சென்று, அவரை உற்று நோக்கினார். "**நான்னி எப்படி இருக்கிறார்?**" என்று கேட்டு பாபா, டாக்டர் டான், நீலு மற்றும் ரானோவைத் தனியாக அழைத்துச் சென்றபோது, நான்னியின்

நிலை தீவிரமாக இருந்த செய்தியறிந்து விரைந்தனர். படுக்கை அருகில் சென்றதும், பாபா மூடிய கண்ணிமைகளில் இரண்டு விரல்களை வைத்தார். அவர் இதைச் செய்யும்போது, நான்னி ஓர் இறுதி பெருமூச்சை விட்டு உயிரைத் துறந்தார். ஒரு துளியாக இருந்த ஆன்மா, அன்பெனும் பெருங்கடலில் நிரந்தரமாக இணைந்தது. மகிழ்ச்சி, துன்பம் எதுவுமில்லாத, ஆனால் எல்லையற்ற பேரின்பத்தின் உறைவிடமான அரண்மனைக்குள் என்றென்றும் நுழைவதற்கு முன்பு, பிரியமானவரின் தரிசனத்தை இறுதி முறையாகப் பெறும் ஆர்வத்தில் நான்னி காத்திருந்ததைப் போலத் தெரிந்தது!

இறுதி மூச்சை விடுவதற்கு முன்னர், **"என்ன அழகு! என்ன அழகு!"** என்ற வார்த்தைகள் நான்னியின் உதடுகளில் ஒலித்தன.

இதைக் கேட்ட டான், உணர்ச்சிவசப்பட்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். இத்தகைய மகிழ்ச்சியான மரணத்தை அவர் ஒருபோதும் கண்டதில்லை; பிரிந்து செல்லும் ஆத்மா எங்கேயோ அழகாக வழிநடத்தப்படுவது போலத் தோன்றியது. நான்னியின் புன்னகை டானின் இதயத்தை நிரப்பியது, பாபாவின் அளவற்ற அன்பு எவ்வளவு பெரியது என்பதை அவர் மீண்டும் உணர்ந்தார்.

மெஹர் பாபா, ரானோவை அன்புடன் அரவணைத்து எழுத்துப் பலகையில் உச்சரித்தார்: **"நான்னி எனது மிகப் பெரிய அன்பர்களில் ஒருவர், எப்போதும் எனது பணிக்கென அவராகவே நிதி உதவி வழங்கினார். சரியான நேரத்தில் அவர் வழங்கிய பங்களிப்புகளின் காரணமாக, ஆன்மீக மையத்தைக் குறித்த இந்தத் திட்டம் இப்போது தொடங்கப்பட்டுள்ளது. நிதி வரும், ஏராளமாக வரும், ஆனால் மனிதகுலத்தின் மிகப் பெரிய சேவைக்கான இந்த ஆன்மீக மையத்தைத் தொடங்குவதற்கு வேண்டிய நிதி உதவியைச் செய்த பெருமை, பிரிந்து சென்ற பிரியமான இந்த ஆத்மாவையே சேரும். அவரது அன்பான பெயர், இந்தத் தனித்துவமான நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்."**

தொடர்ந்து பாபா, '**அவர் முன்னிலையில் தனது சீடர்களில் ஒருவர் உயிரைத் துறந்தது இதுவே முதல் முறை**' என்று கூறினார். பாபா, ரானோவிடம், '**நான்னி முக்தி (விடுதலை) அடைந்து விட்டதாக**' வெளிப்படுத்தினார்.

நான்னியின் உடல் மறுநாள் காலையில் பெங்களூரில் நல்லடக்கம் செய்யப்பட்டது, மேலும் மெமோ உட்பட 30 ஆண், பெண் மண்டலி கலந்து கொண்டனர். அக்டோபர் 16ஆம் நாள், பாபா, நான்னியின் அஸ்தியை ஆதி சீனியருடன் மெஹராபாத்திற்கு அனுப்பி வைத்தார்.

1939 டிசம்பரில், மெஹராபாத் மேல்மலையில், பாபாவின் எதிர்கால சமாதிக்கு அருகில், நான்னிக்கு ஒரு கல் நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டது. ஸரோஷ் பூனாவிலிருந்து சமாதிக்கல்லை வரவழைத்தார். '**நான்னி, பாபாவிற்குப் பிரியமானவர்**' என்ற சொற்கள் அதில் பொறிக்கப்படவேண்டும்

என்று பாபா அறிவுறுத்தியிருந்தார். பாபா மேலும், நான்னியின் நினைவு ஆண்டுவிழாவில் ஏழைகளுக்கு உணவு வழங்கவும் உத்தரவிட்டார்.

நான்னி காலமான அடுத்த நாள், 1939, அக்டோபர் 15 அன்று, மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**போர் முடிவடைவதற்கு முன்பு, மேலும் இரண்டு வட்டத்து உறுப்பினர்கள் - இருவரும் ஆண்கள் அல்லது ஓர் ஆண், ஒரு பெண் - உயிரைத் துறப்பார்கள். ஆனால் அவர்கள் உலகெங்கிலும் பேரெழுச்சியை உருவாக்கும் எனது மகத்தான பணியின் ஒரு முக்கியமான மற்றும் நெருக்கடியான காலகட்டத்தில் அவர்களின் உடல்களைத் துறக்கும் அதிர்ஷ்டசாலிகள் ஆவர்.**"

மெஹர் பாபா பெங்களூருக்கு வந்த பின்னர், அவரது கவனம் குறிப்பாக இரண்டு விஷயங்களில் இருந்தது: ஒன்று, மஸ்துகளுடனான அவரது பணி, மற்றொன்று, உலகளாவிய ஆன்மீக மையம் ஒன்றை நிறுவுதல். ஏற்கனவே குறிப்பிட்டபடி, பெங்களூரிலிருந்து 22 மைல், பிடதி (BIDADI) ரயில் நிலையத்திலிருந்து மூன்று மைல் தொலைவிலமைந்த பைரமங்களாவில் (BYRAMANGALA) இந்த மையத்திற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. 560 ஏக்கருக்கும் அதிகமான நிலம் வாங்கப்பட்டது, மேலும் 350 அறைகளைக் கொண்ட ஒன்பது தனித்தனி கட்டுமானங்களை அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. மையத்தின் நிதி மற்றும் பிற அம்சங்களை மேற்பார்வையிட நோரினா, எலிஸபெத், பப்பா ஜெஸவாலா, ஆதி சீனியர், ராம்ஜூ, சாஞ்சி, ஜால் கேரவாலா ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அடித்தளம் அமைக்கும் விழா ஆரம்பத்தில் 1939, அக்டோபர் 25 என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் உள்ளூர் விவசாயிகள் பைரமங்களா நிலத்தின் மீதான பயிர்களை அறுவடை செய்த பின்பு விழா நடத்துமாறு கேட்டுக்கொண்டனர். அக்டோபர் 25 மைசூர் பல்கலைக்கழகத்தில் பட்டம் வழங்கும் மாநாட்டிற்கான நாள், இதில் பாபாவைப் பின்பற்றுபவர்கள் சிலரும் பங்கெடுத்ததால், விழா டிசம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலம் சுமார் 40 விவசாயிகளுக்கும் அரசாங்கத்திற்கும் சொந்தமானது, மேலும் அதை வாங்கி, வேண்டிய ஆவணங்களைத் தயார் செய்ய திவான் மிர்ஸா இஸ்மாயிலின் செல்வாக்கு பேருதவியாக இருந்து அனைத்தும் விரைவுபடுத்தப்பட்டது.

மெஹர் பாபா முதன்முதலில் பெங்களூருக்கு வந்தபோது, சிறிதும் மழையில்லாமல் பயிர்கள் வறண்டு போயின. பைரமங்களாவைச் சுற்றியுள்ள கிராமப்புற விவசாயிகள், மெஹர் பாபாவைப் பற்றி அறிந்து, அவரை அணுகி, விரைவில் மழை வேண்டி பிரார்த்தனை செய்தனர். பாபா அவருக்கே உரித்தான முறையில் அறிவுறுத்தினார், "**இதற்கான ஒரே வழி என்னவெனில், என்னை இங்கிருந்து அனுப்பி விடுவது; என்னைத் துரத்தி விடுங்கள்! ஏனெனில் நான் எப்பொழுதும் வறண்ட இடங்களில் சிக்கித் தவிப்பது எனது துயரத்திற்கான**

**நிலைப்பாடு**." ஆனால் மழை பொழியும் என்று பாபா அப்போது அவர்களுக்கு உறுதியளித்தார். அடுத்த நாள் தொடங்கிய மழை ஏழை விவசாயிகளின் இதயங்களை மகிழ்வித்தது.

மஸ்துகளைத் தேடுவதைப் போலவே, மெஹர் பாபா தனது பணிக்குப் பொருத்தமான சிறுவர்களைக் கண்டுபிடித்து அழைத்து வருவதற்கான கடமையை ஜால்பாய்க்கு வழங்கினார். தினமும், ஜால்பாய் ஒரு சில சிறுவர்களை அழைத்து வருவதும், பாபா வழக்கமாக ஒரு குறுகிய நேரத்திற்குப் பின்னர் அவர்களைத் தத்தமது இல்லங்களுக்குத் திருப்பி அனுப்புவதையும் வழக்கமாகக் கொண்டார். ஆனால், ஜால்பாய் அழைத்து வந்த சிறுவர்களில், நான்கு பேரை - கிருஷ்ணா நாயர் (KRISHNA K, NAIR), ராஜு (RAJU), கலாப்பா (KALAPPA) மற்றும் அம்டூ (AMDOO) - பாபா தன்னுடன் இருக்கத் தேர்வு செய்து அவர்களை மஸ்த் ஆசிரமத்தில் பணிபுரியச் செய்தார்.

மற்றொரு சிறுவன், வெங்கோபா ராவ் (VENKOBA RAO), 18, முதலில் பைரமங்களா மையத்தின் திறப்பு விழா குறித்த துண்டு பிரசுரங்களை விநியோகிக்கும் பணிபுரிந்தார். டிசம்பரில் நடந்த விழாவிற்கு முன்னர் அவர் பாபாவை சந்திக்கவில்லை, ஆனால், மஸ்த் ஆசிரமத்திற்கு உதவும்படி அறிவுறுத்தப்பட்டார்.

சூழ்நிலைகளின் திருப்பத்தில், பதினான்கு வயதான கிருஷ்ணா நாயர் மெஹர் பாபாவின் நெருங்கிய தொடர்பில் வந்தார். இந்த அழகான கேரள நாட்டு சிறுவன், ஒரு சிறிய உணவகத்தில் வேலை செய்வதைக் கண்ட ஜால்பாய், கிருஷ்ணாவை அக்டோபர் 19ஆம் நாள் அழைத்து வந்தார். அவரைப் பார்த்த பாபா, "**உங்களுக்கு என்னுடன் கடந்தகால தொடர்பு உள்ளது**" என்று குறிப்பிட்டார். பாபாவிற்குத் தனிப்பட்ட முறையில் சேவை செய்ய கிருஷ்ணா நியமிக்கப்பட்டார், அவரும் வெங்கோபா ராவும் பெங்களூரில் நிரந்தர குடியிருப்பாளர்களாக மாறினர். எஞ்சியுள்ள மூன்று சிறுவர்களான ராஜு, கலாப்பா மற்றும் அம்டூ பின்பு மெஹராபாத்தில் தங்க அனுப்பப்பட்டனர்.

இந்து திருவிழாவான தஸரா (DASSERA) ஒவ்வோர் ஆண்டும் மைசூரில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது, இது ஓர் அற்புதமான அணிவகுப்புடன் நிறைவடைவது வழக்கம். 1939 அக்டோபர் 19 அன்று பிற்பகலில், எலிஸபெத்தின் காரில் பாபா, பெண் மண்டலியுடன் பயணம் செய்தார். ஜால்பாய், எரச் ஆகியோர் மற்றொரு காரில் சென்றனர், டான் எஞ்சியிருந்த பெண்மணிகளை நீலப்பேருந்தில் அழைத்துச் சென்றார். மாலை ஆறு மணிக்கு மைசூர் வந்தடைந்த அவர்களை, சாஞ்சி, பெண்டு இருவரும் சந்தித்து 'எல்வால்' (YELWAL) பங்களாவிற்கு அழைத்துச் சென்றனர் (இதை, சாஞ்சி ஒரு வாரத்திற்கு முன்பே ஏற்பாடு செய்தார்). பாபாவும் ஆண்களும் பிரமாண்டமான பங்களாவின் ஒரு பகுதியிலும், பெண்மணிகள் அதே வீட்டின் மற்றொரு பிரிவிலும் தங்கினர்.

குஸ்தாஜி, பப்பா ஜெஸவாலா, அவரது மகன் மெஹர்வான் ஆகியோர் மறுநாள் ரயிலில் வந்தனர்.

பாபா, பெண்மணிகளை மைசூர் உயிரியல் பூங்கா, பிருந்தாவன் தோட்டங்கள் மற்றும் பிற சிறப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றார். சாமுண்டி மலையில், பாபா ஏழு மாடி கோயிலைச் சுட்டிக்காட்டினார், '**அதன் ஏழு நிலைகளும் ஏழு ஆன்மீகத் தளங்களைக் குறிக்கின்றன**.' பாபாவின் விருப்பப்படி, திவான் அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார், இதனால், பாபா பெண்மணிகளுடன் விஜயம் செய்த நேரத்தில், அந்த இடங்களில் வேறு எந்த ஆண்களும் இல்லை. ஸர் மிர்ஸா இதுபோன்ற விஷயங்களில் தனது முழு ஒத்துழைப்பை வழங்கினார், மேலும் பாபாவின் விருப்பங்களை எல்லா வகையிலும் நிறைவேற்றினார்.

இருந்தாலும், எந்தவோர் இடத்திலும் பாபா மிகவும் அவசரமாக இருந்தார்; பெண்கள் எதையும் பொறுமையாகப் பார்வையிட அனுமதிக்கப்படவில்லை. ஒரு கட்டத்தில், மெமோ எரிச்சலுடன், "மெரோக், நாங்கள் எதையும் பார்ப்பதை நீ விரும்பவில்லையென்றால், எங்களை ஏன் இங்கு அழைத்து வந்தாய்?" என வினவினார்.

"**இதெல்லாம் ஒரு பகற்கனவு, நான் மட்டுமே உண்மை என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட**!" என்று பாபா பதிலளித்தார்.

"எல்லாமே கனவு என்றால், அதை ஏன் எங்களுக்குக் காட்ட விரும்புகிறாய்?"

"**முதலில் அதைப் பார்க்காமல், கனவு என்று எப்படி அறிந்து கொள்வீர்கள்? நான் இதை உங்களுக்கு ஒரு கனவாகக் காட்ட விரும்புகிறேன். இதெல்லாம் கனவென்று நான் கூறியும் நீங்கள் அதை விடாமல் பற்றிக்கொண்டு, அத்துடன் பின்னிப் பிணையப் பார்க்கிறீர்கள். அதனால்தான் நான் உங்களை அவ்வாறு செய்வதிலிருந்து தடுக்கிறேன்**."

1939 அக்டோபர் 22 ஞாயிற்றுக்கிழமை, மைசூர் மஹாராஜாவின் நிதியுதவியுடன் நிகழ்த்தப்படும் சிறப்பு அம்சமான அணிவகுப்பைக் காண அனைவரும் வருகை தந்தனர். மைசூர் மஹாராஜா ஒரு புனிதமான மனிதர். கிழக்கத்திய பெண்மணிகள் 'யுனானி மருத்துவமனை'யில் (UNANI HOSPITAL) மறைக்கப்பட்ட பால்கனியிலிருந்து அணிவகுப்பைப் பார்வையிட, மாலை நான்கு மணி வரை தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டன; அவ்வேளையில் மெஹர் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: "**நான் இந்த அணிவகுப்பைப் பார்வையிடுவதால் மைசூர் மன்னர் ஒரு பெரிய அதிர்ஷ்டசாலி; ஆனால் அடுத்த தஸராவில் அவர் இதைப் பார்க்க இருக்கமாட்டார்**." பாபா கூறியதற்கிணங்க மன்னர் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு காலமானார்.

பாபாவும் குழுவும் 23ஆம் நாள் மாலையில் பெங்களூருக்குத் திரும்பி வந்ததும், "**நான் முன்பு செய்ததை விட இன்னும் கடினமாக இப்போது எனது பணியைத் தொடருவேன்**" என்று பாபா குறிப்பிட்டார்.

தொடர்ந்து பாபா அதை விளக்கி, “**முழு உலகமும் போரில் ஈடுபடும்**” என்று கூறினார். காலையிலும் பிற்பகலிலும் மண்டலியின் இருப்பிடத்திற்கு வருகை தந்த பாபா, இப்போது காலையில் வருவதை நிறுத்திவிட்டார். அக்டோபர் 21 அன்று மைசூரில் இருந்தபோது அவரது ஒரு மாத உபவாசத்தையும் நிறுத்தினார்.

இந்த நேரத்தில் கர்மான்மாசி தனது மகன்கள் ஹோமி, மேர்வான், ஸரோஷ் ஆகியோருடன் வந்தார். கர்மான்மாசி 1920ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்து பாபாவின் தொடர்பில் இருந்து வந்தார்; அவரது மகன்கள் மெஹர் ஆஷ்ரம பள்ளியில் மாணவர்களாக இருந்தனர். 1938ஆம் ஆண்டில் அவரது கணவர் ருஸ்தம் தின்யார் (RUSTOM DINYAR) காலமானதைத் தொடர்ந்து, கர்மான் மாசி பெங்களூருக்கு வந்தார்; அங்கு, ஹோமி, மேர்வான் இருவரையும் மீண்டும் ஆசிரமத்தில் இணைய பாபா அனுமதித்தார். (ஸரோஷ் ஒரு குறுகிய காலத்திற்கு, பூனாவில் பள்ளிக்கூட விடுதியில் சேர்க்கப்பட்டார்). சில மாதங்கள் பாபாவுடன் தங்கியிருந்த பானுமாசியும் அவரது மகன்கள் தாதி, ஸாம் இருவரும் மும்பைக்குத் திரும்பிச் சென்றனர்.

டாக்டர் தேஷ்முக் மனைவியுடன் 1939, அக்டோபர் 24 அன்று பெங்களூர் வந்து, ஆதி சீனியருடன் தங்கினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, டாக்டர் தேஷ்முக், பாதிரி, பெண்டு, சாஞ்சி ஆகியோர் மைசூருக்குச் சென்று அங்கு ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தனர்.

1939, அக்டோபர் 27 அன்று, மெஹர் பாபா இவ்வாறு தெரியப்படுத்தினார், “**நவம்பர் 11 முதல், ஆறு மாதங்களுக்கு, என்னைப் பின்பற்றுபவர்கள் மற்றும் என்னுடன் மிகவும் நெருக்கமாக இருப்பவர்களிடையே குழப்பமான சூழ்நிலைகள் உருவாகி, நிறைய ஏற்றத் தாழ்வுகள், நோய்கள் மற்றும் சந்தேகங்கள், நிலவும். காலத்தால் கட்டுப்பட்டவர்களை விடுவிக்க நான் காலத்திற்கு கட்டுப்பட வேண்டியிருக்கும். எதிர்ப்பை உருவாக்க நானே ஏதாவது செய்ய வேண்டியது வரும்**.”

ஆதி சீனியர், ஸரோஷ், மினூ பரூச்சா மூவரும் 28ஆம் நாள், ஃபிரீனியுடன் பெங்களூருக்கு வந்தவர்கள், பெங்களூரில் ஃபிரீனி எதிலுமே ஒத்துழைக்காமல் இருந்ததால் மூவரும் 31 அன்று அவருடன் நாசிக் திரும்பிச் சென்றனர்.

மார்கரெட் க்ராஸ்க், டிலியா டிலியோன் இருவரிடமும், போர் உருவானதும் இங்கிலாந்திலிருந்து இந்தியா வருமாறு பாபா அறிவுறுத்தியிருந்தார். இருவரும் இந்தியா வர அனுமதி கோரி, லண்டன் உள்துறை அலுவலகத்திற்குச் சென்றனர்; ஆனால் அவர்களுக்கு வெளிநாட்டில் அவசர தொழில் சம்பந்தமான அல்லது அங்குச் செல்வதற்கான சிறப்பு

காரணங்கள் இல்லையெனில் அனுமதி வழங்கப்படமாட்டாது என்று தெரியவந்தது. டிலியா விண்ணப்பித்தபோது, அவருக்கு அனுமதி மறுக்கப்பட்ட அதே வேளையில், மார்கரெட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது, ஏனெனில் அவர் இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருந்த ஃபாலு ஈரானியின் (ருஸ்தம் மற்றும் ஃப்ரீனியின் மகன்) பாதுகாவலராகச் செயல்பட்டு வந்தார். சிறுவன் தனியாகப் பயணம் செய்ய முடியாது என்று அதிகாரிகளிடம் கூறியிருந்தார். மார்கரெட் அந்த சிறுவனை அழைத்துச் செல்வதால், ஃபாலு ஒரு மஹாராஜாவின் மகனாக இருக்கவேண்டும் என்று அதிகாரிகள் நினைத்தனர். எனவே அவர்கள் இருவரும் இங்கிலாந்திலிருந்து, கப்பல் குழுவினரின் உதவியுடன், மார்ஸெல்லஸ் நகரத்திற்குச் சென்று, அக்டோபர் 30 அன்று கொழும்பில் தரையிறங்க முடிந்தது. அவர்களை சுவாமிஜி சந்தித்து, 1939, நவம்பர் 1ஆம் நாள் பெங்களூருக்கு அழைத்து வந்தார்; மார்கரெட், பாபாவுடன் லிங்க்ஸ் பங்களாவில் வாழத் தொடங்கினார். ஃபாலு, ஆதி சீனியருடன் தனி பங்களாவில் தங்கினார்.

மார்கரெட் பின்பு நடந்ததை நினைவுகூர்ந்து, “ஒருவேளை, போர் காரணமாக, இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வரும் ஒருவருடன் பாபா உருவாக்கிய இணைப்புச் சங்கிலியாக இருக்கும்” என்று யூகித்தார்.

இதற்கிடையில், டிலியாவும் இந்தியாவில் மெஹர் பாபாவுடன் வந்திணைய முடியாததை எண்ணி மிகவும் வருத்தப்பட்டார். பாபா அவருக்கு அனுப்பிய தொலைத்தந்தியில், “கவலைப்பட வேண்டாம், நீங்கள் எங்கு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ அங்கே இருக்கிறீர்கள்.” (அந்த நேரத்தில், டிலியாவின் மைத்துனர் மூலமாக, தாயாரை கவனிக்க இங்கிலாந்தில் அவர் தேவை என்பது, இரகசியமாக பாபாவிற்குத் தெரியப்படுத்தப் பட்டது.)

லிங்ஸிலிருந்து பாபா டிலியாவிற்கு மீண்டும் எழுதினார்:

**துன்பம் மற்றும் ஆழ்ந்த அனுபவத்தின் மூலம் மட்டுமே நீங்கள் கற்றுக்கொள்ள முடியும் என்று கூறும்போது, நீங்கள் உண்மையாகவும் ஆழமான அனுபவத்திலிருந்தும் அதைக் கூறுகிறீர்கள் என்றுதான் அர்த்தம். ஹஃபீஸின் இந்த வரிகளை நீங்கள் அறிவீர்களா?**

**எனது பாதையை மிதிப்பவன்,**
**துக்கத்தின் முட்களைக் கண்டுகொள்வான்,**
**இதற்கு பயந்து யாத்ரீகர் எவரும்,**
**அவரது தேடலைத் தள்ளிப் போடுவாரா?**
**அறிவார்ந்தவர் என்றாலும்,**
**உண்மையான பரிபூரண அன்பை அடைபவர்,**
**ஒரு விளக்கின் ஒளி போல்**
**அவருடைய ஆத்மாவின் துயரம் பிரகாசிக்காதா?**

**இந்த ‘அகந்தை’தான் தற்காலிக துன்பத்தைக் கொண்டிருக்கும். ஆனால் இந்தத் ‘துன்பம்’தான் நித்திய, நிரந்தர மகிழ்ச்சிக்கும், பேரின்பத்திற்கும் வழிவகுக்கும்.**

**உங்களுக்காகக் காத்திருக்கும் உண்மையான மகிழ்ச்சி, தற்போதைய துன்பம் மற்றும் போராட்டத்தை விடவும் பன்மடங்கு மதிப்புள்ளது என்று நான் கூறும்போது, என்னை நம்புங்கள். நேசிக்கும் திறன் அதிகமாக இருக்கும் தருவாயில் பிரிவின் வலியை, உடல் ரீதியாக, தூரத்தில் வாழ்பவர் மட்டுமின்றி நெருக்கத்தில் இருப்பவர்களும் அதிகமாக உணர்கின்றனர். உண்மையில், உடல் ரீதியாக, குருநாதருடன் நெருக்கமாக வாழும்போது, இறையுணர்வு, இறைவனோடு ஐக்கியம் பற்றிய உணர்வு இல்லாத நிலையில், பிரிவினையின் உணர்வு பெரிதும் தீவிரமடைகிறது. இது, எனது பணியைச் செவ்வனே செய்யும் பொருட்டு, உங்களுக்கு உதவும் நோக்கத்தில், இந்த அனுபவத்தை வேண்டுமென்றே மூடி மறைக்க நான் வரைந்த திரை. நான் செய்யும் வேலை எனது வட்டத்து சீடர்களுக்காக என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் பங்கைச் செய்ய, அதை முழு மனதோடு, தீவிரமாக எடுத்துக் கொள்ளும் அதே வேளையில், என்னை நேசித்து, எனக்குக் கீழ்ப்படிந்து ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய வேலையைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும்.**

**தற்போது எனது பணி மிகவும் பளுவானது, அனைவரின் மேம்பாட்டிற்கான உலகளாவிய பணிகளைத் தவிர, அதிக நேரம் பிடிக்கும் ஆன்மீக மையத்தின் பணியும் என்னிடம் உள்ளது. ஒவ்வொரு விவரத்தையும் தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிட்டு, ஒவ்வொருவருக்கும் பொருத்தமான பணியை வழங்குகிறேன். இந்த மையம் மிகப் பெரிய அளவில் இருக்க வேண்டும், இதில் பல பிரிவுகள் உள்ளன, அனைத்தும் எனது வழிகாட்டுதலின் கீழ் இருக்கும்.**

1939, நவம்பர் 2ஆம் நாள், மையத்தின் 'விளம்பரக் குழு' (PUBLICITY COMMITTEE) மெஹர் பாபாவின் பணிகள் குறித்து மக்களுக்குத் தெரிவிக்கவும், டிசம்பர் மாதத்தில் அடித்தளம் அமைக்கும் விழாவிற்கு அவர்களை அழைக்கவும் மைசூரில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தியது. கூட்டத்தில் நோரினா, டாக்டர் தேஷ்முக், ஜால் கேரவாலா மற்றும் டாக்டர் கனி உரையாற்றினர்.

இரண்டாவது பொதுக்கூட்டம் நவம்பர் 6 மாலை பெங்களூர் டவுன் ஹாலில் (TOWN HALL) நடைபெற்றது. நதீன் டால்ஸ்டாய், தேஷ்முக், டாக்டர் கனி, நோரினா ஆகியோர் விரிவுரைகளை வழங்கினர். கூட்டத்திற்கு முன்பு பாபா தேஷ்முக்கிடம், "**இது ஒரு முழு வெற்றியாக இருக்க நான் அனுமதிக்க மாட்டேன். 50 சதவிகிதம் எதிர்ப்பும் 50 சதவிகிதம் அனுதாபமும் இதில் இருப்பதை நான் உறுதி செய்வேன்!**" என்றார்.

மூன்றாவது பொதுக்கூட்டம் பெங்களூரில் அமைந்த இந்திய அறிவியல் நிறுவனத்தில் (INDIAN INSTITUTE OF SCIENCE, BANGALORE) நவம்பர் 9 அன்று நடைபெற்றது. நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியலாளர் ஸர் சி. வி. ராமன் (INDIAN PHYSICIST DR. C.V. RAMAN) கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். டாக்டர் தேஷ்முக் விஞ்ஞானம் மற்றும் ஆன்மீகம் பற்றிய கேள்விக்கு ஒரு பரபரப்பான

உரையை நிகழ்த்தினார். நோரினா, நதீன் இருவரும் அப்போது மெஹர் பாபாவுடன் அவர்களின் அனுபவங்களைப் பற்றிப் பேசினர். டாக்டர் தேஷ்முக் மிகவும் தர்க்கரீதியான மற்றும் நம்பிக்கைக்குரியவராக இருந்ததும், நோரினா, நதீன் இருவரின் நேர்மையும், ஸர் சி. வி. ராமனை, அவரையும் மீறி அவர்களின் உணர்வுகளில் ஆழமாக ஈர்த்தது.

பின்பு, ஸர் சி. வி. ராமன் தனது கருத்துக்களைத் தெரிவித்தார்:

நான் புத்தர், கிறிஸ்து, மற்றும் பலரின் வாழ்க்கையைப் படித்திருந்தாலும், அவர்கள் மீது மிகுந்த மரியாதையும் பயபக்தியும் கொண்டிருந்தாலும், நான் ஒருபோதும் இதுபோன்ற ஆளுமைகளை நம்பவில்லை. ஆனாலும், பெனாரஸின் பாழடைந்த மற்றும் பிற புனித ஸ்தலங்களை நான் பார்வையிட்டபோது, அந்த இடங்களின் சூழ்நிலைகள் என்னைத் தொட்டு ஊக்கப்படுத்தத் தவறவில்லை.

கடந்த காலங்களில் ரிஷி முனிவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்திருந்தாலும், அவர்களின் செல்வாக்கு, அவர்கள் வாழ்ந்த அந்த இடங்களின் ஆன்மீக சூழ்நிலைகள் இன்றும் பரந்து வியாபித்திருப்பதால் இது நிச்சயமாக ஒரு விசித்திரமான அனுபவமாகும். இந்த அனுபவம் வார்த்தைகளால் வெளிப்படுத்தப்பட வேண்டிய விஷயம் அல்ல, ஆனால் அது உள்ளுணர்வு சம்பந்தப்பட்டது என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. இந்தப் பாழடைந்த கட்டிடங்கள் மட்டுமே பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இதுபோன்ற உணர்வுகளை உருவாக்குகின்றன என்றால், நிச்சயமாக ஆன்மீகம் என்பது உணர்வு சம்பந்தப்பட்ட விஷயம், அறிவுத்திறனைச் சார்ந்தது அல்ல.

ஆரம்பத்தில் அவர் டாக்டர் தேஷ்முக் கூறியதற்கு உடன்படவில்லை என்றாலும், சி. வி. ராமன் அவரது முழு உரையைக் கேட்டபின் அவருடன் முற்றிலும் உடன்பட்டதாகக் கூறிமுடித்தார்:

இது டாக்டர் தேஷ்முக் அவர்களின் தர்க்கரீதியான வாதங்கள் மட்டுமல்லாமல், முதன்மையாக அவர் மிகுந்த நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் வெளிப்படுத்திய கருத்துக்களில் உறுதியாக இருந்தது என்னை மிகவும் கவர்ந்தது.

எல்லா தீர்க்கதரிசிகளின் போதனைகளும் ஒரே மாதிரியானவை என்றாலும், அவற்றைப் பின்பற்றுவது மிகவும் கடினம். ஒரு போதனையாளர் எப்போதும் தனது போதனைகளை விட உயர்ந்தவர்; மனிதகுலத்தின் மீது அவர் செலுத்தும் செல்வாக்கு, இந்தப் போதனைகளுக்கு அவர் உயிரூட்டம் கொடுத்து வாழ்வதில்தான் உள்ளது. ஸ்ரீ மெஹர் பாபாவின் மகிமையை மக்கள் அவருடனான தனிப்பட்ட தொடர்பு மூலம் மதிப்பிட முடியும்.

இந்தக் காலகட்டத்தில், அர்னவாஸ், நர்கிஸ் தாதாசாஞ்சி ஆகியோர் பெங்களூரில் இதர பெண்களுடன் சிறிது காலம் தங்கியிருந்தனர். பாபா நர்கிஸிடம் எதுவும் செய்யாமல் ஓய்வெடுக்குமாறு கேட்டுக் கொண்டார். நர்கிஸ், பாபாவின் தனிப்பட்ட வேலைகளைச் செய்ய விரும்பியதால், பாபாவின்

அறிவுறுத்தல் அவரை வேதனைக்குள்ளாக்கியது. அந்த நேரத்தில், குருநாதருக்குக் கீழ்ப்படிதல் ஒன்றுதான் மிக உயர்ந்த வகையான சேவை என்பதை நர்கிஸ் புரிந்து கொள்ளவில்லை.

1939, நவம்பர் 5ஆம் நாள், நர்கிஸ் தனது அறையை சீர் செய்யும் வேளையில், இரும்புக் கட்டிலை சிறிது நகர்த்தினார். இது பாபாவை வருத்தமுறச் செய்தது. பாபா, தன்னை ஏன் சற்றும் சிரமத்திற்குள்ளாக்குவதைத் தடுக்கிறார் என்றெண்ணி ஆச்சரியப்பட்டார். இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டது; அப்போதுதான் பாபா, தன்னை எந்த உடல் உழைப்பிலும் ஈடுபட அனுமதிக்காததன் காரணம் புலப்பட்டது. அவருக்கு மருத்துவர் ஒருவர் சிகிச்சை அளித்த வேளையில், பாபா, அவரிடம் தனி கவனம் செலுத்தினார். நர்கிஸ், பாபாவிற்கு சேவை செய்வதற்கு பதிலாக, பாபா, அவருக்கு சேவை செய்கிறார் என்று நர்கிஸ் சிந்திக்கத் தொடங்கினார்! “எனது அன்பான பாபா எனக்கு சேவை செய்வது என் துரதிர்ஷ்டம்” என்று அவர் நினைத்தார்.

உடல் சற்று சீரானதும் பாபா, அவரிடம், “**மும்பைக்குச் சென்று, இதய நிபுணரான டாக்டர் கோஹியாரிடம்** (DR. KOHIYAR) **சிகிச்சைப் பெறுங்கள்**” என்று அறிவுறுத்தினார்.

“ஆனால் அவர் வசூலிக்கும் கட்டணம் மிக அதிகம்” என்று நர்கிஸ் சுட்டிக்காட்டினார்.

“**கவலைப்படாதே; நான் அதைப் பார்த்துக்கொள்வேன்**” என்று பாபா உறுதியளித்தார்.

ஆசிரமத்தை விட்டு வெளியேறுவது என்பது, பாபாவிற்கு சேவை செய்வதில், நர்கிஸின் நேசத்திற்குரிய நம்பிக்கைகளுக்கு எதிரானது, என்று கூறி அவர் “நான் அதை அனுமதிக்க மாட்டேன். நான் உங்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன், உங்களுக்கு ஒரு சுமையாக இருப்பதை விரும்பவில்லை” என்று எதிர்ப்புத் தெரிவித்தார்.

பாபா விளக்கினார், “**நான் சொல்வது போலத் தொடர்ந்து செய்யுங்கள். எனக்குக் கீழ்ப்படியாததன் மூலம், நீங்கள் எனக்கு ஒரு சுமை! நான் உங்களுக்கு ஒவ்வொன்றையும் விளக்க வேண்டியிருக்கும் போது, அது எனக்கு ஒரு தலைவலி! நீங்கள் என்னிடமிருந்து எதையும் விரும்பாதபோது, ஏன் கவலைப்பட வேண்டும்?**”

நர்கிஸ், அர்னவாஸுடன் மும்பைக்குத் திரும்பிச் சென்று டாக்டர் கோஹியாரின் கண்காணிப்பில் இருந்தார். சாதாரணமாக அவரது சிகிச்சைக் கட்டணம் மிக அதிகமாக இருந்தாலும், அவர் நர்கிஸிடமிருந்து எந்த கட்டணமும் வசூலிக்கவில்லை. இது நர்கிஸை ஆச்சரியப்படச் செய்தாலும் அவருக்கு பாபா மீதான அன்பு மேலும் வலுவாக வேரூன்றியது.

நவம்பர் 4ஆம் நாள் ஆதி ஜூனியரும், நான்கு நாட்களுக்குப் பிறகு நரிமன், நௌரோஜி, ஸரோஷ் ஆகியோரும் பெங்களூருக்கு வந்தனர்.

கோஹெரும் பல வாரங்கள் லிங்க்ஸில் தங்கியிருந்தார். காக்கா பாரியா நவம்பர் 10 அன்று திரும்பி வந்து பாபாவின் இரவு கண்காணிப்பாளராகப் பணியைத் தொடர்ந்தார். நவம்பர் 11ஆம் நாள், பாதிரியும் ஸரோஷும் காலை ரயிலில் மைசூருக்குப் புறப்பட்டனர். நௌரோஜி, நரிமன் இருவரும் அவர்களுடன் சென்று, மூன்று நாட்களுக்குப் பிறகு மும்பைக்குத் திரும்பினர். மும்பையிலிருந்து மாஸாஜி, 12ஆம் தேதி பெங்களூருக்குத் திரும்பி வந்தார்.

டாக்டர் தேஷ்முக் மதராஸுக்கு விஜயம் செய்து 11ஆம் நாள் நாக்பூருக்குச் சென்றார். அவர் புறப்படுவதற்கு முன்பு, பாபா அவரை டாலி மற்றும் ஃபாலுவுடன் ஆதி சீனியரின் பங்களாவில் சந்தித்தார். அன்று மாலை ஐந்து மணிக்கு ஆண்களின் பங்களாவில் பாபா ஒரு கூட்டத்தை நடத்தினார். களிப்பூட்டும் மனநிலையில், ஒவ்வொருவரிடமும் தங்கள் வேடிக்கையான விருப்பங்களைக் காகிதத்தில் எழுதுமாறு பரிந்துரைத்தார். டான் நகைச்சுவையாக 'பளிங்குக்கற்கள்' (மார்பிள் கோலிகள்) என்று எழுதினார், எனவே பாபா அவரை 'மார்பிள்ஸ் கிளப்பின்' (MARBLES CLUB) செயலாளராக நியமித்தார். பாபா அதன் தலைவர், டாக்டர் கனி, காக்கா மற்றும் பெண்டு அதன் உறுப்பினர்கள்.

டாக்டர் நீலு 'திங்கள் கிழமைகளில் இனிப்புகள்' என்று எழுதியபோது, ஒவ்வொரு திங்கட்கிழமையும் அவருக்கு ஒரு கரண்டி சர்க்கரை வழங்க வேண்டும் என்று பாபா கூறினார். தத்து மெஹந்தர்கே (DATTU MEHENDARGE) ஒரு நல்ல படம் (திரைப்படம்) பார்க்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார், எனவே பாபா புனிதர்களின் 'படங்கள்' நிறைந்த ஒரு புத்தகத்தைப் 'படம் பார்க்க' அவருக்கு வழங்கினார்!

மெஹர் பாபா, பெங்களூரில் பொதுவாக எவரையும் சந்திக்கவில்லை. ஆனால், 1939, நவம்பர் 12 அன்று, அவர் விதிவிலக்காக திறமையான மூன்று இளைஞர்களுக்கு சில நிமிட நேர தரிசனத்தை வழங்கினார்: ஒரு மேற்கத்திய எழுத்தாளரும் கலை விமர்சகருமான ஃபிரான்சிஸ் வாட்ஸன், (FRANCIS WATSON - 32); கேம்பிரிட்ஜில் (CAMBRIDGE) அறிவியல் பயின்று வந்த இந்திய மாணவர் விக்ரம் சாராபாய் (VIKRAM SARABHAI - 20); மற்றுமோர் இந்தியர், ஆக்ஸ்போர்டில் (OXFORD) முன்னாள் மாணவர் கிட்டு பூர்ணா (KITTU PURNA). அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்தில், ஒரு மாதத்திற்குப் பிறகு திரும்பி வருமாறு பாபா குறிப்பிட்டார்.

ஆன்மீகத்தில் ஆர்வம் மிக்க ஃபிரான்ஸிஸ் வாட்சன், பின்னர் ரமண மகரிஷியை (RAMANA MAHARISHI) சந்தித்தார்.

வாட்சன் (அல்லது பிற இருவர்) மெஹர் பாபாவுடன் இரண்டாவது சந்திப்புக்குத் திரும்பி வந்தனரா என்பது தெரியவில்லை, ஆனால் லிங்க்ஸ் பங்களாவில் மெஹர் பாபாவை சந்தித்த பிறகு, தனது தாய்க்கு எழுதிய கடிதத்தில், வாட்சன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

இன்று பிற்பகல் ரோம் லேண்டவ் (ROM LAUNDAV) எழுதிய 'காட் இஸ் மை அட்வெஞ்சர்' (GOD IS MY ADVENTURE) என்ற புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள ஆன்மீகத் தலைவர்களின் விசித்திரமான தொகுப்பை நான் பார்த்தேன். அவர்களில், ஸ்ரீ மெஹர் பாபாவைப் பற்றி ரோம் லேண்டவ் அந்த அளவுக்கு இணக்கமான கருத்தைத் தெரிவிக்கவில்லை என்றாலும், நான் இதைச் சொல்லியாக வேண்டும்; இது ஒரு சுருக்கமான நேர்காணலாக இருந்தாலும், நான் அவரால் வெகுவாக எல்லா நிகழ்வுகளிலும் ஈர்க்கப்பட்டேன். டிசம்பர் 18க்குப் பின்னர் அவரை மீண்டும் சந்திக்க விரும்புகிறேன், அவர் என்னுடைய கேள்விகளுக்கு பதிலளிப்பதாக உறுதியளித்தார். இப்போதெல்லாம் அவர் கடுமையான ஏகாந்தவாசத்தில் இருக்கிறார்; உண்மையில் இன்று அவரை சந்தித்தது எனக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

1939, நவம்பர் 13ஆம் நாள், பாபா, அவரது பதினொரு நாள் உபவாசத்தைத் தொடங்கினார். இந்தக் காலகட்டத்தில், நான்கு பெண்கள் மற்றும் மூன்று ஆண்கள் முறையே ஒவ்வொரு நாளும் ஒருவர் அவருடன் உபவாசம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். நவம்பர் 15 அன்று, இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், "**எனது பதினொரு நாள் உபவாசத்தின் போது, போர் முழுவீச்சில் தொடங்கவில்லை என்றால், அல்லது அமைதி நிச்சயம் என்று கருதப்படாவிட்டால், அதாவது தற்போதைய மந்தநிலை தொடர்ந்தால், நான் உபவாசத்தைக் காலவரையின்றி தொடருவேன். இல்லையேல், நான் பன்னிரண்டாம் நாளில் உபவாசத்தை நிறுத்துவேன்**" என்றார்.

"**உண்மையான போர் நவம்பர் 11ஆம் நாளிலிருந்து தொடங்கியது**" என்று பாபா மேலும் கூறினார்.

நவம்பர் 15 அன்று, போர் முயற்சியின் ஓர் அங்கமாக, போரில் காயமடைந்தவர்களுக்கு, கட்டுகளைத் தயாரிக்கத் தொடங்குமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, நவம்பர் 17 அன்று பாபா உபவாசத்தை நிறுத்தினார்.

மார்கரெட்டின் வருகைக்குப் பிறகு, பாபா பெங்களூரில் ஒரு நடனப் பயிற்சி பள்ளியைத் தொடங்க வேண்டும் என்று முன்மொழிந்தார், இது பாபாவின் பணிகளில் உதவ ஒரு வருமானத்தையும் வழங்கும். ஆதி சீனியர், டான் ஆகியோர் பள்ளிக்கான ஒரு திட்டத்தை உருவாக்கவும், அதற்கு சாத்தியமான இடங்களைத் தேடுவதிலும் ஈடுபட்டனர். ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, பாபா மார்கரெட்டை அங்கு அழைத்துச் சென்றார். ஆனால், பின்னர் அந்த யோசனை கைவிடப்பட்டது, மீண்டும் ஒருபோதும் எழுப்பப்படவில்லை.

டானின் பிறந்தநாள் நவம்பர் 14 அன்று தேநீர் வேளையில் கேக்குகளுடன் கொண்டாடப்பட்டது, ஐயங்கார் குடும்பத்தினர் நவம்பர் 17ஆம் நாள் லிங்க்ஸ் பங்களாவிற்கு வருகை தந்தனர்.

நவம்பர் 19 அன்று போர் குறித்து, பாபா மேலும் கருத்துத் தெரிவித்தார். **“ஹிட்லர், ஒரு துணிச்சலான மனிதர், சிறந்த தேசபக்தர்; தனது நாட்டுக்கு அற்புதமான சேவையை செய்துள்ளார். ஆனால் ஒரு மனிதராக அவர் நல்லவர் அல்ல - கொடூரமானவர் - பயனற்றவர்! யூதர்களுக்கு அவர் விளைவித்தது இரக்கமற்ற செயல்.”**

“போர் தீவிரமாகுமா அல்லது அமைதி நிலவுமா?” என்று அவரிடம் கேட்டதற்கு…

**“போர்”** என்று பாபா பதிலளித்தார். **“இருப்பினும் அவர்கள் சமாதானத்திற்கு உடன்பட்டால், அது நீடித்ததாக இராது. எல்லா இடங்களிலும் உள்நாட்டுப் பகை நிலவும் - உள்நாட்டுப் போர்கள், பொருளாதாரப் போர்கள் மற்றும் பல - இது போர்க்களத்தில் நடத்தும் போரை விட மிக மோசமாக இருக்கும்! இந்தியாவும் இதில் கஷ்டங்களைத் தாங்க வேண்டியது வரும்.”**

இந்தக் காலகட்டத்தில், மின்டா டோலிடானோ (MINTA TOLEDANO) அவரது சகோதரி டிலியாவைப் (DELIA) போலவே, இங்கிலாந்தில் தனிப்பட்ட சிரமங்களை எதிர்கொண்டிருந்தார். 1939, நவம்பர் 20 அன்று, பாபா அவர்களின் கடிதங்களுக்கு இறுதியாக பதிலளித்தார்:

**எனது ஷாலிமார் எனக்கு எழுத வேண்டுமெனில், என்னிடமிருந்து ஒரு பதில் கடிதத்திற்காக நான் அவரை நீண்ட காலம் காத்திருக்கச் செய்ய வேண்டும்! அவருடைய கடைசி இரண்டு கடிதங்களுக்கு நான் பதில் எழுதாமல் தவிர்த்ததால், அவரிடமிருந்து நான் எதிர்பார்த்தது போல, மூன்றாவது ஒரு கடிதம் வந்தது - கடிதம் முழுவதும், ‘அவருடைய அன்பிற்குரியவரின் மௌனம், அலட்சியம், இரக்கமற்ற தன்மை’ போன்ற குறைகளால் நிரம்பியிருந்தன; அவர் பரிதாபமாகவும், தனிமைப்படுத்தப் பட்டதாகவும், மகிழ்ச்சியற்றவராகவும் இருப்பதைக் கண்டுகொள்ளவில்லை எனவும் முறையிட்டிருந்தார். அதனால், என்ன செய்வது அல்லது விரக்தியில் எங்குச் செல்வது என்று தெரியாமல், அதற்குக் காரணமாக இருந்த ‘ஒருவரிடம்’ அவர் பொறுமையிழந்து, கோபம், மனக்கசப்பு மற்றும் எரிச்சலைக் கொட்டித் தீர்த்திருந்தார்!”**

**பிரியமான ஷாலிமார், ஒவ்வொரு வரியிலும் பிரிவால் ஏற்படும் துன்பங்களின் ஆழமான வேதனையைக் காணமுடிகிறது. நீங்கள் இப்போது அனுபவிப்பதை எல்லோரும் எப்போதாவது ஒரு நேரத்தில் உணர்கிறார்கள்… இதை நினைவில் கொள்ளுங்கள், இருள், பொழுது விடியும் முன்னதாக இருக்க வேண்டும், மேலும் நீங்கள் இந்த அனுபவங்களான உஷ்ணம்-குளிர், ஒளி-இருள், பதில்-அலட்சியம் போன்ற வேறுபாடுகளுக்கு வெளியே இல்லை என்பதில் மகிழ்ச்சியாக இருங்கள். மனித வாழ்க்கையின் உண்மையும், சோகமானதும் என்னவெனில், ஒருவர் வாழ்க்கையின் அனுபவங்களால்**

பாராமுகமாகவும், தீண்டப்படாமலும் இருப்பதுதான். உங்களின் பிரியமான ஹாஃபீஸ் என்ன சொல்கிறார்?

இதயமே, பொறுமையாக இருங்கள், கலங்காதீர்கள்,
ஏனெனில் இறுதியில்...
மாலைக்குப் பிறகு காலை வருவது போல்
இரவிற்குப் பிறகு விடியல்...

நீங்கள் விரும்பும் அந்த 'இறைவனுடன் ஐக்கியமாகும்' அனுபவத்தை ஒரே கணத்தின் இடைவெளியில் என்னால் கொடுக்க முடியும், ஆனால் அது என் வழி அல்ல.

பாபா, முன்னர் டிலியாவிற்கு அனுப்பிய ஹாஃபீஸின் ஈரடிக் கவிதைகளை மேற்கோள் காட்டி, "இந்தப் பாதையில் பயணிக்கும் யாத்ரீகர்கள் 'துயரத்தின் முட்களை' மட்டுமே கண்டுகொள்கிறார்கள்" என்றார்.

இதிலிருந்து ஒருவரும் தப்பிக்க முடியாது. எனது விருப்பத்திற்கிணங்க, உங்கள் பிரியமானவரின் சகவாசத்தில் உடல் ரீதியாக வாழ்ந்தாலும், அல்லது நீங்கள் முடிவு செய்தபடியே விலகி இருந்தாலும், போராட்டமும் நெருக்கடியும் எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கும். ஆரம்பத்திலிருந்தே நான் உங்களுக்கு அனைத்தையும் வழங்கினேன் என்பதை ஒரு நாள் நீங்கள் உணர்வீர்கள். உங்கள் அன்பிற்குரியவரின் அருகில் நீங்கள் தங்கியிருக்கலாம்; உங்கள் அன்பானவரை நீங்கள் பார்த்திருக்கலாம்; நீங்கள் அடிக்கடி செய்ததைப் போல், உங்களின் அன்பானவர் சோர்வடைந்து களைப்புறும் தருணங்களில் நீங்கள் ஆறுதலாக இருந்திருக்கலாம்; நீங்கள் மகிழ்ச்சியாகவும், மனநிறைவாகவும் உங்கள் பிரியமானவருடன் வாழ்ந்திருக்கலாம்; நீங்கள் அவரை நேசித்து, அவருக்காக உழைத்து, அவருக்குக் கீழ்ப்படிந்து அவரிடம் அடைக்கலமாகி இருக்கலாம்; ஆனால் இதையெல்லாம் என் அன்பான நீங்கள் தேர்வு செய்யவில்லை.

நான் என்ன சொல்ல முடியும்? நீங்கள் கொடுக்க வேண்டிய உங்கள் 'விருப்பம்' மற்றும் 'இதயத்தை' எனக்கு வழங்குவது இப்போது உங்கள் முறை அல்லவா? உங்கள் நம்பிக்கை முழுமையானது, அது எனக்குத் தெரியும், அதை எக்காரணத்தாலும் அசைக்க முடியாது; ஆனால் உங்கள் 'அகந்தை' திருப்தியை விரும்புகிறது, அதைச் சுக்குநூறாக சிதறடிக்கச் செய்வதை அது விரும்பவில்லை. இது தன்னலமற்ற அன்பின் வழியில் நிற்கிறது; இதுவே உங்கள் அன்பிற்குரியவரைத் திருப்திப்படுத்தும் அல்லது உங்களுக்கு நித்திய மகிழ்ச்சியைத் தரும் ஒரே அன்பு. இருந்தும் இதைத் தெரிந்துகொள்ளுங்கள் எனது அன்பின் ஷாலிமார், உங்களில் என்னைத் தவிர எதுவுமே உண்மையானது அல்லது நிலையானது அல்ல.

தெய்வீகம் என்ற வார்த்தையின் வெளிப்படையான
சித்திரம் நான்!
அனைத்து ராஜ கம்பீர அழகையும் பிரதிபலிக்கும்
கண்ணாடியும் நான்!

**இந்த உலகில் நானின்றி தானாக எதுவும் இல்லை!**
**நீங்கள் எங்குத் தேடவேண்டுமோ அங்குத் தேடுங்கள் -**
**நீங்கள் கண்டுகொள்ள முடியாதது எதுவும் இல்லை!**
**அனைத்தும் நானே! அனைவரும் நானே!**

மூன்று நாட்களுக்கு முன்பு (நவம்பர் 17 அன்று), மெஹர் பாபா இந்தச் செய்தியை இங்கிலாந்தில் வாழும் வில், மேரி பேக்கெட்டுக்கு அனுப்பியிருந்தார்: **"நீங்கள் எப்பொழுதும் போல் எனக்குக் கடிதம் எழுதுங்கள், கவலைப்பட வேண்டாம். நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன், எனது சொந்த மந்தைகளை எப்பொழுதும் கண்காணித்துக் கொண்டிருக்கிறேன்."**

1939, நவம்பர் மாதத்தில், காக்கா, எரச் இருவரையும் மெஹர் பாபா, இந்தியாவில் தெற்கு நோக்கிப் பயணம் செய்து, மஸ்துகளைத் தேடிக் கண்டுபிடித்து, பெங்களூருக்கு அழைத்து வருமாறு அறிவுறுத்தினார். மெஹர் பாபாவின் அடையாளத்தை மட்டும் வெளிப்படுத்தாமல், மஸ்துகளிடம் இனிமையாகப் பேசி, இணங்கச் செய்யத் தேவையான அனைத்தையும் செய்யும்படி அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. எரச், காக்கா இருவரும் நவம்பர் 12 இரவு, ஜால் கேரவாலாவுடன் புறப்பட்டனர்; அவர்கள் பதினொரு நாட்கள் வேறுவேறு இடங்களுக்குச் சென்றனர். மழைக்காலம் ஆதலால் வெள்ளம் சூழ்ந்த பல பகுதிகளில் பயணிக்க வேண்டியிருந்தது. அவர்கள் பல மேல்நிலை மஸ்துகளைத் தொடர்பு கொண்டாலும், ஒருவரைக் கூட இணங்கச் செய்து பெங்களூருக்கு அழைத்துவர முடியவில்லை.

அவர்களின் தோல்வியைக் கருத்தில் கொண்டு, பாபா குறிப்பிட்டது போல, '**போரைத் தொடங்க அல்லது சமாதானத்தை நிலைநாட்ட**', அவர் தானாகவே சென்று, இந்த மஸ்துகளைத் தொடர்பு கொள்ள முடிவு செய்தார். இதற்கிடையில் பாபா தனது 'விருப்பப் பத்திரத்தை' முடிவு செய்தார். பெங்களூரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா முதல் முறையாக நவம்பர் 25ஆம் நாள், தனது கடைசி 'கடைசி விருப்பப் பத்திரம் மற்றும் உறுதிச் சான்று' (LAST WILL & TESTAMENT) ஆவணத்தில் கையெழுத்திட்டார். பல்வேறு ஆண், பெண் மண்டலி அதன் பயனாளிகளாக, நிர்வாகிகளாக குறிப்பிடப்பட்டனர். மெஹராபாத், மாண்ட்லா, இப்போது பைரமங்களா ஆகிய இடங்களில் உள்ள சொத்துக்கள் பாபாவின் விருப்பப்படி பிரிக்கப்பட்டன.

மறுநாள் அதிகாலை, 1939, நவம்பர் 26 அன்று, மெஹர் பாபா பெங்களூரிலிருந்து இந்தியாவின் தெற்குப் பகுதிகளுக்கு ரயிலில் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்தார். அவருடன் எரச், குஸ்தாஜி, காக்கா, ஜால் கேரவாலா மற்றும் சிறுவன் கிருஷ்ணா ஆகியோர் இருந்தனர். பாபா அடுத்த ரயில் நிலையத்தில் தேநீர் அருந்தி, மகிழ்ச்சியான மனநிலையில், ஜாலிடம், **"என்னுடன் பயணம் செய்வது மகிழ்ச்சி, இடர்பாடுகள் இரண்டும் நிறைந்தது. மகிழ்ச்சிக்குக் காரணம், எனது சகவாசத்தில் இருக்கும் பாக்கியத்தை**

**அடையப் பெறுவதோடு என்னுடைய உரைகளையும், விளக்கங்களையும் கேட்க முடிகிறது. இடர்பாடுகள் என்னவெனில் என்னுடன் இருக்கும் வேளையில் கடினமான பணிகளைச் செய்யவேண்டும்; உங்களைச் சக்கையாகப் பிழிவதில் நான் கில்லாடி. மஸ்துகளைத் தேடிக் கண்டுபிடித்து என்னிடம் கொண்டு வருவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல!"**

அவர்கள் அன்றிரவு பத்து மணிக்கு, திருச்சிராபள்ளிக்கு (TIRUCHIRAPPALLI) வந்து ஒரு ஹோட்டலில் தங்கினர். மறுநாள் காலையில் குழு, பாபாவுடன் காரில் மஸ்த் யூஸுஃப் மஸ்தானைத் (YUSUF MASTAN) தொடர்பு கொள்ளப் புறப்பட்டது. பாபா காரில் காத்திருக்க, மண்டலி மஸ்த் அமர்ந்திருந்த ஒரு முஹமதிய சத்திரத்திற்குள் சென்று, அவர்களுடன் ஹோட்டலுக்கு வருமாறு கேட்டுக்கொண்டனர்; அங்கு, பாபா, அவரை நீராட்டி உணவூட்ட முடியும் என்றும் கூறினர். மஸ்த் அதற்கு இணக்கம் தெரிவித்து பாபாவுடன் ஹோட்டலுக்குச் சென்றார். யூஸுஃப் மிக்க மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்; பாபா, அவரை நீராட்டி உணவளிக்கவும் அனுமதித்தார். அவர்களுடன் பெங்களூருக்கு வருமாறு மஸ்தைக் கேட்டபோது, அதற்கும் அவர் ஒப்புக்கொண்டார். அவர்கள் திரும்பி வரும் வழியில் அவரை உடன் அழைத்துச் செல்வதாக பாபா கூறினார். மண்டலி யூஸுஃப்பை அவரது சத்திரத்திற்குத் திரும்ப அழைத்துச் சென்றனர், பாபா, கிருஷ்ணா நாயருடன் காத்திருந்தார். மண்டலி திரும்பி வந்ததும், திருச்சிராபள்ளியில் தனது பணி முடிந்துவிட்டதாகவும், உடனடியாக அவர்கள் நாகப்பட்டினம் (NAGAPATTINAM) நகருக்குச் செல்ல வேண்டும் என்றும் பாபா தெரிவித்தார்.

அனைவரும் மாலை நான்கு மணிக்கு, காரில் புறப்பட்டனர். அவர்களின் பெட்டி படுக்கைகள், இருக்கைகளில் நிரம்பியிருந்ததால் பயணம் சிரமமாக இருந்தது. மேலும் முந்தைய நாள் பெய்த பலத்த மழை காரணமாக, 80 மைல் தூரம் கடந்து செல்ல, பதினொரு மணி நேரம் பிடித்தது. எனவே பலமுறை அவர்கள் காரிலிருந்து இறங்கி சேதமடைந்த பாலங்கள் மீது நடந்து செல்ல வேண்டியிருந்தது. மாலையில் காரின் ஒரு சக்கரமும் பழுதானது. அது சரி செய்யப்படும்போது, அனைவரும் மரத்தின் கீழ் அமர்ந்து இரவு உணவை உண்டனர்; மேலும் பாபாவுடன் மகிழ்ச்சியாகப் பேசுவதற்கான வாய்ப்பைப் பெற்றனர். சிரமங்களும், கஷ்டங்களும் இருந்தபோதிலும், பாபா அற்புதமான மனநிலையில் காணப்பட்டார். பசுமையான நெல் வயல்களால் சூழப்பட்ட பௌர்ணமி இரவில் அவருடன் அமர்ந்திருந்தது மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது.

இரவு முழுவதும் பயணம் செய்து அவர்கள் நாகப்பட்டினத்திற்கு நவம்பர் 28ஆம் நாள் அதிகாலை மூன்று மணிக்கு வந்து சேர்ந்து, ரயில் நிலைய மேடையில் ஓய்வெடுத்தனர். ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருந்த 'மோத்தி பாபா' (MOTI BABA) என்றழைக்கப்படும் உயர் நிலை மஸ்தை ஹோட்டலுக்கு அழைத்து வர காக்கா அனுப்பப்பட்டார். மோத்தி பாபாவை அழைத்து வந்தபோது அவர் மிகவும் அமைதியற்றவராக, பாபாவின்

நீராட்டுதலைப் பெறும் முன்னரே, சற்று நேரத்திற்குப் பிறகு திரும்பி வருவதாகக் கூறி வெளியேறினார்; ஜால் மறுபடியும் மாலையில் அந்த மஸ்தை பாபாவிடம் அழைத்து வந்தபோது, பாபா அவரை நீராட்டி, அவருக்கு உணவூட்டினார்.

மறுநாள் காலையில் மோத்தி பாபா திரும்பிச் சென்றதும், மெஹர் பாபா குழுவுடன் அருகிலமைந்த கிராமத்தை நோக்கி காரில் விரைந்தார்; ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருந்த இந்தியாவின் மிகப் பெரிய மஸ்துகளில் ஒருவரான 'சட்டி பாபா' (CHATTI BABA) என்பவரைத் தேடிச் சென்றார். பாபா திடீரெனக் காரை நிறுத்துமாறு கூறியபோது அவர்கள் நகரத்திலிருந்து ஆறு மைல் தூரம் கடந்து வந்திருந்தனர். சட்டி பாபா சாலையின் ஓரத்தில் அமர்ந்திருப்பதாகவும், அவர்கள் அவரைக் கடந்து வந்துவிட்டதாகவும் பாபா சுட்டிக்காட்டினார். தனது முந்தைய பயணத்தில் சட்டி பாபாவைப் பார்த்த காக்கா, அவர் தனது கிராமத்தை விட்டு வெளியேறி இந்த நேரத்தில் வந்திருக்க முடியுமா என்ற சிந்தனையில் ஆழ்ந்தார். ஆனால் அவர்கள் காரிலிருந்து இறங்கியபோது, அவர் உண்மையில் சட்டி பாபா என்பதை அவர்கள் ஊர்ஜிதப்படுத்தினர்.

பாபா, குழுவுடன் அவரை நெருங்கியபோது, சட்டி பாபா தரையிலிருந்து எழுந்து, அமைதியாக பாபாவை உற்று நோக்கினார்; அதே நேரத்தில் மண்டலி அருகில் வந்து அவருடன் பேச ஆரம்பித்தனர். பாபா தூரத்தில் அமைதியாக நின்றுகொண்டிருந்தார். மஸ்தின் உடல் முழவதும் அழுக்கு மற்றும் மணலால் நிறைந்திருந்தாலும், அவரது முகம் பிரகாசமாக ஒளிர்ந்து, அன்பும் தயவும் நிறைந்து காணப்பட்டது. சட்டி பாபா தமிழில் பேசியதால், கிருஷ்ணா நாயர் மட்டுமே அவருடன் தொடர்பு கொள்ள முடிந்தது. பாபா, கிருஷ்ணாவிடம் அவரை பெங்களூருக்கு வருமாறு அழைக்கக் கூறினார். சட்டி பாபா உடனே, "அவர் எங்கே இருக்கிறார், நான் எங்கே இருக்கிறேன்?... அவர் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்!... என்னை அவருடன் எப்படி ஒப்பிடுவது?" எனக் கேட்டார்.

கிருஷ்ணா இதை, பாபாவிடம் கூறியதும் "**இது வேறு விஷயம். அவர் என்னுடன் வர விரும்புகிறாரா என்று மட்டும் அவரிடம் கேளுங்கள்**" என்றதும் மஸ்த் ஒப்புக் கொண்டார்; அவர்கள் சட்டி பாபாவைக் காரில் அழைத்துச் சென்றனர், அங்கு அவர் பாபாவின் அருகில் அமர்ந்திருந்தார். சட்டி பாபாவுடன், அனைவரும் நாகப்பட்டினத்திலிருந்து மாலை ஐந்து மணிக்கு தஞ்சாவூரை (TANJORE) நோக்கிப் பயணம் செய்து நான்கு மணி நேரத்தில் வந்தடைந்தனர். சட்டி பாபாவிற்கு, பாபா உணவு வழங்கி, அவரும் சிறிதளவு உண்டார். மண்டலியில் இருவர் இரவு நேரங்களில் மஸ்துடன் தங்கினர். பெரும்பாலும் அவர் தரையில் அமர்ந்து எழுதுவது போல, பூமியிலோ அல்லது தரையிலோ விரலை நகர்த்திக் கொண்டிருந்தார்.



சட்டி பாபாவை நீராட்டுதல் (BATHING CHATTI BABA)



பைரமங்களா உலகளாவிய ஆன்மீக மையத்திற்கான அடித்தளம் அமைக்கும் விழா, **17 டிசம்பர் 1939**

(BYRAMANGALA DEDICATION CEREMONY, 17 DECEMBER 1939)

மறுநாள், 1939, நவம்பர் 29 அன்று, மெஹர் பாபா தஞ்சாவூர் நகரில் மற்றொரு மஸ்தைத் தொடர்பு கொள்ளச் சென்றிருந்தபோது, ஜால் கேரவாலா, சட்டி பாபாவை ஹோட்டலுக்கு வெளியே ஒரு தோட்டத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால், காரை எதிர்நோக்கிக் காத்திராமல், சட்டி பாபா நகர வீதிகளில் நடந்து சென்றார். பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், அவர் உடனடியாகக் காரில் வந்து, ஜால் கேரவாலாவிடம், சட்டி பாபா விஷயத்தில் தலையிட வேண்டாம், ஆனால் அவரைப் பின்தொடர்ந்துச் செல்ல அறிவுறுத்தி, காக்காவை ஜாலுக்கு உதவியாக விட்டுச்சென்றார். நகரத்தின் வீதிகள் வழியாக நான்கு மணிநேரம், தொலைதூர கிராமப்புறங்களுக்கு, பல மைல்கள் நடந்து சென்ற பின்னர், சட்டி பாபா இறுதியாக ஜால், காக்கா இருவருடன் ஹோட்டலுக்குத் திரும்பி வர ஒப்புக்கொண்டார்.

இருப்பினும், மஸ்த் ஹோட்டலின் மேல்மாடிக்குச் செல்ல மறுத்து, ஹோட்டல் தோட்டத்தில் மதிய உணவை உண்டார், அதன் பின்னர் அவர் விசித்திரமாகச் செயல்படத் தொடங்கினார்; அரை மணி நேரம் மணலைச் சேகரித்து தனது உடல் மீது வீசினார். பாபா, அவரது இதர மஸ்த் பணியை முடித்துத் திரும்பி வந்ததும், சட்டி பாபாவின் அமைதியின்மையைக் கண்டு, உடனடியாக அவரை நீராட்டத் தொடங்கினார்; அவருடைய உடலின் மீது வாளி வாளியாகத் தொடர்ந்து தண்ணீரை ஊற்றினார்; ஏறக்குறைய ஐம்பது வாளி தண்ணீரை அவர் மீது ஊற்றிய பின்னரே சட்டி பாபா சற்று அமைதியானார்.

மெஹர் பாபா, அன்று காலையில் அப்துல் காதிர் ஜிலானி (ABDUL KADIR JILANI) என்ற ஆறாவது ஆன்மீகத் தளத்தில் வாழ்ந்த ஒரு 'கவுஸ்' (GOUSE) வகை மஸ்தைத் தொடர்பு கொள்ளச் சென்றார். இவரை மீண்டும் ஹோட்டலுக்கு அழைத்து வர மதியம் காக்கா அனுப்பப்பட்டார். எரச், காக்கா, ஜால் ஆகியோர் அப்துல் காதிரைத் தொடர்பு கொண்ட வேளையில், அவர்களின் முதல் வருகையின் போது, அவர்கள் மெஹர் பாபாவால் அனுப்பப்பட்டதை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பாபாவின் பெயரைக் கேட்டு, மஸ்த் எழுந்து நின்று, கைகளைக் கூப்பி, மெஹர் பாபாவின் பெயரை இரண்டு அல்லது மூன்று முறை திரும்பத் திரும்ப எடுத்துரைத்து, கைகளை முகத்தின் மேல் வைத்து, பின்பு தனது கைகளையும் அவர்கள் மூவரையும் மிகுந்த பாசத்துடன் முத்தமிட்டார்.

அன்று மாலை தஞ்சாவூர் நகரை விட்டு வெளியேறி, பாபாவும் மண்டலியும் நள்ளிரவில் திருச்சிராபள்ளிக்கு வந்தனர். சட்டி பாபாவை அவர்களுடன் அழைத்துச் சென்ற வேளையில், எரச், குஸ்தாஜி, கிருஷ்ணா ஆகியோர் பாபாவிற்காக அடுத்த ரயில் நிலையத்தில் காத்திருந்தனர். பாபா, காக்கா, ஜால் மூவரும் திருச்சிராப்பள்ளியில் இறங்கி, மீண்டும் யூஸுஃப் மஸ்தானைத் தொடர்புகொண்டு பெங்களூருக்கு அழைத்து வந்தனர். அவர்கள் முன்பு தங்கியிருந்த அதே ஹோட்டலில் இரவைக் கழித்து, மறுநாள் காலையில் மஸ்துடன் வெளியேறினர். அடுத்த ரயில் நிலையத்தில் இதர மண்டலிக்காகக்

காத்திருந்த அவ்வேளையில் பாபா, சட்டி பாபாவை மீண்டும் ஒரு முறை நீராட்டினார். அனைவரும் டிசம்பர் 1 காலையில் பெங்களூர் வந்து சேர்ந்தனர். சட்டி பாபா தமிழ் மொழி மட்டுமே பேசியதால் அவரை கவனிக்க கிருஷ்ணா நியமிக்கப்பட்டார்.

1939 நவம்பர் தொடக்கத்தில் மைசூர் மற்றும் பெங்களூரில் டாக்டர் தேஷ்முக், நோரினா இருவரின் பொதுக் கூட்டங்களுக்குப் பிறகு, ஸம்பிகே வெங்கடபாதைய்யா (SAMBIGE VENKATAPATHAIYA) என்ற உள்ளூர் வழக்கறிஞர் ஒருவர், பாபா, குழுவுடன் இப்பகுதியில் குடியேறும் திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கத் தொடங்கினார். 55 வயதான வெங்கடபாதைய்யா ஒரு வலதுசாரி இந்து தேசியவாத அரசியல் கட்சியான 'இந்து மஹாசபா'வின் நிறுவன உறுப்பினராக இருந்தார். ஆன்மீக மையத் திட்டத்தை முறியடிக்கவும், பாபாவிற்கு எதிராக மக்கள் கருத்தை மாற்றவும் அவர் செய்யாத வேலையே இல்லை. உதாரணமாக, 1939 டிசம்பர் முதல் வாரத்தில், வெங்கடபாதைய்யா இந்த மூர்க்கத்தனமான அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டார்:

ஸ்ரீ மெஹர் பாபாவைப் பற்றிய அனைத்து வெறித்தனமான தம்பட்டம் கொட்டும் பக்தர்கள், சீடர்கள், அபிமானிகள், நண்பர்கள் ஆகியோர் பொய், போலி ஆரவாரம், வீறாப்பு, அதட்டல் அனைத்தையும் முயற்சிக்கிறார்கள், மேலும், அவருடைய நெருக்கமான ஈடுபாடுகளுக்குத் திடமான ஆவண சான்றுகள் உள்ளதாகவும், இது அவரைக் கண்டனம் செய்யும் அளவிற்கு, மோசடி செய்து ஏமாற்றும் போலி, பித்தலாட்டக்காரர் என்பதைத் தெளிவாக்குகிறது.

(மெஹர் பாபா) எந்தவோர் ஒழுக்கமான எண்ணம் கொண்ட ஆணோ பெண்ணோ அணுக முடியாத அளவிற்கு இழிவான குணமிக்கவராகக் கண்டிக்கப்படுகிறார்... அவர் மனிதகுலத்தின் மோசடி... ஆபத்தான அரக்கன்!

1939 டிசம்பர் 9ஆம் நாள், இந்த எதிர்ப்பைப் பற்றி விவாதிக்கும் போது, ஜால் கேரவாலா, பாபாவிடம், அவர் ஏன் வெளியே வந்து, இத்தகைய அவதூறான விரோதத்தைக் கண்டிக்கவில்லை என்று கேட்டார். மெஹர் பாபா இந்த பதிலை அளித்தார்:

**ஆனால் அவர்கள் என்னை சிலுவையில் அறையும் நேரத்தை இன்னும் எட்டவில்லை! நான் விரும்புவதை ஒப்பிடும்போது இது ஒன்றுமில்லை. எனவே, அதற்குத் தயாராக இருங்கள். இது ஓர் ஆரம்பம் மட்டுமே - வெறும் குழந்தையின் விளையாட்டு! இதை விட மிகவும் தீவிரமான மற்றும் பெரிய அளவிலான எதிர்ப்பிற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று சில காலத்திற்கு முன்பு நான் எச்சரித்தேன்.**

டாக்டர் கனி, "நீங்கள் ஏன் உங்கள் திறவுகோலைத் திருப்பக்கூடாது?" என்று கேட்டார்.

**இதுதான் எனது திறவுகோல்; இல்லையெனில் இந்த அறிவற்ற மக்கள் என்ன செய்ய முடியும்? இது அவர்களின் தவறு அல்ல. அதே பழைய குழப்படிகளை மேலெழுப்பி அவர்கள் வீணடிக்கிறார்கள், அதே பழைய**

'ஜான் புல்' (ஒரு பிரிட்டிஷ் வெளியீடு) கதைகள், கே. ஜெ. தஸ்தூரின் செய்தி மற்றும் கிரா◌ஃபிக் (ஒரு இந்திய பத்திரிகை) - இவை அனைத்தும் வார்த்தைகளைப் பொறுத்தவரை மிகவும் குழந்தைத்தனமானவை!

இது வரை நான் எதையும் பொருட்படுத்தவில்லை, பொதுவான பதில்களையும் அனுமதிக்கவில்லை, ஆனால் இப்போது நாம், இங்கு ஒரு முக்கியமான ஆன்மீக மையத்தை நிறுவுகிறோம் என்பதால் உலகம் இதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அந்த வேலை எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது. எனவே, கண்ணியமான முறையில் - இதமாக, அமைதியாக, ஆனால் நம்பிக்கையூட்டும் விதத்தில் நாம் அவர்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

இங்குள்ள விஷயங்கள் அனைத்தும் மிகவும் மெதுவாக, மெத்தனமாக உள்ளன, மாறாக மந்தமாக, மறைந்துவிட்ட நிலையில் உள்ளன. (உங்களில் எந்த உற்சாகமும் இல்லை) எனவே, அதையெல்லாம் கிளறிவிட இப்போது இந்த எதிர்ப்பு வந்துவிட்டது. அதை வரவேற்று எனது பணிக்குப் பயன்படுத்துவோம். அதைத் தனிப்பட்டதாக மாற்றி, தனிநபர்களிடம் வெறிபிடித்து நடந்து கொள்ள வேண்டாம். உண்மைகளை எடுத்துரைத்து அவர்களின் வேடிக்கையான பேச்சுக்கள் மற்றும் வாதங்களை நொறுக்குங்கள்.

நான் உள்ளளவில் எனது வேலையைச் செய்கிறேன். நீங்கள் வெளியளவில் செய்கிறீர்கள், மக்களுடன் தொடர்பில் இருப்பது, சூழ்நிலைகளை தைரியமாக ஆனால் அமைதியாக எதிர்கொள்வது, நம் அன்பின் பணியை மனமாரச் செய்வது, உணர்ச்சிவசப்படாமல், கடுமையான சொற்களைப் பயன்படுத்தி வீண் வெறுப்பை உருவாக்காமல், உங்கள் எதிரிகளின் வாதங்களை உண்மையுடன் அன்பாக வெல்வது - இதுதான் உங்கள் சோதனை. அதில் உண்மையாக இருங்கள். சீடர்கள் என்ற அந்தஸ்திற்கு நீங்கள் தகுதியானவர் என்பதை நிரூபிக்கவும், நான் உங்களுக்கு உதவுவேன்.

இது, உங்களை தெம்புடன் பணியில் ஈடுபடச் செய்து, உங்கள் உற்சாகத்தையும் ஆர்வத்தையும் தூண்டும். அப்போது விளையாட்டு புத்துணர்வு பெற்று, கலகலப்பாக இருக்கும்! முழு உலகமும் ஒன்று அல்லது மற்றொன்றுக்காக போராடுகிறது, நீங்களும் விளையாட்டில் இணையுங்கள் - போராடுங்கள், சுயநல நோக்கங்களுக்காக அல்லது ஆதாயங்களுக்காக அல்ல, ஆனால் சத்தியத்திற்காக. எதற்கும் அஞ்ச வேண்டாம், முடிவுகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டாம்.

ஒரு போர்வீரனாக இருங்கள், ஆன்மீகம் மற்றும் சத்தியத்திற்கான உங்கள் புனிதமான காரணத்திற்காகப் போராடுங்கள், முடிவுகளைப் பற்றி ஒருபோதும் சிந்திக்கவோ, கவலைப்படவோ செய்யாதீர்கள். முடிவுகள் எப்போதும் என்னுடையவை. எனது வேலை எனக்குத் தெரியும், சூழ்நிலைகளுக்கு ஏற்ப நான் திட்டங்களை வடிவமைக்கிறேன். நீங்கள்

**வெறுமனே வழிமுறைகளைப் பின்பற்றி, பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும் - சத்தியம் மற்றும் ஆன்மீகத்திற்கான போரில் வீரர்களாக விளங்கும் சீடர்கள்.**

அதே தலைப்பில் தொடர்ந்து, பாபா கருத்துரைத்தார்:

**மக்கள், தங்கள் உற்சாகத்தில் அல்லது அதீத ஆர்வத்தில், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உணராமல், தங்கள் சொந்த குறிக்கோளைக் கெடுத்துவிடுகிறார்கள் என்பது பரிதாபத்திற்குரியது. அவர்கள் பெருமிதமடைந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய விஷயம், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, துரதிர்ஷ்டமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. போதுமான அடிப்படை காரணங்கள் இல்லாத விஷயங்களில் வெளிப்படையான எதிர்ப்பும் கண்டனமும், கூக்குரலும் எழுப்பப்படுகின்றன, மேலும் இதுபோன்ற அற்பத்தனமான விஷயங்களில் மதிப்புமிக்க நேரமும் சக்தியும் வீணடிக்கப்படுகின்றன; இதைத் தனக்கும், பிற அனைவருக்கும் பயனளிக்கும் வகையில், நல்ல நோக்கங்களுக்காக மிகவும் சிறப்பாகப் பயன்படுத்த முடியும்.**

**பொறாமை மிகப் பெரிய பலவீனம். இது உண்மைப்பொருள் மற்றும் மெய்மையின் தோற்றத்தை இருளடையச் செய்து மறைக்கிறது. இது ஒருவரில் வெறித்தனத்தைத் தூண்டி அவரை வாதங்களில் ஈடுபட வைக்கிறது. அர்த்தமற்ற பேச்சுக்களில் சுதந்திரமாக ஈடுபட்டு, அவற்றின் பலவீனத்தால் விளைந்த தீங்கை உணர்ந்து கொள்வதற்கு முன்னர், அவை அவமானத்தையும் துயரத்தையும் தவிர வேறொன்றையும் கொண்டு வருவதில்லை.**

**உண்மைப்பொருளை, ஒருபோதும் மங்கச்செய்யவோ அல்லது எவ்வளவுதான் பிரம்மாண்டமான முறையில் அழுது புலம்புவதன் மூலம், அதை மூடி மறைக்கவோ முடியாது. அது தனது சுய வெளிச்சத்தில் பிரகாசிக்கிறது. மேகங்கள் வந்து செல்லும், அவை நிழல்களையும் தற்காலிக இருளையும் மட்டும்தான் கொண்டுவரும். சூரியனுக்கு ஒருபோதும் தொல்லையோ தொந்தரவோ தரமுடியாது எனும்போது, மேகங்கள் என்னதான் செய்யமுடியும்! பொய்யும், போலியுமான பிரச்சாரத்தால் சத்தியம் ஒருபோதும் மறைக்கப்படுவதில்லை. சூரியனை நோக்கி தூசியை வீச முயற்சிப்பது, சூரியனை அல்ல அதை வீசிய நபரையே குருடாக்குகிறது.**

**ஆனால் இந்த எளிய உண்மைகளைப் புரிந்துகொள்பவர்கள் மிகக்குறைவு. பெரும்பாலான மக்கள் சில சுய பாணியிலான தலைவர்களால் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள், ஆளப்படுகிறார்கள், அவர்கள் நியாயமான வழிமுறைகள் அல்லது தவறான செயல்களால் வெளிச்சத்திற்கு வர முயற்சிக்கிறார்கள். அவர்கள் தங்கள் சுயநல நோக்கங்களுக்காக சத்தியத்தை விரும்பவில்லை, ஆனால் மக்கள் மத்தியிலிருந்து தொலைந்து போகாமல் இருக்க, எப்போதும் மக்கள் பார்வையில் இருக்க, அவர்கள் பொய்களையும் புரளிகளையும் கண்டுபிடித்து,**

கட்டுக்கதைகளை உருவாக்குகிறார்கள், உண்மைகளை சிதைக்கிறார்கள், பொது சேவையின் பெயரில் இந்தப் பொய்களை, பொதுமக்கள் முன் வைக்கிறார்கள். வெகுஜன மக்களின் மனதில், பலவீனத்தை ஏற்படுத்தும் பரபரப்பான பேச்சுகளுடன், உண்மைப்பொருளைத் தவறாகச் சித்தரிக்கும் திறனை உருவாக்கும் தலைவர்களின் பகட்டான பெயர்களால் அல்லது தந்திரங்களால் பொதுமக்கள் தவறாக வழி நடத்தப்படுகிறார்கள்.

உலகம் முழுவதும் ஒரே மாதிரியான போராட்டம் - வெற்றி தோல்விக்கான விளையாட்டு - வெவ்வேறு வழிகளில், அவரவர் நிபந்தனைகளுக்கு ஏற்ப, மதம், அரசியல், அறநெறி, தொழில் (வணிகம்), வெவ்வேறு நேரங்களிலும் இடங்களிலும், எல்லா துறைகளிலும், வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் வாழ்வின் தவிர்க்க முடியாத போராட்டம் நடந்துகொண்டே இருக்கும்.

சிரித்துக்கொண்டே, பாபா எழுத்துப்பலகையில் உச்சரித்தார்:

**எனவே இது மெஹர் பாபாவிற்கும் கூட! கடந்த பல ஆண்டுகளாக, எனக்கு எதிராக இந்த விரோதப்போக்கு இருந்தபோதிலும், எனது பணி எந்தத் தடையுமின்றி பரவி வருகிறது என்பதை நீங்கள் பார்த்து வருகிறீர்கள். புரிந்து கொள்ளாதவர்கள், உண்மைகளைக் கேட்டறிய விரும்பாததால், ஏளனத்திற்கு உள்ளாவதை நீங்கள் பரிதாபம், வருத்தம் இவற்றின் கலவையான உணர்வுகளுடன் பார்த்திருக்கிறீர்கள். பத்திரிகைகள் மூலமாகவும், பொதுமக்கள் முன்பாகவும் இந்தப் பொய் பிரச்சாரத்தால் எனது பணிகள் எவ்வாறு பாதிக்கப்படும்? எனக்கு எதிரான இந்தக் கூக்குரலும் அழுகையும், பிரச்சாரம் அனைத்தும் எனது பணியை எந்த வகையிலும் பாதிப்பதில்லை. மாறாக, வேடிக்கையான வதந்திகள் மற்றும் பரபரப்பான மக்களின் செயலற்ற ஆர்வத்தைத் தூண்டுவதன் மூலம், இது எனது பெயரையும் பணியையும் அவர்கள் மத்தியில் அதிக முக்கியத்துவம் அடையச் செய்துள்ளது. என்னைக் கேலி செய்பவர்கள், என்னைப் பார்த்து, என்னைப் பற்றிய உண்மைகளை அறிந்த பின்னர், தவறு செய்தமைக்காக மனம் வருந்தி, உள்ளூறுத்தலுடன் அங்கலாய்க்கிறார்கள்!**

**பூனா, அஹமதுநகர் போன்ற இடங்களில் தொடங்கி, மும்பை, மதராஸ், தென்னிந்தியா மற்றும் வட இந்தியாவை உள்ளடக்கிய எனது பணி, இப்போது மேற்கத்திய நாடுகளை எட்டியுள்ளது. இது முதலில் இங்கிலாந்திலும், அங்கிருந்து ஐரோப்பா வழியாக அமெரிக்காவிலும், உலகம் முழுவதிலும் பரவியுள்ளது! இது என்னுடைய உண்மை நிலைக்கான ஆதாரம் இல்லையா? இப்போது வரை, நான் பெரும்பாலும் ஏகாந்தவாசத்தில் வேலைச் செய்து வருகிறேன். இன்னும், நாளுக்கு நாள், என்னைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. நான் பொதுமக்களைப் பார்ப்பதில்லை, வெளியளவில் என்னைப் பார்க்க விரும்புவது போலப் பாசாங்கு செய்பவர்களையும் சந்திப்பதில்லை. மேலும், அரண்மனைகளில், எல்லா வசதிகளோடும் வாழக்கூடியவர்கள், என்னுடன்**

**தங்குவதன் மூலம் ஒரு துப்புரவாளரின் பணியைச் செய்வது எவ்வளவு தனித்துவமானது. ஆகையால், கண்கள் இருந்தும் காணாதவர்கள் போல், அந்த அளவிற்குக் குருடாக எவருமில்லை!**

**நீங்கள் என் வீரர்கள், எனக்காக நீங்கள், உங்களின் 'நான்' எனும் அகந்தையை அகற்ற போராட வேண்டும். எனது அரங்கத்தில் நீங்கள் போராடும் போது, உங்கள் அகந்தையை நீங்கள் உதைத்துத் தள்ளுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.**

இதற்கிடையில் வெங்கடபாதைய்யா, கர்னல் ஈரானி மற்றும் பாபாவை எதிர்க்கும் பிறருடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினார். 'ஸ்ரீ மெஹர் பாபாவின் தரம் மற்றும் தகுதி குறித்த சான்றுகளை ஆராய்வதற்கும், பைரமங்களாவில் மெஹர் பாபா உலகளாவிய ஆன்மீக மையம் நிறுவுவதை எதிர்ப்பதற்கும்' அவர், 1939, டிசம்பர் 10ஆம் நாள் தனது சொந்த பொதுக்கூட்டத்தை நடத்தினார்.

ஜால் கேரவாலா, டாக்டர் கனி, டாக்டர் தேஷ்முக், நோரினா ஆகியோர் 'மெஹர் பாபாவின் உண்மைப்பொருளின் ராஜாங்கம் (ஆட்சி)' [MEHER BABA'S RAJ (REIGN) OF TRUTH] என்ற தலைப்பில் ஒரு சிறிய கையேட்டை வெளியிட்டிருந்தனர்; இது மெஹர் பாபாவைக் குறித்த சாதாரண மக்களின் அச்சத்தைத் தீர்க்கவும், எதிராளிகளின் சில விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையிலும் அமைந்தது. பாபாவின் சம்மதத்துடன், அவர்கள் வெங்கடபாதைய்யாவின் கூட்டத்தில் கலந்து கொண்டு கையேட்டை விநியோகிக்க முயன்றனர்.

மெஹர் பாபா, எதிர்கால ஆன்மீக மையம் அமையும் இடத்தை டிசம்பர் 7ஆம் நாள் பார்வையிடச் சென்றார். பெண்டு, பாதிரி, காளேமாமா, நௌரோஜி, ஆதி சீனியர், விஷ்ணு ஆகியோர் மையத்தின் அடிக்கல் நாட்டு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மும்முரமாக இருந்தனர். ஒரு பெரிய கூடாரம் அமைக்கப்பட்டது; அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு அஞ்சல் வழி அனுப்பப்பட்டன; மேலும் அனைத்து முக்கிய செய்தித்தாள்களிலும் பொதுமக்கள் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.

1939 டிசம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை, மெஹர் பாபாவின் உலகளாவிய ஆன்மீக மையத்திற்கான அடித்தளம் அமைக்கும் விழா நடைபெற்றது. பொது மக்களைத் தவிர, மும்பை, பூனா, நாசிக், அஹமதுநகர் போன்ற நகரங்களைச் சேர்ந்த அன்பர்கள் பலர் கலந்து கொண்டனர். பெங்களூரிலிருந்து மையத்திற்குச் செல்ல நாற்பது பேருந்துகள் வாடகைக்கு எடுக்கப்பட்டன. ஸர் மிர்ஸா (மைசூர் திவான்) மற்றும் பிற முக்கிய அரசாங்க அதிகாரிகள் உட்பட ஏறக்குறைய 4,000 பேர் பங்கேற்றனர். மெஹர் பாபா, எலிஸபெத்தின் காரில் காக்கா, ஜால் கேரவாலா, நோரினா, நதீன் ஆகியோருடன் வந்தார்; பாபா, சத்ராவுடன் செங்கல் சிவப்பு நிற கோட் அணிந்திருந்தார்.

வரவேற்புக் குழுவின் தலைவரான பப்பா ஜெஸவாலா, மெஹர் பாபாவை வரவேற்று மலர் மாலை அணிவித்து, நிகழ்ச்சியை மாலை 4:30 மணிக்குத் தொடங்கி வைத்தார். குருநாதரை கௌரவிக்கும் விதத்தில், ஸையத்

ரஸூல் ஆரி..ப் (SYED RASUL ARIF) உருது மொழியில் ஒரு கவிதையை மொழிந்தார்; சம்பத் ஐயங்கார் உரை நிகழ்த்தினார். பாபா, தரையை உடைக்கப் பயன்படுத்தும் ஏழு உலோகத்தாலான மண்வெட்டியின் முக்கியத்துவத்தை டாக்டர் கனி விளக்கினார். பாபா தரையை உடைத்து அடித்தளம் போடத் தொடங்கினார். ஒரு சிறப்பு கல் இருக்கையில் அமர்ந்து (இது எதிர்கால கட்டிடத்தின் மூலக்கல்லாக வைக்கப்படவிருந்தது), பின்பு பாபா எழுந்து, நிலத்திலிருந்து சிறிதளவு மண்ணைத் தோண்டிய அதே வேளையில், அவரை வாழ்த்திக் கோஷங்கள் எழும்பின. பாபா ஏழு முறை இவ்வாறு மண்ணைத் தோண்டி, மீண்டும் தனது சிறப்பு இருக்கையில் அமர்ந்தார். மெஹர் பாபாவின் பின்வரும் செய்தியை ஐயங்கார் வாசித்தார்:

**உலகம் இன்று போர்க்களத்தில் இறங்கியுள்ளது. இது அரசியல், பொருளாதார, சமூக மற்றும் மத ரீதியான அனைத்து வாழ்க்கைத் துறைகளையும் சூழ்ந்துள்ளது.**

**எதிர்காலத்தைப் பற்றிய பயம் மற்றும் நிச்சயமற்ற தன்மையால் மேம்படுத்தப்பட்ட சுய பாதுகாப்பின் உள்ளுணர்வு பல்வேறு கற்பனை பெயர்கள் மற்றும் கவர்ச்சி சொற்களின் போர்வையில் அதி தீவிரமாகச் செயல்படுகிறது. பிரத்யேகமான ஒவ்வொன்றும் தேசியவாதமாக அணிவகுத்துச் செல்கிறது; தன்னலம் பொருளாதாரம் என்று அழைக்கப்படுகிறது; வெறித்தனம் என்பது மதத்திற்கு ஒத்ததாக இருக்கிறது; சுதந்திரவாதம், சமூக மற்றும் தார்மீக சுதந்திரமாகக் கருதப்படுகிறது; மேலும் சுரண்டல் அரசியல் என்று அழைக்கப்படுகிறது.**

**சுய பாதுகாப்பின் இந்த உள்ளுணர்வு, கீழ் நிலை பரிணாம வாழ்க்கையின் வளர்ச்சியில் ஏற்கத்தக்கது, இயல்பானது. ஆனால், மனிதன் மூலமாக வெளிப்படும்போது, அது தன்னைப் பேசும் மிருகத்தைத் தவிர வேறு எந்த வகையிலும் சிறந்தவன் அல்ல என்றும், 'படைப்பில் சிறந்தவன் மனிதன்' என்ற பட்டத்திற்கு அவன் இன்னும் வெகுதொலைவில் இருக்கிறான் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.**

**ஒருவர் உலக விஷயங்களின் சரியான அல்லது தவறான பக்கத்தில் தன்னைக் கண்டுகொண்டால், அது அவருடைய தவறாகுமா? இல்லை! ஒவ்வொரு மனிதனும் ஒரு திட்டவட்டமான நோக்கத்திற்காகப் பணிபுரிந்து, அதை அடைவதற்காகவே வந்திருக்கிறான்; மேலும் தனது பங்கை முழு நிறைவோடு, சிறப்புறச் செய்வதன் மூலம், அவன் தானாகவே தனது விடிவுகாலத்தை, விமோச்சனத்தைக் கண்டு கொள்கிறான்.**

**இருப்பினும் இந்த வேறுபாடு இல்லாமலில்லை. உலக விஷயங்களின் தெய்வீக திட்டத்தில், தனிநபர்கள் அல்லது மானிடர்கள், ஆன்மீகப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கு பதிலாக, முட்டாள்தனமாக, காலத்தைக் கழித்து, கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்; இந்தக் கஷ்டங்கள் அவர்கள் புனர்வாழ்வை நோக்கிச் செல்ல வழிவகுக்கும்.**

**இந்த மகத்தான இலக்கை, ஆன்மீக குருநாதர்கள், போதிப்பது மட்டுமில்லாமல், மிகவும் பழக்கமான சொற்களாகிய, சுய மறுப்பு, பற்றற்ற தன்மை, சகோதரத்துவம் ஆகியவற்றை செயல்முறையில் கடைப்பிடிக்கச் செய்வதன் மூலமும் மிக எளிதாகவும், குறைவான வேதனையுடனும் அடையச்செய்கிறார்கள்; அன்பு ஒன்றுதான் அதன் ஆரம்பமும், முடிவும்.**

**இதுபோன்ற ஓர் உலகளாவிய விழிப்புணர்வுக்கான தருணம் எதிர்காலத்தில் மிகையாக வளர்ந்து வருகிறது; இந்த சந்தர்ப்பத்தை சந்திக்கத்தான், உலகளாவிய ஆன்மீக மையத்திற்கான அடித்தளம் இன்று அமைக்கப்பட்டுள்ளது. அரசகுல ராஜாங்கத்தின் தலைநகரான மைசூர், வெகுவிரைவில், பல முற்போக்கான அம்சங்களுக்கிடையில், உலகின் ஆன்மீக மூலதனத்தையும் வைத்திருப்பதில் அதன் தனித்துவமான நல்லதிர்ஷ்டத்தை நிச்சயமாக உணரும்.**

**உலகம் இதுவரை அறிந்திராத ஆன்மீக மறுவாழ்வு மற்றும் நீங்கள் இன்று கண்ட ஆன்மீக மையத்தின் அடித்தளம் அமைப்பதன் மிகப் பெரிய திட்டத்தில், பங்கேற்பவர்களையும், பங்கேற்காத ஒவ்வொருவரையும் நான் ஆசீர்வதிக்கிறேன்.**

**உலகளாவிய ஆன்மீக மையத்தின் இந்தத் திட்டம், பூமியில் எனது தெய்வீக பணியின் தன்மையைக் குறிக்கிறது. நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.**

பின்னர் லட்சுமி ஐயங்கார், எம்.சக்ரவர்த்தி ஐயங்கார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். ‘மெஹர் பாபாவிற்கு ஜெய்’ என்ற உரத்த ஆரவாரங்களுக்கு மத்தியில் நிகழ்ச்சி நிறைவுற்றது. பாபா வெளியேறும்போது, வாணவேடிக்கைகள் வானத்தை ஒளிரச் செய்தன.

காலம், கண்கவரும் அற்புதமான காட்சிகளைக் கண்டு ஆச்சரியமடைந்தது. “அடித்தளம் அமைக்கும் விழா, ஆயிரக்கணக்கான மக்களுக்கு, மெஹர் பாபாவின் தரிசனத்தைப் பெறும் வாய்ப்பை அளித்தது. இந்த விழாவின் வெளிப்புற நிகழ்வின் மூலமாக, மெஹர் பாபா பல மைசூர் மக்களின் இதயங்களில் அன்பின் விதைகளை விதைத்தார் - இது, காலப்போக்கில் கன்றுகளாக வளர்ந்து, பூக்களாக மலர்ந்து, கனி தரும் காலம் வரும்!”

இதற்கிடையில், இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், பாபாவிற்கு எதிராக வெகுஜன எதிர்ப்பை எழுப்பும் நோக்கத்தில், வழக்கறிஞர் வெங்கடபாதைய்யா ஒரு மோரிஸ் காரை வாடகைக்கு எடுத்து, மெஹர் பாபாவைக் கண்டிக்கும் துண்டு பிரசுரங்களைக் காரில் நிரப்பி, பைரமங்களாவில் அந்நேரம் விநியோகிக்க நினைத்தார். ஆனால் மாலை ஆறு மணிக்கு அது விறகு சுமந்து வந்த ஒரு காளை வண்டியோடு மோதி, பள்ளத்தில் கவிழ்ந்து, துண்டு பிரசுரங்களை, சாலையெங்கும் நிரப்பியது. அவ்வேளையில் அந்த இடத்தைக் கடந்து சென்ற பாதிரி அந்தக் காட்சியின் புகைப்படத்தை எடுத்தார். துரதிர்ஷ்டவசமான ‘விபத்திற்குப்’ பின்னால் ஒருவேளை, கடவுளின் கை இருந்திருக்க வேண்டும்.

இந்த மையத்தின் கட்டுமானத்தை மேற்பார்வையிட ஒரு சில மேற்கத்திய பெண்கள் மற்றும் சில மண்டலி உட்பட ஒரு குழு அமைக்கப்பட்டது.

ஒப்பந்தக்காரராக இருந்த நௌரோஜி தாதாசாஞ்சி, அன்றாட கட்டிட பணிகளை மேற்பார்வையிட டிசம்பர் 1ஆம் நாள் மும்பையிலிருந்து வந்து பெங்களூரில் தங்கியிருந்தார். ஆனால் இப்போது அவர், பாதிரி, முரளி (உதவியாளர்கள்) ஆகியோருடன் பைரமங்களாவில் வசிக்கத் தொடங்கினார். மாஸாஜி அவர்களுக்கு வேண்டிய உணவைத் தயார் செய்தார். மேலும் பெண்டுவும் திட்டத்திற்கு உதவியாக இருந்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பெங்களூருக்கு வந்து, பாபாவை சந்தித்து, அவருடைய அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொண்டனர். பாபா முதலில் அந்த நிலத்தின் மீது இரண்டு கட்டமைப்புகளை உருவாக்க உத்தரவிட்டார். 1939, டிசம்பர் 19 அன்று, பணிகள் தொடங்கின.

பைரமங்களாவில் நடந்த விழாவிற்கு முன்பு, மெஹர் பாபா, பொதுமக்களை சந்திக்கவில்லை; அவர் ஏகாந்தவாசம் மற்றும் மஸ்த் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்; வெளி நபர்கள், ஒரு சிலர் மட்டுமே தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சமீபத்திய விளம்பரங்களின் விளைவாக (ஆதரவாகவும், எதிராகவும்) மக்கள் பாபாவை சந்திக்க அதிக ஆர்வம் காட்டினர். எனவே, ஒவ்வொரு நாளும் புதிய நபர்களுக்கு தரிசனம் வழங்க பாபா, குறிப்பிட்ட நேரங்களைக் கனிவுடன் வழங்கினார். 1939, டிசம்பர் 18 முதல், ஒவ்வொரு நாள் காலையிலும் எட்டு முதல் ஒன்பது மணி வரையிலும், பிற்பகல் மூன்று முதல் நான்கு வரையிலும் தரிசனம் மற்றும் நேரடிப்பேட்டிகளை வழங்கத் தொடங்கினார்.

டிசம்பர் 22ஆம் நாள், சமீபத்திய நிகழ்வுகளின் போக்கு பற்றி விவாதிக்கும் போது, மெஹர் பாபா விளக்கமளித்தார்:

**ஆன்மீகம் மற்றும் உண்மைப்பொருளை (இறைவனை) மனமார தேடும் முயற்சியில் மேற்கத்திய நாடுகளின் மனநிலை, இந்திய தேசத்தில் இருப்பதை விட இப்போதெல்லாம் சிறப்பாகத் தெரிகிறது. இந்திய மக்களின் அணுகுமுறையும், மனநிலையும் இந்த நாட்களில் மிகவும் அசாதரணமாகவும், விசித்திரமாகவும் உள்ளது. இந்தியா, ஒட்டுமொத்தமாக, இப்போது பொருளாதார சக்திகள், அரசியல் விழிப்புணர்வு மற்றும் செல்வத்தை விரும்புகிறது. இருந்தும், இதை நினைவில் கொள்ளுங்கள், இந்தியா ஒன்றுதான், வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு, மஸ்துகளை உருவாக்குகிறது. ஆனால், மொத்தத்தில் பார்க்கும்போது, இங்குள்ள நிலைமை மிகவும் மோசமாக, வருந்தத்தக்கதாக உள்ளது. ஆன்மீகப் பாதையைப் பொறுத்தவரை, இந்திய மக்களின் ஆன்மீக இறை நம்பிக்கையை கேள்விக்குட்படுத்த முடியாது, ஆனால் மேதாவிகளின் அறிவுசார்ந்த மல்யுத்தம் விரும்பத்தக்கது அல்ல; எதிர்காலத்தில், நீங்கள் இதை அதிக அளவில் காண்பீர்கள்.**

மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக மக்கள் வரத் தொடங்கியபோது, அவர்கள் இயல்பாகவே போரைப் பற்றிய கேள்விகளை எழுப்பினர். சில நாட்களுக்குப் பிறகு, பாபா, டாக்டர் கனியிடம், "**போரைப் பற்றிய எனது விளக்க உரைகள், அறிக்கைகள் அனைத்தையும் நீங்கள் தொகுத்து, அச்சிட்டு விநியோகிக்க வேண்டும்**" என்று கூறினார்.

புன்முறுவல் செய்துகொண்டே டாக்டர் கனி, "ஒரு கையேட்டை தயாரிப்பதால் மட்டும் என்ன விளைவு ஏற்படும்? நீங்கள் அவதார புருஷராக இருக்கும்போது சிறிய கையேட்டை வெளியிட்டு விநியோகிப்பது சரியானதாகத் தெரியவில்லை!" என்றார்.

அதற்கு மெஹர் பாபா பதிலளித்தார்:

**அவதார புருஷர் துண்டுப்பிரசுரங்களைத் தயாரித்து விநியோகிக்கும் அளவிற்கு அதிர்ச்சி தரும் நிலையை இன்றைய மக்கள் எட்டியுள்ளதை இது காட்டுகிறது! இருந்தாலும், நான் அதைச் செய்தாக வேண்டும். இது மக்களை ஆயத்தப்படுத்தும் ஆரம்பப்பணியாக இருக்கும். நான் அடித்தளத்தைத் தயார் செய்கிறேன்.**

**நீங்கள் முட்டாள்கள். இந்தப் போர் தொடங்குவதற்கு முன்பு பல கடிதப் பரிமாற்றங்கள் தொடர்ந்தன; கூட்டங்கள் நடைபெற்றன. அதன் பின்னர், ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புகளும் எழுந்தன. பின்னர் போர் தொடங்கி, இவை அனைத்தும் பயனளிக்காதபோது, குண்டுகள் விழத் தொடங்கின!**

**எனவே போரைப் பற்றிய (என்னுடைய) இந்த விளக்கங்கள் அனைத்தும் ஒரு வகையான தகவல் தொடர்பு என்று கூறலாம், இது, பொதுமக்கள் செவிசாய்த்துத் தம்மை மேம்படுத்த வாய்ப்பாக விளங்குகிறது. அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், ஆன்மீகக் குண்டுகள் விழத் தொடங்கும்! இத்தனை வருடகால தொடர்புக்குப் பிறகும், நீங்கள் என்னை அறிந்து கொள்ளவில்லையா? உலகை, சற்றும் பொருட்படுத்தாத மற்றும் அமெரிக்காவில் பகிரங்கமாக 'நான் இங்கு வந்து பேசுவேன்' என்று கூறி, அதைச் செய்யாமல் இருக்கும் ஒருவரைப் பற்றி நீங்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லையா?**

**உலகம் என்ன நினைக்கும் அல்லது சொல்லும் என்பதை நான் பொருட்படுத்தவில்லை. எனது பணிக்காக நான் எதையும் செய்வேன். முழு உலகமும் எனக்கு எதிராகச் சென்றாலும், நான் செய்ய வேண்டியதைச் செய்வேன். ஆனால் அனைத்தையும் அதற்குரிய காலத்தில் செய்வேன், இரண்டையும் செய்வேன் - கற்றும் தருவேன், கழியால் அறையவும் செய்வேன்!**

**ஆனால் இந்திய தேசம் இப்போதெல்லாம் கவலையளிக்கும் அளவிற்கு ஆன்மீகத்தில் பின்தங்கி, அதிகப்படியான அரசியலிலும், மாயையின் பிடியிலும் சிக்கியுள்ளது. பழைய ஆன்மீக மகிமை இல்லாமல்**

**போய்விட்டது. இது வருத்தத்தை அளித்தாலும், இன்றைய உண்மைநிலை இதுவே.**

1939, டிசம்பர் 24 அன்று மாலை, கிராமப்புறத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர், ஒளிவு மறைவின்றி எளிமையாக பேசும் அவர், பாபாவை சந்தித்தார், மிகவும் வெளிப்படையாக, பாபாவிடம் அமைதியான குரலில் கூறினார், “பலர் அன்பைப் பற்றிப் பேசுவதை நான் கேள்விப்பட்டேன், ஆனால் அது உண்மையில் என்னவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.”

**“நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்களா?”** என்று பாபா வினவினார்.

“ஆம்.”

**“உங்களுக்கு குழந்தைகள் இருக்கிறார்களா?”**

“ஆம்.”

**“நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்களா?”**

“ஆமாம், சாதாரண வழியில். ஆனால் அது உண்மையான அன்பு என்று என்னால் கூறமுடியாது. நான் உண்மையான அன்பைப் பற்றிக் கூறுகிறேன், உலக பாசம், பிணைப்பு இவற்றைப் பற்றி அல்ல. அத்தகைய அன்பை அனுபவிக்கும் நம்பிக்கையில் நான் பல புனிதர்களைப் பார்க்கச் சென்றேன்; ஆனால் இதுவரை நான் எந்த வழியிலும் வெற்றியை சந்திக்கவில்லை.”

உண்மையான, தெய்வீக அன்பிற்கான மனிதனின் ஏக்கத்தைப் பாராட்டி, மெஹர் பாபா மேலும் விளக்கினார்:

**உண்மையான அன்பு என்றால் என்ன என்பதை, நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள், அன்பு என்றழைக்கும் சுயநல நோக்கங்கள் கூட, பெரும்பாலும் அவர்களை ஏமாற்றுகின்றன; மேலும் அவர்கள் சுயநல உணர்வுகளை அன்பு எனத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.**

**நான் இதை ஓர் எடுத்துக்காட்டுடன் தெளிவுபடுத்துகிறேன். அன்பைப் பற்றிப் பேசும் ஒருவர், “நான் என் அன்பிற்குரியவரை நேசிக்கிறேன், என் அன்பிற்குரியவர் என்னுடன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்,” இப்படிப் பல விஷயங்களைக் கூறுவார். இந்த அன்பின் அனைத்து வெளிப்பாடுகளிலும், ‘நான்’, ‘என்’ என்பவைதான் முதன்மையானவை.**

**மற்றொரு எடுத்துக்காட்டு: உங்கள் குழந்தை, கிழிந்த, கந்தலான ஆடைகளில் ஓடுவதைக் கண்டால், அதைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவதில்லை. அது உங்களுக்கு வேதனையை அளிப்பது மட்டுமல்லாமல், நீங்கள் அதற்காக உடனடியாக வருந்துவீர்கள். குழந்தை நல்ல உடைகளை அணிந்து, மகிழ்ச்சியாக இருக்க, நீங்கள் உங்களால் இயன்ற அனைத்தையும் செய்வீர்கள்.**

**அதே வேளையில், வேறொருவரின் குழந்தையை இதேபோன்ற நிலையில் வீதியில் பார்க்க நேர்ந்தால், நீங்கள் அதைப் போலவே உணர்ந்து,**

உங்கள் சொந்த குழந்தைக்குச் செய்ததைப் போலவே உடனடியாகச் செயல்படுவீர்களா?

இல்லையென்றால், உங்கள் சொந்த குழந்தையைப் பற்றிய உங்கள் அணுகுமுறை உங்கள் சுயநல உணர்வுகளின் விளைவாக நிகழ்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.

அன்னியர் ஒருவரின் அறியப்படாத குழந்தையைப் பற்றிய உங்கள் அணுகுமுறை, அதே சூழ்நிலையில், உங்கள் சொந்த குழந்தையைப் போலவே இருந்தால் மட்டுமே, உங்கள் உணர்வுகளை உண்மையான அன்பின் விளைவு என்று அழைக்க முடியும். ஆகவே, முற்றிலும் சுயநலமற்ற தன்மையை, தூய அன்பின் உண்மையான பண்பு, நிஜமான சோதனை என்று கூறலாம்.

இந்தத் தூய்மையான, தெய்வீக அன்பை எவ்வாறு அனுபவிக்க முடியும் என்பதை பாபா விவரித்தார்:

**தூய அன்பு என்பது யாரோ ஒருவர் மீது கட்டாயப்படுத்தப் படக்கூடிய ஒன்றல்ல, அது இன்னொருவரிடமிருந்து பறிக்கப்படக் கூடியதும் அல்ல. ஒருவரிடம் 'நான்' எனும் பொய்யும், போலியுமான சுயநலம் முறியடிக்கப்பட்டு, வெற்றி பெற்ற பிறகுதான் அது அடையப்படுகிறது.**

**இந்தத் தன்னலமற்ற நிலையை அடைவது கடினம் எனும் அதே நேரத்தில், அதை அடைவது எளிதானது என்றும் கூறலாம். இந்தக் கருத்துக்கள் முரண்பட்டதாகத் தோன்றினாலும், அவை உண்மையானவை.**

**தன்னலமற்ற நிலையை அடைய ஆசைப்படும் ஒருவர், தீர்மானமான முடிவை எடுக்காத வரை அதை அடைவது கடினம். திடமான உறுதிப்பாடு இல்லையெனில், ஒருவரின் கீழ்நிலை பற்றுகளும், பிணைப்புகளும் வலிமையானவை என்பதை நிரூபிக்கும் தருணத்தில், தனது இலக்கை அடைவது முடியாத காரியமாகி விடும்.**

**அதற்கு மாறாக, எந்தவொரு நோக்கத்தையும் எப்படியாவது அடையும் வலுவான ஆர்வமுள்ள ஒருவர், ஒரு முறை அந்த முடிவில் உறுதியாக இருந்தால், அவர் தனது பணியை எளிதாகக் காண்கிறார். உதாரணமாக, உங்களிடம் மிகவும் பிடித்த பழைய கோட் ஒன்று உள்ளது. உங்களால் அதைத் தூக்கி எறிய மனமில்லாத நிலையில், நீங்கள் உங்கள் மனதைத் திடப்படுத்தி, தைரியமாக இருந்தால், ஒரேயடியாக அதைத் தூக்கி எறிந்துவிட முடியும். இத்தகைய வைராக்கியத்துடன் கூடிய முடிவு, ஒரு பணியை எளிதாக்குகிறது; இல்லையெனில் அது கடினமாகவே இருக்கும்.**

**தூய்மையான அன்பை அனுபவிக்க, பற்றற்ற தன்மை முற்றிலும் அவசியம். தாமரை இலை தண்ணீர் போலப் பட்டும் படாமல் இருக்கும் தன்மை என்பது, அனைத்து உலக தொடர்புகளையும், விவகாரங்களையும் விட்டுவிட்டு, காடுகளுக்குள் சென்று ஒளிய வேண்டும் என்று அர்த்தமல்ல. மாறாக, உலகோடு இருந்து ஒருவரின் கடமைகளை உண்மையுடன் நிறைவேற்றும் அதே நேரத்தில், எந்தப் பிணைப்பும் இல்லாமல் இருப்பது**

**என்று பொருள்படும். இது அடைய முடியாத இலட்சியமல்ல, ஆனால் எளிதில் அடைய முடிகிற ஒரு நடைமுறை குறிக்கோள்; ஆர்வம், நேர்மை, தைரியம் உள்ள ஒருவர் அதை இலகுவாக அடைகிறார்.**

**ஒருவர் மிகுந்த பசியுடன் இருக்கும்போது உணவை அடையும் விருப்பத்தில் தீவிரம் காட்டுவது போல், ஒருவர், தூய்மையான அன்பை அனுபவிக்க விரும்பும்போது, அதற்கான ஏக்கத்தை அவர் உணர்கிறார்; தக்க தருணத்தில் குருநாதர் அவரை வழிநடத்தி இறுதி இலக்கை அடைய வழிவகுக்கிறார்.**

**அதன் பின்னர், அவர் தெய்வீக அன்பின் ஆனந்தத்தை அனுபவிக்க முடிகிறது.**

**"இது ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டிய நிலை, அறிவுபூர்வமாக விவரிக்க முடியாதது"** என்று பாபா கூறி முடித்தார்.

பெங்களூரில் இருந்தபோது, தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் குறுநாடகங்களை நடத்த பாபா, பெண்மணிகளுக்கு அறிவுறுத்தினார். ஒரு நாடகம் காட்டில் வாழும் ஆஃபிரிக்க பழங்குடியினரைப் பற்றியது. ரானோ ஒரு வேட்டைக்காரனாகவும், ஐரீன் அவனது மனைவியின் பங்குகளையும் வகித்தனர். கேட்டி ஆஃபிரிக்கத் தலைவராகவும், அவரது மகளாக மணியும் மற்றும் கர்மான் மாசி, ஸூனா மாசி, மனு போன்றோர் பழங்குடியினராகவும் அங்கம் வகித்தனர்.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நிகழ்வுகளை ஒட்டி, ஒவ்வொரு குழுவும் ஒரு குறுநாடகத்தை அரங்கேற்றியது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட ஒரு பாகத்தை நோரினா தயார் செய்தார். ஸொல்டூன், டவ்லா இருவருக்கும் மேடையில் அமர்ந்து, ஊர்வலம் கடந்து செல்லும் வேளையில் மலர்களைத் தூவி, மரியாதை செலுத்தும் பாகம் அளிக்கப்பட்டது. மேடையில் அமர்ந்திருந்த வேளையில், இயேசு சிலுவையை சுமந்தபடி வந்ததுபோல, நோரினா உடையணிந்து வரும் காட்சியைக் கண்டு பிரமித்துப் போனதால், தத்தமது பாத்திரங்களை மறந்துவிட்டனர். ஊர்வலம் முடிவடையும் அந்த நேரத்தில், டவ்லா அவரது பாகத்தை நினைவு கூர்ந்து, இருவரும் பூக்கூடைகளைப் பற்றிக்கொண்டு, பாரசீக மொழியில் கூச்சலிட்டு, ஜீஸஸைப் பின்தொடர்ந்து சென்றனர். இந்தப் பகுதியை, பாபா மிகவும் விரும்பி ரசித்ததாகக் குறிப்பிட்டார்.

மற்றொரு நாடகத்தில், மெஹர்வான் ஜெஸவாலா சமையல்காரனாகவும், மணி அவரது முஸ்லீம் முதலாளியாகவும் பங்கெடுத்தனர். ஆனால், தட்டில் தேநீர் எடுத்து வந்து, மணியை வணங்கி, தேநீரை அளிப்பதற்கு பதிலாக, சிறுவன் மெஹர்வான், பாபாவின் அருகில் சென்று, அவருக்கு வணக்கம் தெரிவித்தான்; இது பாபாவை அடக்கமுடியாத சிரிப்பில் ஆழ்த்தியது; அவர் முகம் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. மெஹர்வான் பின்பு தேநீர் தட்டைத் தூக்கி எறிந்துவிட்டு, அவனது வரிகளைக்

கூறாமல் தடுமாறினான்; மணி அவனுக்கு அந்த வரிகளைக் கற்பித்த போதிலும், மெஹர்வான் அவன் விரும்பிய வரிகளையே எடுத்துரைத்தான்.

மேலும் ஒரு குறுநாடகத்தைப் பொறுத்தவரை, வாலு முஹமதியராக உடையணிய நாஜா உதவினார்; ஆனால் நாஜா, வாலுவின் உடையை சீராக அணிவிக்காததால் வாலு, மேடையில் தடுமாறி, கோபமடைந்து, அவர் கூறவிருந்த உருது வரிகளைப் மறந்து, மராட்டியில் பேசத் தொடங்கினார். இதுவும் பாபாவை மகிழ்ச்சியடையச் செய்தது.

ரானோ ஒரு முறை டாக்டர் ஒருவரின் பங்கை வகித்தபோது, உருது மொழியில் பேச வேண்டியிருந்தது. நோரினாவும் மற்றொரு நாடகத்தில் டாக்டராக நடித்தார். கேட்டி எப்பொழுதும் போலவே அவர் நடித்த எந்த ஒரு பாத்திரத்திலும் ஒரு திறமையான நடிகையாக இருந்தார். இந்த நகைச்சுவை நாடகங்களின் கதை வசனம் பெரும்பாலானவற்றை மணி எழுதினார், அவற்றில் பல கிறிஸ்துமஸ் மற்றும் மெஹராவின் பிறந்தநாள் விழாக்களில் அரங்கேற்றப்பட்டன.

மெஹர் பாபாவின் தாயார் பெங்களூரில் இருந்தபோது, கெய்மாய் ஒரு முறை, மெமோவின் விருப்பத்திற்கிணங்க கத்தரிக்காய் வறுவல் செய்து, அதை அவருக்கு அனுப்பி வைத்தார். மனு, அதை மெமோவின் அறைக்கு எடுத்துச் செல்லும் வேளையில், அங்கு வந்த பாபா, '**கையில் என்ன இருக்கிறது?**' என்று கேட்டார்.

இது ஷிரீன்மாய்க்காக வறுத்த கத்தரிக்காய் என்று மனு கூறினார். பாபா, கெய்மாயை கடுமையாகக் கண்டித்து "நீங்கள் எனது தாயாருக்கு கத்தரிக்காயைக் கொடுத்துக் கொல்ல விரும்புகிறீர்களா? கத்தரிக்காய் நல்லதல்ல என்று நான் சொல்லவில்லையா?" என்று கேட்டார்.

உண்மையில், மெமோவிற்கு சிறப்பு உணவு வழங்குவதை பாபா விரும்பவில்லை; அனைவருக்காகவும் சமைத்த அதே உணவை மெமோவும் உண்ண வேண்டும் என்று அவர் விரும்பினார். கெய்மாயை கண்டிக்கும் அதே வேளையில், பாபா வறுத்த, சுவையான கத்தரிக்காய் பொரியலை தானே வாயிலிட்டு மென்று கொண்டிருந்தார்; இறுதியில் தட்டிலிருந்த முழுப் பொரியலையும் உண்டார். அந்த நேரத்தில் மெமோ கீழே வந்து, அமைதியாக, காட்சியை கவனித்துக் கொண்டிருந்தார். கடைசியில் அவர் உரத்த குரலில் கத்தி, "மெரோக், கத்தரிக்காய் உனக்கு நல்லது, எனக்கில்லையா?" என வினவினார்.

அதற்கு பாபா, "**உங்களுக்கு வயதாகிவிட்டது, அம்மா, வயதானவர்கள் கத்தரிக்காய் சாப்பிடக்கூடாது!**" ஆனால் மெரோக் அவரை மீண்டும் ஒரு முறை உண்ணாமல் தடுக்க முயற்சிக்கிறார் என்று மெமோவிற்கு நன்றாகத் தெரியும்.

பெங்களூரில் மற்றொரு முறை, யாரோ ஒருவர் பாபாவிற்கு ஒரு அழகான, விலையுயர்ந்த போர்வையை வழங்கினார். மெமோ அதைப் பாராட்டினார், மேலும் பாபா அதை அவருக்குக் கொடுப்பார் என்ற எண்ணத்தில்

இருந்தார். எதிர்பார்த்ததற்கு மாறாக, பாபா, ஏழை ஒருவரின் பாதங்களைப் பணிவுடன் தொட்டு வணங்கி, அவருக்கு அந்தப் போர்வையைக் கொடுத்தார். மெமோ வருத்தமடைந்து, "மெரோக், உனக்கு ஏதாவது புத்தி இருக்கிறதா இல்லையா?" எனக் கேட்டார். "நீ என்ன பைத்தியமா? நீ அவரை வணங்கி, அவருக்கு இவ்வளவு மதிப்புமிக்க சால்வையை கொடுக்கும் அளவிற்கு அந்த மனிதர் உன்னை விட உயர்ந்தவரா? அவர் கடந்த ஒரு வாரத்தில் சாப்பிடவில்லை போலத் தெரிகிறது! இவ்வளவு விலையுயர்ந்த போர்வையை அவர் என்ன செய்வார்? அவர் அதை விற்று, முறைகேடான மதுபானங்களைக் குடித்து மகிழ்வார்!"

**"எனக்கு எவருமே உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ அல்ல"** என்று பாபா பதிலளித்தார், "**நான் அவரிடமும் இருக்கிறேன் - உங்களிடமும் இருக்கிறேன். போர்வையை உங்களுக்கு அளிப்பதைவிட அவருக்குத் தருவதை நான் விரும்புகிறேன்; அதனால்தான் நான் அதை அவருக்குக் கொடுத்தேன்.**"

மெமோ, "என்னிடம் அப்படிப் பேசாதே! உன் தலையை அந்த நாடோடியின் கால்களில் வைப்பதை நான் விரும்பவில்லை" என்று கத்தினார்.

பாபா தோள்களை உயர்த்தி, "**நான் என்ன செய்ய முடியும்? இதுபோன்ற செயல்கள் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. ஏனெனில் நான் என்னையே அனைவரிலும் பார்க்கிறேன். என்னைத் தவிர, வேறு எவரும் இல்லை**" என்றார்.

ஒரு முறை, கெய்மாயின் பட்டுப் புடவையை மெமோ அணிந்தபோது, பாபா அவரிடம், "**இது யாருடைய புடவை?**" என்று கேட்டார்.

மெமோ, "இதனால் உனக்கு என்ன?"

**"இங்கே பாருங்கள், நான் ஒரு பழைய, கிழிந்துபோன கோட்டை அணிந்திருக்கிறேன். நான் அவதார புருஷன் எனும்போது, என்னுடைய தாய் இப்படி பட்டுப்புடவைகளை அணிவது உங்களுக்கு உகந்ததல்ல. நான் எப்படி வாழ்கிறேன் என்று பாருங்கள்; கிழிந்த கோட்டும் சட்டையும்!"**

"உன்னை யார் அப்படி உடை அணியச் சொல்கிறார்கள்? நீ விரும்பியதை அணிய வேண்டியதுதானே? நான் கிழிந்த புடவைகளை அணியப் போவதில்லை. நீ அவதார புருஷனாக இல்லாமலிருந்தால் நன்றாக இருந்திருக்கும்! எப்படியும், நீ என்னைத் தவிர பிற அனைவருக்கும் சொந்தமாயிற்றே!" என்றார் மெமோ.

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, கர்மான் மாசியிடம், "**நீங்கள் புத்தரின் மாசி** (அத்தை)" என்று கூறி, கெய்மாய்க்கு இவ்வாறு தெரிவித்தார்: "**700 ஆண்டுகளுக்குப் பிறகு நான் மறுபடியும் திரும்பி வரும்போது, நீங்கள் எனது தாயாகவும், கர்மான் மாசி எனது தந்தையாகவும் இருப்பீர்கள்.**"

இதைக் கேட்ட மெமோ, கெய்மாயிடம், "ஒருபோதும் அவதார புருஷனின் தாயாக இருக்க வேண்டாம்! இது ஒரு பரிதாபகரமான வாழ்வு! என்

அவல நிலையை நீங்கள் காணவில்லையா - அன்னியர்கள் என்னை, நிம்மதியாக வாழவிடாமல், எப்படி அவமதிக்கிறார்கள் பார்த்தீர்களா? என்று கூறினார்.

மெமோவின் மைத்துனி (ஷெரியார்ஜியின் சகோதரி) பிரோஜா மாமி (PIROJA MAMI - தந்தைவழி அத்தை) ஒரு முறை தனது பிரியமான மருமகனைப் பார்க்க பெங்களூருக்கு வந்தார். இரவு உணவிற்குப் பின்னர், அவர் கைகளை சுத்தம் செய்ய பாபாவின் குளியலறைக்குச் சென்றார். அன்றைய மாலைப் பொழுதில் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த சகன், அறைக்குள் நுழைவதற்கு முன்னர் அவரைத் தடுத்து நிறுத்தினார். "நான் பாபாவின் மாமி. என்னைத் தடுக்க நீங்கள் யார்?" என்று பிரோஜா மாமி வினவினார்.

"இங்கே யார் ஒருவரும் அனுமதிக்கப்படுவதில்லை; பாபா ஓய்வெடுக்கிறார். தயவு செய்து திரும்பிச் செல்லுங்கள்" என்றார் சகன்.

ஏமாற்றமடைந்த, பிரோஜா மாமி உடனே வெளியேறினார். பாபா, சகனை அழைத்து என்ன குழப்பம் என்று கேட்டார். சகன் நடந்ததைக் கூறியதும், அவர் பிரோஜா மாமியை திரும்ப அழைத்தார். பின்பு சகனைப் பார்த்து, கண் ஜாடையால் தெரிவித்து, பாபா, அவருக்கு முன்னால் சகனைக் கண்டித்தார், "**நீ ஒரு பன்றி! எனது மாமியை ஏன் அவர் கைகளைக் கழுவ அனுமதிக்கவில்லை? அவருடைய கால்களைத் தொட்டு மன்னிப்புக் கோருங்கள். ஒருபோதும், அவரை அப்படி நடத்தக் கூடாது! அவர் அவதார புருஷனின் மாமி!**"

சகன், பாபா அறிவுறுத்தியபடியே செய்ததும், பிரோஜா மாமி திருப்தி அடைந்தார். அப்போது பாபா அவரிடம், "**மாமி, தயவு செய்து இரவில் இங்கு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு பேய் என்னைத் தொந்தரவு செய்கிறது, அதனால்தான் சகன் உங்களை இங்கு வரவிடாமல் தடுக்க முயன்றார். இரவில் நீங்கள் இங்கு வருவது ஆபத்தானது**" என்று விளக்கினார்.

"ஓ, அப்படியா? அது எனக்குத் தெரியாது. நான் இனி இந்தப் பக்கம் வரமாட்டேன்."

அவர் வெளியே சென்ற பிறகு, பாபாவும் சகனும் நடந்ததை நினைத்து சிரித்து மகிழ்ந்தனர், மேலும் பாபா, "**மாமி ஓர் அப்பாவி**" என்று குறிப்பிட்டார்.

1939, டிசம்பர் 27 காலை, குழுவில் 'பாவம்' மற்றும் 'பாவிகள்' பற்றிய விவாதம் நடைபெற்றது. பாபா இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்: "**எனது கண்ணோட்டத்தில், எவரும் மனந்திருந்தி, முன்னேறி நல்லவர்களாக மாறக்கூடாத அளவிற்கு மோசமானவர்கள் அல்ல. இருப்பினும், ஒவ்வொருவரும், எவ்வளவுதான் துர்மார்க்கமான நிலையில் இருந்தாலும், மனிதகுலத்திற்கான நல்லொழுக்கத்தில் சிறப்பிற்கோர் எடுத்துக் காட்டாக மாறும் வரை, அனைவரையும் மேம்படுத்தி சிறந்தவர்களாக மாற்ற முடியும். அனைவருக்கும் அப்படி ஒரு வாய்ப்பு, நம்பிக்கை எப்போதும் இருக்கும்**" என்று விளக்கினார்.

ஸரோஷ் தனது மனைவி விலூ, அவர்களின் குழந்தை மகன் மேர்வான் மற்றும் ருஸ்தம், ஃப்ரீனி, மகள்கள் மெஹரு, நாகு ஆகியோருடன் டிசம்பர் 28 அன்று பெங்களூருக்கு வந்தார்.

இரண்டு சிறுமிகளும் பாபா மற்றும் பிற பெண்களுடன் சில வாரங்கள் லிங்க்ஸ் பங்களாவில் தங்கியிருந்தனர். மெஹ்லு, ஃபிரீனி இருவரையும் நாசிக் நகரிலிருந்து ராம்ஜூ ரயிலில் அழைத்து வந்தார், அவர்கள் ஆதி சீனியர், டாலி, ஃபாலு ஆகியோருடன் தங்கினர். ஃபிரீனி இன்னும் பிடிவாதமாகச் செயல்பட்டதால், பாபா தற்போதைக்கு ஃபிரீனி பெங்களூரில் இருப்பதையே விரும்பினார்.

டிசம்பர் 30 பிற்பகலில் வந்த பார்வையாளர்களிடையே வங்காளத்தைச் சேர்ந்த இளம் சுவாமி, பபானந்தா (BHABANANDA) என்பவர் காவி உடை அணிந்து, அவரைப் போலவே உடையணிந்த மற்றுமோர் இளம் சுவாமியுடன் வந்தார்; அவர் ஏற்கனவே பாபாவை சந்தித்திருந்தார். பாபாவுடன் நடந்த உரையாடல் பின்வருமாறு:

பபானந்தா இவ்வாறு தெரிவித்தார்: “கடவுளைத் தேடும் நோக்கத்தில், எனது தந்தை, தாய், குடும்பம், இதர அனைத்தையும் நான் துறந்தேன்! இந்தியாவின் பல இடங்களுக்குச் சென்று, பின்பு திபெத்திற்குப் பயணம் செய்து, இப்போது ராமேஸ்வரத்திலிருந்து திரும்பி வருகிறேன். பெங்களூரில், உங்களைப் பற்றி நான் அறிந்தேன்; உங்களை சந்திப்பதிலிருந்து பலர் என்னைத் தடுக்க முயற்சித்த போதிலும், என்னில் ஏற்பட்ட ஓர் உள் தூண்டுதலால், எப்படியாவது உங்களை சந்திப்பதில் உறுதியாக இருந்தேன். இன்று உங்கள் தரிசனத்தின் பாக்கியம் கிடைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.”

பாபாவும் அவரைப் பார்த்ததில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, அவரைப் பாராட்டினார்; இறைவனைத் தேடுவதில் அவர் ஓர் அரிய வகையைச் சார்ந்தவர் என்று கூறினார். ஆனால் பாபா அவரை எச்சரித்தார், “**தந்தை, தாய் மற்றும் குடும்பத்தை விட்டுவிடுவது மிகவும் எளிதானது, ஆனால் கடவுளை உணர்ந்து கொள்வது மிகவும் கடினம்.**”

“இறையுணர்விற்காக என் உயிரையே கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்” என்று பபானந்தா பதிலளித்தார்.

பாபா கூறினார், “**உயிரை விடுவது கூட எளிதானது. உங்களுடைய இந்த ஏக்கம் மிகவும் நல்லது, பாராட்டத்தக்கது. கடவுளை உணர்ந்து கொள்வதைத் தவிர, வேறு எந்த எண்ணமும் விருப்பமும் இல்லாத உங்களைப் போன்ற, திறமை வாய்ந்த மனிதர்களை நான் விரும்புகிறேன், ஏனெனில் அது ஒன்றுதான் வாழ்க்கையின் உண்மையான விஷயம்.**”

இந்த ஊக்கமளிக்கும் வார்த்தைகளால் சுவாமி மிகவும் மகிழ்ச்சியடைந்து, மேலும் “நான் எதற்கும் தயாராக இருக்கிறேன்!” என்றார்.

**"நான் உங்களை சோதனைக்குள்ளாக்குவேன்... அது அவ்வளவு சுலபமாக இருக்காது; யோசித்து, பின்னர் எனக்குத் தெரியப்படுத்துங்கள்"** என்று பாபா எச்சரித்தார்.

"நான் யோசிக்க எதுவும் இல்லை," பபானந்தா கூறினார். "நான் இதைப் பற்றி ஏற்கனவே யோசித்து விட்டேன், இப்போது கருத்தில் கொள்ள எதுவும் இல்லை."

சிரித்தபடியே மெஹர் பாபா, "**அப்படியானால் நீங்கள் எனக்குரியவர்!**" என்றார்.

பபானந்தா மகிழ்ச்சியாக உணர்ந்தார், கண்களை மூடிக்கொண்டு, பாபாவின் நேர்மையை அங்கீகரிப்பது போல் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். "**நீங்கள் அதை அமைதியாக சிந்திக்க விரும்புகிறேன்,**" என்று பாபா கூறினார், "**ஆன்மீகப் பாதையில் ஆர்வம் மிக்க பலரை நான் அறிவேன்; அவர்களின் தற்காலிக உற்சாகத்தில், இதே போன்ற விஷயங்களையே எடுத்துக் கூறினார்கள்; ஆனால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட தருணத்தில் அவர்கள் தோல்வியை சந்தித்தனர்.**"

"நான் எல்லாவற்றையும் கை கழுவி விட்டேன்" என்று பபானந்தா பதிலளித்தார்.

"**சபாஷ்!**" எனக் கூறி, "**மிக்க மகிழ்ச்சி. அப்படியானால் நான் உங்களின் சிந்தை கவர்ந்த நோக்கத்தை அடைய வழிகாட்டி உதவுவேன்**" என்றார் பாபா. "**இப்போது கவனமாகக் கேளுங்கள். முதற்கட்ட நடவடிக்கையாக, நீங்கள் ராமேஸ்வரத்திற்கு நடைப்பயணம் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே, வேண்டிய உணவை பிறரிடம் கேட்டு வாங்கி உண்ணவேண்டும். பணம், காசைத் தொடக்கூடாது; எந்தப் பெண்மணியையும் தீண்டக்கூடாது. நீங்கள் சந்திக்கும் எந்தப் பெண்மணியையும் உங்கள் தாயாக நினைத்துக் கொள்ளுங்கள்.**

"**ராமேஸ்வரத்தில் 100 பேரை தரிசனம் செய்து, பிப்ரவரி முதல் தேதிக்குள் இங்குத் திரும்பி வாருங்கள்.**"

பணத்தை தொடக்கூடாது என்று மெஹர் பாபா சொன்னதும், பபானந்தா அவரிடமிருந்த பணப்பையை எடுத்து பாபாவின் உத்தரவுக்கிணங்கி, தரையில் வீசினார். அவரது நண்பர், மற்றொரு சுவாமி, "ராமேஸ்வரத்திற்குச் சென்று ஒரு மாதத்தில் திரும்பி வருவது நடைமுறையில் சாத்தியமற்றது" என்று கிசுகிசுத்தார். ஆனால் பபானந்தா அதற்கு செவி சாய்க்காமல் அவருடைய முடிவில் உறுதியாக இருந்தார்.

பாபா இரண்டாவது சுவாமியிடம் மெதுவாகக் குறிப்பிட்டார், "**அதை அவர் பார்த்துக் கொள்வார்; நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? அவர் அவ்வாறு இல்லை; எதற்கும் தயாராக இருப்பதாகக் கூறுகிறார்; மேலும் கடவுளுக்காக உயிரை விடவும் தயாராக இருக்கிறார்!**"

பாபா பின்னர் பபானந்தாவை, நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்பது போல், ஒரு குறிப்பிடத்தக்க பார்வையுடன் அவரை நோக்கினார். ஆனால் அவர் எதுவும் பேசாமல் பாபாவின் அனுமதி மற்றும் ஆசீர்வாதங்களுடன் வெளியேற எழுந்ததும், பாபா அனுமதியளித்தார்; இதர சுவாமியும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்.

அறையில் இருந்த மண்டலி, பபானந்தாவின் உறுதியையும் ஏக்கத்தையும் மௌனமாகப் போற்றினர். இரண்டு சுவாமிகளும் கதவைத் திறந்து வெளியே சென்றதும், பபானந்தாவைத் திரும்ப அழைக்குமாறு பாபா மண்டலியில் ஒருவரிடம் கூறினார். அவர் தனியாகத் திரும்பி வந்து, பாபா முன் நின்றார். பாபா அவரைப் பார்த்து புன்னகைத்து கூறினார்: "**நீங்கள் எனது சோதனையை வெற்றிகரமாகத் தாங்கிக்கொண்டதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்; தயக்கமின்றி, கேள்வி எதுவும் எழுப்பாமல், உங்களின் காயமடைந்த காலால் கடினமான சூழ்நிலையை சந்திக்க நேரலாம் என்ற காரணத்தையும் முன்வைக்காமல் இருந்ததில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.** (காலில் கொப்பளங்கள் இருந்ததால் அவரால் சரியாக நடக்க முடியவில்லை.) **கடவுளை அடையும் ஏக்கமும், அனைத்து சோதனைகளையும் வைராக்கியத்துடன் எதிர்கொள்ளும் மன உறுதியும் இருந்தால், நீங்கள் நிச்சயமாக அவரை உணர்வீர்கள். அவர் உங்களிலும், உங்களோடும் எப்போதும் இருக்கிறார்.**"

அதற்கு பதிலளித்த பபானந்தா, "ரமண மகரிஷி மற்றும் நான் சந்தித்த இதர புனிதர்களும் அதையே கூறுகிறார்கள், ஆனால், இதுவரை இந்த வார்த்தைகளின் அனுபவம் எனக்கு இல்லை" என்று பதிலளித்தார்.

பாபா விளக்கினார், "**ரமண மகரிஷி கூறியது சரிதான்; ராமகிருஷ்ணாவும் அவ்வாறே கூறினார். வேதாந்தமும் அதைத்தான் சொல்கிறது. ஆனால், அது அனுபவம் சம்பந்தப்பட்ட விஷயம். நீங்கள் அதை உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதனால்தான் நான் உங்களிடம் ஆர்வம் காட்டி சில விஷயங்களைச் செய்ய அறிவுறுத்துகிறேன். நான் ஏற்கனவே கொடுத்த வழிமுறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன் - ராமேஸ்வரத்திற்குச் செல்லுங்கள், நடந்து அல்ல, ரயிலில்.**"

சுவாமி ஏதோ சொல்ல முற்பட்டார்; ஆனால் தயங்கினார். பாபா அவரிடம் சொல்ல வந்ததைச் சொல்லுமாறு சைகையால் தெரிவித்தார். சுவாமி உடனே "ரயிலில் பயணம் செய்ய என்னிடம் போதுமான பணம் இல்லை" என்றார்.

அவர் கீழே வீசிய பணத்துடன், சில ரூபாய் நோட்டுகளையும் அவருக்கு வழங்குமாறு பாபா உத்தரவிட்டார். கவலைப்பட வேண்டாம், ஆனால், பாபா கூறியதை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப, விசுவாசத்துடனும் உறுதியுடனும், சிறிதும் தயக்கமின்றி செயல்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். "**இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் ரயில் கட்டணத்திற்கு**

**இதைப் பயன்படுத்துங்கள். ஏற்கனவே கொடுக்கப்பட்ட எல்லா வழிமுறைகளையும் பின்பற்றுங்கள். ராமேஸ்வரத்திற்குச் சென்று நான் குறிப்பிட்ட தேதியில் இங்கு வாருங்கள்.**"

"ஆனால் குருநாதரே, நான் ராமேஸ்வரம் இப்போதுதான் சென்று வந்தேன்" என்று சுவாமி முறையிட்டார்.

"**இது இப்போது உங்களுக்கு ஒரு புதிய ராமேஸ்வரமாக இருக்கும்**" என்று பாபா விளக்கினார். "**நீங்கள் என்ன செய்கிறீர்கள்?... ஏன் உங்கள் நேரத்தை வீணடிக்கிறீர்கள்?... நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேள்விகள் கேட்டு உங்கள் உற்சாகத்தை இழக்கச் செய்து, தடுக்க முயற்சிப்பவர் பலர் இருப்பார்கள். ஆனால் அவர்கள் கூறுவதை ஒரு காது வழி வாங்கி மறு காது வழியாக விட்டு விடுங்கள். அனைவரையும் ஆசீர்வதித்து உங்கள் வழியில் செல்லுங்கள். விடாமுயற்சியுடன் பயமின்றி இருங்கள்; நான் எப்போதும் உங்களுடன் இருப்பேன். நான் உங்களுடன் இருப்பதையும், உதவுவதையும் நீங்கள் உணர்வீர்கள்.**"

பபானந்தா, தலை தாழ்த்தி பணிவுடன் வணங்கி, "ஓம்" என்று உச்சரித்து, அறையை விட்டு வெளியேறி, தனது பயணத்தைத் தொடங்கினார்.

டிசம்பர் 30ஆம் நாள் முதல், மெஹர் பாபா மேலுமொரு மஸ்த் பயணத்தை மேற்கொள்ள திட்டமிட்டிருந்ததால் தரிசன நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டன.

1940, ஜனவரி 2 அன்று மண்டலியுடன் இருந்த வேளையில், மெஹர் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "1940**ஆம் ஆண்டு, உலகம் உருவான நாளிலிருந்து அது காணும் மிக மோசமான ஆண்டாக இருக்கும்**!

"1941, 50:50 - **பாதி நல்லது, மறு பாதி தீயது**.

"1942, **உலகம் இதுவரை கண்டிராத அளவிற்கு சிறப்பாக இருக்கும்**."

(பேரழிவை விளைவிக்கும் ஆண்டு, உண்மையில் டிசம்பர் 27 அன்று துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்துடன் தொடங்கியது. ஆனால் உண்மையான ஆரம்பம் டிசம்பர் 25 காலையில் நிகழ்ந்தது, அந்த நேரத்தில் பாபாவிற்குத் திடீரென 'இருதய தசைப்பிடிப்பு' ஏற்பட்டது. பின்னர், அவர் மண்டலியிடம் அந்த நேரத்தைச் சுட்டிக்காட்டினார் - காலை 9:25 மணி, மேலும் அவரது வலி மூன்று நிமிடங்கள் நீடித்தது. பாபா கூறியபடி, துருக்கியில் பூகம்பத்தின் முதல் நடுக்கம் உண்மையில் இந்த நேரத்தில் தொடங்கி, பின்னர் இரண்டு நாட்களுக்குப் பிறகு வெடித்தது.)

பாபா தொடர்ந்து விளக்கினார், "30,000 **பேரைக் கொன்று, பேரழிவை ஏற்படுத்திய இந்தப் பூகம்பம் கூட, உயிரைத் துறந்தவர்களைச் சார்ந்த இன்னும் பல ஆயிரக்கணக்கான மக்களைப் பாதிக்கிறது, மேலும் லட்சக்கணக்கில் இழப்பை ஏற்படுத்தியது; இன்னும் வரவிருக்கும் சம்பவங்களுடன் ஒப்பிடுகையில் இது ஒன்றும் இல்லை.**"

இந்த மூன்று ஆண்டுகளில் எந்த ஆண்டு மண்டலிக்கு சிறந்தது என்று டாக்டர் கனி கேட்டதற்கு, பாபா உடனடியாக பதிலளித்தார்: **“1940 ஜூன் மாதம் முதல் 1941 ஜூன் வரை மிகச் சிறந்ததாக இருக்கும். இது முக்கியமாக எனது வட்டத்து உறுப்பினர்களுக்கானது. நான் உங்களுக்கென முன்கூட்டியே கணித்து சொல்லும் நேரம் இந்த ஆண்டுகளில் ‘வருகிறது’ - இதோ ‘வந்துவிட்டது!’”**

மெஹர் பாபா பெங்களூரிலிருந்து தென்னிந்தியாவிற்கு, மதராஸ் எக்ஸ்பிரஸ் (MADRAS EXPRESS) ரயிலில், 1940, ஜனவரி 4ஆம் நாள், காக்கா, குஸ்தாஜி, ஜால் கேரவாலா, கிருஷ்ணா நாயர் ஆகியோருடன் புறப்பட்டார். அவரது பயண விபரங்கள் மண்டலியில் எவருக்கும் வெளிப்படுத்தப்படவில்லை. அவர்கள் முதலில் திருவிதாங்கூர் (TRAVANCORE), பின்பு திருவனந்தபுரம் (TRIVANDRUM) வரை பயணம் செய்து, அங்கு, சின்ன சுவாமி (CHINNA SWAMI) என்றழைக்கப்பட்ட வயதான மஸ்த் ஒருவரை பாபா தொடர்பு கொண்டார். அங்கிருந்து தொடர்ந்து அனைவரும் கேப் காமரின் - CAPE COMORIN (KANYAKUMARI - கன்னியாகுமரி), மதுரை (MADURAI), திருச்சூர் (TRICHUR) ஆகிய இடங்களுக்குச் சென்று பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, ஆறு நாட்களுக்குப் பிறகு ஜனவரி 10 அன்று, மஸ்த் சின்ன சுவாமியையும் உடனழைத்துக் கொண்டு பெங்களூருக்குத் திரும்பி வந்தனர். ஒரு பயணத்தின் போது, ரயிலில் கூட்டம் மிகவும் நிரம்பி வழிந்ததால், பாபாவும், ஆண்களும் ஒரு ‘பெண்கள் மட்டும்’ என்று குறிக்கப்பட்ட பெட்டியில் நுழைய வேண்டியிருந்தது. ஜால் கேரவாலா தனது ‘மாவட்ட ஆட்சியாளர்’ அடையாள அட்டையைக் காட்டிய பின்னரே நடத்துனர் அவர்களைப் பயணம் செய்ய அனுமதித்தார்.

அடுத்த நாள், பாபா ஒரு சில மண்டலியுடன், பார்சிகளின் பிரச்சினை மற்றும் ஆன்மீகம் பற்றி சாதாரணமாகப் பேசினார். ஸொராஸ்ட்ரியர்களுக்கு ஆன்மீகப் பாதையைப் பற்றிய குறுகிய அளவிலான கருத்தும் இல்லாத நிலையில், குருநாதர்கள் மற்றும் ஆன்மீக நடைமுறைகள் பற்றிய குழந்தைத்தனமான வாதங்களில் ஈடுபடுவது அவர்களின் தவறு அல்ல என்று பாபா விளக்கினார்.

கர்னல் ஈரானி (ஒரு ஸொராஸ்ட்ரியன்) பெங்களூர் வருவதாக வதந்தி பரவியது. கர்னல் வந்து அவரைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் தெரிவித்து, மறைமுகக் குறிப்பாக, பாபா இதைச் சுட்டிக்காட்டினார்: **“இதனால் அவரது எதிர்ப்பின் இந்தப் பிரச்சினை நிரந்தரமாக நிறுத்தப்படலாம். பின்னர் அவரும் நானும் சுமூகமாக உணரலாம்”** என்று பாபா கூறினார்.

மேலும் விளக்கிக் கூறுகையில், பாபா, இந்தப் பிடிவாதமான மனிதரைப் பற்றிப் பரிதாபப்பட்டார்:

**இது அவரது தவறு அல்ல, ஏனெனில் அவர் இராணுவ மேல்நிலை அதிகாரியாக பல பட்டங்கள் பெற்று, பணம் படைத்த ஓர் உலக மனிதர்.**

ஆயினும்கூட, அவர் கண்பார்வையற்ற குருடரைப் போல் இருக்கிறார். இந்துக்களுக்கு வேதாந்தம், இஸ்லாமியர்களுக்கு ஆன்மீக அறிவொளி ஊட்டும் ஸூஃபித்துவம் இருக்கும் அதேவேளையில், புனிதர்கள், வாலிகள் மற்றும் யோகிகளை மக்கள் அணுக முடிவது மட்டுமின்றி, அவர்களின் வழிகாட்டுதலையும் பெற முடிகிறது. ஆனால் பார்சிகளுக்கு எதுவும் இல்லை. அந்த மதத்தின் மேன்மைமிக்க வல்லவர்களாக இருப்பவர்கள் தஸ்தூர்கள் (பாதிரியார்கள்) மேலும் அவர்களைப் பற்றி எவ்வளவு குறைவாகப் பேசுகிறோமோ அவ்வளவிற்கு நல்லது! இவர்களில் பலர் மிகவும் அதிர்ச்சியூட்டும் குணநலன் படைத்தவர்கள், இவர்களைப் பற்றிய ரகசியங்கள் அனைவருக்கும் ஒரு திறந்த புத்தகம்; எந்த விதமான ஆன்மீக வழிகாட்டுதலை இவர்கள் மக்களுக்கு வழங்க முடியும்?

எந்த அறிவொளியும் இல்லாத இவர்களிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்க முடியும்? அது அவர்களின் தவறு அல்ல - குறை கூறுவதை விட, அவர்களை நினைத்துப் பரிதாபப்பட வேண்டும்.

இருப்பினும் பல வழிகள் உள்ளன - இனிப்புப்பண்டம் அல்லது கைப்பொம்மைகளால் எளிதில் குழந்தைகளை ஈர்க்க முடிவது போல் அல்லது அறை, உதையால் பிறரை இணங்கச் செய்வது போல, ஞானிகளின் சிறிய தூண்டுதல் ஒன்றே அவர்களை சீராக்கிவிடும். நீரில் மூழ்கும் ஒருவர், உயிருக்குப் போராடும் வேளையில், அவரைக் காப்பாற்ற, தனிச்சிறப்பு முறையில் தலையில் அறைய வேண்டியது அவசியம், இல்லையேல் அவர் உதவ வந்தவரையும் நீரில் மூழ்கடித்து விடுவார்.

மேலும் பார்சி சமூகம் ஆன்மீக சாம்ராஜ்யம் எனும் சமுத்திரத்தில் மூழ்கும் மனிதனைப் போன்றது. ஆன்மீகத்தைப் பற்றிய முழு அறியாமையால், அவர்கள் விபத்திற்குள்ளான கப்பல் போல நீரில் மூழ்குகிறார்கள். ஆகவே, அவர்களைக் காப்பாற்ற விரும்புவோர் எச்சரிக்கையாக அருகில் செல்ல வேண்டும், ஏனெனில், நீரில் மூழ்கும் மனிதன் அவர்களையும் மூழ்கடிக்கக்கூடும். எனவே, ஏற்கனவே விளக்கியபடி, தலைசிறந்த முறை என்னவெனில், மூழ்கும் மனிதனின் தலையில் வலுவான அறை ஒன்றைக் கொடுத்து, அவனை மயக்கமடையச் செய்து, போராடுவதை நிறுத்தி, பின்பு வெளியே கொண்டு வரவேண்டும்.

முடிவில், பாபா, "**நான் அதைச் செய்வேன்!**" என்றார்.

அவர்களை அவ்வாறு அறைவதற்கு என்ன அவசியம் என்று கூட்டத்தில் ஒருவர் கேட்டதற்கு, பாபா, விளக்கமளித்தார்: "**கட்டுமீறிப்போன நோய்களுக்கு, கடைசி முயற்சியாக, துணிச்சலான நிவாரணம் தேவை! திரும்பத் திரும்பச் சொல்லியும் கேட்காமல், வளைந்து கொடுக்கும் தன்மையும் இல்லாத நிலையில், வார்த்தைகள், விளக்கங்கள், அறிவுரை, மற்றும் பல வழிகளில், அதாவது, வலுவாக அறைவது போன்ற கடுமையான முறை ஒன்றை நாட வேண்டியது அவசியம்.**"

ஒரு முறை, பெங்களூரில், மெஹர் பாபா, டான், நீலு இருவருக்கும் சில

குறிப்பிட்ட கடமைகளை வழங்கிய போது, அவர்களும் அதைச் செய்து முடித்தனர். ஆனால், பாபா அந்தப் பணியில் சில தவறுகளைக் கண்டறிந்து அவர்களைக் கடுமையாகக் கண்டித்தார். இதுபோன்ற சிறிய விஷயத்திற்காக, பாபா ஏன் இவ்வளவு அதிருப்தி அடைந்தார் என்று இரு டாக்டர்களும் ஆச்சரியமடைந்தனர்.

1940 ஜனவரி 12 அன்று இருவரையும் அழைத்து, நீரில் மூழ்கிய மனிதனின் ஒப்புமைகளைப் பயன்படுத்தி மீண்டும் விளக்கினார்:

**நீரில் மூழ்கும் மனிதனைக் காப்பாற்ற ஒரு தேர்ச்சி பெற்ற உயிர்க்காப்பாளர், வெவ்வேறு முறைகளைக் கையாளுவதைப் போல - நீரில் மூழ்குபவர், காப்பாற்ற வந்தவரையும் அவருடன் மூழ்கச் செய்யாமல் இருப்பதற்காக, அவரைத் தாக்குவதன் மூலம் உயிர்க்காப்பாளரின் பணி இலகுவாக முடிகிறது - சில சமயங்களில், நானும் என் அன்பர்களை வெளிப்படையாகக் கொடூரமான முறையில் நடத்த வேண்டும். பார்வையாளர்களுக்கு, உண்மையான நிலைமை பற்றி எதுவும் தெரியாது, குறிப்பிட்ட நபர்களிடம் நான் சில நேரங்களில் தேவையின்றி கடுமையாக இருக்கிறேன் என்று நினைப்பது பொருத்தமானது. உண்மையில், ஒரு நிபுணர் உயிர் காக்கும் விஷயத்தைப் போலவே, மாயையில் மூழ்கி இருக்கும் குறிப்பிட்ட நபரின் ஆன்மீக வாழ்வைக் காப்பாற்றும் நோக்கத்தில், அவரின் சொந்த நலனுக்காகவே அனைத்தையும் நான் செய்கிறேன்.**

**நீங்கள் இருவரும் நான் ஏவிய அம்புகளின் தாக்குதலால் ஏற்பட்ட வலியை உணர்கிறீர்கள், ஆனால் நான் உங்களுக்கு சாதகமாக என்ன செய்துள்ளேன் என்பதைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது.**

**காரணம் இல்லாமல் நான் எதையும் செய்வதில்லை என்பதை எவரும் புரிந்து கொள்வதில்லை. நான் எதைச் செய்தாலும் பிறரின் நலனுக்காகவே செய்கிறேன்.**

டான், “பாபா, என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் கொடூரமானவர் என்று நினைத்தேன். அது என் தவறு” என்றார். பாபா இருவரையும் அன்புடன் அரவணைத்தார்.

மெஹர் பாபாவின் வழிகாட்டுதலின் கீழ், பெங்களூரில் தங்கியிருந்த ரானோ, நாசிக் நகரில் சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய ‘பத்து வட்டங்கள்’ (TEN CIRCLES) அடங்கிய ஓவியம் குறித்த தனது பணியைத் தொடர்ந்தார். அவர் தலைப்பாகை அணிந்த பாபாவின் வேறொரு பெரிய ஓவியத்தையும் வரையத் தொடங்கினார். ஜனவரி மாதத்தில் ஒரு நாள், அவர் இந்த ஓவியம் நிறைவுறும் தருவாயில், பாபாவின் கண்கள் வேண்டிய உணர்வை வெளிப்படுத்தவில்லை என நினைத்து திருப்தி அடையவில்லை. அந்த நேரத்தில் பாபா, ரானோவின் அறைக்கு வர நேர்ந்தது, ரானோ தனது குழப்பத்தை வெளிப்படுத்தினார். பாபாவே ஒரு தூரிகையை எடுத்து, சில வண்ணங்களைக் கலந்து, ஓவியத்தில் இடது

கண்ணில் சிறிது தடவி, உடனடியாக அதன் வெளிப்பாட்டை மேம்படுத்தினார்! **"இப்போது அதைத் தொடாதீர்கள்!"** என்று கூறிச் சென்றார்.

1940, ஜனவரி 15ஆம் நாள், பாபா பெங்களூரிலிருந்து ஹாஸனுக்கு (HASSAN) ஒரு குறுகிய பயணத்தை மேற்கொண்டார். அவர் எலிஸபெத்தின் காரில் மெஹரா, மணி, கோர்ஷெத் ஆகியோருடன் பயணம் செய்தார்; ஜால்பாய் ஒரு சில மேற்கத்தியர்களுடன் மற்றொரு காரில் சென்றார்; இதர பெண்கள் மற்றும் காக்கா, எரச் ஆகியோருடன் டான் நீலப்பேருந்தில் புறப்பட்டார். பாபா பெண்மணிகளுடன் ஒரு பயணிகள் விடுதியில் தங்கினார். குஸ்தாஜி, பப்பா ஜெஸவாலா இருவரும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி ஏற்பாடுகளைச் செய்ய ஒரு நாள் முன்னதாகவே சென்றிருந்தனர்.

அடுத்த நாள், மெஹர் பாபா பெண்மணிகளை 'ஸ்ராவணபெலகோலா' (SRAVANABELAGOLA) மலைக்கு அழைத்துச் சென்று, சமண துறவியான கோமதேஸ்வராவின் (GOMATESHWARA) 59 அடி உயரமுள்ள சிலையை அவர்களுக்குக் காட்டினார். மறுநாள் காலையில், அவர்கள் பேலூர் (BELUR) மற்றும் ஹலேபீடு (HALEBEED) போன்ற இடங்களுக்குச் சென்று பழங்கால கோவில் ஒன்றைப் பார்வையிட்டனர்.

ஜனவரி 18ஆம் தேதி, மெஹர் பாபா, வயிற்றுக்கோளாறால் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதிலும், 'பாபா புதான்' (BABA BUDAN) எனும் செங்குத்தான மலைமேல் காரைச் செலுத்துமாறு அறிவுறுத்தினார். டான் நீலப்பேருந்தில் மலைமேல் ஏறுவது கடினம் எனத் தெரிந்தும், அவர் தைரியத்தைச் சற்றும் இழக்காமல் பேருந்தை ஓட்டிச் சென்றார். மெஹர் பாபா 1936ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கு ஒரு முறை விஜயம் செய்திருந்தார், இப்போது அந்தப் பகுதியையும், சன்னதியையும் பெண்களுக்குக் காண்பித்தார். அவர்களுடன் மேற்கொண்ட தினசரி பயணத்தின் போது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"நான் எனது ஆன்மீகப் பணிக்காக வந்துள்ளேன், நான் இங்கு எத்தகைய பணியை நிறைவேற்றுகிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. இந்த இடங்கள் ஆன்மீக சூழ்நிலையால் நிரம்பியுள்ளன; நான் இங்கு இருப்பது அதற்கு ஒரு மகத்தான ஆன்மீக உந்துதலை வழங்கும்."**

ஹாஸனில் இருந்தபோது ஒரு நாள், குழந்தைகள், ஸர்வர், மெஹரு, மெஹர்வான் மூவரும் புளியம் பழங்களைச் சாப்பிட வெளியே சென்றனர். கோர்ஷெத் இதை, பாபாவிற்குத் தெரியப்படுத்தினார்.

இதைக் கேள்விப்பட்ட குலாமாசி, குழந்தைகளைக் கண்டிக்க வந்தார். (புளியம் பழம் அதிகமாக உண்டால் தொண்டைப் புண் ஏற்படும்.) அவர் வருவதற்கு முன்பு ஸர்வர், மெஹரு இருவரிடமும் மெஹர்வான் வாயை சரியாக சுத்தம் செய்யக் கூறினான். புளியம் பழம் சாப்பிட்டதற்காக குலாமாசி அவர்களைக் கண்டித்தார், மெஹர்வான் உடனே "நாங்கள் எதுவும் செய்யவில்லை! எங்கள் வாயை முகர்ந்து பாருங்கள்!" என்றதும், குழந்தைகளின் நடத்தைக் குறித்த அறிக்கை தவறானது என்று குலாமாசி பாபாவிடம் கூறினார்.



மெஹர் பாபா, மஸ்த் ஷரியத் கானுடன்
**(**MEHER BABA WITH MAST SHARIAT KHAN**)**

மெஹர்வான் தன்னுடன் இருந்த இரண்டு சிறுமிகளிடம் திரும்பி, “இப்போது, பாபா நம்மிடம் இதைக் கேட்டால், நாம் உண்மையைச் சொல்லியாக வேண்டும். ஆனால் ‘நாங்கள் புளியம் பழத்தைச் சுவைத்து, பின்னர் அதைத் துப்பிவிட்டோம் என்று சொல்ல வேண்டும்’ என்றான்.

பாபா அவர்களை அழைத்து, புளியம் பழம் சாப்பிட்டார்களா என்று கேட்டார். மெஹர்வான், மெஹரு இருவரும் சாப்பிட்டதை ஒப்புக்கொண்டனர்; ஆனால் ஸர்வர் இல்லை என மறுத்தார். பாபா அவளைக் குடையால் தலையில் தட்டி, பொய் கூறியதற்காகத் தண்டித்தார், மேலும் அவர் மெஹர்வான், மெஹரு ஆகியோரின் உள்ளங்கையில் ஒவ்வோர் அறை கொடுத்தார்.

ஸர்வர் அவ்வப்போது ஏதாவது ஒரு தவறுக்காகத் தண்டனையைப் பெற நேர்ந்தது. ஒரு முறை பெங்களூரில் அவள் ஒரு மின்சுவிட்சை அழுத்தி விளக்குகளை அணைத்தாள். பாபா அவளை அழைத்து ‘ஏன் விளக்குகளை அணைத்தாய்?’ என்று கேட்டதற்கு ஸர்வர், “நான் அப்படி ஒன்றும் செய்யவில்லை! நான் இந்தப் பொத்தானை மட்டுமே அழுத்தினேன்” என்று பதிலளித்தாள். அவள் என்ன செய்தாள் என்று அவளுக்குத் தெரியாவிட்டாலும் பாபா அவளைத் தண்டித்தார். ஆனால், பாபாவின் தண்டனைகள் அவர் மீதான அவளது அன்பை வலுவாக வளரச்செய்தது.

காக்கா, எரச் இருவரும் ஜனவரி 18 அன்று சிக்மகளூரிலிருந்து (CHIKMAGALUR) ஒரு மஸ்தை அழைத்து வந்தனர்; அந்த மஸ்த், “இது ஷரியத் (SHARIAT - சடங்கு முறைகள்), அது ஷரியத், அனைத்தும் ஷரியத்!” என்று நகைச்சுவையாகக் கூறும் பழக்கத்திற்காக, பாபா, குறிப்பாக இந்த மஸ்தை, விரும்பினார்; மேலும் அவருக்கு ‘ஷரியத் கான்’ (SHARIAT KHAN) என்றப் புனைப் பெயரைச் சூட்டினார். மஸ்த் அதற்கு பதிலாக, பாபாவை “இப்பூவுலகின் மன்னர்” (KING OF THE WORLD) என்று குறிப்பிட்டார்.

பாபா குழுவுடன் ஜனவரி 20ஆம் நாள் ஷரியத் கானையும் அழைத்துக் கொண்டு பெங்களூருக்குத் திரும்பினார்.

1940, ஜனவரி 27 அன்று லிங்க்ஸ் பங்களாவில் நடந்த தரிசன நிகழ்ச்சியில், அறிமுகமாகாத ஒரு புதிய நபர் பாபாவிடம், “உண்மையான ஆன்மீகம் என்றால் என்ன?” என வினவினார்.

பாபா, கீழ்வரும் பதிலை அளித்தார்:

**ஆன்மீகம் என்பது அனுபவித்து வாழ வேண்டிய ஒரு விஷயம். அது உங்களை, பாறை போல் உறுதியாக மாற்றும். உலக சுக துக்கங்கள் உங்களை வருந்தச் செய்யாது. எந்த ஆசைகளும் இல்லாத நிலையை நீங்கள் அடைவதால் எதையும் விரும்புவதில்லை. நீங்கள் எதையும் விரும்பாதபோது, எல்லாமே உங்களிடம் உள்ளது.**

**இந்த மஸ்தைப் பாருங்கள், சட்டி பாபா. கள்ளம் கபடமற்றவர், மிக்க அன்பானவர், எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறார் - அவர் எதையும்**

**விரும்பவில்லை என்ற ஒரே எளிய காரணத்திற்காக; மகிழ்ச்சி, மனநிறைவு மற்றும் நித்திய மன அமைதி - எல்லாவற்றையும் அவர் கொண்டிருக்கிறார்.**

**ஆசை இல்லாத நிலை, அல்லது எதையும் விரும்பாத தன்மை என்பது, அனைவரிடத்திலும் மறைந்திருக்கும் ஓர் 'இயல் திறன்'.**

**உங்களுள் இருக்கும் அதை நீங்கள் கண்டறிய வேண்டும். நான் அதைக் கண்டு கொண்டதால் இடைவிடாமல் அனுபவிக்கிறேன். இந்த இயல் திறன் அனைவரிடத்திலும் உள்ளது என்பதை நான் அறிவேன், ஆனால், உள்ளூர மறைந்திருப்பதால், அதைக் கண்டறிந்து அனுபவிக்க வேண்டும். உங்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், நம் இருவரிடமும் இந்த இயல் திறன் இருந்தாலும், நான் உண்மையில் அதை அனுபவித்து உணர்கிறேன், அதே நேரத்தில் நீங்கள் இன்னும் அதைக் கண்டறியவில்லை. உங்கள் கண்களால் இந்த உலகப் பொருட்கள் அனைத்தையும் நீங்கள் காண்பது போல், உங்கள் அனைவரிடத்திலும் நான் என்னைக் காண்கிறேன். இது என்னைப் பொறுத்தவரையில் உண்மை.**

**உங்கள் பௌதீக கண்களால், நீங்கள் வெளிப்புற பொருட்களைக் காண்கிறீர்கள். இந்த வெளிப்புற அம்சத்திற்குப் பின்னால், வெறுமனே ஒன்றுமில்லாத வெற்றிடம் மட்டுமல்ல, தூய்மையான 'ஏதும் இல்லா நிலை' என்றும் ஒன்று உள்ளது. இந்தத் தூய்மையான 'ஏதும் இல்லா நிலையை நீங்கள் அனுபவிக்கும்போது, 'எல்லாம் வல்ல இறைத்தன்மை'யிலிருந்து அது எவ்வாறு வெளிவந்துள்ளது என்பதை நீங்கள் காண்பீர்கள் - இது எல்லாமே உங்களுக்குள் உள்ளது. இந்த அனுபவத்தை நீங்கள் அடையும்போது, எதையும் விரும்பாத இயல் திறன் உள்ளளவில் உருவாக்கப்பட்டு, அதை நீங்கள் அனுபவிக்கத் தொடங்குகிறீர்கள்.**

**ஆன்மீகத்தின் முதற்படியே பிறரைப் பற்றி குறை கூறாமல் இருப்பது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எல்லா மனிதரிடத்திலும் பலவீனங்களும் குறைபாடுகளும் உள்ளன. ஆனாலும் உளதாயிருக்கும் நிலையில் அவர்கள் அனைவரும் கடவுளே. இறையுணர்வை அடையும் வரை, அவர்களின் குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். எனவே, பிறரிடமுள்ளத் தவறுகளைக் கண்டறிந்து அவர்களைப் பற்றி மோசமாகப் பேசுவதற்கு முன், உங்கள் சொந்த பலவீனங்களைக் கண்டுபிடித்து அவற்றை சரிசெய்ய முயற்சிக்க வேண்டும்.**

பைரமங்களாவில் அடித்தளம் அமைக்கும் விழா மற்றும் மையத்தின் கட்டுமானப் பணி தொடங்கிய பின்பு, மெஹர் பாபா மற்றும் அவரது நடவடிக்கைகள் குறித்த சாதகமும், பாதகமுமான அறிக்கைகள் உள்ளூர் செய்தித்தாள்களில் தொடர்ந்து வெளிவரத் தொடங்கின. இதற்கிடையில் பழிவாங்கும் நோக்கத்தில் செயல்பட்ட வழக்கறிஞர், வெங்கடபாதைய்யா, கர்னல் எம். எஸ். ஈரானியை (COLONEL M.S. IRANI), பாபாவிற்கு எதிரான தனது பிரச்சாரத்தில் உதவ பெங்களூருக்கு அழைத்தார். 1920 ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்து,

அவரது சகோதரிகளான ஃபிரீனி மாசி, தவ்லத்மாய் மற்றும் அவர்களது குழந்தைகள் பாதிரி, மெஹரா, ஃபிரீனி ஆகியோர் பாபாவுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்ததால், கர்னல் ஈரானி, பாபாவைக் கடுமையாக எதிர்த்தார், குஜராத்தி பத்திரிகைகளில் மட்டுமீறிய, கோபமூட்டும் குற்றச்சாட்டுகளை வெளியிட்டார். கர்னல், ஸொராஸ்ட்ரிய சமூகத்தின் பிற முக்கிய தலைவர்களுடன் இணைந்து, மெஹர் பாபா, தீர்க்கதரிசி ஸொராஸ்டரின் ஆன்மீக அந்தஸ்தைக் கொண்டிருப்பதாகக் கூறியதைத் தவறாகச் சித்தரித்து, அவருடைய அவதூறான குற்றச்சாட்டுகளை அடுத்த பல வருடங்களாகத் தொடர்ந்தார்.

1940 ஜனவரியில், கர்னல் பூனாவிலிருந்து வந்து பெங்களூர் மற்றும் மைசூரில், மூன்று பொது சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். "போலி சாது, சன்னியாசிகளுடனான எனது அனுபவங்கள்" (MY EXPERIENCES WITH PSEUDO SAINTS) என்ற தலைப்பில் ஒய்.எம்.சி.எ. கன்டோன்மென்ட்டில் (Y.M.C.A. CANTONMENT) ஜனவரி 30ஆம் நாள் வழங்கிய அவரது முதல் சொற்பொழிவில் சுமார் 150 பேர் கலந்து கொண்டனர். எனினும், கர்னல் ஒரே ஒருவரை, அதாவது ஸ்ரீ மெஹர் பாபாவை மட்டுமே தாக்கிப் பேசியது பார்வையாளர்களை ஏமாற்றமடையச் செய்தது. கூட்டத்தின் தலைவராக இருந்த பெங்களூர் மேயரும் கர்னலின் ஒருதலைப்பட்ச வாதங்களை எதிர்த்தார்.

நோரினா, நதீன், ஆதி சீனியர், டாக்டர் கனி, ஜால் கேரவாலா ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்; மேலும் ஜால் குறிப்பிடத்தக்க சில கேள்விகளை எழுப்பினார், அதற்கு கர்னல் ஈரானியால் சரியாக பதிலளிக்க முடியவில்லை.

கர்னல் எவ்வளவுதான் முயன்றும், இந்த எதிர்ப்பு, பாபாவின் உட்பணியை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. கர்னலின் விரோத மனப்பான்மை கூட, பாபாவின் பணியின் ஒரு பகுதியாக அமைந்தது; சொல்லப்போனால், உண்மையில் அதை மேலும் துரிதப்படுத்தியது! கர்னலின் பெங்களூர் வருகைக்குப் பிறகு, டாக்டர் கனி 'லெப்டினன்ட் கர்னல் எம்.எஸ். ஈரானியின் ஆன்மீகப் புரளி' (தி ஸ்பிரிச்சுவல் ஹொயாக்ஸ் ஆஃப் லெஃப்டினன்ட் கர்னல் எம்.எஸ்.ஈரானி - THE SPIRITUAL HOAX OF LT. COLONEL M.S. IRANI) என்ற தலைப்பில் ஒரு சிறிய கையேட்டு பிரதியை வெளியிட்டார், அதில் அவர் மெஹர் பாபாவை ஆதரித்து, கர்னலின் தவறான அறிக்கைகள் மற்றும் அபத்தமான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்தார்.

தனது சொற்பொழிவின் ஒரு கட்டத்தில் கர்னல் ஈரானி, உபாஸனி மஹாராஜைப் பார்க்க ஸாக்கோரிக்குச் சென்றதாகக் கூறியிருந்தார், மேலும் மஹாராஜ் எழுதிய பல புத்தகங்களை அவரிடம் படிக்க வழங்கிய போது, அவர் அதைப் 'பொருத்தமற்ற விஷயம்' என்று கூறி மஹாராஜை உதாசீனப்படுத்தினார். இதற்கு பதிலளிக்கும் வகையில், டாக்டர் கனி கடுமையாக எழுதினார்: "லெஃப்டினன்ட் கர்னல், உபாஸனி மஹாராஜின் புத்தகங்களில் அறிவொளி எதையும் காண முடியாத பட்சத்தில், ஒரு முனிவரின் வார்த்தைகளை

மேற்கோள் காட்ட விரும்புகிறோம்: 'இது போன்ற ஒரு பரிபூரண குருநாதரின் படைப்புகள் ஒரு கண்ணாடியைப் போன்றது: ஒரு கழுதை அதில் உற்றுப் பார்த்தால், ஒரு தேவதை தோன்றுமென நீங்கள் எதிர்பார்க்க முடியாது; ஒரு புத்தகமும் அறிவுத்திறனும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு, ஒருவர் வெற்றுத்தனமாகக் கூக்குரல் கொடுக்கும்போது, அது எப்போதும் புத்தகத்தை எவ்வகையிலும் பாதிக்காது!'

டாக்டர் கனியின் வெளியீட்டிற்கு பதிலளிக்கும் விதமாக, கர்னல் தனது மறுப்பைத் தெரிவித்து, 'மெஹர் பாபா, 20ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய புரளி, அல்லது ஈரானிய இளைஞர் ஒருவர் உலக ஆசிரியராக எப்படி மலர்ந்தார்?' என்ற தலைப்பில் பிரமாண்டமான புத்தகம் ஒன்றை வெளியிட்டார். அதே வழக்கறிஞர் வெங்கடபாதைய்யா எழுதிய இந்தக் கையேட்டில் மெஹர் பாபாவின் போதனைகளை விவரிக்க இதுபோன்ற வெறுக்கத்தக்க மொழியைக் கையாண்டார்: "...மிகவும் குமட்டல் எடுக்கும் அளவிற்கு, ஒழுக்கக்கேடான மற்றும் அருவருப்பான குப்பை" என்று கூறி, "மெஹர் பாபா தனது ஆன்மீக பாரம்பரியத்தை அசுத்தமான உணவில் இருந்து பெறுகிறார், ஆசனவாய் வழிபாடு மற்றும் அப்பாவி கன்னிப் பெண்களின் துறவி உபாஸனி மஹாராஜ்!" என்ற வெட்கக்கேடான பிரார்த்தனையுடன் வெங்கடபாதைய்யா தனது கையேட்டை இவ்வாறு முடித்தார்: "இத்தகைய மோசமான உதாரணங்கள் விரைவில் தெளிவற்றதாக மறைந்து மனிதகுலத்தை அச்சுறுத்துவதை நிறுத்தட்டும்!"

அவதார புருஷரின் 'அவமானம்' என்பது இதைத்தான் குறிக்கிறது!

1940, பிப்ரவரி 1ஆம் நாள் முதல், பாபா தினமும் ஒரு வேளை உணவை மட்டுமே உண்டு, ஒரு குறைந்த அளவிலான விரதத்தைத் தொடங்கினார். இந்த முறை லிங்க்ஸ் காம்பவுண்டில் கட்டப்பட்ட குடிசையில், அவர் மீண்டும் தனிப்பட்ட நேரடி பேட்டிகளை வழங்கத் தொடங்கினார். அன்றைய தினத்தில், இளம் சுவாமி பபானந்தா, ராமேஸ்வரம் யாத்திரையை முடித்து, பின்னர், அறிவுறுத்தியபடி பெங்களூருக்கு திரும்பி வந்தார். அவர் தனது அனுபவங்களை மெஹர் பாபாவிடம் விவரித்தார்; தனது அறிவுறுத்தல்களை உண்மையாக நிறைவேற்றியதில் பாபா மகிழ்ச்சி அடைந்தார். அடுத்த நாள், பாபா அவரை பண்டர்பூருக்கும் (PANDARPUR - கிருஷ்ண பெருமானின் புனித ஆலயம்), தொடர்ந்து ஸாக்கோரியில் (SAKORI) உபாஸனி மஹாராஜ், கேட்காவ்ம் (KEDGAON) நாராயண் மஹாராஜ், பூனாவில் ஹஸ்ரத் பாபாஜான் மற்றும் ஷிர்டி சாய் பாபா ஆகியோரின் சந்நிதிகளுக்கும் சென்று வருமாறு அனுப்பி வைத்தார்.

நகைச்சுவையாக, மெஹர் பாபா, "**இந்த நேரத்தில் நீங்கள் ரயிலில் செல்ல வேண்டும் - ஆனால் பயணச்சீட்டு இல்லாமல், நான் உங்களுக்கு பணம் எதுவும் தர முடியாது**" என்று குறிப்பிட்டார்.

அது நேர்மையற்ற செயல் என்று பபானந்தா கூறினார். அதற்கு பாபா, "**நீங்கள் சொன்னதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆம், அது நேர்மையற்ற செயல்தான், ஆனால் அதற்காக நீங்கள் பெறும் ஒவ்வொரு அறையையும், மனதளவில் சிறிதும் காயப்படாமல் மகிழ்ச்சியுடன் எடுத்துக்கொண்டால் சரி!**" என்றார்.

பபானந்தா பதில் எதுவும் சொல்லவில்லை. எவ்வாறாயினும், பாபா அவருக்கு ரயில் கட்டணத்திற்குப் பணம் கொடுத்தார். பபானந்தா அவ்வாறே செய்து மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்களை நிறைவேற்றினார். பண்டர்பூரில், அவர் பாபாதாஸ் (BABADAS - பாபாவின் அடியார்) என்று அழைக்கப்படும் எம்.டி. தர்மலே (M.D. DHARMALE) என்பவரை சந்தித்தார், அவர் அந்தப் பகுதியில் மெஹர் பாபாவின் செய்தியைப் பரப்பி வந்தார். நாக்பூரைச் சார்ந்த பாபாதாஸ், இதற்காக வேறுவேறு இடங்களுக்குப் பயணம் செய்து வந்தார். விபூதி (VIBHUTI) என்றழைக்கப்படும் மற்றொரு அடியார், 1925 முதல் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இந்தப் பணியைச் செய்து வருகிறார்.

காடேக்கரும் அவ்வேளையில் பண்டர்பூருக்கு சென்று கொண்டிருந்தார். பபானந்தா, பாபாதாஸ் இருவரையும் தன்னுடன் அழைத்துச் சென்று, ஷோலாபூரில், இருவரும் பங்கெடுக்கும் ஒரு பெரிய கூட்டத்தை ஏற்பாடு செய்தார். காடேக்கர் அவரது பணியின் நிமித்தம் எங்குச் சென்றாலும், மெஹர் பாபா பற்றிய தகவல்களைப் பரப்புவதோடு, அவர் மீதான அன்பு, பலரை குருநாதரிடம் அழைத்து வந்தது. பாபாவின் கட்டளைகளை நிறைவேற்றிய பின்பு, பபானந்தா பெங்களூருக்குத் திரும்பிச் சென்று, மண்டலியுடன் சிறிது காலம் தங்கினார்.

இதற்கிடையில், டாக்டர் கனி 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா' (ILLUSTRATED WEEKLY OF INDIA) பத்திரிகையில் வெளியாகும் குறுக்கெழுத்துப் புதிர்களுக்கு விடை கண்டுபிடிப்பதில் ஆர்வமாக இருந்தார். ஒரு புதிரை முடித்ததும், போட்டியில் பங்கெடுக்க அவர் அதை அஞ்சல் செய்து வந்தார். இரண்டு அல்லது மூன்று முறை சிறிய ரொக்கப் பரிசுகளையும் வென்றார், அதை அவர் ரகசியமாக வைத்திருந்தார்.

ஒரு முறை கனி வாராந்திர புதிருக்கு விடையைக் கண்டுபிடிப்பதில் மும்முரமாக இருந்தபோது, பாபா அங்கு வந்தார். பாபாவைப் பார்த்ததும், கனி தனது மெத்தையின் கீழ் பத்திரிகையை மறைக்க முயன்றார்; பாபா அவரிடம், "**நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**" என வினவினார்.

"ஒன்றுமில்லை பாபா" என்று பதிலளித்தார்.

பாபா அருகில் சென்று பத்திரிகையை வெளியே எடுத்தார். அதைப் பார்த்து, பாபா, "**இதில் மூடி மறைக்க என்ன இருக்கிறது? நான் உங்களுக்கு உதவுவேன், நாம் வென்றால், பரிசை 50-50 என பகிர்ந்து கொள்வோம். எனக்கும் பணம் தேவை!**" என்றார்.

மிகவும் தீவிரமாக, பாபா, டாக்டர் கனியுடன் அமர்ந்து, புதிருக்கான

விடைகளைக் கண்டுபிடிக்கத் தொடங்கினார். நிறைவு செய்ததும், டாக்டர் கனி அதை அஞ்சல் வழி சமர்ப்பித்தார். முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, பாபா தினமும் டாக்டர் கனியிடம் இது குறித்துக் கேட்கத் தொடங்கினார். முடிவுகள் இறுதியாக அறிவிக்கப்பட்டு, தீர்ப்பு வெளியானபோது, பதினொரு தவறுகளுக்குக் குறையாமல் பரிசை அவர்கள் தவறவிட்டதாக, டாக்டர் கனி கண்டறிந்தார். பாபாவிடம் முறையிட்ட அவர், "நான் குறுக்கெழுத்துக்களைத் தனியாக செய்த வேளையில் இரண்டு அல்லது அதிகபட்சம் மூன்று தவறுகள் மட்டுமே இருந்தன; இங்கே பதினொன்று தவறுகள்!"

பாபா கேலி செய்தார், **"எனவே, நீங்கள் இன்னும் இதுபோன்ற விஷயங்களில் ஆர்வம் காட்டுகிறீர்களா? நான் கடவுளாக இருந்தபோதிலும், இத்தனைத் தவறுகளைச் செய்கிறேன் என்றால், சரியான விடைகளைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதானது அல்ல, அது உங்களை மேலும் சிரமத்திற்குள்ளாக்கும் என்பதை நீங்கள் உணர வேண்டும்."**

ஐரோப்பாவில் போர் தொடரும் காலத்தில், மெஹர் பாபா தனது மேற்கத்திய அன்பர்களுடன் தொடர்பில் இருந்தார். பாபாவின் கடிதங்கள் நீண்ட நாட்களாக பிரிந்திருந்த அன்பர்களுக்கு ஆறுதலையும் ஊக்கத்தையும் அளித்தன. 1940, பிப்ரவரி 10 அன்று இங்கிலாந்தில் வாழும் தனது லெய்லா, டிலியா டிலியோனுக்கு எழுதினார்:

**உங்களின் ஒவ்வொரு அங்குலமும் எனக்குத் தெரியும். என்னை 'உணர்ந்து' கொள்ளுங்கள், நீங்கள் கடவுளை அறிந்து கொள்வீர்கள். நீங்கள் அன்பிற்குரியவரைக் கண்டு கொண்டதால் வேறு எந்த முயற்சியும் பயனளிக்காது. எல்லாமே அவரை மையமாகக் கொண்டு சுழலும். எல்லா அழகையும், அது கவிதை, கலை, இசை அல்லது வாழ்க்கை வழியாக வெளிப்படுத்தப்பட்டாலும், நீங்கள் அவர் மூலமாகவே காண்கிறீர்கள். நீங்கள் கைத்தொழில்களில் ஈடுபட்டாலும், கல்வியாளராக இருந்தாலும் சரி, எல்லா தொழில்களும் அவர் ஒருவருக்காகவே செய்யப்படுகின்றன; உங்கள் ஒரே இணைப்பும், பிணைப்பும் உங்கள் அன்பிற்குரியவருடன் மட்டுமே. நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது அன்னியர்களுக்காகச் செய்யும் எல்லா சேவையும் அப்போது தன்னலமற்றதாகிவிடும்.**

**பிரியமானவரை மகிழச் செய்வது என்பது அவரை அறிந்து கொள்வதாகும். அவ்வாறு அறிந்து கொள்வதைத் தவிர வேறொன்றும் இல்லை. உணர்ந்து கொள்வது என்பது அறிந்து கொள்வது ஆகாது. என்னை மகிழச்செய்வது என்பது 'செய்வது'! ஆனால் என்ன செய்வது? உங்கள் அன்பிற்குரியவர் கட்டளையிடும் அனைத்தையும் செய்வது.**

**உங்களுடனான எனது வழி இறைவனோடு ஐக்கியமாவதற்கான மிகவும் குறுகிய வழி; இதை நீங்கள் அடைய வேண்டும் என்ற எனது ஏக்கம், உங்களின் ஆர்வத்தைவிட எண்ணற்ற மடங்கு உயர்ந்தது. இந்த**

**விளையாட்டு எனது சொந்த உருவாக்கமாக இருந்தாலும், எல்லா படைப்புகளிலும் பரிபூரண உணர்வை அடையும் விளையாட்டை அனுபவிக்க நான் இன்னும் கஷ்டப்பட வேண்டும்.**

**ஆனால், வேறு எவராலும் கண்டுகொள்ள முடியாதபடி, இந்தப் பௌதீக உடலில் என்னை அறிந்த என் அன்பர்கள் - இந்தத் துன்பத்தைக் குறைத்து, உங்களால் முடிந்த எல்லா மகிழ்ச்சியையும் எனக்குத் தருவது என்பது உங்கள் கைகளில்தான் உள்ளது. எனக்காக இதைச் செய்வீர்களா? உங்களின் சிந்தனை, சொல் மற்றும் செயலில் எனக்கு உதவுங்கள். உங்கள் எண்ணங்கள் எப்பொழுதும் என்னைப்பற்றியே இருக்கட்டும், உங்கள் வார்த்தைகள் எப்போதும் அன்பிலிருந்து உருவாகட்டும், உங்கள் செயல்கள் அன்பிற்குரியவரை மகிழ்விக்கும் அளவிற்கு நீங்கள் செய்யும் ஒவ்வொன்றிலும் அதைத் தேடும் வெளிப்பாடாக இருக்கட்டும்; அவர் தனது அன்பான லெய்லாவின் இதயத்தில் எப்போதும் இருக்கிறார்.**

**இந்த எண்ணம், முழு உலகமும் இப்போது கடந்து சென்று, எதிர் கொள்ளும் பயங்கரமான துன்பங்கள் மற்றும் துயரங்களுக்கு மத்தியில், உங்களுக்கு நித்திய மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் தரும். ஆனால் இந்தத் துன்பங்களையும், துயரங்களையும் தாங்கிக்கொள்ளும் 'என்றென்றும் நிலைத்திருக்கும் உதவிக்கரங்கள்' இருப்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆகவே, உங்கள் அன்பிலும், நம்பிக்கையிலும் இறுதிவரை மகிழ்ச்சியாக இருங்கள். நான் உங்களை ஒருபோதும் தோல்வியுற விடமாட்டேன், உங்களை ஒருபோதும் விட்டு விலக மாட்டேன்.**

கேட்டி, கோஹெர் இருவரும் சகோதரர் ஜால் ரூஸியுடன் பெங்களூருக்கு வந்தனர்.

கடந்த வருடம் ஜால் ரூஸி சில நாட்கள் மெஹராபாத்தில் தங்கியிருந்தார், பின்பு திருமணமானது. அந்த நேரத்தில் மிகவும் மெலிந்து காணப்பட்ட அவர், ஒரு நாள் பாபாவிடம், "என்னை உருவில் பெரியதாக்குங்கள், பாபா" என்று கூறினார்.

**"இங்கேயே இருங்கள், நான் அதைச் செய்வேன்"** என்று பாபா பதிலளித்தார்.

"ஆனால் இங்குப் பரிமாறப்படும் உணவு என்னை இன்னும் மெல்லியதாக்கிவிடும் " என்று ஜால் கூறினார்.

பாபா, உடனே அவருக்கு சிறப்பு உணவை ஏற்பாடு செய்து, ஒரு பணியாளரைப் போல் உடை அணிந்து சேவை செய்யுமாறு எரச்சைக் கேட்டுக்கொண்டார். ஜால் ஆடம்பரமான ஒரு சிறப்பு மேஜையில் அமர்ந்து கொண்டார் (இதர ஆண் மண்டலி, மெல்லிய கம்பளத்திலோ அல்லது பாயிலோ தரையில் அமர்ந்து உண்பது வழக்கம்), எரச் அவருக்கு உணவைப் பரிமாறினார்.

ஆனால் ஜால் உண்ணும் வேளையில், பாபா அங்கே தோன்றி, "**ஓ, நீங்கள் அதைச் சாப்பிடக்கூடாது; அது உங்களை மேலும் மெல்லியதாக்கும்.**

**அதை, பைதூலுக்கும், குஸ்தாஜிக்கும் கொடுத்து விடுங்கள்"** என்று குறிப்பிடுவதும், ஜால் அதை உண்ணாமல் விட்டுவிடுவதும் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடந்தது. ஜால் தன்னை, மரியாதையுடன் நடத்தப்படும் ஒரு சிறப்பு விருந்தாளி என நினைத்துக் கொண்டாலும், உண்மையில் அவர் ஒவ்வொரு நாளும் உணவு உண்ண முடியாமல் பசியுடன் காணப்பட்டார்.

ஒரு வாரம் ஜால் அமைதியாக இருந்தார்; பின்னர் அவர் பாபாவிடம், "நான் எனது உணவை உண்ணத் தொடங்கும் வேளையில், பாபா, நீங்கள் உள்ளே வந்து அனைத்து நல்ல உணவுகளையும் பைதூல் மற்றும் குஸ்தாஜிக்குக் கொடுக்கச் சொல்கிறீர்கள். என் உடல் பருமனாவதற்கு பதிலாக, எனது எடை குறைந்துகொண்டே போகிறது" என்று முறையிட்டார்.

**"நீங்கள் கவலைப்பட வேண்டாம், அது நிச்சயமாக நடக்கும்"** என்று பாபா உறுதியளித்தார்.

எத்தனையோ வசதிகள் இருந்தபோதிலும், பாபாவுடன் இருப்பது எவ்வளவு கடினம் என்பதை ஜால் ரூஸி அறிந்து கொண்டார்.

டாக்டர் கனி, சைவ உணவை விரும்புவதில்லை. ஒரு நாள் அவர் பாபாவிடம், "சிங்கம், புலி போன்ற மிருகங்கள் மாமிசம் உண்ணும் மிகவும் சக்திவாய்ந்த, ஆற்றல் மிக்க உயிரினங்கள். அவற்றின் வயிறு ஒருபோதும் புடைக்காது. ஆனால் புல்லை உண்ணும் காளை இனங்கள் வலிமை, சக்தி, தைரியம் எதுவுமில்லாமல் ஒரு பெரிய வயிற்றை மட்டும் கொண்டுள்ளது.

"எனவே, மண்டலி அசைவ உணவு உண்பவர்களாக மாறினால், நாங்களும் சிங்கங்களைப் போல வலுவாக இருப்போம்" என்று கனி நியாயப்படுத்தினார்.

எவ்வாறாயினும், **"யானை சைவ உணவைத்தான் உண்ணும், அது எவ்வளவு வலிமை மிக்கது என்பதைப் பாருங்கள். நீங்களும் ஏன் யானையைப் போல் இருக்கக்கூடாது?"** என பாபா வினவினார்.

"ஆனால் யானை ஒரு பெரிய வயிற்றை சுமக்கிறது" என்று டாக்டர் கனி வாதிட்டார்.

**"அப்படியானால் உங்கள் வயிற்றை வளரவிட்டு தலையைப் போலப் பெரியதாக வைத்துக் கொள்ளுங்கள்,"** என்று பாபா கிண்டல் செய்தார், **"அப்போது உங்கள் தோற்றம் நன்றாக இருக்கும். எனவே, இங்கே இருக்கும் வேளையில் ஏராளமான சைவ உணவை எடுத்துக் கொள்ளுங்கள்!"**

செய்தித்தாள் நிருபர்கள் தொடர்ந்து மெஹர் பாபாவுடன் நேரடி பேட்டியை நாடுவது வழக்கம்; சில நேரங்களில் பாபா அதற்கு ஒப்புக்கொள்வதுண்டு.

இதுபோன்ற ஒரு நேர்காணல் 1940 பிப்ரவரி 11 அன்று, லிங்க்ஸ் பங்களாவில் நடந்தது. நிருபர் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்:

“விஞ்ஞானமும் மதமும் வெவ்வேறு கோளங்களைக் கையாளுகின்றன என்ற மேற்கத்திய கொள்கையை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?”

**“இது எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது என்பதைப் பொறுத்தது”** என்று பாபா கூறினார். **“விஞ்ஞானம், உலகப்பொருள் முன்னேற்றத்துடன் மட்டுமே செயல்படுவதாக இருந்தால், அத்தகைய விஞ்ஞானத்தில் ஆன்மீகம் எதுவும் இல்லை என்று கூறலாம். ஆனால் அதே விஞ்ஞானம் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தெளிவுறச் செய்யுமானால், அது ஆன்மீகத்தின் ஒரு கிளையாகத் திகழும் - கலை, சரியாக வெளிப்படுத்தப்பட்டால் ஆன்மீகம். தவறாக சித்தரித்தால் உலகப்பொருள்.”**

“விஞ்ஞான உண்மைகள் மற்றும் கொள்கைகளைப் பொறுத்தவரையில், உண்மையை அடிப்படையாகக் கொண்டு ஏற்றத்தக்கதாக எடுத்துக் கொள்ளும் வேளையில், அவை ஆன்மீக கொள்கை மற்றும் கோட்பாட்டுடன் இணைக்கப்பட வேண்டுமா?”

**“ஆமாம், இணைக்கப்படலாம். பௌதீக உலகம் என்றால் என்ன, ஆன்மீகத்தை உணரச் செய்யும் ஊடகம் தானே? எடுத்துக்காட்டாக, உடல் முற்றிலும் பௌதீக செயற்பொருளாலானது; ஆனால் அது, சரியாகப் பயன்படுத்திக் கையாளப்பட்டால், ஆன்மா தன்னை அறிந்து கொள்வதற்கான ஊடகமாக விளங்கும்; இல்லையேல், முறையற்ற பயன்பாடு, ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஒரு தடையாக இருக்கும். இதேபோல், விஞ்ஞானக் கோட்பாடுகள் மற்றும் உண்மைகள் சரியாகப் பயன்படுத்தப்பட்டால், பிரபஞ்சத்தின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும்.”**

“ஜோதிடத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன? ஜோதிடம் அறிவியலின் ஒரு பகுதி இல்லையா?” என்று நிருபர் கேட்டார்.

**“எல்லாவற்றிற்கும் ஆன்மீகத்துடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு உண்டு. அது எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பொறுத்து, ஆன்மீக முன்னேற்றம் அல்லது பின்னடைவிற்கான காரணமாகிறது.**

**“விஞ்ஞானம் என்பது ஒரு பொதுவான விஷயம், அதே நேரத்தில் ஜோதிடம் தனிப்பட்டது, எனவே விஞ்ஞானத்தைத் தவறு என்று நிரூபிக்க முடியாது. ஓர் உண்மை, விஞ்ஞான அடிப்படையில் நிறுவப்பட்டால், அதை நீங்கள் சந்தேகிக்க மாட்டீர்கள். அதை சந்தேகிக்கும் எண்ணமே உங்களுக்கு ஏற்படாது. பூமி உருண்டை என்று உங்களுக்குச் சொல்லப்பட்டு நிரூபிக்கப்பட்டால், அது தட்டையானது என்று நீங்கள் ஒருபோதும் நினைக்க மாட்டீர்கள். ஆனால், ஒரு ஜோதிடர் உங்களுக்கு சிறிது நேரம் கழித்து ஒரு கோடி ரூபாய் கிடைக்கும் என்று சொன்னால், நீங்கள் அதை ஒரு கோடி முறை நினைத்துப் பார்ப்பீர்கள்.**

**“ஆன்மீகத்தில் சந்தேகம் என்பதற்கு இடமில்லை. உதாரணமாக, யாராவது என்னிடம், ‘நீங்கள் கடவுளோடு ஒன்றாக ஐக்கியமானவர் என்பதை உறுதியாகக் கூறமுடியுமா?’ என்று கேட்டால், நான் அவரிடம், ‘நீங்கள் நிச்சயமாக ஒரு மனிதர், நாய் குட்டி இல்லையே?’ என்று கேட்பேன். அப்போது**

அவர் தன்னை ஒரு மனிதர் என்று கூறுவார், ஏனெனில் அவர் தன்னை ஒரு மனிதனாகப் பார்க்கிறாரே தவிர, வேறு எதுவாகவும் நினைத்துப் பார்க்க முடியாது. அதேபோல், நான் கடவுளோடு ஒருவன் என்பதில் சமமான உறுதியாக இருக்கிறேன்.

உலகம் முழுவதும் வேறுவிதமாக என்னிடம் சொன்னாலும், அதைப் பற்றி நான் எதுவும் உணரப் போவதில்லை. ஆன்மீக உறுதிப்பாடு அசைக்கமுடியாதது; எதுவாலும் எந்த பாதிப்பையும் விளைவிக்க முடியாத அறுதி வாய்ந்தது."

நிருபர் கேட்டார், "ஆன்மீக விஷயங்களை அறிவார்ந்த முறையில் புரிந்து கொள்ள முடியாதா?"

"ஆன்மீகக் கோட்பாடுகளை அறிவார்ந்த சொற்களில் கூறலாம். இதயத்தின் அனுபவத்தில் புத்தித்திறன் பேருதவியாக இருக்கும். ஒருபோதும் தலைவலியின் அனுபவம் இல்லாத ஒருவர், அதை அவருக்கு விளக்குமாறு கேட்டால், அது என்ன என்பதை அறிவார்ந்த முறையில் விளக்க முயற்சிப்பீர்கள். அவருக்கு அதைப் புரிய வைக்க, நீங்கள் அவரின் தலையில் அறையும் வேளையில் தலைவலி என்ன என்பதை அறிந்துகொள்வார்.

"ஆன்மீகத்தில் பகுத்தறிவிற்குப் புறம்பான எதுவும் இல்லை. விளக்கத்தை மிகவும் நடைமுறைப்படுத்த முடியும் என்பதால் அனுபவப்பூர்வமாக செயல்படுத்த முடியும். கிறிஸ்து, 'எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்றுங்கள்' என்றார். இதன் அர்த்தம் என்னவெனில் உங்கள் வரம்புகளை விட்டுவிட்டு, நான் வாழும் வாழ்க்கையை வாழுங்கள்; அது நடைமுறைக்கு உகந்தது எனப் பொருள்படக் கூறினார்.

"மெய்யறிவுத்திறன் (ஆன்மீகவாதம்) இயற்கைக்குப் புறம்பானதும், மனித அறிவிற்கு அப்பாற்பட்டது என்றும் கருதப்படுகிறது. ஆனால், அது அப்படியல்ல. நீங்கள் உங்கள் உலகக் கடமைகள் அனைத்தையும் செய்து கொண்டிருக்கலாம், அதே நேரத்தில் ஒரு மெய்யறிவாளராகவும் இருக்கலாம். இது, உங்கள் செயல்களை ஒழுங்குபடுத்தி, வாழ்க்கையை சரியான முறையில் வழிநடத்துகிறீர்களா என்பதைப் பொறுத்தது."

"மஹாத்மா காந்தியை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்ளலாமா?"

"காந்தி ஒரு விதத்தில் மெய்யறிவாளர். எல்லோரும் அவரவர் வழியில் ஒரு மெய்யறிவாளர். வாழ்க்கையை சரியாக வழிநடத்தும் ஒவ்வொருவருக்கும் உண்மையான ஆன்மீக வாழ்க்கை என்பது நடைமுறைக்குரியது.

"ஆன்மீக வாழ்வு ஒழுங்கான முறையில் வெளிப்படுத்தப்பட்டால், அது மானிட வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தொடர்புடையதாக இருக்கும். இல்லையென்றால், அதனால் விளையும் எதிர்வினையை ஆன்மீக வாழ்க்கை என்று அழைக்க முடியாது. இதனால் பொறாமை மூலம் மோசமாக கையாளப்படும் அன்பு, வெறுப்பாக மாற்றப்படுகிறது. ஆன்மீக

**வாழ்வின் மெய்யறிவுத்திறன் சரியாகக் கையாளப்பட்டால் இப்போது போரில் ஈடுபடும் அனைத்து நாடுகளுக்கும் உதவியாக இருக்கும்; இல்லையெனில் அது நிலைமையை இன்னும் மோசமாக்கும்.**

**“ஆன்மீக வாழ்வு என்பது மேல்நிலை ஆன்மீகத் தளங்களில் வாழும் ஆன்மாவின் வாழ்க்கை அனுபவம். மேலும் இந்த அனுபவத்தின் மூலம் மேம்பட்ட இறைநிலையை அடைய முடிகிறது.”**

நிருபர் இதைக் குறித்து சில கணங்கள் யோசித்து, “ஆனால் அமைதியை நிலைநாட்டத் தேவையானவை, பொருள் சரிசீரமைப்பு, உலக நாடுகளிடையே பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் போன்றவை. உங்களின் இந்தக் கோட்பாடு அதற்கு சாதகமாக வழி வகுக்குமா?” என்று கேட்டார்.

**“ஆன்மீக மெய்யறிவுத்திறன் இதற்குத் துணையாக இருக்கும். எல்லா பிரச்சினைகளுக்கும் சுயநலமே காரணம் என்பதை மக்கள் உணர முடிந்தால், பொருள் சரிசீரமைப்பு என்பது தானாகவே நிகழும்.”**

“இக்கால மானிடனின் மனநிலையில், பொருளாதார சரிசீரமைப்பு என்பது சாத்தியமா?” என நிருபர் கேட்டார்.

**“பொருளாதார சரிசீரமைப்பும், மனித இயல்பும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. சுயநலமே எல்லா சிக்கலுக்கும் மூலகாரணம் என்பதை உணர்ந்தால், அனைத்து பிரச்சினையும் தீர்க்கப்படும். இது எளிதும், எளிமையுமானது. இப்படி எளிதாகவும், எளிமையானதுமாக இருப்பதன் காரணமாக, பணி கடினமாகிவிடுகிறது.**

**“உதாரணமாக, புகழும் இகழும் உங்களை பாதிக்காவிட்டால், நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இல்லையென்றால், நீங்கள் மகிழ்ச்சியற்றவராகி விடுகிறீர்கள். தீர்வு எவ்வளவு எளிதானது, ஆனால் எளிமை அனைத்தையும் தானே கடினமாக்குகிறது.”**

நேரடிப்பேட்டி நிறைவடைந்ததும், பாபா மஸ்துகளை நீராட்டவும், அவர்களுக்கு சவரம் மற்றும் முடித்திருத்தம் செய்யவும் சென்றார்.

ஆண்கள் கிழக்கத்திய பெண்மணிகளைப் பார்க்கத் தடை செய்யப்பட்டதால், பெங்களூர் ஆசிரமத்தில் தங்கியிருந்த பெண் மண்டலிக்கு, டாக்டர்கள் டான், நீலு இருவரும் நேரடியாகச் சிகிச்சையளிக்க முடியாத நிலை. ஒவ்வொருவரின் ஆரோக்கியத்தைப் பற்றியும் ரானோ அவர்களிடம் கேட்டு, குறிப்பெடுத்து, நோயாளியைப் பரிசோதிக்காமல் எப்பொழுதும் மருந்துகளைப் பரிந்துரைக்க வேண்டியிருந்தது.

ஒரு முறை நாஜா உடல்நலமில்லாமல் இருந்தார். அவருக்கு ஆங்கிலம் அதிகம் பேச வராததால், ரானோ, நாஜாவின் அறிகுறிகளைக் கேட்டபோது, ’வயிற்றில் ஏதோ... தோளில் ஏதோ... பின்னால் ஏதோ... !’ என்று பதிலளித்தார். ரானோ அந்த அறிக்கையுடன் டாக்டர் நீலுவிடம் சென்று நாஜாவின் ‘ஏதோ’ நோய்க்கு ‘ஏதோ’ மருந்து கேட்டார். பாபா, இதைக் கேள்விப்பட்டு வயிறு குலுங்கச் சிரித்தார்.

டவ்லா நோயால் அவதிப்பட்டபோது, ஆசிரமவாசிகள் மொழிச் சங்கிலி ஒன்றை உருவாக்கினர், ஏனெனில் டவ்லா பாரசீக பேச்சு வழக்கிலிருந்த 'டாரி' (DARI) எனும் கிளை மொழியில் மட்டுமே சரளமாகப் பேசினார். டவ்லா தனது உடல்நிலை பற்றிய விபரத்தை, டாரி மொழியில் ஸூனாமாசிக்கு விளக்க, ஸூனாமாசி குஜராத்தியில் மன்ஸாரிக்கு எடுத்துரைத்தார்; மன்ஸாரி அதை, மராட்டியில் டாக்டர் நீலுவிற்கும், நீலு அதை ஆங்கிலத்தில் டானுக்கும் மொழிபெயர்த்தனர்! இந்த நூதனமான 'நோய் கண்டுபிடிப்பு' முறையை பாபா மிகவும் ரசித்தார்.

மன்ஸாரி ஒரு செவிலியராகப் பணிபுரிந்து, ஆங்கிலம் பேசாத கிழக்கத்திய பெண்களின் உடல்நலம் குறித்து ரானோவிற்குத் தெரிவிக்கவும், பின்னர் அவர் டாக்டர் நீலு அல்லது டானிடம் அந்த அறிக்கையைக் கொடுக்கவும் செய்தார். ஆனால் பாபா பெண்களிடையே இருக்கும் வேளையில், மன்ஸாரி தனது வேலையில் கலந்து கொள்வதற்கு பதிலாக, பாபாவுடன் இருக்க விரும்பினார். இது மன்ஸாரி, ரானோ இருவருக்குமிடையே முறுகல் நிலையை உருவாக்கியது.

1940, பிப்ரவரி 13ஆம் நாள் குருநாதர்களின் வட்ட அமைப்பைப் பற்றி பாபா விளக்கமளித்தார்:

**அவதார புருஷர் அல்லது சத்குருக்களின் வட்டத்து உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் மீதான அணுகுமுறையில் வேறுபாடு உள்ளது. வட்டத்து உறுப்பினர்கள் குருநாதரின் புதல்வர்களைப் போன்றவர்கள், பொது மக்கள் முன்பின் தெரியாத அன்னியர்களைப் போன்றவர்கள். உதாரணமாக: செய்தித்தாள் விநியோகிக்கும் ஒருவர் லட்சாதிபதியாக மாறினால், அவர் அதற்கான வழிகளைப் பிறருக்குக் கற்பிப்பதோடு, அவர்கள் அந்த வழிகளைப் பின்பற்றினால், அவர்களும் லட்சாதிபதியாக மாறமுடியும் என்று அவர்களிடம் கூறுகிறார். ஆனால், அவருடைய புதல்வர்களுக்கு, அவர் செல்வத்தைக் கொடுப்பாரே ஒழிய, செல்வத்தை எப்படிப் பெற்றார் என்பதற்கான விளக்கங்களை அல்ல.**

**அதேபோல், அவதார புருஷர் மற்றும் சத்குருக்கள் ஒருபோதும் தங்கள் வட்டத்து உறுப்பினர்களுக்கு ஆன்மீகப் பாதையின் வழிகளையும் முறைகளையும் விளக்குவதில்லை. அவர்கள் இறையுணர்வை அடையும் பாதையில் வட்டத்து சீடர்களை சரியான இடத்தில் இருக்கச் செய்கிறார்கள்; அதேவேளையில், சாதாரண மக்களுக்கு, அதை அடைவதற்கான வழிகளை அவர்கள் விளக்குகிறார்கள்.**

**வட்டத்து உறுப்பினர்களுக்கு இந்த விளக்கங்கள் தேவையில்லை, ஏனெனில் அவர்கள் 'தெய்வீக பொக்கிஷத்தின்' வாரிசுகள். 'பொக்கிஷம்' கையில் இருக்கும்போது, அதைப் பெறுவதற்கான வழிகளை விளக்குவதன் அவசியம் என்ன?**

**எனது வட்டத்து உறுப்பினர்களுக்கு, சிறப்பு விதிகள் உள்ளன.**

அவர்களின் கடுமையான தவறுகளைக் கூட நான் சகித்துக் கொள்கிறேன், பொறுத்துக் கொள்கிறேன், மன்னிக்கிறேன். கொலைக்கான தண்டனை மரணதண்டனை என்பது சாதாரண மக்களுக்கு ஓர் உலகளாவிய சட்டமாகும். ஆனால் எனது வட்டத்து சீடர்களுக்கு சிறப்பு விதி ஒன்று உள்ளது. அவர்கள் எப்போதும் மரண தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுகிறார்கள்.

ஆன்மீக குருநாதர்களைப் பற்றிய தனது கருத்துக்களை பாபா, தொடர்ந்து விளக்கினார்:

அவதார புருஷர் அல்லது சத்குருக்கள் குறித்த தவறான கருத்து இருக்கக்கூடாது. அவர்கள் நெருப்பைப் போன்றவர்கள். நீங்கள் நெருப்பைத் தீண்டினால், எரிக்கப்படுவீர்கள். நீங்கள் அதை, தூரத்திலிருந்து பயன்படுத்த முற்பட்டால், அது உங்களுக்கு இதமான கதகதப்பைத் தரும், உங்கள் உணவை சமைக்கும், உங்கள் தண்ணீரை சூடாக்கும், மேலும் எல்லா வகையிலும் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

நான் மீண்டும் சொல்கிறேன், அவதார புருஷரும், சத்குருக்களும் நெருப்பைப் போன்றவர்கள். வட்டத்திற்கு வெளியே இருப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குருநாதர்களின் பேச்சு, வெளிப்புற நடத்தை ஆகியவற்றால் அவர்களைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. சாய் பாபா ஒரு சத்குரு, ஆனால் பல நேரங்களில் அவரது செயல்முறை விசித்திரமாக இருந்ததுண்டு. ஒரு முறை, நிர்வாணமான குழந்தை ஒன்றைப் பார்த்ததும், “இது பையனா அல்லது பெண்ணா?” என வினவினார். அவ்வப்போது, தன்னிடம் வந்தவர்களிடம் பணம் கேட்பது வழக்கம். சத்குருக்களின் இதுபோன்ற செயல்களைப் பார்த்து, மக்கள் அவர்களை சந்தேகப்படுகிறார்கள், தவறாகப் புரிந்துகொள்கிறார்கள், சாதாரண மனிதர்கள் என்ற முடிவிற்கு வருகிறார்கள். இப்படித் தவறாகப் புரிந்துகொள்பவர்கள் வீழ்ச்சியை சந்திக்கிறார்கள்.

நான் ஒருவருக்குத் தளர்வான கட்டுப்பாட்டைக் கொடுத்து, அவர் விரும்பியதைச் செய்ய அனுமதித்தால், அது, உலக கண்ணோட்டத்தில், முறையற்றதாக அல்லது நடைமுறைக்கு மாறானதாகத் தோன்றினாலும், ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை மனதில் கொண்டு, பிறரால் புரிந்துகொள்ள முடியாத தொலைநோக்குப் பார்வையுடன் நான் அதைச் செய்கிறேன். சம்பந்தப்பட்ட நபர் அதைப் பொழுது போக்காக மட்டுமே செய்ய வேண்டும் அல்லது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று நான் விரும்புவதாக இருக்கலாம். எனவே, அவரது மனதை இதர விஷயங்களை நோக்கித் திசைதிருப்ப, நான் அவருக்கு விளையாட்டுப்பொருள் ஒன்றைக் கொடுக்கிறேன், ஏனெனில் இறுதியில் அவர் சோர்வடைந்து அதைத் தூக்கி எறிந்துவிடுவார் என்று எனக்குத் தெரியும்.

அவதார புருஷர் அல்லது சத்குரு தனது சீடர்கள் எதையாவது கைவிட்டுவிட வேண்டுமென விரும்பினால், இந்த இரண்டு மூலோபாய

**முறைகளில் ஒன்றைக் கையாளுகிறார். ஒரு வழி என்னவெனில், குருநாதர் ஒருவரிடமிருந்து ஒன்றைத் தட்டிப் பறிக்கிறார் அல்லது பிறரால் திருட வைக்கிறார். மற்றொன்று, அவர் அதற்கு ஒரு முக்கியத்துவத்தை அளிக்கிறார், இறுதியில் அந்த நபர் தானே சோர்வடைந்து அதை விட்டுவிடுகிறார்.**

**நான் ஒரு திட்டவட்டமான நோக்கத்திற்காக மாயாவின் 'இயந்திரத்தை' இயக்கியுள்ளேன். பல்வேறு செயல்களில் ஈடுபட்டு, அவற்றைக் கடந்து செல்லும் விதத்தில் மனிதகுலத்திற்கு, ஆயிரக்கணக்கான அனுபவங்களை நான் அனுமதிக்கிறேன். எல்லாவற்றிலிருந்தும் வெகுஜன மக்கள் இறுதியில் வெளியே வருவார்கள். அவர்கள் அதை உணரக்கூடியதாக இருக்கும்போது, இவை அனைத்தும் ஒரு சிறந்த நாடகத்தின் பகுதியாக இருந்ததை அவர்கள் கண்டுபிடிப்பார்கள், அதாவது, கடவுள் தனது எல்லையற்ற சாதுரியத்தால், மனிதகுலத்தை மாயாவிலிருந்து, மாயா வழியாக விடுவிக்கும் நோக்கத்துடன் இந்த நாடகத்தை அரங்கேற்றினார் என்பதைக் கண்டுகொள்வார்கள்.**

**துறவு அல்லது பற்றின்மை என்பது மாயாவிலிருந்து தப்பிச் செல்வதற்கென, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போலி யோசனையாகும், ஏனெனில், இவ்வாறு தப்பி ஓடுவதன் மூலம் நீங்கள் முக்கியமானதை இழந்துவிடுகிறீர்கள். இத்தகைய மறுப்புக்கான உள் எதிர்வினை என்னவெனில், மனம் விரைவில் கட்டுப்பாட்டை மீறி, சம்பந்தப்பட்ட நபரை மனச்சோர்வில் தள்ளி, மேலும் அதிக சிக்கல்களை உருவாக்குகிறது. இந்தப் புதிய சிக்கல்களை சமாளிப்பது இன்னும் கடினம். உண்மையான பரிகாரம் என்னவெனில் மாயாவிலே இருந்துகொண்டு அதைப் பொருட்படுத்தாமல் இருப்பதாகும்.**

பிப்ரவரி 14 அன்று டாக்டர் கனி தனது குடும்பத்துடன் பெங்களூருக்கு வந்தார். அதே நாளில் மதராஸிலிருந்து ஒரு சுவாமி, மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்து, "மதராஸில் வாழும் ஒரு கோடீஸ்வரர் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார், உங்கள் தரிசனத்தால் குறிப்பிடத்தக்க வகையில் நான் திருப்தியடைந்தால், அவரும் உங்கள் தரிசனத்திற்காக வருவார்" என்று கூறினார்.

இதைக் கேட்ட பாபா புன்னகைத்து, **"கோடீஸ்வரர் தரிசனம் செய்வதற்கான ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளார் - 'பினாமி' தரிசனம் (DARSHAN BY PROXY)! அவர் மிகவும் புத்திசாலி என்று தெரிகிறது. இது மிகவும் புதியதான ஒரு விஷயம். ஆனால் சொல்லுங்கள், தாகம் இல்லாமல் ஒருவர் எப்படித் தண்ணீர் அருந்த முடியும்?"** என்றார். வந்தவர் அதைப் புரிந்துகொண்டு மரியாதையுடன், ஆசிரமத்தில் இருந்த மஸ்துகளைப் பார்வையிட்டு, பின்னர் புறப்பட்டுச் சென்றார்.

1940, பிப்ரவரி 15ஆம் நாள், மெஹர் பாபாவின் 46ஆவது பிறந்தநாள் லிங்க்ஸ் பங்களாவில் அமைந்த இசை அரங்கத்தில் ஓர் இசை நிகழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. மெமோ வந்து பத்து நாட்கள் குழுவுடன் தங்கியிருந்தார்.

பைரமங்களாவில் திட்டமிடப்பட்ட உலகளாவிய ஆன்மீக மையத்தை நிர்மாணிக்க 'மைசூர் எஞ்சினீயரிங் கம்பெனி'க்குப் (MYSORE ENGINEERING COMPANY) பொறுப்பு வழங்கப்பட்டது. பாபாவின் அறிவுறுத்தல்களின்படி செய்ய வேண்டிய அனைத்தையும் கண்காணிக்க, நௌரோஜி தாதாசாஞ்சி உடனிருந்தார். எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரர்கள் தரம் குறைந்த பொருட்களைப் பயன்படுத்த முயன்றனர், அதை நௌரோஜி அனுமதிக்காமல், பிப்ரவரி இடைப்பகுதியில், நௌரோஜிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையே ஒரு பெரிய வாக்குவாதம் ஏற்பட்டது.

நடந்ததை பாபாவிற்குத் தெரிவித்தபோது, அவர் கேலி செய்தார்: **"அதை உருவாக்குங்கள், உடைத்தெறியுங்கள், ஆனால் ஆட்டம் காணச் செய்யாதீர்கள்; நீங்கள் அதைத்தான் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்!"**

பிப்ரவரி 16 அன்று, காலையில் ஒப்பந்தக்காரர்களுடன் ஒரு நெடுநேர கூட்டம் நடைபெற்றது. இறுதியாக, ஒப்பந்தத்தை நிறுத்தவும், பணிகளை மண்டலி செய்து முடிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு பாபா ஒப்புதல் அளித்தார். நோரினா, பல சந்திப்புகளுக்கு அழைப்பு விடுத்தும் திவான் இந்தத் திட்டத்தில் சற்று 'அமைதியாக' இருந்தார்.

பிப்ரவரி 18ஆம் நாள், பாபா, ஆண் மண்டலிக்கு இதைத் தெரிவித்தார்: **"இந்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது ஒப்பந்தக்காரர்களின் தவறு அல்ல. இது எனது சொந்த ஆன்மீகக் காரணங்களால் நிகழ்ந்தது."**

பிப்ரவரி 19ஆம் நாளிலிருந்து மெஹர் பாபா அவரது உபவாசத்தை, தினமும் ஒரு முறை உணவிலிருந்து தினமும் ஒரு முறை பால் மட்டுமே அருந்தப் போவதாக அறிவித்தார்; அடுத்த ஒரு வாரம் (பிப்ரவரி 23 - மார்ச் 1) ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார். தரிசனம் மற்றும் நேர்காணல்கள் 21ஆம் தேதி நிறுத்தப்பட்டன.

மெஹர் பாபா அவரது ஏகாந்தவாசம் குறித்து, கீழ்வரும் அறிவுறுத்தல்களை வெளியிட்டார்:

1. **பாபா எந்த நேரத்திலும் அவருடைய வசதிக்கேற்ப எழுந்திருப்பார். அவர் எழுந்திருக்கும் வரை ஒருவரும் அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது.**
2. **பாபா, எந்தப் பெண் மண்டலியுடனும் பேச மாட்டார். ஸூனாமாசி, வாலு ஆகியோரைத் தவிர, பெண்கள் குழுவிலிருந்து எவரும் மஸ்த் ஆசிரமத்திற்கு வரக்கூடாது; அவர்கள் வரையறுக்கப்பட்ட எல்லை வரை மட்டுமே வர முடியும், அது அவர்களுக்குக் கோடிட்டுக் காட்டப்படும். அவர்கள் எந்த சூழ்நிலையிலும் வரம்பை மீறக்கூடாது.**

3. பாபாவிற்கு ஏதேனும் செய்தியைத் தெரிவிக்க விரும்பும் பெண்கள் அல்லது குழுவின் எந்தவொரு உறுப்பினரும், அதை எழுதி ஸூனாமாசி மூலம் ஜால் கேரவாலாவிற்கு அனுப்ப வேண்டும். ஜால் உரிய நேரத்தில் அதை, பாபாவிற்கு வழங்குவார்.
4. பாபாவிற்கு பால் இல்லாமல் வலுவற்ற தேநீர், வழக்கம் போல மேல்மாடியில் (மெஹரா) தயார் செய்து, வாலு மூலமாக அனுப்பிவைக்க வேண்டும். தேநீர் தேவைப்படும் வேளையில், ஸூனாமாசிக்கு ஒரு குறிப்பு அனுப்பப்படும், அவர் அதை மேல்மாடிக்கு எடுத்துச் சென்றதும், தேநீரை உடனடியாகத் தயார் செய்து வாலு மூலமாக, தாமதமின்றி அனுப்பிவைக்க வேண்டும்.
5. பாபா நீராட மாட்டார், ஆனால் அவர் வழக்கம் போல முகத்தைக் கழுவி வாயை சுத்தம் செய்வார். இதற்குத் தேவையான சூடான நீரை தயார் நிலையில் வைத்திருக்கும் பொறுப்பை எரச் ஏற்றுக்கொள்வார். அதற்காகக் குறிப்பிட்ட வாளியை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
6. பாபா தேன், தண்ணீர் மற்றும் எலுமிச்சை ரசம் எடுத்துக்கொள்வார். இவை குடிலில் வைக்கப்படும்.
7. நோரினா, கிட்டி, ரானோ, எலிஸபெத், மார்கரெட், மன்ஸாரி ஆகியோரின் முக்கிய கடிதங்கள் 'முக்கியமானது' என்று வெளியில் குறிக்கப்பட வேண்டும், மேலும் ரானோ தாமதமின்றி ஸூனாமாசி வழியாக, பாபாவிற்கு அனுப்பிவைக்க வேண்டும்.
8. மண்டலியில் பின்வரும் உறுப்பினர்கள் மஸ்த் ஆசிரமத்தின் பணியில் அமைதியாக கலந்து கொள்வார்கள்: நீலு, காலை 10:30 முதல் 11:00 வரை; சாஞ்சி 11:00 முதல் மாலை 6:00 வரை (அவர் மஸ்த் ஆசிரமத்தில் உணவு உண்ண வேண்டும்; இரவு 12:00 முதல் 12:30 வரை பாபாவுடன் இருக்க வேண்டும்); ஆதி சீனியர் காலை 11:00 முதல் 11:30 வரை; விஷ்ணு 11:30 முதல் 12:00 மணி வரை; காலை 11:30 மணிக்கு சில நிமிடங்கள் ஜால்பாய்; பாதிரி, நௌரோஜி, பெண்டு மூவரும் பெங்களூரில் இருக்கும் வேளையில், மதியம் 12:30 மணிக்கு வர வேண்டும், காக் ஸாஹேப் பிற்பகல் 2:00 முதல் 6:00 வரை, பாபு (ஸோனா காம்ப்ளே) மற்றும் தோழர்கள் மாலை 6:00 மணியிலிருந்து தொடரவேண்டும்.
9. அஞ்சல், தந்தி மற்றும் ஆவணங்கள் பெறப்பட்டதும், ஸூனாமாசி அவற்றை மஸ்த் ஆசிரமத்தில் ஜால் கேரவாலாவிடம் ஒப்படைக்க வேண்டும்; ஜால் அவற்றை பாபாவிடம் கொடுக்க வேண்டும்.
10. பாபா மஸ்துகளை நீராட்ட மாட்டார். இந்தப் பணி, பாபாவால் தனிப்பட்ட முறையில் அறிவுறுத்தப்பட்ட மண்டலி உறுப்பினர்களால் செய்யப்படும்.

பைதூல், காக்கா, எரச், சிது, கிருஷ்ணா ஆகியோர் பப்பா ஜெஸவாலாவுடன் மஸ்த் ஆசிரமத்தில் தத்தமது கடமைகளைச் செய்யவேண்டும். விஷ்ணு, ஜங்க்ளே இருவரும் ஆசிரமத்திற்கான பொருட்களை வாங்கி வரும் அதேவேளையில், ஆதி சீனியர், கனி, எலிஸபெத், நோரினா ஆகியோர் மெஹர் பாபா ஜர்னலின் திருத்தங்கள், அச்சிடுதல், விநியோகம் ஆகியவற்றை மேற்பார்வையிட வேண்டும். சகன் இரவில் பாபாவின் அருகே கண்காணிப்பாளராக இருப்பதாகத் திட்டம்.

1940, பிப்ரவரி 23ஆம் நாள், பாபா வலுவற்ற தேநீர், தண்ணீர், தேன் மற்றும் எலுமிச்சை ரசம் ஆகியவற்றை மட்டும் அருந்தி உபவாசத்தைத் தொடங்கினார்; லிங்க்ஸ் பங்களாவிற்குப் பின்புறம் அமைக்கப்பட்ட குடிலில் தங்கி, மஸ்துகளுடன் தனிமையில் பணியாற்றினார். ஒவ்வொரு நாளும், குறிப்பிட்ட அரை மணி நேரம், பாபா ஏகாந்தவாசத்தில் இருக்கும் வேளையில், அனைவரும் முற்றிலும் அமைதி காக்க வேண்டும் என்ற கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்தார். இதன் விளைவாக, பங்களா மற்றும் அதன் வளாகத்தில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளும் அந்த நேரத்தில் நிறுத்தப்பட்டன. பாபாவின் குடிசை, பெண் மண்டலியின் குடியிருப்புக்கு அருகாமையில் இருந்தது. ஒவ்வொரு நாளும், பாபா தனது வேலையைத் தொடங்கும்போது, பெண்கள் தரையில் விரிக்கப்பட்ட மெத்தைகளில் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

ஐந்து நாட்களுக்குப் பிறகு, பிப்ரவரி 28ஆம் தேதி, பாபா உபவாசம் மேற்கொண்டார்; ஆனால் தண்ணீர், எலுமிச்சை ரசம் மற்றும் தேன் மட்டுமே அருந்தி வந்தார். (அவரது மலக்கழிவு கருமையாக இருந்தது.) மறுநாள், 29 அன்று, பாபா நீர் மட்டும் அருந்தினார்; பிற்பகல் 4:30 மணிக்கு வெளியே வந்து, சில நிமிடங்களுக்கு, பெண் மண்டலியை சந்தித்து இவ்வாறு கூறினார்: **"நாளை முதல் நான் உபவாசத்தைத் தொடர்கிறேன், ஆனால் ஆரஞ்சு மற்றும் கீரை ரசம், அடுத்த பதினொன்று நாட்கள் அருந்துவேன். இந்தப் பதினொன்று நாட்களுக்குள், பரபரப்பான ஒன்று நடக்கும். நாம் ஏப்ரல் 1ஆம் நாள் மெஹராபாத்திற்கு புறப்பட்டு வழியில் ஒரு மாதம் சுற்றுப்பயணம் மேற்கொள்வோம்."**

அன்று நள்ளிரவில், பாபா தண்ணீர் மட்டுமே அருந்தி மேற்கொண்ட உபவாசத்தை நிறுத்தினார். அடுத்த நாள், 1940, மார்ச் 1 அன்று பாபா, பெண்மணிகளை காலை 8:00 மணிக்கு மஸ்த் ஆசிரமத்திற்கு அழைத்து, ஒவ்வொருவரும் கைகளை சுத்தம் செய்து, பாபாவின் அறையிலிருந்து ஒரு பொருளை எடுத்துச் செல்லும்படிக் கூறினார். பாபா மஸ்துகளின் கழிவறைகளை சுத்தம் செய்வதற்கான தனது பணியைத் தொடர்ந்தார்; மேலும் உபவாசம் கடைப்பிடிக்கும் வேளையில், பாபா மிகவும் அயராது உழைப்பதாக மெஹரா தனது கவலையை வெளிப்படுத்தினார். அதற்கு பாபா, **"உபவாசம், மஸ்துகளுடன் பணிபுரிவது என்னை சோர்வடையச்**

**செய்யாது, ஆனால் நான் உள்ளளவில் மிகவும் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறேன்; இது எல்லாவற்றையும் ஈடுகட்டிவிடும்"** என்று பதிலளித்தார்.

மெஹராபாத்திலிருந்து அழைத்துவரப்பட்ட 23 மஸ்துகள் மற்றும் சட்டி பாபா, ஃபூல்வாலா (PHULWALA) ஆகியோருடன் பாபா, பெங்களூர் லிங்க்ஸ் பங்களாவில் தங்கியிருந்த காலகட்டத்தில் பணிபுரிந்தார்.

இவர்களைத் தவிர, இதர மஸ்துகளும் தினமும் அழைத்து வரப்பட்டனர்; பாபா ஒவ்வொருவருடனும் அவரது ஆன்மீகப் பணியைச் செய்து கொண்டிருந்தார்.

மஸ்துகளுடன் பணிபுரியும் போது ஏன் எப்போதும் தனியாக இருக்க விரும்புகிறார் என்பதை பாபா ஒருபோதும் விளக்கவில்லை. ஆனால் ஒரு முறை, பாபா, சட்டி பாபாவுடன் தனியாக அமர்ந்திருந்தபோது, இருவரும் சுமார் இரண்டு மணி நேரம் பாபாவின் அறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, வெளியே கண்காணித்துக் கொண்டிருந்த எரச் கதவைத் திறக்க எழுந்தார். அப்போது, சட்டி பாபா திடீரென வெளியே செல்லும் வழியில் அவரைக் கடந்து சென்றார். எரச், உடல் வழியாக மின்சாரம் பாய்வது போல் ஓர் அதிர்ச்சியை உணர்ந்தார்.

சின்ன சுவாமி, பெங்களூர் மஸ்த் ஆசிரமத்தில் தங்கியிருந்த ஒரு சுவாரஸ்யமான மஸ்த். அவர் புகைப்பிடிக்கும் போது, சிகரெட்டை அடிக்கடி அணைத்து, எரியும் பக்கத்தை வாயில் எறிந்து, மென்று விழுங்கும் விசித்திரமான பழக்கத்தைக் கொண்டிருந்தார். மஸ்த் வசித்து வந்த ஒரு குடிலுக்குப் பின்னால் மின்சார கம்பம் ஒன்று இருந்தது, அது சரியாக தரையிறக்கப்படாமல் இருந்ததால், விரும்பத்தகாத அதிர்ச்சியைக் கொடுத்தது; அனைவரும் அதைத் தொடுவதைத் தவிர்த்து வந்தனர். ஆனால் சின்ன சுவாமி மஸ்த் உண்மையில் தனது கைகளால் கம்பத்தை பற்றி அணைத்துக்கொண்டு மணிக்கணக்கில் அந்த அதிர்வை அனுபவிப்பது போல் அங்கேயே இருந்தார்!

மஸ்துகள் உடலைப் பற்றிய சிறிதளவும் உணர்வற்ற நிலையில் இருந்ததற்கு மற்றுமோர் உதாரணம்: ஆறாவது ஆன்மீகத் தளத்தில் இருந்த மஸ்த் ஃபூல்வாலா, ஹைட்ரஜன் பெராக்ஸைட் (HYDROGEN PEROXIDE) அமிலத்தில் ஊறவைத்த எலுமிச்சைத் துண்டுகளை சரளமாக உறிஞ்சுவது வழக்கம். ஒரு சாதாரண மனிதர் தனது நாவால் அதைத் தொடுவது முடியாத காரியம்.

பிப்ரவரி 19 அன்று மஸ்த் ஆசிரமத்தின் ஒரு மூலையில் தேநீர் கடை ஒன்று திறக்கப்பட்டது, அங்கு மஸ்துகள் எந்த நேரத்திலும் சென்று தேநீர் அருந்தி, பீடி அல்லது சிகரெட்டுகளை புகைத்து வந்தனர். அந்தத் தேநீர் கடையில் 'மஸ்த் ஹோட்டல்' (MAST HOTEL) என்று ஒழுங்கற்ற முறையில் கையால் எழுதி வைக்கப்பட்டிருந்தது.

மஸ்துகள் அனைவரும் ஒன்றாகக் கூட, தங்களுக்கென ஓர் இடம் கிடைத்ததில் மகிழ்ச்சி அடைந்தனர். அஹமதுநகரிலிருந்து ஒரு பாடகர் வரவழைக்கப்பட்டார், ஒவ்வொரு நாளும் பாபா தனது அறையில் மஸ்துகளுடன்

இசையைக் கேட்டு ரசித்தார். இசையை ரசித்த சட்டி பாபாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது.

அற்புதமான இந்தக் காட்சியைக் கண்டு காலம் வியந்தது. "ஆன்மீக உள் தளங்களில் வாழும், இந்த மேல்நிலை மஸ்துகளிடமிருந்து, போதையூட்டும் இறை கீதம் எதிரொலிப்பதை கேட்க முடிந்தது. இந்த கீதம் மிகவும் தனித்துவமானது மற்றும் மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டது. பெங்களூரில் மஸ்துகளின் வாழ்க்கை தூய்மையான, கலப்படமற்ற, இறையன்பான மதுவில் எரிந்து கொண்டிருந்த வேளையில், அன்பிற்குரியவரின் கீதம் அவர்களின் உடலின் ஒவ்வொரு துவாரத்திலிருந்தும் இசைக்கப்பட்டது!"

இதற்கிடையில், 1940, மார்ச் 3 அன்று, பாபாவைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கும் சில அறிவுறுத்தல்களுடன் சுவாமி பபானந்தா மீண்டும் ஷோலாபூருக்கு அனுப்பப்பட்டார்; ஜூலை 9ஆம் நாள் மெஹராபாத் வரவும் அறிவுறுத்தப்பட்டது.

மார்ச் 4 அன்று பீலாமாய் அவரது மகள் ஸில்லாவுடன் பெங்களூர் ஆசிரமத்தில் வந்து தங்கினார். 6ஆம் தேதி, பெங்களூரைச் சேர்ந்த டாக்டர் ஜாம்ஷெட் டி. பட்டேல் (DR. JAMSHED D PATEL), திரு. என். பெஸ்தோன்ஜி (N. PESTONJI) ஆகியோர் பாபாவை சந்திக்க வந்தனர். அவர்களுடன் நடந்த உரையாடல் பின்வருமாறு:

**"நான் எதிர்கால உலக முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு ஏகாந்தவாசம் மேற்கொள்வதோடு, முழு நேரமும் மௌனம் கடைப்பிடித்து எனது ஆன்மீக உட்பணியில் மும்முரமாக ஈடுபடுகிறேன். அதி விரைவில் வரவிருக்கும் எழுச்சிகளை நீங்கள் காண்பீர்கள். போர் மிகவும் தீவிரமான திருப்பத்தை எடுக்கும்; இது அளவிடமுடியாத துயரங்களையும் அழிவையும் கொண்டு வரும்."**

பெஸ்தோன்ஜி இடையே குறுக்கிட்டு, "திரு. ஸம்னர் வெல்ஸ் - MR. SUMNER WELLES (அமெரிக்க மாநில செயலாளர் - U.S. UNDERSECRETARY OF STATE) அமைதிக்காக பேச்சுவார்த்தை நடத்த முயற்சிக்கிறார்; அவர் வெற்றி பெறுவார் என்று நம்புகிறோம்" என்றார்.

பாபா சிரித்தபடியே வார்த்தைகளால் விளையாடினார், **"இது கோடைகாலத்தில் கிணறு வெட்டுவது போன்றது!"** (இதனால் பலன் எதுவும் இல்லை.) **இதற்கு முன்பு பார்த்திராத அல்லது கேட்டிராத அளவிற்கு உலகம் போரில் விரைவில் மூழ்கிவிடும்"** என்று பதிலளித்தார்.

"ஆனால் பாபா, ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்கிறார்களே, அதைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்? அவர்களைக் காப்பாற்ற முடியாதா?" என்று பெஸ்தோன்ஜி வினவினார்.

**"போர் அவசியம். இந்த அழிவு அனைத்தும் அசுத்தமான உலகைத் சுத்திகரித்து, அசுத்தத்தை அகற்றும், இதனால் ஒரு புதிய உலக அமைப்பை உருவாக்கி சீரமைக்க முடியும்.**



**ஏகாந்தவாச குடில், பெங்களூர் 1940**
**(**SECLUSION HUT, BANGALORE 1940**)**

**"உலகின் துன்பம் காரணமாக, என் உடலில் பல லட்சக்கணக்கான 'துளைகள்' உள்ளன. ஆனால் எனது எல்லையற்ற ஆனந்தம் மற்றும் ஆற்றல் காரணமாக என்னால் அதைத் தாங்க முடிகிறது.**

**"உங்கள் விரலில் கொப்பளம் ஒன்று நோய் நுண்மங்களால் நச்சுப்பட்ட நிலையில் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். இதன் காரணமாக நீங்கள் முழு விரலையும் துண்டிக்க மாட்டீர்கள்! விரல் உங்கள் உடலின் ஒரு பகுதியாக இருப்பதால் நீங்கள் அதைத் தாங்கிக் கொள்கிறீர்கள். அதேபோல், எல்லாவற்றையும் என்னுடையது என்று கருதுகிறேன், கஷ்டப்படுகிறேன், ஆனால், அதற்காக நான் என்னை அழித்து அனைவரையும் படுகொலை செய்ய மாட்டேன். அனைத்தும் என் உலகளாவிய உடலின் ஒரு பகுதியாக இருப்பதால் நான் அதை சகித்துக் கொள்கிறேன்."**

பட்டேலும், பெஸ்தோன்ஜியும் லிங்க்ஸில் வாழ்ந்த மண்டலியின் நெருங்கிய நண்பர்களாகி, பாபா, வெளியிடங்களுக்குச் செல்லும் போதும் தவறாமல் அவர்களை சந்தித்து வந்தனர்.

டாக்டர் கனி சமீபத்தில் பூனாவிற்கு வந்திருந்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், அவருக்குப் பணம் கடன் கொடுத்த ஒரு செல்வந்தர் கொலை செய்யப்பட்டார்; அப்போது டாக்டர் கனி சந்தேகத்திற்குரிய நபரானார். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக கனி தனது சொத்தை, செல்வந்தரின் குடும்பத்திற்கு ஈடாகக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் 1940 மார்ச் மாதத்தில், அந்த செல்வந்தரின் மகன், எதிர்பாராத விதமாக கனியின் சொத்தில் பெரும்பகுதியை அவரிடம் திருப்பித் தந்தார். 6ஆம் நாள் மாலை டாக்டர் கனி மீண்டும் பெங்களூருக்குத் திரும்பி வந்து, தனது சொத்தைத் திரும்பப் பெற்றதைக் கொண்டாடும் விதத்தில், அனைவருக்கும் மஸ்த் ஆசிரமத்தில் ஒரு சிறப்பு தேநீர் விருந்து வழங்கினார்.

மெஹர் பாபா மண்டலியிடம் கூறினார்:

**இது ஒரு தனித்துவமான சந்தர்ப்பம். டாக்டர் கனி, எனது தொடர்பில் இருந்த கடந்த 22 ஆண்டுகளில், "எனக்கு ஆன்மீக நன்மைகள் வழங்குவதற்கு முன்பு, பொருள் ரீதியாக ஏதாவது செய்யுங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்.**

**அவருடைய பொருள் சார்ந்த வாழ்க்கை படிப்படியாக வீழ்ச்சியடையும் விதத்தில் நான் ஒன்றை செய்தேன், இருந்தும், அவருடைய கவலைகள் ஓரளவிற்கு குறைந்துவிடும் என்று நான் அவரிடம் கூறினேன். விரைவில், அவர் கொலை வழக்கில் மாட்டிக்கொண்டார்; அவரது சகோதரர் அப்துர் ரஹ்மான் மிகவும் பதற்றமடைந்தார். இது மிகவும் வேடிக்கையானது - வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. அவர் (கனி) மூன்று மற்றும் நான்காவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையே சிக்கிக்கொண்டதைப் போலச் செயல்பட்டார்! அவர் தொடர்ந்து திகைப்பூட்டும் மனநிலையில் உணர்வற்றவர் போல் இருந்தார். நான் கேட்ட கேள்விகளுக்கு, அவருடைய**

**பதில்கள் தெளிவற்றவையாக இருந்தன. எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிட்டு, நான் சொல்வதைச் செய்யச் சொன்னேன். எவருக்கும் இதைப்பற்றி எழுத வேண்டாம் என நான் அவருக்கு அறிவுறுத்தினேன். இருந்தும், அவர் என்னைவிட்டுச் செல்வதற்கு முன்பே, 'அவர் கொடுமைகளுக்கு உள்ளானதாகவும், மிகவும் மகிழ்ச்சியற்ற விதியை சந்திக்க நேரிடும்' என்றும் நண்பர்களுக்கு அற்புதமான கடிதங்களை எழுதுகிறார்!**

**பின்பு, கனி, தனது பொருள் சார்ந்த கவலைகள் குறைந்துவிடும் என்ற நம்பிக்கையை இழந்தார். ஆனால் இந்தக் கொலை வழக்கு, மறைந்திருந்த ஓர் ஆசீர்வாதமாக நிரூபணமானது. அவர் இழக்கவிருந்த சொத்துக்கள் அனைத்தையும் ஆச்சரியமூட்டும் விதத்தில் அவர் திரும்பப் பெற்றார். எனவே, முதல்முறையாக கனி தனது சில கவலைகள் குறைந்துவிட்டதாக உணர்கிறார். அதனால்தான் அவர் இன்றிரவு இந்த விருந்தை நமக்குத் தருகிறார்.**

நௌரோஜி, பாதிரி இருவரும், பைரமங்களாவில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுவதில் மும்முரமாக இருந்தனர். ஆனால் 1940, மார்ச் 7ஆம் நாள், நௌரோஜி மோசமான பல்வலியுடன் லிங்க்ஸ் பங்களாவிற்கு வந்தார். பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், அவருக்கு சிகிச்சையளிக்குமாறு டான், நீலு இருவருக்கும் அறிவுறுத்தினார். டான், மிக்க சிரமத்துடன், நௌரோஜியின் இரண்டு பற்களைப் பிடுங்கினார். ஆனால், வலி இன்னும் மோசமடைந்து, நௌரோஜி படுக்கையிலானார்; மேலும் அவரது வேலையிலும் கலந்து கொள்ள முடியாமலாயிற்று.

அதே நாளில் நௌரோஜியின் நிலை பற்றி கேள்விப்பட்டதும், பாபா சீற்றமடைந்து டான், நீலு இருவரையும் திட்டினார். "**அவரது பற்களைப் பிடுங்க யார் சொன்னது? நீங்கள் டாக்டர்களா அல்லது முடித்திருத்தம் செய்பவர்களா? நீங்கள் அனைவரும் எதற்காக இங்கே வந்துள்ளீர்கள்?**" என்று பதினைந்து நிமிடங்கள், பாபா அவர்களைக் கடுமையாகத் திட்டினார்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, பாபா அமைதியடைந்து, பாபாவை அதிருப்தியடையச் செய்து, மிக்க வருத்தத்தில் இருந்த டாக்டர் நீலு, டான் இருவருக்கும் சகன் மூலமாக ஒரு செய்தியை அனுப்பி வைத்தார், "**கவலைப்படாதீர்கள். உங்களைக் கண்டித்து, திட்டியதில் எனக்கு வேறு சில நோக்கங்கள் இருந்தன**" என்று விளக்கினார்.

நௌரோஜியின் உடல்நிலை சரியானதும், அவர் சில நாட்களுக்காக மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மெஹர் பாபா, ஆரஞ்சு மற்றும் கீரை ரசம் மட்டும் அருந்தி மேற்கொண்ட உபவாசத்தை 1940, மார்ச் 12 அன்று நிறைவு செய்து இவ்வாறு வெளிப்படுத்தினார்: "**மார்ச் 11-20 தேதிகளுக்கிடையில் உலகையும், போரையும்,**

**குறிப்பாக, பிரிட்டன் நாட்டைப் பாதிக்கும் மிகவும் பரபரப்பான ஒன்று நிகழும்**." எனவே அவர் மார்ச் 20ஆம் நாள் மீண்டும் உபவாசம் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று அனைவருக்கும் தெரிவித்தார்.

மாண்ட்லாவில் ஆசிரமம் ஒன்றை நிறுவும் திட்டத்தை தள்ளி வைத்தது அங்கு வாழ்ந்த பலரை ஏமாற்றமடையச் செய்தது. பாபாவை மறு ஆய்வு செய்யக்கோரி பல கடிதங்கள் பெங்களூருக்கு அடிக்கடி வந்தன. எனவே மாண்ட்லாவில் உள்ள நிலத்தின் மீது ஒரு சிறிய கட்டமைப்பை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. அந்த நோக்கத்திற்காக, பாபா, பெண்டு, பப்பா ஜெஸவாலா, ஹோமி (கர்மான் மாசியின் மகன்) ஆகியோரை அங்கு அனுப்பி வைத்தார். மெஹராபாத் மலையில் அமைந்த மெஹர் பாபாவின் எதிர்கால சமாதியைப் போன்ற கட்டமைப்பு ஒன்றை உருவாக்க பெண்டுவிற்கு பாபா அறிவுறுத்தினார். பெண்டு, பப்பா இருவரும் இரண்டு மாதங்களாக அந்தப் பணிகளை கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது, ஹோமி அவர்களுக்கு வேண்டிய உணவைத் தயார் செய்தார். "**மாண்ட்லா, பல்லாண்டு காலங்களுக்கு முன்னர் எனது ஆன்மீக இல்லம்**" என்று பாபா குறிப்பிட்டார். "**எனது பூர்வீக தொடர்பை நிலைநாட்ட இந்தச் சிறிய கட்டமைப்பை நான் இப்போது எழுப்புகிறேன்**."

சில மாதங்களுக்கு முன்பு, நாசிக் நகரில் ஃபிரீனி போன்ற பாபாவின் நெருங்கிய அன்பர்கள் காரணமாக, தேவையற்ற முறையில் அவர் அவதிப்பட்டதை பாபா விளக்கினார். மேற்கத்திய சீடர்களிடையே, ஒருவேளை இங்கிலாந்தில் வாழும் டிலியாவின் சகோதரி மின்டாவும் பாபாவிற்கு அதே மாதிரியான சிரமங்களை ஏற்படுத்தியிருக்கலாம்; இதை 1940 மார்ச் 10 அன்று பாபா அவருக்கு எழுதிய கடிதத்தில் காண முடியும்:

**உங்கள் கடைசி கடிதம் ஒரு கணம் என்னை நிலைகுலையச் செய்தது; எனது நித்திய துன்பத்தை, நிலையான ஆனந்தம் சமநிலைப்படுத்தும் காரணத்தால், நான் அதைத் தாங்கிக்கொண்டேன், இல்லையேல் எல்லையற்ற பேரின்பம் மற்றும் ஆனந்தம் இல்லாத நிலையில் மனிதகுலம் கஷ்டப்பட வேண்டியிருக்கும்; மறைமுகமாக 'இது நியாயமா?' என பாபா வினவினார்.**

**பிரியமான ஷாலிமார், உங்கள் அன்பிற்குரியவரிடம் நீங்கள் எப்போதும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகவும், சுதந்திரமாகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் நேசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் முழு நிறைவற்ற தன்மையால் நீங்கள் இன்னும் என்னைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள். அவதார புருஷர் உலகத்திற்காக நித்திய கஷ்டங்களை அனுபவிக்கும் அதே வேளையில், அவரையும் அவரது வழிமுறைகளையும் புரிந்து கொள்ளாத காரணத்தால்,**

அவரது தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்களால் அடிக்கடி ஏற்படும் தேவையற்ற துன்பங்களுக்கும் அவர் ஆளாகவேண்டியுள்ளது.

'புரிந்துகொள்ளும் தன்மை' எனும் இந்த அரிய பரிசு, சேவை அல்லது தியாகம் எதில் வெளிப்பட்டாலும், அன்பின் வேறு எந்தப் பண்புகளையும் விட விலைமதிப்பற்றது. அன்பு குருடாகவும், சுயநலமாகவும், பேராசைக் கொண்டதாகவும், அறியாததாகவும் இருக்கலாம், ஆனால் சரியான புரிதலுடன் கூடிய அன்பு, இவற்றில் எதிலுமில்லை. இது தூய அன்பின் தெய்வீகக் கனி, பிரபஞ்சத்தின் அரிதான கனி அல்லது மலர். இதுவே 'எல்லா உலகின் மிக இனிமையான மலர்' என்றழைக்கப்படுகிறது. காலம் அதை உதிர விடாது. உதிர்ந்து உலர்ந்தாலும் அதன் வெளிப்புற ஆடையைக் களைந்து விட்டு, இதுவரைக் கண்டிராத அழகை வெளிப்படுத்துகிறது.

இறை ஞானத்தின் மொத்த வடிவான அன்பிற்குரிய கடவுளே அன்பர்களை அவர் அருகில் அழைத்து, இத்தகைய 'புரிந்து செயல்படும்' அன்பை அவர்களுக்கு அளிக்கிறார் என்பது, எத்தனை பெரிய ஆச்சரியத்திற்கான வாய்ப்பு என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதை மறுப்பவர்களுக்கு என்ன ஒரு சோகமான நிகழ்வு இது! அவர்கள் 'கடந்து வந்தவைகளைப் பற்றி' அவர்களுக்கு ஏதேனும் புரிந்து கொள்ளும் தன்மை இருந்தால், அவர்களின் துன்பம் உண்மையிலே தாங்கமுடியாததாக இருந்திருக்கும்.

எந்தவித உடல் ரீதியான துன்பத்தையும், தற்போதைய போரின் இடர்பாட்டையும் அதனுடன் ஒப்பிட முடியாது. சரியாகப் புரிந்து கொள்ளும் பக்குவம் இருந்திருந்தால் அவர்கள் அதை ஒருபோதும் மறுக்க மாட்டார்கள். வாழ்க்கை எவ்வளவு சிக்கலானது பாருங்கள்!

நீங்கள் குறை கூறி விமர்சிக்கிறீர்கள்; அக்கறையுடன் எடுத்துக் கொள்ள வேண்டியதை நீங்கள் லேசாக எடுத்துக்கொள்கிறீர்கள். என்னை மகிழ்விக்க நீங்கள் சில சமயங்களில் ஏங்குகிறீர்கள், ஆனால் எப்படி என்று உங்களுக்குத் தெரியாது; அதேவேளையில், நீங்கள் கற்றுக்கொள்ளவும் மறுக்கிறீர்கள். காட்சி அரங்கின் கலை, தனிச் சிறப்பான திறமை மிக்க கவிஞர் அல்லது ஓவியரின் கலைத்திறனைக் கற்றுப் புரிந்துகொள்வதற்கு, நீங்கள் உங்கள் வீடு, குடும்பம், குழந்தை, செல்வம், சுதந்திரம் போன்றவற்றைத் தியாகம் செய்வீர்கள். உங்களுக்கு விருப்பமான ஒன்றைக் கற்று, புரிந்துகொள்ள முயற்சிக்க நீங்கள் எந்தவிதமான சிரமத்தையும் வேதனையையும் தாங்கிக்கொள்வீர்கள். ஆனால் உங்கள் அன்பான பாபா, 'என்னைக் கற்றுக் கொள்ளுங்கள், என்னை சரியாகப் புரிந்து, தூய அன்பின் கனியைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறும்போது, நீங்கள் எதையும் தியாகம் செய்யத் தயாராக இல்லை. நான் கேட்கிறேன் 'இது என்ன வகையான அன்பு?' ஆனால் அன்பைக் கட்டாயப்படுத்த முடியாது. சேவை செய்வது, என்னை மகிழ்விப்பது, என்னை நேசிப்பது இவை அனைத்தும் ஹிட்லர் தன்னைப் பின்பற்றுபவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதை

**விட மிகவும் வித்தியாசமான விஷயம். அவர்கள் கீழ்ப்படிகிறார்கள்; இல்லையென்றால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் அல்லது சிறையில் அடைக்கப்படுவார்கள். எனது வழிகளைக் கடைப்பிடிக்கும் அன்பர்கள் தானாக முன்வந்து எனக்குக் கீழ்ப்படிகிறார்கள், இது மிகவும் கடினமான இலட்சியமாகும்.**

**இறுதியில், நீங்கள் இதைக் கற்றுக்கொள்வீர்கள். என் அழைப்பை ஏற்று நீங்கள் என்னிடம் வரும்போது நிலவும் சூழ்நிலையைப் போல, நீங்கள் பயிலும் பள்ளியில், துன்பம், நித்திய பேரின்பம் மற்றும் மகிழ்ச்சியுடன் ஒன்றிணைந்து இல்லாமல் இருக்கலாம். எனது ஆன்மீகப் பணிக்கு, எனக்குத் தேவையானவை உங்களில் பெருமளவில் உள்ளன. உங்களிடம், கற்றுக்கொள்ளும் ஆர்வம், இலக்கை அடைவதற்கான மன உறுதி, தைரியம் ஆகியவை இருந்திருந்தால், கற்றுப் புரிந்துகொள்ளும் திறனை நீங்கள் அடைந்திருப்பீர்கள். என்னில் மாறும் மனநிலையையும், எனது தற்போதைய தேவையையும், நான் வெளிப்படுத்தாத ஆசையையும் உங்களைத் தவிர வேறு எவரால் உணர்ந்து, புரிந்துகொள்ள முடியும்? ஆனால் நீங்கள் சோர்வடைந்து மாற்றத்தை விரும்பினீர்கள்! ஒரு குழந்தையைப் போலவே, தேவதைகளின் அரண்மனை, சிறப்பான ஆபரணம், அதை அடைவதற்கான 'மலை ஏறுவது' போன்ற எந்த உழைப்பும் இல்லாமல் இலகுவாக அடைய விரும்பினீர்கள்.**

**இப்போது, அன்பான ஷாலிமார், பரிதாபப்பட வேண்டாம், ஏனெனில் இந்த நேரத்தில் குறிப்பாக நான் 'உங்களைத் தேர்ந்தெடுத்தேன்.' எனக்கு விரைவில் மீண்டும் எழுதுங்கள், உங்கள் எல்லா திட்டங்களையும், நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பதையும் என்னிடம் சொல்லுங்கள். நீங்கள் உண்மையிலேயே விரும்பும் மகிழ்ச்சியை நோக்கிச் செல்லும் இரண்டு பாதைகளில் நீண்ட பாதையைத் நீங்கள் தேர்ந்தெடுத்துள்ளீர்கள், ஆனால் அதுவும் ஒரு பாதை; நான் உங்களை இறுதிவரை அழைத்துச் செல்வேன். எனவே நீங்கள் பயப்படவோ, கவலைப்படவோ ஒன்றுமில்லை. நீங்கள் என்னுடையவராக எப்போதும் இருந்தீர்கள், என்னுடையவராக எப்போதும் இருப்பீர்கள், அங்கே, இங்கே, எங்கே இருந்தாலும்.**

அந்த ஆண்டின் தொடக்கத்தில், ஸவக் கொத்வால், மும்பையில் தனது வேலையை விட்டுவிட்டு, இமயமலைக்குச் செல்லத் தயாராகி வருவதாக அவருடைய மனைவி நர்கிஸ் பாபாவிற்குக் கடிதம் எழுதினார். பிப்ரவரி மாதத்தில், பாபா, ஸவக்கை, பெங்களூருக்கு அழைத்தார்.

ஸவக் வந்ததும், பாபா அவரிடம், "**இமயமலையில் என்னை விட ஒரு சிறந்த குருநாதரைக் கண்டுகொள்வதானால், நீங்கள் போகலாம்; இல்லையேல், என்னுடன் வாருங்கள்**" என்று தெரிவித்தார்.

இந்த வார்த்தைகளைக் கேட்க மட்டுமே ஸவக் காத்திருந்தார். அவர் பாபாவுடன் நீண்ட காலம் தங்க விரும்பினார், மேலும், இமய மலைக்குச்

செல்லப்போவதாக விடுத்த அச்சுறுத்தல், பாபா அவரை வர அனுமதிக்கும்படிக் கட்டாயப்படுத்தியது. அவர் மும்பைக்குத் திரும்பிச் சென்று, அவரது மனைவி நர்கிஸ் (NARGIS), மூன்று குழந்தைகள் **நாஜூ** (NAJU), **ஹில்லா** (HILLA), **ஆதி** (ADI), மற்றும் நர்கிஸின் தந்தைவழி அத்தை பானுபாய் ஆகியோருடன் 1940, மார்ச் 15 அன்று பெங்களூருக்கு வந்து பாபாவின் ஆசிரமத்தில் நிரந்தரமாக இணைந்தார்.

மெஹர் பாபாவுடன் வந்திணைவதற்கு முன்பு, கொத்வால் குடும்பத்தினர் தங்கள் உடைமைகள் அனைத்தையும் விற்றனர். நர்கிஸ் ஒரு செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆகையால் அவர் செய்ததை கண்டறிந்தபோது அவருடைய உறவினர்கள் அதிர்ச்சியடைந்தனர். கொத்வால் குடும்பத்தினர் பெங்களூருக்கு வந்ததும், ஸவக், பாபாவிடம் குடும்பத்தின் மொத்த நிதியையும் உள்ளடக்கிய உறை ஒன்றையும், நர்கிஸின் நகைகள் அடங்கிய ஒரு பெட்டியையும் கொடுத்தார். பாபா மிகவும் மகிழ்ச்சியடைந்து, ஸவக்கிடம், **“இன்று முதல் இறுதி வரை, உங்கள் குடும்பத்தின் ஒவ்வொரு சிறிய தேவைகளையும் நான் கவனித்துக் கொள்வேன், உங்களுக்கு நான் பெருங்கடலைக் கொடுப்பேன்!”** என்றார்.

விரைவில், நர்கிஸ் நோய்வாய்ப்பட்டார், மேலும் அவருக்கு உதவும் கடமை நதீனுக்கு வழங்கப்பட்டது. நர்கிஸ் குணமடைந்ததும், பாபா அவரிடம், **“நீங்கள் இப்போது என்ன நினைக்கிறீர்கள்? ஸவக் தனது வேலையை விட்டுவிட்டார்; இப்போது வேலையில்லாமல் இருக்கிறார். உங்கள் சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டீர்கள், இப்போது உங்களிடம் பணமும் இல்லை. நீங்கள் இதை நினைத்துக் கவலைப்படவில்லையா?”** என வினவினார்.

“பாபா, நான் இப்போது உங்களுக்குச் சொந்தம். என்னையும் எனது குழந்தைகளையும் உங்கள் சேவையில் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு கருணையுடன் இருங்கள்” என்றார்.

பாபா சிரித்துக்கொண்டே, **“இன்று முதல் உங்கள் பொறுப்பு என்னுடையது. உங்கள் அனைவரையும் இறுதிவரை நான் கவனிப்பேன்!”** என்றார்.

சில நாட்களுக்குப் பிறகு (மார்ச் 31 அன்று), பாபா, கொத்வால் குடும்பத்தை பஞ்சகணிக்கு அனுப்பி வைத்தார். பாபா மெஹராபாத் திரும்பிச் சென்றபோது, அவர்களும் அவருடன் அங்கே சென்றனர். நாஜூ, ஹில்லா இருவரும் சில சமயங்களில் பாபாவுக்காகப் பாட அழைக்கப்பட்டனர், மேலும் சிறுவன் ஆதி பெரும்பாலும் பாபாவைத் தனது நகைச்சுவையுடனும் வேடிக்கையான பாடல்களாலும் சிரிக்க வைத்தார்.

ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் இடையில் ஒரு சந்திப்பு 1940, மார்ச் 18 அன்று நடந்தது. அடுத்த நாள், மெஹர் பாபா மண்டலியை அழைத்து மீண்டும் கூறினார்:

**போர் தொடர்பாக, திடீர் மற்றும் தீவிரமான ஒன்று நடக்கப்போகிறது. முஸோலினியும் ஹிட்லரும் ஒன்றாக இணைந்துள்ளார்கள். அது நான் ஆற்றிய பணியின் விளைவாகும். அவர்கள் இருவரும் ஒன்றிற்கும் உதவாத கூட்டாளிகள் - அதேசமயம் எனது மண்டலி "அனைத்திலும் சிறந்து விளங்குபவர்கள்!" நான் முஸோலினி மற்றும் ஹிட்லர் மூலமாகப் பணிபுரிகிறேன். ஒன்றில், போர் தீவிரமாகி இரத்தக்களரியாக மாறும் அல்லது சமாதானம் நிலவும், ஏனெனில் இந்த இருவரின் கூட்டணி காரணமாக, அனைத்து நாடுகளும் மிகவும் பாதுகாப்பற்றதாக உணரும்.**

மெஹர் பாபா மேலும் கருத்துத் தெரிவித்தார்:

**இந்த இருவருக்கும் இடையே என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது, அவர்களுடைய நெருங்கிய, மிகவும் ரகசியமான அதிகாரிகள், கூட்டாளிகளுக்கும் கூடத் தெரியாது. இது இருவருக்கும் இடையேயான மிகவும் தனிப்பட்ட சந்திப்பின் ஏற்பாடாகும், இந்தத் தீர்மானங்கள் அனைத்தும் அவர்களின் அமைச்சர்களுக்கும் கூட சங்கடம் விளைவிக்கும் அளவிற்கு ரகசியமாக இருந்தது. (அவர்கள் தீர்மானித்த அனைத்தும்) உண்மையான நிகழ்வுகள் நடக்கும்போது மட்டுமே உலகிற்குத் தெரியும், மேலும் இது மிகப் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.**

**மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கும் இவர்கள் இருவரும், ஒருவரையொருவர் ஏமாற்றும் பொய்யர்கள், தத்தமது சொந்த இரகசிய விளையாட்டுகளை விளையாடுகிறார்கள் - மேலும் இதில் வேடிக்கை என்னவெனில், அவர்கள் இருவருக்கும் இது தெரியும். இந்தத் திட்டங்கள் என்ன சிக்கல்களை உருவாக்கும் என்று அவர்களுக்கே தெரியாது. சுய நலன், காமம் மற்றும் பேராசை ஆகியவற்றிற்காக விளையாடும் விளையாட்டு இது. இதையெல்லாம் பாருங்கள்; எனது வார்த்தைகளை இப்போது குறித்துக் கொள்ளுங்கள்.**

அடுத்த நாள், பாபா ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒரு நாள் அவருடன் உபவாசம் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார் (காலையில் இரண்டு கப் தேநீர்; மதியம் ஐஸ்கிரீம்; மாலையில் இரண்டு கப் தேநீர்). அடுத்த நாள் ஈரானிய புத்தாண்டு, ஜாம்ஷெட்-இ-நவ்ரோஸ் (JAMSHED-E-NAVROZ) தினத்தன்று அவர்கள் உபவாசத்தைக் கைவிட்டனர். நௌரோஜியும் அவரது மகள் நர்கிஸும் அன்று மும்பையிலிருந்து வந்தனர்.

மார்ச் 24ஆம் நாள், ஆன்மீக மேல்நிலையை அடைந்த இந்த இறை-பைத்திய மஸ்துகள், அவர்கள் இருக்கும் நிலைக்கு எப்படி வந்தார்கள், அந்த நிலையைப் பற்றிய உண்மை என்ன என்று கேட்டபோது, பாபா இவ்வாறு விளக்கினார்:

**இந்த மேல்நிலை மஸ்துகளை 'யோகா-பிரஷ்தாஸ்' (YOGA-BRASHTAS) என்று அழைக்கலாம். வட்டத்து உறுப்பினர்களின் கண்களைக்**

கட்டிக்கொண்டு, இறுதி இலக்கை நோக்கி அழைத்துச் செல்லப்படுவது போல், ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டிருக்கும் சில மஸ்துகள், குருநாதரின் அருளைப் பெற்று மேல்நிலைக்கு, சிலர் ஆறாவது ஆன்மீகத் தளத்திற்கும் தள்ளப்படுகிறார்கள்; இத்தகைய மஸ்துகள் மிகக் குறைவு. இவை அனைத்தும் பெரும்பாலும் கடந்தகால மனப்படிவங்களைப் பொறுத்தது. நிகழ்கால வாழ்க்கையின் மனப்படிவங்களால் ஒரு சத்குருவின் தொடர்பில் வருவது மிகக் குறைவு. இங்கே நீங்கள் காணும் இந்த ஆத்மாக்கள் அவர்களின் கடந்தகால வாழ்க்கையில் ஆன்மீகப் பாதையில் இருந்து, யோகா-பிரஷ்தாஸ் என்ற நிலையை அடைந்து, ஆன்மீக ரீதியில் ஒருசில காரணங்களுக்காக அதே நிலையில் மாட்டிக்கொண்டனர். எடுத்துக்காட்டாக, ஆன்மீக பாதையில் இருந்த ஒருவர் கடந்த நான்கு ஆண்டுகளாக, ஒரு மரத்தின் கனி மற்றும் கிளையைப் பற்றிக்கொண்டு இருந்தார். ஒரு குருநாதர் வந்து விடுவிப்பது வரை அவர் அந்த நிலையிலேயே இருந்தார்.

(இந்த மனிதர்களான மஸ்துகள் எல்லா சோதனைகளையும் உடல் ரீதியாக எவ்வாறு தாங்க முடியும் என்று மண்டலியில் ஒருவர் கேட்டார்.)


உங்கள் அனைவருக்கும் மூன்று உடல்கள் உள்ளன - பௌதீக உடல், சூட்சும உடல் மற்றும் ஆழ் மன உடல். சாதாரணமாக, எல்லோரும் பௌதீக மற்றும் சூட்சும (நுட்பமான) உலகங்களை அனுபவிக்க முதல் இரண்டு - பௌதீக மற்றும் சூட்சும - உடல்களையும் பயன்படுத்துகிறார்கள், பௌதீக உடல் விழிப்புணர்வோடு இருக்கும் நிலையில் சூட்சும உடல் கனவு நிலையில் இருக்கும்.

ஒருவர் (ஓர் ஆன்மா), ஆன்மீகப் பாதையில் முன்னேறி, ஆன்மீகத் தளங்களில் நிலைநிறுத்தப்பட்ட பின்னர், அவரது ஆழ் மன உடல் (MENTAL BODY, காரண சரீரம்) என்று அழைக்கப்படும் உடலை உணர்ந்து கண்டுகொள்கிறார். இந்த நிலையில் இருக்கும்போது, ஆத்மா தான் அடைந்த முன்னேற்றத்தின் நிலைக்கு ஏற்ப, மகத்தான சக்திகளைக் கொண்டிருக்கும். கடினமான உடல் உளைச்சல் மற்றும் சோதனைகளில் கூட இந்த சக்தி, முதல் இரண்டு உடல்களையும் தாங்கி நிலைநிறுத்துகிறது. இப்படித்தான், உலகையும் அவர்களின் சுய உடல் தேவைகளையும் பற்றிய உணர்வும் அறிவும் இல்லாத வேளையில் கூட, அவர்கள் எப்போதும் போலப் புத்துணர்வோடும், வலிமையாகவும் வாழ்கிறார்கள். இல்லையெனில், ஒரு சாதாரண மனிதன், அவர்கள் அனுபவிக்கும் உடல் உளைச்சலில், ஆயிரத்தில் ஒரு பாகத்தைக் கூடத் தாங்க முடியாமல் உடலைத் துறந்துவிடுவான்.

உலகப்பொருள் சார்ந்த இன்பம் என்பது உண்மையான தெய்வீக பேரானந்தத்தின் பல லட்சங்களின் ஒரே ஒரு குறுகிய பகுதியான நிழல் என்று கூறலாம்.

(அப்போது கூட்டத்தில் ஒருவர் கேட்டார், "நீங்களே நீராட்டி, உணவூட்டி, உபவாசம் கடைப்பிடிப்பது போன்ற செயல்களால் விளையும் உடல் உளைச்சல் மற்றும் துன்பங்களை எவ்வாறு தாங்கிக்கொள்ள முடிகிறது?")

**அது உடல் உளைச்சலும் இல்லை, துன்பமும் இல்லை. ஒரு பணியை முழுத் திருப்தியுடன் செய்து நிறைவேற்றுவதால் ஏற்படும் மகிழ்ச்சி. மேலும், கடவுள் நிலையை உணர்ந்த பின்னர், கடமை உணர்வோடு உலகிற்கு வருபவர்கள், எல்லையற்ற சக்திகளை அவர்களுடன் கொண்டு வருகிறார்கள், அந்த சக்திகள் பௌதீக உடலைத் தக்கவைத்துக் கொள்கின்றன. அவர்களின் மனம் ஓர் உலகளாவிய மனம், அதுபோல் உடலும் ஓர் உலகளாவிய உடல். உலகளாவிய மனம் மற்றும் உடலின் உதவியுடன் குருநாதர்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் எவரையும் அணுகலாம் தொடர்பு கொள்ளலாம். காலமும் இடமும் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.**



மெஹர் பாபா (MEHER BABA), 1941



கோவா கிராமம் (GOA VILLAGE), 1940

# நீலப்பேருந்து பயணம் - கோவா

**(Blue Bus Tour - Goa)**

மெஹர் பாபா, அவரது ஆன்மீகப் பணிக்காக, ஒரு சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டிருந்தார், பின்னர் ஒரு மாத பயணத்தைத் திட்டமிட்டு, விஜயம் செய்யும் இடங்களையும் முடிவு செய்தார். 1,000 மைல்களுக்கும் மேலான பயணம், நீலப்பேருந்திலும் கார்களிலும் மேற்கொள்ளப்பட இருந்தது.

புறப்படுவதற்கு முன்பு, மெஹர் பாபா, மஸ்த் ஆசிரமத்தின் உள்வாசிகளை சந்தித்து, பெங்களூரில் தங்கியிருக்கும் ஒவ்வொரு மண்டலிக்கும் தத்தமது கடமைகளை வழங்கினார். நௌரோஜி, பாதிரி, மாஸாஜி, முரளி ஆகியோர் பைரமங்களாவில் கட்டமைப்பு பணிக்காகத் தங்கியிருந்தனர். ஆதி சீனியர், டாக்டர் கனி இருவரும் நோரினா, எலிஸபெத்துடன் ஏற்கனவே 'மெஹர் பாபா ஜர்னலை' (MEHER BABA JOURNAL) நிர்வகித்து வந்தனர். கடிதங்களை கையாளும் வேளையில், அஞ்சல் மற்றும் இதர கடமைகள் சாஞ்சியின் பொறுப்பாக இருந்தது. எரச், பைதூல் ஆகியோர் மஸ்துகளை கவனிக்கவும், சகன் உணவு தயார் செய்தல், மற்றும் குஸ்தாஜி, விஷ்ணு, காளேமாமா, சிது, ஜங்க்ளே ஆகியோர் ஆசிரமத்தில் இதர பணிகளைச் செய்யவும் நியமிக்கப்பட்டனர். பெண்டு, பப்பா ஜெஸவாலா இருவரும் மாண்ட்லாவில் இருந்தனர், ஜால் ரூஸி, பாபா கூறியபடி குவெட்டாவிற்கு புறப்பட்டுச் சென்றார்.

எட்டு மாதங்கள் பெங்களூரில் தங்கிய பின்பு, மெஹர் பாபா 1940 ஏப்ரல் 1ஆம் நாள் காலை 7:00 மணிக்கு பெண் மண்டலி, காக்கா, டான், நீலு, ஜால்பாய் - மொத்தத்தில் 40 நபர்கள் - நீலப்பேருந்து மற்றும் மூன்று கார்களில் பயணத்தைத் தொடங்கி, அன்று மதியம் அர்சிகேரே (ARSIKERE) பயணிகள் விடுதியில் வந்து தங்கினர்.

பயணம் முழுவதும், ஆண் மண்டலியின் 'கண்களில் தென்படாமல் மறைந்திருக்கும்' பெண்மணிகளுடன் மெஹர் பாபா, எலிஸபெத்தின் காரில் பயணம் செய்தார். ஜால்பாய் சில மேற்கத்திய பெண்களுடன் மற்றொரு காரிலும், ஆதி சீனியரின் காரை, துக்காராமும் ஓட்டிச் சென்றனர், அதில் குலாமாசி, குஸ்தாஜி, மெஹர்வான் ஜெஸவாலா ஆகியோர் இருந்தனர்; டான், காக்கா, நீலு மற்றும் பதினாறு பெண்களுடன் நீலப்பேருந்தை ஓட்டிச் சென்றார். நீலப்பேருந்தில் முன் இருக்கையில் அமர்ந்திருந்த மூவரும் பின்புறத்தில் இருந்த பெண்களைப் பார்க்க வேண்டாம் என்று பாபா கூறியிருந்தார். ஏதேனும் காரணத்திற்காக நீலப்பேருந்தை வழியில் நிறுத்தும் தருவாயில், டான், காக்கா, நீலு மூவரும் முதலில் இறங்கி பார்வைக்கு வெளியே சென்ற பிறகுதான் இதர பெண்மணிகள் கீழே இறங்கினர்.

மறுநாள் அதிகாலையில் அனைவரும் அர்சிகேரேயிலிருந்து புறப்பட்டனர். நீலப்பேருந்தை ஓட்டிச் செல்லும் டான் அப்போதுதான்

விழித்தெழுந்து களைப்பாக இருந்தார். இதை கவனித்த பாபா, ஒரு பாரசீக கவிஞரை மேற்கோள் காட்டி, "**ஓட்டப்பந்தய வீரர் முழு வேகத்தை எட்ட நேரம் எடுக்கும்; தூங்குபவர் விழித்தெழ நேரம் பிடிக்கும்; ஆன்மீக ரீதியில் தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவர் விழிப்புணர்வை அடைய பல காலங்கள் ஆகும்**" என்று கூறினார்.

மறுநாள் காலை 10:00 மணிக்கு ஷிமோகா (SHIMOGA) வந்தவர்களை, பி.எஸ். அமீர் அஹமது (B.S. AMIR AHMED), பி. ஸையத் மஹ்மூத் (B. SYED MAHMOOD) ஆகியோர் வரவேற்றனர். இந்த இரண்டு சகோதரர்களும் மெஹர் பாபாவை, பெங்களூரில் சந்தித்து ஷிமோகாவிற்கு வர அழைப்பு விடுத்திருந்தனர், எனவே பாபா தனது பயணத்திட்டத்தில் இதையும் ஓர் அங்கமாக வைத்திருந்தார். அங்கிருந்த தங்கச்சுரங்கத்தைப் பார்வையிட பாபா அழைத்துச் செல்லப்பட்டார்; தங்கம் இருக்கும் பாகத்தைக் குறியீட்டால் காட்டியது அவர்களுக்கு வசதியாக இருந்தது.

இரண்டு சகோதரர்களும் (டாக்டர் கனியின் தனிப்பட்ட வழிகாட்டுதலுடன்) பாபாவின் குழுவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தனர், மேலும் ஷிமோகா நகர மக்கள் தரிசனத்திற்காக வந்தனர். சுற்றுப்பயணத்தின் போது எவரையும் சந்திக்க பாபா உண்மையில் விரும்பவில்லை, ஆனால் அவர் இரண்டு சகோதரர்களின் நேர்மையான பிரார்த்தனைக்கு விடையளித்தார். உள்ளூர் மக்களுக்கு தரிசனம் வழங்கியபோது குழுவுடன் புகைப்படம் எடுக்கப்பட்டது.

சுற்றுப்பயணத்தின் போது, மெஹர் பாபா ஒவ்வொரு நாளும், அரை மணி நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார், அவ்வேளையில் பெண்மணிகள் முழுமையான மௌனத்தைக் கடைப்பிடிக்க உத்தரவிடப்பட்டனர். இருப்பினும், எப்போதுமே சிறிதளவிலான அரவம் இருந்துகொண்டே இருந்தது. கடைசி 30 நிமிடங்கள் அசையாமல் அவர்கள் மெத்தையில் அமர வேண்டும் என்றும் பாபா அறிவுறுத்தினார். ஷிமோகாவில், ஸூனாமாசியின் ஒலிக்கும் கடிகாரம் வேலை செய்யாததால், குலாமாசி தனது படுக்கையில் அமர்ந்து பாபாவின் ஏகாந்தவாச நேரத்தில் அதை சரிசெய்ய முயன்றார். திடீரென, அந்த அசைவற்ற, அமைதியான சூழ்நிலையின் நடுவே, கடிகாரம் ஒலிக்கத் தொடங்கியது. இது பாபாவை அதிருப்திப்படுத்தும் என்பதை அறிந்த பெண்மணிகளின் இதயங்கள் பயத்தில் துடித்தன. அவர்கள், என்ன செய்வதென்று புரியாமல் விரைவாகக் கடிகாரத்தை தலையணைக்குள், குவியல்களின் கீழ் மறைத்தனர், ஆனாலும் உரத்த சத்தத்தை இன்னும் கேட்க முடிந்தது. பாபா உடனடியாக தனது அறையிலிருந்து வெளியே வந்து குலாமாசியைக் கண்டித்தார், ஆனால் எதிர்பார்த்தபடி கடுமையாக இல்லை. இந்த சந்தர்ப்பத்தில், அவர் அதைப்பற்றிக் கவலைப்படாமல் மிகவும் வேடிக்கையாக இருந்தது போலத் தோன்றியது.

ஏப்ரல் 3ஆம் நாள் பிற்பகல், 63 மைல் தொலைவில் கெர்ஸொப்பா (GERSOPPA) அருகே அமைந்த 'ஜோக்' (JOG) நீர்வீழ்ச்சியைப் பார்க்க பாபா முடிவு செய்தார். புறப்படுவதற்கு முன்பு, டான் மற்றும் இதர ஓட்டுநர்களிடம் தனது

காரைப் பின்தொடருமாறு பாபா அறிவுறுத்தினார். வழியில், சாலையின் ஒரு பகுதி அழகிய வில்வளைவுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது; அதன் வழியாக கார்கள் கடந்து சென்றன. ஆனால் அங்கிருந்த மக்கள் கூட்டமும், பேருந்தின் மேல் குவிக்கப்பட்ட பொருட்களுடன் வளைவுகளுக்குக் கீழ் ஓட்டுவது கடினமாக இருக்கும் என்று நினைத்து காக்கா, டானிடம் ஒரு சுற்றுவட்ட பாதை வழியாக நகரத்தை சுற்றிப் பேருந்தில் செல்லுமாறு கூறினார், டானும் அவ்வாறே செய்தார். அப்போது, பேருந்து ஓர் ஆழமான துளைக்குள் சிக்கிக்கொண்டது. மிக்க சிரமத்துடனும், கிராமத்திலிருந்து வாடகை காளைகளின் உதவியுடனும், பேருந்து இறுதியாக வெளியே எடுக்கப்பட்டது.

மெஹர் பாபா அவர்களை எதிர்நோக்கி, சற்று தொலைவில் காத்திருந்தார்; மேலும் காக்கா, டான் இருவரும் பாபாவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதது, அவரைப் பெரிதும் வருந்தச் செய்தது. அவர் கூறினார், "**நான் முதலாவதாக வகுத்தத் திட்டம் மாற்றப்பட்டதால் இது நடந்தது**." ஆகவே, குருநாதரின் கட்டளைக்கு ஒருவர் செவிசாய்க்கத் தவறினால் என்னவாகும் என்பதன் பாடம் இதில் அடங்கியுள்ளது. நிலைமையை மேலும் மோசமாக்கும் விதத்தில், இரண்டு கார்களின் சக்கரங்களும் பழுதானது.

வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மீண்டும் வந்தபோது, சாலையின் நடுவே ஒரு மரம் விழுந்து எரிந்து கொண்டிருந்ததால், ஆண்கள் வெளியேறி அதை நகர்த்த வேண்டியிருந்தது. நீலப்பேருந்தின் முன்புற மின் விளக்குகள் எரியாததால் இரவில் ஓட்டுவது கடினமாக இருந்தது. நீலுவும் காக்காவும் பேருந்தின் இருபுறமும் அமர்ந்து, ஒளிரும் கை விளக்குகளால் வழிநடத்தி உதவினர்.

பாபாவும் குழுவும் இரவு பதினொரு மணிக்கு கெர்ஸொப்பா வந்தடைந்தனர். இரவில் காலதாமதமாகி, நதியைக் கடக்கும் படகு சவாரியும் நிறுத்தப்பட்டதால் அனைவரும் அங்கேயே ஒரு விடுதியில் ஓய்வெடுத்தனர். சற்று நேரத்தில் படகு சவாரி தொடங்கியதும், நதியைக் கடந்து, தங்களுக்கென முன்பதிவு செய்யப்பட்ட பங்களாவிற்குச் சென்றனர். பாபா, அப்போது அங்குத் தோன்றி உடனடியாகப் புறப்படுமாறு பெண்களுக்குத் தெரிவித்தார். இதைக் கேட்ட ஆதி சீனியரின் சகோதரி டாலி சீற்றத்துடன், "முட்டாள்! நான் சோர்வாக இருப்பதை நீங்கள் கவனிக்கவில்லையா?" என்று கேட்டார். டாலி கூறியதைக் கேட்டு பாபா அடக்கமுடியாமல் சிரித்தார். டாலி, சுய நினைவை இழந்த மஸ்தானி போன்றவர், பாபா உட்பட அனைவரிடமும் எதையும் தடையின்றி கூறிவந்தார்.

அனைவரும் நள்ளிரவில் புறப்பட்டு 'மைசூர் ஓய்வு இல்லத்தை' (MYSORE REST HOUSE) வந்தடைந்தனர். இது அழகிய 'ஜோக்' நீர்வீழ்ச்சிக்கு எதிரே அற்புதமான காட்சிகளைக் கொண்டிருந்தது.

மறுநாள், ஏப்ரல் 4 காலை ஏழு மணிக்கு, அவர்கள் கெர்ஸொப்பாவை விட்டு வெளியேறி, கார்கள், பேருந்து அனைத்துடனும் மீண்டும் படகில் நதியைக் கடந்து சென்றனர். பன்னிரண்டு மணி நேர சவாரிக்குப் பிறகு, மாலை

ஏழு மணிக்கு கார்வார் (KARWAR) நகரை வந்தடைந்தனர். கடல் மற்றும் மலையால் சூழப்பட்ட ‘கிராண்ட்’ ஹோட்டலில் (GRAND HOTEL) நான்கு நாட்கள் தங்கியிருந்தனர். ஆண்கள் அருகிலுள்ள ஓய்வு இல்லத்தில் தங்கினர். பெண்கள் கடலில் நீந்தி மகிழ்ச்சியாக இருந்தனர். பாபா, கடற்கரையில் கைகளால் மணற்கோட்டைகளைக் கட்டினார்.

விஷ்ணுவின் உறவினர்களான இந்து, சுஷீலா ஆகியோர் கார்வாருக்கு வந்து உணவு தயார் செய்வதில் உதவினார்கள். இந்துவின் கணவர் விஸ்வநாத் ஹல்தங்கர், பாபா மற்றும் மண்டலிக்கு, அம்போலி (AMBOLI), பெல்காவ்ம் (BELGAUM) நகரங்களில் தங்குவதற்கான இடங்களை ஏற்பாடு செய்ய, சாஞ்சிக்கு உதவினார். பாபா ஒவ்வொரு மாலையிலும் இந்து, சுஷீலா இருவரின் பாடல்களைக் கேட்டு மிகவும் பாராட்டினார். இது, குருநாதரின் நெருங்கிய சகவாசத்தில் வரும் முதல் வாய்ப்பை நல்கியது.

இந்து, ஓர் இளம் பெண்ணாக இருந்த நாளிலிருந்தே குருநாதரின் அருள் பார்வை அவர் மீது விழுந்தது. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, மெஹர் பாபா ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களுக்குப் பயணம் செய்யவிருந்த போது, அவர் ஓர் இளம் சிறுமியை தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினார், இந்துவும் அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அவள் உடல்நிலை சீரில்லாமல் இருந்ததால் அவளால் செல்ல முடியவில்லை.

இந்தியாவில், வெவ்வேறு இடங்களில் ஆசிரமங்களை நிறுவுவது குறித்த பேச்சு பயணத்தின் முக்கிய உரையாடலாக இருந்தது. ஏப்ரல் 6 அன்று, கார்வாரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் அமைந்த ‘நோஸ்ஸா ஸெனோரா தாஸ் ப்ரோட்டஸ்’ (NOSSA SENHORA DAS BROTAS) என்றழைக்கப்பட்ட போர்ச்சுகீஸ் (PORTUGUESE) கிறிஸ்தவ தேவாலயத்திற்கு பாபா, அனைவரையும் படகில் அழைத்துச் சென்றார்; இது ஒரு மைல் நீள ‘அஞ்ஜிதீவ்’ (ANJIDIV) என்ற தீவில் அருமையான இயற்கைக் காட்சிகள் நிறைந்த சூழலில் இருந்தது. இங்கே, பாபா ஒரு வெளிப்படையான கருத்தை வெளியிட்டார், **“உலகில் எனது ஆன்மீகப் பணிக்காக உருவாக்க விரும்பும் மூன்று மையங்களில், நான் இங்கே ஒன்றை உருவாக்க வேண்டும்!”**

கார்வாரில் இருந்த வேளையில் மெஹர் பாபா, பெண் மண்டலிக்கு ‘சம மனநிலை’ (POISE) பற்றி இந்த விளக்கத்தை அளித்தார்:

**ஆன்மீகம் என்றால் என்ன? நீண்ட நெடிய காலங்களாக நீங்கள் செய்து கொண்டிருக்கும் செயல்களின் விளைபயனை நிர்மூலமாக்குவது. நீங்கள் எப்பொழுதும், உண்ணுவதற்கும், உங்கள் உயிரைப் பாதுகாப்பதற்கும், ஒவ்வொரு தேவையையும் ஆர்வத்துடன் நிறைவேற்றுவதற்கும் வேண்டிய, உங்கள் சுயநல நோக்கங்களைப் பற்றி நினைத்தீர்கள். கடந்த முழு வாழ்நாட்களிலும் நீங்கள், உங்களுக்காகவே அனைத்தையும் தேடி கண்டுகொள்ளும் பழக்கத்தை கொண்டிருந்தீர்கள். சிறிதளவேனும் உங்கள் பழக்கவழக்கத்திற்கு எதிராகச் சென்றால் கூட, நீங்கள் வருந்துகிறீர்கள்.**

இப்போது, இந்தச் சுயநல பிணைப்புகள் அனைத்தையும் நிர்மூலமாக்க, நீங்கள் செய்யாததைத் செய்ய வேண்டும், அல்லது நீங்கள் செய்து கொண்டிருந்ததைச் செய்யக்கூடாது.

நீங்கள் எப்போதும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் உங்களைப் பற்றியே சிந்திப்பது; எனவே இப்போது நீங்கள் உங்களைப் பற்றி சிந்திக்காமல், பிறரைப் பற்றி சிந்திக்க வேண்டும். இதுதான் அன்பு என்று அழைக்கப்படுகிறது. ஆனால் அதற்கு, தனிப்பண்பு, சம மனநிலை, விடாமுயற்சி தேவை. சம மனநிலை - என்றால் என்ன? எதுவுமே உங்கள் உணர்ச்சியைக் கிளறிவிடாத, எதுவுமே உங்களைக் கவலையடையச் செய்யாத சீரான மனநிலை. உங்களிடம் இத்தகைய சீரான மனநிலை இருந்தால் மட்டுமே நீங்கள் பிறருக்கு உதவ முடியும், அதன் பின்னரே நீங்கள் பிறரை மகிழ்ச்சியடையச் செய்ய முடியும். அதுதான் அன்பு; அதுவே காதல். உங்களைப் பற்றி அல்ல, பிறரைப் பற்றி நினைப்பது.

நீங்கள் ஸஹாரா பாலைவனத்தில் இருக்கும் வேளையில், நான்கு நாட்களுக்கு அருந்த நீர் இல்லாத தருணத்தில், திடீரென ஒரு குவளை தண்ணீர் கிடைக்குமானால் - நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்? உங்களிடம் சம மனநிலை இருந்தால், நீங்கள் உயிரைத் துறப்பதையும் பொருட்படுத்தாமல் உங்கள் தோழரை அருந்த விடுவீர்கள், அவரை உயிர்வாழ விடுவீர்கள். ஆனால் அதற்காக நீங்கள் சண்டையிட்டு, அடைய முயற்சித்தால் உங்களுக்கு சம மனநிலையும், ஆன்மீக குண நலனும் இல்லை என்று அர்த்தம். இந்த சம மனநிலையே உங்களைத் தியாகம் செய்ய வைத்து, பிறரை மகிழ்ச்சியடையச் செய்கிறது.

உதாரணமாக, நான் எப்போதும் சொல்கிறேன்: "எல்லாவற்றையும் சிறப்பாகப் பயன்படுத்துங்கள்." இங்கே உங்களிடம் உணவு, நீச்சல், படகு சவாரி அனைத்தும் உள்ளன. அவற்றை சிறப்பாக அனுபவித்து, மகிழ்ச்சியாக இருங்கள்.

சிறிய சிறிய (அப்பாவித்தனமான) இன்பங்களை அனுபவிப்பது ஆன்மீகம் அல்ல என்று சொல்லாதீர்கள். ஆனால், நாம் சுற்றுப்பயணத்தில் வாகனம் ஓட்டிச்செல்லும் வேளையில், தூசி, பசி, தாகம், தலைவலி போன்றவற்றை உணர்கிறோம், அப்போது நீங்கள், இப்போது இருப்பது போலவே மகிழ்ச்சியாக இருங்கள். இது சம மனநிலை. நீங்கள் அப்போது (பயணம் செய்யும் போது) மகிழ்ச்சியாக உணரவில்லை என்றால், இப்போது மகிழ்ச்சியாக இருப்பது எளிதல்ல. நீச்சல், படகு சவாரி இப்படிப் பலவற்றை அனுபவிப்பதில் ஆன்மீகம் எதுவும் இல்லை என்று நீங்கள் நினைக்க வேண்டாம். இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா? மகிழ்ச்சியாக இருப்பது போலத் தோற்றமளிப்பதை நான் குறிக்கவில்லை, ஆனால் உண்மையில் மகிழ்ச்சியாக இருப்பதைக் குறிப்பிடுகிறேன்.

எனது வட்டத்தைப் பொறுத்தவரை, எல்லாம் சரிதான். நீங்கள் என்னுடன் வாழ்கிறீர்கள், அனைத்தையும் எனக்காக விட்டுவிடுகிறீர்கள்,

**இவ்வாறு நீங்கள் பிரபஞ்சத்திற்கு சேவை செய்கிறீர்கள். ஆனால் என்னருகில் இல்லாதவர்களைப் பொறுத்தவரை, இந்த சம மனநிலை ஆன்மீகத்திற்கு 100 சதவீதம் அவசியம். மீண்டும், ஆன்மீகம் என்றால் என்ன? சம மனநிலை, சீரான மனநிலை. ஒவ்வொரு சூழ்நிலையையும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எவரையும் புண்படுத்தாதவன் நல்ல மனிதன். எவராலும் புண்படுத்தப்பட முடியாதவன் இறை-மனிதன்!**

மெஹர் பாபாவும் குழுவும் 1940, ஏப்ரல் 9 அதிகாலை 4:45 மணிக்கு கார்வாரிலிருந்து புறப்பட்டனர். நான்கு வாகனங்களும் நதியைக் கடக்க, கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் பிடித்தது. காலநிலை அதி வெப்பமாக இருந்தது, ஜால்பாயின் கார் செயலிழந்து கடைசியில் பழுதாகிவிட்டது. பின்னர் இரவு முழுவதும் காரை காட்டில் விட்டுச்செல்ல வேண்டியிருந்தது. ஜால்பாயும் இதர பயணிகளும் மற்றொரு காரில் சிரமப்பட்டு வந்தனர். பாபா அவர்களுக்காக ஸூப்பா - SUPA (ஜோய்டா - JOIDA) கிராமத்தில் காத்திருந்தார்.

அன்று இரவு சுமார் 8:30 மணியளவில், அவர்கள் வந்து சேர்ந்ததும், மெஹர் பாபா ஆண் மண்டலியை, 'காளி' (KALI) நதிக்கரைக்கு அழைத்துச் சென்று, அவர்கள் முகம் மற்றும் கைகளைக் கழுவி சுத்தம் செய்யும் வேளையில், ஒவ்வொருவருக்கும் ஒரு குவளையிலிருந்து தண்ணீரை ஊற்றினார். "கிறிஸ்து தம்முடைய சீடர்களின் கால்களைக் கழுவுவதைப் போல்" என்று டான் நினைவு கூர்ந்தார். பாபா பின்னர் அவர்களுக்கு உணவு பரிமாறினார்.

அன்று எலிஸபெத்தின் காரில் ஒரு சக்கரம் பழுதடைந்தது. நீலப்பேருந்து ஒரு சைக்கிள் ஓட்டுநர் மீது மோதியது. பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"இதனால்தான் சமீபத்தில் நான் உங்களுக்கு, சம மனநிலையைப் பற்றிய விரிவுரையை வழங்கினேன். நான் இப்போது அனுபவித்து வரும் ஒரு சிறிய துன்பத்தை நான் உங்களோடு பகிர்ந்து கொண்டால் நீங்கள் முணுமுணுக்கக்கூடாது."** முந்தைய இரவு பாபா வேதனையுடன் முனகிக் கொண்டிருந்தார், மேலும் அவர், **"நான் இப்போது உள்ளளவில் மிகவும் கஷ்டப்படுகிறேன்"** என்று கூறினார்.

அடுத்த நாள், ஜால்பாய் ஓட்டி வந்த கார் மற்றொரு காரோடு இணைத்து, அருகிலுள்ள கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. நீலு, பெல்காவ்ம் சென்று காரைப் பழுதுபார்ப்பதற்காக விஸ்வநாத்தின் உதவியை நாடினார்.

1940 ஏப்ரல் 11 அதிகாலை அனைவரும் கோவாவின் (GOA) பன்ஜிம் (PANJIM) நகரத்தை வந்தடைந்து, 'ஹோட்டல் ரிப்பப்ளிக்கா'வில் (HOTEL REPUBLICA) தங்கினர். ஹோட்டலுக்குச் செல்லும் வழியில், கோவானீஸ் சுங்கவரித்துறை அனுமதி பெற்ற பின்னர், அவர்கள் புனித ஃபிரான்சிஸ் ஸேவியரின் (ST. FRANCIS XAVIER) புகழ்பெற்ற கத்தோலிக்க தேவாலயத்தைக் கடந்து சென்றனர், மேலும் தேவாலயம் திறந்திருக்கும் நேரத்தைப் பற்றி விசாரித்து வர, பாபா, எலிஸபெத்தை அனுப்பிவைத்தார். எலிஸபெத் காரை நிறுத்திவிட்டு,

தேவாலயத்திற்கு அருகிலிருந்த சிறிய உணவகத்தில் விசாரித்தார். சிறிது நேரத்தில், அவர், கந்தலான உடையும், சூரிய தொப்பியும் அணிந்த ஒரு வயதான மனிதருடன் வெளியே வந்தார். அவர் ஏறக்குறைய 60 வயதைத் தாண்டியவர், நீண்ட சாம்பல் நிற தாடி, தலை முடியுடன் வழுக்கையாகக் காணப்பட்டார். அவர் ஆங்கிலத்தில் தேவாலயம் எல்லா நேரங்களிலும் திறந்திருக்கும் என்றார். பாபா அந்த மனிதனை உற்று நோக்கி, பின்பு புறப்பட்டார்.

அன்று மாலை, அனைவரும் ஃபிரான்சிஸ் ஸேவியரின் புனித சமாதியைப் பார்க்க, பாபாவுடன் சென்றனர். அவர்கள் திரும்பி வரவிருந்த வேளையில், அதே வயதான பெரியவர் எலிஸபெத் அருகே நடந்து வந்து உரையாடல் ஒன்றைத் தொடங்கினார். அவர் கராச்சியிலிருந்து (KARACHI) வந்ததாகவும், அங்கு அவர் எழுதிய நாடகங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை என்றும் எலிஸபெத்திடம் கூறினார். அவர் அதைப் பற்றி எழுத இப்போது கோவா வந்துள்ளார்; நவீன நாடகங்களையும், நாடக ஆசிரியர் பெர்னார்ட் ஷாவையும் (BERNARD SHAW) குறிப்பிட்டார். அந்தப் பெரியவர் பேசும்போது ஜால்பாய், காக்கா, டான் மற்றும் பாபா அவரைச் சுற்றி நின்றனர். அவருக்கு ஏதாவது, குறிப்பாக, பணம் தேவையா என்று கேட்குமாறு பாபா ஜால்பாயிடம் தெரிவித்தார்; அந்த நபர் “இல்லை, மிக்க நன்றி” என்று பதிலளித்து, பாபாவைத் திடீரென உற்று நோக்கினார்.

அன்று மாலை, ஹோட்டலில் மெஹர் பாபா அந்த மனிதரைப் பற்றிக் குழுவிற்கு வெளிப்படுத்தினார்: **“நீங்கள் அனைவரும் கண்ணிருந்தும் குருடர்கள்; ஆன்மீக ரீதியில் அவர் மிகவும் முன்னேறியவர் மட்டுமின்றி முழு உணர்வு நிலையில் இருக்கும் முகவர். நாடகங்கள் எழுதுவது பற்றிய அவரது பேச்சு அனைத்தும் எனக்கென மறைமுகமான ஒரு பொருளைக் கொண்டிருந்தது. நான் உள்ளளவில் அவருக்குச் சில அறிவுறுத்தல்களை வழங்கினேன்; நாளை அவர் கோவாவை விட்டு வெளியேறுவார்.”**

அடுத்த நாள், எலிஸபெத் திடீரென மீண்டும் அந்த மனிதரை சந்தித்த போது, ரகசியமான முறையில் அவர், “ஏன் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நான் எல்லாமே நெருப்பில் எரிவதாக உணர்கிறேன்! இன்னும் சில மாதங்கள் கோவாவில் தங்கியிருக்க நான் விரும்பினாலும், வடக்குப் பகுதியில் அமைந்த ஒரு குளிர் பிரதேசத்திற்கு நான் உடனடியாகப் புறப்பட வேண்டும்” என்று கூறினார்.

எலிஸபெத் இந்த விசித்திரமான சந்திப்பைப் பற்றி பாபாவிடம் கூறியபோது அவர், **“எலிஸபெத் அவரை முதன்முதலில் சந்தித்ததால், கடைசியாக சந்திக்க வேண்டியது அவசியம்”** என்று குறிப்பிட்டார். அந்த நாளின் பிற்பகுதியில், வானொலியில் ‘முன் எச்சரிக்கையின்றி ஜெர்மனி, வடக்கில் அமைந்த இரண்டு குளிர் பிரதேசங்களான டென்மார்க் மற்றும் நார்வே மீது ஏப்ரல் 9ஆம் தேதி படைகளை அனுப்பி ஆக்கிரமித்தது’ என்று தெரிய வந்தது.

பன்ஜிமில், எலிஸபெத் ஒரு நாள் பாபாவிடம், "நல்ல தரமான ஐஸ்கிரீம் இங்கே கிடைக்கிறது. அனைவருக்கும் சிறிதளவு வாங்கி வரலாமா?" எனக் கேட்டார். அதற்கு பாபா, "**இது ஒரு நல்ல யோசனை; ஆனால் அது சளியை ஏற்படுத்தி உங்கள் தொண்டையைப் பாதிக்கக்கூடாது**" என்று பதிலளித்தார்.

பாபா, நீலுவை அழைத்து, "**ஐஸ்கிரீம் சாப்பிடுவதால் வரும் தொண்டைப்புண்ணைத் தடுக்க என்ன பரிகாரம் இருக்கிறது?**" என்று கேட்டார்.

"ஐஸ்கிரீமிலிருந்து வரும் எந்தவொரு பக்க விளைவிற்கும் எதிராக, பூண்டுச் சட்னி ஒரு நல்ல நோய்த் தடுப்பு மருந்தாக இருக்கும்" என்று நீலு பதிலளித்தார். பின்னர், எலிஸபெத்தை ஐஸ்கிரீம் வாங்கி வர பாபா அனுமதித்தது அவருக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

பாபா, நீலுவுடன் மராட்டியில் உரையாடியதால், அவருடைய ஆலோசனையை எலிஸபெத் அறிந்துகொள்ள முடியவில்லை.

எலிஸபெத் வெளியே சென்றதும், பாபா, கேட்டி மற்றும் மனுவிடம் போதுமான அளவு பூண்டுச் சட்னியைத் தயார் செய்யக் கூறினார். எலிஸபெத் இன்சுவைமிக்க ஐஸ்கிரீம் பெட்டிகளுடன் திரும்பி வந்ததும், பாபா, அனைவருக்கும் அதைத் தாராளமான அளவு பூண்டுச் சட்னி பொட்டலுத்துடன் வழங்கினார்! அவர்கள் விரும்பிய அளவிற்கு ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஆனால் ஒவ்வொரு கரண்டி சாப்பிட்டதும் சிறிதளவு பூண்டுச் சட்னியும் உடனடியாகச் சாப்பிடும்படியும் அறிவுறுத்தினார்! இதனால் எல்லா சந்தோஷங்களும் எங்கோ பறந்துவிட்டன. அனைவரும், "எங்களுக்கு ஐஸ்கிரீம் தராமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்" என நினைத்தனர்.

நோரினா, எலிஸபெத், டான் மூவரும் ஏப்ரல் 13 அன்று கார்வாரில் அமைந்த தீவைக் குறித்துப் பேச, போர்ச்சுகீசிய ஆளுநரைப் பார்க்கச் சென்றனர். அவருடன் நீண்ட கலந்துரையாடலுக்குப் பிறகு, பாபாவுக்கான மையத்தை நிறுவ அந்த இடம் கிடைப்பது சாத்தியமல்ல என்பது தெரியவந்தது.

கோவாவில், பாபா பெண்மணிகளை ஓர் இந்து கோவிலுக்கும், 'கோபால் கிருஷ்ணா' என்ற திரைப்படத்திற்கும் அழைத்துச் சென்றார். அவர்கள் கோவாவில் தங்கியிருந்த காலத்தில், பாபா, குழுவில் அனைவரையும் மீன் சாப்பிட அனுமதித்து, அவரும் அதில் பங்கெடுத்தார், ஆனால் இது ஏதோ 'சிறப்பு காரணங்களுக்காக' என்பது மட்டும் புரிந்தது.

மெஹர் பாபா அவரது பயணத்தில் கோவாவிலிருந்து சிறுவன் ஒருவனையும் தன்னுடன் அழைத்துச்செல்ல விரும்பினார். ஸாந்தனா ஃபெர்னாண்டஸ் (SANTANA FERNANDES) என்ற பதினைந்து வயது அனாதை சிறுவனைக் கண்டுபிடித்து, அவர்களுடன் அழைத்துச் சென்றனர். பாபா, ஸாந்தனாவை விரும்பினார், அவன் புத்திசாலியாக இருந்ததைத் தவிர, சிறுவனுக்கு ஆன்மீக இயல்பு இருந்ததையும் சுட்டிக்காட்டினார்.

பாபாவும் கோவாவில் பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, ஒருவரை நீராட்டினார். "**கோவாவின் ஆன்மீக விவகாரங்களுக்கான திறவுகோலை இவர் வைத்திருக்கிறார்**" என்று பாபா வலியுறுத்திய மஸ்தானி மாய் (MASTANI MAI) என்ற கிறிஸ்தவ பெண்மணியுடனான தொடர்பு, மிக முக்கியமான ஒன்றாக இருந்தது. காக்கா, நோரினா இருவரும் அந்த மஸ்தானி மாயை மீண்டும் தொடர்பு கொண்டு, அவரை ஹோட்டலுக்கு அழைத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டனர். மஸ்தானி ஒரு சாலையில் நடந்து செல்வதை அவர்கள் கண்டுபிடித்தனர். அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்ததால் புடவை அணியாமல், கருப்பு ரவிக்கை மற்றும் நீண்ட பாவாடை அணிந்திருந்தார். நோரினா அவரைப் பார்த்தபோது, ஆமஸான் (AMAZON) வீராங்கணையை நினைவுகூர்ந்தார். நோரினா அவரைத் தன்னுடன் வருமாறு வற்புறுத்த முயன்ற வேளையில், மஸ்தானி நோரினாவை விலகி இருக்குமாறு சைகையால் தெரிவித்து, தொடர்ந்து சாலையில் நடந்து சென்றார். நோரினா மீண்டும் காரில் வரும்படி அவரை வற்புறுத்த முயன்றார், ஆனால் அந்த மஸ்தானி மறுத்துவிட்டார். பின்னர் அனைவரும் அவரைப் பின்தொடர, அவர் நேராக ஹோட்டலை நோக்கி நடந்தார்; அங்கு, பாபா தனது அறையின் பால்கனியில் நின்று கொண்டிருந்தது, அவர் மஸ்தானியின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தது போலத் தோன்றியது. அவர் ஹோட்டலின் முன்புறம் வந்து, சில கணங்கள் பாபாவை உற்றுநோக்கி, பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றார்.

பாபாவும் குழுவும் 1940 ஏப்ரல் 15 திங்கள் காலை ஆறு மணிக்கு, கோவாவிலிருந்து புறப்பட்டு, கானாபூர் பயணிகள் விடுதியில் (KHANAPUR DAK BANGALOW) இரவில் தங்கினர். அனைவரும், மறுநாள் காலையில் அம்போலிக்குப் (AMBOLI) புறப்பட்டனர். செல்லும் பாதையில், பாபா ஒரு மரத்தின் கீழ் மஸ்த் ஒருவர் அமர்ந்திருப்பதைக் கண்டு, அவர்களுடன் காரில் அந்த மஸ்தை அழைத்துச் சென்றார்; அவர்கள் பிற்பகல் ஒரு மணியளவில் அம்போலிக்கு வந்து சேர்ந்தனர். விஸ்வநாத் ஹல்தங்கர், பயணிகள் விடுதியில் அனைவரும் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

ஸாவந்த்வாடியின் மஹாராணி (அவரது கணவர் பஞ்ச்கணி டைகர் வேலி குகையை, பாபாவிற்குக் கொடுத்தவர்) பாபாவின் தரிசனத்திற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்திய வேளையில், பாபா அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். மஹாராணி தனது மூன்று மகள்களுடன் 17ஆம் தேதி வந்தார். பாபா அவர்களுடன் சில நிமிடங்களைக் கழித்தார். மஹாராணி தாழ்மையுடன் தேங்காய் ஒன்றை அவரது காலடியில் வைத்ததும், பாபா அதை எடுத்து மூன்று மகள்களில் ஒருவரிடம் கொடுத்து, "**இதை எப்பொழுதும் உங்களுடன் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்; எல்லாம் சரியாகிவிடும்; நீங்கள் கவலைப்படக்கூடாது**" என்றார். மஹாராணி, பாபாவிடம், அவரது மகள் மன அழுத்தத்தால் அவதிப்படுவதைக் குறிப்பிடவில்லை என்றாலும், அவரது எதிர்பாராத பிரசாதம் மஹாராணியின்

இதயத்தை ஆழமாகத் தொட்டது. மஹாராணி பாபாவை, பெண்மணிகளுடன் தனது அரண்மனைக்கு வர விடுத்த அழைப்பை ஏற்று, அவர்கள் இரண்டு நாட்களுக்குப் பின்னர் அங்குச் சென்றனர்.

அடுத்த மூன்று நாட்களில், பாபா, பெண்மணிகளை அம்போலியில் பிரபலம் வாய்ந்த மஹாதேவ் கோட்டை (MAHDEV FORT), 'டெம்பிள் பாயிண்ட்' (TEMPLE POINT), பர்வதி & நட் பாயிண்ட்ஸ் (PARVATI & NUT POINTS) மற்றும் பிற சிறப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றார். ஒரு நாள், அவர்களின் பங்களாவின் வராண்டாவில் அமர்ந்து, அர்னவாஸ், நர்கிஸ், ஸில்லா, கேட்டி மற்றும் பலர் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த வேளையில், பாபா, எதிர்பாராத விதமாக அங்கு வந்து, அதைப் பார்த்து அதிருப்தி அடைந்தார், "**மக்கள் உங்களைப் பார்க்க நேர்ந்தால், மெஹர் பாபாவின் பக்தர்கள் நாள் முழுவதும் சீட்டு விளையாடுவதைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை என்று கூறுவார்கள்! இந்தப் புதிய நகரத்தில் நீங்கள் சீட்டு விளையாடுவதைப் பார்த்து, சாதாரண மக்கள் எத்தகைய மோசமான எண்ணத்தைக் கொண்டிருப்பார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்து பாருங்கள். உங்கள், 'கழுதை' தலைகளுக்குக் கொஞ்சமும் வெட்கமில்லையா? எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றாலும், விரும்பத்தகாத விளைவுகள் நேராதபடி, மிகச்சிறிய விஷயங்களையும் நான் கண்காணிக்க வேண்டியது அவசியம்.**"

எனவே, பெண்கள் சீட்டு விளையாடுவதை நிறுத்திவிட்டு, வராந்தாவில் அமர்ந்து மதிய உணவை உண்ண ஆரம்பித்தனர். மீண்டும், பாபா அங்கே வந்து உள்ளே செல்லுமாறு அறிவுறுத்தினார். "**மார்கரெட் இங்கிலாந்து திரும்பிச் சென்றதும் நடனமாடலாம், அர்னவாஸ் கூட மும்பைக்குத் சென்றதும் அவ்வாறு செய்யலாம். ஆனால் இங்கே ஆசிரமத்தில், நீங்கள் எனது விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட வேண்டும்**" என்று கூறி முடித்தார்.

காலம் இதை இப்படி விளக்குகிறது: "இதுபோன்ற சிறிய சம்பவங்களிலிருந்து, கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை, பாபா, தனது அன்பர்களுக்கு வலியுறுத்திக் கொண்டிருந்தார். அவர்களைக் கண்டிப்பதன் மூலம், பாபா, அவர்களுடைய அகந்தையைச் சிதறடித்து, அதன் மூலம் அவர்களின் ஆன்மீகப் பாதையின் சுமைகளை எளிதாக்கி, பாதையில் தடுமாறாமல் முன்னேறிச் செல்ல வழிவகுத்தார்."

ஸில்லாவின் பிறந்தநாள் 1940, ஏப்ரல் 20 அன்று புத்தம் புதிய மாம்பழ ஐஸ்கிரீமுடன், ஆனால் இந்த முறை பூண்டு சட்னி இல்லாமல், கொண்டாடப்பட்டது.

ஐரீன், எலிஸபெத் இருவரும் சில நாட்கள் உடல்நலமின்றி, சிகிச்சை பெற்றனர்.

ஏராளமான மாம்பழங்களைத் தவிர, அம்போலியில் ஏராளமான விஷ பாம்புகளும் இருந்தன; பாம்பு கடித்தால் மரணம் நிச்சயம் என்று கூறப்படுகிறது.

‘**எனவே விளக்கு இல்லாமல் இருட்டில் நகர வேண்டாம்**’ என்று பாபா அனைவருக்கும் கட்டளையிட்டார். ஒரு முறை கிட்டி, நதீன் இருவரும் கை விளக்குகளை மறந்து விட்டனர்; மறுநாள், பாபா அவர்களைக் கண்டித்தார், **“நீங்கள் ஏன் என் உத்தரவை மீறினீர்கள்? நான் ஒரு முட்டாள் என்று நினைக்கிறீர்களா?”**

“ஆனால் பாம்பு எங்களைக் கடித்திருந்தால், நாங்கள் உங்கள் முன்னிலையில் உயிரைத் துறந்திருப்போம்” என்று நதீன் நியாயப்படுத்த முயற்சித்தார்.

**“அது உங்களுக்கு எவ்வாறு பயனளித்திருக்கும்?”** என்று பாபா கேட்டார்.

“நாங்கள் உங்கள் ஆனந்தப் பெருங்கடலில் இணைந்திருப்போம்!”

**“நீரில் மூழ்குவதற்கு பதிலாக, நீங்கள் கரைக்குக் கொண்டுச் செல்லப் பட்டிருப்பீர்கள்! பெருங்கடலில் ஒன்றிணைவது கீழ்ப்படியாத ஒருவருக்கு அல்ல. அவை பழைய உலர்ந்த மரத்துண்டுகளைப் போலக் கடற்கரையில் தூக்கி எறியப்படுகின்றன, அங்கே அவர்கள் மாண்டு மடிகிறார்கள்! இத்தகைய மரணத்தில் என்ன லாபம் இருக்கிறது?**

பாபா தொடர்ந்து கூறினார், **“என்னுடன் இருக்கையில், ஒருவர் இறக்கும் போது வாழ வேண்டும், இதனால் நீங்கள் அத்தகைய இறப்பை சந்தித்த பிறகு, நித்தியமாக வாழ முடியும்; இதைப் புரிந்துகொண்டீர்களா?”**

ஆமாம் என்று நதீன் தலையசைத்தார்.

ஏப்ரல் 20 பிற்பகலில், அம்போலியை விட்டு வெளியேறிய பாபாவும் குழுவும் பெல்காவ்ம் நகரை நோக்கிப் பயணம் செய்து, மூன்று மணி நேரத்தில் வந்து சேர்ந்தனர். நகரிலிருந்து மூன்று மைல் தொலைவில் அமைந்த ஸாவந்த்வாடி (SAVANTWADI) மஹாராணியின் பங்களாவில் தங்கியிருந்தனர். டான், எலிஸபெத்தின் காரை ஓட்டிச் சென்றார்; எலிஸபெத், பாபா இருவரும் முன் இருக்கையில் அமர்ந்திருந்தனர்; எலிஸபெத்தின் உடல்நிலை இன்னும் சரியானபாடில்லை. பெல்காவ்மில், ஹல்தங்கர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து உதவினார், மேலும் இந்து, சுஷீலா இருவரும் தொடர்ந்து உணவு தயார் செய்தனர்.

ஏப்ரல் 22ஆம் நாள், மெஹர் பாபாவின் ஆன்மீக மையத்தை, பெல்காவ்மில் நிறுவுவதற்காக, தேர்வு செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட, பாபா, பெண் மண்டலியை அழைத்துச் சென்றார்; ஸாவந்த்வாடியின் மஹாராணி மீண்டும் பாபாவைப் பார்க்க வந்தார். மறுநாள் காலை 5:00 மணிக்குப் புறப்பட்டு மதிய வேளையில் ஸாக்கர்பா (SAKHARPA) வந்தடைந்தனர்.


அப்போது பெல்காவ்மிலிருந்து பாபாவிற்கு ஒரு கடிதம் வந்தது; அவருடைய ஆன்மீக மையத்திற்குப் பயன்படுத்தும் வகையில் வேறொரு சொத்து அவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்

பட்டிருந்தது. நோரினா, எலிஸபெத், டான் மூவரும் ஏப்ரல் 24ஆம் நாள் நிலத்தை ஆய்வு செய்வதற்காக, பெல்காவ்ம் நகருக்குத் சென்று, மறுநாள் திரும்பி வந்தனர். முழுச் சுற்றுப்பயணத்தின் போதும், இந்தியாவில் ஒரு பெரிய மையத்தை நிறுவுவதற்கான பல்வேறு திட்டங்களைப் பற்றி நோரினா பாபாவுடன் கலந்துரையாடினார்.

26ஆம் நாள், பாபாவும் குழுவும் தேநீர் கூட அருந்தாமல் அதிகாலையில் புறப்பட்டு, சிப்லூன் (CHIPLUN) குறுநகரைச் சென்றடைந்தனர். காளேமாமாவின் உறவினர் ஒருவர் வீட்டில் காலை சிற்றுண்டியை முடித்துவிட்டு, மாலை ஆறு மணிக்கு மஹாபலேஷ்வருக்கு (MAHABALESHWAR) வந்து, 'கிரான்வில்' (GRANVILE) ஹோட்டலில் தங்கினர். அடுத்த நாள் பாபா அவர்களை மலை உச்சிக்கு அழைத்துச் சென்று 'வில்சன் பாயின்ட்' (WILSON POINT), 'பாம்பே பாயின்ட்' (BOMBAY POINT) மற்றும் 'ஆர்தர் ஸீட்' (ARTHUR'S SEAT) ஆகியவற்றைப் பார்வையிட்டார்.

1940, ஏப்ரல் 28 அன்று அனைவரும் பஞ்ச்கணிக்குச் (PANCHGANI) சென்று 'பியுனா விஸ்டா' (BEUNA VISTA) ஹோட்டலில் தங்கினர். அன்று மாலை 4:00 மணிக்கு பாபா, பெண்களுடன் டைகர் வேலி குகைக்கு (TIGER VALLEY CAVE) நடந்து சென்று, அனைவரும் குகைக்குள் சில நிமிடங்கள் அமர்ந்திருந்தனர்.

ஸவக் கொத்வால் குடும்பத்தினர் பாபாவின் திட்டப்படி பஞ்ச்கணியில் தங்கியிருந்தனர், மேலும் பாபா, அவர்களை மெஹராபாத் சென்று அவரது வருகைக்காகக் காத்திருக்குமாறு அறிவுறுத்தினார்.



இறை போதையில் இருக்கும் மஸ்துகளுடன் மெஹர் பாபா, **1940**

**(**MEHER BABA WITH GOD-INTOXICATED MASTS - 1940**)**

# ஏகாந்தவாசம் - மெஹராபாத்

**(Seclusion at Meherabad)**

1940 ஏப்ரல் 29ஆம் நாள் காலையில் பஞ்ச்கணியிலிருந்து புறப்பட்டு, பாபாவும் குழுவும் மதியம் ஒரு மணிக்கு அஹமதுநகருக்கு வந்து அக்பர் அச்சகத்தில் ஓய்வெடுத்தனர். ஸட்டா, தமானியா குடும்பங்கள் பாபாவை நீண்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் சந்தித்த மகிழ்ச்சியில் இருந்தனர். அதே நாளில் மும்பையிலிருந்து சாஞ்சியும் வந்திணைந்தார்.

மதிய உணவிற்குப் பிறகு, பாபாவும் குழுவும் ஹேப்பி வேலிக்குச் சென்றனர், பெண்மணிகள் பயணிகள் விடுதியில் நான்கு நாட்கள் தங்கியிருக்க, பாபா, எட்டு பேர் அடங்கிய ஆண் மண்டலியுடன், மூன்று நபர்கள் தங்குவதற்கான தற்காலிக கூடாரம் ஒன்றை எழுப்பி, வெற்றுத் தரையில் தூங்க வேண்டியிருந்தது. சாஞ்சி நாட்குறிப்பில் பதிவு செய்திருந்தபடி, 'ஹேப்பி வேலி'யில் அவர்கள் இருந்த நேரம் மிகவும் 'மகிழ்ச்சியற்றதாக' நிரூபிக்கப்பட்டது.

மெஹர் பாபாவின் ஆரம்பகால சீடர்களில் ஒருவரான புவாஸாஹேப் (BUASAHEB), அப்போது பூனாவில் வாழ்ந்து வந்தார். 1940, மே 1 அன்று அதிகாலையில், அவர் மோட்டார் சைக்கிளில் தோட்டத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளையில், கார் விபத்தில் சிக்கி, தலையில் ஏற்பட்ட காயத்தால் உடனடியாக உயிரிழந்தார். அப்போது அவருக்கு 48 வயது.

மெஹர் பாபா அன்று காலை டானுடன் குஷ்ரு குவாட்டர்ஸுக்கு வந்தார். பூனாவிலிருந்து ஆதி ஜூனியர் தொலைபேசி வழியாகத் தெரிவித்த செய்தியுடன் ஸரோஷ் விரைந்த வேளையில், பாபா, மெஹராபாத் சென்று கொண்டிருந்தார். புவாஸாஹேபைப் பற்றிய செய்தியைத் தெரிவித்ததும், பாபா எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல், பெங்களூரிலிருந்து வருவதற்கு முன்னர் அவர் கூறியதை அவர்களுக்கு நினைவுபடுத்தினார், "**போர் முடிவதற்கு முன்னர், என் அன்பான இரண்டு சீடர்கள் உயிரைத் துறப்பார்கள், ஓர் ஆண், பெண் அல்லது இரண்டும் ஆண்கள்**.

"**இரண்டாவது யார்?**" என அவர் லாவகமாகக் கேட்டார்.

டான், ஸரோஷ், சாஞ்சி, பைதூல் ஆகியோர் அன்று பிற்பகல் புவாஸாஹேபின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள, காரில் பூனாவிற்குச் சென்றனர். டான், பின்னர், இந்தச் செய்தியையும், மேலும் ஓர் ஆண் அல்லது பெண் - உயிரைத் துறக்கவிருக்கும் செய்தியை வழங்கவும் பெங்களூருக்கு அனுப்பப்பட்டார்.

பாபாவின் விருப்பத்திற்கிணங்க, அவரைப் பின்பற்றுபவர்களுக்கு, பின்வரும் அறிக்கை வெளியிடப்பட்டது:

**பாபாவுடனான புவாஸாஹேபின் ஆழ்ந்த ஆன்மீகத் தொடர்பை**

**நினைவுகூரும் வகையில், பாபா, மண்டலி அனைவரும் மே 8 அன்று 'முழு நாள் உபவாசம்' மேற்கொள்ளப் போவதாக அறிவிக்கப்பட்டது. அவர்கள் காலையில் தேநீர் மட்டும் அருந்தி, சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் உபவாசத்தை நிறைவு செய்வதாகத் திட்டம். தண்ணீர் மட்டும் அருந்தலாம்.**

அந்த நாளில் 100 ஏழைகளுக்கு மெஹர் பாபா தனது கைகளால் உணவளிப்பதாகவும் திட்டமிடப்பட்டது.

புவாஸாஹேப் (BEHRAMJI - பெஹராம்ஜி) 1914 முதல் மெஹர் பாபாவின் தொடர்பில் இருந்தார்; மெஹர் பாபா, மேர்வான்ஜி என்றழைக்கப்பட்ட காலத்தில் அவரிடமிருந்து பாரசீக மொழியைக் கற்று, பெஹராம்ஜி, பின்னர், பூனாவில் மதுபானக்கடையில் மேர்வானின் வணிக பங்காளராக இருந்தார். அவர் மன்ஸில்-இ-மீம் மற்றும் ஆரம்பகால மெஹராபாத் ஆண்டுகளில் பாபாவுடன் தங்கியிருந்தார். பாபா அவரைப் பற்றிய இந்தக் கருத்துக்களை மண்டலிக்கு வழங்கினார்:

**எனது நெருங்கிய மற்றும் அன்பான சீடர்களில் ஒருவர் (புவாஸாஹேப்) அவருக்குத் தெரியாமலேயே, உயிருடன் இருந்த காலத்தில் 'என்னுடன்' (இறைவனுடன் ஒன்றாக) ஒருவராக இருந்தார், இப்போது அவர் உடலைத் துறந்த பின்னர், என்னுடனான அந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஐக்கியத்தை உணர்வுபூர்வமாக அனுபவிக்கிறார்!**

புவாஸாஹேபின் மரணத்துடன், மெஹர் பாபாவின் சீடர்களுக்கும், பக்தர்களுக்கும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் அதிகாரப்பூர்வமான அறிக்கைகள் வழங்கும் நடைமுறை ஆரம்பமானது. 1940க்கு முன்பு, பாபாவின் உத்தரவுகளும், பல்வேறு செய்திகளும் கடிதங்கள் அல்லது தட்டச்சு செய்யப்பட்ட பிரதிகள் மூலமாக, அவரது அன்பர்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. ஆனால் புவாஸாஹேபின் மரணத்திற்குப் பின்னர், அவை அச்சிடப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் தெரிவிக்கப்பட்டன.

பாபாவும் குழுவும் 1940, மே 3 அன்று ஹேப்பி வேலியிலிருந்து மெஹராபாத்திற்கு வந்தனர். அவர்கள் முதலில் அஹமதுநகர் ஸரோஷ் சினிமாவில் 'தி விஸார்ட் ஆஃப் ஓஸ்' (THE WIZARD OF OZ) திரைப்படத்தைப் பார்க்கச் சென்றனர். அங்கு, திரையிடும் பணியாளராக இருந்த ருஸ்தம் காக்கா, நீண்ட காலத்திற்குப் பிறகு மெஹர் பாபாவின் தரிசனத்தைப் பெறும் வாய்ப்பைப் பெற்றார். ஸரோஷ், பாபா மற்றும் பெண்மணிகளுக்கு, பிரத்தியேகமாக ஒரு சிறப்பு பிற்பகல் காட்சியை ஏற்பாடு செய்திருந்தார், இதனால் அவர்கள் திரைப்படத்தைத் தனிப்பட்ட முறையில் பார்க்க முடிந்தது.

பாபா அன்று மதியம் மெஹராபாத் வந்தடைந்தார். பாபா இல்லாத பத்து மாதங்களுக்குப் பிறகு மெஹராபாத், மீண்டும் அதன் புகழ்பெற்ற, நிறைவான சூழ்நிலையைப் பிரதிபலித்தது. இப்போது, பெங்களூரிலிருந்து அனைத்து மஸ்துகள், விலங்குகள் மற்றும் மண்டலி (பைதூல், எரச், குஸ்தாஜி, ஹோமி, ஜங்க்ளே, காளேமாமா, பப்பா ஜெஸவாலா, பெண்டு, ஸெயிலர் மற்றும் விஷ்ணு)

அனைவரும் மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தனர். ஆண்கள் பெங்களூரிலிருந்து 25 மஸ்துகள் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், ஒரு வகை அழகிய கலைமான், ஒரு மயில், ஓர் ஆட்டுக்குட்டி, ஒரு வெள்ளை முயல், சில வாத்துக்கள், ஐந்து நாய்கள், மூன்று குரங்குகள் மற்றும் செல்லப் பறவைகளுடன் ரயிலில் பயணம் செய்தனர்.

அனைத்தும் - பெட்டிகள், பெரிய பொட்டலங்கள், மற்றும் சில தளபாடங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடத் தேவையில்லை - இரண்டு சிறப்பு ரயில் கார்களில் திணிக்கப்பட்டன.

இதர அன்பர்களைப் பொறுத்தவரை: ஆதி சீனியர், டாக்டர் கனி, நௌரோஜி, பாதிரி, மாஸாஜி, முரளி, சகன் (மற்றும் அவரது மனைவி ஷாந்தா), சிது (அவரது கர்ப்பிணி மனைவி ராதா மற்றும் அவர்களின் கால்-கை வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை) அனைவரும் பெங்களூரில் தங்கியிருந்தனர்; சுவாமிஜி மதராஸில் தனது வீட்டிற்குத் திரும்பிச் சென்றார்; டான், நீலு, காக்கா, ஜால்பாய், சாஞ்சி (அவ்வப்போது உடனிருந்தார்) ஆகியோர் பெங்களூரிலிருந்து பாபாவுடன் வந்தனர்.

ஏற்கனவே வெளியிட்ட அறிக்கைபடி, மே 8ஆம் நாள், பாபா, மெஹராபாத் மற்றும் பெங்களூரில் இருந்த ஆண், பெண் மண்டலி அனைவரும் உபவாசம் கடைப்பிடித்தனர், மேலும் பாபா ஏழைகளுக்கு உணவளித்து இனிப்புகளை வழங்கினார்.

அடுத்த நாள், பாபா இவ்வாறு கூறினார்: "**நான் பேசுவதற்கு முன்னர், இந்தியா முழுவதும் பன்னிரண்டு ஆன்மீக மையங்களைத் திறக்க விரும்புகிறேன். மெஹராபாத், நாசிக், டோக்கா, மதராஸ், பைரமங்களா மற்றும் மாண்ட்லா ஆகிய ஆறு இடங்களில் ஏற்கனவே மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.**

**"எஞ்சியுள்ள ஆறு மையங்கள், இந்தியாவைச் சுற்றியுள்ள வெவ்வேறு இடங்களில் இன்னும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளன. இது எனது கடைசி சுற்றுப்பயணத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.**"

பாபா மெஹராபாத் வந்ததும், ஆசிரமத்தில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதில் தீவிர கவனம் செலுத்தினார். 'ஆன்மீக உள்பணிகளுக்காக' ஜூன் 1 முதல் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாக, பாபா தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். இது, போரின் நிகழ்வுகளுடன் ஒத்துப்போனது. ஐரோப்பாவில் போர் குறித்த முன்னணி செய்தி வருத்தமளித்தது. 1940, மே 10 அன்று, ஜெர்மன் இராணுவத்தின் பேரளவிலான படைகள் நடுநிலை நாடுகளான பெல்ஜியம் (BELGIUM), லக்ஸம்பர்க் (LUXEMBOURG), ஹாலந்து (HOLLAND), ஃபிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்குள் நுழைந்து, ஒரே மாதத்திற்குள் அந்த நாடுகள் அனைத்தையும் தன்வசமாக்கியது.

மெஹர் பாபா, பெங்களூரில் பெரும்பாலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்ததால், பொதுமக்களுக்கும் இதர அன்பர்களுக்கும் நீண்ட காலமாக தரிசனம் கிடைக்கவில்லை. அவர் மெஹராபாத்திற்குத் திரும்பி வந்ததைக் கேள்விப்பட்ட அருகிலுள்ள அவரது அன்பர்கள், தரிசனத்திற்காக அனுமதி கோரி எழுதத் தொடங்கினர். எனவே பாபா, மே 15 அன்று முழுநாள் தரிசனத்தை வழங்கினார். மும்பையிலிருந்து, சாஞ்சி 35 அன்பர்களை அழைத்து வந்தார். கோடையின் கடுமையான வெப்பத்திலும் பாபா, அனைவரையும் தனித்தனியாக சந்தித்தார். பெண்மணிகள், மேல்மலையில் வாழும் பெண் மண்டலியுடன் தேநீருக்காக அழைத்துச் செல்லப்பட்டனர், பின்னர் அனைவரும் மாலை ஐந்து மணி ரயிலில் புறப்பட்டுச் சென்றனர்.

டாக்டர் தேஷ்முக் மே 16ஆம் நாள் நாக்பூரிலிருந்து வந்தார், பாபா அவரை இரண்டு வாரங்கள் மெஹராபாத்தில் தங்க அனுமதித்தார்; அதற்குப் பிறகு தேஷ்முக், இந்தியாவின் பல்வேறு பாகங்களில் பாபாவைப் பற்றிய உரை நிகழ்த்த ஒரு ‘விரிவுரை’ சுற்றுப்பயணத்தை (LECTURE TOUR) மேற்கொண்டார்.

ஒரு முறை, தேஷ்முக்குடன் உரையாடிக்கொண்டிருந்த போது, பாபா அவரது ஏகாந்தவாசம் மற்றும் போரைப் பற்றிக் குறிப்பிட்டார்:

**உலகத்திற்கான எனது ஆன்மீகப் பணிக்காக நான் ஏகாந்தவாசத்தில் ஓய்வு பெறுகிறேன். இது மிகவும் முக்கியமானது. போர் நிலவரங்களையும் விரிவாக்கத்தையும் துரிதப்படுத்த விரும்புகிறேன்.**

**இந்தப் போர், ஆச்சரியங்கள் மற்றும் எதிர்பாராத மாற்றங்களைக் கொண்டதாக இருக்கும். இது உலகின் வரைபடத்தை மாற்றும். பேரழிவை விளைவிக்கும் முடிவுகள், எதிர்பாராத விளைவுகள் மற்றும் முன்னேற்றங்கள், நிகழ்வுகளின் விரைவான திருப்பத்தைக் கொண்டு வரும். மறுசீரமைப்புக்கு அழிவு அவசியம். நன்மையை நிலைநாட்டுவதற்கு அனைத்து தீமைகளும் ஒழிக்கப்பட வேண்டும்.**

மே மாதம் முழுவதும் கிட்டத்தட்ட தொடர்ந்து, பல மண்டலி உறுப்பினர்கள் மற்றும் நெருங்கியவர்கள் வந்த வண்ணம் இருந்தனர். ஆதி சீனியர், ஃபாலுவுடன் மே மாத நடுப்பகுதியில் பெங்களூரிலிருந்து வந்தார், பின்னர், ஆதி சீனியர் மும்பை மற்றும் நாசிக் நகருக்கு அனுப்பப்பட்டார்; ராம்ஜூ, மானேக் ரஞ்சி இருவரும் நாசிக்கிலிருந்து வந்தனர்; காளேமாமா கோலாப்பூருக்கும் பின்பு பெங்களூருக்கும் அனுப்பப்பட்டார்; நௌரோஜியும் முரளியும் பைரமங்களாவிலிருந்து பாபாவுடன் கலந்துரையாட வந்திருந்தனர்; மும்பையிலிருந்து சாஞ்சி வந்திணைந்தார். ஸரோஷ், ரூஸி பாப் ஆகியோர் அஹமதுநகரிலிருந்து வந்த தினசரி பார்வையாளர்களாக இருந்தனர், மேலும் ஸட்டா குடும்பத்தினர் அவ்வப்போது வந்து சென்றனர்; ஜால்பாய், ஆதி ஜூனியர் பூனாவிலிருந்தும், டாக்கே ராஹூரியிலிருந்தும், கைக்கோபாத்

மும்பையிலிருந்தும் வந்தனர், மேலும் பல அன்பர்கள் வந்த வண்ணம் இருந்தனர்.

இந்த நேரத்தில் பாபா கடைப்பிடித்த நிகழ்வுகளின் அட்டவணை பின்வருமாறு (கோடை வெப்பநிலை 110 டிகிரியை எட்டியது): அவர் காலை 5:00 மணிக்கு எழுந்து, தனியார் கூட்டங்களை நடத்தி, மண்டலிக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். காலையில் அவர் மெஹராபாத் மேல்மலையில் அவரது எதிர்கால சமாதிக்கு வடக்குத் திசையில் அமைந்துள்ள மஸ்த் ஆசிரமத்தில் மேற்பார்வை சுற்றுகளை நடத்தினார்; முன்பு மகப்பேறு மருத்துவமனை மற்றும் மெஹர் பாபா ஜர்னலின் அலுவலகங்களாக இருந்த கட்டிடங்கள் மஸ்த் ஆசிரமமாகப் பயன்படுத்தப்பட்டது. பாபா காலை 7:00 முதல் 8:30 வரை மஸ்துகளை நீராட்டினார். பின்னர் அவர் கீழ் மெஹராபாத்தில் இருந்த மண்டலியை சந்திக்க வந்து, மதியம் வரை தனது குடிலில் தங்கியிருந்தார்; அவ்வேளையில் வெளியாட்களை சந்தித்து, அறிவுறுத்தல்களை வழங்கினார். பிற்பகலில் மஸ்த் ஆசிரமத்திற்கு அடிக்கடி வருகை தந்து, பாபா, பல்வேறு மஸ்துகளுடன் தனிமையில் அமர்ந்திருப்பதில் ஆர்வம் காட்டினார். அவர் மெஹரா மற்றும் இதர பெண்மணிகளையும் சந்தித்து, அவர்களுடன் அமர்ந்து அனைத்தையும் நிதானமாக விவாதித்தார்.

1931ஆம் ஆண்டு கெ.ஜெ. தஸ்தூர் ஆசிரமத்தை விட்டு வெளியேறிய நாள் முதல், அவர் பாபாவிடமிருந்து விலகி, பகிரங்கமாக அவருக்கு எதிராக, பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதினார். ஆயினும்கூட, அவர் தனிப்பட்ட முறையில் பாபாவிற்கு, கவலை தோய்ந்த வார்த்தைகளால் கடிதங்கள் (தற்கொலைக்கும் அச்சுறுத்தல் விடுத்து) எழுதினார். பண உதவி கேட்டு 'இன்னும் ஒரு முறை…' என்று மன்றாடினார். மண்டலிக்குத் திகைப்பூட்டும் விதத்தில் பாபா, அவருக்குப் பணம் அனுப்பி வைத்தார்; தஸ்தூரும் இயன்றவரையில் விரைவில் திருப்பித் தருவதாக வாக்குறுதியும் அளித்தார்.

ஆனால் 1940 ஏப்ரல் மாதத்தில், பாபா, தனது அன்பால் பலமுறை உதவி செய்தும், தஸ்தூர், அவருக்கு மீண்டும் கடன் வழங்கப்படாவிட்டால், பல ஆண்டுகளாக பாபா அவருக்கு அளித்த 'வாக்குறுதிகளை மீறியதற்காக' அவர் பாபா மீது 'சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கக் கட்டாயப்படுத்தப்படுவார், வழக்கு தாக்கல் செய்து, மெஹர் பாபாவின் பெயரை நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்வார்' என்றும் பாபாவிற்கு கடிதம் எழுதினார்.

அவரது சமீபத்திய அச்சுறுத்தல், மண்டலிக்கு, தஸ்தூர் வரம்பை மீறியதாகத் தோன்றியது; பெங்களூரில் இருந்த டாக்டர் கனி, பாபாவின் முழு ஒப்புதலுடன் ஒரு பொருத்தமான பதிலை எழுதினார். அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

'தெய்வீக மாட்சிமை மிக்கவர்' என்ற அடைமொழியின் ஆசிரியர், பயமுறுத்திப் பணம் பறிக்கும் அளவிற்குத் தரம் தாழ்ந்திருக்க முடியும் என்று யார் ஒருவரால் கற்பனை செய்திருக்க முடியும்? உங்களின் நொடிந்து போகும்

திவால் நிலை, கடன் சுமை, தப்பிக்கும் நோக்கத்தில் தற்கொலை அச்சுறுத்தல் ஆகியவற்றின் ஆற்றொணா கதை மற்றும் அவலநிலை, அதேபோல, பண உதவிக்காக நீங்கள் வெறித்தனமாக முறையிடுவது, நீங்கள் பாபாவை ஒரு ஏமாற்றுக்காரர், பொய், போலி என்று அழைத்த போதிலும், தொடர்ந்து உதவி செய்தது - இந்தக் காரணங்கள் அனைத்தும், மனித இயல்பைப் பற்றிக் கற்றறியும் திறமையான மாணவனுக்கு, மனிதனின் புலனறிவிற்கு அப்பாற்பட்ட உயரங்கள் மற்றும் அடிமட்ட வீழ்ச்சிகளை வெளிச்சமிட்டு வழிகாட்டும் ஆய்வுகளாக வழங்கப்படவேண்டும்... பிரபலமான 'ஸிக்மண்ட் ஃபிராய்ட்' & 'ஹேவ்லாக் எல்லிஸ்' (SIGMUND FREUD & HAVELOCK ELLIS) போன்ற நிபுணர்களுக்கும் கூட, இது விபரீத நரம்பியல் நோயின் பிரச்சினையாகத் தோன்றலாம்!

மெஹர் பாபாவின் பரிவான குணத்தால் அளித்த பண உதவி, உங்களின் அவசர முறையீடுகளுக்கு இணங்கி, அடிக்கடி உங்களுக்கு செய்த உதவிகளுக்கு உங்கள் கடிதங்களே சான்றாக இருக்கும் போது, நீங்கள் துரதிர்ஷ்டவசமாக இதை 'லஞ்சத்தொகையாகப் பார்க்கிறீர்கள்'. ஆனால் இதில் நீங்கள், பாபாவின் உண்மையான பெருந்தன்மை மற்றும் உள்ளார்ந்த மகத்துவத்தை மதிப்பிடுவதில் பரிதாபமாகத் தவறிவிட்டீர்கள்...

முழு உலகமும் கடவுளைப் பற்றிய வேதபூர்வமான அறிவைக் கொண்டுள்ளது, லட்சக்கணக்கானவர்கள் அவரை விரும்புகிறார்கள், ஆயிரக்கணக்கானவர்கள் அவருக்காக ஏங்குகிறார்கள், நூற்றுக்கணக்கானவர்கள் அவருக்காக உயிரைத் துறக்கின்றனர், சிலர் மட்டுமே அவரை அடைகின்றனர். மெஹர் பாபா போன்ற தெய்வீக ஆளுமைகளின் ஆன்மீக அருளுக்காகக் கையேந்தி, சேவை, சுய-அர்ப்பணிப்பு போன்றவற்றால் தூண்டப்பட வேண்டும். முகப் புகழ்ச்சி, போலி பாராட்டு அல்லது அச்சுறுத்தல்களால் அதை நிச்சயமாக அடைய முடியாது!

சட்டரீதியான அல்லது தொழில்நுட்ப முறையில் மெஹர் பாபாவிற்கு எதிராக உங்களிடம் எந்த வழக்கும் இல்லை. இது ஆன்மீகக் களத்தில், தங்களின் சொந்த தகுதியைப் பொருட்படுத்தாத பயந்தாங்கொள்ளிகள், புனிதர்களின் வாக்குறுதிகளைச் சட்டப்பூர்வமான ஒப்பந்தம் என்று கருதி, சூழ்நிலையின் முக்கியத்துவத்தை நிறைவேற்றாமல், 'கேளுங்கள் கிடைக்கும்' என்ற மனநிலையில் இருப்பவர்கள்.

தஸ்தூரின் நடவடிக்கைகள் அனைத்தும் மெஹர் பாபாவின் சாதுரியமான விளையாட்டின் ஓர் அங்கமாகும். தஸ்தூர் மெஹராபாத்தை விட்டுச் சென்ற பின்னரும், பணத்திற்காக, பாபாவிற்கு எழுதியதன் மூலம், அவர் பாபாவை நினைவு கூர்ந்தார். கடந்த ஒன்பது ஆண்டுகளாக அவரைத் தனது தொடர்பில் வைத்திருக்கும் பாபாவின் பணி இதுவாகும்.

ஸாக்கோரி ஆசிரமத்தை நிர்வகிப்பது குறித்து உபாஸனி மஹாராஜ், மெஹர் பாபாவிடம் பலமுறை கேட்டுக் கொண்டார்; இந்த நேரத்தில் அவர் மீண்டும் அதே வேண்டுகோளுடன் ஒரு தூதுவரை அனுப்பினார். **1940, மே 17**

அன்று, பாபா ஆதி சீனியரை, பின்வரும் செய்தியுடன் ஸாக்கோரியில் மஹாராஜை சந்திக்க அனுப்பி வைத்தார்:

**முதலாவதாக: ஸாக்கோரியில் அனைத்து இந்து சடங்கு சம்பிரதாயங்களையும், விழாக்களையும் நிறுத்துங்கள்;**

**இரண்டாவது: ஸாக்கோரியில் அமைந்த உபாஸனி நகரின் (அவரது ஆசிரமத்தின்) மதிப்பு ரூ 500,000க்கும் குறைவானது. இது பாபாவால் தவணை முறையில் உங்களுக்குச் செலுத்தப்படும்;**

**மூன்றாவது: மஹாராஜ் ஓர் அன்பளிப்புப் பத்திரத்தைச் செயல்படுத்துவார்; முழுத் தொகையும் ஒப்படைக்கப்படும் வேளையில், அவர் பத்திரத்தை, பாபாவிற்கு வழங்க வேண்டும்.**

அதன்படி, ஆதி சீனியர் ஸாக்கோரிக்குச் சென்று உபாஸனி மஹாராஜிடம் செய்தியை வழங்கினார். ஆதி திரும்பி வந்து பாபாவிற்கு மஹாராஜின் பதிலைத் தெரியப்படுத்தினார். அடுத்த நாள், பாபா மீண்டும் கீழ்வரும் செய்தியுடன் ஆதியை, ஸாக்கோரிக்கு அனுப்பி வைத்தார்:

1) **1940 ஆகஸ்ட் 1 அன்று ரூ 50,000 உங்களுக்கு ரொக்கமாக வழங்கப்படும், மேலும் உபாஸனி நகரில் நடவடிக்கைகள் (திட்டபடி) பாபாவால் திருப்திகரமாக நடத்தப்பட்டால் எஞ்சியுள்ள தொகை நான்கு மாதங்களுக்குப் பிறகு செலுத்தப்படும்.**
2) **நான்கு மாதங்களுக்குப் பிறகு பாபா ரூ 450,000 செலுத்தத் தவறினால், பாபா ஏற்கனவே மஹாராஜுக்கு வழங்கிய ரூ 50 ஆயிரத்தை அவர் இழந்து விடுவார்.**
3) **உபாஸனி நகரில் விவகாரங்கள் பாபாவின் திருப்திக்குரியதாக இல்லாவிட்டால், உபாஸனி மஹாராஜ் ரூ 50,000த்தைத் திருப்பித் தர வேண்டும்.**
4) **உபாஸனி நகரை மூன்று காரணங்களுக்காகப் பொறுப்பேற்க பாபா ஒப்புக் கொண்டார்: ஆசிரமத்தை நடத்தும் பொறுப்பிலிருந்து மஹாராஜை விடுவிப்பது. அங்குள்ள இந்து சடங்கு சம்பிரதாய பழக்கவழக்கங்களை ஒழிப்பதன் மூலம் அனைத்து மதங்களிலும் ஒற்றுமையைக் கொண்டுவருவது. மஹாராஜின் 'தேவ-தாசி' திருமணங்களின் காரணமாக மஹாராஜின் பெயருடன் தொடர்புடைய களங்கத்தை அகற்றுவது; இதனால் பாபாவை, மஹாராஜின் சீடராகத் தொடர்பு படுத்தி, சாதகமற்ற முறையில் படமிட்டுக் காட்டுவதைத் தவிர்ப்பது..**

ஆதி, ஸாக்கோரிக்குச் சென்று இந்த செய்தியை வழங்கினார்; திரும்பி வந்ததும் மஹாராஜின் பதிலை பாபாவிற்குத் தெரிவித்தார். பாபா, ஆதியை பெங்களூருக்குத் திருப்பி அனுப்பி, பின்னர் இந்தக் குறிப்புகளை ஸாக்கோரியில் மஹாராஜுடன் தங்கியிருந்த குல்மாய்க்கு அனுப்பி வைத்தார்.

மஹாராஜ் தனது எல்லா நிபந்தனைகளுக்கும் ஒப்புக் கொண்டார் என்பதை அறிந்து பாபா மகிழ்ச்சியடைந்தார், எடுத்துக்காட்டாக, இந்து மத

பழக்கவழக்கங்களைத் தகர்த்தெறிவதோடு, திருமணமாகாத இளம் பெண்களுடன் அவர் திருமணம் செய்வதை நிறுத்த வேண்டும்.

பாபா ரூ 500,000 செலுத்தத் தயாராக உள்ளார், ஆனால் அவர் தனது வெவ்வேறு ஆசிரமங்களின் பல்வேறு செலவுகளையும், தனது பக்தர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பராமரிப்பதற்கான எல்லா தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். அவர் இப்போது மொத்த தொகையை ஒரேயடியாகச் செலுத்தாமல் ஆறு மாதங்களுக்குள் கொடுக்கவிருந்தார். அந்தத் தொகையை முழுவதுமாகச் செலுத்தும் நேரத்தில், உபாஸனி நகரின் பொறுப்பை மெஹர் பாபா ஏற்றுக்கொள்வார், நிச்சயமாக அதைச் செலுத்துவேன் என்று கூறுகிறார்!

இவ்வாறு, இரு குருநாதர்களுக்கிடையே இத்தகைய விசித்திரமான பரிமாற்றங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் அவ்வப்போது நிகழும். அத்தகைய நாடகத்தில் பங்கெடுப்பது அவர்களின் தெய்வீக நகைச்சுவை. 1936இல் ராஹூரி மஸ்த் ஆசிரமத்தில் இருந்த வேளையில், மஹாராஜ் ஸாக்கோரியில் உள்ள தனது ஆசிரமத்தைத் தன்வசப்படுத்திப் பராமரிக்குமாறு பாபாவிற்குச் செய்தி அனுப்பியிருந்தார். மஹாராஜ், ராஹூரி ஆசிரமத்தில் தங்கி, ஸாக்கோரியில் நிலவும் இந்து மத சூழ்நிலையை ஒரு முடிவிற்கு கொண்டுவர வேண்டும் என்று பாபா பதிலளித்தார்.

இந்தத் தகவல் பரிமாற்றத்தின் பின்னால் ஒரு திட்டவட்டமான உள் நோக்கம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை; ஆனால் அது சாதாரண மக்களின் வரையறுக்கப்பட்ட புரிந்துகொள்ளும் தன்மைக்கு அப்பாற்பட்டது. மஹாராஜ் அவரது உடலைத் துறந்த பின்னர், பாபா, உபாஸனி நகரின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் மறைமுகமான திட்டம் இருந்ததாகக் கருதலாம்.

1941 மே 18 அன்று, உபாஸனி மஹாராஜின் தலைமை சீடர்களில் ஒருவரான யஷ்வந்த் ராவ், பாபாவை சந்திக்க ஸாக்கோரியிலிருந்து வந்தார். அதே நாளில் டாக்கே, காடேக்கர், காக் ஸாஹேப் ஆகியோரும் ரூஸி பாப்பின் மகன் ஆஸ்பியுடன் அவரை சந்திக்க வந்திருந்தனர்; அன்று, டாக்டர் சிவராவ் பெங்களூரிலிருந்து மெஹராபாத்தில் தங்கும் திட்டத்தில் வந்தார். முதலில் பாபா அவரை ஒரு வருடம் தங்குமாறு கூறினார்; அவர் விரும்பியதை அடைய, அவர் தனது குடும்பம் மற்றும் உலகத்துடனான அனைத்து உறவுகளையும் துண்டித்து, உபவாசமும், ஏகாந்தவாசமும் மேற்கொள்ளுமாறு அவருக்குத் தெரிவித்தார். ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, பாபா அவரை காளேமாமாவுடன் பெங்களூருக்குத் திருப்பி அனுப்பினார்.

உபாஸனி மஹாராஜின் 70ஆவது பிறந்தநாள் 1940ஆம் ஆண்டில் மெஹராபாத்தில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் இம்முறை, மெஹர் பாபாவால் கொண்டாடப்பட்டது. இரவும் பகலும், மஹாராஜின் பிறந்தநாளை சிறப்பிக்கும் விதத்தில், ஒரு வாரத்திற்கு முன்பு, கிராமத்திலுள்ள விட்டோபா

(VITHOBA - கிருஷ்ணா) கோவிலில் கடவுளின் நாமத்தை அரன்காவ்ம் கிராம மக்கள் உச்சரித்தனர். மே 23 வியாழக்கிழமை மஹாராஜின் பிறந்தநாள் மிகவும் சிறப்பாக மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. மெஹர் பாபா மண்டலி மூலமாக அண்டை கிராம மக்களுக்கு விருந்து ஏற்பாடு செய்தார்.

சில நாட்களுக்கு முன்னர், 20ஆம் தேதி, "**மே 27 அன்று நான் இறந்துவிடுவேன்**" என்று பாபா, புலனாகாத முறையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் பாபா அன்று உடல்நிலை சரியில்லாமல் இருந்தார்: "**இன்று, பெல்ஜியம் மன்னர் லியோபோல்ட் (LEOPOLD), ஜெர்மன் படைகளிடம் சரணடைந்துள்ளார். அவர் ஒரு முட்டாள்! இவ்வாறு சரணடைவதன் மூலம் சுயமரியாதை அனைத்தையும் இழந்தது மட்டுமல்லாமல், பதிலாக அவர் ஜெர்மனியிடமிருந்து தனக்கென எதையும் பெறவில்லை.**

"**அடுத்த இரண்டு மாதங்கள் நட்பு நாடுகளுக்கு நெருக்கடியான காலமாக இருக்கும். ஒவ்வொருவரும், நேச நாடுகள் இந்தப் போரில் அனைத்தையும் இழந்துவிடுவார்கள் என்று கூறுவர். ஆகஸ்ட் மாதத்தில், நிலைமை தலைகீழாக மாறி, நட்பு நாடுகளுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகும். ஆனால் அது 'தப்பிப் பிழைத்தோம்' என்ற இக்கட்டான கட்டத்திலிருந்து மீண்டு வரும். ஆகஸ்ட் மாதத்தில், நான் பெர்சியா வழியாக ரஷ்யாவிற்குச் செல்லலாம்.**"

பாதிரி மே 29 அன்று மெஹராபாத் வந்து ஜூன் 8ஆம் நாள் பைரமங்களாவிற்குத் திரும்பிச் சென்றார். மே 30 அன்று ஹோமி பட்டேனாவும் (HOMI BHATENA) பாபாவைப் பார்க்க வந்து, பின்பு மும்பைக்குத் திரும்பினார்.

மே 31 அன்று எரச் அவரது குடும்பத்தினருடன் பெங்களூருக்குப் புறப்பட்டு, அங்கு அவர்கள் ஏற்கனவே வாடகைக்கு எடுத்திருந்த வீட்டில் வசித்து வந்தனர். பெங்களூரில், சாஞ்சி விட்டுச்சென்ற நாட்குறிப்புகள் மற்றும் கடிதங்கள் அனைத்தையும் ஒழுங்கமைக்கும் பணியில் ஆதி சீனியர் மும்முரமாக இருந்தார்; அவை சாஞ்சியின் பெட்டிகளில் தாறுமாறாக இருந்தன; இதில் எரச், ஆதி சீனியருக்கு உதவியாக இருந்தார். இவ்வேளையில் பப்பா ஜெஸவாலா ஆசிரமம் ஒன்றை நிறுவுவதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடுவதற்காக, கார்வாருக்கு அனுப்பப்பட்டார்.

ஏற்கனவே அறிவித்தபடி, 1940 ஜூன் 1ஆம் நாள் மெஹராபாத் மேல்மலையில் அமைந்த மஸ்த் ஆசிரமத்தில் பாபா ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார். அன்றிலிருந்து பாபா, மஸ்துகளுடன் மட்டுமே இருந்தார். மெஹராபாத் திரும்பிவந்த நாளிலிருந்து பாபா அவர்களுடன் தொடர்ந்து பணிபுரிந்தாலும், இப்போது அவரது பணி மேலும் தீவிரமடைந்தது. (பாபா, இந்த ஏகாந்தவாசத்தில் மஸ்துகளுடன் மேற்கொள்ளும் பணி '**ஒரு சிறப்பு உந்துதலைப் பெறுகிறது**' என்று சுட்டிக்காட்டினார்).



**மஸ்துகளுக்கு உணவூட்டுதல் (**FEEDING MASTS**)**

ராவ்ஸாஹேப் ஒரு நண்பருடன் ஜூன் 1ஆம் நாள் வந்தார், ஆனால் பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக அவர்களுக்கு தரிசனம் அனுமதிக்கப்படவில்லை. ஒருவேளை பாபா அவரை அழைக்கக்கூடும் என்று பெண்டு அறிவுறுத்திய போதிலும், வந்தவர்கள் ஸரோஷுடன் மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் புறப்பட்டுச் சென்ற அடுத்த நிமிடம், பாபா, ராவ்ஸாஹேப், பெண்டு, பைதூல் ஆகியோரை அழைத்தார்; ராவ்ஸாஹேபிற்கு சில முக்கியமான வேலைகளை வழங்க விரும்புவதாக, பாபா குறிப்பிட்டார், ஆனால் அவர் ஏற்கனவே சென்றுவிட்டார்.

எரச் மஸ்த் ஆசிரமத்தின் மேலாளராக இருந்தார். பப்பா கார்வாரில் இருந்து திரும்பி வந்ததும், எரச் குடும்பத்துடன் பெங்களூரில் இருந்த வேளையில், பப்பா, மெஹராபாத் மஸ்த் ஆசிரமத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். பெங்களூரிலிருந்து அழைத்து வரப்பட்ட ஐந்து சிறுவர்களும் (கிருஷ்ணா, வெங்கோபா ராவ், ராஜு, கலப்பா, அம்டு) குஸ்தாஜி, ஸவக் கொத்வால் ஆகியோருடன் மஸ்த் ஆசிரமத்தில் பணிபுரிந்தனர்.

ஏகாந்தவாசத்தின் போது, பாபாவின் கால அட்டவணை இவ்வாறு இருந்தது: காலை விழித்தெழல் 5:00 மணிக்கு, தேநீர் 7:00 மணி, மதிய உணவு, தேநீர் மீண்டும் பிற்பகல் 4:00 மணிக்கு; இரவு உணவு இல்லை. விஷ்ணு காலை 7:30, மீண்டும் பிற்பகல் 3:00 மணிக்கு அஞ்சலுடன் வரும் வேளையில், பாபா, கடிதப் பரிமாற்றத்திற்கான பணியை முடித்துவிடுவது வழக்கம். மஸ்துகளுடனான பாபாவின் பணி காலையில் அவர் எழுந்ததும் தொடங்கி, இரவு தாமதமாக நிறைவுறும். ஒவ்வொரு நாளும், பாபா, பல்வேறு மஸ்துகளுடன், முதன்மையாக சட்டி பாபா, ஃபூல்வாலா, ஷரியத் கான், முஹமது, ராம்ஷிஷ் (RAMSHISH - பெங்களூரிலிருந்து அழைத்துவரப்பட்ட மற்றொரு மஸ்த்) மற்றும் பிறரை நீராட்டி, உடை அணிவித்து, உணவளித்து, சவரம் செய்வதில் நெடு நேரம் செலவிட்டார், மேலும் அவர்களுடன் தனித்தனியாகப் பணியாற்றி வந்தார்.

1940, ஜூன் 3 திங்களன்று பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இந்த இரண்டு மாத சிறப்பு ஏகாந்தவாசம், எனது குறிப்பிடத்தக்க உலகளாவிய பணிக்காகவும், போர் தொடர்பான விஷயங்களை விரைவு படுத்துவதற்காகவும் என பாபா குறிப்பிட்டார்.**

**ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் இந்தக் காலகட்டத்தில், பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பின்பு, வழக்கத்திற்கு மாறான திடுக்கிடும் மாற்றங்கள் போர் சூழ்நிலையில் உருவாகும். ஒன்றன் பின் ஒன்றாக, 32 நாடுகள் இறுதியில் இத்தாலி, அமெரிக்கா உட்பட இதர நாடுகளும் இதில் ஈடுபடும்.**

**சூழ்நிலைகள் மிகவும் கடுமையானதாக இருக்கும், மூச்சுத் திணறி திண்டாடும் நிலை ஏற்படும்! திடீரென, எதிர்பாராத சம்பவங்கள் நிகழும், இது**

**திருப்புமுனையாக அமையும். மேலோங்கி நின்றவர்கள் கடைசியில் அடக்கப்பட்டு, தூக்கி எறியப்படுவார்கள்; இந்தக் காலகட்டத்தில், கழுத்து நெரிக்கப்பட்டு, மூச்சுத் திணறலில் சிக்கித் தவித்த அனைத்து மக்களும், உலகில் வாழும் கோடிக்கணக்கான பிற மக்களுடன் சேர்ந்து, நிம்மதியாகப் பெருமூச்சு விடுவார்கள்!**

அதே நாளின் பிற்பகுதியில், பாபா பின்வரும் செய்தியை வழங்கினார்:

**நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் இந்தப் பத்து நாட்களில், போர் நீடிக்கும் காலத்தையும், அது எப்போது நிறைவுறும் என்பதையும் நிச்சயமாகத் தீர்மானிப்பேன்.**

**நான் பேசுவதற்கும், சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் முன்னர், இந்தியா நூறு சதவிகிதம் ஈடுபடும் உண்மையான உலகப் போர் உருவாகும்; முஹமதிய ஆட்சியின் கீழ் ஈரான், ஆஃப்கானிஸ்தான், துருக்கி, எகிப்து போன்ற நாடுகளும் இதில் இணையும். இத்தாலி, ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகள் மிகவும் சுறுசுறுப்பாக இதில் அங்கம் வகிக்கும்.**

**மேற்கூறிய முறையில் இந்தப் போர் நீடித்தால், நான் ஆகஸ்ட் 1941இல் பேசுவேன். அப்படியானால், ஒரு வருடம் - ஆகஸ்ட் 1940 முதல் ஆகஸ்ட் 1941 வரை - எனது ஆண், பெண் மண்டலியுடன், ரஷ்யா - இந்தியா நாடுகளின் எல்லைப் பகுதி, அல்லது கடலுக்கு குறுக்கே அமைந்த ஒரு தீவில் சென்று தங்குவேன். போர் நீடிக்கவில்லை என்றால், எல்லைக்குச் செல்ல வேண்டுமா அல்லது வேறு எங்காவது செல்லலாமா என்பதையும் நான் தீர்மானிப்பேன்.**

**நான், எனது மௌனத்தைக் கலைத்து, பேசுவது பெரும்பாலும் உலகப் போர் மற்றும் அமைதியுடன் தொடர்புடையது. அமைதி என்பது தற்காலிக போர் நிறுத்த உடன்பாடு என்று அர்த்தமல்ல. தற்காலிக போர் நிறுத்தம் நடந்தாக வேண்டும் என்ற அவசியம் எதுவும் இல்லை. இத்தகைய தற்காலிக போர் நிறுத்தம் என்னைப் பேச வைக்காது.**

**போர் முடிவடைவதற்கு முன்னர், அமைதி உதயமாகும் கட்டத்தில், அதாவது நிரந்தர அமைதிக்கு சற்று முன்பு நான் பேசுவேன்.**

பல வாரங்களாக, சட்டி பாபா தனது உதவியாளரான கிருஷ்ணாவிடம், ஐரோப்பிய மக்கள் பயங்கர துன்பங்களுக்கு ஆளாகி வருவதாகக் கூறி வந்தார். பாபா ஒவ்வொரு நாளும் 150 முதல் 200 வாளி தண்ணீரால் இந்த மஸ்தை நீராட்டினார். வாளிக்குப் பின் வாளியாக இந்த நீராட்டலை முடிக்க பல மணி நேரம் பிடித்தது. நீராடி முடித்த அடுத்த கணமே சட்டி பாபா, தரையில் அமர்ந்து, கைகளால் மண்ணை அள்ளி தலையில் இறைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். இந்தத் தேவையை எளிதாக்கும் விதத்தில் ஒவ்வொரு நாளும் பதினைந்து கூடைகளில் மண்ணை நிரப்பி, சட்டி பாபாவின் அறையில் வைக்குமாறு, பாபா, கிருஷ்ணாவிற்கு அறிவுறுத்தினார்.

ஒரு நாள் அவர் தலை மீது மண்ணை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தபோது, சட்டி பாபா, கிருஷ்ணாவிடம் வருத்தத்துடன் குறிப்பிட்டார், “உலகில் வேதனை, வறுமை, துன்பம் மிகையாக இருக்கும், மேலும் பலர் பட்டினியால் மாண்டுவிடுவார்கள், ஆனால் இறுதியில், பாபா, உலகின் துன்பங்களைத் தணித்துவிடுவார்.”

சட்டி பாபா மேலும் மேலும் அமைதியற்றவராகக் காணப்பட்டார். 1940, ஜூன் 5ஆம் நாள் இரவு ஒரு மணியளவில், அவர் திடீரென ஒரு கை விளக்கை ஏந்தி, பாபாவின் அறைக்கு விரைந்து சென்று, “எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!” என்று கூச்சலிட்டு உரக்கக் கத்தியதும், இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த ஸவக், என்ன நடந்தது என்று அவரிடம் கேட்டார்; அவர் “எதுவும் இல்லை” என்று பதிலளித்தார்.

அடுத்த நாள் காலையில் மஸ்த் (சட்டி பாபா) தனது அறையை, தானே சுத்தம் செய்தார்; இதற்கு முன்னர் அவர் இவ்வாறு செய்ததில்லை.

மீண்டும், 6ஆம் நாள் மதியம், பாபாவின் அறைக்குள் நுழைந்த மஸ்த், வாசலுக்கு அருகில் நின்று, வெளியேற விரும்புவதாகக் கூறி “நான் மைசூர் செல்ல வேண்டும், இல்லையேல் நான் எனது கிராமத்திற்குச் திரும்பிச் செல்வேன்” என்றார்.

பாபா அவரிடம், “**இங்கே உங்களுக்கு என்ன பிரச்சினை?**” என்று கேட்டார்.

“எனக்கு இங்கே எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆனால் நான் சென்றாக வேண்டும்” என்று மஸ்த் பதிலளித்தார். எனவே பாபா மண்டலியிடம், அவரை, காம்பவுண்டிலிருந்து வெளியே நடக்க அழைத்துச் செல்லும்படி கட்டளையிட்டார். அவரை வெளியே அழைத்துச் சென்றபோது, அவர் பெண்கள் தங்கியிருக்கும் பக்கம் நடக்க விரும்பினார். மண்டலி அவரை அங்கிருந்து அழைத்துச் செல்ல முயன்றும், மஸ்த் பிடிவாதமாக இருந்தார். இறுதியில், ‘காரில் சட்டி பாபா அவரது கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்’ என்று பாபா கூறச் சொன்னார். புன்னகைத்து, அவர் காரில் ஏறியதும் கிராமத்திற்கு அழைத்துச் செல்வதற்கு பதிலாக அவரது அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சட்டி பாபா அன்று மாலை எட்டு மணி வரை மிகவும் அமைதியற்றவராகத் தோன்றினார், அடிக்கடி கதவைத் திறந்து மூடினார். 8ஆம் நாள் காலையில், அவர் தனது அறையில் தன்னைப் பூட்டிக் கொண்டார், நீராட அழைத்தாலும் வெளியே வர மறுத்தார்.

ஆனால் ஜூன் 9ஆம் நாள் நடந்த மிக முக்கியமான சம்பவம் - அன்றிரவு, மஸ்த் திடீரென, மிகத் தீவிரமாக, கட்டுமீறிய முறையில், கூச்சலிட்டு, தனது சிறிய அறையை விட்டு வெளியேறி நேரடியாக, பாபாவின் அறைக்குச் சென்றார். அங்கு அவர் பாபாவிடம், “என் வீடு முற்றிலுமாக அழிந்துவிட்டது! தீப்பிடித்து எரிந்துவிட்டது! நான் உங்களிடம் அடைக்கலம் நாடி வந்துள்ளேன்!” என்று முறையிட்டார்.

பாபா உடனே மண்டலியிடம், அவர்களைத் தனியாக விட்டுவிட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார்; இருவரும் பாபாவின் அறைக்குள் சென்று கதவை மூடினர். சட்டி பாபா, பாபாவிடம் சில மணி நேரம் படபடப்புடன் ஏங்கித் தவிப்பது போலப் பேசியதை மண்டலி கேட்க முடிந்தது, பின்னர் அமைதி நிலவியது. அவர் பாபாவுடன் அந்த இரவைக் கழித்தார்.

அடுத்த நாள், ஜூன் 10, பாபா, ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வந்து, மஸ்துகள் செயல்படும் முறையைப் பற்றி விளக்கினார்:

**"சட்டி பாபாவிற்கு ஃபிரான்ஸ் நாட்டுடன் ஆன்மீகத் தொடர்பு உள்ளது. இந்த நாட்களில் ஃபிரான்ஸில் நிகழும் பேரழிவு, கொந்தளிப்புக் காரணமாக அவர் விரக்தியில் ஆழ்ந்துள்ளார்."**

அன்று பாபா, பெண்மணிகளைப் பார்க்கச் சென்ற வேளையில் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: **"இத்தாலி போரில் இணைந்தால், உலகப் போர் தீவிரமடையும்! நான் விரும்பியபடியே பேரழிவும் குழப்பமும் நிலவும். பின்பு மக்கள் உலகின் பொய்மை, வஞ்சகம் மற்றும் வெறுமைத் தன்மையை உணர்ந்து இறைவனை நாடுவார்கள். நான் இந்தியாவில் இருப்பதால், இந்தியாவும் பெரும் பாதிப்பை சந்திக்கும்."**

**அந்த நாளின் பிற்பகுதியில், உலகை ஆச்சரியப்படுத்தும் விதத்தில், இங்கிலாந்து மற்றும் ஃபிரான்ஸ் மீது போர் தொடுப்பதாக இத்தாலி அறிவித்தது. அடுத்த நாள், 1940, 11 ஜூன் அன்று, பாபா, இந்தச் செய்தியைக் கேட்டபோது பெண்களிடம் இவ்வாறு கூறினார், "இப்போது, துருக்கியும் போரில் இணைய வேண்டும், அப்போது நான் திட்டமிட்டபடி அனைத்தும் நிகழும். எனவே, துருக்கி போரில் இணைந்தால், ரவை (இனிப்பு பண்டம்) தயார் செய்துக் கொண்டாடுங்கள்.**

**"இதுபோன்ற ஒரு போர் நடந்ததில்லை; ஒருபோதும் நடக்கவும் செய்யாது! ஆனால் இது முடிந்ததும், 400 ஆண்டுகாலம் அமைதி நிலவும்.**

**"இந்தப் பேரளவிலான அழிவிலிருந்து நான், மிக்க மகிழ்ச்சியும், சிறப்பும் மிக்க புதுவாழ்வை இப்போது உருவாக்குவேன். இந்தப் போரில் உயிரைத் துறக்கும் அனைவரும் மீண்டும் மனித உருவில் பிறந்து இந்த அமைதியை அனுபவிப்பார்கள்."**

ஒரு வருட காலம் தங்குவதற்கு சாத்தியமான ஏழு இடங்களை - மெஹராபாத், பர்மா, அஸ்ஸாம், நேபாளம், டச்சு வெஸ்ட் இண்டீஸ் (DUTCH WEST INDIES - NETHERLANDS - நெதர்லாந்து தீவுகள்), அல்லது ஸியாம் - SIAM (தாய்லாந்து) - பற்றி விவாதித்தப் பின்பு, பாபா பெண் மண்டலியிடம், **"25 நாட்களில் மெஹராபாத்தை விட்டு வெளியேறத் தயாராக இருங்கள்"** என்று கூறினார்.

1940 ஜூன் முதல் வாரத்தில், மெஹர் பாபாவின் ஏகாந்தவாசம் நேரடியாக இரண்டாம் உலகப் போருடன் ஒத்திருந்து முன்னேற்றங்களை தீவிரப்படுத்தியது. பெல்ஜியம், ஜெர்மன் படைகளால் கைப்பற்றப்பட்டு சரணடைந்தது. ஜெர்மனிய படைகள் ஃபிரான்ஸ் நாட்டை ஆக்கிரமிக்கத்

தொடங்கினர், மேலும் 300,000 நேச நாட்டு துருப்புக்கள் டன்கிர்க் (DUNKIRK) நகரிலிருந்து வெளியேற்றப்பட்டனர். பாபா, ஏகாந்தவாசம் தொடங்கிய ஐந்து நாட்களுக்குப் பிறகு, ஹிட்லர் தனது எதிரிகள் அனைவருக்கும் எதிராகப் பேரழிவை ஏற்படுத்தும் போரை அறிவித்தார். இத்தாலியில் முஸோலினி போர் முரசைக் கொட்டினார். இங்கிலாந்து (அமெரிக்கா இன்னும் நடுநிலையாக இருந்ததால் இப்போது தனித்து நின்று) லிபியா மற்றும் இத்தாலிய கிழக்கு ஆஃபிரிக்காவில் குண்டுவீச்சைத் தொடங்கியது. இதற்கு பதிலடிக் கொடுக்கும் விதமாக, மால்டா (MALTA) மற்றும் அலெக்ஸாண்ட்ரியா (ALEXANDRIA) இத்தாலியால் குண்டுவீச்சுக்கு உள்ளானது; அப்போது லண்டனிலிருந்து குழந்தைகள் வெளியேற்றப் பட்டனர். பாரிஸ் நகரம் ஜூன் 14 அன்று ஜெர்மனியால் கைப்பற்றப்பட்டது; ரஷ்யர்கள், லாட்வியா (LATVIA), எஸ்டோனியா (ESTONIA), லிதுவேனியா (LITHUANIA) போன்ற நாடுகளை ஆக்கிரமித்தனர்.

பாபா தனது ஏகாந்தவாசத்தில் இருந்துகொண்டு நிகழ்வலைகளை கவனித்து வந்தார். ஒவ்வொரு நாளும் அவருக்கு, செய்தித்தாள் அறிக்கைகளை மண்டலி சத்தமாக வாசித்தனர், மேலும் நிகழ்வுகளின் முன்னேற்றத்தைப் பட்டியலிட அவர் ஒரு பூகோள வரைப்படத்தை, தனது அருகிலேயே வைத்திருந்தார்.

ஒரு நாள் பாபா, ஐந்து பெங்களூர் சிறுவர்களையும் அழைத்து ஒவ்வொருவரிடமும், "**உங்களுக்கு என்ன வேண்டும்? வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்?**" என்று கேட்டார்.

"நான் ஒரு விவசாயியாக இருக்க விரும்புகிறேன்" என்றார் ராஜு.

"நான் சமையல் எண்ணெய் விற்க விரும்புகிறேன்" என்று கலப்பா பதிலளித்தார்.

"நான் ஒரு குதிரைவண்டி ஓட்ட விரும்புகிறேன்" என்று அம்டூ கூறினார்.

"நான் வியாபாரம் செய்ய விரும்புகிறேன்" என்று வெங்கோபா ராவ் பதிலளித்தார்.

கிருஷ்ணா மட்டும், "நான் உங்களை விரும்புகிறேன், பாபா!" என்றார்.

"**நான் உங்களுக்கு, பாபாவைத் தருவேன்!**" என்று சைகையால் தெரிவித்து, பாபா அவரை அன்புடன் நோக்கினார்.

பின்பு பாபா வெங்கோபாவிடம், "**நீங்கள் ஒரு தொழிலதிபராக மாறுவதற்கு முன்பு சிறிது காலம் காத்திருங்கள்**" என்று தெரிவித்தார்.

பாபா, கிருஷ்ணா, வெங்கோபா இருவரையும் மெஹராபாத்தில் உடனிருக்கச் செய்து, இதர மூன்று சிறுவர்களையும் அவர்களின் விருப்பத்திற்கேற்ப வீட்டிற்குத் திருப்பி அனுப்பினார். காலப்போக்கில் சிறுவர்கள் மூவரும் அவரவர் தொழில்களில் முன்னேறி செல்வந்தர்களாயினர்.

பாபா, கிருஷ்ணாவைக் கேலி செய்தார், "**நீங்கள் படுகுழியில் விழுந்து விட்டீர்கள்! இப்போது சிக்கலில் மாட்டிக்கொள்வீர்கள்.**"

ஃபூல்வாலா, ராம்ஷிஷ் (மஸ்துகள்) ஆகியோரை தங்கள் கிராமங்களுக்கும், சிறுவர்கள் கலப்பா, அம்டு, ராஜு மூவரையும் தத்தமது இல்லங்களுக்கும் அழைத்துச் செல்ல பப்பா ஜெஸவாலா நியமிக்கப்பட்டார்.

கிருஷ்ணாவிடம் பாபா கூறிய கருத்து, சில நாட்களில் ஓர் அர்த்தத்தை நிரூபித்தது. ஏற்கனவே குறிப்பிட்டபடி, மெஹர் பாபா அடிக்கடி மஸ்துகளின் கழிவறைகளை சுத்தம் செய்தார்.

இரும்புத் தொட்டிகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் அனைத்தும், சிறிது தொலைவில் அமைந்த ஆழமான கழிவு நீர்ப்போக்குக் குழியில் கொட்டப்பட்டன. ஒரு நாள் கடும் மழை பெய்து, குழி, தண்ணீரால் நிரம்பியது. கயிற்றில் கட்டப்பட்ட வாளியைக் கொண்டு குழியிலிருந்து தண்ணீரை இறைக்கும்படி, பப்பா, கிருஷ்ணாவிடம் கூறினார். அதை சுத்தம் செய்யும் வேளையில், கிருஷ்ணா குழிக்குள் தவறி விழுந்தார். அவரை வெளியே இழுக்குமாறு வெங்கோபா ராவிற்குக் குரல்கொடுத்தார். பாபா அருகில் வந்து கிருஷ்ணா அசுத்தத்தால் நிரம்பியிருப்பதைக் கண்டார். "**நீங்கள் ஏன் குழியை சுத்தம் செய்தீர்கள்?**" அவர் கேட்டார். அதைச் செய்யும்படி பப்பா சொன்னதாக, கிருஷ்ணா கூறினார்.

பாபா சீற்றமடைந்து பப்பாவிடம் "**என் அனுமதியின்றி அந்தக் குழியை சுத்தம் செய்ய ஏன் கூறினீர்கள்?**" என்று கேட்டார். அதைத் தொடர்ந்து, பாபா கிருஷ்ணாவிடம் பதினாறு முறை நீராட உத்தரவிட்டார்! பதினாறு சிறிய கற்களை அவரிடம் கொடுத்து, எண்ணிக்கையில் தவறிழைக்காமல் அவற்றை ஒவ்வொன்றாகக் கணக்கிடக் கூறினார். பாபா அறிவுறுத்தியபடி செய்தபின், கிருஷ்ணா, பாபாவிடம் தனது தோல் மிகவும் இறுக்கமாக உணர்ந்ததாக கூறினார். பாபா பெண்கள் அறைக்குச் சென்று அவரது உடலில் தடவ சிறிதளவு எண்ணெய் எடுத்து வந்தார்.

மெஹர் பாபா, கிருஷ்ணாவிடம், "**குழியை சுத்தம் செய்யும் போது நீங்கள் மோசமாக உணர்ந்தீர்களா?**" என்று கேட்டதற்கு அவர், "இல்லை" என பதிலளித்தார்.

பாபா, எழுத்துப்பலகையில் உச்சரித்தார், "**நீங்களே, அசுத்தத்தால் நிரம்பி உள்ளீர்கள். அதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? நீங்கள் ஏன் இத்தகைய அசுத்தத்தில் வாழ்கிறீர்கள்? நீங்கள் அசுத்தமாக உணரவில்லையா? உங்கள் தலை முதல் கால் வரை மறைத்திருக்கும் ஆசைகளை அசுத்தமாக உணர்ந்து, இன்று நீங்கள் அந்தக் குழியை சுத்தம் செய்ததைப் போல் அவற்றை சுத்தம் செய்யத் தொடங்குங்கள்.**"

மெஹராபாத்தில், இந்தக் காலகட்டத்தில், பாபா, பெண்மணிகளிடம், "**ஒரு நாள் நான் உங்களை, படைப்பு ஆரம்பமான இடத்திற்கு அழைத்துச் செல்வேன்**" என்று கருத்துத் தெரிவித்தார். இது 'ஜாவா' (JAVA) எனும் இடத்தில் இருப்பதாக, பாபா சுட்டிக்காட்டினார்.

ஆனால், காலம் குறிப்பிட்டது போல, “பாபாவின் கருத்திற்கு இன்னுமோர் அர்த்தமும் இருந்திருக்க முடியும்: படைப்பு தொடங்கிய இடத்திற்குச் செல்வது என்பது படைப்பின் முழுப் பயணத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பதைக் குறிப்பதாகவும் இருக்கும்!”

அவர் கூறியதன் அர்த்தம் என்னவாக இருந்தாலும், விரைவில், பாபா அங்கு அலுவலகம் ஒன்றைத் திறக்க, சாஞ்சியை மும்பைக்கு அனுப்பினார். சாஞ்சி வந்ததும், ஜாவா (JAVA), சுமத்ரா (SUMATRA), பாலி (BALI), காஷ்மீர், ஈரான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகள் பற்றிய தகவல்களை சேகரிக்க பாபா அவருக்கு அறிவுறுத்தினார். இந்த நாடுகளுக்குச் செல்ல, பாஸ்போர்ட்டுகள் இல்லாத மண்டலிக்கு விண்ணப்பங்களைத் தயார் செய்யுமாறு சாஞ்சியிடம் தெரிவிக்கப்பட்டது.

1940, ஜூன் 13ஆம் நாள் மதியம், பாபா, செல்லும் இடத்தை இரகசியமாக வைத்து, மண்டலியுடன் மெஹராபாத்திலிருந்து புறப்பட்டு ரயிலில் சென்றார். அவர் வடக்கு நோக்கிச் செல்வதாக அனைவரும் நினைத்தனர்; அவருடன் சென்ற மண்டலி (குஸ்தாஜி, பெண்டு, காக்கா மற்றும் ஸவக்) அவர்கள் மெஹராபாத்தை விட்டு வெளியேறும் வரை, அவர்களுக்கும் இது ஓர் இரகசியமாகவே இருந்தது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவர்கள் கொல்கத்தா (KOLKATA) நகரைச் சென்றடைந்து, ‘பிராட்வே’ (BROADWAY) ஹோட்டலில் தங்கினர்.

கொல்கத்தாவில், குதிரை வண்டிக்காரர் ஒருவர், காக்காவை இரண்டு (மஸ்துகள்) மேல்நிலை ஆத்மாக்களிடம் அழைத்துச் சென்ற பின்பு, காக்கா, பாபாவை அவர்களிடம் அழைத்துச் சென்றார். அவர்களில் ஒருவர், பாபாவால் ‘கரீம் பாபா’ (KARIM BABA) என்றழைக்கப்பட்ட ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மஸ்த். பாபா அவருக்கு உணவூட்டி, சிகரெட்டையும் புகைக்கக் கொடுத்தார்; பாபா, புறப்படுவதற்கு முன்னர் அவரை நான்கு அல்லது ஐந்து முறை சந்தித்தார். **“இந்த மஸ்த் கொல்கத்தாவின் ஆன்மீகப் பொறுப்பாளர்”** என்று பாபா மண்டலிக்கு வெளிப்படுத்தினார். பாபா மேலும் கூறினார்: **“ஜாவாவில் வாழும் ஒரு குறிப்பிட்ட யோகிக்கு, கரீம் பாபாவுடன் தொடர்பு உள்ளது, மேலும் இந்த ‘இணைப்பை’ வலுப்படுத்த, என்னுடைய கொல்கத்தா பயணம் முடிந்ததும், இப்போது அல்லது அதற்குப் பின்னர் அங்குச் செல்ல விரும்புகிறேன்.”**

கொல்கத்தாவில் மெஹர் பாபா மேற்கொண்ட மற்றொரு மஸ்த் தொடர்பு, புனித அந்தோணி (ST. ANTHONI) பள்ளிக்கு எதிரே, நடைபாதையில் அமர்ந்திருந்த ஆன்மீக மேல்நிலையை அடைந்த, ‘அரைகுறை பார்வையுடைய’ மஸ்தானி ஆவார். முதல் சந்திப்பின் போது, பாபா, மஸ்தானியின் கால்களைக் கழுவி, அவருக்கு ஒரு புதிய புடவையும், குடையையும் கொடுத்தார். அடுத்த சில நாட்களில் பாபா மீண்டும் மஸ்தானியைத் தொடர்பு கொண்டு அவருடைய கால்களை அழுத்திவிட்டார்.

கொல்கத்தாவில் ஒரு சில மஸ்துகளைத் தொடர்பு கொண்ட பிறகு, பாபா ஜூன் 18ஆம் நாள் ராஞ்சிக்கு விரைந்தார். அவர், 'பிரின்ஸ் விக்டர் பங்களா'வில் (PRINCE VICTOR BANGALOW) ஒரு நாள் இருந்து, பெண்கள் தங்குவதற்குப் பொருத்தமான ஓரிடத்தை ஏற்பாடு செய்தார். தொடர்ந்து பாபா, பெண்டு, காக்கா இருவருடன் ரயிலில் புறப்பட்டு ஜூன் 22ஆம் நாள் மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தார். குஸ்தாஜி, ஸவக் ஆகியோரை ராஞ்சியில் உபவாசம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்திச் சென்றார்.

ஸரோஷ் அன்று காலையில் அஹமதுநகர் ரயில் நிலையத்தில் பாபாவை சந்தித்து, மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்வதாகத் திட்டம்; ஆனால் காலதாமதமானதால், அவர் பூனாவிலிருந்து சரியான நேரத்திற்கு வரமுடியாத சூழ்நிலை. பாபா, மண்டலியுடன் குதிரை வண்டியில் சவாரி செய்தது, அவருடைய ஏகாந்தவாசத்திற்கு இடையூறு விளைவித்தது; மேலும் அவர் ரயில் நிலையத்தில் பரிச்சயமான நபர்களால் அடையாளம் கண்டுகொள்ளக் கூடும் என்ற எண்ணத்தில் கோபமாக இருந்தார்.

1940, ஜூன் 21ஆம் நாள், பாபா பின்வரும் செய்தியை எழுத்துப்பலகை மூலமாகத் தெரிவித்தார்:

**தற்போதைய உலக குழப்பங்களும் உலகளாவிய துன்பங்களும், குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நிறைந்த, பிரபஞ்சத்தின் ஆன்மீக மேம்பாட்டிற்கும், ஒரு புதிய உலகை உருவாக்குவதற்கும் முற்றிலும் அவசியமானவை; அதில் அமைதி, அன்பு மற்றும் தெய்வீக லட்சியங்கள் மேலோங்கி நிற்கும். எனவே இந்தப் பிரகாசமான எதிர்காலத்தின் உறுதிப்பாட்டை மனதில் கொண்டு, எவரும் பயத்தில் திகைத்துப் போக வேண்டாம். யதார்த்தத்தின் ஆன்மீகக் குறியீட்டிலிருந்து பார்த்தால், இங்கும், எங்கும் வழக்கமாகிவிட்ட, கொல்லப்பட்டவர் - கொலையாளி, போர் - அமைதி, வெற்றி - தோல்வி போன்ற வார்த்தைகளுக்கு எந்த அர்த்தமும் இல்லை, ஏனெனில் பல்வேறு வடிவங்கள் மற்றும் இருமைத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட இந்த உலகத்திற்கு நிலையான வாழ்வு என்று ஒன்று இல்லை; அனைத்தும் கற்பனை கனவுகள்; மேலும், தற்போதைய உலகளாவிய குழப்ப நிலை, உலகளவில் பதற்றமூட்டும் இந்தக் கனவு, பிரபஞ்சத்தின் உண்மையான விழிப்புணர்விற்கு மிகவும் இன்றியமையாதது.**

**உடல் வடிவங்களும் மனங்களும் எண்ணற்றவை, எல்லையற்றவை, ஆனால் ஆத்மாக்கள் அனைத்தும் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை நித்தியமாக இருக்கும் ஒன்றே ஒன்று. உண்மையில், ஓர் அளவிறுதியற்ற 'மெய்மை', 'உண்மைப்பொருள்' ஒன்றுதான் உள்ளது, அதுவே கடவுள். ஆகவே, தற்போதைய வெளிப்படையான உலகப் பேரழிவு, தெய்வீக விருப்பத்தால் நிகழ்வதால், எதிர்காலத்தில் ஒரு தெய்வீக வெளிப்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது; இந்தத் தெய்வீக வெளிப்பாடாகிய அன்பு மற்றும் உண்மையான அமைதி, இதில் நான் மிகப் பெரிய பங்கை வகிக்க வேண்டும்; இந்தப் பணியில் எனது ஆண், பெண் சீடர்களும் அவர்களுக்கான**

**குறிப்பிடத்தக்க பங்கை வகித்து, எனக்கு உதவ வேண்டுமென நான் விரும்புகிறேன்.**

**எனது தற்போதைய உலகளாவிய சுமையைப் பகிர்ந்து கொள்ளவும், எனது ஆன்மீகப் பணியில் எனக்கு உதவவும் தயாராக உள்ளவர்கள், எனது பின்வரும் உத்தரவை, முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும்:**

**தெய்வ சித்தத்தில், நடக்க வேண்டியவை நடக்கின்றன, நடக்கும், நடந்துகொண்டே இருக்கும்; ஆகவே, போர் இப்போது முடிவுறுமா அல்லது அடுத்த வருடம் முடிவிற்கு வருமா? இப்போது சமாதானம் நிலவுமா அல்லது அடுத்த ஆண்டுவரை இப்படித்தான் இருக்குமா? இப்படி, போர் அல்லது சமாதானத்தைப் பற்றிய எந்த சிந்தனையும் மனதில் இல்லாமல், 1940, ஆகஸ்ட் 1ஆம் நாள் முதல் 1941 ஜூலை 31 வரை, மிக உன்னதமான சுய தியாகத்தைச் செய்யத் தயாராக இருந்து, நீங்கள் இங்கே அல்லது எங்கே என நான் கூறுவதை கேட்டுக்கொண்டு அங்கேயே இருக்க வேண்டும்.**

**நான் நிச்சயமாக 1941, ஆகஸ்ட் 1 அன்று பேசுவேன். இது 'தெய்வீக வார்த்தை'யாக இருக்கும், நான் பேசும் அந்த 'முதல் வார்த்தை' நலிந்து போன இந்த உலகத்தை உயிர்த்தெழச் செய்யும்.**

**இது எனது சீடர்களுக்கு, போர், அமைதி மற்றும் என்னுடைய வெளிப்பாடு குறித்த இறுதி செய்தியாகும்.**

ஜூன் 22ஆம் நாள், பாபா மெஹராபாத் திரும்பியபோது, சுமார் 240 நெருங்கிய அன்பர்களுக்கு இந்தச் செய்தி அனுப்பப்பட்டது; பாபாவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற அவர்கள் தயாரா இல்லையா என்று பதிலளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். பின்னர் அனுப்பப்படும் இந்த அறிவுறுத்தல்களை ஒரு வருடம் கடைப்பிடிக்க வேண்டும்.

மெஹராபாத்தில், பாபா மீண்டும் மேல்மலையில் அமைந்த மஸ்த் ஆசிரமத்தில் பணிபுரியத் தொடங்கினார். மும்பையிலிருந்து சாஞ்சி திரும்ப அழைக்கப்பட்டார், அவர் ஜூன் 23 அன்று மெஹராபாத் வந்தார். மண்டலி ராஞ்சி செல்வதற்கு, ரயிலில் மூன்றாம் வகுப்பில் முன்பதிவு செய்யுமாறு அவரிடம் கூறப்பட்டது. அதற்கிணங்க, சாஞ்சி பயணத்திற்காக இரண்டு பெட்டிகளை (இரயில் கார்கள்) முன்பதிவு செய்தார். அன்று ஆதி சீனியர் பெங்களூரிலிருந்து வந்து பாபாவை மறுநாள் சந்தித்து, பெங்களூருக்கு திரும்பிச் சென்றார். டானும் ஜூன் 26 அன்று மெஹராபாத்திற்கு அழைக்கப்பட்டார். சகன், 28ஆம் தேதி சுவாமிஜியுடன் வர தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. டாக்டர் கனி 'மெஹர் பாபா ஜர்னல்' (MEHER BABA JOURNAL) அலுவலகத்தை நடத்தி, மேலும் பன்னிரண்டு மாதங்கள் பெங்களூரில் தங்கியிருக்க அறிவுறுத்தப்பட்டது.

ஜூன் 29 அன்று, பாபா, பெண்களுக்கு அறிவித்தார்:

**1940, ஆகஸ்ட் 1 முதல், உலகம் முழுவதும் 'இறுதி தீர்ப்பு நாள்' தொடங்கும். அடுத்த ஒரு வருடம் உலகின் எந்தப் பகுதியிலும், ஒரு கண நேரமேனும் மக்கள் பாதுகாப்பாக உணர மாட்டார்கள். உலகம் முழுவதும்**

**பூகம்பங்கள், வெள்ளம், பஞ்சம் மற்றும் புதிய நோய்கள் உருவாகும். வெள்ளம், பஞ்சம், கொள்ளைத் தொற்று நோய் போன்றவற்றால் கொல்லப்படுபவர்களுடன் ஒப்பிடும்போது போரில் உயிர் துறப்பவர்கள் மிகக்குறைவு. பெர்சியாவில் ஒரே ஆண்டில் பல லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்ததைப் போன்ற ஒரு பயங்கரமான பஞ்சம் நிலவும். இந்தப் பஞ்சத்தால் பாதி உலகம் பாதிக்கப்படும். மக்கள் போர், வெற்றி, தோல்வி அனைத்தையும் மறந்து விடுவார்கள்.**

**உணவறையில் மண்டலியுடன் தேநீர் அருந்தும் வேளையில், பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு மண்டலிக்குக் கூறியது எனக்கு நினைவிருக்கிறது. இந்தப் போர், எப்போது, எப்படி நடக்கும் என்று அவர்களிடம் சொன்னேன். இது முழுமையான அழிவைக் கொண்டுவரும். அமெரிக்கா எந்த விதத்திலும் குறைவான அளவில் பாதிக்கப்படுவதாக இருக்காது; அதன் முதுகெலும்பு ஒடிந்துவிடும்!**

ஜூன் 21ஆம் தேதி பாபாவின் செய்தியைப் பெற்றுக்கொண்ட 240 அன்பர்கள், ஆகஸ்ட் 1 தொடங்கி, ஒரு வருடம் அவரது அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற அவரது அழைப்புக்கு உறுதியுடன் பதிலளித்தனர். ஜூன் 30, ஞாயிற்றுக்கிழமை, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**நான் ராஞ்சி சென்றதும், ஜூலை மாதம், கையெழுத்திட்ட 240 பேருக்கும் தனித்தனியாக அறிவுறுத்தல்களை வழங்குவேன். அவரவர்க்கு இயன்றாற்போல முற்றிலுமாக எனக்குக் கீழ்ப்படியக் கையெழுத்திட்டவர்களுக்கு இது கடினமான சோதனையாக இருக்கும், மேலும் சிலருக்கு, தனிமுதன்மை வாய்ந்த சோதனை! இப்போது, இல்லை என்று சொல்பவர், எந்த வாதத்திற்கும் இடமில்லாமல், அவர்களின் எண்ணப்படி சுய நலனுக்காக என்னை விட்டுச் செல்கிறார். டிலியா, வில், மேரி இன்னும் சிலரும் பதிலளிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஆனால் எப்படி?**

**நானும் உடல் ரீதியாக மிகவும் பாதிக்கப்படுவேன். அது பயங்கரமான துன்பமாக இருக்கும். நான் உண்மையில் உடல் ரீதியாக இறந்துவிடுவது போலத்தான். எப்படி? இவை அனைத்தும் இயல்பாகவே உடல் ரீதியான துன்பங்களாக வரும். எனது ஏகாந்தவாசத்தின் மிக முக்கியமான மாதமாக டிசம்பர் இருக்கும்.**

பப்பா ஜெஸவாலா, எரச் இல்லாத நிலையில் மஸ்த் ஆசிரமத்தை நிர்வகித்து வந்தார். ஜூலை 2ஆம் நாள், பாபா, பெண் மற்றும் ஆண் மண்டலிக்குப் பொருத்தமான பங்களாவைக் கண்டுகொள்ள, பர்மாவின் ரங்கூனுக்கு பப்பாவை அனுப்பி வைத்தார்.

இந்தக் காலகட்டத்தில், ஸவக் கொத்வாலின் மகள்கள் நாஜூ, ஹில்லா ஆகியோர் ஸெக்கந்திராபாத்திற்கு, நாட்டின் மிகச்சிறந்த பெண்கள் பள்ளிகளில்

ஒன்றில், சாதாரணமாக நிஜாமின் குழந்தைகள் படிக்கும் பள்ளியில், படிக்க அனுப்பப்பட்டனர். பைதூலின் மகள் ஸர்வர், கெய்மாயுடன் பெங்களூருக்குச் சென்று பள்ளியில் பயின்று வந்தார். மூன்று சிறுமிகளுக்கான பள்ளிக் கட்டணம், மற்றும் இதர செலவுகள் பாபாவால் செலுத்தப்பட்டன. இதற்கிடையில் ஸொல்டூன், நர்கிஸ் கொத்வால், அவரது குழந்தை மகன் ஆதி, மற்றும் நர்கிஸின் அத்தை பானுபாய் ஆகியோர் பெண் மண்டலியுடன் தங்கினர்.




கரீம் பாபா, கல்கத்தா (KARIM BABA, CALCUTTA)

# ராஞ்சி பயணம்

**(Travel to Ranchi)**

1940, ஜூலை 3 அன்று, ஆண், பெண் மண்டலி, சட்டி பாபா, ஷரியத் கான் மற்றும் முஹமது ஆகிய மூன்று மஸ்துகளுடன் பாபா, ராஞ்சிக்கு ரயிலில் புறப்பட்டார்.

பாபாவுடன் பயணம் செய்த பெண்மணிகள்: மெஹரா, மணி, நாஜா, கோர்ஷெத், ஸூனாமாசி, கேட்டி, மன்ஸாரி, ஸொல்டூன், டவ்லா, வாலு, காக்குபாய், கர்மான்மாசி, எலிஸபெத், ஐரீன், கிட்டி, மார்கரெட், நதீன், நோரினா, ரானோ, நர்கிஸ், பானுபாய், குல்மாயின் மகள்கள் டாலி, பிரோஜா மற்றும் பல பெண் பணியாட்கள்.

பாபாவுடன் பயணித்த ஆண்கள்: பைதூல், காக்கா, விஷ்ணு, சாஞ்சி, நீலு, டான், கிருஷ்ணா மற்றும் வெங்கோபா ராவ். குஸ்தாஜி, ஸவக் ஆகியோர் ஏற்கனவே ராஞ்சியில் உபவாசம் கடைப்பிடித்து வந்தனர்.

இந்தக் குழு மாலை 7:30 மணிக்கு மன்மாட் ரயில் நிலையத்திலிருந்து வேறு ரயிலில் பயணம் செய்ய வேண்டியிருந்தது. பருவமழை காலம், அன்றிரவு மழை பெய்து கொண்டிருந்தது; பெரிய பருமனான பொருட்களை ரயிலுக்கு எடுத்துச் செல்வது சிரமமான பணியாதலால், பெண்டு ரயில் நிலையம் சென்று உதவினார்.

ராஞ்சிக்குச் செல்லும் ரயிலில், மெஹர் பாபா, இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: "**ஒவ்வொரு முறையும் நான் ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கு நகரும்போது ஏதோ ஒன்று நடக்கிறது. நாம் பெங்களூரிலிருந்து புறப்படும்போது, ஃபிரான்ஸ் நாடு ஒரு பிரச்சினையை சந்தித்தது; இப்போது நாம் மெஹராபாத்தை விட்டு வெளியேறியதால், பிரிட்டன் ஒரு மூலையில் தள்ளப்பட்டு இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொள்ளும்.**"

பாபாவும், குழுவும் ஜூலை 5ஆம் நாள் பிற்பகலில் சக்ரதார்பூரை (CHAKRADHARPUR) வந்தடைந்து, மூன்று பேருந்துகளில் ராஞ்சிக்குச் சென்றனர். மாலை எட்டு மணிக்கு, பேருந்திலிருந்து இறங்கும் வேளையில், சட்டி பாபா, தனியாக விலகிச் சென்று, நடக்க ஆரம்பித்தார். தங்குமிடமான 'கோல்கொத்தி'க்கு (GOLKOTHI) அவரை அழைத்துச் செல்ல மேற்கொண்ட கடுமையான முயற்சிகள் அனைத்தும் வீணாயிற்று. மணிக்கணக்கில் அவரை வற்புறுத்தி முயற்சித்த பின்னர் அவர் எழுந்து, பங்களாவின் பெண்மணிகள் தங்கும் பக்கம் உலாவத் தொடங்கினார். மிக்க சிரமத்துடன் அழைத்தும் அவரது அறைக்குச் செல்வதற்கு பதிலாக, ஆண் மண்டலியின் குடியிருப்புக்குச் சென்றார். பின்பு பாபா, ஆண்களை வெவ்வேறு பகுதிகளுக்கு மாற்றினார். மறுநாள், காக்கா அறையை ஒரு மூங்கில் திரையால் பிரித்து மறைத்தது, சட்டி பாபாவுடன் பாபா தனிமையில் பணியாற்ற வழிவகுத்தது. ஆனால் மஸ்த் அமைதியற்ற நிலையில் அறையில் தங்க மறுத்தார்.

அடுத்த நாள் மாலை, டான் வந்தபோது, சட்டி பாபாவின் கையைப் பற்றிக்கொண்டு, அவரது அறைக்கு அழைத்துச் செல்ல அனுமதித்தார்; அங்கு, பாபா அவருடன் தனது பணியைத் தொடர்ந்தார். (“**அவருடன் உங்களுக்கு ஆழமான தொடர்பு உள்ளது**,” என்று பாபா டானுக்குத் தெரிவித்தார்.) சில சந்தர்ப்பங்களில், பாபா, சட்டி பாபாவுடன் ஒரு நாளில் பல முறை பணிபுரிந்தார், சில இரவுகளிலும் பணியைத் தொடர்ந்தார்.

அவர்கள் கோல்கொத்தியில் குடியேறியதும், அனைவரும் நீராடினர். ஆனால் அடுத்த நாள், கிணறு முற்றிலும் வறண்டு இருப்பதைக் கண்டனர். அதில் இருந்தது மழை நீர் மட்டுமே; நிலத்தடி நீர் வளம் இல்லாத நிலையில் ஒரே நாளில் தண்ணீர் முற்றிலுமாகத் தீர்ந்து விட்டது. பாபாவுடன் சுமார் 40 நபர்கள், நீர் ஒரு பிரச்சினையாக மாறியது. அவர்கள் பக்கத்து கிணற்றிலிருந்து தண்ணீர் உணவு தயார் செய்யவும் அருந்தவும் ஏற்பாடு செய்தனர்.

ராஞ்சியில் உணவு பற்றிய விஷயம் விவாதிக்கப்பட்டபோது, பாபா கருத்தார்ந்த முறையில் விளக்கமளித்தார்:

**போர் தீவிரமடைந்து வரும் ஐரோப்பாவில், மக்களின் பரிதாப நிலையைப் பாருங்கள், குறிப்பாக அகதிகளை கவனத்தில் கொள்ளுங்கள் - வீடுகளை விட்டு வெளியேறி, கால்நடைகளைப் போல், ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்குத் துரத்தியடிக்கப்பட்டனர்; மரணத்தின் நிழலாகத் துரத்தும் வன்முறையால், வெற்றியைக் கைப்பற்றும் கூட்டத்திலிருந்து, தங்கள் உயிரைக் காப்பாற்ற மக்கள் ஓடி மறைந்தனர். அவர்கள் இருந்த நிலையில், உணவு, பானம் போன்ற வாழ்வின் இன்றியமையா தேவைகள் கூட இரண்டாம் பட்சமாகக் கருதப்பட்டன. அவர்கள் தங்கள் இல்லங்களை இழந்து, தலை மேல் கூரையும் இல்லாமல், திறந்த வீதிகளிலோ, வயல்வெளிகளிலோ தூக்கி எறியப்படுகிறார்கள், பட்டினியில் மடிகிறார்கள், உடலில் அணிந்துள்ள உடையைத் தவிர, உடலை மறைக்க துணிமணிகள் கூட இல்லை. அவர்களுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் மக்கள் மிகவும் நல்ல நிலையில் உள்ளனர்! ஒவ்வொரு நாளும் போரைப் பற்றிய பயங்கரமான செய்திகளும், அதனால் விளையும் பொருளாதார, பொது வர்த்தக மந்தநிலையும், உலகெங்கும் நிதி நெருக்கடிகளும் இருந்தபோதிலும், இந்தியாவில் மக்கள் விரும்பியபடி, நிதானமாக நகரலாம், பொழுதுபோக்குக்காக வெளியே செல்லலாம், திறந்த தோட்டங்களில் அல்லது கடற்கரையில், திரைப்படங்களுக்கு அல்லது இசை, நடன அரங்குகளுக்குச் செல்வதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கவும் முடிகிறது.**

**இந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திற்குப் பிறகு, நிலைமைகள் இன்னும் மோசமடையும். போர் ஒரு தீவிரமான திருப்பத்தை சந்திக்கும், சிக்கலானதாக மாறும்; மேலும், போர், தீப்பிழம்புகள் போல வெகுதூரம் பரவி, முழு மேற்கத்திய நாடுகளை மட்டுமின்றி, கிழக்கையும் உள்ளடக்கும். இதைத் தவிர, மக்கள் போர் மற்றும் அதன் விளைவாக வாழ்க்கையிலும், உடைமைகளிலும் ஏற்பட்ட பயங்கரமான அழிவு அனைத்தையும் மறந்து**

**விடுவார்கள், ஏனெனில் இதுவரை கண்டிராத அளவிற்கு மேலும் பேரழிவுகள் ஏற்படும், அவற்றின் அழிவுகரமான சக்தியில் அதிக கொந்தளிப்பு - தொற்று நோய், கொள்ளை நோய்கள், தீ, பஞ்சம், வெள்ளப்பெருக்கு, பூகம்பங்கள் - இவை அனைத்தும் இயந்திர துப்பாக்கிகள் மற்றும் குண்டுகளை விட அதிக அளவில் உயிர், உடமைகளை சேதப்படுத்தும். பின்னர், உள்நாட்டுப் போர்கள் உருவெடுத்து, பல்வேறு நாடுகளுக்கிடையேயான அரசியல் சூழ்நிலைகளை சிக்கலாக்கும்; மேலும் இது குழப்பத்தை உருவாக்கி எங்கும், எதிலும் முட்டுக்கட்டைகளை விளைவிக்கும்.**

**கோடீஸ்வரர்கள் கூட உணவின்றி பட்டினியில் வாடுவார்கள்! எங்கும் குழப்பநிலை உருவாகி அனைவரும் உதவியற்றவர்களாக இருப்பார்கள்.** 1940, ஜூலை 6ஆம் நாள், மும்பை, நாசிக், அஹமதுநகர், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வாழும் அவரது அன்பர்கள் 240 பேருக்கு 31 அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையை அனுப்ப உத்தரவிட்டார். ஒவ்வொரு தனிப்பட்ட நகலிலும், ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை, அவரவருக்குப் பொருத்தமான உத்தரவு எண்களை கோடிட்டுக் காட்டி, பாபா, கையெழுத்திட்டார்.

சிலருக்கு, அவரவர் விரும்பும், நிபந்தனைகளைத் தேர்ந்தெடுத்துப் பின்பற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

**1940 ஆகஸ்ட் 1 முதல் 1941 ஜூலை 31 வரை ஒரு வருடம், எவரும் பாபாவைப் பார்க்கவோ அல்லது அவருடன் தொடர்பு கொள்ளவோ கூடாது என்று அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. அவசர காலங்களில், தொலைத்தந்திகள் அனுமதிக்கப்படும்.**

அனைத்து பிரதிகளையும் தட்டச்சு செய்து, பாபா ஒவ்வொரு நபரின் உத்தரவு எண்களையும் குறிப்பிட்டு, அவற்றை அஞ்சல் செய்வதற்கு, பத்து நாட்கள் ஆனது. 31 உத்தரவுகள் பின்வருமாறு:

1. **எந்த முறையிலும் புகையிலை புகைப்பதில் ஈடுபட வேண்டாம்.**
2. **எந்த வகையான மதுபானங்களையும் அருந்த வேண்டாம்.**
3. **மாமிசம் உண்ண வேண்டாம்.**
4. **மீன் உண்ண வேண்டாம்.**
5. **முட்டை உண்ண வேண்டாம்.**
6. **உங்கள் அதிகாரபூர்வமான மனைவி அல்லது கணவருடன் கூட எந்தவொரு காம செயலிலும் ஈடுபடாதீர்கள்.**
7. **ஆண்களுக்கு** (குறிப்பாக) **- பின்வரும் சூழ்நிலைகளைத் தவிர, ஆறு வயதிற்கு மேற்பட்ட எந்தப் பெண்ணையும் தொடக்கூடாது** (காமம் **குறித்த எண்ணம் இல்லாமல்**):
    a. **உடல்நலமின்றி முற்றிலும் அவசியமான சூழ்நிலையில்.**
    b. **உடல்நலமற்றவர்களுக்கு சிகிச்சை அளிக்க முற்றிலும் அவசியமான சூழ்நிலையில்.**

c. ஒரு நோயாளியின் மருத்துவ பரிசோதனையின் போது முற்றிலும் அவசியமான தருணத்தில்.
d. மனநிலை பாதிக்கப்பட்டவர்களைக் கட்டுப்படுத்த, முற்றிலும் அவசியமான நேரத்தில்.
e. ஒரு பெண்ணின் உயிரையும் மானத்தையும் காப்பாற்றும் வேளையில் முற்றிலும் அவசியமாக இருக்கும்போது.
f. விபத்துக்களில் முதலுதவி அளிக்கும் தருணத்தில் முற்றிலும் அவசியமாக இருக்கும்போது.
g. முற்றிலும் அவசியமான தருணங்களில், உங்கள் வீட்டுக் கடமைகளைச் செய்வதில் உங்கள் சட்டபூர்வமான மனைவியை அப்பாவித்தனமாகவும் காம உணர்வு இல்லாமலும் தொடுவது.
h. முறையாகக் கைகுலுக்க முற்றிலும் தேவை எனும் போது.

8. பெண்மணிகளுக்கு (குறிப்பாக) - பின்வரும் சூழ்நிலைகளைத் தவிர, ஆறு வயதிற்கு மேற்பட்ட எந்த ஆணையும் தொடக்கூடாது (காம நினைவுகள் இல்லாத போதும் கூட): [மேலே குறிப்பிட்ட அனைத்தும் 'a' முதல் 'h' வரை. 'e' வரிசையில் - 'ஓர் ஆண்மகனின் வாழ்க்கை' என்று வாசிக்கவும். மற்றும் 'g' வரிசையில்- 'உங்கள் சட்டபூர்வமான கணவர்' என்று வாசிக்கவும்.]
9. பொய் பேசக் கூடாது.
10. திருடக் கூடாது.
11. பிறரை குறை கூறவோ, அவதூறாக அல்லது மோசமாகப் பேசவோ வேண்டாம்.
12. திரைப்படங்கள் பார்க்கச் செல்ல வேண்டாம்.
13. திரையரங்கம், பல்சுவை நிகழ்ச்சி, ஓபரா (OPERA) அல்லது கச்சேரிக்கும் செல்ல வேண்டாம்.
14. சர்க்கஸ் நிகழ்ச்சிகளுக்குச் செல்ல வேண்டாம்.
15. குதிரைப்பந்தயம் அல்லது எந்த விதமான பந்தயத்திலும் ஈடுபட வேண்டாம்.
16. பணத்தைத் தொட வேண்டாம்.
17. உங்கள் தொழில் சம்பந்தப்பட்ட செய்தித்தாள்கள், கடிதங்கள் மற்றும் முக்கியமான ஆவணங்களைத் தவிர, வேறு எந்த வகையான புத்தகங்கள், பத்திரிகைகள் அல்லது இலக்கியங்களைப் படிக்க வேண்டாம்.
18. முக்கியமான ஆவணங்களில் உங்கள் கையொப்பமிடுவதைத் தவிர, கையால் எழுதவோ அல்லது தட்டச்சு செய்யவோ வேண்டாம்.
19. நீங்கள் ஒரு வருடத்திற்கு, பின்வரும் முறையில் உபவாசம் மேற்கொள்ள வேண்டும்: திரவங்களை மட்டும் எடுத்துக்

கொள்ளுங்கள் (பால், தேநீர், காஃபி, இதர திரவ உணவுகள் மற்றும் தண்ணீர்).

20. நீங்கள் ஒரு வருடத்திற்கு பின்வரும் முறையில் உபவாசம் மேற்கொள்ள வேண்டும். 24 மணி நேரத்தில் இரண்டு முறை பால், தேநீர் அல்லது காஃபி, ஒரு முறை திட ஆகாரம், தேவையான அளவு தண்ணீர்.
21. நீங்கள் பின்வரும் முறையில், வாரத்தில் ஒரு நாள், ஒரு வருட காலத்திற்கு உண்ணாவிரதம் இருக்க வேண்டும்: ஒரு நாள் இரண்டு முறை (24 மணி நேரத்தில்) பால், தேநீர் அல்லது காஃபி, ஒரு முறை ஒரு திடமான உணவை எடுத்துக் கொள்ளுங்கள்; வேண்டிய அளவு நீர் பருகலாம்.
22. நீங்கள் ஒரு வருடம் மௌனம் கடைப்பிடிக்க வேண்டும்.
23. ஒவ்வொரு நாளும் உங்களுக்கு உகந்த வேளையில், நீங்கள் உருவமில்லா கடவுளைப் பற்றியோ அல்லது பாபாவை நினைவில் கொண்டு தியானிக்க வேண்டும்.
24. நீங்கள் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அல்லது பாபாவால் அறிவுறுத்தப்பட்ட எந்த இடத்திற்கும் கால்நடையாகப் பயணம் செல்ல வேண்டும்.
25. பாபாவால் குறிப்பிடப்பட்ட எந்தவொரு நபரின் அல்லது நபர்களின் முன்னால் நீங்கள் சாஷ்டாங்கமாக, சிரம் தாழ்த்தி வணங்க வேண்டும், அல்லது கால்களில் முத்தமிட வேண்டும்.
26. ஒரு வருட காலத்திற்கு, நீங்கள் உணவுக்காக யாசிக்க வேண்டும், உங்களுக்கு வழங்கப்படும் எந்தப் பணத்தையும் ஏற்கக்கூடாது.
27. நீங்கள் எந்த மதம் சம்பந்தப்பட்ட விழாவிலும் சடங்கிலும் பங்கேற்பதைத் தவிர்க்க வேண்டும்.
28. உங்கள் மதத்தின் வழக்க முறையிலான பிரார்த்தனைகளை நீங்கள் மனசாட்சியுடன் செய்ய வேண்டும்.
29. உடல் ரீதியாகத் துன்பப்படுபவர்களுக்கு, நீங்கள் தனிப்பட்ட, தன்னலமற்ற சேவையை வழங்க வேண்டும்.
30. நீங்கள் தற்காப்புக்காக அல்லது ‘வாழ்வா, சாவா’ என்ற சூழ்நிலையைத் தவிர்த்து, எவரையும் அடிக்கவோ, தாக்கவோ, எவருடனும் மோதவோ கூடாது.
31. பலவீனமானவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, நீங்கள் எவரையும் அடிக்கவோ, தாக்கவோ, எவருடனும் மோதவோ கூடாது.

இந்த உத்தரவுகளில் குறிப்பிட்ட எண்களை மட்டுமே கடைப்பிடிக்க ஒவ்வொரு நபருக்கும் அறிவுறுத்தப்பட்டது என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும். உதாரணமாக, ஒரு பெண்மணிக்கு, பாபாவால் 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 20, 23 (ஒவ்வொரு நாளும், அரை மணி நேர தியானம்), 27, 28

(ஒவ்வொரு நாளும், கடவுளின் பெயரை அரை மணி நேரம் மீண்டும் மீண்டும் உச்சரிப்பது), 30, 31. இதே முறையில், பாபா தனது அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வருடம் பின்பற்ற வேண்டிய கட்டளைகளை அறிவுறுத்தினார். ஒரு சிலரைப் பொறுத்தவரை, அவர்களின் விருப்பத்திற்கு விட்டுவிட்டார்.

பாபாவின் அறிவுறுத்தல்களின் விளக்கங்களும் அஞ்சல் செய்யப்பட்டன:

1. **2 முதல் 5 வரையிலான எண்களைப் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டவர்கள், எந்த சூழ்நிலையிலும் நோய்வாய்ப்பட்டால் கூட, போதைப்பொருள், மாமிசம், மீன், முட்டை போன்றவற்றை உண்ணக் கூடாது என்ற உத்தரவுகளைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.**
2. **நோயுற்றவர்கள், திடமான உணவை எடுத்துக் கொள்ளாத வேளையில், 20 மற்றும் 21 உத்தரவுகளின் கீழ், ஒருவர் விரும்பிய அளவிற்கு எந்தவொரு திரவ உணவையும் எடுத்துக் கொள்ளலாம்.**
3. **உபவாசத்தின் போது மூக்குப்பொடி மற்றும் புகையிலை மெல்லுவது அனுமதிக்கப்படுகிறது.**
4. **வெற்றிலை, பாக்கு, பழம் மற்றும் இனிப்பு வகைகளை உணவிற்குப் பின்னர் உடனடியாக எடுத்துக் கொள்ளலாம் (காலை மற்றும் இரவு உணவு).**
5. **காற்றூட்டலால் நிரப்பப்பட்ட சோடா நீரை** (இனிப்பு பானங்கள் தவிர) **தண்ணீரைப் போலப் பயன்படுத்தலாம்.**
6. **மருந்துகளை உட்கொள்வது எந்தக் கட்டளைகளையும் பாதிக்காது.**

ஜூலை 6ஆம் நாள், பாபா, பெண் மண்டலியிடம், **"இந்த பங்களாவை நீங்கள் எப்படி விரும்புகிறீர்கள்?"** எல்லோரும் இது மிகவும் நன்றாக உள்ளது என்று கூறியபோது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இந்த பங்களா, அழகான தோட்டம் மற்றும் பிற வசதிகளுடன், மிகவும் அருமையாக உள்ளது; ஆனால் கிணறு, கிட்டத்தட்ட வற்றிவிட்டது; மேலும் பாம்புகள் குவிந்துள்ளன! நமது காம்பவுண்டுக்கு அருகில் அமைந்த மலையில் மனிதனை உண்ணும் மலைப்பாம்பு ஒன்று இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் எவ்வளவுதான் பாம்புகள், கொசுக்கள், பூச்சிகள் போன்றவை இருந்தாலும், நம்மை இங்கிருந்து அசைக்க முடியாது! போதிய குடிநீர் இல்லையென்றால் மட்டுமே, நாம் மற்றொரு பங்களாவிற்கு மாற வேண்டியது வரும்.**

**நான் எக்காரணமும் இல்லாமல் ஓரிடத்திலிருந்து நகர்வதில்லை. இத்தனை நபர்கள் மற்றும் இவ்வளவு பருமனான பொருட்களையும் எடுத்துக் கொண்டு, பயணம் செய்ய எவ்வளவு செலவாகும் என்பதை நினைத்துப்**

பாருங்கள். நாம், சிறிய மூட்டைகளைப் போல, ரயிலில், பேருந்துகளில் அமர்ந்து அல்லது நின்று செல்ல வேண்டும். மேலும், நான் எலிஸபெத்திடம் அதிகாலையில் பல் துலக்கச் சொல்லும்போது, 'என்ன, ஏன், எப்படி, எப்போது, எங்கே?' என்று கேட்டுவிட்டு, மீண்டும் தூங்கச் செல்கிறார்!

இந்த சுற்றுப்பயணத்திற்கு ஒரு குறிக்கோள் உள்ளது, இல்லையெனில் நான் உங்களை இடம் விட்டு இடம் அழைத்துச் செல்ல மாட்டேன். இந்தப் பயணங்களில், நீங்கள் துன்பத்திற்கு ஆளாகிறீர்கள், நானும்தான்; ஆனால் எனது பணிக்காக, நான் அதைச் செய்ய வேண்டும்.

1940, ஜூலை 7ஆம் நாள் பிற்பகலில், பாபா பெண்மணிகளுடன் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினார்:

ஆகஸ்ட் 1 முதல், நாம் போரைப் பற்றிப் பேசுவோம், வேறு எதுவும் இல்லை. இன்று உலகில் நிலவும் நிலைமைகளே அதன் துன்பங்களுக்குக் காரணம். ஆனால் இந்தத் துன்பமும் துயரமும் விடுதலைக்காக அல்ல. அன்பு மட்டுமே அதை அடையப்பெற முடியும். பாவிகளிலும் மோசமான பாவிகள், சொல்ல முடியாத வறுமை மற்றும் இடர்பாடுகளை சந்தித்த பின்னரே, மிகப் பெரிய புனிதர்களாக மாறினர். ஹிட்லரை விட மோசமான பாவி கூட துறவியாக முடியும். ஹிட்லரைப் போன்ற ஒரு மனிதன் உண்மையில், தான் செய்ததை உணர்ந்து அதற்காக மனம் வருந்தினால், அது அவரது பெருந்தன்மை மற்றும் மகத்துவமாகப் பார்க்கப்படும்.

இது எல்லாமே மனதின் விளையாட்டு! மனம், செல்லும் வழியில் அப்படியே சென்று கொண்டிருக்கும். ஹிட்லர், தான் செய்வது முற்றிலும் சரியானது, அவர் ஜெர்மனிக்கு நியாயம் செய்கிறார் என்று நினைக்கிறார். முஸோலினி இப்போது இத்தாலிக்காக என்ன செய்கிறார், அதன் முந்தைய துன்பங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் நல்லதையே செய்வதாக எண்ணுகிறார். இத்தகைய எண்ணங்களுடன், அவர்களின் ஒரு சரியான செயலுக்காக, பல லட்சம் தவறுகளைச் செய்வது நியாயமானது என்று அவர்கள் நினைக்கிறார்கள்!

ஒன்றை அதிக அளவில் அடைய அடைய மேலும் அதிகமாக அடைய வேண்டும் என்ற வெறித்தனம் வருகிறது. குடிகாரர்கள், குடிபோதையில், "வாருங்கள், அனைவரும் வாருங்கள்" என்று சவால் விடுவது, அவர்களாகச் சொல்வதல்ல, அவர்களின் போதை சொல்கிறது! இவ்வாறு வன்மையை வளர விடுவதன் மூலம், மேலும் அதிகமான தவறுகள் செய்யப்பட்டு, பின்பு மனம் வருந்துகிறது.

சர்ச்சில் அவர்கள் இருவருக்கும் இணையானவர். அந்த இடத்தில் சேம்பர்லினாக இருந்திருந்தால், ஃபிரெஞ்சு கடற்படைக்கு சர்ச்சில் செய்ததை அவர் செய்திருக்க மாட்டார் (ஒரான் நகரில் குண்டு வீசியது). அவர் தனது குடையை விரித்து வெறுமனே இதையும் அதையும் செய்திருப்பார். அவர் ஒரு முழுமையான பண்புள்ள மனிதர். அவர் சர்ச்சிலின் கீழ் பணிபுரிகிறார்,

இரண்டு நாட்களுக்கு முன்னர் அவர் பேசிய பேச்சு அருமையாக இருந்தது. சர்ச்சிலைப் போலவே, அவர் மிகவும் நேர்மையானவர்.

இவை அனைத்தும் எவ்வாறு செயல்படுகின்றன? நாம் அனைவரும் வேறு வேறு தேசங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு தேசத்தின் பிரதிநிதியாக இருக்கிறீர்கள். மன்ஸாரி ஒரு சிறிய தேசம், நான்னி ஒரு பெரிய தேசம், இவ்வாறு பல. ஒவ்வொன்றும், அதனுடைய பெருந்தன்மை அல்லது குறுகிய மனப்பான்மை, பேராசை, அதிகாரம் மற்றும் உடைமைகளுக்கான அதன் ஏக்கத்திற்குத் தகுந்தாற் போல், அது விரும்புவதை அடைய இராஜதந்திர ரீதியில் முயற்சிக்கிறது.

ஆனால் ஒருவர் போரில் தோல்வியை சந்திக்கும் போது, அவர் அடுத்த போரில் இறங்க முயற்சிக்கிறார். மனிதனின் மனநிலை அப்படிப்பட்டது. உதாரணமாக, நீங்கள் போரில் எதைப் பயன்படுத்துகிறீர்கள்? 'போர்க்கருவிகள்' (ARMS)! அதற்கான ஒரே தீர்வு எல்லோருடைய கைகளையும் (ARM) துண்டிப்பது. பின்னர் அவர்கள் தங்களை 'ஆயுதமற்றவர்கள்' (ARMLESS) எனக் கண்டுபிடித்து, தங்கள் கைகளின் வலிமையைக் காட்டுவதால் இந்தக் கைகளற்ற நிலை (ARMLESSNESS) அதாவது 'போர்க்கருவிகளற்ற நிலை' (ARMLESSNESS) வந்துவிட்டது என்ற முடிவிற்கு வருவார்கள். பின்னர் அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் ஆழ் இதயத்திலிருந்து போர்க்கருவிகளைப் பராமரிப்பதாக வாக்குறுதியளிப்பார்கள், ஆனால் ஒருபோதும் அவற்றை ஒருவருக்கொருவர் எதிராகப் பயன்படுத்த மாட்டார்கள். பின்னர் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவ முன்வருகிறார்கள், ஒரே குடும்பத்தின் உறவுக்காரர்களைப் போல் ஆகிறார்கள். இதுதான் செய்யப்படுகிறது.

அனைவரும் முற்றிலும் சோர்வடைந்து, வலிமை குன்றி காணப்படுவார்கள். ஒருவரும் வெற்றி, தோல்வி அடையாமல் பாதி உயிரிழந்தவர்கள் போலாகிறார்கள். அத்தகைய போர் ஒருபோதும் இருந்ததில்லை! ஃபிரான்ஸ் முதலில் இங்கிலாந்தின் பக்கபலமாக இருந்தது, இப்போது இங்கிலாந்திற்கு எதிராகப் போராடுகிறது. அத்தனை குளறுபடிகள்! ஆனால், முழு நிலைமைக்கும் எஜமானர் ரஷ்யா. ஜெர்மனி, ருமேனியாவிடம் அமைதியாக இருக்கச் சொல்கிறது, மேலும் அந்த நாட்டை ஆக்கிரமிக்க மாட்டேன் என்று உறுதியளிக்கிறது. ரஷ்யா, ஜெர்மனிக்குப் பக்கபலமாக இருந்தால், இங்கிலாந்து தோற்கடிக்கப்படும், அதற்கு நேர்மாறாகவும் நடக்கும் என்பது ரஷ்யாவிற்குத் தெரியும். ஜெர்மனி, ருமேனியா இரண்டு நாடுகளும் ரஷ்யாவை மகிழ்விக்க முயற்சிக்கின்றன.

மதம் மறைந்துவிட வேண்டும், உண்மைப்பொருளான கடவுள் மட்டுமே வர வேண்டும். இது நிச்சயம்!

காந்தி, பிரிட்டனிடம் அஹிம்சை முறையைக் கடைப்பிடிக்கக் கூறுகிறார். ஜெர்மனி இங்கிலாந்தை ஆக்கிரமிப்பது, தங்களைக் கொல்ல அனுமதித்து, அழிக்கப்படுவது போலாகும்! ஆனால் போராட வேண்டாம்

என்று காந்தி சொல்வது 100 சதவீதம் சரியானது, உண்மையானது, ஆனால் முற்றிலும் சாத்தியமற்றது மற்றும் நடைமுறைக்கு ஒவ்வாதது! ஹிட்லர், காந்தி இருவரும் தங்கள் சொந்த கருத்துக்களுக்கு ஏற்ப சிந்திக்கும் முறையில் ஒரே தரப்பினர்; ஆனால் இருவரும் அப்படி நினைப்பது முற்றிலும் பைத்தியக்காரத்தனம்! இருவரும் உச்ச நிலையில் சிந்திப்பவர்கள். தீவிர வன்முறை, உச்சத்தை எட்டும்போது அஹிம்சையாகவும், அஹிம்சை, உச்சகட்டத்தை எட்டும்போது வன்முறையாகவும் மாறும்.

முஸோலினி முற்றிலும் சாதாரண உலக வகையைச் சார்ந்தவர். சமையலில் பூண்டு போல! அவர் அங்கும் இங்கும் கொஞ்சம் தன்வசமாக்க முயற்சிக்கிறார். ஹிட்லர் ஒரு மிருகம், ஆனால் மனிதனும் கூட. முஸோலினி வெறுமனே ஒரு கரடி. காந்தி நடைமுறைக்கு உதவாதவர், ஆனால் நல்ல மனிதர். அவர் சரியாக சிந்திக்கிறார், அதற்கேற்ப செயல்பட முயற்சிக்கிறார், அதே வேளையில் தனது பலவீனங்களை ஒப்புக்கொள்கிறார். உலகம் ஒருபோதும் அஹிம்சையைக் கடைப்பிடிக்காது. இது அஹிம்சையை விட அதிகமாக இருக்கும். அதாவது, அஹிம்சையை விட மிகையானது அன்பு.

அஹிம்சை என்றால் பதிலடி கொடுக்கும் ஏக்கத்திற்கான நித்திய எதிர்ப்பு. அன்பிற்கு எந்த முயற்சியும் தேவையில்லை. இது ஏக்கத்திற்கான எதிர்ப்பிலிருந்து வேறுபட்டது. அன்பு, சுய கட்டுப்பாடு மற்றும் அன்பிற்குரியவரின் தன்னிச்சையான மகிழ்ச்சியைக் கோருகிறது. இந்த முயற்சி அன்பிற்கு அவசியம், ஆனால் அது வறண்டதாக இருக்கக்கூடாது. அஹிம்சை என்பது அன்பிற்காகத் தேவைப்படும் சுய கட்டுப்பாடு அல்ல. இது பதிலடி கொடுக்கும் ஏக்கத்திற்குத் தொடர்ச்சியான எதிர்ப்பாகும். ஒன்று மாற்றத்திற்கான முயற்சி, மற்றொன்று அடக்குமுறைக்கான முயற்சி. ஆனால் காந்தி, ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் மேலானவர். அவர் ஓர் உயர்ந்த மனிதர். அவர் தனது பலவீனத்தை எங்கு உணர்ந்தாலும் அதை ஒப்புக்கொள்கிறார்.

அடுத்த நாள், ஜூலை 8, மெஹர் பாபா, பெண்மணிகளிடம் கூறினார்:

பாதுகாப்பிற்காக, வெறுப்புணர்வின்றி கொல்லுங்கள். ஃபிரான்ஸ், இங்கிலாந்தை வெறுக்கும். ஜனநாயகம் ஒரு நாட்டிற்கு உதவ முடியாவிடில் அதனால் என்ன பயன்? எனவே ஜனநாயகம் அல்லது சர்வாதிகாரவாதம் இரண்டும் இருக்காது, போய்விடும். நாம் ராஞ்சியை விட்டு வெளியேறுவதற்கு முன்பு, துருக்கியைக் குழப்பத்தில் ஆழ்த்த, ஒரே ஒரு வழிதான் உள்ளது. நாளை நாம் (ஜோனா) நீர்வீழ்ச்சிக்கும், அடுத்த நாள் சர்க்கஸுக்கும் செல்கிறோம்; பின்பு நாம் இங்கிருந்து புறப்படும் வரை இந்த வீட்டில் (ஏகாந்தவாசத்தில்) நம்மை மூழ்கடிப்போம்!

நாளை, 'நீர்வீழ்ச்சி'யை நாம் பார்ப்பது துருக்கியை 'வீழ்ச்சி'யடையச் செய்யும், (சர்க்கஸில்) 'யானை சைக்கிளில் சவாரி' செய்வதைப் பார்ப்பது துருக்கியை, 'காட்டுக் குதிரைகளில் சவாரி' செய்ய வைக்கும்!

பாபா கூறியபடி, 9ஆம் தேதி 23 மைல் தொலைவில் உள்ள ஜோனா நீர்வீழ்ச்சியைப் (JONAH FALLS) பார்வையிட பெண்மணிகளை அழைத்துச் சென்றார். மறுநாள் மாலை, பாபா, ஆண், பெண் மண்டலி அனைவரையும் 'கார்லேக்கர்' சர்க்கஸுக்கு (KARLEKAR CIRCUS) அழைத்துச் சென்றார். ஆனால் மழை காரணமாக, கூடாரம் கிழிந்து, நீர் வழிந்ததால் அவர்களால் காட்சிகளை ரசிக்க முடியவில்லை. ராஞ்சியில் அவர்கள் இருந்த இரண்டு வாரங்களில், பெண்மணிகளின் இந்த இரண்டு பயணங்களைத் தவிர, எஞ்சிய நேரங்களில் பங்களாவிலே இருந்தனர்.

ஜூலை 7ஆம் நாள் மாலை, பாபா, காக்காவை கொல்கத்தாவிற்கு அனுப்பி வைத்தார். மிகவும் சிரமப்பட்டு காக்கா 9ஆம் தேதி கரீம் பாபாவை ராஞ்சிக்கு அழைத்து வர முடிந்தது. இந்த மஸ்த் பத்து வருடங்களுக்கும் மேலாக கொல்கத்தாவில் தனது இருக்கையை விட்டு வெளியே வந்ததில்லை. பாபாவின் உள்ளார்ந்த உதவியால் மட்டுமே, மஸ்த் இணக்கம் தெரிவித்து, காக்காவுடன் வர முடிந்தது (மஸ்த் எப்பொழுதும் உள்ளளவில் பாபாவின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்ததாக, காக்கா தெரிவித்தார்). பாபா, இது குறித்து குறிப்பிடுகையில், **"இந்த மஸ்தை இங்கு அழைத்து வருவதில் காக்கா செய்த பணி, ஒரு வருடத்திற்காக நான் வழங்கிய உத்தரவுகளுக்குக் கட்டுப்படுவதாக உறுதியளித்த 240 நபர்களால் செய்யப்படும் பணியைவிட மிகையானது"** என்றார்.

இந்த மஸ்தின் ஒளிரும் கண்களின் வெளிப்பாட்டில், பாபா, மண்டலியின் பழைய உறுப்பினர்களில் ஒருவரான 'கரீம்' என்பவருடன் ஓர் ஒற்றுமையைக் கண்டார், அதற்காகவே அவருக்கு, 'கரீம் பாபா' (KARIM BABA) என்று பெயரிட்டார். கரீம் பாபா, சட்டி பாபாவின் பக்கத்து அறையில் தங்கினார்; அங்கு. பாபா பகலில் பல முறையும், இரவில் ஓய்வு பெறுவதற்கு முன்னர் ஒரு முறையும் அவரை சந்தித்து வந்தார்.

கரீம் பாபாவின் கண்கள் புலியின் கண்களைப் போலப் பிரகாசித்தன. அவர் செம்பு நாணயங்களை விழுங்கி, பின்னர் அவற்றைத் தனது மலக்கழிவிலிருந்து கவனமாக அகற்றி, துணியால் சுத்தம் செய்து, பின்னர் அவற்றை மீண்டும் விழுங்குவதை வழக்கமாகக் கொண்டார்! அவர் மிகவும் அசுத்தமாக இருந்தார்; விவரிக்கமுடியாத அளவிற்கு துர்நாற்றம் உடையவராகவும் காணப்பட்டார், ஆனால் தனது ஆடைகளை அகற்றவோ அல்லது நீராட்டவோ எந்த மண்டலியையும் அனுமதிக்க மாட்டார். ஒரு முறை, நாணயங்களை பிரித்தெடுப்பதற்கு முன்பு, பைதூல் மஸ்தின் மலக்கழிவை அகற்ற முயன்ற போது, வழக்கமாக அமைதியாக இருந்த கரீம் பாபா, பைதூலைக் கிழித்தெறிவது போன்ற ஒரு கர்ஜனையை எழுப்பினார். ஆகவே மஸ்தை, தொந்தரவு செய்யாமல், தனியாக விட்டுவிட்டனர்.

**'மஸ்தின் விரல் நகங்கள் மிக நீளமாகவும் கூர்மையாகவும் இருந்தன; கரீம் பாபா அவரது கடுகடுப்பான மனநிலையில் நகத்தால்**

**முகத்தைக் கீறி, காயப்படுத்தக்கூடும்’** என்று பாபா, மண்டலியை எச்சரித்தார். **“நான் அவருடன் தனியாகப் பணிபுரியும் வேளையில் அவர் என்னையும் அவ்வாறு செய்யக் கூடும்”** என்றும் பாபா சுட்டிக்காட்டினார்.

மஸ்த் வந்த அந்த நாள், பாபா, மாலையில் பெண்மணிகளுக்கு அறிவித்தார்: **“இன்று நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். கொல்கத்தா முழுவதையும் கட்டுப்படுத்தும் இரண்டு மேம்பட்ட ஆத்மாக்கள் உள்ளனர்: ஒருவர், பெண் மஸ்தானி, மிகவும் வயதானவர், பாபாஜானைப் போன்றத் தோற்றமுள்ளவர்; மற்றொருவர், தடித்தவர் இன்று** (காக்கா) **அழைத்து வந்த கரீம் பாபா.**

**“கொல்கத்தாவிற்கு நான் கடைசியாக விஜயம் செய்த போது இருவரையும் பார்த்தேன். இங்கு அழைத்து வரப்பட்டவர், பத்து ஆண்டுகளாக ஒரே இடத்தில் அமர்ந்திருந்தார். மக்கள் அவரை நம்புகிறார்கள், அவருக்காகக் கொணரும் உணவை உண்கிறார். அவர் நீராடுவதில்லை, கம்பி மற்றும் கந்தல் துணிகளை, தன்னைச் சுற்றிலும் கட்டிக் கொள்கிறார். அவரை, அங்கிருந்து எதுவுமே அசைக்க முடியவில்லை. பின்பு நான் அவரை இங்கு அழைத்துவர காக்காவை அனுப்பினேன். காக்கா அவரை சமாளித்த விதம் அவருக்கு மட்டுமே தெரியும், ஆனால் மஸ்தை ஒரு குதிரை வண்டியில் அமர்த்தியபோது, குறைந்தது** 500 **பேர் அவரை ரயில் நிலையத்திற்குப் பின்தொடர்ந்தனர்.**

**“நாளை, நான் அவரை உங்கள் அனைவருக்கும் காண்பிப்பேன். கடந்த முறை நாம் கொல்கத்தாவில் இருந்தபோது அவரைப் பார்த்தோம், மிகவும் கடினமாக மழை பெய்து கொண்டிருந்தது, ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தாமல் அங்கேயே இருந்தார். ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை”** என்றார்.

ராஞ்சியில், பாபா அவரைத் தொடர்புகொண்ட நான்கு நாட்களுக்குப் பிறகு, திடீரென, கரீம் பாபா பாடத் தொடங்கினார்; இது எவரும் கேள்விப்படாத ஒன்று, ஏனெனில் கொல்கத்தாவில் எவரும் அவரை இத்தகைய மகிழ்ச்சியான மனநிலையில் கண்டதில்லை.

மெஹர் பாபா, ராஞ்சியில் தனது மஸ்த் பணிகளில் முழுமையாக ஈடுபட்டார், முதன்மையாக சட்டி பாபா மற்றும் கரீம் பாபா ஆகியோருடன் பணிபுரிந்தார். அவ்வப்போது பாபா, அவர்களுடனான பணி எவ்வாறு போருடன் தொடர்புடையது என்பதற்கான சில குறிப்புகளை வழங்கினார். ஒரு முறை சட்டி பாபா, சரியான மனநிலையில் இல்லாதபோது, பாபா, கிருஷ்ணாவை அவரிடம் அனுப்பி என்ன விஷயம் என்று விசாரித்தார். மஸ்த் பதில் கூறாமல் அமைதியாக இருந்தார்; கிருஷ்ணா பல முறை கேட்ட பின்னரே அவர், “இத்தனை பெரிய விஷயத்தை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்வீர்கள்?” எனக் கேட்டார்.

மஸ்த் பணியில் பைதூல் முழு மனதுடன் மிகக் கடினமாக உழைப்பவர் என்றாலும், அவரது மனம் அவ்வப்போது அவரைத் தொந்தரவு

செய்யும். முஹமது மஸ்தை ஒரு சாது அல்லது வாலி என்று அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை; சேற்றில் விளையாடி அல்லது விரல்களால் மண்ணைக் கிளறிக்கொண்டே இருப்பதால் அவரை, பைத்தியம் என்றே நினைத்தார். சில நாட்களுக்கு முன்பு, ஜூலை 6 அன்று, பலத்த மழை பெய்யத் தொடங்கியது. முஹமது மண்ணில் விளையாடுவதைத் தடுக்கவும், அவரது உடல்நிலையைப் பாதுகாக்கவும் மழையிலிருந்து உள்ளே அழைத்து வர பைதூல் முயற்சித்தார். பைதூல் அவருடன் கண்டிப்புடன் நடந்துகொண்ட வேளையில், முஹமது அழத் தொடங்கினார். பைதூல் அவரை மிரட்டி, வலுக்கட்டாயமாக மழை மற்றும் சேற்றிலிருந்து வெளியே இழுத்துவர முயன்ற அந்த வேளையில், பாபா அங்கு வந்தார். இந்த சம்பவம்தான் பாபா, மஸ்துகளின் உண்மையான மனநிலை மற்றும் அவர்கள் மீது எந்த சக்தியையும் பயன்படுத்துவதன் விரும்பத்தகாத தன்மை பற்றி ஒரு நீண்ட, நெடிய விளக்கத்தை அளிக்க வாய்ப்பாக அமைந்தது.

**மாறுபட்ட சூழலில், மஸ்துகள் எவ்வாறு உணர்கின்றனர் என்பது உங்களுக்குத் தெரியாது. அவர்களைப் பேணிப் பாதுகாக்கும் எண்ணத்தில் நாம் செய்யும் அனைத்தும் - நாம் வழங்கும் உணவு மற்றும் உடை - அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல, ஏனெனில் அவர்களைப் பொறுத்தவரையில் அது தேவையில்லாத ஒன்று; மாறாக அவர்கள் அதை வெறுக்கிறார்கள். சேவை புரியும் வாய்ப்பை அனுமதிப்பதன் மூலம், அவர்கள் நமக்கு உதவுகின்றனர். இல்லையெனில், தங்கள் விசித்திரமான சுய விருப்பங்களுக்கும், முறைகளுக்கும் ஏற்ப, சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து பழக்கமானவர்களுக்கு, இது ஒரு பிணைப்பாக இருக்கும். அவர்கள் விரும்பும் ஒரு குறிப்பிட்ட விஷயத்திலிருந்து அவர்களைத் திசைதிருப்புவது, அவர்களுக்குச் சித்திரவதை போலாகும், ஏனெனில் அவர்கள் சேற்றில் விளையாடுவது போன்ற அசுத்தமான சூழலில் இருப்பது, அவர்களின் ஆற்றொணா மனநிலையைத் தணித்து, அமைதியை அடையப்பெறுவது போல் உணர்கின்றனர்.**

**கரீம் பாபா போன்ற மேல்நிலை மஸ்த், ஒரே நேரத்தில் ஐந்து, ஆறு நாணயங்களை விழுங்கி, அவற்றைத் தனது மலக்கழிவில் வெளியேற்றி, மீண்டும் அவற்றை விழுங்குவது, இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அது அவருடைய முறை. நீங்கள், அவரை சுத்தமாக வைத்திருக்கும் நோக்கத்தில், அதைத் தடுக்க முயலும் வேளையில், அவர் சீற்றமடைந்து கோபப்படுவதானால், அது உங்கள் வாழ்வின் பேரழிவாக இருக்கக் கூடும், ஏனெனில் மஸ்துகள் மற்றும் புனிதர்களின் சீற்றம் மிகவும் ஆபத்தானது.**

**முஹமது மஸ்த் சேற்றில் எதையோ தேடுவதுபோல விளையாடி, தன்னைத்தானே ஆக்கிரமிக்கச் செய்யும் இந்தப் பண்பு, அவருக்கு ஒருவித நிவாரணமாகும். அவர் சேற்றில் விளையாடி, உடல் உபாதைகளுக்குத் தன்னை ஆளாக்குகிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அவரது உடல்நலத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான சிறந்த நோக்கங்களுடன்,**

நீங்கள் அவரை உள்ளே அழைத்து வர முயற்சிக்கிறீர்கள். அவர் எதிர்ப்பைத் தெரிவிக்கும்போது, அவரை வலுக்கட்டாயமாக இழுக்கும் தருவாயில், அவருடைய உயர்ந்த ஆன்மீக உணர்வு நிலையில், அந்தக் குறிப்பிட்ட பொருளுடனான தொடர்பை நீங்கள் துண்டிக்க முயற்சிக்கிறீர்கள். அப்போது என்ன நடக்கிறது? நீங்கள் அவரைத் தடுக்க முயற்சிக்கிறீர்கள் என்று அவர் கண்டறிந்த தருணத்தில், கலக்கமடைந்து, அங்குச் செல்லலாமா அல்லது இங்கே இருக்கலாமா என்ற முடிவிற்கு வரமுடியாத நிலையில், அதாவது, அவரது மேம்பட்ட உணர்வு அவரை, அவர் பார்க்கும் அந்தப் பொருட்கள் மூலமாக, உயர்ந்த ஆன்மீகத் தளங்களுக்குச் செல்வதா அல்லது உங்களால் அவர் எங்கு அழைக்கப்படுகிறாரோ அங்குச் செல்வதா என்ற தயக்கத்தில், தனது விருப்பத்தை அப்படியே பௌதீகத் தளத்தில் விட்டுவிடுகிறார்.

இது நகைச்சுவையான வேடிக்கை அல்ல. உயர்ந்த மற்றும் கீழ் நிலை ஆன்மீகத் தளங்களின் இரு வேறுபட்ட, முரண்பாடான உணர்வு நிலைகளை சரிசெய்வது என்பது, முஹமது மஸ்திற்கு உண்மையில் ஒரு சித்திரவதை போன்றது. இந்தச் சித்திரவதை அல்லது ஆற்றொணா வேதனையில், அவர் தனது பரவச அனுபவத்தில் இடையூறு விளைவித்ததற்காக எவரையும் துஷ்பிரயோகம் செய்து அல்லது சாபமிடுவதானால், சபிக்கப்பட்டவர் இந்த வாழ்வின் பேரழிவை சந்திப்பார். அவரால் இதைச் செய்ய முடியாது என்பதும், அவருடைய சீற்றத்திலிருந்து நீங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் நான் இங்கு இருப்பதே காரணம். அதனால்தான், மஸ்துகளுடன் மிகுந்த சகிப்புத்தன்மையுடனும், மென்மையாகவும் நடந்து கொள்ளும்படி நான் தொடர்ந்து உங்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன்; அவர்களை சுத்தமான சூழ்நிலையில் பேணி, பாதுகாப்பது உங்கள் கடமையாக இருந்தாலும், அவர்களுடன் மிகுந்த கவனத்துடனும், எச்சரிக்கையாகவும் நடந்து கொள்ளவேண்டியது முக்கியம்.

அவர்களை வழிநடத்துவதற்கான சிறந்த வழி, அன்பின் வழி மற்றும் கனிவான வற்புறுத்தல். இதில் வெற்றி காணவில்லை என்றால் வேறு எந்த வழியும் இல்லை. எனது நிமித்தம், அவர்கள் உங்களைக் காயப்படுத்த முடியாது என்றாலும், நிர்ப்பந்தம் அல்லது அழுத்தம் தருவது இன்னும் மோசமான சூழ்நிலையை விளைவிக்கும். அது, அவர்கள் மீது வினைபுரிந்து, அவர்களை சிரமத்திற்கு உள்ளாக்குவதை நான் விரும்பவில்லை. ஏனெனில், அது அவர்களுக்கு மிகப்பெரிய கொடுமை, அதனால் அவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பது எனக்கு மட்டுமே தெரியும்.

இரு விதத்திலும் இது அவர்களுக்கு ஒரு கொடுமை. முதலாவதாக, மஸ்துகள் தங்கள் சொந்த சூழலையும், அவர்கள் வாழ்ந்த இடங்களில் அவர்களின் சுதந்திரத்தையும் இழக்கச் செய்கிறது. இவ்வாறு அறையில் அடைத்து வைத்தாற் போல், இதர எல்லா சுதந்திரங்களுடனும் பேணிப் பாதுகாப்பது கூட அவர்களைப் பொறுத்தவரையில் பெரிய துன்பமாகும். இரண்டாவதாக, மஸ்துகளைத் தொந்தரவு செய்யும்போதும், அவர்களின்

**பரவசமான இன்ப நிலையிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியே கொணரும்போதும் அவர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள்.**

**எனது சகவாசத்தில் மகிழ்ச்சியாக இருக்கும் ஒரே காரணத்திற்காக, அவர்கள் இங்கே என்னுடன் இருக்கிறார்கள். உங்களில் ஒருவரும் என்னைப் பார்த்து அறிய முடியாததை, அவர்கள் அகக்கண்ணால் என்னைப் பார்த்து, என் உண்மை நிலையை அறிகிறார்கள். அதனால்தான் அவர்கள் அமைதியாக இங்கே இருக்கிறார்கள். இல்லையெனில், அவர்களைக் கையாளுவது இயலாத காரியம்.**

**உலக மக்களோடு அன்புடன் செய்யப்படும் அனைத்து முயற்சிகளும் பயனுள்ளதாக இருந்தால், இறை அன்பில் தொலைந்து போகும் இந்தப் புனிதமான ஆத்மாக்களைக் கையாளுவதில் அவை மிக்க பயனுள்ளதாகவும், அவசியமானதாகவும் இருக்கும். அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்போது, அவர்களின் சில விசித்திரமான பண்புகளின் ஒரு கட்டத்தை நீங்கள் அனுபவிக்க விரும்புகிறீர்கள். அதே வேளையில், உங்கள் கண்கள் ஊடுருவ முடியாத அல்லது உங்கள் மனம் புரிந்து கொள்ள இயலாத சில விஷயங்களில் அவர்கள் காணும் பேரின்பத்தின் அனுபவத்தில், உங்களை வற்புறுத்தும் மற்றொரு கட்டத்தையும் நீங்கள் சமமாக அனுபவிக்க வேண்டும்.**

ராஞ்சி, இந்தியாவில் உல்லாசப்போக்கில் ஓய்வெடுக்கப் பிரபலமான இடம். மெஹராபாத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பு, டான் மற்றும் பிற ஆண் மண்டலியும், ராஞ்சியில் முழுமையான ஓய்வெடுத்து, ஆகஸ்ட் 1ஆம் தேதிக்கு முன்னதாக, இயன்றவரை அந்த சூழ்நிலையை அனுபவிக்குமாறு பாபா கேட்டுக்கொண்டார். ஆகஸ்ட் 1 முதல், புதிதாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வரும் வேளையில், ஒவ்வொருவரும் ஒழுக்கமான வாழ்க்கையை நடத்த வேண்டியது அவசியம். ராஞ்சியில் வாழவிருக்கும் அந்த ஒரு வருட காலம், ‘சிறப்பான’ காலமாக இருக்கும் என்று பாபா உறுதியளித்திருந்தார்; மேலும் இந்தக் காலகட்டம் கண்டிப்பான ஒரு வேலைப்பளு நிறைந்ததாக இல்லாமல், விடுமுறை அல்லது பொழுதுபோக்குக் காலமாக இருக்கவேண்டும் என்று பரிந்துரைத்தார். இருப்பினும், குருநாதருடன் ஒரு நீண்ட கால பயணம் என்ன என்பதைப் பற்றி ஆண் மண்டலி எந்தவிதமான தவறான புரிதலையும் கொண்டிருக்கவில்லை. மழைக்கால வானிலை அனைவரையும் பெரும்பாலான நேரமும் வீட்டினுள்ளேயே வைத்திருந்தது, அவர்கள் உடற்பயிற்சிக்காக நடக்கச் செல்லவும் முடியாமல் தடையாக இருந்தது. பாபா, மஸ்துகளுடன் பணிபுரிந்தது, 31 உத்தரவுகளுடன் 240 தட்டச்சு செய்யப்பட்ட பட்டியல்களைத் தயாரிக்கும் கடினமான பணிகள் அனைத்தும் ‘உல்லாசமான சுற்றுலா பயணம் என்ற எண்ணத்தைக் காற்றில் பறக்க விட்டன’ என்று சாஞ்சி கிண்டலாக விளக்கிக் கொண்டிருந்தார்.

மெஹரா, மணி, நாஜா, கோர்ஷெத் ஆகியோர் 'தனிமை வாழ்க்கை' வாழ்ந்து பழகிப் போனவர்கள், ஆனால் மேற்கத்திய பெண்களுக்கு, ராஞ்சியில் இவ்வித அனுபவம் புதியது. கோல்கொத்தியின் ஒரு பாகத்தில் பெண்மணிகள் தங்கியிருந்தனர், மற்றொரு பக்கத்தில் மஸ்துகளின் உறைவிடம் இருந்தது, மூன்றாம் பாகம் கொடிய பாம்புகள் நிறைந்த பெரிய மலையாக இருந்ததால், ஆண்களின் நகர்வுகளும் தடைசெய்யப்பட்டன. இறுதியில், அவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட கைதிகளைப் போல் உணர்ந்தனர்!

ஒவ்வொரு நாளும் பிற்பகல் அல்லது மாலை வேளையில், பாபா, பெண்மணிகளைப் பார்க்கச் சென்று, சமீபத்திய போர் நிலவரங்கள் அல்லது மஸ்துகளுடனான அவரது பணிகளைப் பற்றி விவாதித்து வந்தார். 1940, ஜூலை 11 அன்று பாபா இவ்வாறு தெரிவித்தார்:

**இப்போது இங்கிலாந்து, கடலிலும் வானிலும் சிறப்பாகப் போர் புரிந்து வருகிறது. இங்கிலாந்து மீது ஃபிரான்ஸ் போருக்கான அறிவிப்பை விடுப்பது ஆச்சரியப்பட வேண்டியதாக இருக்கும். இங்கிலாந்து அனைத்து நாடுகளையும் அதற்கு எதிராகத் தயார் நிலையில் வைத்துள்ளது. அயர்லாந்து, சொல்லப்போனால், மற்றுமொரு பிரச்சினை. எனது வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள்: 100 சதவிகித அமெரிக்காவின் தோல்வி ஒன்றுதான், ஃபிரான்ஸின் இதயத்தைச் சுக்குநூறாக்கி, ஜனநாயகத்தை வெறுக்கச் செய்தது. உண்மைகளை உன்னிப்பாக கவனிப்பீர்களேயானால், கடந்த அரசியலமைப்பு ஃபிரான்ஸ் நாட்டுக்கு எதைக் கொடுத்தது? 'அழிவு'! இப்போது ஃபிரான்ஸ் நாட்டு மக்கள் அனைவரும் ஜெர்மனியை ஏற்றுக்கொள்கிறார்கள், அதாவது அவர்கள் ஜனநாயகத்தை வெறுக்கிறார்கள்.**

அடுத்த நாள் மாலை, பாபா நீண்ட நேரம் விளக்கினார்:

**நாளை, நீங்கள் அனைவரும் கடவுளின் ஏழு நாமங்களை எழுதி, ஏழு நாட்களுக்குப் பின்னர் அவற்றை மனப்பாடம் செய்து உச்சரிக்க வேண்டும். "ஹரி, பரமாத்மா, அல்லா, அஹூரமஸ்த், காட், எஸ்தான், ஹூ"** (HARI, PARAMATMA, ALLAH, AHURAMAZDA, GOD, YEZDAN, HU) **என்று உங்கள் இதயத்திலிருந்து வர வேண்டும். ஒவ்வொருவரும் நான் வழங்கும் உத்தரவுகளை 100 சதவீதம் கடைப்பிடிக்க வேண்டும். உங்களால் முடிந்தவரை முயற்சிக்கவும். உங்களால் இயன்றதைச் செய்வதன் மூலம் நீங்கள் எனக்கு உதவியாக இருப்பீர்கள். நீங்கள் முழுமையாகக் கீழ்ப்படிந்தால், எனக்கு முழு உதவியாக இருக்கிறீர்கள் என்றும், சாதாரணமாகக் கீழ்ப்படிந்தால், சாதாரண முறையில் உதவுகிறீர்கள் என்றும் அர்த்தம். இதை மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.**

**இந்த ஒரு வருடம், நீங்கள் அனைவரும் என்னை மிகக் குறைவாகவே பார்ப்பீர்கள். உங்கள் வாழ்க்கையின் இந்த ஒரு வருட காலம் எனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதாக மட்டும் இருக்கட்டும். நீங்கள்**

**கீழ்ப்படியவில்லை என்றால் அது எனக்கு எவ்வகையிலும் சிறிதளவும் உதவாது, பின்பு மனம் வருந்தி கலங்குவீர்கள். 'ஒருவரையொருவர் புறங்கூறி மோசமாக பேச வேண்டாம்' என்று நான் சொன்னால், ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவ்வாறு செய்யவேண்டும் என்று அர்த்தம். நீங்கள் எவரையேனும், ஒரு முறைக் கூட தவறாகப் பேசி, பின்பு வருந்தினால், அதில் எந்த அர்த்தமுமில்லை.**

**எனவே ஒவ்வொரு கணமும் எச்சரிக்கையாக இருங்கள். ஒரு வருட காலத்திற்கான இந்த 'யோகா', உங்கள் முழு மனதுடன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதைக் குறிக்கும். இது உங்களில் சிலருக்கும், குறிப்பாக மெஹராவிற்கும் ஒரு மிக உயர்ந்த தியாகமாக இருக்கும், ஏனெனில் அவர் என்னை அரிதாகவே பார்க்க முடியும். ஆனால், நான் உங்களுக்கு வழங்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது எனக்கு உதவியாக இருக்கும்.** (ஆண்) **மண்டலியில், சிலரை நான் மலைகளை நோக்கி அனுப்புவேன், சிலர் யாசிக்க வேண்டியது வரும். உங்களைப் பொறுத்தவரையில் இது மிகவும் எளிதானது, ஆனால் மிகவும் கடினம். நான் இப்போது கூறிய கட்டளைகள் காரணமாக, இது கடினமாக உள்ளது. உங்களில் ஒருவரேனும் நான் விரும்புகிறபடி, முழுமையாகக் கீழ்ப்படிந்தால், நான் மகிழ்ச்சியடைவேன்.**

பேச்சின் தலைப்பை மாற்றி, பாபா, கரீம் பாபாவைப் பற்றிக் குறிப்பிட்டார்:

**என்ன ஓர் அதிசயம் நடந்தது பாருங்கள்! பத்து நீண்ட வருடங்களாக, தனது இடத்தை விட்டு வெளியே வராமல், மேலும் 'இங்கிருந்து நகரவேயில்லை' என ஊர் மக்களால் கூறப்பட்ட இந்த மஸ்த், இப்போது இங்கே வந்துவிட்டார்! பத்து வருடங்களாக அவர் பேசி, ஒரு வார்த்தையைக் கூட மக்கள் கேட்டதில்லை, அவருக்கு அருகில் இருப்பவர்கள் கூட. பல கிறிஸ்தவர்கள் அவரை நம்புகிறார்கள், அவருக்கு உணவளிக்கிறார்கள். இப்படி அவர்கள் அனைவரும் காக்காவிடம் எடுத்துரைத்தனர். நானும் காக்காவும் கொல்கத்தாவில் அவரிடம் சென்றபோது, அவர் பேசவில்லை. இங்கே இருந்த முதல் இரண்டு நாட்களும் அவர் வாயே திறக்கவில்லை.**

**ஆனால் நேற்று இரவு, அவர் உரத்த குரலில் பாடினார், பின்னர் அனைவரையும் நிந்தனை செய்யத் தொடங்கினார். நான் அவரை மூன்று நாட்கள் உடலளவில் தொட்டது அவரைப் பேச வைத்தது. பத்து ஆண்டுகளாக, கனிவாக இருந்த அவர், இப்போது காட்டுமிராண்டித் தனமாக செயல்படுகிறார்! பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்** (உருது மொழியில்) **பாடிய பாடலின் சொற்கள்: "கடவுளை, காடுகளில் காணலாம், அவரை நகரங்களில் காணலாம்!" இந்த வரியை அவர் ஒரு மணி நேரம் திரும்பத் திரும்ப பாடிக்கொண்டே இருந்தார்; பின்பு, சாபமிட்டு வசைபாடத் தொடங்கினார்!**

**ஆகஸ்ட் 1 முதல், நீங்கள் அனைவரும் ஹார்மோனியத்துடன் பாடுகிறீர்கள். ஒரு வருடம், நீங்கள் ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே**

**உணவு உண்பீர்கள். நீங்கள் விரும்பிய இடத்தில் அமர்ந்து, வேண்டிய அளவிற்கு, அரை அல்லது ஒரு மணி நேரம் உண்ணலாம். ஐரோப்பாவில் மக்கள் ஆறு மாதங்களுக்குப் பிறகு, கோரப்பசியால் பட்டினி கிடப்பார்கள். அவர்கள் குதிரைகள், எலிகள், குழந்தைகள், வயதானவர்கள் அனைத்தையும் உண்ணத் தொடங்குவார்கள். அவர்களோடு ஒப்பிடுகையில், நீங்கள் சொர்க்கத்தில் வாழ்கிறீர்கள்! ஆனால் நீங்கள் உயிரை விடவேண்டி இருந்தாலும், அனைவரும் கீழ்ப்படிய வேண்டியது அவசியம்! இரண்டு முறை, காலை மற்றும் நண்பகல், பாலுடன் தேநீர் அல்லது கா:ஃபி. தேநீர் மற்றும் கா:ஃபியை விரும்பும் எவருக்கும் முதல் சில நாட்களுக்கு, இது அவ்வளவு எளிதாக இருக்காது. ஆனால், எளிதானதாக இருக்குமானால், ஒரு வருட கால தியாக வாழ்வின் அர்த்தம்தான் என்ன? நான் கூட எனது சுய வழியில் மிக உயர்ந்த தியாகம் செய்ய வேண்டும்.**

**பைய்யாக்கள்** (மத்திய இந்தியாவில் வாழும் வலுவான இந்து ஆண்களை இப்படி அழைப்பது வழக்கம்) **தங்கள் வாழ்நாள் முழுவதும் ஒரு நாளைக்கு ஒரு முறை உண்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர்; சப்பாத்தி மற்றும் பருப்பு வகைகளின் ஒரு பெரிய குவியல்! அவர்கள் எவ்வளவு வலிமையானவர்கள்! அதுதான் கட்டுப்பாடு. மக்கள் பசியுடன் அல்லது உபவாசம் கடைப்பிடிக்கும் போது விரைவில் உணர்ச்சிவசப்படுகிறார்கள். எனவே உங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். எலிஸபெத்திற்கு உங்கள் கா:ஃபியைக் கொடுங்கள். இந்தியா, கா:ஃபி மற்றும் தேநீர் நிறைந்த நாடு.**

**இங்கிலாந்து உணவில்லாமல் திண்டாடும். அவர்கள் அனைவரும் பட்டினியால் வாடுவார்கள். அவர்கள் எலிகள், வௌவால்கள், பூனைகள் மற்றும் வயதான ஆண், பெண்களைக் கூட உண்ணத் தொடங்குவார்கள்! எனது வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள். பின்னர் அல்லது விரைவில் போராட வேண்டியிருக்கும் என்று அமெரிக்கா இப்போது உணர்கிறது. அது பயங்கரமாக இருக்கும். இங்கிலாந்து மற்றும் :ஃபிரான்ஸ் நாடுகளை விட அமெரிக்கா எந்த வகையிலும் குறைவாக பாதிக்கப்படாது.**

**இந்த நேரத்தில் நாம் கவலைப்படும் ஒரே விஷயம், துருக்கியை இந்தக் குழப்பத்திற்குள் ஜூலை 19க்கு முன்னர் எவ்விதம் நுழையச் செய்வது!**

**1940,** ஜூலை **14** அன்று, பாபா மஸ்துகளைப் பற்றி கருத்துத் தெரிவித்தார்:

**கொல்கத்தாவைச் சேர்ந்த மஸ்த்** (கரீம் பாபா) **இன்று ஒரே நேரத்தில் நான்கு சிகரெட்டுகளைப் புகைத்தார். அவர், "நான் ராஜா** (மன்னன்); **நான் குவாஜா!** (குருநாதர்)**" என்று பாடினார்.**

**அவர் நாள் முழுவதும் ஒரே இடத்தில் அமர்ந்து, அங்கேயே மலம் கழிக்கிறார். நான் அதைக் கிருமிநாசினி தைலங்களால் சுத்தம் செய்கிறேன். அவர் நாள் முழுவதும் அமர்ந்து உடற்பயிற்சி எதுவும் செய்யவில்லை**

**என்றாலும், அவருக்கு, கல்லீரலில் பிரச்சினை எதுவும் இல்லை, தலைவலி இல்லை, அவரது குடலும் சரியாகச் செயல்படுகிறது.**

**இயற்கை அவரது உடலைப் பேணிப் பாதுகாத்து வருகிறது. அவர் நாள் முழுவதும் 'அதீத ஆழ் மன உணர்வு' (SUPERCONSCIOUSNESS) நிலையில் இருக்கிறார்.**

**இன்று முஹமது மஸ்த் நம் அனைவரையும் சிரிக்க வைத்தார். அவர் ஷரியத் கானிடம் கூறினார்: "என் மகள் இப்போது வயதிற்கு வந்துவிட்டாள், நீ அவளை நீராட்டி, உடை அணிவித்து, உணவளித்து, கல்வியும் கற்றுத்தர வேண்டும்!"**

**அதற்கு ஷரியத் கான், "ஓ, எனக்கு 99 கோடி குழந்தைகள் உள்ளன. இன்னும் ஒன்று வந்திணைவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை!" என்று பதிலளித்தார்.**

ஜூலை 15 அன்று, பதினைந்து நாட்களுக்குப் பிறகு, நடைமுறைக்கு வரவிருக்கும் கட்டுப்பாடுகளின் பட்டியல் குறித்து, பாபா மீண்டும் கருத்துத் தெரிவித்தார்:

**இந்த உத்தரவுகள் மிகவும் முக்கியமானவை. ஒருவரைப் புறங்கூறாமல் இருப்பது மிகவும் கடினம். இருந்தும், நீங்கள் எவ்வளவு முயற்சி செய்கிறீர்களோ, அவ்வளவிற்கு அதிகமாக எனக்கு உதவுவீர்கள். அவள் மோசமானவள் என்று சொல்வது மிகவும் எளிது. ஆனால் மோசமாக இருக்கும்போது, அவள் மோசமானவள் அல்ல என்று உணர்வது மிகவும் கடினம்! ஒரு நாளைக்கு ஒரு முறை உணவை எடுத்துக்கொள்வது எளிதானது, ஆனால் பிறரின் நலனைப் பற்றி சிந்திப்பது உண்மையான உதவி.**

**உங்களில் ஒருவர் அதைச் செய்தாலும், நான் மகிழ்ச்சி அடைவேன். குறைகூறி விமர்சிப்பது என்பது அனைவரின் இரத்தத்திலும் உள்ளது; ஆனால், அதில் ஈடுபடாமல் இருப்பது உண்மையான சுய கட்டுப்பாடு. உங்களிடம் மூன்று துண்டுகள் ரொட்டி மற்றும் வெண்ணெய் இருப்பதாக வைத்துக்கொள்வோம். நதியா (நதீன்) அதில் ஒரு துண்டு ரொட்டியைச் சாப்பிடுகிறார். நீங்கள் என்ன சொல்வீர்கள்? அவர் அன்பில்லாதவர், அற்பத்தனமானவர் என்று நினைப்பீர்களா? அதற்கு பதிலாக, நீங்கள் இன்னொரு துண்டை மனமார வழங்கி, அவர் அருமையானவர் என்று கூறினால், அது மிகவும் மேம்பட்ட மனநிலையைக் குறிக்கும்.**

**சுருக்கமாக, இதன் அர்த்தம் என்னவெனில், இந்த ஒரு வருடத்தின் ஒவ்வொரு கணமும், நீங்கள் தூங்கும் நேரங்களைத் தவிர, இந்தக் கட்டளைகளுக்கு நீங்கள் நேர்மையாகக் கீழ்ப்படிய விரும்பினால், மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதைத்தான் முக்கிய அம்சமாக நான் விரும்புவது. நீங்கள் காலையில் எழும் நேரத்திலிருந்து, தூங்கும் வரை, எச்சரிக்கையாக இருங்கள். உத்தரவுகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.**

**1940, ஜூலை 16ஆம் நாள், வானொலியில் வின்ஸ்டன் சர்ச்சில் (WINSTON CHURCHILL) நிகழ்த்திய உரையைக் கேட்ட பின்பு, பாபா, தனக்குத் திருப்தி அளித்திருப்பதாகக் குறிப்பிட்டு, இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: இங்கிலாந்து தோல்வி அடைவதை விடவும், மிகவும் மோசமான நிலையை சந்திக்கும்; அவள் உதவியற்றவளாகி விடுவாள். பின்னர் உலகில் அனைத்தும் சீராகிவிடும். நாம், அன்று இரவு சர்க்கஸ் அரங்கத்தில் சிங்கம், ஆடு, மாடு அனைத்தும் ஒரே தட்டிலிருந்து ஒன்றாக உண்ணுவதைப் பார்த்தது போல், எந்தப் பயிற்சியாளரும் இல்லாமல், ஆனால் என் உதவியுடன், ஜெர்மனியர்கள், இந்தியர்கள், ஆங்கிலேயர்கள் அனைவரும் ஒரே தட்டிலிருந்து உண்பார்கள்!**

**ஹிட்லர், சர்ச்சிலைத் தனக்குப் பொருத்தமானவராகப் பார்க்கிறார். இந்தப் போரில் இன்னும் பல ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன. இரு நாடுகளும் இன்று ஒன்றிணைந்து, நாளை ஒன்றோடு ஒன்று மோதி, ஒரு குழப்பமான சூழலில் சிக்கிக் கொள்ளக் கூடும். ஹிட்லர் ஐரோப்பாவை விரும்புகிறார்; ஜப்பான் கிழக்கு அனைத்தையும் விரும்புகிறது. ஐரோப்பாவில், பிரிட்டன் ஜெர்மனியை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்காது. ஆனால் அமெரிக்கா, ஜப்பானுடன் போரிடுமா, அல்லது ஆசியாவின் கட்டுப்பாட்டை ஜப்பானுக்கு அனுமதிக்குமா? அமெரிக்கா அதன் களிப்புணர்ச்சிக்காகவே போராடும்.**

**ஒரு முறை நான் குஜராத்தில் மண்டலியுடன் நடைப்பயணம் மேற்கொண்டபோது, நர்மதா நதியைக் கடக்க வேண்டியிருந்தது; மண் தரை மிகவும் வழுக்கலாக இருந்தது. கால்கள் முழங்கால் அளவிற்கு மூழ்கின. பார்சோப் என்றழைக்கப்படும் எனது மண்டலியில் ஒருவர் மார்பளவு ஆழத்திற்குள் புதைந்து மாட்டிக்கொண்டார். அவரை வெளியே எடுத்து உதவ நான் வேறொரு மண்டலியை அனுப்பினேன். பார்சோப் தடித்தவராக இருந்ததால், அவரை வெளியே இழுக்க அதிக வலிமை தேவைப்பட்டது, ஆனால் அதற்கு மாறாக, உதவச் சென்றவர் தனது கழுத்து வரை சேற்றில் சிக்கிக்கொண்டார்! அவர்கள் இருவரையும் வெளியே இழுக்க இன்னும் சில ஆண்களை அனுப்பினேன்.**

**இப்படித்தான் முஸோலினியும் ஹிட்லரை சிக்கலில் மாட்டச் செய்வார். அது, இன்று இல்லை என்றாலும், அப்படித்தான் நடக்கும். பின்னர் இருவரும் மாட்டிக்கொள்வார்கள். முஸோலினி, ஹிட்லரை மாட்டிவிடப் பார்க்கிறாரா? முஸோலினி போரில் பயனற்றவர், ஆனால் வேண்டுமென்றே அல்ல. எதுவாயினும், இதற்கிடையில் ஹிட்லர் இறந்துவிட்டால்?**

இந்த நேரத்தில் பப்பா ஜெஸவாலாவிற்கு, ரங்கூனில் வாடகைக்குப் பொருத்தமான பங்களாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் இதைத் தொலைத்தந்தி வழியாக, பாபாவிற்குத் தெரிவித்ததும், அவர் பர்மாவுக்கான தனது பயணத்தை உடனடியாக ரத்து செய்தார். பப்பா கொல்கத்தாவிற்குத் திரும்பினார்;

மன்மாட் அருகே **'அங்காய்'** மலையில் பொருத்தமான இடத்தைத் தேடும் புதிய அறிவுறுத்தல்களுடன் பாபா அவரை சந்திக்க, சாஞ்சியை அனுப்பி வைத்தார். கொல்கத்தாவிலிருந்து, பப்பா நேரடியாக மன்மாடுக்குச் சென்றார்.

ஜூலை 15ஆம் நாள், பாபா ராஞ்சியிலிருந்து, கரீம் பாபாவுக்காக மெஹராபாத் மேல்மலை மஸ்த் ஆசிரம அறையில், மூங்கில் கூண்டு ஒன்றைக் கட்டுமாறு பெண்டுவிற்குத் தொலைத்தந்தி அனுப்பினார். பாபா, பெரும்பாலான ஆண் மண்டலியை, மஸ்துகளுடன் மெஹராபாத் திரும்புமாறு அறிவுறுத்தினார், அதே நேரத்தில் அவர், சாஞ்சி, காக்கா மற்றும் பெண் மண்டலியுடன் ஜூலை 19ஆம் நாள் கொல்கத்தாவிற்கு ரயிலில் புறப்பட்டார்.


மறுநாள் காலை கொல்கத்தா வந்து மெஜஸ்டிக் ஹோட்டலில் (MAJESTIC HOTEL) தங்கினர். கிழக்கத்திய பெண்களுடன் பயணம் செய்வது மேலும் அவர்களைத் தனிமைப்படுத்தி மறைத்து வைப்பது, சில நேரங்களில் மிகவும் கடினமாக இருந்தது. எந்தவொரு மனிதனும் தவறியாவது அவர்களைப் பார்க்கக்கூடாது என்பதற்காக, சில நேரங்களில் ரயில் அல்லது பஸ் ஜன்னல்களைத் திரையிட்டு மறைக்க வேண்டியிருந்தது.

கொல்கத்தாவில் பாபா, பெண்மணிகளை தாவரவியல் பூங்காவைப் பார்வையிட அழைத்துச் சென்றார்; அங்கு ஒரு பெரிய ஆலமரம் இருந்தது, இது ஒரு காலத்தில் 15,000 ஆங்கிலேய போர் வீரர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது. அவர்கள் மிருகக்காட்சிசாலை, ஜெயின் கோயில், புனிதப்படுத்தப்பட்ட காளி கோவிலுக்கும் விஜயம் செய்து, பின்பு நகரின் பெரிய சந்தைகள் வழியாக நடந்து சென்றனர்.

அடுத்த நாள் அவர்கள் செல்லப்பிராணிகள் பஜாரில் ஒரு பறவையையும், வாலில்லா குரங்கு ஒன்றையும் கையகப்படுத்தினர், பாபா அதற்கு 'ஜம்பு' என்று பெயரிட்டார்; அது கடந்து செல்லும் போது பாபாவின் சட்டையைப் பற்றிக் கொண்டது. ஜம்பு உடலிலிருந்து துர்நாற்றம் வீசியது, ஆனால் மிகவும் பாசமாக இருந்து, விரைவில் அனைவரையும் நேசிக்கத் தொடங்கியது.

குரங்கை கவனிக்கும் பொறுப்பு நோரினாவிற்கு வழங்கப்பட்டது. அவர்கள் மீண்டும் மெஹராபாத்திற்கு ரயிலில் பயணம் செய்தபோது நடத்துனரிடமிருந்து அதை மறைக்க வேண்டியிருந்தது.

பாபாவும் குழுவும் ரயிலில் கொல்கத்தாவிலிருந்து புறப்பட்டு, ஜூலை 23 நள்ளிரவில் சக்ரதார்பூரை வந்தடைந்தனர்; அங்கிருந்து குழுவுடன் மெஹராபாத் திரும்பிச் செல்ல இதர மண்டலி காத்திருந்தனர். முஹமது மஸ்த், ஷரியத் கான், கரீம் பாபா அவர்களும் உடன் இருந்தனர். அவர்களை ரயிலில் ஏற்றிச் செல்வது மண்டலிக்கு ஒரு பெரிய தலைவலியாக இருந்தது. உண்மையில், சட்டி பாபா ரயிலில் ஏற மறுத்து அங்கிருந்து காணாமல் போய்விட்டார். எனவே டான், ஸவக் மற்றும் பைதூல் அவரை இரண்டு நாட்களுக்குப் பின்னர் அழைத்து வந்தனர்.



முஹமது மஸ்துடன் மெஹர் பாபா, **1940**

**(**MEHER BABA WITH MOHAMMED MAST**)**

# மீண்டும் ஏகாந்தவாசம் - மெஹராபாத்

**(Seclusion Again at Meherabad)**

**1940,** ஜூலை **25** காலை **10:30** மணிக்கு மெஹராபாத் திரும்பி வந்ததும், பாபா, அவரது மஸ்த் பணியில் மூழ்கினார். மேல்மலையில் தயாராக இருந்த மூங்கில் கூண்டில் கரீம் பாபா தங்க வைக்கப்பட்டார். சட்டி பாபா, முஹமது, ஷரியத் கான் ஆகியோர் மேல்மலையின் மஸ்த் ஆசிரமத்திற்குள் தனி அறைகளில் தங்க வைக்கப்பட்டனர். இதர மஸ்த் மற்றும் மனநிலை பாதிக்கப் பட்டவர்கள் பாபா இல்லாத நேரத்தில் குடும்ப குவாட்டர்ஸில் தங்கியிருந்தனர்.

அனைவரும் திரும்பி வந்ததும், மெஹர் பாபா, பெண்மணிகளுக்கு இவ்வாறு அறிவித்தார்:

**உங்களுக்கான உத்தரவுகளை நாளை வழங்குவேன். பிறரை புறங்கூறி மோசமாகப் பேசுவது ஒன்றைத் தவிர, நீங்கள் அனைத்தையும் பின்பற்றுவீர்கள் என்று எனக்குத் தெரியும்! நீங்கள் அதைக் கடைப்பிடிக்க மாட்டீர்கள். கடந்த சில நாட்களாக நான் அதையெல்லாம் கவனித்து வருகிறேன். நீங்கள் கீழ்ப்படிகிறீர்களா, இல்லையா என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை, ஆனால் நீங்கள் கீழ்ப்படிந்தால் எனக்கு உதவுவீர்கள். இல்லையேல் உங்களால் எந்த உதவியும் இல்லை. எனக்கிருக்கும் ஒரே நம்பிக்கை - அதுவும் ஒரு சதவீதம் மட்டுமே - ஆகஸ்ட் 1 முதல் நீங்கள் உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யலாம். எல்லோரும் சண்டையிடுகிறார்கள், இந்த உத்தரவைப் பொறுத்தவரை அனைவரும் நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள்! அதைக் கடந்து செல்ல உங்களால் முடிந்தவரை முயற்சிக்கவும். உங்களிடையே நிகழும் சண்டை சச்சரவுகள் அனைத்தும் குழந்தைத்தனமானது, எந்த அர்த்தமும் இல்லை. நீங்கள் முயற்சித்தால் கட்டுப்படுத்த முடியும், ஆனால் முயற்சிப்பது என்பது என்னை நினைப்பது. சில மணிநேரங்களுக்கு உங்களைப் பார்க்க நான் வாரத்திற்கு ஒரு முறை வருகை தருவேன், பின்பு நான் அருகிலுள்ள மலைக்குச் சென்றாலும், வாரத்திற்கு ஒரு முறை வருவேன்.**

**(இங்கு நான் வரும் முதல் மணிநேரம்) நான் இந்த வீட்டில் சிறுமிகளுடன் (மெஹரா, மணி, நாஜா, கோர்ஷெத்) செலவிடுவேன், இதனால் மெஹராவும் என்னைப் பார்த்த திருப்தியில் இருப்பார். பின்னர் உங்கள் அனைவரையும் அழைத்து உங்களுடன் சில மணி நேரம் உரையாடுவேன். ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட கடமை இருக்கும், அதை நீங்கள் முழு மனதுடன் செய்ய வேண்டும். உங்களுக்குக் கோபம் வரவில்லை என்றால், நீங்கள் ஒரு கல். உங்களுக்குக் கோபம் வரும் வேளையில் அதைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், நீங்கள் ஒரு மிருகம். நீங்கள் கோபமடைந்து அதைக் கட்டுப்படுத்த முடிந்தால் நீங்கள் ஒரு தேவதை, ஒரு துறவி! ஒருவரின் இயல்பு மற்றும் பழக்கத்திற்கு எதிராகச்**

செல்வது எல்லா வகையிலும் உதவியாக இருக்கும். கோபப்படாமல் இருப்பது எவ்விதத்திலும் உதவாது; ஆனால் நீங்கள் அதை வெளிப்படுத்தக்கூடாது! இயலாமையால் எந்த உதவியும் இல்லை.

நீங்கள் என்னை நினைவில் கொண்டால், இந்த உத்தரவுகள் உங்களுக்கு எளிதாக இருக்கும். யோகா என்றால் கட்டுப்பாடு; இது உங்கள் கைகளைத் துண்டித்து, கண்களை இழப்பதை விடக் கடினம்! உங்களின் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டுங்கள் என்று கிறிஸ்து கூறியது, கட்டுப்பாட்டைக் குறிக்கிறது. ஆனால், நீங்கள் கன்னத்தில் அறையை வாங்கிக்கொண்டு அமைதியாக இருந்தால், உலகம் உங்களை ஒரு கோழை அல்லது வெட்கம் கெட்டவர் என்று கருதுகிறது. அப்பாவித்தனமும், நியாயமும் நிறைந்த விமர்சனம் ஒருவர் மனதைப் புண்படுத்தாது; அது நல்லது, ஆனால் மிகவும் அரிதானது. பிறரைப் புறங்கூறி மோசமாகப் பேசுவதைக் குறித்து நான் சொல்வது என்னவெனில், உணர்ச்சிவசப்பட்டு கோபத்துடன் விமர்சிக்கும்போது, அது ஒருவர் மனதைப் புண்படுத்தும்; நீங்கள் அன்பு மற்றும் தயவுடன் விமர்சிக்கும்போது, அது எவ்வாறு புண்படுத்தும்?

கௌதம புத்தர் தனது வட்டத்து சீடர்களுக்கு, பன்னிரண்டு கட்டளைகளை வழங்கினார், அதில் முதலாவதாக, ஒரு பெண்மணியைப் பார்ப்பதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வது. அவர் தனது சீடர்களில் எவருக்கும் காம உணர்வால் சிறிதளவேனும் 'ஆபத்து' ஏற்படக்கூடாது என்பதையும், எந்தப் பெண்மணியையும் பார்க்காமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார். இது அவருடைய சீடர்களில் ஒருவித 'பலவீனத்தை' ஏற்படுத்தும் என்பதை அவர் அறிந்திருந்தார் - பெண்களின் சகவாசத்தில் இருக்கும்போது எப்போதும் பதட்டமாக இருப்பர் - ஆனால் இந்தப் 'பலவீனம்', 'ஆபத்தை' விடவும் சிறந்தது என்பதையும் புத்தர் அறிந்திருந்தார்.

எந்தவொரு கருத்தும் அல்லது விமர்சனமும் மனதைப் புண்படுத்தாத வரையில் நல்லது. கேலி, கிண்டல் செய்து நகைச்சுவையாகப் பேசுங்கள் ஆனால் எவரையும் காயப்படுத்தாதீர்கள், எதிர்த்துப் பேசாதீர்கள். பிறரின் குறைபாடுகளை அன்பாக, வெறுப்பு அல்லது பகை உணர்வின்றி சுட்டிக்காட்டினால், பரவாயில்லை. அன்புடன் வாதிடுவது கூட அனுமதிக்கப்படுகிறது. எனக்கு உதவ உங்களால் முடிந்தவரை முயற்சிக்கவும், எனது விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுவதன் மூலம் நீங்கள் அதைச் செய்ய முடியும். பிறரைக் காயப்படுத்தும் உங்கள் பிரியமான பழக்கத்தைத் தியாகம் செய்யுங்கள். காமம், கோபம், பேராசை ஆகியவற்றைக் கடந்து செல்லப் போராடுங்கள். கட்டுப்படுத்துவது என்பது நீங்கள் வழக்கமாகச் செய்வதைச் செய்யாமல் இருப்பது அல்ல.

எனது பணி, எனது சுய உயர்வான தியாகத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், உங்களது இந்தத் தியாகங்கள் எனது பணியை

**எளிதாக்கும். நீங்கள் ஒரு முறை தோல்வியடைந்தால், துவண்டு விடாமல், மீண்டும் முயற்சிக்கவும். நீங்கள் ஒரு முறை வெற்றி கண்டால், எனக்குப் பெருமளவில் உதவி செய்திருப்பீர்கள். நீங்கள் ஒன்பது முறை தோல்வியுற்று ஒரு முறை வென்றாலும், அதுவும் எனக்கு உதவும். ஒரு மனிதன் உஷ்ணமாக உணர்ந்தால், காய்ச்சல், பசி அல்லது உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், அவன் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கோபமாக இருப்பான். உங்களுக்குப் பல் வலி இல்லாத வேளையைக் காட்டிலும், பல் வலிக்கும் போது, ஏதேனும் விஷயத்தில் உணர்ச்சிவசப்பட்டு, கோபமடைவது இயல்பான ஒன்று. பல்வலியுடன் ஒப்பிடும்போது, காமம், கோபம், பேராசை போன்றவை மிகவும் பயங்கரமான நோய்கள். அவற்றிலிருந்து உங்களை விடுவிக்க முயற்சி செய்யுங்கள்.**

**ஆன்மீகத்தில் சமரசம் என்பதற்கு இடமே இல்லை. ஒவ்வொரு ஆசையும் நூறு சதவிகிதம் அழிக்கப்பட வேண்டும். அது 'உண்டு' அல்லது 'இல்லை!' இடைநிலை என்பதற்கு இடமே இல்லை!"**

அடுத்த நாள், பாபா ஆண் மண்டலிக்கு விளக்கினார்:

**இந்த உத்தரவுகளை மிகவும் கண்டிப்பாகவும் தீவிரமாகவும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். இந்த முக்கியமான காலகட்டத்தில், மனிதகுலத்தின் ஆன்மீக மறுவாழ்வுக்கான எனது பணியில் இது பேருதவியாக இருக்கும். இதற்கு, மிக உயர்வான சுய தியாகம் தேவை, இந்தத் தியாகத்தில் என் அன்பர்கள் அனைவரும் அவரவர் திறனுக்கு ஏற்ப பங்கேற்க விரும்புகிறேன். இந்த உத்தரவுகளை இலகுவாகக் கருத வேண்டாம், ஆனால் இது போன்ற ஒரு காலத்திற்குத் தேவைப்படும் மிகப்பெரிய அதிகாரபூர்வமான ஆணையாக எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் ஒவ்வொருவரும் அவரவர் பங்கை அளித்தாக வேண்டும். ஒவ்வொரு முயற்சியும் முக்கியமானதாகக் கருதப்படும்.**

போர் மற்றும் அதன் தலைவர்களைப் பற்றி, பாபா ஒரு முறை ஆண்களிடம், "**ஹிட்லர் தலைமை வில்லன், சர்ச்சில் கதாநாயகன், மற்றும் முஸோலினி எனது தெய்வீக நாடகத்தில் நகைச்சுவை நடிகர்"** என்று குறிப்பிட்டார்.

அந்த நாளின் பிற்பகுதியில் (ஜூலை 26), பெண்மணிகளுக்கு அதே கருப்பொருளை விரிவுபடுத்தி, பாபா, கூறினார்:

**இந்தப் போர் ஒரு பெரிய நாடகம். கதாநாயகன், கதாநாயகி, வில்லன் அனைவரும் நாடகத்தில் தங்கள் பங்கை வகிக்கிறார்கள். கடவுளின் இந்த நாடகத்தில், ஹிட்லர் வில்லனாக நடித்தால் அது அவருடைய தவறு அல்ல. அவர் தனது பங்கை நன்றாக நடிப்பது நல்லது. நான் வில்லன்கள், கதாநாயகன், கதாநாயகிகள், தேவதைகள், பிசாசுகள் போன்றவற்றை விரும்புகிறேன் - ஒவ்வொருவரும் தத்தமது பாத்திரத்தை சரியாகச் செய்கிறார்கள்!**

பின்னர் பாபா, பெண்மணிகளுக்குத் தங்கள் கடமைகளையும் ஒரு வருடத்திற்குப் பின்பற்ற வேண்டிய தனிப்பட்ட உத்தரவுகளின் பட்டியலையும் வழங்கினார். இந்தக் காலகட்டத்தில் நதீன், ஐரீன், மன்ஸாரி, கர்மான் மாசி ஆகியோரை மௌனம் காக்க அவர் அறிவுறுத்தினார்.

செல்லக்குரங்கு ஜம்புவைத் தவிர, மேல்மலையில் வைக்கப்பட்டுள்ள இதர பிராணிகளுடன் வேறொரு புதிய ஜெர்மன் ஷெஃப்பர்ட் (GERMAN SHEPHERD) நாய்க்குட்டியும் வந்திணைந்தது. பாபா, சுத்த கருப்பு நாய்க்குட்டியிடம் சிறப்பு ஆர்வம் காட்டி அதற்கு 'வாரியர்' (WARRIOR) என்று பெயரிட்டார்.

பாபா ஏகாந்தவாசத்தைத் தொடங்குவதற்கு முன்பு, பல நெருங்கிய அன்பர்கள் மெஹராபாத்திற்கு வந்தனர். ராம்ஜூ ஜூலை 26 மாலை வந்து பாபாவை சந்தித்து, அதே இரவு நாசிக் திரும்பிச் சென்றார். தொடர்ந்து சில நாட்கள் ஜால்பாய், மானேக் ரஞ்சி, ஸரோஷ், விலூ, நௌஷேர்வான் ஸட்டா, அலோபா ஆகியோரும் வந்தனர்.

மன்மாட் கிராமத்திலிருந்து பத்து மைல் தொலைவில் அமைந்த 'அங்காய்' (ANKAI) மலை, ரிஷி அகஸ்திய முனி (SAGE AGASTYA MUNI) கடுமையான தவம் புரிந்த இடம். உபாஸனி மஹாராஜும் அங்கே சிறிது காலம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்தார், மேலும் அந்த இடம் ஆன்மீக மகிமையால் நிரம்பியுள்ளதாக, பாபா, தெரிவித்தார்.

பப்பா ஜெஸவாலா, காக்கா பாரியா ஆகியோர் 1940, ஜூலை 26 அன்று அங்காய் மலையின் சில குகைகளைப் பார்வையிட அனுப்பப்பட்டனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு, பப்பா ஜெஸவாலா, குஸ்தாஜி, பிளீடர், ஸவக் மற்றும் சுவாமி பபானந்தா ஆகிய ஐந்து பேர் அடங்கிய குழுவை ஒரு முழு வருடம் அங்காய் குகைகளில் தங்க அனுப்பிவைத்தார், இது மெஹராபாத்தில் பாபாவின் ஏகாந்தவாசத்துடன் தொடர்புடையதாக இருந்தது. குஸ்தாஜி ஏற்கனவே மௌனம் கடைப்பிடித்து வந்தார்; இப்போது அவருடன் பிளீடர், ஸவக், பபானந்தா ஆகியோரும் மௌனம் அனுஷ்டிக்குமாறு பாபா உத்தரவிட்டார். பப்பா அவர்களின் செய்தித் தொடர்பாளராகப் பணிபுரிந்தார். அனைவரும் பப்பாவிற்கு 'கீழ்ப்படிய வேண்டும்' மேலும் பப்பா அவர்களை நன்றாக கவனித்துக் கொள்ளுமாறும் பாபா அறிவுறுத்தினார். குழு, அங்காய் மலைக்குப் புறப்பட ஆயத்தமானபோது, மெஹர் பாபா, பப்பாவை தீவிரமாக ஊக்குவித்தார், **"அங்காய் மலையில் நீங்கள் கடைப்பிடிக்கும் கடுமையான தவம் உங்கள் ஆன்மீக முன்னேற்றத்தை உறுதி செய்யும்."** பப்பா மற்றும் பிறரின் 'ஆன்மீக முன்னேற்றம்' எவ்வாறு அடையப்பட்டது என்பதை விரைவில் காணமுடியும்!

சுவாமி பபானந்தா, ராமேஸ்வரம் மற்றும் பண்டர்பூருக்கு யாத்திரை மேற்கொண்ட பிறகு, பெங்களூரில் தங்கியிருந்தார், பின்பு மண்டலியுடன் மெஹராபாத் சென்றார். காளேமாமா, ஆதி சீனியர், டாக்டர் கனி, தத்து மெஹன்தர்கே, சிது ஆகியோர் பெங்களூரில் வசித்து வந்தனர். ஜூலை 8ஆம்

நாள் பைரமங்களா கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டதால், பாதிரி, மாஸாஜி, முரளி ஆகியோர் பெங்களூருக்குச் சென்றிருந்தனர். நௌரோஜி தாதாசாஞ்சி மும்பையில் தனது குடும்பத்துடன் மீண்டும் வந்திணைந்தார். காக்கா பாரியா, சாஞ்சி இருவரும் மும்பையில் மெஹர் பாபா பற்றிய புத்தகங்களை விநியோகித்தனர். சகன் மெஹராபாத்தில் 'மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்' ஆசிரமத்தின் பொறுப்பில் இருந்தார்; அதே வேளையில் அவரது மனைவியும் மகளும் அரன்காவ்ம் குடும்ப குவாட்டர்ஸில் தங்கியிருந்தனர். மேல்மலை மஸ்த் ஆசிரமம் பைதூலின் பொறுப்பில் இருந்தது. பெண்டு, ஸெயிலர், ஹோமி, டான், நீலு, மாஸாஜி, கிருஷ்ணா, காளேமாமா, சகோதரர் அண்ணாஸாஹேப் காளே, விஷ்ணு மற்றும் விஷ்ணுவின் தாயார் காக்குபாய் அனைவரும் கீழ் மெஹராபாத்தில் தங்கியிருந்தனர். மாஸாஜி, காளேமாமா, அண்ணாஸாஹேப் காளே ஆகியோரும் ஆகஸ்ட் 1ஆம் நாள் முதல் மௌனம் கடைப்பிடிக்குமாறு உத்தரவிடப்பட்டனர்.

1940, ஆகஸ்ட் 1ஆம் நாள், பாபா மெஹராபாத் மேல்மலை மஸ்த் ஆசிரமத்தில் மாலை நான்கு மணிக்கு, அன்றைய அஞ்சலைப் பார்த்த பின்னர், ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார். பாபா, நாள் முழுவதும் தண்ணீர் மட்டும் அருந்தி உபவாசம் இருந்தார். அதன் பின்னர், அவர் தனது அன்பர்கள் சிலருக்கு அறிவுறுத்தியபடி, நாளுக்கு ஒரு முறை மட்டுமே திட உணவை உண்டார். விஷ்ணுவைத் தவிர வேறு எவரும் (மண்டலி உட்பட) அவரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை; விஷ்ணு, தபால் தந்தி மற்றும் செய்திகளுடன் பாபாவிடம் சென்றார். அனைத்து கடிதங்களும் நிறுத்தப்பட்டதால், ஒவ்வொரு நாளும் ஐந்து அல்லது ஆறு கடிதங்களுக்கு மேலாக வரவில்லை.

எனவே விஷ்ணு தினமும் காலையில் ஒரு முறையும், தொலைத்தந்தி ஏதேனும் இருந்தால் மறுபடியும் பாபாவிடம் சென்று வந்தார். சில நேரங்களில் பெங்களூரில் இருந்த ஆதி சீனியர், பாபாவிற்கு எழுதினார், ஆனால் பாபா அந்தக் கடிதங்களைப் படிக்காமல், "**கடிதப் போக்குவரத்து நிறுத்தப்பட்டதை அறிந்த ஆதி ஏன் எழுதுகிறார்?**" என வினவினார்.

ஏகாந்தவாசத்தின் போது மெஹர் பாபாவைப் பார்க்கும் பாக்கியசாலியான விஷ்ணுவைத் தவிர, மற்றுமோர் இளம் ஊழியர் கஷ்யா எஸ். காம்ப்ளே, (KASHYA S KAMBLE - 22), தினமும் காலைவேளையில் பாபாவுக்காக, 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' (TIMES OF INDIA) பத்திரிகையை எடுத்துச் செல்வது வழக்கம். எவ்வாறாயினும், மெஹராபாத் ஆண், பெண் மண்டலியின் உடல்நலம், பணி, கடமைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து விஷ்ணுவிடம் கேட்டறிவதில் பாபா எப்போதுமே குறிப்பாக இருந்தார்.

கிருஷ்ணா, மெஹர் பாபாவின் தனிப்பட்ட உதவியாளராக இருந்தார், மேலும் பாபாவுக்காக, அவரது தேநீர், உணவு மற்றும் தண்ணீரை எடுத்துச் சென்றார்; ஆனால் அவர் இந்த நேரத்தில் பாபாவைப் பார்த்ததில்லை. பாபா ஒரே அறையில் தங்காததால் மஸ்த் ஆசிரமத்தின் வளாகத்தில் அங்குமிங்கும் நகர்ந்து,

நான்கு மஸ்துகளை நீராட்டி, சட்டி பாபாவுடன் ஏகாந்தவாசத்தில் பணியாற்றினார். ஒவ்வொரு முறையும் கிருஷ்ணா அங்குக் காலடி எடுத்து வைக்கும் வேளையில், பாபா, கண்ணில் படாமல் மறைந்து கொண்டார். பாபா வெளி உலகத்திலிருந்து முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டு, மஸ்துகளுடனான பணியில் முழு வீச்சில் ஈடுபட்டார்.

கிருஷ்ணா ஆசிரமத்தில் 'உள்ளே' வருவதற்கான கீழ்வரும் கால அட்டவணை வெளியிடப்பட்டது.

காலை 5:00 - 6:00 மணி - பாபா நீராடி, காலைக்கடன்களை முடிக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

காலை 7:00 மணி - ஐந்து நிமிடங்களுக்கு மட்டுமே தேநீர் கொண்டு வரவும், சலவைக்கான துணி மணிகளை எடுத்துச் செல்லவும்.

காலை 7:30 - 9:30 மணி - தேநீர் பாத்திரங்களை எடுத்துச் செல்லவும், பாபாவின் கழிவறை மற்றும் சட்டி பாபாவின் அறையை சுத்தம் செய்து, பின்பு சட்டி பாபாவை நீராட்டவும், காலை சிற்றுண்டியும் ஏற்பாடு செய்ய வேண்டும். பாபாவின் குடிநீரை எடுத்து வந்து, பயன் படுத்திய பாத்திரங்களை எடுத்துச் செல்லும் முன், பாபாவின் அறையை சுத்தம் செய்ய வேண்டும்.

மதியம் 2:00 மணி - பாபாவின் மதிய உணவைக் கொண்டுவர ஐந்து நிமிடங்கள்.

பிற்பகல் 4:00 - 5:00 மணி - பாபாவின் படுக்கையைத் தயார் செய்து, உணவு பாத்திரங்களை எடுத்துச் செல்லவும், சட்டி பாபாவிற்குத் தேவையான உணவையும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாலை 6:00 மணி - பாபாவின் தேநீர் மற்றும் சுத்தம் செய்த துணிகளை எடுத்துவர பத்து நிமிடங்கள்.

மாலை 6:30 மணி - தேநீர் பாத்திரங்களை எடுத்துச் செல்ல பதினைந்து நிமிடங்கள், மற்றும் பாபாவின் கழிப்பறையை சுத்தம் செய்து, ஒளிரும் விளக்குகளை ஏற்றி வைக்கவும்.

ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்பு, பாபா பெண்மணிகளை மூன்று குழுக்களாகப் பிரித்தார். ஒரு குழு மற்றொரு குழுவின் உறுப்பினர்களுடன் உரையாடக்கூடாது. கிட்டி, அவர்களுக்கிடையே தகவல் பரிமாற்றங்களைச் செய்ய வேண்டும். பெண்மணிகள் தங்கிய மேல்தளத்தில், ஒவ்வொரு குழுவிற்கும் சிறிய சிறிய அறைகளாகப் பிரிக்கப்பட்டது. பாபா, வாரம் ஒரு முறை, ஒவ்வொரு வியாழக்கிழமை பிற்பகல் 1:30 முதல் மாலை 8:00 மணி வரை, பெண்கள் தங்குமிடத்திற்கு வந்தார், அவர் ஏகாந்தவாசம் மேற்கொண்ட காலத்தில், ஒவ்வொரு காலையிலும் கடவுளின் ஏழு நாமங்களை உச்சரிக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு நாளும் காலை 4:30 முதல் 7:00 மணி வரை, 9:00 முதல் பிற்பகல் 3:00 வரை, மற்றும் இரவு 8:00 மணியிலிருந்து மஸ்துகளுடன் முழு வீச்சாகப் பணிபுரிந்தார்; வெளியிலிருந்து வரும் சிறிய சத்தத்தையும்

பொறுத்துக்கொள்ள மாட்டார்.

1940, ஆகஸ்ட் 8ஆம் நாள், மெஹர் பாபா, பெண் மண்டலியைப் பார்க்க வந்தபோது கரீம் பாபாவைப் பற்றி மேலும் கூறினார்:

**கொல்கத்தாவிலிருந்து வந்த இந்தப் புதிய மஸ்த் மிகவும் அரிய வகையைச் சார்ந்தவர். அவருடைய இந்த நிலையை அடைய ராமகிருஷ்ணா மற்றும் விவேகானந்தர் ஏங்கினர். அவர் ஒருபோதும் எதையும், அருந்த நீர் கூடக் கேட்பதில்லை. அவருக்காக நீங்கள் எதை வைத்தாலும் அவர் அதை உண்கிறார்... நாங்கள் ஒரு முறை அவர் முன்னால் சுமார் 200 சிகரெட்டுகளை வைத்தோம், அனைத்தையும் புகைத்து விழுங்கி விட்டார், ஒரே நேரத்தில் நான்கு சிகரெட்டுகள் மற்றும் கடைசி துண்டுகளையும் விழுங்கினார்! இது தனித்துவமானது. பின்னர் அவர் மீண்டும் தூங்கச் செல்கிறார். அவர் அமர்ந்து இருக்கிறார் அல்லது தூங்குகிறார். என்னுடைய பணியின் நிமித்தம் நான் அவரை விழித்திருக்கச் செய்யும்போது, அவர் தொடர்ந்து சிகரெட்டுகளைப் புகைக்கிறார்; பின்பு மீண்டும் தூங்கச் செல்கிறார், இருப்பினும் அவரது தூக்கம் சாதாரண தூக்கம் அல்ல, ஆனால் மனித உணர்விற்கு அப்பாற்பட்ட 'ஆழ் மன உணர்வு நிலை'.**

**நான் அவர் முன்னால் 50 வெற்றிலைப் பொட்டலங்களை வைத்தபோது, அவர் முழுவதையும் ஒன்றாக விழுங்கினார், அவர் அதை ரசித்து உண்ணவில்லை. எப்படி உண்டாலும் அவரைப் பொறுத்தவரை அனைத்தும் ஒன்றுதான். அவருக்கு உடலைப் பற்றிய சிறிதளவு உணர்வும் இல்லை. அவர் இப்போது ஒரு கூண்டில் அடைக்கப்பட்டு இருக்கிறார். நான் அவரைப் பூட்டியே வைத்துள்ளேன். ஏன் என்று உங்களால் யூகிக்க முடியுமா?**

**இந்தக் குழந்தை மஸ்த் கோபமடையும் போது அவர் யாருடைய கட்டுப்பாட்டிற்கும் அடங்காதவர்; 100 நபர்களால் கூட அவரைக் கட்டுப்படுத்த முடியாது. அவர், அவ்வாறு கோபமடையும் நேரத்தில், நான் சென்று அவரை அமைதிப்படுத்துகிறேன். ஒரு குழந்தை குழந்தைதான், ஒரு பைத்தியம் பைத்தியம்தான், அதுபோல் ஒரு பேயும் பேயேதான். ஆனால் இந்த வகையைச் சார்ந்த மஸ்த் மூன்றையும் ஒன்றாகக் கொண்டவர்! அவர் அப்படிச் செயல்படும்போது, அதற்குப் பின்னால் ஒரு காரணமும் உள்ளது. உலகம் மற்றும் மனிதகுலத்தின் மாற்றங்களும் பணிகளும் மேல்நிலையை அடைந்த ஆத்மாக்கள் (மஸ்துகள்) மூலமாக, பரிபூரண நிலையை அடைந்த குருநாதர்களால் (சத்குருக்கள்) செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் துறவி ஏன் இத்தகைய வன்முறையில் ஈடுபடுகிறார்? எல்லையற்ற இறை சக்தி, பௌதீக உடல் வழியாக அதனை வெளிப்படுத்தும்போது, பௌதீக உடல், எதிர் வழியில் நேர் மாறாக வினைபுரிகிறது, ஏனெனில், பௌதீக உடல் கடவுளுக்கு நேர் எதிரானது.**

**நான் ராஜபோக நிலையிலிருந்த மஸ்தை (ஃபூல்வாலா) பெல்காவ்முக்குத் திரும்ப அனுப்பி, இந்தக் குழந்தை மஸ்தை (கரீம் பாபாவை) அவருடைய இடத்தில் கொண்டு வந்தேன். இருவரும் மிக்க**

**ஆரோக்கியமாக, சளி, இருமல் போன்ற தொந்தரவு எதுவும் இல்லாமல் இருக்கிறார்கள், உடலைப் பொருட்படுத்தாமல் இருப்பதால் ஒருபோதும் அஜீரணம் ஏற்படாது. 'ராஜபோக மஸ்த்' மற்றும் 'குழந்தை மஸ்த்' இவர்களை ஒருபோதும் உடல்நலம் பாதிப்பதில்லை, ஏனெனில் அவர்களின் உடல் அவர்களுக்கு அடிமை, அவர்கள் ஒருபோதும் உடலுக்கு அடிமைகளாக இருப்பதில்லை.**

எலிஸபெத் உடனே, "இருந்தும் ராமகிருஷ்ணா புற்றுநோயால் தாக்கப்பட்டார்" என்றார்.

**எல்லா சத்குருக்கள் மற்றும் அவதார புருஷர்களுக்கும் சில ஆழமான காயங்கள் இருக்கும். நான் அதை என் கன்னத்தில் வைத்துள்ளேன். அது ஒரு துளை. குல்மாய் அதைப் பார்த்திருக்கிறார். இதை, புண்புரை அல்லது பௌத்திரம்** (FISTULA) **என்று அழைக்கலாம். இது சில நேரங்களில் நன்றாகவும், சில நேரங்களில் தொல்லையும் தரக்கூடியது.**

மெஹர் பாபா, மஸ்துகளைப் பற்றி தொடர்ந்து கூறினார்:

**இப்போதெல்லாம், சட்டி பாபாவை நீராட அழைத்தால் வர விரும்புவதில்லை. எனவே, முஹமது மஸ்த் அவரது அறையின் வாசல் பக்கம் சென்று, "பாபா, வாருங்கள்! நீராட வாருங்கள்!... மெஹர் பாபா உங்களுக்காக நின்று கொண்டிருக்கிறார். மெஹர் பாபாவின் கால்களில் வலி எடுக்கும்!... வாருங்கள், பாபா, வாருங்கள்!" என்றதும் சட்டி பாபா வருகிறார். நான் தினமும் அவரை இரண்டு முறை நீராட்டுகிறேன். ஒவ்வொரு முறையும் ஏறக்குறைய 50 வாளி நீர். அவர் நீராடி முடித்ததும் மண்ணை அள்ளி தனது தலை மேல் கொட்டுகிறார்.**

போரைப் பற்றி பாபா கூறியதாவது:

**இப்போது, ஒவ்வொரு வியாழக்கிழமையும் நான் இங்கு வரும்போது, குறிப்பாக, போர் மற்றும் எல்லாவற்றையும் பற்றி பேசுவோம். விரைவில் இது மும்பை, அஹமதுநகர் வரை பரவும். உலகெங்கும் மக்கள் மிக்க வருத்தத்தில், வெறிபிடித்து, விரைவில், புலப்படாத அளவிற்கு மோசமான நிலைமையை சந்திப்பார்கள். எனவே இந்த வாரம் நீங்கள் செய்ததைப் போலவே உத்தரவுகளைத் தொடர்ந்து பின்பற்றுங்கள், ஆனால் முன்னெப்போதையும் விட முழு மனதுடனும், விருப்பத்துடனும் மகிழ்ச்சியாக அதைச் செய்யுங்கள், நான் உங்களுக்கு உத்தரவிடுவதால் மட்டுமல்ல, நீங்களும் மனதாரக் கீழ்ப்படிய விரும்புவதால்!**

பின்பு பாபா அங்காய் மலையில் தங்கியிருந்த ஐந்து ஆண்களைப் பற்றிப் பெண் மண்டலியிடம் கூறினார்:

**அவர்களுக்கு இது ஒரு கடினமான சோதனை. அவர்களில் நான்கு பேர் மௌனம் கடைப்பிடிக்கிறார்கள், பப்பா** (பிஸ்டல் - பாபா அவருக்கு அளித்த புனைப்பெயர்) **மட்டுமே பேச அனுமதிக்கப்படுகிறார்; அவர் அனைத்தையும், ஒரு படி அதிகமாகவே செய்கிறார்; அது அனைவரையும் பைத்தியம் பிடிக்கச் செய்யும். அவர் காலை 4:00 மணிக்கு எழும்பும்**

வேளையில் அவருடன் விழித்திருக்கும் எண்ணத்தில் அனைவரையும் எழுப்புவது வழக்கம். ஒவ்வொரு வாரமும் மன்மாடிலிருந்து அனைத்து பொருட்களையும் வாங்கி வர வேண்டும். அங்குக் கிணறுகளும் இல்லை தங்குவதற்கு உகந்த இடமுமில்லை. அவர்களின் வாராந்திர அறிக்கையில், "இங்கே 'பிஸ்டல்' மட்டும் இல்லையென்றால் நாங்கள் நித்திய மௌனம் அனுஷ்டித்து, மரணம் வரை விரதம் இருப்போம்!" எனக் குறிப்பிட்டிருந்தனர். அதற்கு நான் "பிஸ்டலுடன் நீங்கள் ஒரே ஒரு வருடம் மட்டுமே, அமைதியாக இருங்கள்" என்று பதிலளித்தேன்.

ஒரு வாரத்திற்குப் பின்னர், ஆகஸ்ட் 15 அன்று, பாபா, மறுபடியும் பெண் மண்டலியைப் பார்க்க வந்தார். குஜராத்தி மொழியில் வேதாந்தத்தைப் பிரதிபலிக்கும் முறையில், மெஹர் பாபா, 'இறை உணர்வு' மற்றும் **மஜ்ஜூப்**களைப் பற்றி விளக்கமளித்தார்:

**குழந்தையும் தெய்வமும் ஒன்று என்ற அடிப்படையில் ஒருவர் உண்மையான குழந்தையாக, ராஜபோக குழந்தையாக இருக்கும் போது, அவர் இறை உணர்வை அடைந்தவர் என்று அர்த்தம். அதனால்தான், 'நீங்கள் ஒரு குழந்தையைப் போல ஆனாலொழிய, தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது' என்று இயேசு கூறினார்.**

**அத்தகைய குழந்தைக்கு முழுப் பிரபஞ்சமும் ஒரு பொம்மை போன்றது. இந்தக் குழந்தை விளையாடும் தோட்டம் தான் எல்லையற்ற வாழ்க்கை.**

**மஜ்ஜூப் என்பது பாரசீக வார்த்தையாகும், இதற்கு 'தெய்வீக மாபெரும் சக்தியால் ஆட்கொள்ளப்பட்டவர்' என்று அர்த்தம். ஒருவர் மூழ்கி, முழுமையாக மூழ்கிவிடுகிறார். மஜ்ஜூப்கள் உண்ணுவது, அருந்துவது, உறங்குவது போன்ற பலவற்றை நாம் காண்கிறோம், ஆனால், அது குறித்து அவர்களுக்கு எதுவும் தெரியாது. ஏனெனில் அவர்களுக்கு உடலைப் பற்றிய உணர்வு சிறிதளவும் இல்லை. உதாரணமாக, ஒரு நபர் தூக்கத்தில் பேசுவதை, பாடுவதை அல்லது அழுவதை பிறர் கேட்க முடிகிறது, ஆனால் அந்த நபருக்கு அதைப் பற்றிய எந்த அறிவும் இருக்காது. அதனால்தான் இந்த மஸ்துகள் ஒருபோதும் நோய்வாய்ப்படுவதில்லை.**

**நூறு கோடி மக்களில் ஒரு லட்சம் பேர் மட்டுமே ஆன்மீகப் பாதையில் பயணிக்கிறார்கள். இந்த ஒரு லட்சம் பேரில், பத்து பேர் மஜ்ஜூப் நிலையை அடைகிறார்கள், இந்தப் பத்து பேரில் ஒருவர் மட்டுமே பரிபூரண குருநாதராக, சத்குருவாக இப்பூவுலகில் இறங்கி வருகிறார்.**

**இன்று நான் அதிகம் பேசிவிட்டேன். ஒவ்வொரு முறையும் நான் அதைச் செய்ய மாட்டேன். எனக்கு அது பிடிக்காத ஒன்று. மஸ்த் ஆசிரமத்தில் நான் பேசாமல், எனது பணியில் மட்டுமே கண்ணும் கருத்துமாக இருக்கிறேன்.**

**ஒவ்வொரு நாளும் பிற்பகல் இரண்டு மணிக்கு வாரியரை (நாய்க்குட்டி) மஸ்த் ஆசிரமத்திற்கு ஒரு வாரம் அனுப்பி வையுங்கள். இரவு**

**கண்காணிப்பாளர் தினமும் அதிகாலை மூன்று மணிக்கு, இரண்டு ஓநாய்கள் காம்பவுண்டுக்கு வெளியே ஓடுவதைக் காண முடிந்தது, எனவே வாத்து மற்றும் கோழிகளை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.**

கரீம் பாபாவுடன் பல வாரங்கள் தீவிரமாகப் பணியாற்றிய பிறகு, மெஹர் பாபா, அவருடனான தனது பணியை முடித்துவிட்டு 1940, ஆகஸ்ட் 16 அன்று, காக்கா பாரியாவுடன் அவரை கொல்கத்தாவிற்குத் திருப்பி அனுப்பி வைத்தார். இந்தப் 'புலி' போன்ற மஸ்துக்காக, சிறப்பாகக் கட்டப்பட்ட 'கூண்டு' அறையில் மெஹர் பாபா தங்கத் தொடங்கினார். கொல்கத்தாவிற்குச் சென்ற பின்பு, காக்கா, தமிழகத்தின் தஞ்சாவூர் நகருக்குச் சென்றார்; அங்கு அவர் கண்டுபிடித்த மஸ்த் அவருடன் மெஹராபாத்திற்குச் செல்ல மறுத்துவிட்டார். காக்கா, மதராஸ் மற்றும் பிற இடங்களுக்குச் சென்று மஸ்துகளைத் தேடியும் கண்டுகொள்ள முடியாமல், மும்பைக்குத் திரும்பி வந்தார்.

1940, ஆகஸ்ட் மாதத்தில், 'கபீர்' (KABIR) என்று அழைக்கப்படும் மஸ்தை மெஹராபாத்திற்கு அழைத்து வர பாபா, மாஸாஜியை (மௌனமாக இருந்தவர்) பண்டர்பூருக்கு அனுப்பி வைத்தார். கபீர் பயங்கரமாகப் பயமுறுத்தும் தன்மை படைத்தவர், அரைகுறை ஆடையுடன், மிகவும் அசுத்தமாக, காடு போல் அடர்ந்த முடியுடன் கூடிய மறக்க முடியாத மனிதர்; அவரது அகன்ற வாயில் மஞ்சள் படிந்த இரண்டு வரிசை பற்கள் இருந்தன; மேலும் அவருடைய சிரிப்பு, காட்டு மிருகங்களின் கர்ஜனை போல் இருந்தது. பண்டர்பூரின் தகன மைதானம் அவரது நடமாடும் இடம், மேலும் அங்குள்ள சடலங்களின் எரிக்கப்பட்ட சாம்பலை அவர் விழுங்கியதாகக் கூறப்படுகிறது. மெஹர் பாபா அந்த மஸ்தை மொட்டையடித்து, நீராட்டி, மெஹராபாத்தில் ஒரு நாள் தங்கவைத்து மீண்டும் அவரது இடத்திற்கு அனுப்பி வைத்தார்.

இதற்கிடையில், அங்காய் மலையில், குஸ்தாஜி, பிளீடர், ஸவக், பபானந்தா ஆகியோர் அதீத கஷ்டங்களை எதிர்கொண்டனர். பப்பா ஜெஸவாலா அவர்களுக்கு, தேநீர் காலை 4:00 மணி, மதிய உணவு காலை 7:00 மணி, மதியம் தேநீர் காலை 10:00 மணி, மற்றும் இரவு உணவை மதியம் 2:00 மணிக்கும் வழங்கிவந்தார்! இந்த அபத்தமான கொடுங்கோலன் ஆட்சி முறையை அனைவரும் பின்பற்ற வேண்டிய கட்டாயம். பப்பாவின் அறிவுறுத்தல்களை மறுத்து எவராலும் ஒரு வார்த்தையும் கூற முடியாத நிலை, ஏனெனில் அவர்கள் மௌனம் அனுஷ்டித்தனர், அத்துடன் பப்பா சொன்னதைக் கடைப்பிடிக்குமாறு, பாபா கட்டளையிட்டிருந்தார்.

எனவே, இது அவர்களுக்கு இரு மடங்கு கடுமையான தவம் அல்லது பிராயச்சித்தத்தின் காலமாக இருந்த நிலையில், காலை 7:00 மணிக்கு (மதிய உணவிற்காக குறிப்பிட்ட நேரம்) இயற்கையின் அழைப்புக்கு பதிலளிக்கச் சென்றாலும், பப்பா ஒரு கண நேர தாமதத்தைக் கூடப் பொறுத்துக் கொள்வதில்லை, மேலும் அவர்களுக்கு அனுமதி வழங்க மறுத்தார்.

1940, ஆகஸ்ட் 22ஆம் நாள் பாபா, பெண் மண்டலியைப் பார்க்க வந்தபோது, அவர் அங்காய் குழுவைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் தொடங்குவதற்கு முன்பு, குழுவில் ஒருவர் 'பாபா, எவ்வளவு நன்றாகவும் அழகாகவும் தோற்றமளித்தார்' என்று கூறியதற்கு பதிலளித்த பாபா, "**இருந்தும், நேற்று இரவு எனக்கு பயங்கரமான இரவாக இருந்தது**" என்று கூறி, தொடர்ந்தார்:

**மலையில் இருப்பவர்கள் சிறப்பான சூழலில் இருக்கிறார்கள் - மூடுபனி, குளிர்ந்த வானிலை, அத்துடன் ஆன்மீக சூழ்நிலை. இந்த மலை, இந்து புனித ஸ்தலங்களில் ஒன்றாகும்; மேலும் இது புனித யாத்திரைக்கான மாதமாகும். ஆயிரக்கணக்கானோர் அங்குச் செல்கின்றனர். புகழ்பெற்ற இந்து துறவியான அகத்திய முனிவரின் சமாதி அங்குள்ளது. மண்டலியில் நான்கு பேர் குகை ஒன்றில் அங்கேயே தங்கியிருக்கிறார்கள். அவர்கள் மலை மேட்டுநிலத்தில் நடக்கிறார்கள். அங்கிருக்கும் ஐவரில், பேசுபவர் 'பிஸ்டல்' மட்டுமே. அவர்களுடைய கை சைகைகளைப் புரிந்து கொள்ள முடியாதபோது அனைவரையும் 'நரகத்திற்குச் சென்று தொலையுங்கள்' என்று அவர் சொல்வதை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்!**

**காலை ஏழு மணிக்கு அவர் உணவு அனைத்தையும் தயார் செய்து விடுகிறார். அவர்கள் காலை 4:00 மணிக்கு தூக்கத்திலிருந்து எழும்பாமல் இருந்தால், அப்படி ஓர் ஆர்ப்பாட்டம் செய்து எழுந்திருக்கச் செய்கிறார். அவர் இங்கு இருந்தபோதும் காலை 2:30 மணிக்கு வேலைக்கார சிறுவர்களை எழுப்பி விடுவதுண்டு. ஒரு வகையில் இது நல்லது - இது அவருடைய ஒழுக்கம், அவருடைய இயல்பு. அவர் எங்கேனும் பயணம் செல்வதாக இருந்தால், தனது பெட்டி படுக்கைகளை ஏழு நாட்களுக்கு முன்பே தயாராக வைத்து விடுகிறார்!**

நோரினா, "ஆனால் அவர் சற்று கஞ்சத்தனமானவர்" என்று குறிப்பிட்டார்.

"**சரி, சரி, நாம் விமர்சிக்க வேண்டாம்!**" பாபா புன்னகைத்துக் கொண்டே அவர்களுக்கான உத்தரவுகளைக் குறிப்பிட்டு, தொடர்ந்தார். அப்போது ஏறக்குறைய பிற்பகல் நான்கு மணி, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**நான்கு மணி வரை நாம் போரைப் பற்றி தொடர்ந்து பேசுவோம். சர்ச்சில் இங்கிலாந்தின் மிகச்சிறந்த பிரதமராக வரலாற்றில் பொறிக்கப்படுவார். அமெரிக்கா இப்போது மெதுவாக உள்ளே நுழைகிறது. ஒன்று மட்டும் நிச்சயம். இந்தியா எல்லாவற்றிற்கும் மேலாக, உள்ளளவிலும் வெளியளவிலும் பாதிக்கப்படும். நாம் போருக்கு நடுவே இருப்போம். நோரினாவின் காலில் குண்டுகள் விழும்!**

**இந்தப் போரில் நான்கு கட்டங்கள் உள்ளன. முதலாவது கட்டம் இப்போது முடிந்துவிட்டது, இரண்டாவது இப்போது தொடங்க உள்ளது, அது மோசமாக இருக்கும். மூன்றாவது அதைவிட மோசமாக இருக்கும். உலகம் முழுவதும் பற்றி எரியும். நான்காவது ஒரு முடிவிற்கு வருவது. மூன்று கட்டங்கள் ஒரே வருடத்திற்குள் நிகழும் - தலா நான்கு மாதங்கள் எடுக்கும்.**

**நல்லது, தீயது இவற்றினிடையே உள்ள வித்தியாசம் வெகு நுட்பமானது, ஒரு நபருக்கு நல்லது என்பது இன்னொருவருக்குத் தீயது. ஹிட்லர் உண்மையில் அவர் நல்லது செய்வதாக நினைக்கிறார், ஆனால் அவருக்கு 'நல்லது' என்பது பிறருக்குத் 'தீயதாக' விளையும்!**

**நான் மிக்க மகிழ்ச்சியாகவும் நன்றாகவும் இருப்பதாகத் தோன்றினால், அனைத்தும் நன்றாக இருப்பதாக நினைக்க வேண்டாம். நான் மிக மிக நன்றாக உணர்கிறேன், ஆனால் மிகுந்த மனச்சோர்வில் இருக்கிறேன். நேற்று இரவு மிகவும் மோசமான இரவாக இருந்தது.**

அதைத் தொடர்ந்து பாபா, தியானம் மற்றும் அவரது பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது குறித்துக் கருத்துத் தெரிவித்தார்:

**தியானத்தின் கடைசி கட்டத்தில் 'அன்பு' உருவாகிறது. அன்பிற்குரியவருக்கான ஏக்கம்தான் அந்த நிலைக்கு ஒருவரைக் கொண்டு செல்கிறது. காலையில் நீங்கள் கடவுளின் ஏழு நாமங்களை உச்சரிக்கிறீர்கள். 'ஆழ் இதயத்திலிருந்து அதைச் செய்யுங்கள்' என்று நான் கூறுவதன் அர்த்தம் என்னவெனில், கடவுளின் பெயரை எடுத்துக்கொள்வதாக நீங்கள் முதலில் உணர வேண்டும் .**

**இரண்டாவதாக, இந்தப் பெயர்கள் அனைத்தும் 'ஒன்று' என்ற நிலையான எண்ணத்தை உங்கள் மனதில் கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் இறை நாமத்தை உச்சரிப்பதால் உருவாகும் அதிர்வலைகள், உங்களுக்கு உதவியாக இருக்கும். இந்தப் பெயர்களை நான் தேர்ந்தெடுத்து, வரிசைப் படுத்திய விதம், அவற்றை உணர்ந்து செய்தால் சாதகமான அதிர்வலைகளை உருவாக்கி உதவும். மஸ்துகள் இதைப் பாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்போது அவர்கள் அதிக உதவியாக இருப்பார்கள், ஏனெனில் அவர்களின் மனம் மிக வேகமாக அல்லது மிக மெதுவாக இயங்குகிறது, இது மனதைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர உதவியாக இருக்கும்.**

சில நாட்களுக்குப் பிறகு, பாபா, தியானம் பற்றிய ஒரு வேடிக்கையான சம்பவத்தை விவரித்தார்:

**எனக்கு பார்சோப் என்ற பெயரில் என்னைப் பின்பற்றுபவர் ஒருவர் இருந்தார். தியானிக்கும் போது, அவர் தூங்கிவிடுவார், ஆனால் தியானத்தில் இருப்பது போன்ற தோற்றம் மாறாது. எவரேனும் அவரைத் தட்டி எழுப்பினால், அவர் ஆழ்ந்த தியானத்தில் இருப்பதாகக் கூறிவந்தார்! ஆனால் ஒரு நாள் அவர் என்னிடம் மாட்டிக்கொண்டு, தூங்குவதாக ஒப்புக்கொண்டார்.**

**எனவே, பார்சோப்பைப் போல, தியானத்தில் ஆழ்ந்திருக்கும்போது தூங்கிவிடாதீர்கள், ஆனால் இறை நாமங்களை உண்மையாக உச்சரியுங்கள்.**

பாபா, விஷ்ணு மூலமாக டானுக்குத் தகவல் அனுப்பி, அங்காய் மலைக்குச் சென்று அங்கு வாழும் மண்டலி எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பார்த்துவர அனுப்பினார். அவர்கள் அங்காயில் தங்க விரும்புகிறார்களா அல்லது

மெஹராபாத்திற்குத் திரும்பி வருவதில் ஆர்வமாக இருக்கிறார்களா என்று அவர்களிடம் கேட்டுவர வேண்டும். டான் 26ஆம் தேதி புறப்பட்டு, அதே மாலையில் ஊக்கமளிக்கும் செய்திகளுடன் திரும்பி வந்தார். அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், அவர்களை நன்றாக கவனித்துக் கொள்வதாகவும் பப்பா, டானிடம் தெரிவித்திருந்தார்; பாபா விரும்பும் வரை அவர்கள் நிச்சயமாக அங்காயில் தங்கியிருப்பார்கள் என்றும் கூறினார். அப்பாவி ஸவக், குஸ்தாஜி, பிளீடர், பபானந்தா ஆகியோர் அமைதியாக இருந்ததால், டானுக்கு உண்மையான நிலவரத்தை அவர்களால் எடுத்துக்கூற முடியவில்லை.

பாதிரி பெங்களூரிலிருந்து ஆகஸ்ட் 26 அன்று மெஹராபாத்திற்கு வந்தார், ஆனால் அன்று பாபா அவரை சந்திக்கவில்லை.

ஏற்கனவே அறிவுறுத்தியபடி, தினமும் கிருஷ்ணா, பாபாவின் உணவை கூண்டு அறைக்கு எடுத்துச் சென்று, அதை வெளியே வாசலில் வைத்துவிட்டு, பாபாவைப் பார்க்காமல் போய்விடுவது வழக்கம். பாபாவின் அறைக்கு முன்னால் ஒரு மணி தொங்க விடப்பட்டிருந்தது. உணவை உண்ட பிறகு, பாபா கயிற்றை இழுத்து மணியோசை எழுப்ப, கிருஷ்ணா வந்து பாத்திரங்களை எடுத்துச் செல்வதும் வழக்கமாக இருந்தது. கிருஷ்ணாவும் வெளியிலிருந்து அந்த மணியோடு இணைத்த கயிற்றை வைத்திருந்தார். உதாரணமாக, காலை எட்டு மணிக்கு அவர் இரண்டு முறை மணியை ஒலிக்கச் செய்யும் வேளையில், விஷ்ணு வருவதை பாபா அறிந்து கொண்டு, உள்ளே மறைவில் சென்றுவிடுவதை வழக்கமாகக் கொண்டார். பின்வரும் சம்பவம் நிகழும் வரை இது ஆறு அல்லது ஏழு நாட்கள் நீடித்தது.

ஒரு நாள் பிற்பகல் கிருஷ்ணா காம்பவுண்ட் வாயிலுக்கு வெளியே தனது வழக்கமான இடத்தில் அமர்ந்திருந்த வேளையில், மணி ஒலித்தது. அடுத்து என்ன நடந்தது என்பதை கிருஷ்ணா விவரித்தார்:

பாபா ஏன் மதிய வேளையில் என்னை அழைத்தார் என்று யோசித்தேன், ஏனெனில் அது அவரது தேநீர் நேரம் அல்ல. நான் வாயிலில் நுழைந்த போது, பாபா என் முன் நின்று கொண்டிருந்தார். நூறு சூரியன்களை விடவும் வலுவான ஒளி அவரது உடலிலிருந்து பிரகாசித்ததைக் கண்டேன். அதன் பிரகாசத்தால் நான் ஆழ்ந்த உணர்ச்சிக்கு உள்ளாகி, திகைப்புற்று, ஆதரவிற்காக எனது வலது கையால் வாசலின் ஒரு பக்கத்தைப் பிடித்ததும், நான் எனது சுயநினைவை இழந்தேன்.

பாபா, விரைவாக கிருஷ்ணாவிடம் சென்று அவரது இடது மேற்கை முன் தசையைப் பிடித்து, மிகவும் கடினமாக இழுத்த போது, அது இரண்டு துண்டுகளாகக் கிழிந்தது. கடும் வலி கிருஷ்ணாவை மீண்டும் சுயநினைவிற்குக் கொண்டு வந்தது. **“ஏன் உள்ளே வந்தீர்கள்?”** பாபா, சீற்றத்துடன் வினவினார்: **“நீங்கள் எரிந்து சாம்பலாக வேண்டுமா? உயிரைத் துறக்க விரும்புகிறீர்களா? நீங்கள் குருடாக வேண்டுமா? எதற்காக வந்தீர்கள்? யார் உங்களை அழைத்தார்?”**

கிருஷ்ணா அழுது கொண்டிருந்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, "பாபா, மணி ஒலித்தது" என்று பதிலளித்தார்.

**"மணியை அடித்தவர் யார்?"**

"எனக்குத் தெரியாது" என்று கிருஷ்ணா பதிலளித்தார். "நான் நிரபராதி, பாபா."

பாபா உடனே உள்ளே சென்றார். கிருஷ்ணா அங்கிருந்து நகர முடியாமல் காம்பவுண்ட் வாயிலில் சரிந்து வீழ்ந்தார். ஐந்து நிமிடங்களில் பாபா மீண்டும் வெளியே வந்து, புன்னகைத்து, கிருஷ்ணாவின் முகத்தை மெதுவாக வருடிக் கொடுத்து, "**கவலைப்படாதீர்கள்**" என்றார். "**நான் உங்களை மன்னிக்கிறேன். நடந்தது நடந்துவிட்டது**." கிருஷ்ணா எழுந்ததும், காயத்திற்குச் சிகிச்சையளிக்க பாபா, நீலுவை அழைத்தார். நாளடைவில், தசை ஒருபோதும் குணமடையாமல் நிரந்திர வடுவை விட்டுச்சென்றது. ஆனால் அன்றைய தினம் அவர் மெஹராபாத் மேல்மலையில் கண்டது கிருஷ்ணாவின் மனதில் ஆழமாகப் பதிந்தது.

1940, ஆகஸ்ட் 29ஆம் நாள், மெஹர் பாபா, பெண் மண்டலியுடன் இருந்தபோது, "**இந்த அவதார காலகட்டத்தில் நீங்கள் என்னுடன் இருக்க, கடந்த காலத்தின் எல்லையற்ற சிறப்புமிக்க மனப்படிவங்கள் தேவை**" என்று கருத்துத் தெரிவித்தார். வாரியரை (நாய்) இனி அனுப்ப வேண்டாம் என்று பாபா பெண்மணிகளுக்கு அறிவுறுத்தினார், ஏனெனில் அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இதர மஸ்துகளை, குடும்ப குவாட்டர்ஸிலிருந்து மேல்மலைக்கு மாற்ற திட்டமிட்டிருந்தார்.

முஹமது மஸ்தைப் பற்றிய ஒரு நகைச்சுவையான நிகழ்வைக் குறிப்பிட்டு, பாபா கூறினார்: "**முஹமது மஸ்தின் 'கற்பனை மனைவி' நாளை வருவதாக இருந்தது. 'அவர் வருகிறாரா?' என்று முஹமது கேட்டபோது நாங்கள், 'ஆமாம், ஆனால் அவர் ஒரு மாதம் உபவாசம் இருந்ததால், நோயுற்று மிகவும் பலவீனமாக இருக்கிறார். நீங்கள் விரும்பினால் நாங்கள் அவரை ஒரு தூக்குப் படுக்கையில் உங்களிடம் கொண்டு வர முடியும்' என்று கூறினோம்; அதற்கு அவர், 'இல்லை, இல்லை, அவள் அங்கேயே இருக்கட்டும், நல்ல நெய் உணவு ஊட்டுங்கள், உடல் சதை போட்டு சீரான பின்னர் என்னிடம் அழைத்து வாருங்கள்' என்றார். எனவே மீண்டும் அது நீடித்தது." இந்த வேடிக்கையான சம்பவத்தைக் கேட்டு அனைவரும் மனம் விட்டுச் சிரித்தனர்.**

அன்றிரவு, காக்கா பாரியா மும்பையிலிருந்து ஒரு மஸ்தை அழைத்து வந்தார். மும்பையிலிருந்து அழைத்து வரப்பட்ட மஸ்துகளில் மூவர் மெய்யான மஸ்துகள் (திப்பு பாபா, ஒரு சன்யாசி, மற்றொரு துறவி மற்றும் இப்போது காக்கா அழைத்து வந்தவர்) என்பதை, பாபா சுட்டிக்காட்டினார். பாபா அவரை நீராட்டினார்; ஆனால் மெஹராபாத்தில் தங்க வைக்க இடம் இல்லாததால், பாபா அவரைத் திருப்பி அனுப்பினார், மேலும் இந்தப் புதிய மஸ்தும் தங்க விருப்பம்

தெரிவிக்கவில்லை. மண்டலியில் சகனும் மனநிலை பாதிக்கப்பட்டவர் மற்றும் மஸ்துகளை நீராட்ட பாபாவிடம் அழைத்து வருவதுண்டு, அவர்களில் சிலர் மெஹராபாத் மஸ்த் ஆசிரமத்தில் தங்கினர். இந்தக் காலகட்டத்தில் மண்டலியில், காக்கா, சகன் விஷ்ணு மூவர் மட்டுமே பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். (இருப்பினும், பாதிரி, முரளி இருவரையும் பெங்களூரிலிருந்து சில நாட்களுக்காக அழைத்து, பாபா வழிமுறைகளை வழங்கினார்.)

இப்போது, செப்டம்பர் மாதத்தில் மெஹர் பாபா, ஞாயிறு மற்றும் வியாழக்கிழமைகளில், வாரம் இரண்டு முறை பெண் மண்டலியை சந்திக்கத் தொடங்கினார். செப்டம்பர் 1ஆம் நாள் மதியம் ஒரு மணிக்கு அவர்களை சந்தித்த வேளையில் "**போர் இப்போது இரண்டாம் கட்டத்திற்குள் நுழைந்துள்ளது**" என்று குறிப்பிட்டார்.

மனநிலை பாதிக்கப்பட்டவர்களை மேல்மலைக்கு மாற்ற பாபா விரும்பியதால், மஸ்த் ஆசிரம காம்பவுண்டில் பாபாவின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக, மற்றொரு குளியலறையை உருவாக்க விஷ்ணு மூலமாக பெண்டுவிற்கு அறிவுறுத்தினார். மகப்பேறு மருத்துவமனையின் முள்வேலி வளாகத்திற்குள் பாபா மஸ்துகளுடன் பணிபுரிந்து கொண்டிருந்தார், ஆனால் பெண்டு அங்கு இருக்கும் வரை அவருடைய பார்வையில் படாதபடி பாபா உள்ளேயே இருந்தார். எனவே, பாபா, பெண் மண்டலியைப் சந்திக்கச் செல்லும் அந்த இரண்டு நாட்களில் மட்டும் பெண்டு வேலை செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அரன்காவ்ம் கிராமத்து குடும்ப குவாட்டர்ஸில் தங்கியிருந்த மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஒரு சில மஸ்துகள் 2ஆம் தேதி மேல்மலை ஆசிரமத்திற்கு மாற்றப்பட்டனர். அவர்களை அவரவர் இடங்களுக்கு அனுப்புவதற்கு முன்னர், ஒரு மாதம் அவர்களுடன் பணியாற்ற விரும்புவதாக, பாபா சுட்டிக்காட்டினார். 1940 ஆகஸ்ட் இறுதி முதல் செப்டம்பர் முதல் வாரம் வரை, லண்டன், ஜெர்மனியால் பெரிய அளவில் குண்டுவீச்சுக்குள்ளான நிகழ்வுகள் போர் தொடர்பான நடவடிக்கைகளுடன் மீண்டும் ஒத்துப்போனது.

பெண்மணிகள் பெரும்பாலும் மெஹராபாத் மேல்மலை 'மிருகக்காட்சிசாலையில்' வைக்கப்பட்ட விலங்குகளை கவனித்து வந்தனர்.

'ஈடி' (IDI), 'ஜிங்கி' (JINGI) என்றழைக்கப்பட்ட இரண்டு பெண் மயில்கள், விலங்குகள் கூட்டத்துடன் சேர்க்கப்பட்டன. நோரினா தனது வலது காலில் தசை பிடிப்பால் சிரமப்பட்டு, தற்காலிகமாக மேல்மாடியில் படுக்கையில் இருந்தார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, 'லக்கி' (LUCKY) என்ற குரங்கு நோரினாவின் பொறுப்பில் இருந்ததால், அவருடைய கொசு வலைக்குள் அதுவும் உடனிருந்தது. பாபா அங்கு, வரும்போதெல்லாம் லக்கியைக் கையில் எடுத்து கொஞ்சுவது பழக்கம், அதுவும் பாபாவின் மீது தாவி அவரது கழுத்தில் முத்தமிடும்.

‘லக்கி’யால் பெண்களுக்கு, சொல்லப்போனால், அதிர்ஷ்டம் (LUCK) எதுவும் இல்லை. மாறாக, அது ஒரு குறும்புக்கார குரங்கு என்பதை நிரூபித்தது. அது நோரினாவின் வலையிலிருந்து வெளியே வந்து, எல்லா இடங்களிலும் பொருட்களை, தாறுமாறாகத் தூக்கி எறிந்து, பாபா அமைதியை நாடும் இடத்தில் பெரும் ஆரவாரத்தை ஏற்படுத்தி, நம்பமுடியாத தொல்லைகளைத் தந்தது. ஒவ்வொரு மாதமும் மெஹர் பாபா ஜர்னலின் (MEHER BABA JOURNAL) உள்ளடக்கங்களை குஜராத்தியில் மொழிபெயர்க்குமாறு மன்ஸாரிக்கு உத்தரவிடப்பட்டது, மேலும் லக்கி அவரது மை பாட்டில், காகிதங்கள் மற்றும் பேனாக்களைப் பிடுங்கிக் கொண்டு ஓடி மறைந்துவிடும். இது மன்ஸாரியை எரிச்சலடையச் செய்தாலும், அவர் மௌனமாக இருந்து, “அதைப் பிடியுங்கள்!” என்று சைகையால் தெரிவித்து அதன் பின்னால் ஓடினார்.

‘லக்கி’யை கவனிக்கும் பொறுப்பை எலிஸபெத், நோரினா இருவரும் ஏற்றுக்கொண்டதால், எல்லோரும் அதைக் குறித்துப் புகார் கூறி முறையிட்டனர். செப்டம்பர் 5, வியாழக்கிழமை, பாபா வந்தபோது, மன்ஸாரி மிகவும் எரிச்சலடைந்து, லக்கியைப் பற்றி எடுத்துக் கூறினார்; அதற்கு பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**மன்ஸாரி அதி விரைவில் உணர்ச்சிவசப்பட்டு, கடுகடுப்பாக இருப்பதால், அவருடைய கோபத்தை கட்டுப்படுத்த முடியாது, ஏனெனில் அவர் அவ்வளவு வலிமையானவர் அல்ல. நீங்கள் அனைவரும் அவருக்கு உதவ முடியாது, காரணம், நீங்களும் பலவீனமாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒரு குரங்கின் நிமித்தம் எனது கட்டளைகளை நீங்கள் மீறுவதை நான் விரும்பவில்லை. எந்த அளவிற்குக் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும் என்று நான் உங்களிடம் கேட்கிறேனோ, அந்த அளவிற்குக் குறைவாக நீங்கள் அனைவரும் கீழ்ப்படிகிறீர்கள். நீங்கள் உதவியற்றவர்களாக இருப்பதால், குறைவாகக் கீழ்ப்படிந்து, குறைவாக உதவுகிறீர்கள்! நீங்களே உங்களை நன்கு கண்காணிக்கும் வரை, எனது கட்டளைகளைப் பின்பற்ற முடியாது. நிச்சயமாக சாத்தியமில்லை! எனவே முயற்சி செய்யுங்கள்!**

**‘ஆன்மீகம்’ என்றால் என்ன என்று ஒருவர் ஹ:ஃபீஸிடம் கேட்டதற்கு, அவர் ஓர் ஈரடிக் கவிதையில் பதிலளித்தார்:**

**நீங்கள் உங்களின் சுய கீழ்நிலைக்கு**
**எதிராகச் செல்லாவிடில்,**
**உங்கள் சுய உயர்நிலையுடன் ஒன்றிணைய முடியாது.**

**இப்போது சுய கீழ்நிலை என்றால் என்ன? எது உங்களைச் சிறியவர், குறைந்தவர் என்று நினைக்கத் தூண்டுமோ அது! எது உங்களைத் திருப்தி அடைய விடாமல், மகிழ்ச்சியாகவும் இருக்கச் செய்யாமல், பிறர் உங்களை சிறியவர்களாக, குறைந்தவர்களாகப் பார்க்க வைக்குமோ அது!**

**எனவே சுய கீழ்நிலைக்கு எதிராக செல்வதன் அர்த்தம், இதை முற்றிலும் எதிர் திசையில் மாற்றுவதாகும். உங்களைப் பெரிதாக,**

நிறைவுற்றவராகத் தோன்றச் செய்து, பிறர் உங்களை பெரியவர்களாக, நிறைவுற்றவர்களாகப் பார்க்கும்படியாக இருங்கள். மகிழ்ச்சியாகவும் திருப்தியுடனும் இருங்கள், நீங்கள் அதிருப்தியுடன் மகிழ்ச்சியற்ற அல்லது சோகமான மனநிலையில் இருக்கும்போது, அது உங்களின் சுய கீழ்நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும்.

மக்கள் தங்களின் அதிருப்தி மற்றும் துன்பங்களுக்கு, பிறர் மீது எப்போதும் குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் உண்மை என்னவெனில், ஒருவர் துன்பப்படும்போது அது ஒருவரின் சொந்த தவறு. மன்ஸாரி உணர்ச்சிவசப்பட்டு, கோபமுற்று, துன்பப்பட்டு, அதற்குக் காரணம் எலிஸபெத், நோரினா மற்றும் லக்கி என்று கூறுகிறார். அதேவேளையில் அவர் சுய கீழ்நிலையைக் கடந்து சென்றிருந்தால், அதை அமைதியாக எடுத்து, முற்றிலுமாக விழுங்கி, சற்றும் பாதிக்கப்படாமல் இருந்திருப்பார். நீங்கள் உறுதியாக இருந்தால், எதுவும் உங்களை வருந்தச் செய்யாது. முயற்சித்தால், நிச்சயமாக நீங்கள் அதைப் பெறுவீர்கள்.

நான் எந்த அடக்குமுறையையும் கையாள விரும்பாத அதே நேரத்தில், மாற்றத்தை விரும்புகிறேன். நீங்கள் கோபப்படக்கூடாது என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. குழப்பம் வேண்டாம். உங்களுக்கு, அதற்குரிய சந்தர்ப்பத்தில் கோபம் வருவதில் தவறில்லை; ஆனால், அதே நேரத்தில், நீங்கள் அதை உங்கள் தலையிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும். உங்களுக்குப் பசி இல்லை என்றால், உபவாசம் இருப்பதில் அர்த்தமில்லை.

இந்தக் கதையை நான் முன்பு சொல்லியிருக்கிறேன். நபிகள் நாயகம் ஒரு முறை தனது தலைமை சீடரான அலியிடம், “நீங்கள் என்னை அறிய விரும்பினால், உங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்தி, அதை அன்பாக மாற்ற முயற்சி செய்யுங்கள்” என்று கூறினார்.

அடுத்த நாள், யாரோ ஒருவர் அலியுடன் சண்டையிடுவதற்கு சவால் விடுத்தார். அலி அவருடன் போராடி வென்றார். அலி அந்த மனிதனைக் கீழே வீழ்த்தி, அவர் மார்பில் அமர்ந்த போது, அந்த நபர் அலியின் முகத்தில் காறி உமிழ்ந்ததும் (ஒரு முஸ்லீமுக்கு இது மிக மோசமான அவமானம்) அலி மிகவும் சீற்றமடைந்து, அவனைக் கொல்ல அவரது வாளை உயர்த்தினார். ஆனால் அலி, முஹம்மது கூறியதை நினைவில் கொண்டு, முத்தமிட்டு அவனை விடுவித்தார். இப்போது, அவர் கோபப்படாமல் இருந்திருந்தால், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு அவருக்கு கிடைத்திருக்காது.

அதற்காக, நீங்கள் கோபமாக இருக்கும்போது ஒருவரையொருவர் முத்தமிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை!

நோரினா, தன்னைப் பாதுகாக்கும் தோரணையில் ஏதோ கூறியதும், பாபா பதிலளித்தார், “**இத்தாலியர்கள் தங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாது.**” பாபா, அப்போது பிற தேசிய இனங்கள் மற்றும் குழுக்களின் பண்புகளைக் குறித்துக் கருத்துரைத்தார்:

**இத்தாலியர்களைப் போலவே, பெங்காளிகளும் தங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் இந்தியாவின் சாபத்திற்கு ஆளாகிறார்கள். அனைவரும் அராஜகவாதிகள். ஜெர்மனியர்கள் கொடூரமான காட்டுமிராண்டிகள், ஆனால் இத்தாலியர்கள் சுய லாபத்திற்காக மிகவும் மோசமான பங்கை வகிக்கிறார்கள். பஞ்ஜாபியர்கள் மிகவும் நல்லவர்கள். அவர்களுக்குக் கோபம் வந்தாலும் அமைதியாக, கட்டுப்பாட்டுடன் இருக்கிறார்கள். எந்தவோர் இருகோடி உச்சநிலையும் நல்லதல்ல - அதாவது உணர்ச்சிவசப்படாதவர்கள் மற்றும் மிக விரைவாக மனநிலையை இழப்பவர்கள். உணர்ச்சிவசப்பட்டாலும், தங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்துபவர்கள் மிகவும் சிறந்தவர்கள். அந்த விஷயத்தில் பஞ்ஜாபியர்களை நான் மிகவும் விரும்புகிறேன். உணர்ச்சிவசப்பட்டு அதை வெளிப்படுத்துவது பூமியில் எளிதான விஷயம். ஆனால் கோபத்தைக் கட்டுப்படுத்துவது மகத்தான காரியம்.**

**நதியாவின் பூனை, பறவையைச் சாப்பிட்டால், நதியா பூனையிடம் கோபப்பட மாட்டார். ஆனால் எலிஸபெத், பூனை, பறவையை சாப்பிடுவதைக் கண்டால், அவர் பூனையைத் தண்டிக்கும் அதே வேளையில், நதியா எலிஸபெத்தின் செயலைக் கண்டு வருத்தப்படுவார்.**

**இத்தாலியர்களாகவோ எஸ்கிமோக்களாகவோ இருக்க வேண்டாம், ஆனால் பஞ்ஜாபிகளாக இருங்கள்!**

மஸ்த் ஆசிரமத்திற்குத் திரும்பி வருவதற்கு முன்பு, பாபா பெண் மண்டலியுடன் ‘லக்கி’ மற்றும் பிற செல்லப்பிராணிகளைப் பார்க்கச் சென்றார். லக்கி வெறிபிடித்தது போல, முறைகேடாக நடந்துகொண்டது; பற்பசையை ஆங்காங்கே பூசி மெழுகியது; எனவே பாபா அதைக் கழியால் அறைந்தார். கடைசியில் அந்தக் குறும்புத்தனம் பிடித்தக் குரங்கை, குளியலறையில் சென்று பிடித்தனர். பாபா மகிழ்ச்சியாகவே இல்லை. “லக்கி இறந்திருந்தால் விடுதலையாகி இருக்கும். எனது இரண்டு செல்லப்பிராணிகளான ‘சும்’, ‘லக்கி’ - இரண்டையும் நாள் முழுவதும் கட்டி வைக்க வேண்டும்” என்று பாபா குறிப்பிட்டார்.

கடவுளின் ஏழு நாமங்களை, பெண்மணிகள் தினசரி உச்சரிக்கும் நேரத்தை, பாபா காலை 5:30-6:00 லிருந்து மாலை 5:30-6:00 வரை எனத் தீர்மானித்தார். அந்த நேரத்தில் நாஜாவின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தது; பாபா, “**நாஜா உயிர் துறந்தால் நான் அவரது கல்லறையை, நான்னியின் கல்லறை அருகில் வைப்பேன்**” என்று குறிப்பிட்டார்.

1940, செப்டம்பர் 8 ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் பாபா, பெண் மண்டலியைப் பார்க்கச் சென்றபோது, உலக நிலைமைகளைப் பற்றி விளக்கினார்:



மெஹர் பாபா, லக்கியுடன் (MEHER BABA WITH LUCKY)

**அரசியலுக்கு இன்று வேறு அர்த்தம் உள்ளது - அனைத்தும் ஒரு குளறுபடியான நிலையில், நெறி கெட்டதாக உள்ளது! இந்திய மாநிலங்களின் ஆட்சியாளர்கள், ராஜாக்கள், ராணிகள் அனைவரும் முறை கேடான வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆனால் ஆங்கிலேய அரசாங்கம், அதைப் பொருட்படுத்தாமல், பூர்வீக மன்னர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களுக்குப் பக்கபலமாக இருந்த அந்த வேளையில், அவர்களைத் தொடர்ந்து ஆட்சிபுரிய அறிவுறுத்தியது.** (மைசூரில்) **முடிசூட்டு விழா ஒரு கேலிக்கூத்தாக இருந்ததை,** (இந்திய தேசிய) **காங்கிரஸ் கட்சி வெறுக்கிறது.**

**உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இந்தியா மிக மோசமான சூழ்நிலையில் உள்ளது. நீங்கள் விரைவில் அதைப் பார்ப்பீர்கள். வைஸ்ராய் வழங்கிய சலுகைகளை முஸ்லிம்கள் ஏற்றுக்கொண்ட அதே வேளையில், காங்கிரஸ் கட்சி அதை மறுத்துவிட்டது. காங்கிரஸ், குடிமக்களின் ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தால், அது முஸ்லிம்களுக்கும் ஆங்கிலேயருக்கும் எதிராக இருக்கும்.**

**சிலர் காந்தியை விரும்புகிறார்கள், சிலர் விரும்பவில்லை. ஆனால் சில விஷயங்களில் பலவீனமாக இருந்தாலும் அவர் ஒருவரே நேர்மையான மனிதர். உலகத்திற்கான உண்மையான பேரழிவு இன்னும் தொடங்கவில்லை. அவர்களுக்குத் தெரியாது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளும் வேளையில், அவர்கள் அறிந்து கொள்வார்கள்! இப்போது அவர்கள் வெறுமனே தங்களுக்குத் தெரியும் என்று கூறுகிறார்கள். உலகப் பேரிடரில் இந்தியா தனது பங்கைப் பெறும்போது - அது பிறரின் பங்கைவிட அதிகமாக இருக்கும் - உண்மையான விஷயம் ஆரம்பமாகிவிட்டது என்று அர்த்தம்!**

பேச்சின் தலைப்பை மாற்றி, மெஹர் பாபா தியானத்தைப் பற்றி விளக்கினார்:

**தியானம் செய்ய முடியுமானால் அவ்வாறே செய்யுங்கள். முடியாதவர்கள், என் பெயரை அரை மணி நேரம் மீண்டும் மீண்டும் உச்சரியுங்கள். நீங்கள் தினமும் தியானம் செய்ய வேண்டும், ஆனால் நான் உங்களைப் பார்க்க வரும் நாள், அதைச் செய்யாமல் இருந்தால் பரவாயில்லை.**

**சிலருக்கு, தியானம் பொருத்தமானது, சிலருக்கு, அவ்வளவு பொருத்தமாக இராது; மிகச் சிலரே அதை மனமார அனுபவிக்கிறார்கள். தியானத்தின் அர்த்தம் என்னவெனில் உங்களுக்குள்ளே செல்வது! கடவுளை நேசிப்பவர்களை, அந்த அன்பு உள்ளே அழைத்துச் செல்கிறது.**

**மதுரை, பாண்டிச்சேரி போன்ற சில ஆசிரமங்களில் உண்மையான தியான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆனால் தியானம் இதுவரை, ஒரு நபரையும் இறைநிலையை எய்த வழிவகுக்கவில்லை! ஹஃபீஸ், ஸூஃபிகளிடம், "கடவுளோடு ஒன்றிணைவதற்கான 'திடீர் ஆர்வம்' உங்களுள்**

எழும் தருவாயில், அவருடன் ஐக்கியமாகிவிட்ட ஒருவரின் காலடியின் தூசியாக மாறுங்கள்!" என்றார்.

தியானம் சில அதிர்ஷ்டசாலிகளுக்கு அமைதியையும், சில அரிய உள் வெளிப்பாடுகளையும் அளிக்கிறது. அரபிந்தோ - AUROBINDO (GHOSE - கோஸ்) தனது புத்தகத்தில், "நான் தியானத்தின் மூலம் அந்த நிலையை அடைய முயற்சிக்கிறேன்" என்று எழுதியுள்ளார். தியானத்தின் மூலம் இறை ஒளியை அடையப்பெறுவது சிறிய விஷயமல்ல. தியானத்தின் பொருள் ஒருவரின் சுயத்திற்குள் ஆழமாகச் செல்வது. இது தெய்வீக வழியில் 'சுய அறிதுயில் நிலை' (SELF-HYPNOTISM - சுய-ஹிப்னாட்டிஸம்) - அதாவது 'உங்களை' இழக்க 'உங்களையே' மறந்து இறைவனைத் தவிர வேறு எதையும் நினையாமல் இருப்பது!

அரபிந்தோ ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கிறார், இது ஒரு வாலி-மஸ்தின் நிலையால் அல்ல, ஆனால் தியானத்தால் அடைந்த ஒன்று. சட்டி பாபா, ஒருபோதும் தியானத்தில் ஈடுபடவில்லை, ஆனாலும் அவர் இரவு பகலாக இறைவனைப் பார்க்கிறார். இருவரும் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் இருந்தாலும், அவர்களுக்கு இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. அன்பு நிரந்தர நிலையை வழங்கும் அதே வேளையில், தியானம் சமாதி நிலையை நல்கும். கடவுளுடன் ஐக்கியமான பிறகு, நீங்கள் பௌதீக உணர்வு நிலைக்கு வந்தாலும் வராவிடிலும், முழுமையான நிரந்தரத் தன்மை உள்ளது. நீங்கள் கீழே வருவதானால், கடவுளை உங்களோடு கொண்டு வருகிறீர்கள்!

கடவுளைக் காண்பதற்கும் அவருடன் ஐக்கியமாவதற்கும் இடையிலான அந்த 'ஆழமான பள்ளத்தாக்குப்' பற்றி அரபிந்தோ அழகாக எழுதுகிறார்: "நாங்கள் இந்தப் பக்கம் இருந்துகொண்டு கூக்குரலிடுகிறோம், 'கடவுளே, நாங்கள் உங்களைக் காண்கிறோம், ஆனால் உங்களிடம் வர முடியவில்லை! ஆகவே, குறைந்தபட்சம் நீங்களாவது எங்களிடம் வாருங்கள்!'" அதற்கு, கடவுள் பதிலளித்தார், "நான் எப்போதும் ராம், கிருஷ்ணா, புத்தர் மற்றும் பிறராக வருகிறேன்."

ஸூஃபிக்கள் தியான மார்க்கத்தைப் பொருட்படுத்துவதில்லை; அவர்கள் கடவுளை நேசிக்கிறார்கள்! கடவுளிடம் அன்பு செலுத்துகிறார்கள்!

தியானம் நல்லது. நீங்கள் இறைவனை நேசித்து தியானித்தால் எந்தத் தீங்கும் இல்லை. நீங்கள் நேசித்து, தியானிக்கவில்லை என்றாலும், எந்தத் தீங்கும் இல்லை. ஆனால் நீங்கள், எப்படியேனும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் 'கொயினா' (QUININE) மருந்தை உண்டவர் போல தியானிக்க வேண்டாம்! நீங்கள் தியானத்தில் ஆர்வமாக இருந்தால், அதை மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும். உங்களுக்கு தியானத்தில் ஆர்வமில்லை என்றால், நீங்கள் என் பெயரை உச்சரிக்க வேண்டும்; நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்றால், என் பெயரை உச்சரிப்பது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்; எங்கு, எப்போது வேண்டுமானாலும் செய்யுங்கள்.

வெளியிலிருந்து வரும் தொந்தரவு, அரவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, பாபா கூறினார்:

**இமயமலையில் கூட, நீங்கள் முழுமையான அமைதியைக் காண முடியாது! ஆனால் செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு, நீங்கள் எனது 'எதிர்கால சமாதி' அருகே தியானம் செய்யலாம். 'சமாதி நிலை' என்றால் மிக அருகாமையில் கூட, துப்பாக்கியால் சுடப்படுவதை நீங்கள் கேட்க முடியாது!**

**தியானத்தின் குறைபாடு என்னவெனில், எந்தச் சத்தமும் அதற்கு இடையூறாக இருக்கும். ஆனால் அன்புக்கு அத்தகைய தடைகள் இல்லை. அங்கு, அன்பர் தனது அன்பிற்குரியவரின் சிந்தனையில் ஒன்றாகிறார். அவர் தியானிப்பதில்லை, அவர் நேசிக்க மட்டுமே செய்கிறார். அரவம், தடை எதுவும் அவரைத் தொந்தரவு செய்வதில்லை.**

மாலை 5:30 முதல் 6:00 மணி வரை பெண்மணிகள் பாபாவின் முன்னிலையில் தங்கள் (கிழக்கு) அறையில் கடவுளின் ஏழு நாமங்களைப் பாடினர், மேலும் பாபா, "**ஒவ்வொரு நாளும் இங்கேயே பாடுங்கள்**" என்று குறிப்பிட்டார். பின்னர் அவர் வேடிக்கையான கதைகளைக் கூறுமாறு அனைவரிடமும் கேட்டுக் கொண்டார்; அவர், புறப்படுவதற்கு முன்னர், இரவு 8:15 மணிவரை அவர்களின் கதைகளைக் கேட்டு ரசித்தார்.

இதற்கிடையில், அங்காய் குகையில் 'பிஸ்டலின் நான்கு சிறைக்கைதிகள்' பப்பா ஜெஸவாலாவின் விசித்திரமான கால அட்டவணையின் கீழ், கடினமான நேரத்தைக் கழித்து வந்தனர். இனிமேலும் தாங்கிக்கொள்ள முடியாது என்ற நிலையில் குஸ்தாஜி, அவர் சார்பாக, ஸவக் மூலமாக, பாபாவைக் கெஞ்சிக் கேட்டுக் கடிதம் எழுதினார்:

பிரியமான பாபா,

நான் சாய் பாபாவுடன் இருந்தேன்; உபாஸனி மஹாராஜ், பாபாஜானுடனும் இருந்தேன்; இப்போது, மெஹர் பாபா, நான் உங்களுடன் இருக்கிறேன். ஆனால் நான் பப்பாவைப் போன்ற ஒரு 'தலைவரை' ஒருபோதும் சந்தித்ததில்லை! இங்குள்ள விவகாரங்கள் அத்தகைய நிலையை எட்டிவிட்டன; ஒன்று, நான் வெளியேற வேண்டியிருக்கும், அல்லது 'தலைவர்' வெளியேற வேண்டும். இந்த வருந்தத்தக்க சூழ்நிலையிலிருந்து நீங்கள் எங்களைக் காப்பாற்ற விரும்பினால், 'பிஸ்டலின் பிடியிலிருந்து' எங்களை விடுவிப்பதே ஒரே வழி!

- குஸ்தாஜி.

இந்தக் கடிதம் விஷ்ணு மூலமாக ஏகாந்தவாசத்தில் இருந்த பாபாவிடம் ஒப்படைக்கப்பட்டது; அது அவரை மிகவும் மகிழ்வித்தது. அங்காயிலிருந்து ஐந்து பேரையும் திரும்ப அழைத்துவர செப்டம்பர் 8ஆம் நாள் டானை அனுப்புமாறு விஷ்ணுவிற்கு அறிவுறுத்தினார். ஸரோஷுக்குச் சொந்தமான பேருந்தில் டான் அங்காய் மலைக்குச் சென்று, செப்டம்பர் 10 அன்று மெஹராபாத் திரும்பி வந்து,

குடும்ப குவாட்டர்ஸில் தங்கினர். மௌனம், ஏகாந்தவாசம், உபவாசம் போன்ற உத்தரவுகள் இன்னும் தொடர்ந்தன; மேலும் பப்பா ஜெஸவாலாவும் மௌனம் கடைப்பிடித்ததோடு, அவருடன் அந்த நான்கு மண்டலிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அறிவுறுத்தப்பட்டது - அவர்களுக்கு முழு நிம்மதி!

பாபாவிடம் அறிக்கையை அளிக்க டான் 11ஆம் தேதி வந்தபோது, அவருடன் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பிரபல ஆராய்ச்சியாளரும், பயண எழுத்தாளருமான 'எலா மெயிலார்ட்' (ELLA MAILLART) மெஹராபாத்திற்கு வந்து பாபாவை சந்திக்க விரும்பினார். பாபா ஏகாந்தவாசத்தில் இருந்ததால், அவர் அந்தப் பெண்மணியைப் பார்க்கவில்லை, ஆனால் டான், பாபாவைப் பற்றிச் சுருக்கமாக அவருக்கு விளக்கினார்.

1940, செப்டம்பர் 15 ஞாயிற்றுக்கிழமை வரை பாபா மெஹராபாத் மலையில் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மஸ்துகளுடன் இடைவிடாமல் பணிபுரிந்தார்; அப்போது, சட்டி பாபா, முஹமது, ஷரியத் கான் ஆகியோரைத் தவிர, பிற அனைவரையும் அவரவர் இடங்களுக்கு மாஸாஜி மற்றும் காளேமாமாவுடன் அனுப்பி வைத்தார்; அவர்கள் இருவரும் கூட மௌனம் அனுஷ்டித்தனர். மெஹர் பாபா மூன்று மஸ்துகளுடன் தொடர்ந்து பணிபுரிந்தார்.

இந்த நாள் முக்கியத்துவம் வாய்ந்த நாள், ஏனெனில் இது பிரிட்டன் நாட்டுப் போரின் இறுதி கட்டமாகவும், ஹிட்லரின் முதல் பெரிய தோல்வியாகவும் இருந்தது. ஜெர்மனியர்கள் ஏற்கனவே ஃபிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து நாடுகளின் தரை மற்றும் விமானப் படைகளை அழித்துவிட்டனர், மேலும் ஜெர்மன் இராணுவம் பிரிட்டனை ஆக்கிரமிக்கத் தயாராக இருந்தது.

செப்டம்பர் 15ஆம் நாள் 'ராயல் விமானப்படை' (R.A.F) மற்றும் லுஃப்ட்வாஃப் (LUFTWAFFE) எனும் ஜெர்மன் படைகளுக்கும் இடையிலான நீண்ட தொடர் விமான தாக்குதல்களின் மிக முக்கியமான நாளின் உச்சக்கட்டமாகும்; 'பிரிட்டன் போர்' (BATTLE OF BRITAIN) என்றழைக்கப்பட்ட இது, போரின் மிக அறுதியான போர்களில் ஒன்றாக கருதப்படுகிறது; மேலும், இங்கிலாந்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஹிட்லரின் லட்சியத்தை இது அழித்தது.

1940, செப்டம்பர் 19 வியாழக்கிழமை பிற்பகலில் பெண் மண்டலியை சந்தித்த வேளையில், பாபா, இசையைப் பற்றிய புத்தகங்களின் சில பாகத்தை, சத்தமாக வாசித்ததைக் கேட்டு இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

**இசையில் 132 மெட்டுகள் உள்ளன. புகழ் வாய்ந்த இசை நிபுணர் ஒருவரின் இசை மெட்டுகள் மிகவும் அற்புதமாக இருக்கும்; ஆனால் அவை மிகவும் அரிதானவை. டெல்லியில் கண்பார்வையற்ற பாடகர் ஒருவர் இருந்தார், இப்போது காலமாகிவிட்டார், அவருடைய இசை நிகழ்ச்சி மிகவும் அருமையாக இருந்தது.**

**கடவுளின் 'நாதம்' அளவிறுதியற்றது. கபீர் அதை எல்லையற்ற 'நாதம்' அல்லது 'குரல்' என்று அழைக்கிறார். ஒவ்வொரு சூட்சும மற்றும் ஆழ்**

மன ஆன்மீகத் தளங்களிலும், ஏழு தாளங்கள் (மெட்டுகள்) உள்ளன. இவ்வாறு, 43 தாளங்கள், ஆறு ஆன்மீகத் தளங்களில் 42, மற்றும் கடவுளின் இசையாக ஒன்றும் உள்ளது. பௌதீகத் தளத்தின் மிகச் சிறந்த, உண்மையிலே நேர்த்தியான குரல் கூட, கடவுளின் குரலின் ஏழாவது நிழல் ஆகும்; இதை கிறிஸ்து, ஸொராஸ்டர், கபீர் ஆகியோர் 'கடவுளின் வார்த்தை' என்று அழைத்தனர். ஒரு சிறந்த பாடகரின் குரல், மழையை வரவழைக்கும், விளக்கொளியை அதிரவைக்கும், மக்களை கண்ணீர் சிந்த வைக்கும்; அந்தக் குரல்கூட, கடவுளின் குரலின் ஏழாவது நிழல் மட்டுமே.

கடவுளின் குரலின் ஆறாவது நிழலின் இசையைக் கேட்டால், அது ஒருவரை முழுப் பிரபஞ்சத்தையும் மறக்கச் செய்யும். இது முதலாவது ஆன்மீகத் தளத்தில் நிகழ்வது. முதல் ஆன்மீகத் தளத்தில் பயணிக்கும் ஆர்வலர் ஒருவர், தொடர்ந்து இந்த மெட்டைக் கேட்டுக்கொண்டிருந்தால், அவரால் மேலும் கடந்து செல்ல முடியாது. இரண்டாவது ஆன்மீகத் தளத்தில், யாத்ரீகர் அந்த நித்திய தெய்வீக குரலின் ஐந்தாவது நிழலைக் கேட்கும்போது, அவர் உண்ணவும், உறங்கவும் முடிவதில்லை. இதுதான் 'நாதம்' அல்லது 'மெட்டு' என்று அழைக்கப்படுகிறது. இரண்டாவது ஆன்மீகத் தளம் முதலாவதை விட மிகவும் சக்தி வாய்ந்தது.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளை அப்படியே எழுத்து மற்றும் வார்த்தை சார்ந்த அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டாம். அதை எவ்வாறு விளக்க முடியும்? இந்துக்கள் கடவுளுடைய வார்த்தையை 'ஓம்' என்று அழைக்கிறார்கள். நீங்கள் வாயை மூடினால், எதுவும் பேச முடியாது, ஆனால் நீங்கள் 'ஓம்ம்... ம்ம்ம்... ம்ம்ம்...' - என்று கடவுளின் ஏழாவது நிழலான குரலை உச்சரிக்கலாம்.

கடவுள் எல்லையற்ற 'ஒலி', எல்லையற்ற 'ஒளி' மற்றும் எல்லையற்ற 'அன்பு'. முதல் ஆன்மீகத் தளத்தில், அவர்கள் நுட்பமான செவிப்புலன் வழியாகக் கேட்கிறார்கள்; ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆன்மீகத் தளங்களில், ஆழ் மன செவியைப் பயன்படுத்துகின்றனர்; ஏழாவது ஆன்மீகத் தளத்தில், அவைக் 'குரலோடு குரலாக' ஒன்றிணைகின்றன.

அதை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்? முடியாத காரியம். 'கடவுளைக் குரலாகவும்', அந்தக் 'குரலோடு குரலாக' ஐக்கியமாவதையும் நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்?

பாபா சிரித்துக்கொண்டே, சோகமாகத் தலையை அசைத்து, பின்பு தொடர்ந்தார்:

நேசம், அன்பு என்றால் என்ன? நீங்கள் நேசித்தாலும் கூட, அதை விளக்குவது மிகவும் கடினம். அப்படியானால் எல்லையற்ற அன்பை விளக்குவது எவ்வளவு சாத்தியமற்றது என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்! சூரியனும், அழற் சிவப்பான கிரகங்களும் இறை ஒளியின் ஏழாவது நிழல், அதாவது 'கடவுள்' என்று வேதாந்தம் கூறுகிறது. ஒரு நிழலே

ஒன்றுமில்லாத போது, அந்த நிழலின் ஏழாவது நிழல் என்பது ஒன்றுமே இல்லை என்றுதான் பொருள்கொள்ள வேண்டும்.

நாம் பேசும்போது பயன்படுத்துவது கடவுளின் குரல் அல்ல. கடவுளை இந்தக் குரலாகக் கற்பனை செய்து பாருங்கள் - அதை விளக்கும் முயற்சியில் அவர்கள் அதை குரல் என்று அழைக்கிறார்கள். வேதாந்தவாதிகள் அதை விளக்க முடியாது. ஸுஃபிக்கள் அதை வித்தியாசமாக - நிழலாக அல்ல, ஆனால் 'முகத்திரை' அல்லது 'முக்காடு' என்று விளக்குகிறார்கள். அவர்கள் இதை இவ்வாறு விவரிக்கிறார்கள்: உங்களைக் கடவுள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு கண்ணாடியில் பார்க்கிறீர்கள். நீங்கள் முதலில் கண்ணாடியில் பார்ப்பது அதன் முதல் பிரதிபலிப்பான ஆறாவது ஆன்மீகத் தளம். பின்பு, கண்ணாடியில் ஒரு முகத்திரைக்குப் பின்னால் உள்ள பிரதிபலிப்பை நீங்கள் காண்கிறீர்கள், அது ஐந்தாவது ஆன்மீகத் தளம் (இரண்டாவது பிரதிபலிப்பு). மற்றுமொரு முகத்திரைக்குப் பின்னால், நான்காவது ஆன்மீகத் தளம் (அதாவது மூன்றாவது பிரதிபலிப்பு) உள்ளது, இப்படி மற்றும் பல; முகத்திரைக்குப் பின்னால் முகத்திரையாக ஏழாவது தளம் வரை. இவை 'ஏழு முகத்திரைகள்' அல்லது 'ஏழு முக்காடுகள்' என்று அழைக்கப்படுகின்றன.

தொடர்ந்து, மெஹர் பாபா எழுத்துப்பலகையில் உச்சரித்ததை மணி வாசித்தார்:

இன்னும் ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்: 'உணர்வு நிலையை' கடவுள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள், எலிஸபெத், கிப்பியை உங்கள் மடியில் வைத்திருப்பதை உணர்கிறீர்கள். அப்போது உங்கள் மடியில் ஒரு புலி இருப்பதாக நீங்கள் கற்பனை செய்கிறீர்கள். இந்தக் கற்பனைதான் உங்கள் உணர்வின் முதல் நிழல். இதைப் போலத்தான் கடவுளின் 'உணர்வு நிலையின்' நிழல், அதாவது ஆறாவது ஆன்மீகத் தளம்; இப்படி மற்றும் பல.

மற்றும் ஓர் எடுத்துக்காட்டு: இந்தியாவில், மணியைக் கையால் உருவாக்குகின்றனர், இயந்திரங்களால் அல்ல. முதலில், களிமண்ணில் மணியை வடிவமைத்து, பின்னர் உருகிய உலோகத்தை மேலே ஊற்றி, உலோகத்தாலான மணியை உருவாக்குகின்றனர். செயல்முறை முடிந்ததும், களிமண்ணை அகற்றிவிட வேண்டும். இப்போது, இந்தக் களிமண்ணாலான மணி, உண்மையான மணியின் முதல் நிழல். இது உண்மையான மணியின் சரியான பிரதி என்றாலும், அது களிமண் ஆதலால் ஒலிக்க முடியாது. எனவே, மணிக்கும் அதன் முதல் நிழலுக்கும் (மண்ணாலான மணி) உள்ள வேறுபாடு மிகப் பெரியதாக இருக்கும் போது, ஏழாவது நிழல் என்னவாக இருக்க வேண்டும்? ஒன்றுமேயில்லை!

முதல் நிழலில் உலோகம் எதுவும் இல்லாமல் மண்ணாக மட்டுமே இருக்குமானால், ஏழாவது நிழலில் என்னதான் இருக்கும்? உலகில் உள்ள

**எவரும் விளக்க முடியாததை, நான் தெளிவாக விளக்குகிறேன்; என்னால் கூட வேறு எந்த வார்த்தைகளாலும் தெளிவாக விளக்க முடியாது!**

ஒரு முறை தலைவலியின் அனுபவம் இல்லாத ஒருவர் யுனானி (UNANI) மருத்துவரிடம் சென்று, 'தலைவலி என்றால் என்ன?' என்று கேட்டார்.

**அது என்னவென்று அந்த மருத்துவருக்குத் தெரியும், ஏனெனில் அவர் அதை அனுபவித்திருந்தார். அவர் வார்த்தைகளிலும் செயல்களிலும் மணிக்கணக்கில் விளக்கியும், தலைவலி எப்படி இருக்கும் என்று அந்த மனிதனால் கற்பனை செய்ய முடியவில்லை. கடைசியில், எரிச்சலடைந்த மருத்துவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர் ஒரு கல்லை எடுத்து அந்த மனிதனின் தலையில் நேரடியாகத் தாக்கினார். அவ்வேளையில் தலைவலி என்னவென்று அந்த மனிதனுக்குத் தெரிய வந்தது; அவனது கேள்விக்கு இந்த யதார்த்தமான முறையில் பதில் கிடைத்தது.**

நிழல்களைப் பற்றிய அனுபவத்தை, ஒரே நொடியில் நான் உங்களுக்குத் தர முடியும், ஆனால் அதை உங்களுக்கு வார்த்தைகளில் விளக்க முடியாது.

**இந்த உலகம் கடவுளின் ஏழாவது நிழல் என்று நான் கூறினேன். கடவுள் இல்லை என்றால், உலகம் இருக்காது. கடவுளின் 'குரல்' என்பது சத்தம் அல்ல. மூன்றாவது ஆன்மீகத் தளத்தில் கூட, சத்தம் எதுவும் இல்லை. முதல் ஆன்மீகத் தளத்தில் நுட்பமான சத்தம் - மிக, மிக நுண்ணியதாக இருக்கும். இரண்டாவது ஆன்மீகத் தளத்தில், சத்தம் ஏறக்குறைய முழுவதுமாக 'மூழ்கிய' நிலையில் இருக்கும்; மேலும் நீங்கள் அதில் மூழ்கிவிடுவீர்கள். ஆனால் கடவுளாகிய அந்தக் குரல், அந்தக் குரலின் நிழல் மூன்றாவது ஆன்மீகத் தளத்தில் மேம்பட்ட வலிமையுடன் இருக்கும். ஸூஃபிக்கள் இதை 'வாயடைத்துப்போன நிலை' (DUMBFOUNDING) என்று அழைக்கிறார்கள்.**

நதீனால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை, "கடவுளின் குரலின் நிழல் படிப்படியாக ஒவ்வோர் ஆன்மீகத் தளத்திலும் மங்கலாகுமா?" எனக் கேட்டார்.

அதற்கு பாபா பதிலளித்தார்:

**கடவுள் எல்லையற்றவர் என்றும் ஒவ்வோர் ஆன்மீகத் தளத்திலும் மேலும் மேலும் வரையறுக்கப்பட்டவர், கட்டுப்படுத்தப்பட்டவர் என்றும் நீங்கள் கூற முடியாது. எல்லையற்ற ஒன்று, வரையறுக்கப்பட்டதாக இருக்க முடியாது. கடவுளின் 'குரல்' பலவீனமடைகிறது என்று நீங்கள் கூறினால், அது சரியல்ல. கடவுளின் 'குரல்' பலவீனமடைய முடியாது.**

**இது மணிகளின் உதாரணம் போன்றது. முதல் மணி தங்கத்தால் ஆனது, அதன் முதல் நிழல் இரும்பாலான மணி என்று சொல்லலாம்; இரண்டாவது நிழல் மண்ணாலும், மூன்றாவது நிழல் காகிதத்தாலும் ஆனது, இப்படி இன்னும் பல. அனைத்து மணிக்கும் ஒரே வடிவம் உள்ளது, ஆனால் தங்க மணியும் காகித மணியும் முற்றிலும்**

**வேறுபட்டவை. எனவே, காகித மணியின் விஷயத்தில் தங்க மணி பலவீனமாகிவிட்டது என்று நீங்கள் கூற முடியாது.**

1940 செப்டம்பர் முழுவதும், மெஹர் பாபா, மேல்மலை மஸ்த் ஆசிரமத்தில் கடுமையான ஏகாந்தவாசம் கடைப்பிடித்து, தொடர்ந்து பணியாற்றினார். வாரத்தில் வியாழன், ஞாயிறு இரண்டு நாட்களும் பாபா, பெண் மண்டலியை சந்தித்தார்.

இந்தக் காலகட்டத்தில், பாபா, யாரோ ஒருவர், ஒட்டுப்பலகை மீது வரைந்த அவரது ஓவியத்தை, ரானோவிடம் அனுப்பிவைத்தார். நீண்ட தலைமுடியுடன், நீளமான அங்கி அணிந்து, அமர்ந்திருக்கும் தோரணையில் வரையப்பட்ட சித்திரத்தின் மேல் மீண்டும் வரையுமாறு பாபா ரானோவிற்கு அறிவுறுத்தினார். ரானோ, அதைச் செய்து முடித்து 'அவதார்' என்று பெயரிட்டார்.

செப்டம்பர் 22, ஞாயிற்றுக்கிழமை, பாபா, பெண்மணிகளிடம், **"'நீங்கள் உங்களை இழக்காத வரையில், உங்களைக் கண்டுகொள்ள முடியாது' இதைக் கூறியவர் யார்?"** என வினவினார்.

எலிஸபெத், "கிறிஸ்து" என்று பதிலளித்தார்.

**"இதற்கு என்ன அர்த்தம்?"** என்று பாபா கேட்டார்.

ஒருவர், "ஆசையை அடக்கி வெல்வது" என்று கூறினார்.

மற்றொருவர், "சுய கீழ்நிலையை நிர்மூலமாக்குவது" என்றார்.

அதற்கு எலிஸபெத், ஒரு துறவியின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி: 'நடப்பது எதுவும் என் விருப்பம் அல்ல; ஆனால், கடவுளுடையது.' என்று கூறினார்.

பாபா '**ஆமாம்**' எனத் தலையசைத்து, '**எலிஸபெத் ஏறக்குறைய சரியான பதிலை அளித்துள்ளார்**' என்று கூறி மேலும் விளக்கினார்:

**இது, ஒன்றில் மூன்று விஷயங்களைக் குறிக்கிறது: முதலாவதாக, கடவுளை மிகையாக நேசிப்பதன் மூலம் உங்களை மறந்துவிடுவது; இரண்டாவது, ஆத்மாவுக்காக உங்கள் உடல் ரீதியான ஆசைகளைத் தியாகம் செய்வது; மூன்றாவது, கடவுளின் சித்தத்திற்கு முழுமையாக அடிபணிவது.**

**நீங்கள் அதிகமாக நேசிக்கும்போது, உங்களை நீங்களே மறந்துவிடுவீர்கள். இப்போது அதை நடைமுறையில் செய்வது எப்படி? ஆண்கள், பெண்கள், கார்கள், நாய்கள், மற்றும் பலவற்றின் மீதான அன்பு, தன்னிச்சையாக வருகிறது. இது, பரிசாக அடையப்பெறுவது அல்ல, ஆனால் தன்னிச்சையான தன்மை, இயற்கையாக நிகழ்வது. கடவுளை நேசிப்பது என்பது நடைமுறையிலும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு செயல்முறையிலும் வருகிறது. ஆனால் கடவுளை மிகையாக நேசிப்பது என்பது ஓர் அன்பளிப்பு. பாபாவை நேசிக்க, நீங்கள் பாபாவைப் பற்றி சிந்திக்க வேண்டும். நீங்கள் பாபாவைப் பற்றி சிந்திக்கும் போது, உங்களைப் பற்றி நீங்கள் நினைப்பதில்லை! நீங்கள் பாபாவைப் பற்றி எவ்வளவு அதிகமாக**

**சிந்திக்கிறீர்களோ, அவ்வளவு குறைவாக உங்களைப் பற்றி நீங்கள் நினைக்கிறீர்கள். எனவே, 'கடவுளை மிகவும் நேசிப்பதால், உங்களை நீங்கள் மறந்துவிடுகிறீர்கள்' என்பதன் அர்த்தம் என்னவெனில், நீங்கள் கடவுளைப் பற்றி அந்த அளவிற்கு அதிகமாக சிந்திக்கிறீர்கள் ஆகையால் இனி நீங்கள் உங்களைப் பற்றி சிந்திக்க முடியாது! தொடர்ந்து சிந்திப்பதன் மூலம், நீங்கள் ஆழமாக என்ன நினைக்கிறீர்களோ அதுவாக நீங்கள் மாறிவிடுகிறீர்கள்! ஒருவர் ஆழமாக நினைப்பதை, மனம் அவரை, அவ்வண்ணமே ஆக்குகிறது.**

**நீங்கள் எப்பொழுதும் பாபாவையே நினைத்தால், உங்களைப் பற்றி நீங்கள் சிந்திக்க முடியாது. நீங்கள் என்னைப் பற்றி நினைக்காவிடில், உணர்ச்சிபூர்வமாக பாதிக்கப்படாமல் இருப்பீர்கள். ரானோ, நான்னியைப் பற்றி நினைக்கும் போது மட்டுமே அவர் வருத்தமாக உணர்கிறார். அவர் தன் தாயைப் பற்றி நினைக்காதபோது, எந்த உணர்வும் இல்லை.**

**பூனாவில் 'தி மதர்ஸ் லாட்ஜ்'** (THE MOTHERS' LODGE) **என்று அழைக்கப்படும் மற்றொரு தியான மையம் திறக்கப்பட்டுள்ளது. இந்தத் தியான வகுப்புகள், அன்பை வழங்குவதில்லை. தியானம் அன்பை அல்ல, அமைதியை உருவாக்குகிறது. தொடர்ந்து ஆழமாக ஈடுபடும்போது, சிந்தனை அன்பைக் கொண்டுவரும். தியானத்தில், நீங்கள் சிந்திப்பதை நிறுத்த முயற்சிக்கிறீர்கள். சிந்திப்பதை நிறுத்துவது அமைதியைத் தருகிறது. ஆனால் அன்பு செலுத்த, நீங்கள் அன்பிற்குரியவரை நினைவில் கொள்ள வேண்டும்! உங்கள் மனம் அசையாமல் இருந்தால், உங்கள் அன்பிற்குரியவர் இனி உங்களுக்காக இல்லை என்று அர்த்தம். அன்பிற்குரியவர் இல்லாத இடத்தில் அன்பு எப்படி இருக்க முடியும்?**

**இந்த வேறுபாடு மிகவும் முக்கியம். நீங்கள் தியானிக்கும்போது, எல்லாவற்றையும், உங்களையும் சேர்த்து மறக்க முயற்சிக்கிறீர்கள்; நேசிக்கும் போது, நீங்கள் எல்லாவற்றையும், சுயத்தையும் மறந்துவிடுகிறீர்கள், ஆனால் நீங்கள் பிரியமானவரை நினைவில் கொள்கிறீர்கள்! உண்மையான, சிறிதளவும் பிசகாத தியானத்தில், சாதாரணமாக அரிதான ஒன்று என்னவெனில், நீங்கள், உங்கள் உடலையும், உங்களையும், எல்லாவற்றையும் மறந்து விடுகிறீர்கள். நேசிப்பதில் நீங்கள் சுயத்தையும், உடலையும், எல்லாவற்றையும் மறந்து விடுகிறீர்கள், ஆனால் உங்கள் அன்பிற்குரியவரை நினைவில் கொள்கிறீர்கள்!**

**தியானத்தில், பிரியமானவருக்கு இடமில்லை. அதனால்தான் தியானத்தில், அதிகபட்சம் நீங்கள் அடையமுடிவது சமாதி - எல்லாவற்றையும் மறந்து அமைதியைப் பெறுவது என்று கூறப்படுகிறது. ஆனால் இவ்வண்ணம் ஒருபோதும் இறை உணர்வை அடைய முடியாது! அது அன்பினால் மட்டுமே அடையப்படுகிறது.**

பாபா, அப்போது கேட்டார், **"உங்களில் எவரேனும் புனித அரபிந்தோவைப் பற்றிப் படித்திருக்கிறீர்களா?"** தியானத்தின் மூலம் அரபிந்தோவின் ஆன்மீக முன்னேற்றம் குறித்து, பாபா மீண்டும் விளக்கினார்.

பேச்சின் தலைப்பு, தற்போதைய போரைக் குறித்ததாக இருந்தது. மெஹர் பாபா, இந்தியாவின் தற்போதைய அரசியல் நிலைமையைக் குறித்து கருத்துத் தெரிவித்தார்:

**காங்கிரஸ், முதன்முதலில் 1810ஆம் ஆண்டில், தாதாபாய் நௌரோஜியால் தொடங்கப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக காந்தி தலைவராக இருக்கிறார். அந்தக் கிறுக்குத்தனமான 'சவுரி சௌரா' (CHAURI CHAURA) கலவரம் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு வெடித்தது. 'ஒரு கன்னத்தில் அறைந்தால், நீங்கள் மற்றொரு கன்னத்தையும் காட்டுங்கள்' என்று காந்தி நினைக்கிறார். அது போருக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று அவர் நினைக்கிறார். ஆனால் அது அஹிம்சை மற்றும் முட்டாள்தனமானது!**

**'மஹாசபா' (MAHASABHA), ஓர் இந்து பிற்போக்குத்தனமான அரசியல் குழு, நீங்கள் கீதையைப் பின்பற்றி, கிருஷ்ணர் அறிவுறுத்தியபடி செயல்பட வேண்டும் என்று கூறுகிறது - அதாவது வெறுப்பை வெளிப்படுத்தாமல் தன்னைப் பாதுகாப்பது. இப்போது அது நடைமுறைக்கு உகந்ததல்ல, ஏனெனில் ஜெர்மனியரின் வெறுப்பு மிகவும் ஆழமானது, அதனால், அனைத்து தற்காப்பு நாடுகளின் எதிர்வினையும் வெறுப்பாகத்தான் இருக்கும்!**

**மஹாசபாவால் பரிந்துரைக்கப்பட்ட கிருஷ்ணரின் போதனையும், காந்தியால் வாதிடப்பட்ட கிறிஸ்துவின் போதனையும் இந்தப் போருக்கு சாத்தியமற்றவை. சிறிய நாடுகள் என்ன செய்தன? அவர்களால் எதிர் நின்று போராட முடியாததால், பெரிய நாடுகளால் விழுங்கப்பட்டனர்! இப்போது அவர்கள் எதிர்த்தவர்களை விட அதிகமாக வெறுக்கிறார்கள்.**

**எனவே, இப்போது உலக அமைதிக்கு ஒரு புதிய, மூன்றாவது வழி உருவெடுக்கும். முதலாவதாக உலகப் போர், பின்னர் உலக அமைதி.**

**விமானத் தாக்குதல்களுக்கு இந்தியா அஞ்சுகிறது, மேலும் கொல்கத்தா அலுவலக நேரம் குறைக்கப்படுகிறது. மும்பை அரசாங்கம் பூனாவிற்கு மாறுவது பற்றி ஆலோசனை செய்கிறது. எகிப்து வீழ்ந்தால், இந்தியா மீது குண்டு வீசப்படுவது உறுதி.**

**எனவே, நாம் புதிய இடம் தேடி, ஒரு துறைமுகத்தை நோக்கிச் செல்ல வேண்டும். இலங்கை அல்லது ரத்னகிரி, இது ஸாக்கர்பாவிலிருந்து (SAKHARPA) 50 மைல் தொலைவில் உள்ளது; அழகான மலைகளும் கடற்கரைகளையும் உள்ளடக்கிய இந்தியாவின் அற்புதமான பகுதிகளில் ஒன்றாகும். இது கார்வார் (KARWAR) நகரை விடப் பெரியது. இந்தத் துறைமுகங்களில் ஒன்றிற்கு நாம் செல்வோம். உங்கள் அனைவர் மீதும் குண்டு வீசப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!**

போரைப் பற்றிப் பெண்மணிகளில் ஒருவர் கூறியதற்கு பதிலளிக்கும் விதத்தில், பாபா கேட்டார்:

**இதில் தீயது என்று கூற என்ன இருக்கிறது? போர், மக்களுக்கு, தைரியம், துன்பம், தியாகம் போன்றவற்றைக் கற்றுத் தருகிறது. இங்கே ஒரு குண்டு விழுந்தால், இரண்டு நொடிகளில் பாகு** (ஒரு பணிப்பெண்)

**அரன்காவ்மில் இருப்பார்** (அனைத்து பெண்களும் சிரித்தனர்.) **ஆனால் எனது பாகு என்னுடன் இருந்தால் பயப்பட மாட்டாள் என்று கூறுகிறாள்!**

முஹமது மஸ்தைப் பற்றிய இந்த நகைச்சுவையான சம்பவத்தை பாபா, விவரித்தார்:

**நேற்று முன்தினம் முஹமது அழுதார்: "தாதா, நீங்கள் என்னிடம் பொய் சொல்வீர்கள் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை! என் மனைவி வருகிறாள் என்று நீங்கள் சொன்னீர்கள், அவள் எங்கே?" என்று கேட்டு அழுதார், அவருடைய மனைவி வரவில்லை என்பதற்காக அல்ல, நான் அவரிடம் பொய் சொன்னதாக நினைத்து அழுதார்!**


**ஒரு வயதான பெண்மணி, கைகளில் ஒரு குழந்தையுடன், கண்களைக் கட்டிக்கொண்டு வருமாறு நாங்கள் ஏற்பாடு செய்தோம்; "இப்போது நான் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதை நீங்கள் காணலாம், நான் நன்றாக இருக்கும்போது வருவேன்," என்று கூறவும் அவரிடம் சொல்லியிருந்தோம். அந்தப் பெண்மணியை முஹமதிடம் அழைத்துச் சென்றதும் அவர், "ஓ, உனக்கு வயதாகிவிட்டது" என்று கூறினார்; அந்தப் பெண்மணி தனது பங்கை சிறப்பாகச் செய்தார்.**

**எனவே முஹமது, இப்போது, மகிழ்ச்சியாக இருக்கிறார், ஏனெனில் நான் கூறியபடிச் செய்தேன். அவர் கண்களில் மருந்து வைக்குமாறு அறிவுறுத்தினார், பின்னர் அந்தப் பெண்மணியை முற்றிலும் மறந்து, வழக்கமான கற்களை சேகரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டார். இப்போது நான் அவரிடம் பொய் சொல்லவில்லை என்று அவர் திருப்தி அடைகிறார். அவர் ஒரு குழந்தையைப் போலவே இருக்கிறார். நீங்களும் ஒரு குழந்தையைப் போல மாறாவிட்டால், இந்தப் பாதையில் நுழைய முடியாது.**

அன்றைய தினம் (செப்டம்பர் 22ஆம் நாள்) அவர்கள் சிறிது நேரம் விளையாடிய பிறகு, தகரக் கொட்டகையின் கீழ் அமர்ந்து, பாபா, காகிதமும் பென்சிலும் எடுத்து வருமாறு கூறி, **அதில் மூன்று முகங்களை வரைந்தார்; இது ஹிட்லர், முஸோலினி, நெவில் சேம்பர்லெய்ன் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறினார்:**

**"இங்கே** (முழுக் **கோளத்தின் பௌதீக உலகைச் சுட்டிக்காட்டி**), **அவர்கள் அனைவரும் போராடுகிறார்கள்"** என்று பாபா கூறினார். **"இங்கே 'உண்மைப்பொருளின் அளவிறுதியற்ற நிலையில்'** (வித்னியான் புவன் - VIDNYAN BHUVAN) **அவர்கள் அனைவரும் ஒன்று. ஆனால் இங்கு என்ன நடந்தாலும் அது கடவுளின் சித்தத்தின்படி நடக்கிறது. இது உங்கள் மனதில் ஆணித்தரமாகப் பதிக்கப்பட்டிருந்தால், இந்தப் போர் சம்பந்தப்பட்ட எதிலும் ஒன்றும் இல்லை, அனைத்தும் கடவுளின் திருவிளையாடல் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்."**

“இங்கே அவர்கள்
மோதிக்கொள்கிறார்கள்”




“இங்கே அவர்கள் ஒன்றே உருவான ஏக இறைவனாக நிலை கொண்டிருக்கிறார்கள்”

1940 செப்டம்பர் 27 முதல் 29 வரை, மூன்று நாட்கள், பெண்மணிகள் காலை 8:00 முதல் மதியம் 12:00 வரை, இந்த நான்கு மணிநேரங்களுக்கு முழுமையான மௌனம் கடைப்பிடிக்க வேண்டும்; ஊழியர்களுக்கும் கூட இந்த மூன்று நாள் உத்தரவு வழங்கப்பட்டது. இதற்குப் பிறகு, செப்டம்பர் 30ஆம் தேதி முதல், பாபா தனது ஆன்மீகப் பணியைத் தொடங்குவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னர், ஒரு எச்சரிக்கை மணி ஒலிப்பதாகக் கூறினார், மேலும் அடுத்த அரை மணி நேரத்திற்கு அனைவரும் முற்றிலும் அமைதியாக இருக்க வேண்டும். இந்த நேரத்தில் அவர்கள் தியானத்தில் மூழ்கி, கைகால்களைக் கூட அசைக்காமல் இருந்தால் மிகச் சிறந்தது என்று அவர்களை ஊக்குவித்தார்.

மெஹர் பாபா, ஏகாந்தவாசம் மேற்கொண்ட வேளையில், அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, நாய்க்குட்டி வாரியரைத் தன்னிடம் அனுப்புமாறு பெண் மண்டலிக்கு அறிவுறுத்தியிருந்தார்; மேலும், பாபா, மஸ்த் ஆசிரமத்தில், தனது கைகளால் நாய்க்குட்டிக்கு உணவூட்டினார். இதற்குப் பிறகு, வாரியரின் உடல் நலம் குன்றியதால், அதன் பொறுப்பாளராக இருந்த எலிஸபெத், வாரியரை கால்நடை மருத்துவரிடம் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். ஆனால், வாரியரின் உடல்நிலை முற்றிலும் பாதிக்கப்பட்டு 1940, செப்டம்பர் 28 அன்று மெஹராபாத் மேல்மலையில் உயிரைத் துறந்தது.

பாபா, பெண்மணிகளைப் பார்க்க வந்து, அவர்களுக்கு, நான்னியின் சமாதி அருகே ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி, வாரியரை அங்கு அடக்கம் செய்யுமாறு கூறினார். குழி தோண்டப்பட்டபோது, அடக்கம் செய்ய பாபா உதவினார்.

எலிஸபெத் சோகமாகக் காணப்பட்டார்; மாலையில் பாபா, அவருக்கு ஒரு செய்தியை அனுப்பி வைத்தார்: "**மகிழ்ச்சியாக இருங்கள், வாரியர் என்னிடம் வந்துவிட்டது**." ஆனால் மறுநாள், பாபா அதை அவர்களுக்கு விளக்கும் வரை, வாரியர் உண்மையில் எவ்வளவு சிறப்பு வாய்ந்த நாய் என்பது எவருக்கும் தெரியாது:

**எலிஸபெத், நான் கூறுவதை கவனமாகக் கேளுங்கள்; எனது பணியில் வாரியரின் பங்கைப் பற்றி நீங்கள் அறிந்தால் பெருமைப்படுவீர்கள். நான் உங்களுக்குச் சொல்வது உண்மை, உங்களை மகிழ்விக்கும் நோக்கத்தில் நான் இதைச் சொல்லவில்லை. உண்மையில், அவதார புருஷர்கள், சத்குருக்கள் மற்றும் குருநாதர்கள் ஒருபோதும் அவர்கள் பணிபுரியும் செயல்முறையை வெளிப்படுத்துவதில்லை. அவர்கள் அதை வெளிப்படுத்துவதாக இருந்தால், அது அவர்களின் வேலைப் பளுவை அதிகரிக்கும். "உண்மைப்பொருளைக் கண்டறிந்த ஒருவர், அதை நித்தியமாக மறைக்கிறார்" என்று ஸூஃபிகள் கூறுகின்றனர். அது முற்றிலும் அப்படித்தான். இறைநிலையை அடைந்த ஒருவர், சாதாரண வார்த்தைகளில் உண்மையை ஒருபோதும் வெளிப்படுத்துவதில்லை என்பதே இதன் பொருள்.**

கடவுளின் பணி, மறைத்து செய்யப்படும் பணி, இறைநிலையை அடைந்த சத்குருக்களின் ரகசிய பணியைப் போன்றது. ஆனால் வாரியரைப் பொறுத்தவரையில், அவர்களின் பணி எவ்வாறு செய்யப்படுகிறது என்பதற்கான கருத்தார்ந்த அறிகுறி ஒன்றை, இன்று நான் உங்களுக்குத் தருகிறேன். முதலாவதாக, ஏழு ஆன்மீகத் தளங்கள் இருப்பதுபோல், ஏழு ஆன்மீக நிலைகளும், ஏழு ஆன்மீகப் புரிதல்களும் உள்ளன. இது எப்போதும் எண் ஏழாகவே இருக்கும். எண் ஏழு என்பது தெய்வீக எண். இப்போது நாம் ஏழு ஆன்மீகப் புரிதல்களைப் பற்றிப் பார்ப்போம்:

1. **உந்துணர்வு** (INSTINCT)
2. **அறிவுத்திறன்** (INTELLECT)
3. **உத்வேகம்** (INSPIRATION)
4. **உள்ளுணர்வு** (INTUITION)
5. **நுண்ணறிவு** (INSIGHT)
6. **ஒளியூட்டம்** (ILLUMINATION)
7. **இறையுணர்வு** (REALIZATION)

உந்துணர்வு, விலங்குகள் சாம்ராஜ்யத்தை நிர்வகிக்கிறது;

அறிவுத்திறன், மனிதர்களை ஆட்சி புரிகிறது;

உத்வேகம், கவிஞர்கள் மற்றும் கலைஞர்களைப் போன்ற உணர்வுகளின் ஆதிக்கம் நிறைந்த மனிதர்களுக்கு உரித்தானது. ஆன்மீக மேல் தளங்களில் வாழும் மேம்பட்ட ஆத்மாக்களின் (மஸ்துகள்) உணர்வுபூர்வமான காட்சிகள் மற்றும் அறிவிற்கு, உள்ளுணர்வு, காரணமாக விளங்குகிறது. உள்ளுணர்வால் நீங்கள் புரிந்துகொள்வது எப்போதும் உண்மையானதாக இருக்கும். ஆனால் அறிவுத்திறன் அல்லது புத்தியால் நீங்கள் புரிந்துகொள்வது சில நேரங்களில் உண்மையாகவும் சில நேரங்களில் மாறாகவும் இருக்கும்.

நான்காவது மற்றும் ஐந்தாவது ஆன்மீகத் தளங்களில் வாழும் ஆத்மாக்களுக்கு நுண்ணறிவு உள்ளது; அவர்களின் புரியும் தன்மை, மனதுடனான சிந்தனை மூலமாக அல்லாமல் நேரடியானதாக இருக்கும்.

ஒளியூட்டம் என்பது கடவுளை அவருடைய உருவில் காண்பது. புரியும் தன்மை தெய்வீகமானது. (இறை) உணர்தல் என்பது தன்னை கடவுள் என்று புரிந்துகொள்வது.

வேறு வேறு வடிவங்கள், உணர்வின் பரிணாம வளர்ச்சியின் காலகட்டத்தில், மனித வடிவம் உருவாகும் வரை, ஏழு திருப்பங்களைக் கொண்டிருக்கும். இப்போது, ஒவ்வொரு திருப்பத்திற்கும் கடவுளுடன் நேரடித் தொடர்பு உண்டு. இதர ஆறு திருப்பங்களைப் பற்றி இப்போது நாம் குறிப்பிட மாட்டோம்; உதாரணமாக, தாவரங்கள் ராஜ்ஜியத்தில், துளசி (புனிதமான துளசி செடி) திருப்புமுனையில் இருக்கும் ஒன்று. விலங்குகள் ராஜ்ஜியத்தில், ஒரு நாய், உள்ளுணர்வு மற்றும் நுண்ணறிவின் ஒரு குறுகிய பாகத்தைக்

கொண்டிருந்தாலும், உணர்வுபூர்வமாக அதைப் பயன்படுத்த முடியாத நிலையில் அது திருப்புமுனையில் இருக்கிறது.

ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆன்மீகத் தளங்களில் வாழும் புனிதர்கள், நுண்ணறிவைக் கொண்டுள்ளனர், மேலும் அவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நாய் அதைப் பயன்படுத்த முடியாது. இதன் அர்த்தம் என்னவெனில், சாதாரண மனிதர்களால் பார்க்க முடியாத பொருட்களை நாய் மட்டும் பார்க்க முடிகிறது. இதன் காரணமாக, நாய் அந்த இடத்தில் இருக்குமானால் எண்ணங்களையும், சூழ்நிலைகளையும் சுத்திகரிக்கும். அதனால்தான் உயிரைத் துறந்த உடலை அகற்றுவதற்கு முன்பு, சடலத்தைப் பார்க்க ஒரு நாயைக் கொண்டுவருவது ஸொராஸ்ட்ரியர்கள் மத்தியில் நிலவும் வழக்கம்; நாய் மனப்படிவங்களை சுத்திகரிக்கிறது.

குருநாதர்கள் மத்தியில் நாய்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நான் ஏகாந்தவாசம் மேற்கொண்ட ஏறக்குறைய பத்து நாட்கள், எனது சொந்த பணிக்கு ஒரு நாய் வேண்டும் என்று நான் விரும்பினேன் - என்ன என்று நான் உங்களுக்கு இப்போது சொல்ல மாட்டேன்! 'சும்' (CHUM), அல்லது வேறு எந்தச் செல்லப்பிராணியையும் நான் அதற்காகப் பயன்படுத்த முடியாத நிலை. நான் விரும்பிய நாய், புதியதாக, புத்துணர்வோடு, அப்பாவியாகவும், இளமையாகவும் இருக்க வேண்டும். எனவே, ஏகாந்தவாசத்திற்கு முன்பு, கோர்ஷெத் ஓர் அல்ஸேஷன் நாய்க்குட்டியைப் பற்றி குறிப்பிட நேர்ந்தது, இறுதியில் நாம் வாரியரைப் பெற்றுக்கொண்டோம். 'அது எனது நாய்' என்று நான் கூறினேன். ஜிங்கோ, பிங்கோ அல்லது இதர செல்லப்பிராணிகளைப் பற்றி நான் அவ்வாறு குறிப்பிடவில்லை. வாரியர், பாபாவின் நாய் என்பதை நீங்கள் அனைவரும் புரிந்து கொண்டீர்கள்! வாரியர் உண்மையில் ஒரு நாய் அல்ல, ஆனால், குறிப்பாக இந்தப் பணியைச் செய்து முடிக்கும் நோக்கத்தில், ஆவிகள் உலகத்திலிருந்து தற்காலிகமாக, கீழ் உலகிற்குக் கொண்டுவரப்பட்ட ஆத்மாதான் அந்த நாய். இப்போது, இந்த விஷயத்தில் மேலும் ஆழமாகச் செல்ல வேண்டாம்.

இவ்வாறு வாரியர் வந்தது; இதனால்தான் நான் வாரியர் என் அருகில் இருக்க வேண்டும் என்று எலிஸபெத்திடம் சொல்லிக்கொண்டே இருந்தேன். ஆனால் அது கடினமாக இருக்கும் என்பதும் எனக்குத் தெரியும். ஏனெனில் சூழ்நிலைகள் மாற மாற இது தடைகளை உருவாக்கும். எனவே, முதல் சில நாட்களுக்கு, வாரியர், புழுக்கள், கிருமிகள் மற்றும் பலவற்றால் தாக்கப்பட்டது. இறுதியில், நான் விரும்பிய காலம் வரை, அதை வைத்திருந்தேன். 1941, ஜூலை 1ஆம் தேதிக்கு முன்பு, 'சும்' மட்டுமல்ல வாரியரும் இறந்துவிடும் என்று எனக்குத் தெரியும். எனவே, நான் அத்துடன் பணிபுரிந்த பின்னர் - எனது கைகளால் உணவூட்டி, நீரும் அருந்த வைத்தேன் - எனது வேலை முடிந்ததும், நான் அதைத் திருப்பி அனுப்பினேன்.

விரைவில், அதன் உடல்நிலை சரியில்லாமல் போனதும், நான் 'ஸொல்டூனின் சகோதரி'யுடன் ('பைதூல்' என்று பொருள், ஏனெனில் மெஹராவின் முன்னிலையில் எந்த ஆண் மகனை அல்லது பெயரைக் குறிப்பிடக்கூடாது என்பதால்) அது உயிரைத் துறந்தால் அடக்கம் செய்வது பற்றி விவாதித்தேன். நாங்கள் இறுதியாக அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தோம். வாரியர் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது, அது மூன்று நாட்களுக்குள் இறந்துவிட்டால், மீண்டும் ஒரு பிறவியை எடுக்க வேண்டியிருக்கும் - அது வாரியருக்கு பாதுகாப்பாக இருக்காது - என்பதால் அது இறவாமல் நான் பார்த்துக் கொண்டேன். எனவே, அந்த மூன்று நாட்களில் அது உயிரைத் துறக்காததால், நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

இப்போது, இனி அதற்கு மறுபிறவி என்பது இல்லை!

குருநாதர்கள், விலங்குகளின் இறந்த உடல்களைத் தொடும்போது, விலங்குகள் அவற்றின் அடுத்த பிறவியில் மனித உருவை அடைகின்றன. அதே வேளையில், குருநாதர்களின் தொடர்பில் இருக்கும் விலங்குகள் அடுத்த பிறவியில் ஆன்மீக மேல்நிலை ஆத்மாக்களின் வடிவங்களைப் பெறுகின்றன. ஆனால், வாரியருக்கு, இனி பிறப்பு எதுவும் இல்லை!

வாரியர் மூன்று நாட்களுக்குள் இறந்திருந்தால், நிலைமை வேறாக இருந்திருக்கும். கடைசியாக நான் அதைப் பார்த்தபோது, நான் இருந்த இடத்திற்கு எப்படி வந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது. நான் அதைத் தட்டிக் கொடுத்தேன். அது இறந்துவிடும் என்று எனக்குத் தெரியும். அது (எனது பணியில்) ஒரு பங்கு வகித்ததை, உங்களால் புரிந்து கொள்ள முடியாது. அது எனது பணியைப் பகிர்ந்து கொண்டது, இப்போது சுதந்திரமாகிவிட்டது.

'சும்' கூட அந்த அளவிற்கு அதிர்ஷ்டசாலியாக இருக்காது. அது ஜூலை 1941க்கு முன்னர் இறந்துவிடும்; மேலும் வாரியருக்கு அருகில் அடக்கம் செய்யப்படும். ஆனால் அடுத்த பிறவியில் ஒரு யோகியாக திரும்பி வரும். கிப்பியும் தனது அடுத்த பிறவியில் ஒரு யோகியாகப் பிறவி எடுக்கும். நான் இந்த விவரங்களில் மேலும் ஆழமாகச் செல்லமாட்டேன், இல்லையேல் நீங்கள் இன்னும் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள். ஆனால், இப்போது நான் எனது பணியைக் குறித்த சில அறிகுறிகளை உங்களுக்கு வழங்கியுள்ளேன்.

நான் ஏகாந்தவாசம் இருந்த வேளையில், எனது சகவாசத்தில் இருந்து வாரியர் உயிரைத் துறந்தது. இதனால், நான் மகிழ்ச்சியடைகிறேன். அது தக்க நேரத்தில் மறைந்தது, அதற்கு முன்னால் அல்ல. என்னால் கூட அதைத் தடுத்து நிறுத்த முடியாது. எனது பணி இது போன்ற ஒரு வகையானது; நான் அதை நிறுத்தியிருந்தால், முழு விஷயமும் குழப்பத்தில் இருந்திருக்கும்! அது ஓர் உண்மையான போர்வீரன்! எனது பணியில் உண்மையான பங்கை ஆற்றியது.

கடவுள் எவ்வாறு பணிபுரிகிறார் பாருங்கள்! அவர், ஆன்மீக உலகிலிருந்து ஓர் ஆவியைக் கொணர்ந்து, அதற்கு வடிவம் கொடுத்து, அதனுடன் பணிபுரிகிறார்; அந்தப் பணி முடிந்ததும் அதை எடுத்து விடுகிறார்! ராமின் ஹனுமான், பாபாவின் வாரியர்!

எலிஸபெத், நீங்கள் இறைநிலையை அடையவில்லை. வாரியரின் மரணம் குறித்து நீங்கள் இயல்பாகவே வருத்தப்படுகிறீர்கள், ஆனால் நான் உங்களுக்கு அளித்த விளக்கத்தால், நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்!



மெஹர் பாபா (MEHER BABA)

# இலங்கையில் ஏகாந்தவாசம்

**(Seclusion at Srilanka)**

1940, செப்டம்பர் இறுதியில், மெஹர் பாபா மெஹராபாத்தை விட்டு வேறு ஏதேனும் இடத்திற்குச் செல்லத் திட்டமிடத் தொடங்கினார்; அங்கு அவர் தொடர்ந்து ஏகாந்தவாசத்தில் பணிபுரிய முடியும். அக்டோபர் தொடக்கத்தில், காக்கா, சாஞ்சி இருவரும் பாபா, தங்குவதற்குப் பொருத்தமான இடத்தைக் கண்டுபிடிக்க, இலங்கைக்கு (CEYLON) அனுப்பப்பட்டனர். ருஸ்தம்ஜி ரத்தன்ஷா பில்லிமோரியா (RUSTOMJI RATANSHAH BILLIMORIA) என்ற செல்வந்தர், பார்சி தொழிலதிபர், பாபாவை அறிந்திருந்தார், மேலும் பாபாவிற்கும் பெண்மணிகளுக்கும் பொருத்தமான குடியிருப்பைத் தேர்ந்தெடுக்க, காக்கா, சாஞ்சி இருவருக்கும் உதவினார். பாபா, கடற்கரை ஓரத்தில் அமைந்த வில்லாவில் தங்க விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் வசதியாக எதுவும் அமையாததால், ருஸ்தம்ஜி, கொழும்புக்கு வெளியே 25 மைல் தொலைவில், வெயங்கோடாவில் (VEYANGODA) அமைந்த தனது சொந்த பங்களாவைக் கொடுத்தார். சாஞ்சியும் காக்காவும் பாபாவிற்கு ஒரு தொலைத்தந்தியை அனுப்பினர்; பாபா அதற்கு ஒப்புக்கொண்டார்.

மெஹர் பாபா இப்போது நவம்பர் முதல் தேதியில் இலங்கைக்குப் புறப்படும் திட்டங்களைத் தீட்டத் தொடங்கினார்; மேலும் பெண் மண்டலியுடன் எதிர்வரும் பயணம் குறித்து விவாதித்தார்.

1940, அக்டோபர் 7ஆம் நாள், பாபா உபவாசம் கடைப்பிடித்தார். அன்று மாலை, 7:00 முதல் 11:30 மணி வரை, அவர் மிகவும் சிரமப்பட்டார். "**இது ஒரு நரக வேதனையாக இருந்தது**!" என்று பின்னர் அவர் குறிப்பிட்டார், "**அந்த நான்கரை மணி நேரம், எனது தற்போதைய வாழ்வின் அதி பயங்கரமான நேரமாக இருந்தது**!"

பாபா அன்று நள்ளிரவில் உபவாசத்தை முடிக்க இருந்தார், ஆனால் இரவு 11:30 மணிக்கு தூங்கிவிட்டார்; அதிகாலை 3:30 மணிக்கு பாபா, பால் அருந்தி உபவாசத்தை நிறைவு செய்தார். அந்த நாளின் பிற்பகுதியில், அக்டோபர் 7 அன்று ஜெர்மன் துருப்புக்கள் ருமேனியாவிற்குள் நுழைந்ததாகச் செய்தி வெளிவந்தது.

மெஹர் பாபா, தமது அறிக்கைகளிலிருந்து போர் குறித்துத் தயாரிக்கப்பட்ட கட்டுரை ஒன்றை வைத்திருந்தார்; அதை அவர் தனது அன்பர்களுக்கு அனுப்பவும் அல்லது பொதுவாக வெளியிட வேண்டும் என்றும் நினைத்தார். அக்டோபர் 11 அன்று, அவர் மகளிர் குடியிருப்புக்கு வந்தபோது, அதை உரத்த குரலில் வாசிக்குமாறு கூறினார். அனைவரும் அதை அற்புதம் என்று நினைத்தார்கள், ஆனால் அவர்களில் ஒருவர், விஞ்ஞானம் அதில் குறிப்பிடப்படக்கூடாது என்று கருத்துத் தெரிவித்தார்; அதன்பின் பாபா இவ்வாறு விளக்கினார்:

இன்றைய போரில் விஞ்ஞானம் மிகப்பெரிய பங்கை வகிப்பதால், (கட்டுரையில்) அறிவியல் கண்டிப்பாக இடம்பெற வேண்டும். அறிவியலை நல்ல வழியில் பயன்படுத்தலாம், அதே அறிவியலை தீய பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தலாம். அறுவை சிகிச்சை மற்றும் நோயைக் குணப்படுத்த, குளோரோஃபார்மை (CHLOROFORM) பயன்படுத்த முடியும். ஆனால் கொள்ளைக்காரர்கள் வழிப்போக்கர்களிடமிருந்து பொருட்களைத் திருட அதைப் பயன்படுத்துகிறார்கள். போரில், அறிவியல், அழிவிற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அழிவு என்பது இறுதியில் 'புதுப்பித்தல்' மற்றும் 'முன்னேற்றம்' என்று பொருள்படும். கருப்பு கொள்ளைநோய் (GREAT BLACK PLAGUE) காலத்தில், முழு லண்டனையும் எரித்து சாம்பலாக்கியபோது, என்ன நடந்தது? லண்டன் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது, அது முன்பை விட மிகச் சிறந்ததாக இருந்தது. எனவே உலகம் அழிக்கப்படும் வேளையில், சாம்பலிலிருந்து ஒரு புதிய, சிறந்த உலகம் உருவாகும். பிரபஞ்சம் முழுவதும் குழப்பமும் அழிவும் இருக்கும்; ஆனால் அதன் பின்னர், 800 ஆண்டுகளுக்கு, போர் இருக்காது!

எனவே, தற்போதைய துன்பங்கள் அனைத்தும், அந்த நீண்ட கால மகிழ்ச்சியை அடையும் அளவிற்கு மதிப்புள்ளது இல்லையா? மேலும் இந்தப் போரில் உயிரைத் துறப்பவர்கள், புதிய உலகையும் அமைதியையும் அனுபவிக்க மறுபிறவி எடுப்பார்கள். இப்போது அவர்கள் அதிகாரத்தையும், உடைமைகளையும் விரும்புகிறார்கள், ஒருவருக்கொருவர் வெறுக்கிறார்கள். இதெல்லாம் எந்த மாதிரியான முடிவை சந்திக்கும்? ஒரே ஒரு வழிதான் உள்ளது! அனைத்தையும் அனுபவித்து, சலித்துப்போய் - இறுதியில் ஆசைகள் வேண்டாம், வெறுப்பு வேண்டாம், மோதலும், போரும் வேண்டாம் என்ற நிலை உருவாகும்.

நீங்கள் பால் அருந்துவதை விரும்புவதாக வைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் அதை அதிகமாக அருந்தி, இறுதியில் வெறுப்படைந்து, போதும் போதும் என்ற நிலைக்கு வந்துவிடுகிறீர்கள். அப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? பால் அருந்துவதை நிறுத்தி விடுகிறீர்கள். அதேபோல், வெறுப்பு, பேராசை, கோபம் போன்றவை அவற்றின் உச்சத்தை எட்டும்போது 'போதும்' 'போதும்' என்றாகிவிடும். அப்போது என்னவாகும்? மாற்று வழிதான் என்ன? வெறுப்பு நீங்கி பாசத்தைப் பொழிய வேண்டும்; ஆசைகளைக் களைந்து அள்ளி வழங்க வேண்டும்; மோதலும், போரும் அகன்று அமைதி நிலவ வேண்டும்!

எதிர்கால உலகம் மிகவும் அருமையாக இருக்கும்!

"ஆனால், இது எல்லாம் பூஜ்ஜியமாகும்!" என்று குழுவில் யாரோ ஒருவர் குரல்கொடுத்தார். பாபா, '**ஆமாம்**' என தலையசைத்தார்:

**ஆம், ஆனால் இது ஓர் உன்னதமான புரிதல். நிகழ்காலம் கூட பூஜ்ஜியமாகும், எனவே பூஜ்ஜியத்தின் எதிர்காலம் பூஜ்ஜியத்தைத் தவிர வேறொன்றுமில்லை! இது எல்லாமே பூஜ்ஜியம்! கடவுளைத் தவிர வேறு**

**எதுவும் இல்லை. ஒரு நாள், எனது நெருங்கிய சீடர்கள் அதை உணர்ந்து கொள்வார்கள். இப்போது, நீங்கள் அதிகபட்சம் செய்ய முடிவது என்னவெனில், 'ஆம், எதுவும் இல்லை; அனைத்தும் பூஜ்ஜியம்' என்று நினைப்பதுதான்! ஆனால், அந்த உண்மையைப் புரிந்து கொள்ளும் போது அதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்!**

மெஹராபாத்தில் அவர் ஏகாந்தவாசம் மேற்கொண்ட காலகட்டத்தில், பாபா, பெண்மணிகளுக்கு 'நீர் உருவமற்றவர்' (நிராகார்) என்ற நான்கு வரி பாடலை, தினமும் போற்றி பாடுமாறு கூறினார்:

**நீர் உருவமற்றவர், பர்வர்திகார், அஹுராமஸ்தா, அல்லா, ஹு.**

**நீர் எஸ்தான், கடவுள், அஹுராமஸ்தா, அல்லா, ஹு.**

**நீர் பரமாத்மா, பரபிரம்மா; எல்லாம் வல்ல கடவுள், ஈஷ்வர்.**

**நீர் பரமேஷ்வர், எஸத், அஹுராமஸ்தா, அல்லா, ஹு.**

அக்டோபர் 11 அன்று பாபா, அதை மேலும் விளக்கினார்:

**'எஸட்' (EZAD) என்றால் ஆதி பகவன் - கடவுள் எல்லாம் வல்லவர், எல்லாம் அறிந்தவர், எங்கும் நிறைந்தவர். கடவுளுக்கு லட்சக்கணக்கான பெயர்கள் உள்ளன, ஆனால் ஒலி விளைவைக் கொண்டவை மிகக் குறைவு. நீங்கள் உருவாக்கும் ஒவ்வோர் ஒலியும், உங்கள் மனதில் உருவாகும் ஒவ்வோர் எண்ணமும், நல்லது அல்லது தீயதாக இருக்கும் . ஆனால் உணர்வை விளைவிக்கும் அந்த ஒலி, அதன் பின்னால் அதீத சக்தியைக் கொண்டிருக்கும், இது பிறருக்கு உதவும் அல்லது பிறரைக் காயப்படுத்தும்.**

**துப்பாக்கிகள், குண்டுகள், விமானங்கள், மற்றும் போரின் இதர ஓசைகள் அனைத்தும், எதிர்காலத்தில், உலகின் ஆன்மீக வாழ்க்கைக்கு பயன்படுத்தப்படும். ஆம், இது அனைத்தும் எப்போதும் இருக்கும். எங்கும் போக முடியாது. அது எங்குப் போக முடியும்? இது ஆவியாக உருமாறி, மேகங்களாக உருவாகி, மீண்டும் மழையாக வரும் நீர் போன்றது. ஆனால் நீங்கள் அனைவரும் இறை நாமத்தை ராக தாளத்துடன் ஒன்றிணைந்து பாடும்போது அது ஒரு விளைவை உருவாக்கும்.**

**இறை நாமம் உணர்ச்சி ததும்ப தாளத்துடன் பாடப்படும்போது, அது தற்காலிகமாக மஜ்ஜூப்களை** (அவர்களின் 'அதீத ஆழ் மன உணர்வு' SUPERCONSCIOUSNESS நிலையிலிருந்து) **இப்பூவுலகுக்கு அழைத்துவரும் விளைவைக் கொண்டிருக்கும். மும்பையைச் சார்ந்த 'அப்துல் பாபா' (ABDUL BABA) என்ற பிரபலமான மஜ்ஜூப், அவர் எப்போதும் மயக்க நிலையில் இருந்தார் - எதையும் உண்ணவும், அருந்தவும் செய்யாமல் வெறுமனே உணர்வற்றவராகத் தோன்றினார். ஆனால் ஒரு பாடகர், ஒவ்வொரு நாளும் அவரது வீட்டிற்கு வந்து, 'அல்லா ஹு, அல்லா ஹு' என்று ராக தாளத்துடன் பாடும் அரை மணி நேரத்திற்குள், அப்துல் பாபா சுயநினைவிற்கு வந்து, ஒவ்வொருவரையும் பார்த்து, பேசி, உணவு உண்டு, மீண்டும் அவரது பழைய நிலைக்குச் சென்று விடுவது வழக்கம்.**

அக்டோபர் மாதத்தில் பாபா, பெண் மண்டலியை அடிக்கடி சந்தித்து வந்தார். 1940 அக்டோபர் 13 அன்று, தட்டச்சு செய்யப்பட்ட அவரது இரண்டாவது கட்டுரையைப் படித்த பிறகு, பாபா, மனப்படிவங்களைப் பற்றி மேலும் சில விஷயங்களை விளக்கினார்:

**மனப்படிவங்கள் முழுவதுமாக சரிசமமாக்கப்பட வேண்டும். இதை ஒரு கணித செயல்முறையால் செய்ய முடியாது, அவ்வளவு இலகுவாகவும் இருக்காது.**

**நல்ல, தீய மனப்படிவங்கள் இரண்டும் பிணைப்புகள், கட்டுண்டவை. உங்களின் நல்ல மனப்படிவங்களால், நீங்கள் ஒரு பெரிய, செல்வந்தராகப் பிறக்கலாம்; தீய மனப்படிவங்களால், நீங்கள் ஒரு மோசமான தொழுநோயாளியாகக் கூட பிறக்கலாம், இப்படிப் பல. ஆனால் ஒரு குருநாதரின் துணையின்றி விடுதலையை** (இறைநிலை) **எய்த முடியாது. உங்களில் தீய மனப்படிவங்கள் எவ்வளவு உள்ளன, எந்த அளவிற்கு நல்ல மனப்படிவங்கள் தேவை என்று உங்களுக்குத் தெரியாது; ஆனால் இறைநிலையை அடைந்த குருநாதர் ஒருவருக்கு அது தெரியும்; அவற்றை, சரிசமமாக்க அவர் உங்களுடன் இணைந்து பணிபுரிவார்.**

**ஒரு முறை புத்தர், இறை உணர்வை அடைவதற்கு முன்பு, தனது சாம்ராஜ்யம், மனைவி, மக்கள் அனைத்தையும் துறந்து, காட்டிற்குச் சென்று உபவாசம் மற்றும் ஏகாந்தவாசத்தை மேற்கொண்ட வேளையில், ஆன்மீகப் பாதையில் மேல்நிலையை அடைந்த ஒரு வயதான பெண்மணி, அவரை வழியில் சந்திக்க நேர்ந்தது. அப்போது, முன்பை விட அதிகமாக பிணைக்கப்பட்டுள்ளதாக அந்தப் பெண்மணி அவரிடம் கூறினார்! இதற்கு முன்னர், அவை இரும்புச் சங்கிலிகளாக இருந்தன, இப்போது அவை தங்கத்தால் ஆனவை, ஆனால் இரண்டும் பிணைப்புகள், கட்டுண்டவை. பின்னர், அந்தப் பெண்மணி புத்தருக்கு அந்த ரகசியத்தை எடுத்துரைத்தார்.**

**நல்லது, தீயது இரண்டும் வெறும் சொற்கள். அவர் நல்லது செய்கிறார் என்று ஹிட்லர் மனமார நினைக்கிறார், ஆனால் அவர் தவறு செய்கிறார் என்று உலகம் நினைக்கிறது! அவருக்கு எது நல்லதோ அது உலகிற்கு தீயது. நல்லது, தீயது இரண்டும் மனிதனால் உருவாக்கப்பட்ட உணர்ச்சியின் வெளிப்பாடுகள் மட்டுமே. நீங்கள் அனைத்து ஆசைகளையும் துறக்கும்போதுதான் உண்மையான சுதந்திரத்தை அடையப்பெற முடியும். அத்தகைய சுதந்திரத்தை அடையப்பெற நீங்கள் அனைத்தையும், அனைவரையும் துறக்க வேண்டும்.**

நதீன், பாபாவின் அறிவுறுத்தல்களின்படி மௌனம் கடைப்பிடித்து வந்தார், இப்போது கை சைகைகள் மூலம் தொடர்பு கொண்டார். அவருக்கும் நோரினாவிற்கும் இடையிலான சில சமீபத்திய மனக்கசப்புகள் பற்றிக் குறிப்பிடும்போது, பாபா, **"நீங்கள் மௌனத்தை, பேச்சில் மட்டுமல்ல,**

**ஆசைகள், வெறுப்பு, கசப்பு, பேராசை போன்ற பலவற்றிலும் கடைப்பிடிக்க வேண்டும்!"** என்றார்.

மறுபடியும் மனப்படிவங்களைப் பற்றி விளக்கும் வேளையில் பாபா, இந்த உண்மை கதையைப் பெண் மண்டலிக்கு விவரித்தார்:

**ஒரு பெரிய கொலைகாரன் இருந்தான். இதுவரை அவனது வாழ்க்கையில், 99 பேரை கொலை செய்தான். ஒரு நாள், அவன் மிக்க மனச்சோர்வுடன் வெறுப்புணர்வில், ஒரு குருநாதரிடம் சென்று, வெளிப்படையாக, தனது குற்றங்களை அவர் முன் வைத்து, அனைத்திற்கும் ஒரு தீர்வு காண விரும்புவதாகக் கூறினான். ஒரு குறிப்பிட்ட சாலையோரத்தில் அமர்ந்து அவரைப் பற்றி சிந்தனை செய்யுமாறு குருநாதர் அறிவுறுத்தினார். கொலைகாரனும் அவ்வாறே செய்தான்.**

**ஒரு நாள், அவன் குருநாதரை நினைந்த வண்ணம் தியானத்தில் அமர்ந்திருந்த வேளையில், குதிரையில் சவாரி வந்த ஒருவர், கொலைகாரன் முன்னால் நின்று, அவனை அங்கிருந்து நகரச் சொன்னார். அதற்கு அந்தக் கொலைகாரன் மறுத்ததும், குதிரையில் வந்தவர், அவனைத் தனது சவுக்கால் அடிக்க ஆரம்பித்தார். கொலைகாரன் உடனடியாகத் தனது பழைய நிலைக்குத் திரும்பி, அந்த மனிதரைக் (குதிரையிலிருந்து கீழே இழுத்து) குத்திக் கொன்ற அந்த கணத்தில் கொலைகாரன் இறை உணர்வை எய்தினான்!**

**இப்போது பாருங்கள், குதிரையில் சவாரி செய்தவர், அந்நாட்டு மன்னரிடமிருந்து 100 உளவாளிகளைக் கொல்லும் உத்தரவைக் கையில் ஏந்தி, இன்னொரு நாட்டுக்குக் குதிரையில் சவாரி செய்து கொண்டிருந்தார். இவர் ஒருவரை மட்டும் கொலை செய்ததன் மூலம், கொலைகாரன் மொத்தததில் நூறு உயிர்களின் சரியான எண்ணிக்கையை சமநிலைப் படுத்தி, அவனது நல்ல மற்றும் தீய மனப்படிவங்களை முழுவதுமாக இல்லாமல் ஆக்க முடிந்தது. அந்த மனிதன் நிச்சயமாக இதையெல்லாம் அறிந்திருக்கவில்லை; குருநாதர் அதை அறிந்திருந்ததால், அந்தக் கொலைகாரன் காப்பாற்றப்பட்டான். ஆகையால், நீங்களும் முற்றிலுமாக, எந்தக் கேள்விகளுக்கும் இடந்தராமல் கீழ்ப்படிந்தால், வெற்றிவாகை சூடமுடியும், ஏனெனில் உங்களின் கருத்தாக்கம், உங்களைப் பற்றிய அறிவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், குருநாதர் அனைத்தையும் அறிந்திருப்பதால், எது சிறந்ததோ அதை உங்களுக்கு வழங்குகிறார்.**

மெஹர் பாபா, பின்னர் அனைவருக்கும் சமீபத்திய நோய், உணவு மற்றும் பல்லிகளை அதிலிருந்து விலக்கி வைப்பதன் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டார். அவர் கேட்டார், **"மேற்கத்திய நாடுகளில் இதுபோன்ற பல்லிகள் இல்லையா?"**

மேற்கத்திய பெண்மணிகள், "இல்லை" என்று பதிலளித்தனர்.

பாபா நகைச்சுவையாக, ஒளிரும் பார்வையுடன், "**அப்படியானால் நான் மேற்கில் பேசுவேன், ஏனெனில் அங்கே பல்லிகள் இல்லை!**" என்றார்.

டவ்லா மாசி, நான்னி கெய்லி ஆகியோரின் நினைவாக, அரன்காவ்ம் கிராம மக்களுக்கு, முறையே, அக்டோபர் 13, 14 ஆகிய தேதிகளில் விருந்து வழங்குமாறு பாபா, மண்டலிக்கு உத்தரவிட்டார். 13ஆம் நாள் மாலை 5:00 மணிக்கு, கிராமத்தைச் சேர்ந்த பெண்மணிகள் மற்றும் குழந்தைகள் மெஹராபாத் மேல்மலைக்கு வந்தனர், ஸூனாமாசி, காக்குபாய் இருவரும் அவர்களுக்கு இனிப்புகளை வழங்கிய அவ்வேளையில் மழை பொழியத் தொடங்கியது, "**இது கிராமவாசிகளை இன்னும் மகிழ்விக்கும்! அவர்களுக்கு இனிப்புகளை விட மழை முக்கியம், எனவே டவ்லா மாசி அவர்களுக்கு மழையை வழங்கினார்**" என்று பாபா குறிப்பிட்டார்.

ஸூனாமாசி, காக்குபாய் இருவரும் பிரசாதம் விநியோகித்ததை, பாபா பார்த்துக்கொண்டிருந்தார். மீண்டும், மறுநாள் மாலை 6:00 மணிக்கு, ரானோ, காக்குபாய் மற்றும் பலர் இனிப்புகளை வழங்கிய போது மழை பெய்தது. மெஹர் பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்து கொண்டிருந்ததால், விருந்தில் பங்கெடுத்த கிராம மக்களுக்கு அவர் தரிசனம் வழங்கவில்லை.

1940, அக்டோபர் 17 மதியம் மூன்று மணிக்கு, பாபா அனைத்து பெண் மண்டலியையும் தம்மிடம் அழைத்தார். அவர் வழக்கமாக மெஹரா, மணி, நாஜா, கோர்ஷெத் மற்றும் பிற கிழக்கத்திய பெண்மணிகளுடன், மெஹர் ரிட்ரீட் கிழக்குப் புற பெரிய படுக்கை அறையில் சிறிது நேரம் செலவிட்டு, பின்னர் மேற்கத்திய பெண்மணிகளையும் சந்தித்து வந்தார்.

அந்த நாளில், பாபா, முஹமது மஸ்தைப் பற்றிக் குறிப்பிட்டார், "**இன்று ஒரு தனி சிறப்பான செய்தி! முகமது, 'எனக்கு, என் மனைவி தேவையில்லை. அவள் எப்பொழுதும் உடல்நலம் சரியில்லாமல் இருக்கிறாள். அவளுடன் எந்த நேரத்திலும் ஏதோ தவறு நிகழ்கிறது. அதற்கு பதிலாக எனக்கு ஒரு மயிலைக் கொடுங்கள்! நான் உங்கள் மயில்; என்னுடையது எங்கே?' என்று கேட்டு, பின்னர் அவர் ஒரு மயிலைப் போலக் குரல் எழுப்பினார்!**" என்றார்.

இலங்கைக்குச் செல்வதற்காக அவர்கள் முந்தைய நாள் எடுத்த தடுப்பூசியைப் பற்றிக் குறிப்பிடுகையில், பைதூல் தொடர்பான ஒரு கதையை, பாபா நினைவுகூர்ந்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, மெஹராவிற்கு முன்னால் எந்த ஆண்களின் பெயரையும் குறிப்பிட, பெண்கள் தடைசெய்யப்பட்டனர், எனவே, மெஹர் பாபா, பைதூலைக் குறிப்பிடும்போது "ஸொல்டூனின் சகோதரி" ('பைதூல்') என்று உச்சரித்தார். மெஹரா முன்னிலையில் பாபாவுக்காக, செய்தித்தாள்களை வாசிக்கும் வேளையில், ரானோ 'திருமதி ஹிட்லர்', 'திருமதி முஸோலினி', 'திருமதி சர்ச்சில்', 'திருமதி காந்தி' என்று மற்றும் பலவற்றைக் கூறுவதைப் பழக்கமாகக் கொண்டார். மெஹரா எந்த அளவிற்கு தனிமைப்படுத்தப்

பட்டிருந்தார் என்பது இதிலிருந்து புரியும்.

காலம் குறிப்பிட்டது போல, “தூய்மையானவர்கள் மட்டுமே இத்தகைய கடுமையான தனிமை வாழ்க்கையை வாழ முடியும். மெஹராவால் அத்தகைய வாழ்க்கையை வாழ முடிந்தது, ஏனெனில் அவர் தனக்காக அல்ல, தனது அன்பிற்குரியவருக்காக வாழ்ந்து கொண்டிருந்தார்! அத்தகைய வாழ்க்கை ஓர் உண்மையான வாழ்க்கை, அங்கே பிரியமானவரிடத்தில் அன்பும் நம்பிக்கையும் எப்போதும் உயிரூட்டத்துடன் நிலைகொண்டிருக்கும்.”

பைதூலைப் பற்றி பாபா விவரித்த கதை:

‘ஸொல்டூனின் சகோதரி’ (பைதூல்) பெர்சியாவில் அவரது கிராமத்தில் மருத்துவராக இருந்தார். அவர் பூண்டை எண்ணெயில் கொதிக்கவைத்து, அந்தத் தைலத்தின் சில துளிகளை நோயாளியின் காதுகளில் வைத்தார். அவ்வேளையில் எனது பெயரை எடுத்துக் கொண்டதால், அது எல்லா வகையான நோய்களையும் குணப்படுத்தியது! இப்படி, அவர் சில நோயாளிகளை சிறப்பாக குணப்படுத்தியதால், அவரது புகழ் மேலும் பரவியது, அவர் இறக்கும் நிலையிலிருந்த பசுவிற்கு, இந்தத் ‘தைலத்தின்’ சில துளிகளைக் கொடுக்க அதுவும் உயிர் பிழைத்து வாழ்ந்தது.

ஆனால் உண்மை என்னவெனில், அவரது பரிகாரத்தால் நோயாளிகள் நலமடையவில்லை, ஆனால், என் மீது அவர் கொண்டிருந்த முழு நம்பிக்கையால் அவர்கள் குணமடைந்தனர்! ஒவ்வொரு மாலையும் அவர் என்னுடன் அமர்ந்திருக்கிறார், நான் அவரைப் பேசச் சொல்லும் போது, அவர் பெர்சியாவைப் பற்றியும் பிற உண்மை கதைகளையும் என்னிடம் எடுத்துரைக்கிறார். அவர் கூறுகிறார், “பாபா, நீங்கள் மட்டுமே அவர்களைக் குணப்படுத்தினீர்கள்!” அவர் எந்த நோயாளியிடமிருந்தும் பணம் வாங்கியதில்லை.

‘ஸொல்டூனின் சகோதரிக்கு’ என் மீது இருந்த உறுதியான நம்பிக்கை ஒன்றுதான் அந்தத் ‘தைலத்தின்’ மூலமாக நோயாளிகளைக் குணப்படுத்தியது. அவருக்கு என் மீது இம்மியளவேனும் சந்தேகம் இருந்திருந்தால், அந்தத் ‘தைலம்’ யார் ஒருவரையும் குணப்படுத்தியிருக்காது.

பின்னர், அன்று மாலை, மெஹர் பாபா முந்தைய இரவு ஐந்து நிமிடங்கள் கூட ஓய்வெடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். அப்போது, அவர் தற்போதைய உலக நிலைமை குறித்து விவாதித்தார்:

**இந்த வெவ்வேறு தலைவர்கள் மூலமாகக் கடவுள் செயல்படவில்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? காந்தி பலவீனமானவர், ஆனால் நேர்மையானவர். ஹிட்லர் வலுவானவர், ஆனால் நேர்மையற்றவர். கடவுள், இருவர் வழியாகவும் செயல்படுகிறார். அவர்களை வழிநடத்துவது யார்? கடவுள் மட்டுமே! அவர்களை வழிநடத்துபவனுக்கு அது தெரியும்! ஆனால் அவர்களை வழிநடத்துபவனை அவர்களுக்குத் தெரியாது; அவர்கள் அதை அறியாமலேயே தொடர்ந்து செயல்படுகிறார்கள்.**

**காந்தி, தாளத்தோடு ஒத்துப்போகாதவர். அவர் இருட்டில் தடுமாறக்கூடியவர், ஆனால் நேர்மையானவர். சர்ச்சில் அவரது இடத்திற்கு சரியான மனிதர். காங்கிரஸ்காரர்கள் அரசாங்கத்தை, சங்கடத்திற்கு உள்ளாக்குவதால் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.**

**அவர்கள் அரசாங்கத்திற்குத் தொந்தரவு கொடுப்பதில்லை என்று அவர்கள் கூறினாலும் நிஜத்தில் அதை சங்கடப்படச் செய்கிறார்கள். காந்தியும் சிறையில் அடைக்கப்படுவார். இந்தியா அத்தகைய குழப்பத்தில் உள்ளது. தற்போதைய குழப்பநிலை, கட்டுப்பாட்டை மீறிவிட்டால், உள்நாட்டுக் கலவரம் உருவாகும், காந்தி அதற்கெல்லாம் காரணமாக இருக்கும் அதிர்ச்சியில் உயிரைத் துறக்கவும் நேரிடும்.**

**ஒரே ஒரு விஷயம் மட்டுமே உண்மையும் முக்கியமானதுமாகும் - அதுவே 'அன்பு'! இந்தக் குழப்பம் எல்லாம் வெறும் குழப்பம் மட்டுமே!**

போரைப் பற்றி, பாபா ஆண் மண்டலிக்கு இவ்வாறு குறிப்பிட்டார்:

**விரைவில் ஜப்பான், பர்மா, சிங்கப்பூர், ஈரான், துருக்கி போன்ற நாடுகள் அனைத்தும் இதில் கலந்துகொள்ளும். மேற்கத்திய நாடுகளின் நெருக்கடி அதன் உச்சக்கட்டத்தை நெருங்குகிறது, கிழக்கு மற்றும் இந்தியாவின் நெருக்கடி 1941, ஜனவரியில் தொடங்கி 1941 நடுப்பகுதி வரை நீடிக்கும், பின்பு மந்த நிலை நிலவும்.**

**முஸோலினி இறுதியில் வன்முறையில் கொல்லப்படுவார்; ஹிட்லர் எனது முக்கிய வில்லன் என்றாலும் தற்கொலை செய்து கொள்வார். ரஷ்யா மிகவும் வஞ்சகம் நிறைந்தது. அது அனைவருக்கும் உதவுகிறது, இறுதியில் ஈரான், ஆஃப்கானிஸ்தான் - எல்லாவற்றையும் அபகரிக்கப் பார்க்கும். ரஷ்யா, ஜப்பான் இரண்டு நாடுகளும் இந்தியாவை விரும்புகின்றன, ஆனால் வெற்றி பெறாது.**

**மேற்கத்திய நாடுகளை விட இந்தியா அதிக அளவிலான பாதிப்பை சந்திக்கும். ஐம்பது சதவிகித மக்கள் அடுத்த ஆண்டு தொடக்கத்திலிருந்து அழிக்கப்படுவார்கள்.**

**பிரிட்டன் நசுக்கப்படும், ஆனால் விட்டுக்கொடுத்து இழக்காது; ஜெர்மனியும் இத்தாலியும் நசுக்கப்பட்டு தோல்வியுறும். உண்மையிலேயே புத்திசாலியான சர்ச்சிலைத் தவிர வேறு யார் இருந்திருந்தாலும், இங்கிலாந்து அழிக்கப்பட்டிருக்கும். சர்ச்சில் இங்கிலாந்தைக் காப்பாற்றியுள்ளார். பழைய சேம்பர்லெய்ன் பிரதமராக இருந்திருந்தால், இங்கிலாந்தின் கதை முடிந்திருக்கும்.**

1940, அக்டோபர் 20, 22 மற்றும் 24 ஆகிய தேதிகளில் பாபா, பெண் மண்டலியைப் பார்க்க வந்தார். ஒரு முறை, அவரது வருகையின் போது, காம்பவுண்டில் நிரம்பியிருந்த மரங்களுக்குக் கீழே அமர்ந்து, மனதைப் பற்றி விளக்கமளித்தார்:

**மனம் ஒரு நல்ல ஊழியன், ஆனால் மோசமான எஜமானர். இதன்**

**அர்த்தம் என்னவெனில், நீங்கள் அதைக் கட்டுப்படுத்தினால், அது நீங்கள் விரும்பியபடி செயல்படும். மாறாக, அதன் பாதையில் சென்று உங்களைக் கட்டுப்படுத்தினால் மனம் ஒரு மோசமான எஜமானர். மனதின் கட்டுப்பாடு உறுதியாகிவிட்டால் நீங்கள் தொலைந்து போகிறீர்கள்! மனம் என்பது கீழ் நிலை ஆசைகளின் களஞ்சியமாகும், எப்பொழுதும் உங்களைத் தவறாக வழிநடத்துகிறது. இது கோடிக்கணக்கான வருடங்களாக விலங்குகளின் ஆசைகளை முத்திரையாகக் கொண்டுள்ளது.**

**நீங்கள் மனதைக் கட்டுப்படுத்தினால், ஆசைகள் செயலற்றுவிடுகின்றன. மனித வாழ்க்கையில் மனதில் நல்ல ஆசைகளும் இருப்பதால், அந்த ஆசைகளும் அதன் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும். மனம் ஒரு நல்ல ஊழியன், ஆனால் மோசமான எஜமானர்!**

ஒரு கட்டத்தில், ஐரீன் நல்ல மனநிலையில் இல்லை என்பதை, பாபா கவனித்து, அவரிடம், "**நீங்கள் குதிரை சவாரி செய்யும்போது, அது கட்டுப்பாட்டை மீறினால் என்ன செய்வீர்கள்?**" என்று கேட்டார்.

"இதுபோன்ற சூழ்நிலைகளில் பின்பற்ற சில விதிமுறைகள் உள்ளன" என்று ஐரீன் பதிலளித்தார்.

29ஆம் நாள், பாபா, முஹமது மஸ்தை மும்பையில் ஈரானி உணவகத்தில் பணிபுரிந்த அலோபாவுடன் தங்க அனுப்பி வைத்தார். மஸ்துகளில் இப்போது, சட்டி பாபா மட்டுமே ஆசிரமத்தில் இருந்தார்; பாபா, அவரை இலங்கைக்கு உடன் அழைத்துச் செல்ல விரும்பினார்.

மெஹர் பாபா, அஹமதுநகர் ரயில் நிலையத்திலிருந்து 1940 நவம்பர் 1ஆம் நாள் மாலை 5:00 மணிக்கு மும்பை-மதராஸ் எக்ஸ்பிரஸ் ரயிலில் பைதூல், சாஞ்சி, டான், நீலு, விஷ்ணு, கிருஷ்ணா, வெங்கோபா ராவ், சட்டி பாபா மற்றும் பெண்மணிகள் - மொத்தம் 33 பேர் அடங்கிய குழு - மற்றும் சில குழந்தைகளுடன் புறப்பட்டார். பாபா அனைவரையும் இரண்டாம் வகுப்பில் அழைத்துச் செல்வது இதுவே முதல் முறை. (வழக்கமாக, அவர் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்தார்.) துக்காராம், நீலப்பேருந்தில் சில பெண்மணிகளுடன் அனைத்து சாமான்களையும் எடுத்துச் சென்றார். பாபாவின் ஏகாந்தவாசம் இப்போதும் தொடர்ந்ததால், மெஹராபாத்தில் இருந்த இதர மண்டலி சகன், ஹோமி, காளேமாமா, மாஸாஜி, முரளி காளே, பாதிரி, பெண்டு, ஸெயிலர் போன்றவர்களிடமிருந்து அவர் விடைபெறவில்லை; குடும்ப குவாட்டர்ஸில் தங்கியிருந்த ஸவக், பபானந்தா, பப்பா ஜெஸவாலா, பிளீடர் ஆகியோரையும் அவர் சந்திக்கவில்லை. பாதிரி, முரளி இருவரும் பெங்களூரிலிருந்து மெஹராபாத் திரும்பி வந்தனர். ஆதி சீனியர், டாக்டர் கனி, எரச் மற்றும் அவரது குடும்பத்தினர் மட்டுமே இப்போது பெங்களூரில் தங்கியிருந்தனர்.

மெஹர் பாபா, வழியில் எவரையும் சந்திக்கவில்லை. அவர், குழுவுடன் நவம்பர் 3ஆம் நாள் மாலை 5:00 மணிக்கு தனுஷ்கோடி (DHANUSHKODI) வந்தடைந்து, படகில் பயணம் செய்து, மாலை 7:30 மணிக்கு தலைமன்னார்

(TALAIMANNAR) வந்தார். அங்கிருந்து அவர்கள் ரயிலில் வெயங்கோடாவிற்குப் (VEYANGODA) புறப்பட்டு, மறுநாள் வந்து சேர்ந்தனர். இம்முறை பயணம் குறிப்பாகக் கடினமாக இருந்தது, ஏனெனில் பாபா தமது அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை, அதன் விளைவாக, இலங்கையில் நுழைந்தபோது, அவரது விருப்பத்திற்கு மாறாக, தனுஷ்கோடி, தலைமன்னார் போன்ற இடங்களில் சுங்க மற்றும் மருத்துவ பரிசோதனைகளின் போது, பாபாவும் பெண்மணிகளும் ஆஜராக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

வெயங்கோடாவிலிருந்து வாடகைக்கார்களில் அனைவரும், ருஸ்தம்ஜி பில்லிமோரியாவின் பங்களா அமைந்த 'ஹிக்கல்லா' தோட்டத்திற்குச் (HICKGALLA GARDEN) சென்றனர். ருஸ்தம்ஜியும் அவரது குடும்பத்தினரும் பாபாவை வரவேற்க வெயங்கோடாவிற்கு வந்திருந்தனர். காக்காவின் உதவியுடன் (அவர் மூன்று நாட்களுக்கு முன்னர் ஒரு சமையல்காரருடன் வந்திருந்தார்), அவர்கள் பாபா மற்றும் அவரது குழுவிற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்வதில் எந்தக் குறைபாடும் வைக்கவில்லை.

1940 நவம்பர் 7 அன்று, காலை உணவிற்குப் பிறகு, மெஹர் பாபா சற்று ஏமாற்றமடைந்தவர் போலத் தென்பட்டார்; அனைவரையும் அழைத்து, **"நீங்கள் ஏன் என்னுடன் இருக்கிறீர்கள்?"** என வினவினார்.

"உங்களை நேசிக்க" என்று ரானோ பதிலளித்தார்.

எலிஸபெத், "ஏனெனில் நான் உங்களை நேசிக்கிறேன், ஏன் என்று எனக்குத் தெரியாது, ஆனால் நான் நேசிக்கிறேன்" என்று பதிலளித்தார்.

பாபா சிரித்துக் கொண்டே எழுத்துப்பலகை வழியாக உச்சரித்தார்:

**ஆனால், நேசிப்பதற்கான என்ன ஒரு வழி இது! ஆமாம், நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள்; இல்லையெனில், என்னுடன் இருக்கும் ஒரே நோக்கத்தில் உங்கள் குடும்பங்கள், வீடு வசதிகள் மற்றும் பலவற்றை விட்டுவிட்டு ஏன் வரவேண்டும். நான் உங்களை நேசிப்பதால்தான் உங்களை என் அருகில் இருக்கச் செய்கிறேன்.**

**நான் பணிபுரியும் இந்த வருடம் மிகவும் முக்கியமானது. நீங்கள் அனைவரும் இப்போது என்னுடன் இருப்பதால் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். பிரபஞ்சம் இப்போது இருக்கும் குழப்ப நிலையில், கட்டளைகளின் பட்டியலை எனது சீடர்களுக்கு வழங்கினேன். இல்லையெனில், என் அன்பர்களில் மிக நெருக்கமானவர்கள் கூட என்னை விட்டு விலகியிருப்பார்கள்.**

**ஆனால், நீங்கள் எப்போதும், ஏன் உங்கள் விருப்பப்படி செய்ய விரும்புகிறீர்கள்? நான் விரும்புவதை நீங்கள் செய்ய வேண்டும்! நீங்கள் விரும்புவதை மட்டும் நீங்கள் செய்ய வேண்டும், அல்லது நான் விரும்புவதை மட்டுமே செய்ய வேண்டும்! உங்களையும் என்னையும் மகிழ்விக்கும் இந்த இடைப்பட்ட நிலையில் என்ன இருக்கிறது? அது சாத்தியமில்லை.**

**நீங்கள் என்னை நேசித்தால், எனது மகிழ்ச்சியில் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆனால் உங்களுக்கும் இதை நான்**

**எளிதாக்க முயற்சிக்கிறேன், ஏனெனில் நானும், நீங்கள் விரும்பியதைச் செய்ய அனுமதிக்கிறேன். நான் விரும்பியதை மட்டுமே செய்யும்படி நான் உங்களிடம் கேட்டுக்கொண்டால், நீங்கள் ஒரு நிமிடம் கூட என்னுடன் இருக்க மாட்டீர்கள்! நான், மோதலில் ஈடுபட வேண்டாம், விமர்சிக்க வேண்டாம் என்று சொல்கிறேன், ஆனால் நீங்கள், நீங்கள் விரும்பியதையே செய்கிறீர்கள். எனவே எனது பணியின் இந்த முக்கியமான காலகட்டத்தில், இந்த உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய உங்களால் இயன்றவரை முயற்சி செய்யுங்கள். ஒன்பது மாதங்களுக்கு, எனது முக்கியமான பணியின் போது நீங்கள் அனைவரும் என்னுடன் இருக்க வேண்டும்.**

கஷ்டமான மனநிலையை லேசாக்கும் எண்ணத்தில், பாபா, நகரத்தில் வேடிக்கையாகப் பார்த்த ஒரு சம்பவத்தை பின்பு விவரித்தார்:

**நோரினா, எலிஸபெத் ஆகியோருடன் பாஸ்போர்ட் அலுவலக (**PASSPORT OFFICE**) பணிக்காகக் காரில் சென்றபோது, எலிஸபெத் காரை நிழலில் நிறுத்த மறந்துவிட்டார். காரில் அமர்ந்து அவர்களை எதிர்நோக்கிக் காத்திருந்த வேளையில், நான் மிகவும் உஷ்ணமாக உணர்ந்தேன். ஆங்கிலேயர் ஒருவர் என்னிடம் வந்து, 'மன்னிக்கவும், நீங்கள் ஸ்ரீ மெஹர் பாபா?' என்று கேட்டதும், நான் தலையசைத்தேன்; அவர் அருகில் நின்று கொண்டிருந்த மூன்று சிலோனியர்களிடம் திரும்பி, 'அவர் ஒரு சிறந்த மனிதர். அவரை வணங்குங்கள்' என்று சொன்னதும் அவர்களும் அவ்வாறே செய்தனர். நான் அவரை இதற்கு முன்பு பார்த்ததில்லை, ஆனால் அவர் எனது முகத்தை, பிரகாசமான சூரிய ஒளியில் சிவப்பாகப் பார்த்து, அதை அவர் தெய்வீக ஒளி என்று நினைத்திருக்க வேண்டும்!**

அவர்கள் இலங்கைக்கு வந்ததிலிருந்து தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது; பாபா உட்பட அனைவரும் மனச்சோர்வுடன் காணப்பட்டனர். (பாபா சளியால் அவதிப்பட்டார்.) ஓர் இரவு நோரினா மோசமான கனவு ஒன்றைக் காண நேர்ந்தது. மறுநாள் காலையில், அவர் எரிச்சலான மனநிலையில் காணப்பட்டார். பாபா, நோரினாவைக் கூர்ந்து நோக்கி, **"அவர் ஒரு கனவு காரணமாக இந்த அளவிற்கு வருந்துகிறார். முட்டாள்! ஒரு கனவு நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கலாம், ஆனால் அதில் மனப்படிவங்கள் விரயமாகின்றன. கனவில் செலவிடப்படும் மனப்படிவங்களால் புதிய மனப்படிவங்கள் உருவாவதில்லை."**

1940, நவம்பர் 8 அன்று, பாபா, நோரினாவிடம், **"எனது தொப்பி அல்லது பாத அணி இரண்டில் நீங்கள் எதுவாக இருக்க விரும்புகிறீர்கள்?"** என்று கேட்டார்.

நோரினா, "உங்கள் பாத அணி" என்றார்.

**"ஏன்?"**

"ஏனெனில், பாத அணிகள் நல்ல மற்றும் மோசமான சாலைகளில் உங்கள் தோழர்களாக இருக்கும். அவை தூசு, மழை மற்றும் சேறு வழியாகச்

சென்று, எப்போதும் உங்களுடன் இருக்கும்” என்றார்.

**“இதனால்தான் இந்தியாவில் மக்கள் குருநாதரின் தொப்பியை வணங்காமல், பாத அணிகளை வணங்குகிறார்கள்”** என்று கூறி, ‘ஆமாம்’ எனத் தலையசைத்தார்.

இலங்கையில் தங்கியிருந்தபோது, பாபா ஒவ்வொரு நாளும் சட்டி பாபாவை ‘ஹிக்கல்லா’ தோட்டத்தில் அமைந்த ஒரு தனி குடிசையில் நீராட்டினார்.

ருஸ்தம்ஜி பில்லிமோரியா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு, இது முதல் சந்திப்பாக இருந்தபோதிலும், அவர்கள் பாபாவிடம் மிகுந்த பக்தியுடனும், பணிவுடனும் இருந்தனர். தனது சொந்த காரணங்களுக்காக, பாபா அந்த வீட்டில் தங்க விரும்பவில்லை. தனது ‘சிறப்பு பணிக்காக’, பாபா கடலோரப் பகுதியிலோ அல்லது மலையிலோ, ஏரி அல்லது அருகில் நீரோடையுடன் கூடிய ஒரு வீடு தேவை என்று சுட்டிக்காட்டினார். எனவே, அவர்கள் இலங்கைக்கு வந்ததும், மற்றொரு பங்களாவைத் தேடத் தொடங்கினர்.

இலங்கையில் மஸ்துகளைத் தேடிக்கொண்டிருந்த காக்கா, இந்தத் தேடலில் டான், சாஞ்சி, விஷ்ணு ஆகியோருக்கு உதவினார். 8ஆம் தேதி காலையில், ஆண்கள் விரும்பிய நான்கு இடங்களிலிருந்து ஒரு பங்களாவைத் தேர்ந்தெடுக்க எலிஸபெத், ரானோ, கிட்டி, பைதூல், சாஞ்சி, டான் ஆகியோருடன் பாபா கண்டி நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். எதுவும் பொருத்தமாக இல்லாததால் அனைவரும் மாலையில் திரும்பி வந்தனர். தேடும் பணி தொடர்ந்தது.

அன்றிரவு, பாபா பெண் மண்டலிக்கு, சாஞ்சி கூறிய கதை ஒன்றை விவரித்தார்:

**எனது பக்தர்களில் ஒருவர், அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தார்; அப்போது அவர் திடீரெனப் பார்வையற்றவராக ஆனார். அவரது அவலநிலையால் குடும்பம் பரிதாப நிலையில் இருந்தது. அவருக்கு சிகிச்சை அளிக்க ஒரு கண் மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர். ஆனால் மருத்துவரின் ஆலோசனைப்படி பொறுமை காப்பதைத் தவிர, அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.**

**அந்த நபரை, சாஞ்சி அவ்வப்போது சந்தித்து வந்தார். அந்த நபருக்கு என் மீது நம்பிக்கை இருப்பதாக, சாஞ்சி அறிந்திருந்தார், எனவே அவர் ‘பாபாவின் அலங்கார பேழை (லாக்கெட்) ஒன்றை தண்ணீரில் வைத்து, அந்த நீரை அவரது கண்களில் பயன்படுத்துமாறு’ அறிவுறுத்தினார். வேறு எந்த சிகிச்சையையும் நாடாமல், அந்த நபர் சாஞ்சியின் ஆலோசனையை முழு நம்பிக்கையுடன் பின்பற்றத் தொடங்கினார்; மருத்துவர் பரிந்துரைத்த மருந்தை உட்கொள்வதையும் நிறுத்தினார். அந்த நபர் அவ்வாறு செய்த வேளையில், அடுத்த இரண்டு மணி நேரம் சாஞ்சியும் உடனிருந்தார். திடீரென அந்த மனிதர் ஒரு கரும்புள்ளியைக் கண்டதாகவும், அதிலிருந்து நான்**

**அவரை நோக்கி நடந்து செல்லும் காட்சியைக் காண முடிந்ததாகவும் கூறினார். சாஞ்சி அதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்.**

**அடுத்த நாள், சாஞ்சி மீண்டும் அவரைப் பார்க்கச் சென்றார்.**

**அவரது பார்வையில் படிப்படியாக முன்னேற்றம் தென்பட்டது. அவர் சாஞ்சியிடம், "அருகில் வாருங்கள். நான் உங்களை மிகவும் மங்கலாகப் பார்க்க முடிகிறது" என்றார். அதன்பிறகு, அவரது பார்வை விரைவில் சீரானது; இரண்டு நாட்களில் அவர் அலுவலகம் செல்லவும் முடிந்தது; டாக்டர்கள் மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.**

இலங்கையில் பொருத்தமான பங்களாவைத் தேடும் பணி தொடர்ந்தது. 1933 ஜனவரியில் மெஹர் பாபா தங்கியிருந்த பண்டாரவேலா (BANDARAWELA) என்ற இடத்திற்குச் செல்லும் விருப்பத்தை அவர் தெரிவித்தார். பாபா அங்கிருந்த வைஸ்ராய் மாளிகையை (VICEROY HOUSE) விரும்பினார், ஆனால் உரிமையாளரின் தாயார் எதிர்பாராமல் காலமானதால், அந்த நபரை நோரினா தொடர்பு கொள்ள முடியாமலாயிற்று.

இதற்கிடையில், பாபாவை மகிழுறச் செய்வது சாஞ்சிக்கு ஒரு சவாலாக இருந்தது - ஒவ்வொரு முறையும் தோல்வியை சந்தித்தார். அவர் மனம் அல்லல்பட்டு பல கோணங்களில் அலைமோதியது. ஒரு முறை அவர் தனது கண்ணாடியை மூக்கில் அணிந்திருந்த வேளையில், வெறித்தனமாக அவர் அதை வெளியே அங்கும் இங்கும் தேடத் தொடங்கினார். காக்கா அவரைப் பார்த்து, அவர் என்ன தேடுகிறார் என்று கேட்டார். சாஞ்சி அவரிடம் சொன்னபோது, காக்கா, "அது உங்கள் மூக்கில்தான் உள்ளது!" என்றார்.

நவம்பர் 11 அன்று, காலை உணவிற்குப் பிறகு, நோரினா பாபாவிடம், "நீங்கள் இலங்கையில் பணிபுரிய விரும்பும் போது, ஏன் எல்லாம் தவறாக நடக்க வேண்டும்? காலநிலை மோசமாக உள்ளது, நாம் தங்குவதற்கு இடம் சரியாக அமையவில்லை, நீங்கள் வழங்கிய பத்திரிகை நேர்காணல் வெற்றிகரமாக இல்லை. இப்போது உள்ளூர் கிறிஸ்தவர்கள் மற்றும் பௌத்தர்களில் சிலர் உங்களுக்கு எதிராக விஷயங்களைத் தூண்டிவிடுகிறார்கள்" என்றார்.

பாபா விளக்கினார்:

**நான், எனது பணிக்காக இங்கு வந்துள்ளேன், அது மட்டுமே எனக்கு முக்கியமானது. என்னைப் புகழ்வது அல்லது அவமதிப்பதில் என்ன உள்ளது? எதிர்ப்பு, எனக்கு உதவியாக இருக்கும், எனது பணியில் தடையாக இல்லை. சூரியன் தினமும் பிரகாசிக்கிறது, அனைவருக்கும் ஒளியைத் தருகிறது. மக்கள் அதைப் புகழ்கிறார்களா அல்லது இகழ்கிறார்களா என்பதில் அதற்கு அக்கறை இல்லை. அதைப் புகழ்ந்து அல்லது இகழ்ந்து பேசும் அனைவருக்கும் அது சமமாக ஒளியை வழங்குகிறது.**

**ஆனால் மேகங்கள் ஒன்றுதிரளும்போது, சூரியன் மறைக்கப்படுகிறது. அப்போது அதன் ஒளி மற்றும் வெதுவெதுப்புக்காக**

**மக்கள் ஏங்குகிறார்கள். மேகங்கள் கலைந்து சூரியன் முழுப் பிரகாசத்துடன் ஒளிரும்போது, அதன் உண்மையான மதிப்பு மக்களுக்குத் தெரியும். மேகங்கள் இல்லாத பட்சத்தில், மக்கள் சூரியனைப் பாராட்ட மாட்டார்கள். இதனால், எதிர்ப்பு என்பது மேகங்களைப் போன்றது - சூரிய ஒளியின் மதிப்பைப் பாராட்ட, மேகங்கள் இன்றியமையாதது.**

தொடர்ந்து, பாபா கூறினார்:

**கடவுள் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை நீங்கள் பார்க்க முடியுமா? இல்லை, ஆனால் நாத்திகர்கள் கடவுள் இல்லை என்று நம்பினாலும், அல்லது பிறர் அவரைப் போற்றித் தொழுதாலும், கடவுள் அவருக்கே உகந்த முறையில் செயல்படுகிறார். புகழ், இகழ் இரண்டும் அவரைப் பாதிப்பதில்லை.**

**உதாரணமாக, எறும்பை எடுத்துக் கொள்ளுங்கள். அது உயிர் வாழ்வதை நீங்கள் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை; உங்களைப் பொறுத்தவரை அது முற்றிலும் முக்கியமற்றது; ஆனாலும் அதற்கு உடல், ஆன்மா மற்றும் அதன் சொந்த உலகம் உள்ளது. ஆன்மீக ரீதியில் உங்களை எறும்புகளாகவும், என்னை மனிதராகவும் வைத்துக்கொள்வோம்.**

**எறும்புகளின் பரிணாம வளர்ச்சியில் அவற்றை மனிதர்களாக மாற்றும் பணியை நான் செய்கிறேன். ஓர் எறும்பு உங்களைக் கடித்தால், அதை நீங்கள் உதறித் தள்ளுகிறீர்கள். எனவே, அதே எறும்பு என்னைக் கடித்தாலும் அல்லது எனக்கு சர்க்கரை கொண்டு வந்தாலும் அதனால் எனக்கு என்னவாகிவிடும்? நான் பாதிக்கப்படாமல் இருந்தாலும் இயற்கையாகவே அது எறும்பு மீது வினைபுரிகிறது. அதில் யாருடைய தவறும் இல்லை. இதுவெல்லாம் இப்படி இருக்க வேண்டும் என்பது நியதி!**

**இந்தப் பத்திரிகை நிருபர்** (சமீபத்தில் பாபாவைப் பேட்டி கண்டவர்), **அப்பாவி சிறுவன், ஒரு வரையறுக்கப்பட்ட பொது கருத்தைக் கொண்டுள்ளார், மேலும் உண்மைப்பொருளின் மகிமையைக் காட்டிலும் எனது தொண்டை** (பேசாமல் இருப்பதால்) **பலவீனமடையாமல் இருப்பதில் அதிக அக்கறை காட்டுகிறார். சிம்பி** (சாஞ்சி) **இது ஒரு மோசமான சகுனம் என்று கூறினார். நான் சொன்னேன், மாறாக, இது ஒரு நல்ல சகுனம்! இப்போது அது திட்டவட்டமாகிவிட்டது. எனது பணிக்காக நான் இங்கேயே இருப்பேன், ஏனெனில் எதிர்ப்பு எனது பணிக்கு உதவுகிறது.**

அன்று பிற்பகலில், மெஹர் பாபா, கண்டி (KANDI) நகரில் ஒரு வீட்டிற்குச் செல்ல முடிவு செய்தார். அவர் குறிப்பிட்டார், "**இலங்கையில் நம்பிக்கையுள்ள அனைத்தும் நம்பிக்கையற்றவை, நம்பிக்கையற்ற அனைத்தும் நம்பிக்கைக்குரியவை! குறைந்தபட்சம் இந்தப் புதிய பங்களாவில் பேய்கள்** (ஆவிகள்) **இல்லை!**" இந்தக் கடைசி கருத்தைக் கேட்டு, சில பெண்மணிகள் நிம்மதியடைந்தபோது, பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

பேய்களுக்கு ஏன் பயப்பட வேண்டும்? பேய் என்றால் பௌதீக உடல் இல்லாத மனிதர் என்று பொருள்; அந்த உடலற்ற நிலையில் அவர் தனது முந்தைய பிறவியின் மனப்படிவங்கள் அனைத்தும் நீடிக்கும் வரை பேயாகவே இருக்க வேண்டும். பின்னர் அவர் வேறொரு மனித பிறவியை எடுக்கிறார். பேய்கள் துயர் மிகுந்தவை. நம்மில் எவரையும் போலவே அவர்களுக்கும் ஆசைகள் உள்ளன. அவர்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்ற மனிதர்களின் தொடர்பில் வர முயற்சிக்கிறார்கள். இருளாகவும், அமைதியாகவும் இருக்கும் வேளையில், அவற்றின் 'நுட்பமான, புகைபோன்ற' உடல்கள் ஊடுருவும் இயல்புடையவை. உங்களிடம் பௌதீக, சூட்சும (நுட்பமான) மற்றும் ஆழ் மன உடல்கள் உள்ளன. பேய்கள், சூட்சும மற்றும் ஆழ் மன உடல்களை மட்டுமே கொண்டுள்ளன, ஆனால் இவை பௌதீக உடலைப் போல மட்டுப்படுத்தப்படவில்லை. பேயின் புகைபோன்ற நுட்பமான உடலை எல்லா திசைகளிலும் - மேல்நோக்கி மற்றும் எந்தத் திசையிலும் விரிவடையச் செய்ய முடியும். நீங்கள் அவற்றை அவ்வாறு பார்க்கும்போது, அது உங்களை அச்சத்தில் நடுங்கவும், கதறி கூச்சலிடவும் செய்கிறது. சுற்றுப்புற சூழ்நிலைகள், இருளாகவும், அமைதியாகவும் இருப்பதைப் பொறுத்து, அவற்றைக் காண முடியும். அவற்றின் உடல்கள் பெரிதாகி சுருங்கக்கூடும். அதனால்தான் கனவுகளில் நுட்பமான புகைபோன்ற உடல்கள் எங்கும் சென்று, வெளியே நீளவும் சுருங்கவும் செய்கின்றன. சுற்றுப்புறம், நேரம், ஒளி மற்றும் புகைப்படக்காரரைப் பொறுத்து அதற்குரிய பொருத்தமான சூழ்நிலைகளில் அவற்றை புகைப்படம் எடுக்க முடியும்.

இந்த (பௌதீக உடலற்ற) ஆவிகள் (பேய்கள்), (உயிர் வாழும்) மனிதர்களைத் தொடர்பு கொள்ள விரும்புகின்றன. அதிக அளவில் புகைப்பிடிக்கும் ரானோவிற்கு, பௌதீக உடல் இல்லாத நிலையில், சில காரணங்களுக்காகப் பேயாக மாறினால், அது தொடர்பான மனப்படிவங்கள் விரயமாகும் வரை, அவருக்கு இன்னொரு பௌதீக உடல் கிடைக்காது. அவை ஒரு வருடம் அல்லது லட்சக் கணக்கான ஆண்டுகளில் செலவிடப்படலாம். அனைத்தும் ஒருவரின் மனப்படிவங்களை செலவழிக்கச் செய்யப்பட்ட தொடர்புகளைப் பொறுத்தது.

உதாரணமாக, சிகரெட் புகைப்பதில் ரானோவிற்கு அலாதி ஆசை. கிட்டி புகைப்பதைப் பார்த்து, அவரும் புகைப்பிடிக்க விரும்புகிறார்; கிட்டியைத் தொடர்பு கொண்டு, ஒரு சிகரெட்டை வாங்க முயற்சிக்கிறார். ஆனால் புகைபோன்ற, நுட்பமான உடலால் பௌதீக உடலுடன் தொடர்பு கொள்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. கிட்டி, அந்தப் புகைபோன்ற நுட்பமான உடல் அருகில் இருப்பதை உணர்ந்து பயப்படுகிறார். ஆனால் அப்பாவி ரானோ ஒரு சிகரெட் மட்டுமே விரும்புகிறார்.

சில சந்தர்ப்பங்களில், அவர் (ரானோ, பேய்) கட்டுமீறிப்போன ஆர்வத்தால் கிட்டி கண்ணிமைகளை மூடி, தூங்கும் அந்தக் கணப்பொழுதுக்காகக் காத்திருக்கிறார், பின்னர் கிட்டியின் பௌதீக உடல்

வழியாக ரானோ புகைக்கிறார். நுட்பமான சூட்சும உடலால் எந்தவொரு பௌதீக உடலிலும் அல்லது பொருளிலும் நுழைய முடியும். இது உங்களுக்குள் நுழையும் போது, உங்களுக்குக் கூட அது தெரியாது, மேலும் அவை பாதிக்கப்படுவதில்லை. ஆனால் நீங்கள் உணர்வற்ற நிலையில் இருக்கும்போது, அதாவது, நீங்கள் தூங்கும்போது மட்டுமே அது உங்கள் உடலில் நுழைய முடியும்.

நோரினாவிற்கு உணர்வு இல்லாத நேரத்தில் எத்தனை ஆவிகள் நோரினா வழியாக தேநீர் குடித்து வந்தன? இருந்தும் அவர் மீது ஆவிக்கு எந்தவிதமான பிடிப்பும் இல்லை, அது உங்களிடத்தில் வாழாது அல்லது உங்களைப் பற்றிக்கொண்டு இருக்காது, ஆனால் காற்றைப் போலவே அலைந்து திரிகிறது. அது சில நேரங்களில் மட்டுமே நடக்கும். அதைப் பற்றி நினைக்காதீர்கள், உங்களுக்குப் பைத்தியம் பிடித்ததுபோல் இருக்கும்! இதில் எந்த முக்கியத்துவமும் இல்லை, மிகவும் அற்பமான, பொருட்படுத்தக்கூடாத ஒன்று!

சில நேரங்களில் நீங்கள் எக்காரணமும் இல்லாமல் கோபப்படுகிறீர்கள். இது கோபத்தின் மனப்படிவங்களை உங்கள் மூலமாகச் செலவிட விரும்பும் சில ஆவிகளாக இருக்கலாம். ஆனால் இது மிகவும் முக்கியமற்ற, சிந்திக்கத் தகாத ஒன்று. நம் உடலில் கிருமிகள் நிறைந்திருக்கின்றன, ஆனால் நாம் அதைப் பற்றி சிந்திப்பதில்லை. நாம் அதைப் பற்றிச் சிந்தனை செய்து நம் மனதில் படமிட்டுப் பார்க்க முயன்றால், நமக்குப் பைத்தியம் பிடிக்கும். குருநாதர்கள் இந்த ஆவிகளால் மிகவும் தொல்லைக்கு உள்ளாகிறார்கள் - இதைப்பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. விடுதலைக்காக அவர்கள் என்னை உடலளவில் தொட விரும்புகிறார்கள், அவர்கள் அதைச் செய்கிறார்கள்.

எப்போதும் ஒரே சிந்தனையை மனதில் கொள்ளுங்கள்: கடவுள் மட்டுமே உண்மையானவர். கடவுள் யார்? வாழ்வில் உயிரோடு உயிராக இருக்கும் அந்த ஏக இறைவன். உயிர் வாழும் ஒவ்வொன்றும் அவனே! ‘அது உயிர் வாழ்கிறது’ என்று நீங்கள் சொன்னால், அது அந்த ‘ஏக இறைவனே’! இதர அனைத்தும் தானாகவே ஒன்றும் இல்லாத நிலையை அடைகிறது. ‘எதுவுமே’ உயிர் வாழவில்லை என்றால், அது கூட அந்த ஏக இறைவன் மட்டுமே!

இதை நீங்கள் புரிந்து கொள்ள முடியுமா? இதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் நினைவில் கொள்ள வேண்டியது ‘எதுவும் வாழவில்லை - வாழ்வது அனைத்தும் பூஜ்ஜியம்’ என்ற ஒரே சிந்தனை மட்டுமே! ‘எதுவும் இல்லாததும்’ கடவுள்தான். கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார்; வேறு எதுவும் இல்லை. ‘வேறு எதுவும்’ வாழவில்லை என்று நீங்கள் கூறும்போது, அந்த ‘எதுவுமில்லை’ என்பது கூட வாழ்வதாகத்தான் அர்த்தம்!

**‘எதுவுமில்லை’ என்றால் என்ன? அதுவும் அந்த ஒரே ஏக இறைவன்! இறைவனை ‘ஒன்றானவன்’ என்று கூறுவது உண்மையில் சரியல்ல. இறைவன் இருவராக இருக்க முடியாது. இறைவன் ‘ஒன்றும்’ அல்ல - இது ‘எல்லாம் இறைவன்’ - எல்லாமே இறைவன்! எதுவும் இல்லை என்பதும் இறைவன்!**

**எனவே இதைப் பற்றிச் சிந்தனை செய்யுங்கள்.**

**‘நோரினா இருமைத்தன்மை பற்றி ஏதோ கூறினார்’,** என்று குறிப்பிட்டுத் தொடர்ந்தார்:

**இருமைத்தன்மை இருக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்களா? அது என்ன? கடவுளைத் தவிர வேறு எதுவும் உயிர்வாழவில்லை, எனவே இந்த இருமைத்தன்மையில் இருக்கும் அனைத்தும் அதே கடவுள்.**

**இப்போது நாம் இந்த இடத்திற்கு வந்துள்ளோம்: ஒரே கடவுள் ஒரே நேரத்தில் வெவ்வேறு அங்கங்களை வகிக்கிறார். முழு உணர்வு நிலையில், அனைத்திற்கும் அப்பாற்பட்ட உலகளாவிய கடவுளின் பங்கை அவர் வகிக்கிறார். தவறான உணர்வு நிலையில் இருக்கும் இந்த உடல் பொய் என்பதை உணர்ந்து கொள்வதில் அவர் அங்கம் வகிக்கிறார். அவர் படைப்பின் பொறுப்பாளர் எனும் பங்கை வகிக்கிறார். இந்தப் படைப்பில் தன்னையே உணர்வு நிலையில் கொண்டிருப்பதன் பங்கையும் அவரே வகிக்கிறார்.**

**கபீர் கூறியதாவது:**

**ஒரே கடவுள் அவதார புருஷர்;**

**ஒரே கடவுள் ஒவ்வொருவரின் பரமாத்மா;**

**ஒரே கடவுள் அனைத்தையும் படைப்பவர்;**

**ஒரே கடவுள் - எல்லாமே ஒரே கடவுள்!**

பாபா பின்பு வரைபடம் வரைந்து விளக்கினார்:

உணர்வு நிலை, மயக்கநிலை நிலை இரண்டும் எதைக் குறிக்கிறது என்பதைப் பற்றி, பாபா விளக்கிக் கூறினார்: **“மயக்க நிலை என்பது குளோரோஃபார்மின் தூண்டுதலால் ஏற்பட்ட மயக்க நிலை என்று அர்த்தமல்ல. மயக்க நிலை, எல்லையற்ற சக்தி, பேரின்பம், அறிவு ஆகியவற்றை உள்ளடக்கியது, ஆனால் உங்களுக்குச் சாதாரண உணர்வு இல்லாவிடில் அதைப் பயன்படுத்த முடியாது - மேலும் இந்த அளவிறுதியற்ற தன்மை உங்களிடத்தில் இருப்பதை நீங்கள் அறிந்து கொள்வதையும் குறிக்கிறது.”**

கிட்டி இடையே குறுக்கிட்டு, “உணர்வு நிலை, மயக்க நிலை இவற்றிற்கு வேறு சிறந்த சொற்கள் உள்ளனவா?” என்று கேட்டார்.

**“அதற்கு வேறு வார்த்தை இல்லை”** என்று பாபா பதிலளித்தார். **“உணர்வு நிலை, உணர்வு இழந்த நிலை இவற்றை நீங்கள் புரிந்துகொள்ள நான் உங்களுக்கு உதாரணம் ஒன்றைத் தருகிறேன். இந்த உதாரணத்தில் குறைபாடு இருந்தாலும் அது தெளிவுபடுத்தும்.**

**“தங்கத்தின் மலை ஒன்று உள்ளது. நீங்கள் அதைத் தோண்டி, புதையுண்ட தங்கத்தைக் கண்டெடுத்து, பயன்படுத்தி, விற்காவிடில் அதற்கான பணத்தை நீங்கள் பெற முடியாது. உங்களிடம் தங்கம் இல்லாத வரையில் நீங்கள் உதவியற்றவர்கள், மேலும் தங்கத்திற்கு நீங்கள் இல்லாமல் பயன் ஏதுமில்லை. நீங்கள் அதைத் தோண்டி எடுத்து, விற்று விரும்பியதை வாங்குகிறீர்கள். எனவே ‘பயன்படுத்தப்பட்ட’ தங்கம் ‘உணர்வு’ நிலையையும், ‘பயன்படுத்தப்படாத’ தங்கம் ‘உணர்வு இழந்த’ நிலையிலும் இருக்கும்.**

**“இப்போது குறைபாடு என்னவெனில், தங்கம் ஓர் உலோகம், இருப்பினும், நீங்கள் மனிதர்கள். மலையில் தங்கம் (கடவுள்) இருப்பதால் அது தங்க மலை; மற்றும் உங்களிடம் தங்கம் (கடவுள்) இருப்பதால் எங்கும் எதிலும் ஒரே தங்கம் (கடவுள்)!**

**“இந்தப் படைப்பு ஏன்? எதற்காக? கடவுள் அவருக்கே உரித்தான எல்லையற்ற சக்தி, எல்லையற்ற அறிவு, எல்லையற்ற ஆனந்தம் ஆகியவற்றை அனுபவிக்க வேண்டும். கடவுளிடம் எந்த மாற்றமும் நிகழ்வதில்லை.”**

இலங்கையில் இருந்தபோது, மெஹர் பாபா ஒவ்வொரு நாளும் சட்டி பாபாவை நீராட்டினார். ஆனால், 1940 நவம்பர் 11 அன்று, சட்டி பாபா, பாபாவை நீராட்டினார்! பாபா அவரிடம் சென்றபோது, சட்டி பாபா ஒரு வாளி நீரை எடுத்து பாபா மீது ஊற்றினார்.

மஸ்த், மட்டற்ற மகிழ்ச்சியில் மேலும் ஒரு வாளி நீரை எடுத்து பாபாவிடம், “நான் இன்னும் ஊற்றலாமா?” என்று கேட்டார்.

பாபா தலையசைத்து ‘**ஆம்**’ என்ற போது, சட்டி பாபா சிரித்துக் கொண்டே, மேலும் பத்து முதல் பன்னிரண்டு வாளிகளை நிரப்பி அவர் மீது ஊற்ற அனுமதித்தார்.


“**இது அவரை மிக்க மகிழ்ச்சியடையச் செய்தது என எனக்குத் தெரியும்**,” என்று பாபா பின்னர் மண்டலிக்குத் தெரிவித்தார். இலங்கையில் காலநிலை, மழை, குளிர்ந்த வானிலை பாபாவிற்குச் சளி பிடிக்கும் அசௌகரியங்களைத் தந்தாலும், மஸ்த் மனம்போன போக்கில் நடந்துகொள்ள பாபா அனுமதித்தார்.

ஹிக்கல்லா எஸ்டேட் ஒரு தென்னைத் தோட்டமாக இருந்தது, ஒரு நாள் பாபா, ஒவ்வொருவருக்கும் தேங்காய்களை சுவைக்கக் கொடுத்தார். ஆனால் ரானோவிடம், “**இதை உண்ண வேண்டாம்! இது உங்கள் தொண்டையை பாதிக்கும்**” என்றார்.

அதற்கு ரானோ, “அமெரிக்காவில் நான் நிறைய தேங்காய்களைச் சாப்பிடுவது உண்டு, அவை எனக்கு ஒருபோதும் தொண்டை புண் என்ற தொந்தரவைத் தந்ததில்லை” என்று பதிலளித்தார்.

**UNCONSCIOUS - உணர்வற்ற நிலை**

**CONSCIOUS - உணர்வு நிலை**




It is the One and the Same God.
When X – Conscious God
realizes Y – Unconscious God,
God becomes Z – God Perfect.

இது ஒன்றே உருவான ஒரே ஏக இறைவன்.
எக்ஸ் (X) - உணர்வு நிலையில் இருக்கும் இறைவன்,
ஒய் (Y) - உணர்வற்ற இறை நிலையை எய்தும் போது,
இஸட் (Z) - பரிபூரண இறைநிலையை எய்துகிறார்

**“நீங்கள் ஏன் எப்போதும் வாதிடுகிறீர்கள்?”** பாபா திட்டினார். **“நான் சொல்வதை நீங்கள் ஏன் கேட்பதில்லை?”** பாபா, தேங்காயைச் சாப்பிட வேண்டாம் என்று எச்சரித்தார், கடைசியில் ரானோ உள்ளே நுழைந்து, “நான் அதைச் சாப்பிட மாட்டேன், ஏனெனில் அது எனது தொண்டையை பாதிக்கும்” என்று கூறினார். இந்த பதில் பாபாவிற்கு மகிழ்ச்சியை அளித்தது, அவர் ரானோவை மன்னித்தார்.

வழக்கம் போல, பாபா, மஸ்த் வேலையில் மும்முரமாக இருந்தார், சில சமயங்களில் கொழும்பிலிருந்து வெவ்வேறு இடங்களுக்குச் சென்று மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். இலங்கையில் பாபாவின் தொடர்பில் வந்த மஸ்துகளைப் பற்றிய விரிவான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றாலும், இங்கு அவரது பயணம் முதன்மையாக, இந்த நோக்கத்திற்காகவே இருந்தது. ஆனால், அவர் போர்க்காலத்தில் ஆண்கள், பெண்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பெரிய குழுவுடன் பயணம் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பெண்கள் சுதந்திரமாக நகர முடியவில்லை என்றாலும், ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருந்தது. ஒவ்வொரு நபரும் குருநாதரின் அரவைக்கல்லில் அகப்பட்டு இருந்தனர். அவர்களின் மனம் தொடர்ந்து தாக்கப்பட்டு, அவர்களின் அகந்தை சுக்குநூறாகியது - எவ்வகையிலும் விவரிக்க முடியாத ஒரு நிலை.

கொழும்புக்கு அருகிலமைந்த பாபாவின் குடியிருப்பு மற்றும் பாபாவைப் பற்றிய ஒரு கட்டுரையும், தலையங்கமும் 10ஆம் நாள் ‘டைம்ஸ் ஆ்ஃப் சிலோன்’ (TIMES OF CEYLON) பத்திரிகையில் வெளிவந்தது. அவரது தரிசனத்திற்காக ஒரு சிலர் பங்களாவிற்கு வந்தாலும், பாபா அவரது ஏகாந்தவாசம் காரணமாக அவர்களை சந்திக்கவில்லை. 1940 ஆகஸ்ட் முதல் 1941 ஆகஸ்ட் வரை, ஒரு வருடம் ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார்.

நவம்பர் 13ஆம் நாள் கிட்டி, ரானோ, டான், விஷ்ணு, பைதூல், சாஞ்சி ஆகியோருடன் பாபா, கண்டியில் ஒரு புதிய பங்களாவைப் பார்க்கச் சென்று, அதற்கு அவர் ஒப்புதல் அளித்தார். மூன்று நாட்களுக்குப் பின்னர், 16ஆம் நாள் காலையில், பாபாவும் குழுவும் வெயங்கோடாவிலிருந்து கண்டிக்கு இரண்டு பேருந்துகள், ஒரு கார் மற்றும் சரக்கு லாரியில் புறப்பட்டுச் சென்றனர். இரண்டு மணி நேரத்தில் அவர்கள் ஹலோலுவா (HALLOLUWA) சாலையில் அமைந்த ‘பிரிம்ரோஸ் ஹில் டீ எஸ்டேட்’ (PRIMROSE HILL TEA ESTATE) என்று அழைக்கப்படும் பங்களாவிற்கு வந்தனர்; பங்களா மிகவும் அழகாக இருந்தது. பாபா, ஆண் மண்டலி மற்றும் சட்டி பாபாவுடன் மலையில் தங்கினார். பெண்மணிகள் மலையடிவாரத்தில் தனியாகத் தங்க வைக்கப்பட்டனர்.

கண்டி நகரில் பல்லிகள் ஏராளம் இருந்தன. பல்லிகள் நாம் உண்ணும் உணவில் சிறுநீர் மற்றும் மலம் கழிக்கும் என்ற ஆபத்து காரணமாக (பல்லியின்

சிறுநீர் மற்றும் மலம் மிகவும் விஷமானது) கேட்டி அவற்றைச் சுவரில் துரத்தி விரட்டும் அதே வேளையில் பைதூலின் மகள் டவ்லா அவற்றைக் கொன்றுவிடுவது பழக்கம். நவம்பர் 17 அன்று டவ்லா, பாபாவிடம் பதினைந்து நிமிடங்களில் ஏழு பல்லிகளைக் கொன்றதாக அறிவித்தார். பாபா, அதைக் கேட்டு மகிழ்ச்சியாக இல்லை, ஆனால் கேட்டி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணத்தில், "அவற்றில் ஏதேனும் உணவில் விழுந்தால், நாம் உயிரை இழக்கும் வாய்ப்புள்ளது" என்று கூறினார்.

"**பல்லிகளைக் கொல்ல வேண்டாம். நேரடியாகக் காயப்படுத்தும் எந்த மிருகத்தையும் கொல்ல வேண்டும், ஆனால் பல்லிகள் அல்ல. அவற்றைப் பிடித்து வெளியே எறியுங்கள். அவை ஈக்களைச் சாப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும்**" என்று பாபா அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

பாபா கிண்டல் செய்யும் விதத்தில், "நீங்கள் அவற்றைக் கொன்றால், அடுத்த பிறப்பில் பல்லியாகப் பிறவி எடுப்பீர்கள்!" என்றார்.

17ஆம் தேதி, சட்டி பாபாவின் மனநிலை மாறியது, அவர் மிகவும் கோபமாகக் காணப்பட்டார், தனது உணவுகளை ஜன்னலுக்கு வெளியே வீசி எறிந்தார். "நான் பசியாக இருக்கிறேன்! நான் ஒரு குழந்தை" என்று மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே இருந்தார்.

மூன்று வேளையும் மண்டலி உணவளிக்க முயன்றபோது, அவர் உணவோடு தட்டை வீசி எறிந்தார். அவர் இரண்டு வாளி தண்ணீரைக் கேட்டு வாங்கி, தனது அறையின் கல் தரையில் ஊற்றி, குட்டையின் நடுவில் அமர்ந்தார்.

அடுத்த நாள், சட்டி பாபா தனது அறையில் தன்னைப் பூட்டிக்கொண்டு கதவைத் திறக்காமல் இருந்தார். பாபா அவருடன் பணிபுரிய விரும்பினார், அவரிடம் கதவைத் திறக்குமாறு தட்டிக் கொண்டே இருந்தார். இறுதியாகக் கதவைத் திறந்தபோது, பாபா அவருடன் தனியாக அமர்ந்தார். அந்த நாளின் பிற்பகுதியில் (நவம்பர் 18), பாபா பெண் மண்டலியுடன் இருந்த வேளையில், இவ்வாறு தெரிவித்தார்:

**இன்று நான் சட்டி பாபாவுடன் மிகவும் திருப்திகரமாகப் பணிபுரிந்தேன். ஆனால் நான் மிகவும் உஷ்ணமாக உணர்ந்தேன், நான் இரண்டு முறை என் ஆடைகளை மாற்ற வேண்டியிருந்தது. இந்தப் பழைய மஸ்தை நான் இந்த அளவிற்கு சந்தோஷமாகப் பார்த்ததில்லை, எப்பொழுதும் சிரித்துக் கொண்டே, "நான் ஒரு குழந்தை, எனக்கு வயதாகிவிட்டது!" எனக் கூறிக்கொண்டே இருந்தார். இன்று அவருக்கு அளித்த உணவை, சாதம், பருப்பு, தண்ணீர் அனைத்தையும் கலந்து உண்டார். இன்று அவர் சிறுவனிடம் மண்ணை அள்ளிக் கொண்டு வருமாறு கூறி, அதைத் தரையில் பரப்பி, அதில் அமர்ந்தார். அவர் என்ன கேட்டாலும் கொடுக்குமாறு சிறுவர்களுக்கு அறிவுறுத்தினேன். நானும் இன்று கடுமையாக உழைத்தேன். அவர் மிக்க மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்,**

**சேற்றிலும் நீரிலும் அமர்ந்தார். நான் அவரிடம் செல்லும் ஒவ்வொரு முறையும் என் மீது தண்ணீரை வீசினார்!**

**சற்று சிந்தித்துப் பாருங்கள், அவர் 24 மணி நேரம் சேற்றிலும் நீரிலும் அமர்ந்திருக்கிறார், திறந்த ஜன்னல்கள் வழியாக காற்று பலமாக வீசுகிறது, உடலில் உண்மையில் ஆடை எதுவும் இல்லாதது போலத்தான்; இருந்தும் அவர் ஒருபோதும் குளிர் மற்றும் வாத நோயால் பாதிக்கப் படுவதில்லை.**

**ஸாண்டவ் என்பவரால்** (SANDOW - பிரபல பயில்வான்) **கூட அதைத் தாங்க முடிவதில்லை. தெய்வீக சக்தி இந்த ஆன்மாக்களை ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது, ஏனெனில் அவர்களுக்கு உடலைப் பற்றிய உணர்வு இல்லை. அவர்கள், 'கடவுள் கவலைப்படட்டும்!' என்கிறார்கள்; உண்மையில் அப்படித்தான், கடவுள் மட்டுமே கவலைப்பட வேண்டிய கட்டாயம்.**

**இது உண்மை: நான்காவது ஆன்மீகத் தளத்தின் மேலே நிலைகொண்டிருக்கும் மஸ்துகள் நோயால் பாதிக்கப் படுவதில்லை. ஒரு குழந்தை அதன் உடல் அல்லது ஆரோக்கியத்தைப் பற்றி எப்போதாவது கவலைப்படுவது உண்டா? தாயார் அதை கண்காணித்துக் கொள்கிறார். மேல் நிலை ஆன்மாக்கள், உண்மையான குழந்தைகள், கடவுள் அவர்களின் தாய். நீங்கள் ஒரு குழந்தையாக மாறும் வரை, இந்த ராஜ்யத்தில் நுழைய முடியாது.**

**நோரினாவை ஒரு குழந்தையாக - ஆனால் பைத்தியமாகக் கற்பனை செய்து பாருங்கள்! நான் நதியாவை ஒரு குழந்தையாகப் பார்க்க முடியும், ஆனால் பைத்தியமாக அல்ல. அவர் பைத்தியமாக இருந்தால், நோரினாவின் மூக்கைக் கடிக்கத் தொடங்குவார்! நோரினாவிற்குப் பைத்தியம் பிடித்திருந்தால், எலிஸபெத் முதல் கப்பலில் அமெரிக்கா சென்றிருப்பார்! கர்மான் மாசி பைத்தியமாக இருந்திருந்தால், அவர் பானுபாயை ஜன்னலுக்கு வெளியே வீசி எறிந்திருப்பார்; மன்ஸாரி ஒவ்வொருவரையும் ஜன்னலுக்கு வெளியே தூக்கி எறிவார்! கிட்டி ஒரு பானையில் ஒன்றாக சமைக்க இன்னும் பத்து மொழிகளைக் கற்றுக்கொள்வார்!**

பாபா, உண்மையில் அவர்களின் பல்வேறு கதாபாத்திரங்களைப் பற்றி கிண்டல் செய்து கொண்டிருந்தார். கிட்டி, சமையலறையை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்; பணிப்பெண்களுக்கு ஆங்கிலம் புரியாததால், அவர் சிரமப்பட்டு ஒரு சில மராட்டி சொற்களைக் கற்றுக்கொண்டார். ஆனால் அவற்றில் எதையும் அவரால் சரியாக உச்சரிக்க முடியவில்லை, இது பாபாவை எப்போதும் மகிழ்வித்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, நவம்பர் 20ஆம் தேதி பாபா வழக்கம் போல, சட்டி பாபாவை நீராட்ட முயன்றபோது, மஸ்த் விடாமுயற்சியுடன், பிடிவாதமாக மறுத்தது மட்டுமல்லாமல், பாபாவை மீண்டும் தனது கைகளால் நீராட்ட அடம் பிடித்தார், மேலும் பாபாவின் மீது தண்ணீரை ஊற்றி முழுவதுமாக நனையச் செய்தார். பின்னர், மெஹர் பாபா, சட்டி பாபாவுடன் பணிபுரிவதை கைவிடுவதாகக் கூறி, தனது பணியை 'வேறு வழியில்' செய்து

முடிப்பதாக அறிவித்தார். இப்போது இலங்கையை விட்டு வெளியேற விரும்பிய அவர், இந்தியாவின் மேற்கு கடற்கரையில் பொருத்தமான பங்களாவைக் கண்டுபிடிக்க சாஞ்சிக்கு அறிவுறுத்தினார்.

1940, நவம்பர் 21 அன்று, பாபாவைப் பார்க்க நான்கு கார்களில் மக்கள் வந்தனர். பாபா, ஏகாந்தவாசம் மேற்கொண்டதால், அவர்களுடன் உரையாட நோரினாவை அனுப்பி வைத்தார். காலை 10:00 மணிக்கு, அவர் எலிஸபெத்தின் காரில் பெண்மணிகளுடன் தாவரவியல் பூங்காவிற்குச் (BOTANIC GARDEN) சென்றார்.

அடுத்த நாள், பாபா, நாள் முழுவதும் ஆண்களுடன், தண்ணீர், தேன் மட்டும் அருந்தி உபவாசம் கடைப்பிடித்தார். 23ஆம் தேதி, அவர் கண்டி சுற்றுப்பயணத்திற்கும், ஏரிக்கும் பெண்மணிகளை அழைத்துச் சென்றார்; யானைகள் நீராடுவதையும், தந்திரங்கள் புரிவதையும் அவர்கள் பார்வையிட்டனர்.

மெஹராபாத்திலிருந்து அனுப்பப்பட்ட நீலப்பேருந்து நவம்பர் 23 மதியம் கண்டி வந்து சேர்ந்தது. அடுத்த நாள், பாபா, பெண்மணிகளை, புத்தருடன் தொடர்புடைய பல இடங்களுக்கு அழைத்துச் சென்றார்.

அனைவரும் அன்று காலை அனுராதபுரத்தில் (ANURADHAPURA) அமைந்த டம்புல்லா (DAMBULLA) என்ற இடத்திற்குச் சென்று, புத்தர் இறை உணர்வை எய்திய போதி மரத்தைத் தரிசித்தனர்.

நவம்பர் 25ஆம் நாள், மெஹர் பாபா அதிகாலை 5:30 மணிக்கு மகளிர் குடியிருப்புக்கு வந்து, தினமும் காலை 8:00 மணிக்கு 'ஹரி, பரமாத்மா..' மற்றும் மாலை 6:00 மணிக்கு 'து நிராகார்... ' (நீங்கள் உருவமற்றவர்...) பிரார்த்தனையை மொழியுமாறு அறிவுறுத்தினார்.

மெஹர் பாபாவைப் பலமுறை சந்தித்த ஐரீன் பில்லோவின் தந்தை, அக்டோபர் இறுதியில் காலமானார். நவம்பர் 27 அன்று அவரது மரணம் குறித்து விவாதித்த பாபா, "**நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உங்கள் தந்தை மிகவும் அதிர்ஷ்டசாலி. அவர் விவேகானந்தரைப் போலவே துன்பப்படாமல் உயிரைத் துறந்து விடுதலை அடைந்துவிட்டார். என்னுடன் இருப்பவர்களின் அனைத்து உறவுகளும், என்னை அறிந்திருந்தாலும் இல்லாவிடிலும், அல்லது அவர்கள் என்னை நம்பாவிடிலும் கூட, இரட்சிக்கப்படுகிறார்கள். கிருஷ்ணர், 'இதுபோன்ற அதிர்ஷ்டசாலிகளில் எழுபத்திரண்டு தலைமுறையினர் விடுதலையை அடையப்பெறுவார்கள்'**" என்று கூறியுள்ளார்.

தற்போதைய உலக நிலைமைகளைப் பற்றி, பாபா மேலும் கூறினார்: "**இந்தக் காலகட்டத்தில் பாதி உலகம் மறைந்துவிடும் - ஒருவேளை என் தாயார் கூட.**"

இலங்கை பயணத்திற்கு முன்னர், அஹமதுநகரிலிருந்து சற்று தொலைவில் அமைந்த அமைதியான இடம் ஒன்றைக் கண்டுகொள்ளும்

விருப்பத்தை தெரிவிக்கவே, ராஹூரிக்குச் செல்லும் வழியில் ஸரோஷ், இரண்டு அல்லது மூன்று இடங்களைப் பார்வையிட பாபாவை அழைத்துச் சென்றார், ஆனால் பாபா அவற்றை விரும்பவில்லை. பெண்டு அஹமதுநகருக்கு அருகில் ஓரிடத்தைப் பரிந்துரைத்தார், ஆனால் அதுவும் அவருக்குத் திருப்தியானதாக இல்லை.

இந்தக் காலகட்டத்தில் ஒரு நாள், பிம்பல்காவ்ம் (PIMPALGAON) கிராமம் அருகே சில ஏக்கர் நிலம் ஏலத்தில் விட இருப்பதாக விஷ்ணு செய்தித்தாள் மூலமாகத் தெரிந்துகொண்டார். நூற்றாண்டின் தொடக்கத்தில் அஹமதுநகருக்கு நீர் வழங்குவதற்காக, செயற்கை ஏரி கட்டப்பட்டபோது, ஆங்கிலேய பொறியியலாளர் மற்றும் அந்தத் திட்டத்தில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு, தற்காலிக குடில்கள் கட்டப்பட்டன. மெஹர் பாபா அந்த இடத்தைப் பார்வையிடச் சென்று, அதற்கு ஒப்புதல் அளித்து, ஏலம் விடும்போது அதை வாங்க அனுமதி வழங்கினார். 1927ஆம் ஆண்டில், மெஹர் பாபா இரண்டு முறை பிம்பல்காவ்ம் ஏரிக்கு விஜயம் செய்தார். அந்த நேரத்தில், பாபா அங்கு வாழும் திட்டத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை, மேலும் பாபா ஒரு நாள் அதைத் தனது நிரந்தர வாழ்விடமாக மாற்றுவதற்கான சாத்தியம் குறித்து மண்டலியில் எவரும் கற்பனை செய்து கூடப் பார்த்ததில்லை. பாபாவும் அதைப் பற்றிய அறிகுறி எதையும் அப்போது வழங்கவில்லை. '**இந்த இடம் மிகவும் நன்றாகவும், காலநிலை அருமையாகவும் உள்ளது**' என்று மட்டுமே அவர் குறிப்பிட்டார்.

மெஹர் பாபா இலங்கையில் இருந்தபோது, 1940, நவம்பர் 11 அன்று ஏலம் நடைபெற்றது; அன்று காலை, தன்னுடனிருந்த மண்டலியிடம் பலமுறை இது குறித்து கேட்டார், "**நமக்கு இந்த ஓய்விடம் ஏலத்தில் கிடைக்குமா? கிடைத்தால் அது நன்றாக இருக்கும்**." ஆதி சீனியரின் தந்தை காய்குஷ்ரு ஈரானி அஹமதுநகர் நகராட்சி செயற்குழுவில் உறுப்பினராக இருந்தார், மேலும் ஸரோஷ், பெண்டு இருவரும் ஏலத்தை வென்றுவிடுவதை உறுதிப்படுத்த அவர் தலையிட்டார். இறுதியில், அது (ரூ. 800 ஏலத்தொகையுடன்) வெற்றிகரமாக முடிந்தது. நவம்பர் 28 அன்று, இந்தத் தொலைத்தந்தியை பாபாவிற்கு அனுப்பினார்: "பிம்பல்காவ்ம் பங்களா வாங்கப்பட்டது."

இதற்கிடையே, காலிகட் (CALICUT) நகருக்குச் செல்வது குறித்து விவாதங்கள் எழுந்தன, 28ஆம் நாள், நோரினா உடன் எடுத்துச் செல்லும் பொருட்களைப் பற்றி பாபாவிடம் புகார் அளித்தார், "இவற்றை நாம் நீலப்பேருந்தில் எவ்வாறு எடுத்துச் செல்வோம்?"

"**போரில் உலக மக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளுக்கு மத்தியில் உங்களுக்கு வசதிகள் வேண்டுமா? பாதகமான சூழ்நிலையில் புகார் கூறி முறையிடாமல் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்; மேலும், மனதிற்கு இதமான தருணங்களில் மகிழவும் வேண்டாம்**" என்று பாபா குறிப்பிட்டார்.

அடுத்த நாள், பெண் மண்டலியுடன் அரசியல் பற்றி விவாதிக்கும் போது, பாபா, இவ்வாறு கருத்துரைத்தார்:

**ஆத்மாக்களில் மூன்று வகைகள் உள்ளன - மனிதன், துறவி மற்றும் இறை-மனிதன். துறவிகளும், சாதுக்களும் மனிதர்களை விட உயர்ந்தவர்கள், இறை-மனிதன் துறவிகளை விட உயர்ந்தவர்.**

**ஆண்கள் மத்தியில், காந்தி நிச்சயமாக இன்றைய மக்களில் மிகச் சிறந்தவர். சிலர் அவரை மஹாத்மா என்றும், சிலர் முட்டாள் என்றும் அழைக்கிறார்கள். அவர் தனக்கே உரித்தான பலவீனங்களைக் கொண்டிருக்கிறார், ஆனால் அவர் ஒரு சிறந்த ஆத்மா. (கோபால் கிருஷ்ணா) கோகலே** (GOKHALE), **(லோக்மான்ய) திலக்** (TILAK), **ஃபெரோஸ்ஷா மேத்தா** (PHEROZESHAH MEHTA) **ஆகியோர் இந்திய அரசியலின் தூண்களாகத் திகழ்ந்தனர். மூவரும் சிறப்பானவர்கள், ஆனால் திலக் அவர்களை விட மிகச் சிறந்தவர். அரசியலைப் பொறுத்தவரை காந்தி அவரது சீடர்.**

நவம்பர் 29 அன்று, பாபா, சட்டி பாபாவின் குடிசையை விட்டு வந்தபோது, மஸ்த் மிகவும் ஆத்திரமடைந்தார், அவர் கதவில் இருந்த கண்ணாடி பலகணிகளை தனது கைமுட்டிகளால் அடித்து நொறுக்கினார்! சிறுவன் கண்ணாடி துண்டுகளை விலக்கி சுத்தம் செய்ய வந்தபோது, சட்டி பாபா, "இல்லை, இல்லை, அப்படியே விட்டுவிடு!" என்றார். பாபா, மீண்டும் அவரைப் பார்க்க வந்து, திரும்பிச் சென்ற நேரத்தில், மஸ்த் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார். அந்த நேரத்தில் இங்கிலாந்து ஜெர்மனியர்களால் பெரிய அளவில் குண்டுவீச்சுக்கு உள்ளானது, மேலும், முதன்முதலாக நிகழ்ந்த, சட்டி பாபாவின் இத்தகைய திடீர் கொந்தளிப்பு, இந்த சம்பவத்தோடு தொடர்புடையது என்று பாபா கூறினார்.

இலங்கையில் சட்டி பாபாவின் விசித்திரமான நடத்தை, ஐரோப்பாவில் நடந்த நிகழ்வுகளுடன் மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இங்கு நடைபெறவிருக்கும் நிகழ்வுகளுடனும் தொடர்புடையது என்பதை, இந்த சம்பவம் வெளிப்படுத்துகிறது. கிருஷ்ணா, பகலில், தொடர்ந்து சட்டி பாபாவிற்குப் பணிபுரிந்தது மட்டுமின்றி, இரவில் பாபாவிற்கு இரவு கண்காணிப்பாளராகவும் பணிபுரிந்தார். பாபாவின் அறையில், அவர் சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தபோது கிருஷ்ணாவை சிறிதளவும் நகர அனுமதிக்கவில்லை. கிருஷ்ணா அவரது இடத்தில் இருந்துகொண்டு உடலை சிறிதேனும் அசைத்தாலும் அல்லது உடை எங்கேனும் உராய்ந்து சிறிதளவு சத்தம் எழுப்பினாலும் அது அவருக்குத் தொந்தரவாக இருப்பதாகத் தெரிவித்தார்.

எந்தவொரு புதிய பங்களாவிற்குச் செல்லும்போதும், பாபா எப்பொழுதும் ஒவ்வொரு மண்டலிக்கும் அவருக்கும் அறைகளை அவரே தேர்ந்தெடுத்தார். கண்டியில், சட்டி பாபாவின் அறை பாபாவின் அறையிலிருந்து சிறிது தூரத்தில் இருந்தது. ஒரு நள்ளிரவில், மஸ்த் திடீரென உரத்த குரலில் கத்தத்

தொடங்கினார். அவர் உலோகத்தாலான குளியல் வாளிகள் மற்றும் நாற்காலிகளை அறை முழுவதும் வேகமாக வீசி எறிந்தார்.

பின்னர் அவர் தனது படுக்கை விரிப்புகளை கிழித்து எறிந்தார். இந்தச் சத்தம் மண்டலியைத் திடுக்கிடச் செய்து படுக்கையிலிருந்து எழுப்பியது, ஆனால் பாபாவின் குறட்டை சத்தம் கிருஷ்ணாவை சிந்திக்க வைத்தது: "பாபா எப்படிப்பட்ட கடவுள்? அவர் உண்மையில் அனைத்தையும் அறிந்தவரா?"

சிறிது நேரத்தில் பாபா படுக்கையிலிருந்து எழுந்து ஒரு டம்ளர் தண்ணீர் கேட்டார். "**நீ என்ன யோசிக்கிறாய்?**" அவர் கிருஷ்ணாவிடம் கைசைகையால் கேட்டார்.

"நீங்கள் உண்மையிலேயே கடவுள் தானா என்று நான் யோசிக்கிறேன்."

"**ஏன்? ஏன் அப்படி நினைக்கிறாய்?**"

"பாபா, ஒவ்வொரு இரவும் நான் ஒரு கல்லைப் போல் உங்கள் முன் அமர்ந்திருக்கிறேன். என்னால் ஒரு அங்குலம் கூட நகர முடியாது. என் உடையிலிருந்து வரும் மிகச்சிறிய அசைவு கூட உங்களுக்குத் தொந்தரவாக உள்ளது.

"ஆனால் சட்டி பாபா அவரது உச்ச குரலில் கூச்சலிட்டு கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் அனைத்து பொருட்களையும் அங்கும் இங்கும் தாறுமாறாக வீசி எறிந்து கொண்டிருக்கிறார், அதே நேரத்தில் நீங்கள் நன்றாகத் தூங்குகிறீர்கள்."

பாபா கிருஷ்ணாவைப் பார்த்து, அவர் உதடுகளில் விரல்களை வைத்து "**அமைதியாக இரு**" என்றார்.

மீண்டும், பாபா படுக்கையில் சாய்ந்து கொண்டார், ஆனால் அவர் விரைவில் எழுந்து, "**இந்த நேரத்தில் நீ என்ன நினைக்கிறாய்?**" என வினவினார்.

"அதையேதான், பாபா" என்றார்.

"**உனக்கு என்ன தெரிய வேண்டும்?**" பாபா கேட்டார்.

"சட்டி பாபாவின் எதிர்பாராத திடீர் எழுச்சிக்கு என்ன காரணம்?"

பாபா எழுத்துப்பலகையில் உச்சரித்தார், "**பல ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் உள்நாட்டுக் கொந்தளிப்பு உருவாகும். நான் இந்தப் பணியை, சட்டி பாபா மூலம் செய்துள்ளேன். அந்த நோக்கத்திற்காக நான் அவரை இலங்கைக்கு அழைத்து வந்தேன். சட்டி பாபா தனது வேலையைச் செய்கிறார் என்பதால், இதற்கிடையில் நான் ஓய்வெடுக்கிறேன்.**"

1980ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், பாபா, நாற்பது வருடங்களுக்கு முன்னர் அறிவித்தபடி, இலங்கையின் வடக்குப் பகுதியில் தமிழ் பிரிவினைவாதிகளுக்கும் தெற்கில் சிங்கள ஆதிக்க அரசாங்கத்திற்கும் இடையே உள்நாட்டுப் போர் உருவெடுத்தது. மோதலில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

1940, டிசம்பர் 1ஆம் நாள், இலங்கையில், குறிப்பாக, பெண்மணிகளுடன் அவர் செய்த பணியைப் பற்றி, பாபா விளக்கினார்:

எனது பணிக்காக, உள் தொடர்புகளை உருவாக்க நான் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டும். நான் முன்னர் இதைச் செய்தபோது, ஆண் மண்டலியுடன் நடைப் பயணங்கள் மேற்கொண்டேன் - நாங்கள் பசியுடன், தாகமாக, சோர்வாக இருந்தோம், திறந்த வெளியில் தூங்கினோம், அனைத்து அசௌகரியங்களையும் சந்தித்தோம். ஆனால், நீங்கள் பெண்மணிகள் அவ்வாறு இருக்க முடியாது. குழாய் நீர், கழிப்பறைகள், விளக்குகள் மற்றும் பலவற்றைக் கொண்ட வீடு உங்களுக்கு வேண்டும். இது (சில) மக்கள் மனங்களில் தவறான எண்ணத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் நான் அதைப் பொருட்படுத்தவில்லை. நான் எனது பணியைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறேன். இதுபோன்ற அனைத்து வசதிகள் இருந்தும், உங்களில் பாதி பேர் அதிருப்தியை வெளிப்படுத்துகிறீர்கள்.

தனியாக இருப்பது என்பது எனக்கு மிகப்பெரிய சுகபோக வாழ்வாகும்! நான் விரும்பிய வண்ணம் செய்யும் வேலையைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆனால், எனது பணிக்காக, உங்கள் அனைவரையும் என்னுடன் வைத்திருக்க வேண்டும். உங்கள் மூலமாக நான் என்ன பணிபுரிகிறேன் என்பதைப் பற்றிய சிறிதளவு கருத்தும் உங்களுக்கு இல்லை.

எனவே நான் சொல்வது போலச் செய்துகோண்டே இருங்கள், வேறு ஒன்றும் இல்லை. ஜெய்ப்பூரில், நான் உங்களை ஓரிடத்தில் தங்கவைத்து, சில நாட்களுக்கு வெளியே சென்று, எனது பணி முடிந்ததும் திரும்பி வருவேன்.

கிறிஸ்து அவர் விரும்பிய சரியான வகை சீடர்களைத் தேர்ந்தெடுத்தார், மிகவும் தீவிர உணர்ச்சி முனைப்புள்ளவர்கள் அல்ல, அதே வேளையில் உற்சாகமற்றவர்களும் அல்ல. அனைவரும் மீனவர்கள். கிறிஸ்து அவர்கள் மூலமாக இவ்வளவு பெரிய பணிகளைச் செய்தார். குருநாதரின் பணி, அவருடைய சீடர்கள் நடந்துகொள்ளும் முறையால் பாதிக்கப்படுகிறது, ஏனெனில் பொது ஜனங்கள் எப்போதும் ஒரு குருநாதரை அவரது சீடர்களின் நடத்தையிலிருந்து தீர்மானிக்கிறார்கள்.

ஆன்மீக ரீதியில், இலங்கை ஒரு வறண்ட நாடு. உள்ளளவில் அது உலர்ந்தது. வெளியளவில் ஈரம் நிறைந்தது. இலங்கை ராவணனின் நிலம் என்று அழைக்கப்படுகிறது. அது தண்ணீரை சேமிக்க முடியாத பாறை போன்றது; அதன் மீது கொட்டும் நீர் வெளியே வழிந்து விடுகிறது. இந்தப் பிடிவாத பௌத்தர்கள் உணர்வற்று மிகவும் வறண்டு போனவர்கள். இந்தியா ஆன்மீக ரீதியில் தலைசிறந்த நாடு, ஆனால் தென்னிந்தியா அல்ல. ஆன்மீகம், ஹைதராபாத்திலிருந்து வடக்கு நோக்கி நிரம்பி வழிகிறது.

உலகின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளில் என்னைப் பொறுத்தவரை எந்த அர்த்தமும் இல்லை. வெளியளவில் வெறும் உலகளவிலான செயல்பாடு - காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை, ஏழை எளியவர்களுக்குத் தொண்டு, இப்படி மற்றும் பல. ஆனால் நீங்கள் வாழும் இந்த வாழ்க்கை அர்த்தமுள்ளது. முதல் விஷயமாக, நீங்கள் எனது சகவாசத்தில் இருக்கும்போது, உலகில் பிணைப்பை உருவாக்கும் பேராசை,

**காமம், மற்றும் பலவற்றின் உலகச் செயல்பாடுகளிலிருந்து நீங்கள் விடுபடுகிறீர்கள்.**

**நீங்கள் ஏன் திரைப்படங்களுக்குச் செல்லக்கூடாது? உங்களுக்கு ஆண்களுடன் தொடர்பு இல்லை, பணத்தையும் ஆண்களையும் தொடுவதில்லை. திரைப்படங்களுக்குச் செல்ல யார்தான் விரும்ப மாட்டார்கள்? ஆனால் இந்த வெளியளவிலான சமாச்சாரங்கள் உங்கள் மீது ஒரு மனப்படிவத்தை உருவாக்குவதால் , நீங்கள் உங்களை அறியாமலேயே பாதிக்கப்படுகிறீர்கள். நீங்கள் சுய கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கக் கற்றுக்கொள்கிறீர்கள்! நீங்கள் விரும்பியதைச் செய்யாதீர்கள், ஆனால் எனது விருப்பத்தை நிறைவேற்றுங்கள்; நீங்கள் அதை முழு மனதுடன் மகிழ்ச்சியோடு நேர்மையாக செய்ய வேண்டும். இல்லையெனில், அதன் நன்மைதான் என்ன?**

**1940,** டிசம்பர் **2**ஆம் தேதி, ருஸ்தோம்ஜி பில்லிமோரியா, அவரது மனைவி மற்றும் மருமகள் கண்டியில் பாபாவை சந்திக்க வந்தனர். பாபா அவர்களை ஆண்கள் இருப்பிடத்தில் சந்தித்து, பின்னர் இரண்டு பெண்மணிகளையும் பெண் மண்டலியை சந்திக்க அழைத்துச் சென்றார். பாபா அவர்களை உள்ளே அழைத்து வந்தபோது, வானொலியில் 'காதலைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?' என்ற பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. பாபா மீண்டும் பாடலின் பல்லவியை எடுத்துக்கூறி பெண் மண்டலியிடம் கேட்டார்:


**காதலைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? வானொலியில் ஒலிக்கும் இந்தக் 'காதல்' நெடுஞ்சாலைக் காதல், ஆனால் உண்மையான காதல் (இறையன்பு) பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?**

**அந்த அன்பின் எடுத்துக்காட்டாக இங்கே ஒரு கதை. ஸிக்காரியா (ZIKARIA) என்ற பெரிய துறவி ஒருவர் இருந்தார். கடவுளுக்குப் பிரியமானதை அவர் எப்பொழுதும் செய்து வந்தார். ஒரு நாள் கனவில், ஒரு குறிப்பிட்ட மரத்தின் கீழ் அமருமாறு கடவுள் கட்டளையிட்டார். அவர், கனவு கலைந்து விழித்தபோது, அங்குச் சென்று அமர்ந்தவர், அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் கெஞ்சிக் கூத்தாடி கண்ணீர் வடித்தும், ஐந்து ஆண்டுகளாக அந்த இடத்தைவிட்டு ஒருபோதும் நகரவில்லை.**

**இதைக் கேட்டு, அந்நாட்டு மன்னர் தனது ஆட்களை அனுப்பி, ஸிக்காரியாவை தன்னிடம் அழைத்து வருமாறு கட்டளையிட்டார், ஆனால் அந்தத் துறவி வரவில்லை. அவர் கீழ்ப்படியவில்லை என்றால், அவரை ரம்பத்தால் துண்டிக்குமாறு மன்னர் கட்டளையிட்டார்; இருந்தும் ஸிக்காரியா இருந்த இடத்தைவிட்டு நகராமல், கட்டளையை நிறைவேற்றக் கூறினார்!**

**ஒரு கனவில் அளிக்கப்பட்ட கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிவது மிகப் பெரிய, உண்மையான அன்பின் எடுத்துக்காட்டு. இங்கே கடவுள் மனிதனாக உங்கள் எதிரே நின்றுகொண்டிருக்கிறார்; அவர் இதுபோன்ற**

**சிறிய சிறிய விஷயங்களைச் செய்யும்படி கேட்கிறார், அதைக் கூட உங்களால் செய்ய முடியவில்லை!**



மெஹர் **பாபா (**MEHER BABA**)- 1941**

# ராம்நாடு, காலிகட், ஜெய்ப்பூர் பயணம்

**(Travel to Ramnad, Calicut, Jaipur)**

கண்டியில் தனது மஸ்த் பணியை முடித்த பிறகு, பிரிம்ரோஸ் ஹில் பங்களா மூன்று மாதங்களுக்கு வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தாலும், பாபா, இருபதே நாட்கள் தங்கியிருந்து, 1940, டிசம்பர் 5ஆம் நாள், கேரளாவின் காலிகட் (CALICUT) நகருக்கு, காலை 7:00 மணிக்குப் புறப்பட்டார். பாபாவும் குழுவும் நீலப்பேருந்து மற்றும் கார்களில் மன்னார் நகர் (MANNAR) வழியாக இந்தியாவிற்கு படகில் பயணம் செய்தனர். (பெரும்பாலான ஆண் மண்டலி சட்டி பாபாவுடன் முந்தைய நாள் புறப்பட்டு ரயிலில் பயணம் செய்தனர்.) பயணத்தில் வழக்கமான இடர்பாடுகள் இல்லாமல் இல்லை: மன்னார் அருகே நீலப்பேருந்து மணலில் சிக்கியது; எலிஸபெத்தின் கார் சக்கரம் பழுதானது; மழை பொழியத் தொடங்கியது. 'அனைத்து பெட்டி படுக்கைகளும், பெண்மணிகளும், பாபாவும் மழையில் நனைய வேண்டியதாயிற்று.' டாக்டர் டான் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்: 'மெஹர் பாபா, வழக்கம் போல் - எங்கள் மன்னாதி மன்னன், அவதார புருஷர் - இரவு 11:30 மணிக்கு, நான்கு மணி நேரம் அனைத்தையும் மேற்பார்வையிட்டு, எலிஸபெத்தின் பையை சுமந்துகொண்டு, கப்பலில் கடைசியாக வந்திணைந்தார். பாபாவும் பெண்மணிகளும் கப்பலில் தூங்கினர், அல்லது தூங்க முயன்றனர்; விஷ்ணுவும் நானும் நீலப்பேருந்தில் நன்றாகத் தூங்கினோம்."

கப்பல் மறுநாள் காலையில் தனுஷ்கோடிக்குப் (DHANUSHKODI - இந்தியா) புறப்பட்டது; பாபா, பெண்மணிகளுடன் ராம்நாடுக்கு (RAMNAD) ரயிலில் பயணம் செய்து பிற்பகல் 3:00 மணிக்குச் சென்றடைந்து, அனைவரும் ஒரு பயணிகள் விடுதியில் தங்கினர். டான், நீலு இருவரும் நீலப்பேருந்தில் பின்தொடர்ந்து அவர்களை அங்கு சந்தித்தனர். துக்காராம், எலிஸபெத்தின் காரை ஓட்டிச் சென்றார். நீலப்பேருந்தை டான் ஓட்டிச்செல்ல, நீலு உதவியாளராக இருந்தார்.

ராம்நாட்டில், டிசம்பர் 7ஆம் நாள், மெஹர் பாபா, 115 வயதான பல்லுக்கொல்லா பாபா (PALLUKOLLAH BABA) என்றழைக்கப்பட்ட மாபெரும் மஸ்தைத் தொடர்பு கொண்டார். இந்த சந்திப்பில் பாபா மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார், மேலும் இப்பழங்கால மஸ்தை நாள் முழுவதும் தொடர்பு கொண்டார். '**ஆறாவது மற்றும் ஏழாவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையே நிலைகொண்ட இந்தத் துறவி விதிவிலக்கானவர்**' என்று குறிப்பிட்டு, அவரை '**அனைத்து மஸ்துகளின் மன்னன்**' என்று அழைத்தார்.

இதற்கிடையில், பங்களாவில், கேட்டி சூடான தேநீரை எடுத்துச் செல்லும் வேளையில் வழுக்கி விழுந்து, தேநீர் உடல் மீது கொட்டி காயம் ஏற்பட்டது.

அந்த நேரத்தில் தனது அறையில் சவரம் செய்து கொண்டிருந்த காக்கா பாரியா, கேட்டி விழுந்ததைக் கண்டு, அவருக்கு உதவச் சென்றார். உடனடியாக பாபா அங்குத் தோன்றி, காக்காவைக் கடுமையாகக் கண்டித்தார். அவர், "**நீங்கள் ஏன் எனக்குக் கீழ்ப்படியவில்லை? உத்தரவுகளின் படி, பெண்களைத் தொடுவது தடைசெய்யப்பட்டுள்ளது!**" காக்கா மறந்துவிட்டதாகக் கூறி, மன்னிப்புக் கோரினார்; அவருக்கு உதவ மட்டுமே முயன்றார். பாபா திட்டினார், "**நீங்கள் இந்த உத்தரவை தீவிரமாக எடுத்திருந்தால், அதை நினைவில் வைத்திருப்பீர்கள். நீங்கள் ஒரு நல்ல செயலைச் செய்ததாக நினைக்கிறீர்கள், ஆனால் நீங்கள் என்னை எவ்வளவு காயப்படுத்தினீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது. கேட்டி உயிரைத் துறந்திருந்தாலும், நீங்கள் அவரைத் தொட்டிருக்கக்கூடாது; "நீங்கள் எவ்வளவு கீழ்ப்படிதலுடன் இருந்தீர்கள் என்று நான் பெருமிதம் அடைந்திருப்பேன். ஆனால் அவர் வீழ்ந்தது, என் உத்தரவைப் புறக்கணிப்பதில் உங்களை வீழ்த்தியது**" என்றார். பின்பு, பாபா காக்காவை மன்னித்து, பெண் மண்டலிக்கு (மேலும் விளக்கமளிக்காமல்), "**இன்று, இது ஒரு சிறப்பான நாள்**" என்று மட்டும் கருத்துத் தெரிவித்தார்.

1940, டிசம்பர் 8 இரவு 7:00 மணிக்கு, பாபாவும் குழுவும் ராம்நாட்டிலிருந்து நீலப்பேருந்து மற்றும் காரில் புறப்பட்டு, இரண்டு நாட்கள் திண்டுக்கல், பழனி, பொள்ளாச்சி, பாலக்காடு வழியாகப் பயணம் செய்து காலிக்கட் வந்து சேர்ந்தனர். (ஒரு கட்டத்தில் அனைவரும் பேருந்திலிருந்து இறங்கி ஒரு சிறிய நதியைக் கடந்து, கால்நடையாகச் செல்ல வேண்டியிருந்தது!) அவர்கள் காலிகட்டுக்கு வெளியே ஐந்து மைல் தொலைவில் 'சிலோன் லாட்ஜ்' (CEYLON LODGE), இரணிப்பாலத்தில் (ERANHIPPALAM) தங்கினர். பாபா அந்த இடத்தைப் பெரிதும் விரும்பினார். அவர் உடனடியாக, சட்டி பாபாவுடன் தனது உள் பணியைத் தொடங்கினார்; விரைவில் அந்தப் பகுதியில் வாழும் இதர மஸ்துகளையும் தேடிச் சென்றார்.

டிசம்பர் 11ஆம் நாள் காக்கா ஒரு மேல்நிலை மஸ்தை அழைத்து வந்தார், பாபா அவரைக் கண்டு '**கடவுளின் ஒளிக்கதிர்களைக் கொண்டவர்**' என்று கூறினார். பைதூல் இன்னும் பலரை அழைத்து வந்தார், அவர்களில் சிலர் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும் அல்லது சிலர் பசியுடனும் இருந்தனர். பாபா அனைவருக்கும் உணவளித்து, அவர்களை நீராட்டி, புதிய உடையும் வழங்கினார். அதைத் தொடர்ந்து, பாபா மஸ்துகளைக் குறித்த விசித்திரமான சில அறிகுறிகளை விளக்கினார்:

**மஸ்துகள் ஒருபோதும் யோகிகளைப் போல, பிரத்யேகமாக பால் ஆகாரத்தை மட்டும் நாடுவதில்லை. அவர்கள் எப்பொழுதும் விலகி, தனிமையில் அமர்ந்திருப்பார்கள். அவர்கள் வழக்கமாக தங்கள் கைகள், கால்கள் அல்லது தலையின் ஒரு வித்தியாசமான அசைவுளைக் கொண்டுள்ளனர்; விரல்கள், கால்விரல்கள், கால்கள் மற்றும் கைகளைச் சுற்றி துணிகளைச் கட்டிக்கொள்கிறார்கள்; வெற்றிலை, பாக்கு,**

**புகையிலையை மென்று உண்பதும், தேநீர் அருந்துவதும், அல்லது தொடர்ந்து புகைப்பிடிப்பதையும் பழக்கமாகக் கொண்டுள்ளனர்; அவர்கள் சிலநேரங்களில் முட்டாள்தனமாகப் பேசவும் கூடும்.**

**சட்டி பாபா போன்ற சாதுக்கள், எந்நிலையிலும், இதுபோலச் செயல்பட மாட்டார்கள். சட்டி பாபாவைப் போலவே அவர்களும் பெரும் மதிப்பும் மரியாதைக்கும் உரியவர்கள், ஆனால் பெரும்பாலும் குழந்தைத்தனம் படைத்தவர்கள்.**

காலிகட் வந்து சேர்ந்த பின்னர் ஒரு நாள், சட்டி பாபா தனது மனநிலையை இழந்து, "இந்த இடம் ஒன்றிற்கும் உதவாது, நான் பயங்கரமாக எரிந்துகொண்டிருக்கிறேன்!" என்றார்.

எனவே, பாபா கிட்டதட்ட 200 வாளி தண்ணீரால் அவரை நீராட்டினார். அரை மணி நேரத்தில், சட்டி பாபா மீண்டும் நீராட விரும்பியதால், பாபா, மறுபடியும் அவரை நீராட்ட வந்தார்; ஆனால் மஸ்த் இந்த முறை பாபாவை அனுமதிக்காமல், அவர் தானே நூற்றுக்கணக்கான வாளி தண்ணீரைத் தலை மீது ஊற்றி, "இது உணவும் தண்ணீரும் இல்லாத இடம்!" என்று கூறினார்.

இந்தக் காலகட்டம் முழுவதும், மெஹர் பாபா மற்றும் ஆண், பெண் மண்டலி அனைவரும் ஒரு நாள் இரண்டு முறை உணவு உண்டு உபவாசத்தைக் கடைப்பிடித்தனர். 1940, டிசம்பர் 12 அன்று, பாபா பெண்மணிகளுக்குத் தியானம் பற்றிய மற்றுமொரு கருத்தை விளக்கினார்:

**உங்களில், தியானத்தில் ஈடுபட முடியாதவர்கள், கவலைப்படாமல், மனதில் எனது பெயரை மீண்டும் மீண்டும் நினைவில் கொள்ள வேண்டும். எண்ணங்கள் கொசுக்கள் போன்றவை, எனது நாமம் கொசு வலை. நீங்கள் கொசு வலையில் இருக்கும்போது, கொசுக்கள் உங்களைச் சுற்றி ரீங்காரம் செய்யக்கூடும், ஆனால் அவை உங்களைக் கடிக்க முடியாது. இவ்வாறு, எனது பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதன் மூலம், கொசு வலையைப் போல், அது உங்களைத் தொந்தரவு செய்யாமல் பாதுகாக்கும் - எண்ணங்கள் உங்களைத் திசைத் திருப்பாமல் அமைதியாக அசைவின்றி இருக்கச் செய்யும்.**

டிசம்பர் 13ஆம் நாள், சிலோன் லாட்ஜில் சட்டி பாபா மற்றும் புதிய மஸ்துகளுடன் பணிபுரிந்த பின்பு, பாபா, அளவிலா மகிழ்ச்சியில் புன்முறுவல் செய்து கொண்டே பெண் மண்டலியிடம் வந்து, "**எனது பணி இன்று மிகவும் திருப்திகரமாக முடிந்தது. நான் மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறேன்**" என்று குறிப்பிட்டார். இதைக் கொண்டாடும் விதத்தில், கள் (TODDY - மதுபானம்) மற்றும் எண்ணெய் பலகாரங்களை விநியோகித்தார். பாபாவின் முகம் பௌர்ணமி போலப் பிரகாசித்தது; கண்களிலிருந்து பளிச்சிடும் ஒளி வீசியது. பெண்மணிகள் வலிமையான, புளித்துப்போன மதுபானத்தின் விளைவாக பிரமித்து போய், "ஹரி,

பரமாத்மா, அல்லா, அஹுரமஸ்தா, கடவுள், யெஸ்தான், ஹு!" என்று பிரார்த்தனையை மொழிந்தனர்.

மார்கரெட் பாபாவுக்காக நடனமாடினார். பிரியமான பாபாவின் அழகைக் கண்டு அவர்கள் மஸ்தானிகளைப் போல் இருந்தனர். மணி, ரானோ, நோரினா மூவர் மட்டுமே ஒழுங்கைப் பாதுகாக்க முடிந்தது. அதற்குப் பிறகு பாபா ஆண் மண்டலியிடம் சென்று அவர்களுக்கும் சிறப்பு விருந்தளித்தார்.

காலிகட் காலநிலை மிகவும் உஷ்ணமாக இருந்தது, எனவே 1940 டிசம்பர் 16 திங்கள் அன்று, மெஹர் பாபா ஜெய்ப்பூருக்குச் (JAIPUR) செல்ல முடிவு செய்தார்; மேலும் பொருத்தமான பங்களாக்களை ஏற்பாடு செய்ய, சாஞ்சியை அனுப்பி வைத்தார். குழுவில் அனைவரும் ரயிலில் ஜெய்ப்பூருக்குப் பயணிக்க வேண்டும் என்றும், டான், நீலு இருவரும் நீலப்பேருந்தில் வேண்டிய பொருட்களை எடுத்துச் செல்லவும் முடிவு செய்யப்பட்டது.

கொத்வால் சகோதரிகளான ஹில்லா, நாஜூ, மெஹராவின் மருமகள் மெஹரு, நாகு ஆகியோரும் இலங்கையில் குழுவுடன் வந்திணைவதை பாபா விரும்பினார்; ஹில்லா, நாஜூ அவர்களின் தாயும், தம்பி ஆதியும் ஏற்கனவே பாபாவுடன் இருந்தாலும், இலங்கையின் வானிலை மிகவும் மோசமாக இருந்ததால் அவர்களின் வருகை ரத்து செய்யப்பட்டது. பாபா இப்போது மெஹரு, நாகு இருவரையும் காலிகட்டுக்கு அழைத்தார். டிசம்பர் 17ஆம் தேதி மாஸாஜி அவர்களை அழைத்து வந்து, உடனடியாக மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

இந்த நேரத்தில் காக்கா மும்பைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார், ஆனால் எரச் பெங்களூரிலிருந்து பாபாவுடன் வந்திணைந்தார். எரச் தனது குடும்பத்தினரையும் குலாமாசியையும் தன்னுடன் அழைத்து வந்தார். அவர்களும் இலங்கையில் பாபாவுடன் இணைந்திருக்கும் எண்ணத்தில், பாபா, திட்டத்தை மாற்றுவதற்கு முன்பு, தடுப்பூசியும் போடப்பட்டது. பாபாதாஸ் மூன்று முறை காலிகட்டுக்கு வந்தார், ஆனால் பாபா, அவருடைய ஏகாந்தவாசம் இன்னும் தொடர்ந்ததால் அவரைப் பார்க்கவில்லை; அவருடைய பணியில் எந்தத் தொந்தரவையும் விரும்பவில்லை.

எவ்வாறாயினும், ஒரு நாள், எரச் கூறியபடி, டான், தபால் அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, சற்று தூரத்திலிருந்து ஒரு நீண்ட அங்கியில், தலைமுடி கலைந்த கோலத்தில், தாடியுடன் கூடிய ஓர் உருவத்தைப் பார்த்து, அவர் ஒரு மஸ்த் என்று நினைத்தார். டான் இதை, பாபாவிடம் தெரிவிக்க, அவரும் அந்த நபரை அழைத்து வர, எரச், டான் இருவருக்கும் அறிவுறுத்தினார். இருவரும் அவரை அணுகியபோது, அது பாபாதாஸ் என்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்! பாபா தன்னிடம் 'மஸ்தை' அழைத்துவரச் சொன்னதால், அவரை பாபாவிடம் அழைத்து வந்து, தான் செய்த தவறுக்கு டான் மன்னிப்பு கோரினார். பாபா உள்ளூர நகைத்தார்.

பொருத்தமான வீடுகளை ஏற்பாடு செய்வதில் சாஞ்சிக்கு உதவுமாறு பெண்டுவிற்கு உத்தரவிடப்பட்டது. அவர் மெஹராபாத்திலிருந்து ஜோத்பூருக்குப் (JODHPUR) புறப்பட்டார். டான், குழுவிற்கு இரண்டு ரயில் பெட்டிகளை முன்பதிவு செய்ததும், அனைவரும் புறப்படத் தயாராயினர்.

காலிகட் நகரில் சிலோன் லாட்ஜின் உரிமையாளர் மார்கோ சோப் (MARGO SOAP) தொழிற்சாலையின் சொந்தக்காரராக இருந்தார். அவர் மெஹர் பாபாவைப் பற்றி அறிந்து கொண்டதும், பல மாதங்களுக்கு முன்னதாகவே செலுத்தப்பட்ட வாடகைப் பணத்தைத் திருப்பித் தர விரும்பினார். ஆனால் அதை, பாபாவின் பிரசாதமாக வைத்திருக்குமாறு பாபா அவருக்குக் கூறி அனுப்பினார். பாபாவும் அவரது 42 பேர் கொண்ட குழுவும் டிசம்பர் 23 மதியம், இரண்டு வாரங்கள் தங்கியிருந்த பின்னர் அங்கிருந்து புறப்பட்டனர்.

சாஞ்சி, பெண்டு இருவரும் எவ்வளவோ தீவிரமாக முயன்றும், ஜெய்ப்பூர் நகரில் பொருத்தமான பங்களாவைக் கண்டுகொள்ள முடியவில்லை, எனவே அவர்கள், பாபா அறிவுறுத்தியபடி ஜோத்பூர் (JODHPUR), உதய்பூர் (UDAIPUR) மற்றும் பூன்தி (BUNDI) ஆகிய நகரங்களுக்குச் சென்றனர். இறுதியில் அவர்கள் ஜெய்ப்பூரின் புறநகர் பகுதியில் அமைந்த அம்பர் சாலையில் (AMBER ROAD) ‘கவாஸ் பாலா பக்ஷிஜி’க்குச் (KAWAS BALA BUKSHIJI) சொந்தமான ‘ஈரானி கவாஸ்ஜி பாக்’ (IRANI KAWASJI BAGH) என்றழைக்கப்பட்ட பங்களாவைக் கண்டுகொண்டனர். அங்கே ஒரு முஹமதிய துறவியின் சன்னதி காம்பவுண்டில் அமைந்துள்ளது.

பாபாவிற்குத் தகவல் வந்ததும், அவர் காலிகட்டிலிருந்து உடனடியாகப் புறப்படுவதாகவும், ஆக்ராவிலிருந்து ஜெய்ப்பூர் செல்ல ரயிலில் முன்பதிவு செய்யுமாறும் உத்தரவிட்டு சாஞ்சி, பெண்டு இருவருக்கும் தொலைத்தந்தி அனுப்பி வைத்தார். பாபாவும், குழுவும் உடனடியாக ஆக்ராவிற்குப் புறப்பட்டனர்; பாபாவின் வருகைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய பெண்டு, சாஞ்சிக்கு உதவியாக இருந்தார். கிறிஸ்துமஸ் விடுமுறை ஆதலால் ரயிலில் முன்பதிவு செய்வது மிகவும் கடினமாக இருந்தது, ஆனால் பாபாவின் உள்ளார்ந்த உதவியால், சாஞ்சி அனைத்து ஏற்பாடுகளையும் இலகுவாகச் செய்ய முடிந்தது. 1940 டிசம்பர் 26 வியாழக்கிழமை மாலை ஐந்து மணிக்கு பாபாவும் குழுவும் ஜெய்ப்பூருக்கு வந்து சேர்ந்தனர்.

பாபா வந்ததும் முதன் முதலாக, குழுவில் அனைவருக்கும் தனிப்பட்ட அறைகள் மற்றும் படுக்கைகளைப் பகிர்ந்தளித்தார். காலம் இதை விவரிக்கையில், “பாபா பெண்மணிகளின் வாழ்க்கையில் மிகச்சிறிய விவரங்களிலும் கவனமாக இருந்தார். ஒவ்வொருவரின் சுதந்திரமும் அவர் நிர்ணயித்த வரம்புகளுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது. இந்தப் பெண்மணிகள் எப்படி வாழ்ந்தனர் என்பது குறித்த கருத்தைக் கொண்டிருப்பது மிகவும் கடினம். சில விஷயங்களில் விதிக்கப்பட்ட வரம்புகள் சாதாரணமாக, சிறைக் கைதிகளின் மீது வைக்கப்பட்டவைகளை விட அதிகமாக இருந்தன! ஆனால் அன்பானவரின் கட்டுப்பாடுகள், மேலும் பிணைப்புகளில் சிக்கிக்கொள்வதற்கு பதிலாக,

அடிமைத்தனத்தின் சங்கிலிகளை அகற்றுவதற்கும், சுதந்திரத்திற்கான உள் கதவுகளைத் திறப்பதற்கும் உதவியாக இருந்தன.

ஒவ்வோர் எண்ணமும் இத்தகைய கட்டுப்பாடுகளால் வரையறுக்கப்பட்டிருந்தது; மேலும் மிகையாகப் புண்படும் மனம் ஒவ்வோர் அடியிலும் அதிர்ச்சிக்குள்ளாகிக் கொந்தளிக்கிறது. இதனால்தான், இறைநிலையை எய்திய குருநாதர் ஒருவருடன், எந்த நேரமும் வாழ்வது சாத்தியமற்றது. ஒவ்வொரு மூச்சிலும் அகந்தை வேதனைக்குள்ளாகிறது, சில சமயங்களில், வாழ்வதே உயிரோடு மரணத்தை சந்திப்பதாகும்!"

1941, ஜனவரி 3 அன்று, மஸ்துகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக, பெண்டு ஜோத்பூருக்கு அனுப்பப்பட்டார்; இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவர் தொடர்புகொண்ட மஸ்துகளின் பட்டியலுடன் திரும்பி வந்தார். மெஹர் பாபா ஜனவரி 6 அன்று, எரச், குஸ்தாஜி இருவருடனும் ரயிலில் ஜோத்பூருக்குச் சென்றார். 'நங்கா சாது' (NANGA SADHU) என்றழைக்கப்பட்ட ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட மஸ்த், இராணுவ முகாம்களுக்கு அருகில், சில மைல் தொலைவில் தங்கியிருந்தார். அவர் அடர்ந்த தலைமுடி, தாடியுடன் கூடிய ஒரு நடுத்தர வயது மனிதர். அவர் புறக்காவல் வீரர் ஒருவரால் பாதுகாக்கப்பட்டார் மற்றும் அவரை கவனிக்க இரண்டு ஊழியர்களும் இருந்தனர். அவரைத் தொடர்பு கொள்ள பாபா குதிரைவண்டியில் பயணம் மேற்கொண்டார். மஸ்திற்கு உடல் உணர்வு இல்லாததால், எவரேனும் உணவளிக்கும் வரை, அவர் எதுவும் உண்ணுவதில்லை. அவர் ஒரு மணல் மேட்டில், இரண்டு கைகளையும் முகத்தின் மேல் வைத்து மறைத்த வண்ணம் அமர்ந்திருந்தார். "**அவர் ஆன்மீகப் பாதையில் அடி எடுத்து வைத்த நாளிலிருந்து, உலகைப் பார்க்க விரும்பாததால், முகத்தை தனது கைகளால் மறைத்தார். அப்படியே பழகிவிட்டதால் அவர் இன்னும் அதையே செய்து கொண்டிருக்கிறார்**" என்று பாபா விளக்கமளித்தார்.

அவர்கள் வந்தபோது புறக்காவல் வீரர் காவல் புரிந்து வந்தார். பாபா தனியாக மஸ்தைத் தொடர்பு கொள்ள விரும்பியதால், அவர்கள் பயணிகள் விடுதிக்குத் திரும்பி வந்தனர். திரும்பி வந்த அடுத்த கணமே, பாபா மறுபடியும் உடனடியாக மஸ்த் இருந்த இடத்திற்குச் சென்றார். அவ்வேளையில் காவல்காரர் அங்கு இல்லை. எரச், குஸ்தாஜி இருவரையும், அரை மணி நேரம் தனியாக மஸ்துடன் பணிபுரியும் வேளையில் வெகு தொலைவில் நிற்குமாறு பாபா கூறி அனுப்பினார்.

பாபா அவரது பணியை முடித்த அந்த நேரத்தில், திரும்பிவந்த காவல்காரர் கவலையுற்று பதட்டமடைந்தார். பாபா, அவருக்கு வெகுமதியாகப் பணம் கொடுக்கக் கூறியது அந்த மனிதரை சமாதானப்படுத்தியது. அவர்கள் உணவுக்காகப் பயணிகள் விடுதிக்குத் திரும்பினர்; ஆனால் மீண்டும் பாபா அங்குச் செல்ல விரும்பினார். எனவே, மறுபடியும் அவர்கள் மூன்றாவது முறையாக ஒரு குதிரை வண்டியில் சென்றனர். அவ்வேளையிலும் காவல்காரர்

அங்கு இல்லாததால், மீண்டும், பாபா தனியாக அந்த மஸ்தை அரை மணி நேரம் தொடர்பு கொண்டார். பாபா, மஸ்துடன் இருந்த வேளையில், மஸ்த் அவரது முகத்தை மறைக்கவில்லை, ஆனால் பாபா அங்கிருந்து வெளியேறிய வேளையில், மஸ்த் தனது விரல்களின் இடைவெளி வழியாக பாபாவைப் பார்த்துக்கொண்டே இருந்தார்.

பாபா, மஸ்தானி மாய் (MASTANI MAI) என்றழைக்கப்பட்ட மேல்நிலை மஸ்தானி ஒருவரையும் தொடர்பு கொண்டார், பிற மஸ்துகளைப் போலவே அவருக்கும் பௌதீக உடலைப் பற்றிய எந்த உணர்வும் இல்லை. மஸ்தானியின் உடல் கந்தல் உடையால் மறைக்கப்பட்டிருந்தது, மற்றும் அவரது காலில் ஏற்பட்ட காயத்தை, ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. பணக்கார பக்தர்கள் அவருக்கு உணவு, உடைகளை வழங்கினர், ஆனால் அவர் அதையெல்லாம் தனதருகே விட்டுவிட்டு பின்னர் ஏழைகளுக்குக் கொடுத்தார். பாபா, அந்த மஸ்தானியை ஏழு முறை பயணிகள் விடுதி அருகில், அவரைச் சுற்றி பக்தர்கள் இல்லாமல் தனியாக இருந்தபோது தொடர்பு கொண்டார்.

மெஹர் பாபா ஜனவரி 8ஆம் நாள் மதியம் ஜெய்ப்பூர் திரும்பி வந்தார். அன்று பெண் மண்டலியை சந்தித்த பாபா, அவரது மஸ்த் தொடர்புகளைக் குறித்து விவரித்தார். (பாபாவை, அந்த மஸ்த் விரல்களின் இடைவெளி வழியாகக் கூர்ந்து பார்த்ததை அவர் சைகையால் அப்படியே செய்து காட்டினார்). தனது மஸ்த் பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பாபா, "**நான் எனது மௌனத்தைக் கலைப்பதற்கு முன்னர், உலகின் 75 சதவீத மஸ்துகளைத் தொடர்பு கொள்ள வேண்டும். நான் ஏற்கனவே 70 சதவீதத்தை தொட்டுவிட்டேன்; இப்போது ஐந்து சதவீதம் மட்டுமே எஞ்சியுள்ளது**" என்று கூறினார்.

பாபா, இதைக் குறித்து மேலும் கருத்துரைத்தார்: "**உலகம் முழுவதும் பயங்கரமான குழப்பம் நிலவுகிறது! இங்கே நாம் அத்தகைய துயரங்களை உணர்வதில்லை. மார்கரெட்டுக்குப் பல் வலிக்கும்போது, 'அடடா, உலகமும் அதன் சண்டை சச்சரவுகளும் அங்கே இருக்கட்டும், எனக்கு இப்போது பல் வலிக்கிறது, அதுதான் முக்கியம்!' என்கிறார். அவரது பல்வலிக்காக, மார்கரெட், உலகம் முழுவதையும் நரகத்திற்கு அனுப்பி வைத்தாலும் பரவாயில்லை என விரும்புகிறார், ஆனால் எனக்காக ஏன் அதைச் செய்யக்கூடாது? எனக்காக ஒரு வலியை உருவாக்கி உங்கள் அகந்தையை வீசி எறிந்துவிடுங்கள்.**"

பாபா ஒரு முறை அவர்களிடம், "**நீங்கள் குருநாதரின் பாதங்களுக்குக் கீழே தவழும் தூசியாக மாறாவிட்டால் நீங்கள் என்னுடன் இருக்க முடியாது. நீங்கள் அனைவரும் எங்கு வேண்டுமானாலும், நரகத்திற்கும் செல்லலாம்! உங்கள் அனைவரையும் வெளியே அனுப்ப எனக்குத் திடமான மனம் இருக்கிறது**" என்று கூறினார்.

அவர்கள் ஜெய்ப்பூருக்கு வந்ததும் ஒரு நாள் மாலை வேளையில், பாபா பெண் மண்டலியுடன் நகைச்சுவையாகப் பேசினார், **"நாம், பால் மற்றும் பால்காரருடன் கிட்டி நிகழ்த்திய சாகசங்களைப் பற்றி ஒரு புதிய புத்தகத்தை வெளியிடப் போகிறோம். ஒவ்வொரு நாளும் பசுக்கள் (போதுமான) பால் கொடுப்பதில்லை என்பதைப்பற்றி மண்டலி, கிட்டி, பால்காரர் அனைவரும் சிறுபிள்ளைத்தனமாக வாதாடுகிறார்கள். "பின்பு பால்காரர் என்னிடம் திரும்பி, 'இங்கே நீங்கள் மட்டுமே நல்ல மனிதர். பிற அனைவரும் என்னைத் துன்புறுத்துகிறார்கள்!'"** என்றார்.

ஜெய்ப்பூரில் கோரப்புலிகள் ஏராளமாக உள்ளன. அத்தகைய இடத்தில் புலி ஒன்று, சற்று முன்பு, ஒரு மிருகம் அல்லது மனிதனைக் கொன்றதாக, உள்ளூர் முதியவர் ஒருவர் வந்து மண்டலியிடம் ஜாக்கிரதையாக இருக்குமாறு சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு முறை கிருஷ்ணா இதை பாபாவிடம் தெரிவித்தபோது, அதைப் பற்றி சட்டி பாபாவிடம் கேட்க, பாபா அவரிடம் கூறினார். கிருஷ்ணா, மஸ்தை அணுகியபோது, சட்டி பாபா, "எல்லோரும் துண்டு துண்டாக வெட்டப்படுவார்கள்!" என்று கூறினாரே தவிர விவரிக்கவில்லை.

அவர்களின் பங்களாவிலிருந்து ஒரு மைல் தொலைவில் புலி ஒன்று மனிதனைக் கொன்றதாக பாபாவிடம் தெரிவித்தபோது, ஒவ்வொரு மாலையும் ஏழு மணியளவில் அனைத்து கதவுகளையும் மூடி விடுமாறு பாபா பெண்களுக்கு உத்தரவிட்டார். அப்போது அவர் துடுக்கான முறையில், **"நான் புலிகளைப் பொருட்படுத்துவதில்லை, சீடர்களுடன் போராடுவதைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன்!"** என்றார்.

1941, ஜனவரி 9ஆம் நாள், ஜெய்ப்பூரில், பாபா, மிகவும் பிரபலமான **'மெஹர் பாபாவின் போதனையின் ஏழு உண்மைகள்'** (THE SEVEN REALITIES) என்ற கட்டுரையை எழுத்துப்பலகை மூலமாக வழங்கினார்:

**'மெஹர் பாபாவின் போதனைகள், சமய நம்பிக்கை, பிடிவாத கொள்கை, சாதி அமைப்புகள் மற்றும் சமய சடங்கு சம்பிரதாய முறைகள் ஆகியவற்றிற்கு எந்த முக்கியத்துவத்தையும் கொடுக்காமல் கீழ்வரும் ஏழு உண்மைகளைப் புரிந்து கொள்வது இன்றியமையாதது'** என்பதை வலியுறுத்துகின்றன:

1. **'ஒரே உண்மையான வாழ்வு'** (THE ONLY REAL EXISTENCE) **என்பது, ஏக இறைவனின் ஒரே வாழ்வாகும்; அந்த இறைவன், (வரையறுக்கப்பட்ட) ஒவ்வொரு தனிப்படுத்தப்பட்ட ஆத்மாவிலும் 'பரமாத்மா'வாக' உளதாயிருக்கிறார்.**
2. **'ஒரே உண்மையான அன்பு'** (THE ONLY REAL LOVE) **என்பது இந்த ஏக இறைவன் (கடவுள்) மீதான அன்பு, அது உண்மைப்பொருளைக் (கடவுள்) கண்டு, அறிந்து, ஒன்றோடு ஒன்றாக ஐக்கியமாவதற்கான ஆழ்ந்த ஏக்கத்தைத் தூண்டுகிறது.**

3. **‘ஒரே உண்மையான தியாகம்’** (THE ONLY SACRIFICE) என்பது, **இந்த அன்பை அடையும் ஏக்கத்தில், உடல், மனம், பதவி, பொது நலன் அனைத்தையும் மட்டுமின்றி தனிப்பட்ட வாழ்க்கையைக் கூட தியாகம் செய்வதாகும்.**
4. **‘ஒரே உண்மையான துறவு’** (THE ONLY REALRENUNCIATION) **என்பது, உலக கடமைகளுக்கு மத்தியிலும், அனைத்து சுயநல எண்ணங்களையும், ஆசைகளையும் கைவிடுவது.**
5. **‘ஒரே உண்மையான அறிவு’** (THE ONLY REAL KNOWLEDGE) என்பது, **கடவுள் நல்லவர்களிடமும், தீயவர்கள் என்று அழைக்கப்படுபவர்களிடமும், சாது, துறவிகளிடமும் மற்றும் பாவி என்று அழைக்கப்படுபவர்களிடமும் உள்ளளவில் வாழ்கிறார். இந்த அறிவு, சூழ்நிலைகளின் தேவைக்கேற்ப, வெகுமதியை எதிர்பாராமல், அனைவருக்கும் சமமாக உதவி செய்யத் தேவைப்படுகிறது; இந்த அறிவு, ஒரு சர்ச்சையில் பங்கேற்க நிர்பந்திக்கும்போது, பகை அல்லது வெறுப்பின் சிறிதளவு தடயமும் இல்லாமல் செயல்பட உங்களுக்கு உதவுகிறது; இந்த அறிவு, ஒவ்வொருவருக்கும் சகோதர அல்லது சகோதரி உணர்வோடு பிறரை மகிழ்விக்க முயற்சி செய்யத் தேவைப்படுகிறது; இந்த அறிவு, யார் ஒருவருக்கும், சிந்தனை, சொல் அல்லது செயலில் தீங்கு செய்யாதிருக்க, உங்களுக்குத் தீங்கு விளைவிப்பவர்களுக்கும் தீங்கு செய்யாதிருக்க உதவுகிறது.**
6. ‘**ஒரே உண்மையான கட்டுப்பாடு**’ (THE ONLY REAL CONTROL) **என்பது புலன்களின் ஒழுக்கத்தால் அற்ப ஆசைகளில் ஈடுபடாமல் இருப்பதாகும், இது ஒன்றுதான் முற்றிலும் தூய்மையான குணநலன்களை உறுதி செய்கிறது.**
7. **‘ஒரே உண்மையான சரணடைதல்’** (THE ONLY SURRENDER) என்பது, **எந்தவொரு பாதகமான சூழ்நிலையிலும் மன சமநிலையைப் பாதுகாப்பது, மேலும், தனியொருவர், ஒவ்வொரு வகையான கஷ்டங்களுக்கு மத்தியிலும், கடவுளின் விருப்பத்திற்கு முழுமையான அமைதியுடன் அடிபணிகிறார்.**

இந்த ‘ஏழு உண்மைகள்’ எனும் பாபாவின் உரை, குறிப்பாக தனி சிறப்பும், முக்கியத்துவமும் வாய்ந்தது, ஏனெனில், முதன்முறையாக, ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு, பின்னர் அவர்கள் வாழ்ந்த இடமெல்லாம் விநியோகிக்கும் நோக்கத்தில், பாபா, இந்தியா முழுவதிலும் வாழும் தனது சீடர்களுக்கும் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கும் அனுப்பி வைத்தார். பெங்களூரில் இருந்த டாக்டர் கனி, ஆதி சீனியர் இருவரும் அதை அச்சிட்டு, விநியோகம் செய்யும் பணியின் தலைமை பொறுப்பாளர்களாக இருந்தனர், இந்த உரையின் ஆயிரக்கணக்கான பிரதிகள் 1941ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில் இந்தியா முழுவதும் விநியோகிக்கப்பட்டு ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும்

அனுப்பப்பட்டன. பாபாவின் மண்டலி இந்தியாவின் பல்வேறு நகரங்களுக்குச் சென்று, குறிப்பாக, கோயில்கள், மசூதிகள், ஆசிரமங்கள் மற்றும் தேவாலயங்களில் பொறுப்பான நபர்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

கெய்மாய், மனு, மெஹரு, மெஹர்வான், எரச் ஆகியோரை ஜனவரி 14 அன்று குலாமாசி ஸட்டா மற்றும் ஸர்வருடன் பாபா, பெங்களூருக்கு அனுப்பி வைத்தார். எரச், 'ஏழு உண்மைகள்' - உரையைப் பெருமளவில் விநியோகிக்க டாக்டர் கனி மற்றும் ஆதி சீனியருக்கு உதவினார். மெஹரு, நாகு இருவரும் நாசிக் நகருக்குத் திரும்பிச் சென்றனர்.

குஜராத், கத்தியாவார் (KATHIAWAR), கிர்னார் (GIRNAR) போன்ற மலைகளில் வாழும் மஸ்துகளைத் தொடர்புகொள்ள, மெஹர் பாபா அதே நாளில் பிற்பகல் நான்கு மணிக்கு குஸ்தாஜி, ஸவக் (ஸவக், மெஹராபாத்திலிருந்து வந்திணைந்தார்) ஆகியோருடன் ஜெய்ப்பூரிலிருந்து புறப்பட்டார். காக்கா அவர்களுடன் அஹமதாபாத்தில் இணைந்தார்; பாபா அஹமதாபாத், ராஜ்கோட் (RAJKOT), மோர்வி (MORVI), ஜூனாகட் (JUNAGADH), ஜாம்நகர் (JAMNAGAR) மற்றும் துவாரகா (DWARKA) நகர்களில் வாழும் மஸ்துகளைத் தொடர்பு கொண்டார்.

இரண்டு மஸ்த் தொடர்புகள் குறிப்பாக, சுவாரஸ்யமானவை. ராஜ்கோட்டில், பாபா ஒரு சாது மஸ்தைத் தொடர்பு கொண்டார், அவரை பாபா, மக்கிவாலா பாபா (MAKKHIWALA BABA) என்றழைத்தார். அவர் ஒரு விசித்திரமான ஆனால் சிறப்பான மஸ்த், அவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல ஆண்டுகளாக அமர்ந்திருந்தார். இதைக் கேட்க, வெறுப்பூட்டும் மனம் ஒவ்வாத ஒன்றாக இருக்கலாம், ஆனால் அவரது உடலில், அதைப் பார்க்க முடியாத அளவிற்கு ஆயிரக்கணக்கான ஈக்கள் (MAKKHI - 'மக்கி' - இந்தி மொழியில்) மொய்த்துக் கொண்டிருந்தன; எனவே 'மக்கிவாலா' எனும் செல்லப்பெயர்.

ஜாம்நகரில், கோட்வாலா பாபா (COATWALLA BABA) என்ற பெயரில் அழைக்கப்பட்ட அந்தப் பகுதியின் ஆன்மீகப் பொறுப்பாளருடன் பாபா கலந்துரையாடினார். இந்த மகத்தான மஸ்த் பல கோட்டுகளை அணிந்திருந்தார், அவற்றை ஒருபோதும் அகற்றியதில்லை. அவர் தனியாக ஒரு கல்லறைக்கு அருகில் வாழ்ந்து வந்தார். பாபா, அருகில் அமைந்த காட்டுப்பகுதி ஒன்றில் இரண்டாவது முறையாக அவரை சந்தித்தபோது, சாது, பாபாவின் முன்னால், "நான் காடுகளில் கடவுளைக் கண்டேன்!" என சத்தமாக அழுதார்.

ராஜ்கோட்டில் பாபா, மஸ்த் சுற்றுப்பயணம் செய்த வேளையில், ஒரு நாள் அவர் கழிவறையில் அமர்ந்திருந்தபோது, ஸவக் காவல்புரிந்தார்; 'நான் பாபாவின் மலக்கழிவை உட்கொண்டால், நிச்சயமாக ஆன்மீகப் பாதையில் பெரும் முன்னேற்றம் அடைவேன்' என்ற எண்ணம் அவர் மனதில் அலைமோதியது. குருநாதரின் வட்டத்தில் ஸவக் புதிதாக இணைந்தவர், அனுபவம் இல்லாதவர், உபாஸனி மஹாராஜ் அத்தகைய செயலைச் செய்வது பற்றி அவர் படித்த ஒரு புத்தகத்திலிருந்து இந்த விசித்திரமான யோசனையை

மனதில் கொண்டார். பாபா, இயற்கையின் அழைப்பை முடித்ததும், அவர் ஸவக்கை அழைத்து, ஒரு எச்சரிக்கை கலந்த தொனியில் அவருக்கு அறிவுறுத்தினார், "**இந்தக் கழிவறையை நன்கு சுத்தம் செய்யுங்கள், ஆனால் நினைவில் கொள்ளுங்கள்: சிறிதளவு கழிவேனும் உங்கள் கைகளைத் தொடாமல் பார்த்துக் கொள்ளுங்கள், தேவையானால் ஒரு துடைப்பத்தைப் பயன்படுத்துங்கள்; இல்லையேல் நீங்கள் ஒரு தொழுநோயாளியாக மாறுவீர்கள்!**"

ஸவக் வாயடைத்துப் போனார், அத்தகைய பிராயச்சித்தத்திற்கான அவரது விருப்பம் நிறைவேறவில்லை. அவரது எண்ணங்களை பாபா அறிந்திருந்தார், மேலும் குருநாதரின் விருப்பங்களை நிறைவேற்றுவதே சிறந்தது என்றும், எதையேனும் சுயமாக 'அடைய' முயற்சிக்கக்கூடாது என்பதையும் ஸவக் அறிந்து கொண்டார்!

1941, ஜனவரி 24 அன்று ஜெய்ப்பூருக்குத் திரும்பிச் சென்று, பாபா, பெண் மண்டலிக்குத் தனது பயணத்தைப் பற்றி விவரித்தார்:

**நாங்கள் பத்து நாட்களில் பன்னிரண்டு நகரங்களுக்குச் சென்றோம், நான் பதினேழு மஸ்துகளை நீராட்டினேன். இந்த சுற்றுப்பயணத்தின் போது, நாங்கள் ஒவ்வொரு இரவையும் ரயிலில் கழித்தோம், மிகவும் வறியவர்களைப் போல வாழ்ந்தோம், வறுத்த சுண்டல், ஆப்பிள் போன்றவற்றை உண்டோம். நாங்கள் மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டிகளில் பயணித்தோம், 30 பேருக்கான பெட்டியில் 60 பேர் பயணம் செய்தனர். எவரும் என்னை அடையாளம் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று நான் நினைத்தேன், ஆனால் கத்தியாவார் ரயில் நிலையத்தில் இறங்கும்போது, ஒருவர்** (இந்து) **வந்து எனது தரிசனத்தைப் பெற்றுக் கொண்டார். எனவே,** (அங்கிருந்து) **ஒவ்வொரு முறை ரயில் நிறுத்தப்பட்டபோதும் நான் முகத்தை மூடிக்கொள்ள வேண்டியதாயிற்று.**

**ஆனால் இந்தப் பயணத்தின் போது என்னை மிகவும் மகிழ்வித்தவர் நம் 'கொழுத்தவர்'** (காக்கா). **நாங்கள் அனைவரும் சளி பிடித்து அவதிப்பட்டோம், ஆனால் கொழுத்தவர் தனது குரலை முற்றிலுமாக இழந்துவிட்டார்! அவரால் கிசுகிசுக்க மட்டுமே முடிந்தது, ஆனால் அதை அவர் இடைவிடாமல் செய்தார். நான் அமைதியாக இருந்தேன், என்னைப் போல, குஸ்தாஜியும் பேசவில்லை; எங்களில் ஒருவரால் மட்டுமே** (ஸவக்) **பேச முடிந்தது, ஆனால் அவர் பொருட்களை கவனிப்பது, பயணச் சீட்டுகளை வாங்குவது, மற்றும் பிற விஷயங்களில் மும்முரமாக இருந்தார். எனவே, இரண்டு மௌனிகளுக்கு மத்தியில் மூன்றாவதாக, இந்தக் கொழுத்தவர் - அதை நான் மிகவும் வேடிக்கையாக உணர்ந்தேன்.**

**இந்தப் பத்து நாட்களில் பதினேழு மஸ்துகளைத் தொடர்பு கொண்டோம். ஒருவர் மிகவும் உயர்ந்த நிலையில் நிர்வாணமாக இருந்தார்; கடந்த 40 ஆண்டுகளாக ஒரே இடத்தில் அமர்ந்திருந்தார். கோடிக்கணக்கான**

**ஈக்கள் அவர் உடலை மொய்த்த வண்ணம் அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருந்தன. ஆனால் அவர் மிகவும் வலிமையாகவும், திடகாத்திரமாகவும் இருந்தார்; பெயர் பாபு (நான் அவரை 'மக்கிவாலா பாபா' என்று அழைத்தேன்).**

பின்பு, போரைப் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், மெஹர் பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**எல்லோரும் இப்போது ஒருவரை ஒருவர் கொலை செய்கிறார்கள். மார்ச் முதல் இது அதிகரிக்கும். கொலை செய்வதைத் தவிர, வெள்ளம், பூகம்பங்கள், தீ, பஞ்சம், நோய்கள் போன்றவையும் இருக்கும் - இவை அனைத்தும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இயற்கை அவர்களைக் கொல்கிறது, மேலும் ஒருவரை ஒருவர் கொலை செய்கிறார்கள். கடவுள் இதையெல்லாம் செய்கிறார். ஏன்?**

**தீமையின் வேர் மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளது, கடுமையான மற்றும் உலகளாவிய பரிகாரத்தைப் பயன்படுத்தாவிட்டால், அதைப் பிடுங்க முடியாது. இது ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் தகர்க்கப்பட வேண்டும், அப்போதுதான் அதை அழிக்க முடியும். பின்னர், உண்மையான அமைதியும், மகிழ்ச்சியும் நிரந்தரமாக இருக்கும். இது தானாக நிறுவப்படும். மக்கள் ஒருவரையொருவர் நேசிக்கவும், ஒருவருக்கொருவர் உதவவும் கற்றுக்கொள்வார்கள்.**

**மிகப் பெரிய பாவிகள் புனிதர்களாக மாறுவது எப்படி? ஏனெனில் அவர்களின் தவம், பிராயச்சித்தம் மிகவும் கடுமையானதும், முழுமையானதும் ஆகும். எனவே இயல்பான உருமாற்றம் உண்மையானதும், நிறைவானதாகவும் இருக்கும்.**

**உலகம் பரிதாபமானது. இந்தியாவும், போரில் நேரடியாக ஈடுபடவில்லை என்றாலும், பரிதாபகரமான நிலையை சந்திக்கிறது.**

1941 ஜனவரி 26 அன்று பாபா, மீண்டும் பெண் மண்டலியிடம் **'உத்தரவுகளின் பட்டியலுக்கு, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வரை, புத்துணர்வோடு கூடிய வைராக்கியத்துடன் கீழ்ப்படிவதற்கான, எழுத்துப்பூர்வ வாக்குறுதியில் கையெழுத்திடுமாறு'** கேட்டுக்கொண்டார். பாபா பின்னர் இவ்வாறு கூறினார்:

**வெளியுலகில் வாழும் அனைத்து அன்பர்களும் கட்டளைகளைப் பின்பற்றுவார்கள் என்று நான் நம்புகிறேன், ஆனால், எனது உள் வட்ட அன்பர்களைப் பொறுத்தவரை அந்த நம்பிக்கை எனக்கு இல்லை. அடுத்த 20 நாட்களுக்கு, உங்கள் மனநிலையை நீங்கள் சிறப்பாக, சீராக வைத்திருக்க வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும், நிபந்தனைகளின் பேரில், நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு, மனநிலையை இழக்கக்கூடாது, ஆனால் எப்போதும் மகிழ்ச்சியாகவும் புன்னகையுடனும் இருக்க வேண்டும். இது எனக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும்.**

**மக்கள் போரில் இணைந்து, போராடி, காயமடைந்து, சொல்லமுடியாத கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் - ஆனால் ஒப்பீட்டு முறையில் இது எளிதானது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் உங்கள் சீரான மனநிலையை இழந்துவிடாமல், ஒருபோதும் கவலைப்படவோ, சோகமாகவோ இருக்காமல், இனிமையாகவும் அன்பாகவும் பேசி, ஒருபோதும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல், எவரேனும் உங்கள் சப்பாத்தியைத் திருடும்போது உணர்ச்சிவசப்படாமல் ஆனால் உங்கள் ஆழ் இதயத்தில் அமைதியை நிலைநாட்டி 'பாபா உங்களை ஆசீர்வதிப்பாராக!' என்று கூறுவது மிகவும் கடினம். தன்னைத்தானே கட்டுப்படுத்துவது நெருப்பு அல்லது கண்ணாடி மீது நடப்பதை விட மிகவும் கடினமானது. உலக நாடுகளின் போரை வெல்வது எளிது, ஆனால் உங்கள் சுயத்தை வெல்வது மிகவும் கடினம். இந்த ஆன்மீகப் பாதையின் ஒரே உண்மையான விஷயம் இது. அமைதியான மனநிலையைக் கொண்டிருக்க, அனைத்தையும் பொறுமையாக விழுங்கிவிடுங்கள். ஸுஃபிகள் இதை 'ஜப்த்' (ZABT - கட்டுப்பாடு) என்று அழைக்கிறார்கள்.**

**எனது தாயார் இப்போது எனக்கு மிகவும் உதவுகிறார். பிறர் தம்மைத்தாமே கட்டுப்படுத்த, ஏராளமான வாய்ப்புகளை அவர் வழங்குகிறார். நீங்களே உங்களை வெல்லும்போது மிகப் பெரிய போரை வென்று விடுகிறீர்கள். அவர் (ஷிரீன்மாய்) வரும் வேளையில், உங்களைக் கட்டுப்படுத்த உங்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும். உதாரணமாக, சில நேரங்களில் அவர் மீது கொலைவெறி வருவதைப் போல் உணர்கிறேன், ஆனாலும் நான் அவரை அன்பாக ஏற்றுக்கொள்கிறேன். நீங்களும் அவ்வாறே செய்ய வேண்டும்.**

பாபா மீண்டும் மீண்டும் கூறினார்: **"கிறிஸ்து கூறியது போல், 'உலகம் முழுவதையும் உடைமையாக்கி, தனது ஆத்மாவை இழக்கும் மனிதனுக்கு என்ன நன்மை கிடைக்கும்?'** நான் சொல்கிறேன்: **'போர்களை வெல்வது எளிது, ஆனால் சுயத்தை வெல்வது கடினம்.' இரண்டும் ஒரே பொருளைத்தான் குறிக்கிறது."**

பின்னர், அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் குவெட்டா பயணம் குறித்து விவாதித்தனர். நீலப்பேருந்து மற்றும் கார்களில் அங்குச் செல்ல முடிவு செய்யப்பட்டது. பெட்டி படுக்கைகளை பற்றிய விவாதம் நடைபெற்ற வேளையில், நீலப்பேருந்து பயணங்கள் தொடங்கிய நாளிலிருந்து இந்தக் கடமை முழுவதையும் செய்து வந்த ரானோ, தான் அதைத் தொடருவதாகக் கூறினார். அனைத்திற்கும் தீர்வு கண்ட பின்னர், பாபா இவ்வாறு கேலி செய்தார்:

**உங்களில் ஆறு பேர் உயிரைத் துறந்து விடுவார்கள். ஸில்லாவுடன் நாம் அவரது விசிறியையம் சேர்த்து அடக்கம் செய்வோம்; பானுபாயுடன் அவரது மூக்குப்பொடி பெட்டகம்; நோரினாவுடன் அவரது தட்டச்சு இயந்திரம்; மற்றும் நதியாவுடன் அவரது நோட்டுப்புத்தகம். நீங்கள் ஜோடி ஜோடியாக**

**இறப்பீர்கள் - மாசி மற்றும் காக்குபாய்; கர்மான் மாசி மற்றும் பானு; நோரினாவும் எலிஸபெத்தும்!**

**குவெட்டா செல்லும் வழியில், நாம் சில புதிய இடங்களைப் பார்வையிடச் செல்வோம். ஆனால் குவெட்டாவில், வேறு இடங்களைப் பார்வையிட நேரமிராது. அங்கே நான் ஏகாந்தவாசம், உபவாசம் இருந்து, அவதார புருஷர் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்வேன். உங்கள் பெட்டி படுக்கைகளை, பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் தயாராக வைத்துவிடுங்கள். பின்பு, ஜெய்ப்பூரிலிருந்து புறப்பட்டு, ஒருவேளை நீங்கள் அனைவரும் ரஷ்யர்களால் கடத்தப்படலாம், புதைக்கப்படலாம் அல்லது குண்டு வீசப்படலாம்; அந்த இடத்திற்கு நாம் செல்வோம்!**

அப்போது பாபா கேட்டார், **“மெஹர் பாபா யார் என்று எவரேனும் உங்களிடம் கேட்டால், நீங்கள் என்ன சொல்வீர்கள்?”**

“கடவுள்!” நதீன் பதிலளித்தார்.

நோரினா, “இறை-மனிதன்!” என்றார்.

பாபா அதற்கு ‘**ஆமாம்**’ என்று கூறி **“கடவுள் (இறைவன்) அல்ல, ஆனால் இறை-மனிதன். இறை-மனிதன் இறைவனை விட மிகையானவர்! பரிபூரணமானவர் இறைவன். பரிபூரணத்தை வெளிப்படுத்துபவர் இறை-மனிதன்.**

**“கடவுளுடன் ஒன்றோடு ஒன்றாக ஐக்கியமானவர் மனித-கடவுள்; கடவுள் என்று மட்டும் சொல்வது தவறு. ஜீவாத்மா = மனிதன்; மஹாத்மா = ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்; பரமாத்மா = கடவுள். ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாகும்போது, அது ஷிவாத்மா என்று அழைக்கப்படுகிறது. பரமாத்மாவை, ஷிவாத்மா என்று அழைக்க முடியாது.”**

1941 ஜனவரி 27 திங்கட்கிழமை அதிகாலையில், எலிஸபெத்தின் காரில் பாபா ஆல்வார் (ALWAR) கிராமத்திற்குச் சென்று மஸ்துகளைத் தொடர்பு கொண்ட பின்பு, மதியம் 1:20 மணிக்குத் திரும்பி வந்தார். அந்த நாளின் பிற்பகுதியில், அவர் பெண் மண்டலிக்கு விளக்கினார்:

**இன்று, எனது பணி ஐந்தே நிமிடங்களில் நிறைவுற்றது. மிகவும் பிரபலமான, ‘யாஸின்’ (YASIN) என்றழைக்கப்படும் 45 வயதான மஸ்த், ஒரு வணிகரின் வீட்டில் தங்கி இருக்கிறார்.**

**பைத்தியக்காரத்தனத்தில் இரண்டு வகைகள் - முதலாவதாக, பணத்துக்காகவும் பெண்களுக்காகவும் பைத்தியம் பிடித்து அலையும் உலகவாதிகள், அல்லது ஏதேனும் இழப்பு, அதிர்ச்சி காரணமாக, இப்படி மற்றும் பல. மற்றொன்று, இறை பைத்தியம், அவரது மனம் ஆன்மீகப் பாதையில் முடங்கிப் போகிறது; அவர்கள் யோகிகளைப் போன்றவர்கள், ஆனால் குழப்பத்தில் பைத்தியம் ஆனவர்கள்.**

**‘மஸ்த்’ என்றால் போதை என்று பொருள். மஸ்துகள் இறை அன்பின் போதையில் இருப்பவர்கள். கவிஞர்கள் பயன்படுத்தும் ‘மது அருந்துதல்’**

என்ற வெளிப்பாடு, இறை போதையைக் குறிக்கும். (பொதுவாக) மஸ்துகள் மூன்றாவது மற்றும் ஐந்தாவது ஆன்மீகத் தளங்களிலும் சில சமயங்களில் நான்காவது ஆன்மீகத் தளத்திலும் உள்ளனர்; ஆனால் முதல் அல்லது இரண்டாவது ஆன்மீகத் தளங்களில் ஒருபோதும் இருப்பதில்லை. 'வாலி' ஐந்தாவது ஆன்மீகத் தளத்தைச் சார்ந்தவர், ஆனால் அவர் ஒரு மஸ்த் அல்ல. 'மஜ்ஜூப்'களும் ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் இருக்கலாம்.

ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் மஸ்த் இறையன்பின் போதையில் ஆழ்ந்திருக்கிறார். அவர் உலகையோ தன்னையோ பார்ப்பதில்லை, ஆனால் இறைவனோடு ஒன்றிணையும் ஏக்கத்தில் இருக்கிறார். ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் இருக்கும் ஒரு வாலி ஆன்மீகத் தளத்தையும் அவரையும் பார்க்கிறார், ஆனால் ஆன்மீகத் தளத்துடன் பற்றற்ற முறையில், ஈடுபாடு எதுவுமின்றி கடவுளுடன் ஒன்றிணைவதற்காக ஏங்குகிறார்.

ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட ஒரு மஜ்ஜூப் அந்தத் தளத்துடன் ஒன்றாக இருக்கிறார்; ஏழாவது ஆன்மீகத் தளத்தின் மஜ்ஜூப் கடவுளுடன் ஒன்றாக இருக்கிறார். அவர் 'கீழே, இப்பூவுலகிற்குத் திரும்பி வந்தால்' அவர் குதுப், சத்குரு, மனித-கடவுள் என்றழைக்கப்படுகிறார்.

ஆறாவது ஆன்மீகத் தளத்தில் இருப்பவர் 'பீர்' என்று அழைக்கப்படுகிறார். அவர் எல்லா இடங்களிலும் தன்னைப் பார்க்கிறார், முழு உணர்வுடன், கடவுளோடு ஐக்கியமாக ஏங்குகிறார்.

எனவே வெவ்வேறு ஆன்மீகத் தளங்களில் நிலைகொள்ளும் ஆத்மாக்களை இவ்வாறு வகைப்படுத்தலாம்:

மஜ்ஜூப்கள் - 5, 6 அல்லது 7ஆவது ஆன்மீகத் தளம்.

பீர்கள் - 6ஆவது ஆன்மீகத் தளம்.

வாலிக்கள் - 5ஆவது ஆன்மீகத் தளம்.

மஸ்துகள் - 3ஆவது, 4ஆவது அல்லது 5ஆவது ஆன்மீகத் தளம்.

இறை-பைத்தியம் - 1 அல்லது 2 வது ஆன்மீகத் தளம்.

மற்றும் உலக பைத்தியம் - பூஜ்ஜிய ஆன்மீகத் தளம்!

மூன்றாவது மற்றும் நான்காவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையில், ஐந்தாவது மற்றும் ஆறாவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையில், மேலும் ஆறாவது மற்றும் ஏழாவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையில், 'முக்கம்-இ-ஹெய்ரத்' (MUKAM-E-HAIRAT) என்றழைக்கப்படும் நிலைகள் உள்ளன, அங்கு ஆத்மாக்கள் மதிமயங்கிய நிலையில் இருக்கிறார்கள் (ஆழ்ந்த தெய்வீக மதிமயக்கத்திற்குள் நுழைகிறார்கள்).

மார்கரெட் போதையில் இருக்கும்போது, அவர் என்ன அனுபவிக்கிறார்? உலகக் கவலைகள் அவருக்கு நினைவிருக்கிறதா? அவர் எதையுமே கண்டுகொள்வாரா? இதேபோல், இறை-அன்பின் போதையில் இருக்கும் மஸ்த் எதையும் கண்டுகொள்வதில்லை, எதையும் பார்ப்பதில்லை. மஜ்ஜூப், ஆன்மீகத் தளத்துடன் ஒன்றோடு ஒன்றாக ஒன்றி இருப்பதால்,

**அவர் அதில் மூழ்கி விடுகிறார். பைத்தியம், இறை-பைத்தியம், மஸ்த், மஜ்ஜூப், வாலி - அனைவரும் ஒரே மாதிரியாகச் செயல்படும்போது நீங்கள் அவர்களை எவ்வாறு வேறுபடுத்த முடியும்?**

**ஒரு முறை நான் 'ஸொல்டூனின் சகோதரி'யை ஒரு மஸ்திடம் அனுப்பியபோது, அவருக்கு பதிலாக அவர் ஏழு உலக பைத்தியக்காரர்களுடன் திரும்பி வந்தார்! ஒரு சாதாரண பைத்தியக்காரன், சாதாரண குடிகாரன் இவர்களை எவ்வாறு வேறுபடுத்துகிறீர்கள்? குடிகாரன் தள்ளாடுகிறான், பைத்தியம் அவ்வாறு இல்லை. தடுமாறும் நிலையில் இருப்பவர் குடிபோதையில் இருப்பதற்கான அறிகுறியாகும்.**

**பைத்தியமும், மஸ்தும் ஒரே மாதிரியாகச் செயல்படுகின்றனர், ஆனால் சில சைகைகள் மற்றும் அறிகுறிகள் உள்ளன. இங்கே இருக்கும் மஸ்த் கற்களையும் அசுத்தங்களையும் கடித்து வீசுகிறார், ஆனால் அவர் ஒரு சிறப்பான மஸ்த், பைத்தியம் அல்ல. கடவுளுடன் ஒன்றோடு ஒன்றான ஏழாவது ஆன்மீகத் தளத்தில் இருக்கும் மஜ்ஜூப் கூட அப்படிச் செயல்படுகிறார். ஆனால் அவர்கள் அனைவரும் குழந்தைகளைப் போன்றவர்கள்; அவர்கள் பைத்தியம், பேய்த்தனம் இரண்டையும் ஒன்றாகக் கொண்டவர்கள். அவர்கள் தேவைப்படும்போது மட்டுமே வெளியுலக மக்களைக் கவர்கின்றனர். இல்லையெனில், அவர்கள் நிலக்கரி குவியலில் மறைந்திருக்கும் நகை போல் இருக்கின்றனர்!**

1941 ஜனவரி 28ஆம் நாள் காலை ஏழு மணியளவில், பாபா மீண்டும் ஜெய்ப்பூரிலிருந்து எலிஸபெத்தின் காரில் ஆல்வார் மாவட்டத்தில் மஸ்த் தொடர்புக்காகப் புறப்பட்டார். குஸ்தாஜி, சாஞ்சி இருவரும் உடன் சென்றனர். சந்திப்புகளை ஏற்பாடு செய்யவும், மஸ்துகளின் இருப்பிடங்களை அறிந்து கொள்ளவும், பாபா வந்ததும் உடனடியாக அவர்களிடம் அழைத்துச் செல்ல வேண்டிய முன் ஏற்பாடுகளை கவனிக்கவும், ஸவக், மூன்று மணி நேரத்திற்கு முன்னதாகவே அனுப்பப்பட்டார்.

ஆல்வாரில், பாபா, ஐந்து மஸ்துகளைத் தொடர்புகொண்டு, முற்றிலும் தனிமையாக இருக்கும் சூழ்நிலையை விரும்பினார்; மண்டலியை தொலை தூரத்தில் நிற்கும் படியும், பாபா பணிபுரிவதைப் பார்க்கக்கூடாது எனவும் அறிவுறுத்தினார். ஒரு மஸ்தைத் தொடர்பு கொள்ள, அவர்கள் நகருக்கு வெளியே மூன்று மைல் தூரம் சென்று, பின்பு, பாபா பாலைவனத்தின் வழியாக மேலும் நான்கு மைல் தூரம் நடக்க வேண்டியிருந்தது. ஆனால், அவர், தனது பணியைச் செவ்வனே செய்து முடிக்கும் அதீத ஆர்வத்தில் இதையும் உற்சாகமாகச் செய்தார்.

அந்த நீண்ட நெடிய தொலைதூரம் நடந்து சென்று, சோர்ந்து போனாலும், அவர் புன்னகைத்தபடியே திரும்பினார், அவரது பணி வெற்றிகரமாக முடிக்கப்பட்டதில் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்.

ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட 'ஜமாலி' மஸ்த் 'கோகலே பாபா'வைத் (JAMALI MAST, GOKHALE BABA) தொடர்பு கொள்ள ஆல்வாரிலிருந்து பாபா மண்டலியுடன் இஸ்மாயில்பூருக்குச் (ISMAILPUR) சென்றார். வழியைக் கண்டுகொள்வதில் ஏற்பட்ட பல தவறான திருப்பங்கள் மற்றும் குழப்பங்களுக்கு மத்தியில், கிராமத்தின் புறநகரில் அமைந்த ஒரு சிறிய கோவிலில், அந்த மஸ்தை, பாபா தொடர்பு கொள்ள முடிந்தது. 100 ஆண்டுகளுக்கும் மேலான பழம்பெரும் துறவி, பெரிதும் போற்றப்பட்ட அவர், அந்த எளிமையான கோவிலில் ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட நாய்களுடன் வாழ்ந்து வந்தார். கோகலே பாபா அவர்களின் கடைசி சந்திப்பில் மெஹர் பாபாவைப் பார்த்து, "கடவுள் வந்துவிட்டார்" என்ற வார்த்தைகளுடன் வரவேற்றார்.

1941 ஜனவரி அல்லது பிப்ரவரியில் வேறு ஒரு சந்தர்ப்பத்தில், ஜெய்ப்பூரின் ஆன்மீகப் பொறுப்பாளரான 'நங்கா பாபா'வுடன் மெஹர் பாபா தொடர்பு கொண்டிருந்தார். இந்த மகத்தான மஸ்தும், துறவியும் ஜெய்ப்பூரின் புறப்பகுதியில் அம்பர் கிராமத்தில் வசித்து வந்தார்; அவரை பாபாவிடம் அழைத்து வர, எரச் அங்குச் சென்றார். நங்கா பாபாவுடனான சந்திப்பைப் பற்றிய எரச்சின் குறிப்பு பின்வருமாறு:

அவர் முற்றிலும் நிர்வாணமாக இருந்தார், மேலும் வளைந்த குச்சி ஒன்றில் கிழிந்த கந்தை துணியைச் சுற்றிக் கட்டியிருந்தார். அவர் அம்பர் அரண்மனைக்கு எதிரில் அமைந்த மலையில் வசித்து வந்தார்; ஒவ்வொரு காலையிலும் அம்பர் கிராமத்திற்கு நடந்து சென்று, ஒரு கடைக்காரரிடமிருந்து சில இனிப்பு பண்டங்களை வாங்கிவிட்டு, யாரிடமும் பேசாமல், தனது இருப்பிடத்திற்குத் திரும்புவது வழக்கம். மலையின் பாதி வழியில், ஒரு சிறிய கோவிலருகில் இருந்த நீரூற்றில், கைகளைக் கழுவி, இனிப்புகளை உண்டு நீரும் அருந்தி, பின்பு மலை உச்சிக்கு மீண்டும் நடந்து சென்றார்.

இந்தச் சிறிய கோவிலில், ஒவ்வொரு நாளும், தனது உணவை உண்டு களிப்புற்ற பின்பு, மணற் பந்துகளை உருவாக்கினார். இந்த 'மணற் பந்துகள்' எதற்காக என்று நான் அவரிடம் கேட்டபோது, இந்த 'நெருப்புப் பந்துகளை' உலகின் பல்வேறு பாகங்களில் உள்ள பெரிய நகரங்களில் வீசும்படி கட்டளையிடப்பட்டுள்ளதாக அந்த மஸ்த் என்னிடம் கூறினார், இதன் காரணமாக அவர் மிகவும் மும்முரமாக இருந்ததால், (மெஹர் பாபாவைப் பார்க்க) என்னுடன் வர முடியவில்லை என்றும் கூறினார்.

நான், அப்போது அந்த வளைந்த குச்சி எதற்காக என்று கேட்டேன்; அதற்கு அவர் அந்தக் குச்சி மற்றும் பழைய கந்தல்களின் முடிச்சுகள், 'நெருப்புப் பந்துகளை' வீசும் நகரங்களை நோக்கி, சரியான இலக்கைக் குறி வைக்க உதவியாக இருக்கும் என்று பதிலளித்தார். அதற்குப் பிறகு, மிகவும் கண்டிப்பான வார்த்தைகளில் அவர் என்னை அங்கிருந்து வெளியேறச் சொன்னார், ஆனால் அவர் ஒரு நாள் ஜெய்ப்பூருக்கு வரும் வேளையில் மெஹர் பாபாவுடன் தொடர்பு கொள்வதாக உறுதியளித்தார். அந்த நேரத்தில் நான் அவரை என்னுடன்

அழைத்துவர இயன்ற வரை முயன்றேன்; ஆனால் அவர் வர மறுத்து, என்னை அறைந்தார்.

எவ்வாறாயினும், சில நாட்களுக்குப் பிறகு, ஜெய்ப்பூரில் பாபா தங்கியிருந்த பங்களாவிற்கு அருகில் அமைந்த சாலை வழியாக நங்கா பாபா நடந்து செல்வதைப் பார்த்த எரச், அவரை இணங்கச் செய்து அருகிலிருந்த சாலை ஓர கேரேஜில் பாபாவுடன் தனிமையில் சந்தித்தார். அவர் அம்பர் நகரை விட்டு ஒருபோதும் வெளியேறாமல் இருந்தாலும், நங்கா பாபா தனது வாக்குறுதியைக் காப்பாற்றினார்.

அதைத் தொடர்ந்து, 1941 ஜனவரியில், பாபா ஜெய்ப்பூரில் சுட்டன் ஷா (CHUTTAN SHAH) என்றழைக்கப்பட்ட மற்றுமொரு மேல்நிலை மஸ்தைத் தொடர்பு கொண்டார். மிகவும் அசுத்தமாகவும், வன்முறைத் தன்மையுடனும் இருந்த இந்த ஜலாலி (கோபக்கார) மஸ்த், நகரத்தின் விபச்சாரிகளின் எல்லைப் பகுதிக்கு அருகில், மிகவும் அவமதிப்புக்குரிய இடத்தில் வசித்து வந்தார். ஒன்று அல்லது இரண்டு நாட்கள் சுட்டன் ஷா, பாபாவின் பங்களாவிற்கு அழைத்து வரப்பட்டார், மேலும் பாபா அவரைத் தனியாக இருக்க அனுமதிக்காமல், மண்டலியில் பல்வேறு உறுப்பினர்கள் அவருடன் இரண்டு மணி நேரம் தொடர்ந்து அமர்ந்திருந்தனர். சுட்டன் ஷா உள்ளூர் நகர மக்களால் பெரிதும் போற்றப்பட்டாலும், அவரது வன்முறை போக்கிற்கு மக்கள் அஞ்சினர்; ஒரு முறை, தலை மீது கல்லை வீசி ஒரு மனிதனைக் கொன்றதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் டான், நீலு இருவருக்கும் காலிகட்டிலிருந்து ஜெய்ப்பூருக்கு நீலப்பேருந்தைக் கொண்டு வர உத்தரவிடப்பட்டது; பாபாவின் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதில் அவர்கள் எண்ணற்ற சிரமங்களை சந்தித்தனர். பேருந்தின் சக்கரங்கள் மற்றும் ரப்பர் குழாய்கள் முற்றிலுமாகத் தேய்ந்து போயின, மேலும் அதை நூற்றுக்கணக்கான மைல்களுக்கு மேல் அந்த நிலையில் ஓட்டிச் செல்வது என்பது மிகவும் சிக்கலான விஷயம். சக்கரங்களைப் பழுதுபார்க்க டான் பேருந்தை அடிக்கடி நிறுத்த வேண்டியிருந்தது. ஒரு முறை, பழுதான சக்கரத்திற்குள்ளே போர்வைகளைத் திணித்து அதைப் பழுது பார்க்கும் இடம் வரை சிரமப்பட்டு ஓட்டவேண்டியதாயிற்று. ஒரு கட்டத்தில், பின் சக்கரங்கள் கழன்று விழுந்தன. அவர்கள் பேருந்தை நிறுத்தும் போதெல்லாம், மக்கள் கூட்டம் விசித்திரமான வாகனத்தை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது - பயணிகள் இல்லை; ஆனால் வழக்கத்திற்கு மாறான அனைத்து பொருட்களும் பேருந்தில் நிரம்பி வழிந்தன! சில நேரங்களில் டான் பேருந்தைக் கழுவி சுத்தம் செய்ய வேண்டியிருந்தது. வழியில் கிடைக்கப்பெற்ற எதையேனும் சிறிதளவில் உண்டு சமாளிக்க வேண்டிய சூழ்நிலை. இத்தனை சிரமங்களையும் தாண்டி, டான், நீலு இருவரும் டிசம்பர் இறுதியில் ஜெய்ப்பூருக்குப் பேருந்தைக் கொண்டு வந்தனர்; பாபா அவர்களைப் பார்த்து பெரு

மகிழ்ச்சி அடைந்தார். பின்னர், இருவருக்கும் மண்டலியின் உடல்நிலையை கவனிக்கும் கடமை வழங்கப்பட்டது.

ஆண்டின் இந்த நேரத்தில், ஜெய்ப்பூரில் ஈக்களின் தொந்தரவு மிகையாக இருந்தது. திரள் திரளாக ஈக்கள், குறிப்பாக உணவு நேரங்களில், உணவை உண்ண விடாமல் தடுக்கும். எலிஸபெத் கொசு வலையின் உள்ளே அமர்ந்து உண்டார். மார்கரெட் தனது கால் விரலில் தேனைப் பயன்படுத்தினார், அதனால் ஈக்கள் அங்கு ஈர்க்கப்பட்டு, அவரை நிம்மதியாக உணவு உண்ண அனுமதித்தன. கடைசியாக டான், நீலு இருவருக்கும் ஈக்களைப் போக்க ஏதாவது ஒரு வழியைப் பற்றி சிந்திக்குமாறு பாபா வலியுறுத்தினார்; மூளையைச் செலவிட்டு எவ்வளவோ முயன்றும், ஒவ்வொரு திட்டமும் தோல்வியை சந்தித்தது.

ஜெய்ப்பூரில் இருந்த வேளையில், இராணுவத்தில் சேவை புரிய ஒரு நேர்காணலில் பங்கெடுக்குமாறு டான் ஓர் அறிவிப்பைப் பெற்றார்; அவர் தற்காலிகமாக ஹைதராபாத்திற்குப் புறப்பட வேண்டியிருந்தது. மார்ச் 1ஆம் நாள், பூனா ராணுவ அலுவலகத்தில் ஆஜராகுமாறும் உத்தரவு வந்தது. அவரது போர்க்கால பணிக்காக பூனா, ஸெக்கந்திராபாத் மற்றும் பெங்களூர் போன்ற இடங்களின் ராணுவ முகாம்களில் இருக்க வேண்டும் (அங்கு அவர் இத்தாலிய போர் கைதிகளுக்காக, 160 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார், ஏனெனில் அவர் இத்தாலிய மொழி அறிந்தவர்). டான் விடுமுறை நாட்களில் பாபாவை சந்திக்க வந்தார்.

இந்தக் காலகட்டத்தில், டெல்லியைச் சேர்ந்த கேக்கி - (கைகோபாத் - KAIKOBAD) அர்தேஷீர் தேசாய் (KEKI ARDESHIR DESAI), 29 வயது இளைஞர், மெஹர் பாபா ஜெய்ப்பூரில் தங்கியிருந்த செய்தியை 'மெஹர் பாபா' ஜர்னலின் ஜனவரி 1941 இதழ் வழியாக அறிந்துகொண்டார். பிப்ரவரி 1ஆம் தேதி பாபாவை சந்திக்க அவர் அங்கு வந்தார். அவர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நவ்ஸாரியில், பாபாவின் பக்தர்களில் ஒருவரான தனது சகோதரர் ஆதேர் தேசாய் (ADER DESAI) மூலமாக பாபாவைப் பற்றி அறிந்திருந்தார். கேக்கி ஜெய்ப்பூர் பங்களாவிற்கு வந்தபோது, பாபா, சட்டி பாபாவுடன் பணிபுரிந்து கொண்டிருந்தார். பாபா இந்தச் செய்தியை நோரினா வழியாக அனுப்பி வைத்தார்: "**நீங்கள் வந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன், ஆனால் நான் ஏகாந்தவாசத்தில் இருப்பதால், அடுத்த ரயிலில், நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ அங்குத் திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**"

ஏமாற்றமாக உணர்ந்தாலும், கேக்கி கீழ்ப்படிந்தார். அவர் இறை அன்பிற்குரியவரை மனித உருவில் சந்திப்பதற்கு மேலும் ஒரு வருடம் பிடித்தது.

ஜெய்ப்பூரில் வாழும் ஏழை எளியவர்களின் பாதங்களைக் கழுவ பாபா விருப்பம் தெரிவிக்கவே, நகரத்தின் குடியிருப்பாளர்களான லாலா சிரஞ்சிலால் அகர்வால் (LALA CHIRANJILAL AGARWAL), சி.ஜி. நாயர் (C.G. NAIR) இருவரும், உண்மையிலே வறியவர்களான 50 பேரை, பாபாவின் பங்களாவிற்கு

அழைத்துவரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். இருவரும் பாபாவின் தரிசனத்தைப் பெற விரும்பினர். ஆனால் பாபா ஏகாந்தவாசத்தில் இருந்ததால் அது சாத்தியமில்லாமல் ஆயிற்று. இருப்பினும், அவர்கள் ஏழைகளுக்கான நிகழ்ச்சியில் பங்கேற்றதால், அப்போது பாபாவைப் பார்க்கும் நல்ல வாய்ப்பைப் பெற முடிந்தது.

அகர்வால், நாயர் இருவரும், 1941, பிப்ரவரி 2 ஞாயிற்றுக்கிழமை ஏழைகளை, பாபாவிடம் அழைத்து வந்தனர். அவர் ஒவ்வொரு நபரின் கால்களையும் கழுவி, தலைவணங்கி, அவர்களுக்கு துணிகளையும் இனிப்புப் பண்டங்களையும் வழங்கினார். இந்த நிகழ்வுகளைப் பார்த்து அகர்வால் வெகுவாக ஈர்க்கப்பட்டார்; பின்னர் அவர் சாஞ்சியிடம் இவ்வாறு கூறினார்:

என்ன ஒரு மகத்துவத்தின் மொத்த உருவம்! என்னிடம், தண்ணீரை ஊற்றி, பாபாவின் கைகளில் சோப்பைக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது, ஆனால் என் மனம் முற்றிலும் வெறுமையாகி விட்டதால், எனது கடமையைத் தொடர்ந்து நினைவுபடுத்த வேண்டியிருந்தது. இது போன்ற ஓர் அசாதாரண மகிழ்ச்சியை நான் உணர்ந்தேன், இது தொற்றுநோய் போலப் பரவியது. விவரிக்க முடியாத அவரது அற்புதமான தோற்றத்தால் ஈர்க்கப்பட்டு நான் அவரை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன்.

நான் அந்தப் பரவசத்தில் ஆழ்ந்தபோது, கடந்த காலத்தில் நான் கண்ட அந்தக் காட்சி, அதன் அனைத்து அம்சங்களுடன் என்னிடம் திரும்பி வந்தது. பகவான் கிருஷ்ணர் அகலமான சாலை ஒன்றில் வருவதை நான் கனவில் கண்டேன், அவரைப் பின்தொடர்ந்து அர்ஜுனனும் வந்தார். கிருஷ்ணரின் முகத்தில் நான் கண்ட அதே மகிழ்ச்சியை மெஹர் பாபாவின் முகத்திலும் கண்டேன். பகவான் கிருஷ்ணர் என் முன்னால் நின்று, அவர் வாயைத் திறந்து அர்ஜுனனுக்குக் காட்டிய அந்தப் பிரபஞ்சம் முழுவதையும் எனக்குக் காட்டினார். எனது மகிழ்ச்சியை நான் கட்டுப்படுத்த முடியாமல், எனது கனவிலும், வீட்டிலுள்ள அனைவரையும் பயமுறுத்தும் அளவிற்கு சத்தமாகக் கையைத் தட்டினேன்; அனைவரும் உடனடியாக வந்து என்னவாயிற்று என வினவினர்.

இந்தக் கனவை நான் பல ஆண்டுகளாக நினைவு கூர்ந்ததில்லை. ஆனால் இன்று நான் மெஹர் பாபாவின் முன்னிலையில் நின்றபோது, அது, அதன் எல்லா யதார்த்தத்திலும் திரும்பி வந்தது. நான் முன்னர் உணர்ந்ததை விட இன்று மகிழ்ச்சியாக உணர்கிறேன். தற்போதைய உலக குழப்பத்திற்கு தீர்வு காண்பதில் அத்தகைய மனிதனின் சக்தி நீண்ட தூரம் செல்ல முடியும் என்று என்னால் நம்ப முடிகிறது.

சி.ஜி. நாயரும் நிலைதடுமாறி பின்பு விவரித்தார்:

என்ன ஓர் அற்புதமான மனிதர்! நீங்கள் அவரை விவரிக்க முடியாது! என்ன ஒரு பெருந்தகை, என்ன கருணை... அதை வரையறுக்க முடியாது!

நீங்கள் அனைவரும் அவரிடம் ஏன் திரண்டு வருகிறீர்கள், நீங்கள் அவருடன் எப்படி ஒட்டிக்கொள்கிறீர்கள் என்பதை என்னால் இப்போது புரிந்து

கொள்ள முடிகிறது. அவர் உங்களை ஈர்க்கும் மிகப்பெரிய காந்தம் போன்றவர். இதற்கு நேர்மாறாக அவருடைய துல்லியமான கட்டளைகளுக்கு மத்தியிலும், அவரை எதிர்கொள்ளும் வேளையில், பயபக்தியுடன் எனது கரங்களைக் கூப்பி வணங்காமல் இருக்க முடியவில்லை. அவரது புன்னகை எனது மனக்கண்களில் எப்பொழுதும் இருக்கும். அது மிகவும் திகைப்பூட்டும் தன்மை கொண்டது. 'விழிப்பூட்டுபவர்' என்ற வார்த்தையின் அர்த்தம் எனக்கு இப்போதுதான் புரிகிறது. 'அவர் உங்களைத் தொடுகிறார், உங்களுக்குள் ஏதோ ஒன்று நிகழ்கிறது.'

அவர் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் ஒரு மஹா மேதாவியாக இருக்க வேண்டும் என நான் நம்புகிறேன். அவர் திட்டமிட்டு, மிகத் துல்லியமாகச் செயல்படுகிறார். ஒன்றில் எவ்வளவு நீர் தேவை, மற்றொன்றுக்கு எவ்வளவு தேவை என்பது அவருக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன். அந்தச் சிறிய இருண்ட அறையில் அவர் ஏழைகளை நீராட்டும் வேளையில், அது வெளிச்சம் நிறைந்ததாகத் தோன்றியது.

நிகழ்ச்சிகள் முடிந்ததும், அவருடைய உண்மையான தெய்வீக ஆளுமையினாலும், எனக்கு ஏற்பட்ட அனுபவத்தினாலும் நான் உள்ளளவில் அதிர்ந்து போனேன்; புறப்படுவதற்கு முன்னர் அவருக்கு ஆழ்ந்த மரியாதை செலுத்த வேண்டும் என்ற உள்ளார்ந்த வேண்டுகோளை என்னால் எதிர்க்க முடியவில்லை. ஆனால், நாங்கள் அவரை இனிமேல் பார்க்க முடியாது என்றும் நாங்கள் எங்கள் இல்லங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும் அவர் ஏற்கனவே உத்தரவிட்டார்.

இந்த சந்திப்பு எனது வாழ்க்கையின் திருப்புமுனையாக இருக்கும்!

**1941**, பிப்ரவரி 5ஆம் நாள், மெஹர் பாபா மீண்டும் மஸ்துகளைத் தொடர்பு கொள்ள, சாஞ்சி, குஸ்தாஜி இருவருடன் ஜெய்ப்பூரிலிருந்து டெல்லிக்குப் புறப்பட்டார். டெல்லி ரயில் நிலையத்தில், பாபா, குஸ்தாஜியுடன் தொலைத்தந்தி அலுவலகம் அருகே அமர்ந்திருந்த வேளையில், வேறொரு ரயிலில் வந்த காக்காவை அழைத்து வர சாஞ்சி சென்றார். கராச்சியைச் சேர்ந்த மினூ கராஸ் திடீரென போலீஸ் அலுவலக பணிக்காக டெல்லி வந்தவர் நடைமேடையில் நிற்பதைக் கண்டு சாஞ்சி அதிர்ச்சியடைந்தார். பாபா, அவரது அடையாளம் தெரியாமல் பயணித்ததால், அப்போது நிலவிய பாபாவின் கட்டளைப்படி, மினூ, பாபாவைப் பார்த்ததும் கண்களை மூடிக்கொண்டார். பாபாவை சந்திக்காமல், காக்காவைக் கண்டுகொள்வது வரை அவருடன் இருந்து பின்பு வெளியேறுமாறு, சாஞ்சி அவரிடம் கேட்டுக்கொண்டார். "இது ஒரு சித்திரவதை!" எனக் கூறி மினூ, சாஞ்சியிடம் கெஞ்சினார் - ஆனால் அவர் பாபாவின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்தார்.

பாபாவும் மண்டலியும் ரீகல் ஹோட்டலில் (REGAL HOTEL) அன்றிரவு தங்கினர்; அடுத்த நாள் அதிகாலையில், சாஞ்சி பாபாவின் செய்தியுடன் அருகாமையில் இருந்த மினூவின் ஹோட்டலுக்குச் சென்றார். பாபா

கூறியதற்கிணங்க மினூ அன்றிரவு சாஞ்சியுடன் ஜமா மஸ்ஜித்தில் ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டார்.

ஜால் கேரவாலாவும் டெல்லிக்கு வந்து பாபாவுடன் நகரைச் சுற்றி மஸ்துகளைத் தேடினார். பாபாவின் மிக முக்கியமான தொடர்பு டெல்லியின் ஆன்மீகப் பொறுப்பாளரான ஹாஃபீஸ்ஜி நபீனா (HAFISJI NABEENA), 1939ஆம் ஆண்டில் சந்தித்த அவருடன் தொடர்பு கொண்டார். மெஹர் பாபா, காலை 6 மணி முதல் அவரைத் தேடி மூன்று மணி நேரம் செலவிட்டார், அன்று பிற்பகல் மீண்டும் வெளியே சென்ற வேளையில், முற்றிலும் நிர்வாண நிலையில் இருந்த மஸ்தைத் தொடர்பு கொண்டு பணிபுரிந்ததில் பாபா மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.

அதைத் தொடர்ந்து, பாபா ஸஹாரன்பூர் (SAHARANPUR), லக்னோ (LUCKNOW), பெனாரஸ் (BENARES) ஆகிய இடங்களுக்குச் சென்று, சாஞ்சியை மீண்டும் ஜெய்ப்பூருக்கு அனுப்பி வைத்தார். இந்த நகரங்களில் மேலும் பல மஸ்துகளைத் தொடர்புகொண்ட பின்பு பாபா கொல்கத்தாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

கொல்கத்தாவிலிருந்து, தொடர்ந்து வழியில் மேலும் பல மஸ்துகளை சந்தித்து, மெஹர் பாபா, தெற்கு நோக்கி பயணம் செய்து பிப்ரவரி 11 அன்று ஜகந்நாத் பூரிக்குச் (JAGANNATH PURI) சென்றார்; அங்கு, பைதூல், ஸவக் இருவரும் பாபாவுக்காகக் காத்திருந்தனர். பாபா, அங்கு வாழ்ந்த மஸ்துகளையும் தொடர்பு கொண்டு, பின்பு, பைதூலுடன் வால்டயர் (WALTAIR) வழியாக மதராஸுக்குப் (MADRAS) பயணம் செய்தார். குஸ்தாஜி, ஸவக் ஆகியோர் ஜெய்ப்பூருக்குத் திரும்பிச் சென்றனர்.

ஆதி சீனியர், பல மாதங்களாக பாபாவைப் பார்க்காமல் இருந்ததால், மதராஸுக்கு வருமாறு அழைக்கப்பட்டார். அவர், ஜால் கேரவாலாவுடன் காரில் புறப்பட்டு 1941, பிப்ரவரி 13 அன்று பாபாவை சந்தித்தார். அவர்கள், உடனடியாக அன்று மதியம் ஒரு மணிக்கு, காரில் ராம்நாடுக்குச் (RAMNAD) சென்று, புகழ்பெற்ற புனிதமான மஸ்த் பல்லுக்கொல்லா பாபாவைத் (PALLUKOLLAH BABA) தொடர்பு கொண்டார்; பாபா, அவர் '**ஆறு மற்றும் ஏழாவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையில் நிலைகொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினார்**.'

ஆதி, நெடு தூரம் காரை ஓட்டிச்செல்ல வேண்டியிருந்ததால், அவரைத் தெம்பாக வைத்திருக்கும் நோக்கத்தில், பாபா, தாராளமாகத் தேநீர் வழங்கினார். அன்று நடந்த நிகழ்வை ஆதி இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நான் விரும்பிய அளவிற்குத் தேநீர் அருந்தியது எனது நரம்புகளுக்குத் தூண்டுதலை அளித்தது என்பதில் சந்தேகமில்லை, ஆனால், காரில் பாபாவுடன் பயணம் செய்வதைப் போல் ஊக்கமும் உற்சாகமும் அளிப்பது வேறு எதுவுமில்லை. 1940 ஏப்ரல் மாதம், மெஹர் பாபா பெங்களூரிலிருந்து வெளியேறிய நாளிலிருந்து, நான் மனச்சோர்வால் அமைதியை இழந்த நினைவுகள் - நான் இதற்கு முன்னர் அனுபவிக்காத ஒரு நீண்ட, சோர்வான மற்றும் ஆத்மாவை பலவீனமாக்கும் காலம் - இவை அனைத்தும் அவரது ஆதவனைப் போல் ஒளிரும் புன்னகை, பழகிப்போன சைகைகள் மற்றும்

எழுத்துப்பலகை வழியாக நிகழ்த்தும் அன்பின் விமர்சனத்திற்கு முன்னால் ஒன்றுமில்லாமல் மறைந்து போகும்.

பாபா ஆதியிடம், "**ராம்நாட்டில் நாம் தொடர்புகொண்ட மஸ்த் இந்தியாவில் மிக முக்கியமானவர். அவர் எல்லா மஸ்துகளுக்கும் ராஜா, மேலும் அவரை சந்திப்பது மஸ்துகளுடனான எனது தொடர்பின் மிக முக்கியமான கட்டமாகும். எனது பிறந்தநாள் அன்று** (அடுத்த நாள்) **நீங்கள் என்னுடன் இருப்பது உங்கள் அதிர்ஷ்டம்; இந்த முக்கியமான பணிக்காக என்னைக் காரில் அழைத்துச் செல்கிறீர்கள்**" என எடுத்துரைத்தார்.

அவர்கள் அன்று மாலை ஒன்பது மணிக்கு திருச்சிராப்பள்ளியைச் சென்றடைந்து, இரவு முழுவதும் தொடர்ந்து வாகனத்தில் பயணித்தனர்; அதிகாலை 3:00 முதல் 6:00 வரை ஓய்வெடுக்க ஒரு பயணிகள் விடுதியில் நிறுத்தினர். வராந்தாவில் பாபா அருகே பைதூல் தூங்கினார், ஆதி, ஜால் இருவரும் காரில் தூங்கினர். அவர்கள் மீண்டும் பயணத்தைத் தொடங்கி காலை 8:00 மணிக்கு பல்லுக்கொல்லா பாபா தங்கியிருந்த கீழக்கரையைச் சென்றடைந்தனர் (கீழக்கரை, KILAKKARAI - இந்தியாவின் தெற்கு பகுதியான ராம்நாட்டிலிருந்து பத்து மைல் தொலைவில் அமைந்துள்ளது).

அந்தப் பழங்கால மஸ்துடனான தொடர்பு முடியும் வரை பாபா ஆண் மண்டலியை உபவாசம் கடைப்பிடிக்குமாறு கட்டளையிட்டார். பாபா, பல்லுக்கொல்லாவிற்கு சிறிது உணவளித்து அவருடன் பத்து நிமிடங்கள் மட்டுமே அமர்ந்தார். இருப்பினும், இந்தத் தொடர்பு குறித்து அவர் மிகவும் மகிழ்ச்சியடைவதாகச் சுட்டிக்காட்டினார்.

மெஹர் பாபா, குழுவுடன் உடனடியாக, காலை ஒன்பது மணிக்கு மதராஸை நோக்கிப் பயணத்தைத் தொடங்கி, நள்ளிரவில் அங்குச் சென்றடைந்தார். ஆதியை அவரது காரில் பெங்களூருக்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தி, பாபா ரயிலில் 'சந்தா' (CHANDA) என்ற ஊருக்கு, பைதூல், ஜால் கேரவாலாவுடன் புறப்பட்டுச் சென்றார். அந்த இடத்தின் அடர்ந்த ஆழமான காட்டில் லோஹேவாலா பாபா (LOHEWALA BABA) என்றழைக்கப்பட்ட ஐந்தாவது ஆன்மீகத் தள மஸ்தை, பாபா தொடர்பு கொண்டார். இந்த மஸ்த் ரயில்வே அழிவு மீட்புப் பகுதியில் இருந்த உபயோகமற்ற உலோகத் துண்டுகளை சேகரித்து, காடுகளின் மரங்களில் உயரமாகத் தொங்கவிட்டிருந்தார்.

பாபா, அங்கிருந்து நாக்பூர் (NAGPUR) நகருக்குச் சென்று, மேலும் பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். பின்னர் அவர்கள் ரயிலில் டெல்லி வழியாக ஜெய்ப்பூருக்குச் செல்வதாகத் திட்டம். டெல்லியில், ஜெய்ப்பூர் ரயிலுக்காக, சில மணிநேரம் காத்திருக்க வேண்டியிருந்த அவ்வேளையில், பாபா அனைவரையும் புதிய சார்லி சாப்ளின் (CHARLIE CHAPLIN) திரைப்படமான 'தி கிரேட் டிக்டேட்டர்' (THE GREAT DICTATOR) திரைப்படம் பார்க்க அழைத்துச் சென்றார். பாபா, அந்தத் திரைப்படத்தைப் பெரிதும் விரும்பினார். "**நான் ஏழு முறை பார்க்க விரும்பிய ஒரே திரைப்படம் இது**" என்று அவர் குறிப்பிட்டார். பாபா, மெஹராபாத் மண்டலிக்குக் கடிதம் எழுதி, '**அவர்கள் இந்தத் திரைப்படத்தை எத்தனை**

**முறை வேண்டுமானாலும் பார்க்கலாம்**' என்று அறிவுறுத்தினர், மேலும் இதைப் பற்றிக் கூறுகையில், '**தற்போதைய கட்டுப்பாடுகளின் கீழ் திரைப்படங்களைப் பார்க்க தடை விதிக்கப்பட்டவர்களுக்கும் இந்தத் திரைப்படத்தை மட்டுமே பார்க்க அனுமதிக்கப்படுகிறது, அதுவும் அந்தத் திரைப்படம் அவர்களின் எல்லைப் பகுதிக்கு வரும்போது மட்டும்**' எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இரண்டு வாரங்களில் கிட்டத்தட்ட 5,000 மைல்களைக் கடந்து, நாட்டின் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு வழியாக, பாபா 1941 பிப்ரவரி 18 அன்று நள்ளிரவில் ஜெய்ப்பூருக்குத் திரும்பி வந்தார். காலம் பாபாவின் இந்த சமீபத்திய பயணங்களைப் பற்றி சுருக்கமாக எடுத்துரைத்தது:

"முற்றிலும் களைத்துப்போய், அதீத கஷ்டங்களை எதிர்கொண்ட இந்தப் பயணம் முழுவதிலும், பாபா நெரிசலான மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டிகளில் ஒவ்வோர் இரவையும் கழித்தார். பகல் நேரங்களில் அவர் தொடர்ந்து மஸ்துகளைத் தேடிக்கொண்டிருந்ததால் ஓய்வே இல்லை. ராம்நாடு, மதராஸ் இரண்டு இடங்களிலும் மிகவும் வெப்பமான காலநிலை நிலவியது. மேலும் இந்தியாவில் பயணம் செய்வதற்கான போர்க்காலத் தடைகளுடன், பாபா, லக்னோவில் நுழைந்த அந்த நேரத்தில் ஒரு கலவரம் ஏற்பட்டது. கொல்கத்தாவிலும், பாபா பயணம் மேற்கொண்ட பிற இடங்களிலும் உள்நாட்டுக் கலவரங்கள் வெடித்தன.

"இந்த மஸ்துகள் மீது மெஹர் பாபா கொண்டிருந்த மிகப்பெரிய அன்பைப் பற்றி எவருக்கும் எதுவும் தெரியாது! ஒரு மஸ்தைத் தொடர்பு கொள்ள அவர் ரயில், கார், கால் நடை, காளை, குதிரை வண்டிகள் மற்றும் ஒட்டகங்களில் சவாரி செய்து, குளிர், மழை, கோடை வெயில் என்றும் பாராமல், சரியான ஓய்வு, உணவு, அருந்த நீரும் இல்லாமல், கற்பனை செய்ய முடியாத அசௌகரியங்களுக்கு மத்தியிலும், ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்கிறார்.

"சில மணிநேர தூக்கம் கூட இல்லை. பாபாவின் ஒரே ஓய்வு, அவர் விரும்பிச் செய்யும் சேவையில்தான் - அவர்களை நீராட்டி, அவர்களுக்கு சவரம் செய்து, உணவூட்டி, கால்களை அழுத்திவிட்டு, உடல்களை மஸாஜ் செய்து, அவர்களின் தற்போக்கான திடீர் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதில்தான் உள்ளது! அதுவே அவரது சோர்வுக்கான அமுதமும் அருமருந்தும் ஆகும்!"

இந்தச் சோர்வுற்ற சுற்றுப்பயணத்திற்குப் பின்னர், ஓய்வெடுப்பதற்கு பதிலாக, பாபா வெளியே சென்று, ஜெய்ப்பூர் நகரத்தில் வாழும் மற்றும் பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். ஆண் மண்டலியின் கண்காணிப்பில் இருந்து வந்த சட்டி பாபாவுடனும் அவர் பணிபுரிந்தார். மேலும், இவ்வேளையில் ஜெய்ப்பூருக்கு வந்ததும், பாபா, பின்வரும் சுற்றறிக்கையை இந்தியாவில் அவரை பின்பற்றும் அனைவருக்கும் அஞ்சல் வழியாக அனுப்பி வைத்தார்.

1941, பிப்ரவரி 15ஆம் நாள், ராம்நாடு நகரத்தில், நான் அந்தப் பழைய துறவியை சந்தித்த அந்நாளில், கீழ்வரும் நடவடிக்கைகளைத் தீர்மானம் செய்தேன்:

முதலாவதாக, 1941, ஆகஸ்ட் 1 அன்று, எனது பேச்சின் செயல்பாடு தொடங்கும் (நான் என்னுடன் பேசுவது);

இரண்டாவதாக, 1942 பிப்ரவரி 15ஆம் தேதி எனது உலகளாவிய வெளிப்பாடு முழு அளவில் வெளி வரும்.

எனது தற்போதைய ஏகாந்தவாச முறை ஏப்ரல் 15 வரை தொடரும். 1941, ஏப்ரல் 15 முதல் 1942 பிப்ரவரி 15 வரை, இந்த மாதங்களில் எனது ஏகாந்தவாசம் முழுமையானதாக இருக்கும். (ஆகஸ்ட் 1 முதல் பிப்ரவரி 15 வரை, நான் உண்மையில் எவரையும், எனது நெருங்கிய சீடர்களைக் கூட பார்க்க மாட்டேன்.) இந்தக் காலகட்டத்தில், 1942ஆம் ஆண்டில் எனது வெளிப்பாட்டிற்கு முன்னர் உலக விவகாரங்களைத் தவிர்க்க முடியாத உச்சகட்டத்திற்கு எடுத்துச் செல்வேன், இது உலகின் பொதுவான சீரமைப்பின் ஆரம்பம், மற்றும் ஆன்மீக மறுமலர்ச்சியின் அடுத்தடுத்த வெளிப்பாட்டிற்கான அறிகுறியாகத் திகழும்.

எனது செய்தியை மேற்கத்திய நாடுகளில் பரப்பும் நோக்கத்தில், நோரினா, நதீன், எலிஸபெத் மூவரையும் அமெரிக்காவிற்கும், மார்கரெட், ஐரீன் ஆகியோரை ஐரோப்பாவிற்கும் அனுப்ப முடிவு செய்துள்ளேன். ஏப்ரல் இறுதிக்குள், இந்த அதிகாரபூர்வமான அறிவிப்பு உலகளவில் வெளியிடப்படும், மேலும் எனது சீடர்கள் தனிப்பட்ட முறையில் நான் குறிப்பிடும் இடங்களில் இதன் தொடர்ச்சியான இறுதி செய்தியை வழங்குவார்கள்.

சிறப்பு உத்தரவுகளைக் கடைப்பிடிக்க, உத்தரவிடப்பட்ட அனைவரும் ஆகஸ்ட் 1 முதல் இந்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து விடுபடுவார்கள், அதன் பின்னர், அவர்கள் என்னுடைய தொடர்பில் இருந்த முழுக் காலத்திலும், கடைப்பிடித்த கட்டளைகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள். ஆனால் 1942 ஜனவரி 1 முதல் 1942 பிப்ரவரி 15 வரை, ஆன்மீக முன்னேற்றம், ஒளியூட்டம், அல்லது மிக உயர்ந்த அனுபவமான இறையுணர்வை அடையும் வாக்குறுதி அளிக்கப்பட்ட அனைவரும், ஒரு நாளைக்கு ஒன்றரை டம்ளர் பால் மட்டும் அருந்தி (தூய்மையான அல்லது தேநீர் அல்லது காபியுடன் கலந்து, அல்லது மோராக தயாரிக்கப்பட்டது) உபவாசம் இருப்பார்கள்; எப்போதும், எத்தனை முறை வேண்டுமானாலும் அருந்தலாம்.

முழு நாளிலும் அருந்தும் பாலின் அளவு ஒன்றரை டம்ளருக்கு மேல் இருக்கக்கூடாது. சர்க்கரையின் அளவு கூட நாள் முழுவதும் எட்டு தேக்கரண்டியைத் தாண்டக்கூடாது. தண்ணீர் மற்றும் சோடா நீரை விரும்பிய அளவிற்கு அருந்தலாம்.

**1941 ஆகஸ்ட் 1 முதல் 1942 பிப்ரவரி 15 வரை, குஸ்தாஜி ஹன்ஸோட்டியா, கே. ஜே. பிளீடர், சுவாமி பபானந்தா, ஸவக் கொத்வால் ஆகியோர் எனது அறிவுறுத்தல்கள் படி மலைகளில் ஏகாந்தவாசம் மேற்கொள்வார்கள்**.

1941ஆம் வருடம், எதிர்வரும் 47ஆவது பிறந்தநாள் குறித்து, பாபா ஏற்கனவே அறிவித்திருந்தார்:

**இந்த வருடம் ஆன்மீக வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாக இருப்பதால், பிப்ரவரி 15 அன்று, எனது பிறந்தநாள், பொது அல்லது தனிப்பட்ட முறையில் கொண்டாடப்படமாட்டாது**.

1941 பிப்ரவரி 17 அன்று மெமோ, ஜால்பாயுடன், பாபா கூறியது போல, '**பிறருக்கு, கட்டுப்பாட்டிற்குத் தேவையான கணிசமான வாய்ப்புகளை வழங்குவதற்காக**' ஜெய்ப்பூருக்கு வந்தார். இருப்பினும், அவரது தாயும் சகோதரரும் வந்தபோது பாபா விலகியிருந்தார்.

வறியவர்களுக்கான திட்டத்தில் உதவியாக இருந்தவர்களில் ஒருவரான அகர்வால், ஜெய்ப்பூரில் நன்கு பிரபலமான வழக்கறிஞர் ஆவார். பொது தரிசனத்தை வழங்குமாறு அவர் கேட்டுக்கொண்டபோது, பாபா அதை அனுமதிக்கவில்லை. எவ்வாறாயினும், ஜெய்ப்பூரில் அவரைப் பற்றி நோரினா இரண்டு விரிவுரைகளை - ஒன்று ஜனவரி 18 அன்று ஒரு வழக்கறிஞர் குழுவிற்கும், மற்றொன்று பிப்ரவரி 13 அன்று பொது மக்களுக்கும் வழங்க பாபா அனுமதித்தார்.

நாக்பூர் பல்கலைக்கழகத்தில் தத்துவ பேராசிரியராகப் பணியாற்றி வந்த டாக்டர் தேஷ்முக், நோரினாவை அங்கு விரிவுரை வழங்க அழைத்தார்; பாபா, அதற்கு இணக்கம் தெரிவிக்க, பிப்ரவரி 18 அன்று நோரினா அங்குச் சென்றார். அவரது சொற்பொழிவு மிகவும் பயனுள்ளதாக இருந்தது; ராம் பி. பங்க்ராஜ் (RAM P. PANKHRAJ), அப்துல் மஜீத் கான் (ABDUL MAJID KHAN) மற்றும் நாராயண் (நானா) கோபால் கேர் (NARAYAN – NANA – GOPAL KHER) ஆகிய மூன்று பல்கலைக்கழக மாணவர்களும் பாபாவைப் பற்றிய உரையைக் கேட்ட பின்னர் அவருடைய நெருங்கிய தொடர்பில் வந்தனர்.

அப்துல் கானின் தாயார் சமீபத்தில் காலமான அதிர்ச்சி அவரைக் கடுமையாகத் தாக்கியதால், அவர் பல நாட்கள் வருத்தத்தில் கண்கலங்கி அழுதார். ஆனால் நோரினாவின் சொற்பொழிவு அவர் மனதில் அதீத தாக்கத்தை ஏற்படுத்தியது; அவர் நோரினாவுடன் ஒரு நேரடி சந்திப்பைக் கோரினார், மேலும் விரிவுரை முடிந்த மறுநாளே தேஷ்முக் வீட்டிற்குச் சென்றார். தனது தாயாரின் மறைவால் அவர் எவ்வளவு மனச்சோர்வடைந்தார் என்பதை நோரினாவிடம் மனம் திறந்து எடுத்துரைத்தார். நோரினா அவருடன் பாபாவைப் பற்றி மென்மையாகப் பேசி ஆறுதல் கூறினார். அப்துல் கான்,

நோரினாவை ‘கடவுளின் தேவதை’யாகப் பார்த்தார்; மேலும் அவரது துக்கம் துயரம் அனைத்தும் மறைந்து விட்டதாக உணர்ந்தார்.

நோரினா பின்பு பாபாவிடம் அந்த இளைஞனைப் பற்றிக் கூறியபோது, பாபா அவருக்கு இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்: “**நான் உங்களைக் கூர்ந்து கவனிப்பதை நீங்கள் உணர்வீர்கள்**.”



மெஹர் **பாபா (**MEHER BABA**)- 1941**

# குவெட்டா பயணம்

**(Travel to Quetta)**

மெஹர் பாபா மற்றும் குழுவினர் குவெட்டாவிற்கு பயணம் மேற்கொள்வதற்கான திட்டங்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டன. எரச் பெங்களூரிலிருந்து ஜெய்ப்பூருக்கு அழைக்கப்பட்டார், மேலும், நீலப்பேருந்தை ஓட்டும் கடமை அவருக்கு வழங்கப்பட்டது. பாபா, மெஹரா மற்றும் ஒரு சிலருடன் எலிஸபெத் தனது சொந்த காரை ஓட்டுவதாகத் திட்டம்.

அஹமதுநகரில் இருந்த பெண்டு, ரூஸி பாப் இருவரும் குவெட்டா சென்று, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அறிவுறுத்தப்பட்டனர்; அவர்கள், **1941** பிப்ரவரி **22** அன்று ஜெய்ப்பூருக்கு வந்து, மறுநாள் காலையில் பாபாவுடன், ஏற்பாடுகள் குறித்து நடந்த நீண்ட விவாதத்தில் பங்கெடுத்தனர். ரூஸி பாப் குவெட்டாவின் முன்னாள் குடியிருப்பாளராக இருந்தார், **1920** ஆண்டுகளில் மெஹர் பாபா, அவரது இல்லத்தில் மூன்று முறை தங்கியிருந்தார். பாபாவின் ஆலோசனையைப் பின்பற்றி, ரூஸி அவரது குடும்பத்தினருடன் குவெட்டாவை விட்டு வெளியேறி இப்போது அஹமதுநகரில் வசித்து வருகிறார். ரூஸியின் மகள் கேட்டி, நீலப்பேருந்து பயணத்தில் பெண் மண்டலியுடனும், இரண்டாவது மகள் கோஹெர் மும்பையில் மருத்துவப் படிப்பும் படித்துக்கொண்டிருந்தார். அவரது விடுமுறை நாட்களில், கோஹெர் ஆவலுடன் வந்து பாபாவுடன் தங்குவது வழக்கம், ஏனெனில் அவரும் சிறு வயதிலேயே இறை பானத்தை அருந்தி பாபாவுடன் வந்திணையும் ஏக்கத்தில் இருந்தார்.

மெஹர் பாபா தனது பணியின் நிமித்தம், குவெட்டா செல்லும் வழியில், சிந்து நதியையும் அதன் ஐந்து கிளை நதிகளையும் கடக்க விரும்புவதாகச் சுட்டிக்காட்டினார். இது, திருடர்கள் மற்றும் கொள்ளையர்கள் நிறைந்த ஓர் ஆபத்தான பாதை என்றாலும், இந்தப் பாதையில் பயணிக்க, திட்டங்கள் வகுக்கப்பட்டன. “அவரது பணி சம்பந்தப்பட்ட இடத்தைப் பொறுத்தவரையில், ‘எச்சரிக்கை’, ‘பாதுகாப்பு’ குறித்த எந்த எண்ணமும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை” என்று காலம் குறிப்பிட்டது. “இதைத்தவிர, முழு பிரபஞ்சத்தையும் உள்ளங்கையில் அடக்கிய ஒருவருக்கு எச்சரிக்கை, பாதுகாப்பு என்ற கேள்விக்கு இடமே இல்லை!”

பாபா கூறியபடி, பைதூல், குஸ்தாஜி, கிருஷ்ணா, வெங்கோபா ராவ், விஷ்ணு ஆகியோர், மெஹர் பாபா குழுவுடன் புறப்படுவதற்கு முன்னதாக, சட்டி பாபாவுடன் ரயிலில் குவெட்டாவிற்குச் (QUETTA) சென்றனர். மெமோ, ஜால்பாய் ஆகியோருடன் சாஞ்சியும் ரயிலில் ஆக்ராவிற்குப் புறப்பட்டார். **1941,** பிப்ரவரி **25** அன்று காலை ஆறு மணிக்கு, பாபா, மெஹரா மற்றும் ஐந்து பெண்மணிகளுடன் எலிஸபெத்தின் காரில் பயணத்தைத் தொடங்கினார். பிறர் அனைவரும் நீலப்பேருந்தில் பின்தொடர்ந்தனர். பேருந்து முழுவதுமாக நிரம்பி வழிந்தது - **14**

பேருக்காக வடிவமைக்கப்பட்ட இருக்கைகளில் 28 நபர்கள் பெரும் சிரமத்தில் அமர்ந்திருந்தனர். எரச் பேருந்தை ஓட்டிச் சென்றார்; நீலு (பின்பு ஜால்பாய்) முன் இருக்கையில் அமர்ந்தனர்.

அன்று மதியம் ஆக்ரா (AGRA) வந்தடைந்த அவர்கள், பயணிகள் விடுதியில் தங்கினர். பேருந்தின் மேலிருந்த அனைத்து பெட்டி படுக்கைகளையும் இறக்குமாறு எரச், நீலு இருவருக்கும் பாபா உத்தரவிட்டார்; பயணம் முழுவதும் அவர்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டியிருந்தது. பயணிகள் விடுதிக்கு வந்ததும், பாபா, எரச்சை, மஸ்துகளைக் கண்டுபிடிக்கும் பணியில் வெளியே அனுப்பி வைத்தார்; நீலு, ஜால்பாய் இருவரும் பஜாருக்குச் சென்று, வேண்டிய பொருட்களை வாங்கி வந்தனர். பிற்பகலில், வறுத்த உருளைக்கிழங்கு, ரொட்டி, வெண்ணெய் மற்றும் சட்னி (ஜபல்பூரிலிருந்து கொண்டு வரப்பட்டது) ஆகியவற்றுடன் மதிய உணவை உண்டு, பின்பு பாபா பெண்மணிகளை தாஜ்மஹால், ஆக்ரா கோட்டை மற்றும் சில இடங்களுக்கு அழைத்துச் சென்றார்.

தாஜ்மஹாலில் இருந்த வேளையில், சற்று தொலைவில், வெறிச்சோடிய குதிரைக் கொட்டிலில் வாழ்ந்து வந்த ஒரு புனிதமான, வயதான பெண்மணியைப் பற்றி பாபாவிற்கு தகவல் கிடைத்தது. பாபா, அங்கு தாஜ்மஹாலில் ஒரு தோட்டக்காரரால் வழிநடத்தப்பட்டார். பாபா, ஆண் மண்டலியுடன் அந்தக் குதிரைக் கொட்டிலை நெருங்கியபோது, புலியின் கர்ஜனை போன்ற விசித்திரமான காட்டுக்குரலைக் கேட்க நேர்ந்தது; அவர்கள் அந்தக் கொட்டகைக்குள் நுழைந்தபோது அந்தப் பெண்மணியைக் கண்டனர். அவர் முன்னும் பின்னுமாக வேக நடையுடன் , இந்த அசாதாரணமான கர்ஜனையை எழுப்பிக் கொண்டிருந்தார். பாபா அந்தப் பெண்மணியை நெருங்கியதும் அவர் அமைதியானார். பாபாவை மிகவும் மரியாதையுடன் அழைத்ததும், பாபா எரச்சிடம் சைகை மூலமாக, **'அவரைப் பார்ப்பதில் மகிழ்ச்சியாக இருக்கிறாரா?'** என்று கேட்குமாறு கூறினார். அவர் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக பதிலளித்தார். வயதானாலும், அவர் ஒரு பெரிய, திடகாத்திரமான பெண்மணி; இரு கரங்களும் வளையல்களால் நிரம்பியிருந்தன; பிரகாசமான, பிறரைக் கவரும் முகப்பொலிவுடன் காணப்பட்டார். **'அவர் மேல்நிலையை அடைந்த மஸ்தானி'** என்று பாபா குறிப்பிட்டார், மேலும் அவரை **'மஸ்தானி மாய்'** (MASTANI MAI) என்றழைத்தார்.

அன்று மாலை, எரச் அழைத்து வந்த மஸ்துடன் பாபா இரவில் பணிபுரிந்தார். அடுத்த நாள் அதிகாலையில், பாபா, ஆக்ராவில் மற்றுமொரு மஸ்தை நீராட்டி ஆடை அணிவித்தார். எரச், நீலு இருவரும் மஸ்துடன் மிக்க மும்முரமாக இருந்ததால் நீலப்பேருந்தைப் பழுது பார்க்க நேரமில்லாமலாயிற்று.

பாபா தனது தாயார், மார்கரெட், ஜால்பாய், நீலு, சாஞ்சி ஆகியோருடன் எலிஸபெத்தின் காரில் 26ஆம் நாள் காலை உணவிற்குப் பிறகு 'ஃபத்தேபூர் ஸிக்ரி'யைப் (FATEHPUR SIKRI) பார்க்கச் சென்று, பின்னர் 9:30 மணிக்கு ஆக்ரா வந்து சேர்ந்தனர். அன்று மதியம் மெமோ, ஜால்பாய் இருவரையும் சாஞ்சி டெல்லி

ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதாகக் திட்டம். ஆனால், பாபா அவர்களை எலிஸபெத்தின் காரில் ரயில் நிலையத்தில் இறக்கிவிட்டு, பின்னர் எரச்சுடன் மஸ்துகளைத் தொடர்பு கொள்ள வெளியே சென்றார்.

பிப்ரவரி 27ஆம் நாள் பாபா, அனைவரையும் அதிகாலை 3:30 மணிக்கு எழுப்பினார்; நீலு, எரச் இருவரும் பேருந்தின் மேல் பெட்டி படுக்கைகளை வைக்க விரைந்து கொண்டிருந்தனர். அன்று காலை 5:45 மணிக்கு அவர்கள் ஆக்ராவிலிருந்து 127 மைல் தொலைவில் அமைந்த டெல்லிக்குப் புறப்பட்டனர். எலிஸபெத்தின் கார் 60 மைல் வேகத்தில் விரைந்தது; உடன் சென்ற பழைய நீலப்பேருந்தைக் கடந்து வேகமாகச் சென்றது. பேருந்தின் சக்கரங்கள் பழையதாக இருந்ததால், வழியில் மூன்று முறை பழுதாயின. அன்று காலை பத்து மணிக்கு பாபா, டெல்லி வந்து சேர்ந்து, அவர்கள் மூன்று நாட்கள் ரீகல் ஹோட்டலில் (REGAL HOTEL) தங்கயிருப்பதாகத் திட்டம். பேருந்து மதியம் வரை வந்து சேராததால் அதைத் தேடிச் செல்ல வேண்டியதாயிற்று; வழியில் அவர்கள் சக்கரத்தைப் பழுது பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், தேய்ந்துபோன சக்கரங்களின் பிரச்சினையை அவர்கள் விளக்கினர், இருந்தும் பாபா அதை நிராகரித்து எரச்சிடம், "**அடுத்த முறை வேகமாக ஓட்டுங்கள்**!" என்று கூறினார்.

அவர்கள் டெல்லி வந்ததும், பாபா, மஸ்துகளைத் தேடி அழைத்து வர எரச்சை அனுப்பினார். ஜமா மஸ்ஜித்தின் (JAMA MASJID) அருகே ஒரே ஒரு மஸ்தை மட்டுமே அவரால் கண்டுகொள்ள முடிந்தது. அன்று மாலையில் பாபா அந்த மஸ்தைத் தொடர்பு கொண்டார். பிப்ரவரி 28ஆம் நாள் பாபா, பெண்மணிகளை குதுப் மினார் (QUTUB MINAR), ஹுமாயூனின் கல்லறை (THE TOMB OF HUMAYUN) மற்றும் லக்ஷ்மி நாராயணன் கோவிலுக்கு (LAXMINARAYAN TEMPLE) அழைத்துச் சென்றார்.

1941 மார்ச் 2 அன்று அதிகாலை, மெமோ, ஜால்பாய் இருவரையும் பாபா, சாஞ்சியுடன் ரயிலில் பூனாவிற்கு அனுப்பி வைத்தார், குழுவில் எஞ்சியிருந்த அனைவரும் 215 மைல் தொலைவில் அமைந்த ஜலந்தர் (JULLUNDUR) நகருக்குப் பயணத்தைத் தொடங்கினர். மதிய வேளையில் அம்பாலா (AMBALA) வருவதற்கு முன்பு, பேருந்தின் மற்றொரு சக்கரம் பழுதானது; பாபா, அதற்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது.

அம்பாலாவில், பாபா மஸ்துகளை அழைத்துவர மறுபடியும் எரச்சை அனுப்பினார். ஒரு மணி நேரம் தேடி அலைந்தும், ஒருவரும் கண்ணில் தென்படாததால் பாபா, அதிருப்தியில் அன்று மதியம் இரண்டு மணிக்கு ஜலந்தருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நீலப்பேருந்தை மணிக்கு 45 மைல் வேகத்தில் ஓட்டுமாறு பாபா, எரச்சிற்கு அறிவுறுத்தினார்; பயணிகளோடு பொருட்களின் சுமை அதிகமாக இருந்தாலும் எரச், அந்த வேகத்தை எட்ட முயற்சித்தார். ஆனால் பேருந்தின் சக்கரங்கள் அடிக்கடி பழுதாகி எரிச்சலூட்டும் அளவிற்குத் தாமதத்தை

ஏற்படுத்தின. இது பாபாவை மேலும் வருத்தமுறச் செய்தது. அம்பாலாவிலிருந்து இருபது மைல் தொலைவில், பேருந்தின் மற்றொரு சக்கரமும் பழுதானது; அவ்வேளையில் பாபா, ஸிர்ஹிந்த் (SIRHIND) ரயில் நிலையத்திலிருந்து 80 மைல் தொலைவில் ஒரு மஸ்தை சந்திக்க எலிஸபெத்தின் காரில் சென்றார். பாபா, அங்கு வந்து சேர சற்று காலதாமதமானதால் அந்த மஸ்தை சந்திக்க முடியமலாயிற்று; அவர் சில நிமிடங்களுக்கு முன்னரே அங்கிருந்து வெளியேறியதாகத் தெரியவந்தது. பாபா தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.

மெதுவாக, பேருந்து அன்று பிற்பகல் நான்கு மணிக்கு லூதியானா (LUDHIANA) சென்றடைந்தது. அங்கிருந்து பாபா, எரச்சுடன் டோங்காவில் மஸ்துகளைத் தேடி அலைந்து, ஒருவரைத் தொடர்பு கொண்டு உணவளிக்க முடிந்ததில் மகிழ்ச்சியடைந்தார். அன்று மாலை 7:30 மணிக்குப் புறப்படுவதற்கு முன்பு, பேருந்தின் சக்கரங்களில் ஒன்றை பழுதுபார்த்து, நள்ளிரவில் 50 மைல் பயணம் செய்து ஜலந்தர் வந்து சேர்ந்தனர்.

மார்ச் 3ஆம் நாள் காலை 5:30 மணிக்கு 87 மைல் தொலைவில் அமைந்த லாஹூருக்குப் (LAHORE) புறப்பட்டனர். மீண்டும், சக்கரங்கள் பழுதாகி, காலதாமதத்தை ஏற்படுத்துவது அன்றைய நடப்புநிலையாக இருந்தது. நீலு, எரச் இருவரும் புதிய சக்கரங்கள் மற்றும் உள் குழாய்களுக்காக முறையிட்டனர்; ஆனால், அவரது சொந்த காரணங்களுக்காக, பாபா அதை அனுமதிக்கவில்லை; எனவே, அவர்கள் இருப்பதையே வைத்து சமாளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதைத் தவிர, பேருந்தின் பின்புறத்தில் ஒரு புறம் இரண்டு சக்கரங்களும் மறுபுறம் ஒரே ஒரு சக்கரமும் இருந்தன, இதனால் பேருந்தை ஓட்டிச் செல்வதும் சிரமமான காரியம்.

சக்கரம் பழுதானதால் அவர்கள் அமிர்தசரஸில் (AMRITSAR) இரண்டு மணி நேரம் நிறுத்த வேண்டியிருந்தது. நீலு பழுதுபார்ப்பதை மேற்பார்வை செய்துகொண்டிருந்த வேளையில், பாபாவும் எரச்சும் மஸ்துகளைத் தேடி வெளியே சென்றனர். பின்னர், அனைவரும் லாஹூருக்குப் புறபட்டனர். பாபாவின் கார் 11:30 மணிக்கும், பேருந்தில் பயணம் செய்தவர்கள் மேலும் மூன்றரை மணி நேரம் தாமதமாகவும் வந்தனர். அனைவரும் பிரகான்ஸா (BRAGANZA) ஹோட்டலில் தங்கினர்.

எரச் லாஹூரில் இரண்டு மஸ்துகளைக் கண்டுபிடித்து பாபாவிடம் அழைத்து வந்தார். ஒருவர் பழங்கால மஸ்தானி. பாபா அவர்களுடன் இதர மூன்று மஸ்துகளையும் தொடர்பு கொண்டார்.

அவர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கு இணங்கி பாபா இறுதியில், நீலு, எரச் இருவரையும் ஒரே ஒரு புதிய சக்கரம் மற்றும் உள் குழாயை வாங்க அனுமதித்ததும், அவை உடனடியாக வாங்கி பேருந்தில் பொருத்தப்பட்டன. லாஹூரில் பாபா, பெண்மணிகளை ஷாலிமார் பூந்தோட்டம், (SHALIMAR GARDEN) அனார்கலி பஜார் (ANARKALI BAZAR) மற்றும் நகரத்தின் பிற இடங்களைப் பார்க்க அழைத்துச் சென்றார்.

1941, மார்ச் 5 காலையில், லாஹூரிலிருந்து 102 மைல் தொலைவில் அமைந்த 'மாண்ட்கோமெரி'க்கு (MONTGOMERY) புறப்பட்டனர். 40 மைல்கள் கடந்ததும் நீலப்பேருந்து மறுபடியும் பழுதானது, பாபா மிகவும் எரிச்சலடைந்தார். அவர் பாக்பட்டான் (PAKPATTAN) என்ற இடத்தில் உயர் நிலை மஸ்த் ஒருவரைத் தொடர்பு கொள்ள விரும்பினார், எனவே நீலுவையும் அவருடன் அழைத்துக்கொண்டு எலிஸபெத்தின் காரில் புறப்பட்டார் (ஏற்கனவே நான்கு பெண்மணிகள் பின் இருக்கையில் அமர்ந்திருந்தனர், இடையே திரையால் மறைக்கப்பட்டிருந்தது). எரச்சை மாண்ட்கோமெரியில் சந்திக்குமாறு கூறிச் சென்றார். பாபாவின் கார் பதினொரு மணிக்கு வந்தது. பெண் மண்டலியை பி.டபிள்யூ.டி. பங்களாவில் (P.W.D BANGALOW) தங்க வைத்துவிட்டு, பாபா, நீலு, எலிஸபெத் மூவரும், பாக்பட்டானிலிருந்து 30 மைல் தொலைவில் இருந்த சத்குரு 'பாபா ஃபரித் ஷக்கர் கஞ்ச்' (BABA FARID SHAKKAR GANJ) அவர்களின் சமாதி அருகே அந்த மஸ்தைத் தொடர்பு கொண்டார்; பெயரில்லா மஸ்த், உயரமான, உறுதியான உடலமைப்பைக் கொண்டிருந்தார்.

பின்பு மாலை வேளையில், பாபா மூன்று மேற்கத்திய பெண்மணிகளை அழைத்துக்கொண்டு, பதினெட்டு வயதான ஓர் இளம் மஸ்தானியை, சீரற்ற அருவருப்பூட்டும் சூழலில் அமைந்த கொட்டில் ஒன்றில் தொடர்பு கொண்டார்; அங்கு அவர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. அந்த இளம் மஸ்தானி அவரது ஆறு வயதிலிருந்தே இறை போதையில் இருந்தார்.

அன்றிரவில், மீண்டும் நீலு, எரச் இருவரும் நான்கு புதிய சக்கரங்கள் மற்றும் உள் குழாய்களை வாங்க பாபாவிடம் கெஞ்சினர். மீண்டும், பாபா அவர்களின் கோரிக்கையை நிராகரித்தார்.

மார்ச் 6ஆம் தேதி காலை, அவர்கள் மாண்ட்கோமெரியிலிருந்து 137 மைல் தொலைவிலுள்ள முல்தான் (MULTAN) நகருக்குப் புறப்பட்டனர். பாபா, எரச்சிடம் வேகமாக ஓட்டுமாறு கட்டளையிட்டார் - மணிக்கு, குறைந்தது 45 மைல்கள். நீலு அமைதியாக நடுங்கிக்கொண்டே பாபா கூறியதைக் கேட்டார். அவர்கள் 40 மைல் தூரம் சென்றதும் மறுபடியும் அதே பிரச்சினை; எரச், நீலு இருவரும் சரிசெய்ய முயன்ற அவ்வேளையில், பாபா காரில் காத்திருந்தார். பாபா, முல்தானில் வாழ்ந்த மஸ்தைத் தொடர்பு கொள்வதில் ஆர்வமாக இருந்ததால், காரில் நீலுவையும் அழைத்துக்கொண்டு உடனடியாகப் புறப்பட்டார். பாபா, இரண்டாவது முறையாக எரச்சைத் தனியாக விட்டுச்சென்றார்.

"**வேகமாக ஓட்டுங்கள்!**" என்று எலிஸபெத்திடம் பாபா தொடர்ந்து வற்புறுத்தி கூறவே, அவர்கள், சராசரி மணிக்கு 70 மைல் வேகத்தில் சென்று 11 மணிக்கு முல்தானை வந்தடைந்தனர். மணிக்கு எழுபது மைல் வேகம் நவீன நெடுஞ்சாலைகளில் அதிகம் தெரியாது, ஆனால் பெரும்பாலும் இந்தியாவின் செப்பனிடப்படாத கரடுமுரடான, சாலைகளில் இது முதுகெலும்பை

நொறுக்கிவிடுவது மட்டுமன்றி, எந்த நேரத்திலும் அங்குமிங்கும் அலைந்து திரியும் விலங்குகள் மற்றும் கிராமவாசிகளின் அச்சமும் இருந்தது.

முல்தானில் பாபா ஒரு மஸ்த் மற்றும் ஒரு மஸ்தானியைத் தொடர்பு கொண்டார். பேருந்து மதியம் தாமதமாக வந்து சேர்ந்தது; அதிசயமாக வழியில் ஒரே ஒரு முறை பழுது பார்க்க வேண்டியிருந்தது. பாபா, உடனடியாக எரச், நீலு இருவரையும் மஸ்த் வேட்டைக்காக ஊருக்குள் அனுப்பி வைத்தார். மேலும், எரச்சிடம் பாபா ஒரு சில சிறுவர்களையும் அழைத்து வருமாறு கூறினார். பாபா, எரச் அழைத்து வந்த சிறுவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, திரைப்பட கருவிகளை இயக்குவதற்கும், அஹமதுநகரில் ஸரோஷ் சினிமாவில் பணிபுரிய முடியும் என்ற போலிக்காரணத்தை முன்வைத்தார். ஆனால் பாபா அந்த சிறுவனைத் தேர்ந்தெடுக்க, அவருக்கு மட்டுமே தெரிந்த, மண்டலியிடமிருந்து மறைக்கப்பட்ட ஒரு காரணமும் இருந்தது என்பதை அனைவரும் புரிந்துகொண்டனர்.

முல்தானில், இறுதியாக, முழு விருப்பமில்லாத மனதுடன் பாபா, எரச் மற்றும் நீலுவை இரண்டு புதிய சக்கரங்களை வாங்க அனுமதித்தார். முல்தான் நகரிலிருந்து குவெட்டா வரையிலான சாலை, வழிப்பறிக் கொள்ளைக்காரர்களுக்குப் பெயர் போன இடம். இந்த மலைப் பிரதேசங்கள் கொலை மற்றும் கொள்ளைக் கும்பல்களால் நிரம்பியிருந்தும், பாபா, பெண்மணிகளையும் உடன் அழைத்துச் செல்ல அந்த வழியைத் தேர்ந்தெடுத்தார்.

1941, மார்ச் 7 காலை 7:00 மணிக்கு அவர்கள் 110 மைல் தொலைவில் அமைந்த 'கார்' (KHAAR) நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர். பதினைந்து மைல்கள் வந்ததும், ஒரு ரயில்வே பாலத்தைக் கடக்க வேண்டியிருந்தது. எரச் பேருந்தை மெதுவாக நகர்த்திய போது, பாலத்தின் மரத்தாலான பலகைகள் ஏறக்குறைய ஐந்து டன் சுமையின் கீழ் 'கிரீக்' எனும் சத்தம் எழுப்பி, பாலம் சற்று சாயத் தொடங்கியது. நீலு பயத்தில் உறைந்து போனார். மழை வேறு பெய்து கொண்டிருந்தது, சாலைகள் மிகவும் மோசமாக இருந்தன. அவர்கள் மேலும் ஐந்து பாலங்களைக் கடக்க வேண்டியிருந்தது, கடைசியாக, 'முஸாஃபர்கர்' (MUZAFFERGHAR) என்ற இடத்தைக் கடந்ததும், சிந்து நதியின் குறுக்காக, மிக நீளமானதாக இருந்த பாலம் நம்பமுடியாத அளவிற்கு ஆபத்தான ஒன்றாக நிரூபிக்கப்பட்டது.

இந்தப் பாலங்கள் இரண்டரை டன் எடைக்கு மிகாமல் இருக்கும் வாகனங்களை மட்டுமே ஓட்டிச் செல்ல அனுமதிக்கப்படுவதால், 'எந்தவொரு விபத்திற்கும் தான் பொறுப்பேற்க மாட்டேன்' என்று சாலை வரி வசூலிப்பாளர் கூறினார்; அவர்களின் மிகத் தீவிரமான எதிர்ப்பிற்குப் பின்னரே அவர் பாலங்களைக் கடந்து செல்ல அனுமதித்தார். காரைத் தொடர்ந்து, நகர்ந்து நீலப்பேருந்து சென்றபோது பாலம் வளைந்து நொறுங்குவது போலக் கூச்சலிட்டது. உள்ளே இருந்த பெண்மணிகள் பாபாவின் பெயரை, சத்தமாகத் திரும்பத் திரும்ப உச்சரித்தனர். அவர்களுக்குப் பின்னால் சில மர பலகைகள் துண்டுகளாகச் சிதறி காற்றில் பறந்தன. பாலத்தைத் தாண்டியதும், அனைவரும்

பாபாவின் பெயரைப் கூறி நன்றி தெரிவித்தனர்; குளிரான அந்த நேரத்திலும் வியர்த்துப்போய் பெருமூச்சு விட்டனர்; பாபாவின் கருணை மிகுந்த பார்வை ஒன்றுதான் அவர்களைப் பாதுகாத்ததாக அனைவரும் உணர்ந்தனர்; இல்லையேல் பாலம் நொறுங்கி அனைவரும் நீரில் மூழ்க நேர்ந்திருக்கும்!

முல்தானிலிருந்து பாபா அழைத்து வந்த சிறுவனும் அவருடன் காரில் பயணம் செய்தான்; அன்பான, அமைதியான அந்த சிறுவன் யார் என்று தெரியவில்லை. சிறுவன் தனக்குத்தானே பாடிக் கொண்டிருந்தான், ஆனால் பெண்மணிகள் "சத்குரு மெஹர் பாபா கி ஜெய்" என்று கோஷமிட ஆரம்பித்தபோது, அவன் ஒரு பெரியவரின் முன்னிலையில் இருப்பதை உணர்ந்தான்.

அவர்கள் 10:30 மணிக்கு 'டேரா காஸி கான்' (DERA GHAZI KHAN) வந்தடைந்து, வாகனங்களில் எரிவாயு நிரப்பினர். இதற்கிடையில், பாபா, எலிஸபெத்துடன் அமெரிக்காவிற்கு ஒரு தந்தி அனுப்ப அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்றார். அங்குச் சென்ற வேளையில், எலிஸபெத்தின் கார் சேற்றில் சிக்கி, மற்றொரு கார் மற்றும் பத்து நபர்களின் உதவியுடன் வெளியே இழுக்க வேண்டியிருந்தது.

'டேரா காஸி கான்' மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர் மக்கள், இந்த வழியாகக் குவெட்டாவிற்குப் பயணிப்பதில் ஏற்படும் ஆபத்துகளைக் குறித்து எச்சரித்தனர். கொள்ளைக்காரர்கள் இருப்பதால் இராணுவம் கூட இந்தச் சாலையில் பயணிக்கத் தயங்குவதாகவும், மிகப் பெரிய முன்னெச்சரிக்கையுடன் மட்டுமே இந்த வழியில் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கூறினர். இருப்பினும், பாபா, பயணத்தைத் தொடர்வதில் உறுதியாக இருந்தார்; அவர்கள் மலைகளை நோக்கிச் சென்றனர்.

செங்குத்தான மலைகளையும், கூர்மையான வளைவுகளையும் சுற்றியுள்ள குறுகிய சாலைகளில் அவர்கள் 'கார்' நகரத்தை நோக்கிச் செல்லும் வேளையில், நாள் முழுவதும் தொடர்ந்து மழை பெய்தது. இப்பகுதி மிகவும் பாழடைந்த காடுகளாகவும், உண்மையில் மனித வாழ்க்கையின் அறிகுறியே இல்லாமலும் இருந்தது. இரண்டு இடங்களில் பேருந்தும், காரும் சேற்றில் சிக்கி அனைவரும் வெளியே வந்து தள்ள வேண்டியதாயிற்று. மாலை ஐந்து மணிக்கு 'கார்' நகரை வந்தடைந்து ஒரு மலையின் உச்சியில் அமைந்த பயணிகள் விடுதியில் இரண்டு நாட்கள் தங்கினர்.

'கார்' நகரில் இருந்தபோது, மெஹர் பாபா, ஜெய்ப்பூரில் கடைசியாக வெளியிட்ட சுற்றறிக்கை செய்தியின் தொடர்ச்சியாக மேலும் செய்திகளை வழங்கினார்:

**இந்த உயிரற்ற உலகை உயிர்த்தெழச் செய்து, உலகின் பொதுவான சீரமைப்பைத் தொடங்கும் விதத்தில், இறைவனின் சித்தத்தில் வெளிப்படும் 'இறை வாக்கை' 1941 ஆகஸ்ட் 1ஆம் நாள், நான் என்னோடும் என்னுள்ளும் பேசுவேன்.**

**இந்த 'நானே என்னோடு பேசும்' ஒருங்கிணைந்த செயற்பாட்டை 1942 பிப்ரவரி 15 வரை, நான் வெளிப்படையாகவும், உலகளவிலும் பேசுவேன்; இந்த நாள், எனது உலகளாவிய வெளிப்பாடு முழு அளவில் தோன்றும் நாள்; இந்த ஆறு மாத கால 'நானே என்னோடு பேசும்' செயல்பாட்டின் வழியாக, ஆன்மீக மறுமலர்ச்சியின் விரிவாக்கத்தைக் கொண்டுவரும் நாள்; மேலும் என் வட்டத்தின் சீடர்கள் இறை உணர்வை அடையும் நாள்.**

**எனது தற்போதைய ஏகாந்தவாசம் ஏப்ரல் 15 வரைத் தொடரும், ஆனால் 1941, ஏப்ரல் 15 முதல் 1942, பிப்ரவரி 15 வரை, எனது ஏகாந்தவாசம் இன்னும் முழுமையானதாக இருக்கும்.**

மெஹர் பாபாவும் குழுவும் மார்ச் 10ஆம் தேதி காலையில் புறப்பட்டு 130 மைல்கள் கடந்து 'லோரலாய்' (LORALAI) என்ற இடத்தைச் சென்றடைந்தனர். முழுப் பாதையும் மலைப்பகுதியாகவும் பயணத்தின் மிகவும் ஆபத்தான பாகமாகவும் இருந்தது. பத்து மைல் தொலைவில், அவர்கள் 'ரக்கனி' (RAKHANI) என்ற இடத்திலிருந்து வாடகைக்கு அமர்த்திய இராணுவப் பாதுகாவலர்களையும் உடன் அழைத்துச் சென்றனர். பாபாவும் பெண் மண்டலியும் ஒரு சிறிய குதிரை பந்தயத்தில் மகிழ்ச்சியுடன் பங்கெடுத்தனர்; மேலும் பாபா பந்தயத்தில் வெற்றி பெற்றவருக்கு ஐந்து ரூபாய் பரிசளித்தார்.

காலை 11:30 மணிக்கு மறுபடியும் புறப்பட்டபோது காரின் ஒவ்வொரு பக்கத்திலும் காவலர்கள், குதிரைகளிலும் மற்றும் வலிமை வாய்ந்த பலூச்சி வீரர்கள், கையில் துப்பாக்கிகளுடன், பேருந்தின் மேலேயும் சவாரி செய்தனர். வழியில் சிக்கிக்கொண்ட பேருந்து, எலிஸபெத்தின் காரின் உதவியுடன் வெளியே கொண்டுவரப்பட்டது. அவர்கள் அன்று மாலை ஏழு மணி அளவில் லோரலாய் சென்றடைந்து பயணிகள் விடுதியில் தங்கினர்.

பாபாவும் குழுவும் லோரலாய் சென்றபோது, அவர்களுடன் வந்த சிறுவன் ஒரு தீய கொள்ளைக்காரனின் மகன் எனத் தெரிய வந்தது. அந்த சிறுவன் அவர்களுக்குப் பல சிரமங்களைத் தரத் தொடங்கினான், எனவே பாபா அவனை முல்தானுக்கு திருப்பி அனுப்பி வைத்தார். அவனை உடன் அழைத்து வருவதற்கான பாபாவின் காரணம் இப்போது தெரியவந்தது. சிறுவன் அவர்களுடன் பயணம் செய்வதை அறிந்த கொள்ளைக் கும்பல் அவர்களைத் தாக்கவில்லை.

1941 மார்ச் 11 காலை (எந்தக் காவலர்களும் இல்லாமல்) லோரலாயை விட்டு வெளியேறி, மாலை ஐந்து மணிக்கு குவெட்டா (QUETTA) வந்து சேர்ந்தனர். பாபா தங்குவதற்காக, பாரசீக தூதரகத்திற்கு எதிரே அப்துல் வஹீத்தின் (ABDUL WAHID) பங்களாவை ரூஸி பாப் (RUSI POP) வாடகைக்கு எடுத்திருந்தார். பாபா குவெட்டா வந்தடைந்த அடுத்த கணமே, அவர் தனது மஸத் பணியில் மூழ்கி, எவரையும் பார்க்காமல் ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார்.

குவெட்டா வந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, பாபா, எரச்சை பெங்களூருக்குத் திருப்பி அனுப்பி வைத்தார்; இப்போது பைதூல், குஸ்தாஜி,

கிருஷ்ணா, நீலு, வெங்கோபா ராவ் மற்றும் விஷ்ணு அவருடன் இருந்தனர். பைதூல், கிருஷ்ணா, வெங்கோபா ஆகியோர் மஸ்துகளைத் தேடும் வேளையில் விஷ்ணு பஜாருக்குச் சென்று பொருட்களை வாங்கி வந்தார். பாபா, மஸ்துகளைத் தொடர்பு கொள்ள வெளியே செல்லும் போதெல்லாம், பைதூல் எப்பொழுதும் அவருடன் இருப்பது வழக்கம். கிருஷ்ணா, வெங்கோபா இருவரும் பாபாவின் அருகில் இரவு கண்காணிப்பாளராக இருந்தனர். பாபா, குவெட்டா வந்ததும், கராச்சியில் வாழ்ந்த பீலாமாய் அங்கு வந்து ஒரு வாரம் தங்க அனுமதிக்கப்பட்டார்.

டாக்டர் நீலுவிற்கு மஸ்துகளில் நம்பிக்கை இல்லை, மருத்துவ கண்ணோட்டத்தில், அவர்கள் அப்பாவித்தனமான பைத்தியக்காரர்கள் என்றே கருதினார். ஆனால் ஒரு நாள் அவர் சட்டி பாபா, இரவு முழுவதும் பனிக்கட்டியில் அமர்ந்திருந்ததைக் கண்டார், வெளியில் பனிப்புயல் வேகமாக வீசிய போதிலும் அவர் தனது இருக்கையை விட்டு நகரவில்லை. நீலு அவரது படுக்கையில் நான்கு கம்பளி போர்வைகளைப் பயன்படுத்தியும் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார். குவெட்டாவின் கடுமையான குளிரில், சட்டி பாபா நிர்வாணமாக, முற்றிலும் மகிழ்ச்சியான மனநிலையில் அமர்ந்திருந்தது, நீலுவை வெகுவாக ஈர்த்தது. அத்தகைய அதிசயமான காட்சி அவரது கேள்விகளுக்குத் திருப்திகரமான பதிலை அளிக்கவில்லை, மேலும் அந்த மஸ்த் ஒரு சாதாரண மனிதர் அல்ல என்பதை நீலு முழுமையாக நம்பினார்.

குவெட்டாவில் பாபா தங்கியிருந்த ஒரு மாத காலத்தில், சட்டி பாபா தனது அறையின் உள்ளே அமராமல், கடுமையான குளிர்ந்த காலநிலையிலும், இரவு முழுவதும் வெளியே சுற்றித் திரிந்தார்; இருந்தும் அவர் ஆரோக்கியமாகக் காணப்பட்டார்; மேலும், ஆச்சரியமூட்டும் விதத்தில் தினமும் 100 வாளி பனிபோலக் குளிர்ந்த நீரில் நீராடுவதைத் தொடர்ந்தார்!

ஒரு நாள் பாபா, கிருஷ்ணாவை, சட்டி பாபாவிடம் அனுப்பி நீராட விரும்புகிறீர்களா என்று கேட்டு வரச் சொன்னார். கிருஷ்ணா அவரிடம் சென்று கேட்டபோது, முதலில் சட்டி பாபா சிரித்தார், ஆனால் பின்பு நீராட இணக்கம் தெரிவித்தார். பாபா, உடனே வந்து அவரை நீராட்டத் தொடங்கினார். நீராடும் வேளையில் பாபா, கிருஷ்ணாவிடம் சைகை மூலமாக, சட்டி பாபாவிடம் **'குளிராக உள்ளதா'** என்று கேட்கக் கூறினார். கிருஷ்ணா அவரிடம் கேட்டபோது, "குளிர்? நான் நெருப்பில் இருக்கிறேன்!... நான் நெருப்பாக எரிகிறேன்!" என்று பதிலளித்தார்.

கிருஷ்ணா குழப்பமடைந்து, "நீங்கள் குளிர்ந்த நீரில் நீராடுகிறீர்கள், இருந்தும் நீங்கள் நெருப்பில் எரிவதுபோல் உணர்கிறீர்களா?" என்று கேட்டார்.

சட்டி பாபா, உடனே பாபாவைப் பார்த்து தலையசைத்து, "இந்த நெருப்பு என்னை எரிக்கிறது!" என்றார்.

தினமும் காலை 6:00 மணிக்கு மெஹர் பாபா, சட்டி பாபாவை நீராட்ட விரும்பினார். கிருஷ்ணா காலை உணவாக கோதுமை கஞ்சியும் ஒரு ஆம்லெட்டையும் (OMELET), சட்டி பாபா நீராடி முடித்ததும் உண்ணுவதற்காக, அவற்றைத் தயாராக வைத்திருப்பது வழக்கம். ஒரு சந்தர்ப்பத்தில், நீராட நீர் மிகவும் சூடாக இருக்க வேண்டும் என்று பாபா விரும்பினார். அன்று காலை, கிருஷ்ணா நீரைச் சூடாக்க, பத்து நிமிடங்கள் தாமதமாயிற்று; கோபத்துடன், பாபா கதவை வேகமாகத் தட்டி, விரைவாக வருமாறு கோரினார். பாபா, அப்போது இதர ஆண்களிடம் சென்று, "**கிருஷ்ணா ஒரு பன்றியைப் போல் உண்டு உறங்குகிறார்**!" என்றார்.

குஸ்தாஜியை அழைத்து, பாபா, அவரிடம் சைகையால் தெரிவித்தார், "**நான் மிகவும் வருத்தமாக இருக்கிறேன், கிருஷ்ணாவின் தவறுக்காக அவரை என்னால் மன்னிக்க முடியாது. நீங்கள் அவரை மன்னிப்பதே நல்லது**."

குஸ்தாஜியும் கை சைகைகளால் பதிலளித்தார், "பாபா, நீங்கள் அவரை மன்னிக்க முடியாவிட்டால், நான் எப்படி முடியும்?"

கிருஷ்ணாவைக் கண்டித்து பாபா, "**நீங்கள் ஏன் எப்பொழுதும் மிகவும் கவனக்குறைவாக இருக்கிறீர்கள்? உங்களுக்கு உணவளிப்பதும், உங்கள் தாய்க்குப் பணம் அனுப்புவதும் தவிர, மாதத்திற்கு பத்து ரூபாய் நான் உங்களுக்குத் தருகிறேன். இருந்தும், நீங்கள் உங்கள் கடமையை சரியாகச் செய்வதில்லை. நீங்கள் ஊதியத்தைப் பெறுவதானால் உண்மையுடனும், நேர்மையாகவும் இருக்க வேண்டும்**" என்றார்.

கிருஷ்ணா, "நான் உங்களுடன் பணத்திற்காகத் தங்கியிருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா?"

**"அப்படியானால், நீங்கள் ஏன் என்னிடமிருந்து பணம் பெற்றுக்கொள்கிறீர்கள்? ஆனால் உங்களை எச்சரிக்கிறேன், மண்டலியைப் போல் ஊதியத்திற்காக உழைக்காமல் இருப்பது இன்னும் தொந்தரவாக இருக்கும். இதற்கு, ஒன்றைச் செவ்வனே செய்யும் பண்பு அவசியம். எனது காலடியில் எப்போதும் தலை வணங்கினால் மட்டுமே அத்தகைய பணியைச் செய்ய முடியும். நீங்கள் நம்பிக்கையற்றவர்! பயனற்றவர்! நீங்கள் இங்கிருந்து செல்வதே நல்லது!"**

"ஊதியத்திற்காக நான் இங்கே இருக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால், நான் புறப்படுகிறேன்."

**"நீங்கள் எங்கே போவீர்கள்?"**

"எங்கேயேனும்... நான் வேலை தேடிக்கொள்வேன்."

**"உங்களுக்கு என் மீது ஏதேனும் அன்பு இருந்திருந்தால், நீங்கள் இப்படிப் பேச மாட்டீர்கள்"** என்று பாபா சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினார்.

கிருஷ்ணா கடுமையான வெறுப்படைந்த மனநிலையில் இருந்தார், பாபாவை விட்டு வெளியேற முடிவு செய்தார். அவர் கதவை நோக்கி ஓரடி

எடுத்துவைத்த போது, சட்டி பாபா சத்தமாகச் சிரித்தார். கிருஷ்ணா உடனே மஸ்திடம், "நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்?" எனக் கேட்டார்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

எரிச்சலில் கிருஷ்ணா கடுமையாக பதிலளித்தார், "நான் எங்கேயாவது செல்கிறேன்! இதனால் உங்களுக்கு என்ன?"

மஸ்த் அப்போது அறிவித்தார், "நீங்கள் உலகில் எங்குச் வேண்டுமானாலும் செல்லுங்கள்; நீங்கள் எங்கு சென்றாலும் அவர் அங்கே இருப்பார். அவர் இல்லாத இடம் எதுவும் இல்லை."

கிருஷ்ணா கதவைத் திறந்தபோது, பாபா வெளியே நின்று கொண்டிருந்தார். கிருஷ்ணா, பாபாவிடம் அவரை விட்டுச் செல்வதாகக் கூறினார். அதற்கு பாபா, "**நல்லது, ஆனால் முதலில் ஒன்றைச் செய்யுங்கள். சட்டி பாபாவிற்குக் காலை உணவைக் கொடுங்கள். அவர் அதை உண்டதும் நீங்கள் போகலாம்**" என்று பதிலளித்தார். அதற்கு கிருஷ்ணா ஒப்புக்கொண்டார். ஆனால் மஸ்த் சாப்பிட்டு முடித்த அந்த நேரத்தில், கிருஷ்ணாவின் கோபம் தணிந்தது. "**இப்போது நீங்கள் போகலாம்**" என்றார் பாபா.

"நான் இங்கு இருக்க விரும்புகிறேன்," என்றார் கிருஷ்ணா.

சட்டி பாபாவின் வார்த்தைகளை எதிரொலித்து, பாபா, "**நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள், ஆனால் நான் எப்பொழுதும் உங்களுடன் இருப்பேன். நான் உங்களிலும், உலகம் முழுவதிலும் இருக்கிறேன். நீங்கள் என்னை விட்டுச் சென்றாலும், மறுபடியும் வந்து, உங்கள் அடுத்த பிறவியில் என்னுடன் இருப்பீர்கள். நீங்கள் இங்கே இருக்க விரும்பினால் இருக்கலாம், ஆனால் எனக்காக இருங்கள், உங்களுக்காக அல்ல!**" என்று கூறி அவரை மன்னித்தார்.

ஒரு நாள் பாபா, எலிஸபெத்தை, குறிப்பிட்ட பணி நிமித்தம் குவெட்டா ரயில் நிலையத்திற்கு அனுப்பி வைத்த வேளையில், நடைமேடையில் 'விரும்பி, வீட்டில் வளர்க்கப்படும்' ஒரு வகையான கருப்பு வேட்டை நாயைப் பார்க்க நேர்ந்தது. எலிஸபெத், எப்பொழுதும் இதுபோன்ற வழிதவறிய விலங்குகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டார்; என்ன செய்வது என்று தெரியாமல் விசாரித்தபோது, நாயின் உரிமையாளர் அதைக் கைவிட்டுவிட்டதாகத் தெரியவந்தது.

இந்த நாய்க்காக மட்டுமே பாபா அவரை ரயில் நிலையத்திற்கு அனுப்பியுள்ளார் என்ற எண்ணம் அவர் மனதில் அலைமோதவே, அவர் அதைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். பாபா, மிக்க மகிழ்ச்சி அடைந்தார்; பாபா, அதற்கு 'ஃபவுண்டி' (FOUNDY) என்று பெயர் சூட்டி, சில நாட்களுக்கு அவரே உணவூட்டினார்.

ஒரு முறை குவெட்டாவில், கிட்டி, கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த போது, பாபா அவரைக் கடந்து சென்றார்; அவ்வேளையில் கிட்டியின் முதுகில் லேசாகத் தட்டிச் சென்றார். கிட்டி அதைக் குறித்து எதுவும்

யோசிக்காமல் தனது பணியைத் தொடர்ந்தார். பின்பு, பாபா கிட்டியை அழைத்து, “**கிணற்றைக் கடந்து செல்லும்போது நான் உங்களை அறைந்தது, உங்கள் மனதைப் புண்படுத்தியதா?**” என வினவினார்.

“இல்லை பாபா” என்றார். “நான் இதைப் பற்றி எதுவும் நினைக்கவில்லை.”

பாபா இவ்வாறு விளக்கினார், “**பிற ஆன்மீகத் தளங்களில், பணிகள் சீராக நடக்காத சில நேரங்களில், எவரையேனும் இப்படித் தாக்குவதன் மூலம், எனது சுமையின் ஒரு பாகத்தை நான் அவருடன் பகிர்ந்து கொள்கிறேன்; எனது சுமையை, அவ்வாறு பகிர்ந்து கொள்ளும் ஒருவர் மிகவும் அதிர்ஷ்டசாலி.**”

ருஸ்தம்-ஃபிரீனி இவர்களின் இளைய மகன் ஜங்கூ, பிறந்ததிலிருந்தே பெரும்பாலும் பாபாவுடன் தங்கியிருந்தான். குழந்தையை கவனிக்கும் பொறுப்பு கோர்ஷெத்திற்கு வழங்கப்பட்டதால், அவர்கள், பயண வேளையில் எங்கேனும் நிறுத்தும்போது, அவர், தனக்கும் குழந்தைக்கும் எப்போதும் அதிக இடத்தைக் கோரினார்.

இது அவ்வப்போது, கோர்ஷெத், (பொருட்கள் மற்றும் இருக்கைகளின் ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்த) ரானோ இருவருக்குமிடையே மோதலை ஏற்படுத்தியது.

குவெட்டாவிலும், கோர்ஷெத், ரானோவிடம் அதிக இடம் கோரியபோது, ரானோ அதைக் கண்டுகொள்ளாமல் புறக்கணித்தார். அப்போது பாபா, ரானோவிடம், “**கோர்ஷெத் அதிகமான இடத்தைப் பெற முடியாது என்பதை நீங்கள் ஏன் சொல்லக்கூடாது?**” எனக் கேட்டார்.

“பாபா, அவர் எதற்கும் செவிசாய்க்காத போது தேவையில்லாமல் மோதிக்கொள்வதில் என்ன பயன்?” ரானோ பதிலளித்தார்.

பாபா, “**அவருடன் ‘ஜங்-கூ’ இருப்பதால், அவர் போராடுகிறார்!**” (ஜங் என்றால் வடமொழியில், போராட்டம் என்று பொருள்) என்றார்.

1941, மார்ச் 15 அன்று, நோரினா, நதீன், எலிஸபெத் ஆகியோருடன் அவரது செய்தியை அமெரிக்காவில் பரப்புவது குறித்து பாபா விவாதித்தார்; அதுபோல, மார்கரெட், ஐரீன் இருவரும் ஐரோப்பாவில் அதே பணியைச் செய்யவிருந்தனர். அடுத்த நாள், பாபா அவர்களிடம் கூறினார்:

**நான் எனது மௌனத்தைக் கலைப்பதற்கு முன்பு, நீங்கள் உயிரோடிருந்தால், மேற்கத்திய நாடுகளிலிருந்து திரும்பி வர வேண்டும். வாழ்க்கையும், உடலும் பூஜ்ஜியம் என்று ஆன்மீகம் கூறுகிறது. ஆகவே நாம் ஆன்மீகவாதிகள் உயிரைத் துறக்கவில்லை என்றால், பொருள்முதல்வாதிகள் ஒருபோதும் உயிரைத் துறக்கக்கூடாது. இன்னும் அவர்கள் தங்கள் நாட்டிற்காக இறந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் உயிரைத் துறக்க வேண்டும் - அல்லது நீங்கள் நீண்ட காலத்திற்கு முன்பே உயிரைத்**

**துறந்திருக்க வேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் விரைவில் உயிரைத் துறக்க வேண்டும்.**

**நான் அறிவுறுத்தியபடி, ஆனால் எந்த தயக்கமும் இல்லாமல் செய்தால், மார்கரெட், ஐரீன் இருவருக்கும் உயிரைத் துறப்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கும். எனவே, செல்லத் தயாராக இருங்கள்!**

மார்ச் 17ஆம் தேதி, மெஹர் பாபா, 'ஜார்ஜ் பெர்னார்ட் ஷா'வைப் (GEORGE BERNARD SHAW) பற்றிக் கூறினார் (அவர் கூறியது எதுவும் பதிவு செய்யப்படவில்லை) மேலும் போரின் நிலை குறித்தும் கருத்துத் தெரிவித்தார்:

**போரில் எவரும் வெற்றியடைவும், தோல்வியை சந்திக்கவும் மாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. இது ஒரு புதிய, மூன்றாவது முடிவாக இருக்கும். இங்கிலாந்து மிகவும் பாதிக்கப்படும். இந்தியா குழப்பத்தில் இருக்கும். ரஷ்யா திறவுகோலை வைத்துள்ளது; அது, அதி புத்திசாலி. ரஷ்யா அனைத்து நாடுகளுக்கும் உறுதுணையாகவும் அதேவேளையில் அப்படி இல்லாமலும் உள்ளது - இதனால் தனியாக ஒதுங்கி இருப்பதுபோலும் தோன்றுகிறது.**

**ஆங்கில 'பார்பர்',** ENGLISH BARBER **(டான்) ஐ.எம்.எஸ். (**INDIAN MEDICAL SERVICE**, இந்த மருத்துவ சேவை), பெங்களூர், பூனா அல்லது அஹமதுநகரில் இணைவார் என நம்பப்படுகிறது. அவர் என்னிடமிருந்து விலகியிருக்க வேண்டியிருப்பதால் மிகவும் கஷ்டமாக உணர்கிறார், ஆனால் அவர் செல்ல வேண்டியிருக்கும்! இது சட்டம், மேலும் அவர் இந்தியாவை விட்டு வெளியேற மாட்டார் என்று நான் அவருக்கு உறுதியளித்துள்ளேன்.**

**ரூஸ்வெல்ட் (**ROOSEVELT**) பேசுகிறார் என்றால் போர் நிகழும் என்று அர்த்தம். எதிர்காலத்தில் மனிதகுலத்தின் போராட்டத்தில் அமெரிக்கா மிகப் பெரிய பங்கை வகிக்கும். இந்தியாவில் 700க்கும் மேற்பட்ட சமூகங்கள் மற்றும் சாதிகள் உள்ளன, எனவே இது இந்தியாவிற்கு மிகவும் கடினம்.**

நோரினா கேட்டார், "இவை அனைத்தும் ஒரு முடிவிற்கு வர நீண்ட காலம் பிடிக்காதா?"

பாபா எழுத்துப்பலகையில் பதிலளித்தார்:

**ஒரே நொடியில், குவெட்டாவில் நிகழ்ந்த பூகம்பத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். எனவே நமக்கு, வேலை செய்ய பல வினாடிகள் உள்ளன. திடீரென, ஹிட்லர் இறந்துவிட்டால், முஸோலினி கொல்லப்பட்டால், ஸ்டாலினுக்கு மாரடைப்பு ஏற்பட்டால் மற்றும் அவர்களைப் பின்பற்றுபவர்கள் சோர்வடைந்தால், அதற்கு அதிக நேரம் தேவையில்லை.**

**மக்கள் ஜப்பானை விட ஜெர்மனியையும் இத்தாலியையும் விரும்புகிறார்கள். ஜப்பான் ஒரு பாம்பைப் போன்றது! இந்திய தேசம் ஒற்றுமையை நிலைநாட்டியிருந்தால், ஜப்பானை நசுக்கியிருக்க முடியும்,**

**ஏனெனில் எல்லா கட்சிகளும் ஜப்பானை வெறுக்கின்றன. ஜப்பான் மீதான வெறுப்பில் இந்தியாவும் ஒருமனதாக உள்ளது.**

**இந்தியா மீது குண்டு வீசப்படும் - ஒன்றல்ல, பல! குறைந்த பட்சம், வெளிநாடுகளுக்குச் செல்லும் துருப்புக்கள் அற்புதமான நாய்களை (ஃபவுண்டி போன்றவை) இங்கே விட்டுச்செல்லும்!"**

மார்ச் 22 அன்று மெஹர் பாபாவை சந்திக்க, சாஞ்சி குவெட்டாவிற்கு வந்து, பாபாவைப் பற்றி அண்மையில் வெளியிடப்பட்ட சில விமர்சனக் கட்டுரைகளைக் காட்டினார், அவை குஜராத்தி செய்தித்தாள்களில் வெளிவந்தன (பெரும்பாலும் கர்னல் ஈரானி மற்றும் பெங்களூர் வழக்கறிஞரான வெங்கடபாதைய்யா எழுதியவை). அந்தக் கட்டுரைகளை அலட்சியமாகப் புறக்கணித்து அமைதியாக இருக்குமாறு பாபா, சாஞ்சிக்கு உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து, நோரினா, தேஷ்முக் ஆகியோர் பொது சொற்பொழிவுகளை வழங்க ஏற்பாடு செய்வதற்காக, சாஞ்சி, பீலாமாயுடன் கராச்சிக்கு அனுப்பப்பட்டனர். அவர் ஏற்கனவே பாபாவை சந்திக்க 1200 மைல்கள் பயணம் செய்திருந்தார்; அதன் பின்னர் ஓய்வில்லாமல், அதே நாளில் மேலும் 700 மைல்கள் பயணம் செய்ய வேண்டியதாயிற்று!

பாபா, சட்டி பாபாவுடன் ஒரு நாளைக்கு பல முறை பணிபுரிந்து வந்தார். இதற்கிடையில், பைதூல், ரூஸி பாப் இருவரும் எவ்வளவுதான் முயன்றும், ஒரு மஸ்தைக் கூட பங்களாவிற்கு அழைத்துவர முடியவில்லை; எனவே பாபா, அவர்களைத் தொடர்பு கொள்வதற்காக வெளியே செல்ல வேண்டியிருந்தது; மேலும், தெருக்களில் அல்லது அசுத்தமான குடில்களில் இருந்த மஸ்துகளை அங்கேயே நீராட்டி, உடை அணிவித்து, உணவளித்தார்.

மார்ச் 25 அன்று, பாபாவைப் பார்க்க அவருடன் வருமாறு பைதூல், குவெட்டாவில் ஒரு குறிப்பிட்ட மஸ்தை வற்புறுத்த முயன்றபோது, "நான் போகமாட்டேன்!... எனது படகு அந்தப் 'பெருங்கடலில்' மூழ்கிவிடும்!" என்றார். இந்த மஸ்த் குவெட்டாவின் ஆன்மீகப் பொறுப்பாளரான 'நாதிர் அலி ஷா' (NADIR ALI SHAH) ஆவார்; அவர் குளிர்காலத்திலும் ஒரு கூடாரத்தின் வெளியே வாழ்ந்து வந்தார். பாபா அவரை நேரில் தொடர்பு கொள்ளவில்லை, ஆனால் ஒரு காரில் அந்தக் கூடாரத்தைச் சுற்றி வந்தார்.

மெஹர் பாபா மார்ச் 25 அன்று, ஆண் மற்றும் பெண் மண்டலியுடன் தனித்தனியாக, சந்திப்புகளை நடத்தினார்; விரைவில் குவெட்டாவை விட்டு வெளியேற முடிவு செய்யப்பட்டது. அதற்குள், குளிர்ந்த காலநிலை காரணமாக பெண்மணிகளில் பாதிபேர் உடல்நலமில்லாமல் இருந்தனர்; இவ்வளவு பெரிய குழுவிற்கு, பங்களா மிகவும் சிறியதாக இருந்தது. அங்கு, பொருத்தமான தங்குமிடங்களைத் தேடுவதற்காக, கராச்சியில் இருந்த சாஞ்சிக்குத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு, சாஞ்சி அத்தகைய இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என்று பாபாவிற்குத் தெரிவித்தார்.

பீலாமாய், பாபாவைப் பார்க்கவும், அவரருகில் இருக்கவும் ஏங்கிக் கொண்டிருந்தார். கராச்சியில் குழுவிற்கு வசதியான இடம் கிடைக்காததால் அவர் மிகவும் ஏமாற்றமடைந்தார். ஏப்ரல் 1 அன்று பாபா அவருக்கு, தொலைத்தந்தி அனுப்பி, குவெட்டா வருமாறு அழைத்தார்; அங்கு, பீலாமாய் ஒரு நாள் தங்குவதற்காக வந்தார்.

மெஹர் பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்ட வேளையில், பொது தரிசனத்தை அனுமதிக்கவில்லை, ஆனால் மக்கள் அவரைப் பற்றி மேலும் அறிய ஆர்வமாக இருந்தனர். ஏப்ரல் 11, 16, 17 ஆகிய தேதிகளில் மூன்று விரிவுரைகளை வழங்க நோரினா, தேஷ்முக் இருவரும் கராச்சிக்குச் சென்றனர்; மேலும் ஜாம்ஷெட் மேத்தா (JAMSHED METHA) ஏப்ரல் 20ஆம் தேதி மற்றுமொரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார், இதில் கிட்டத்தட்ட 1200 பேர் கலந்து கொண்டனர். கராச்சியிலிருந்து, நோரினா, தேஷ்முக் ஆகியோர் 'ஸக்கர்' (SUKKUR) நகருக்குச் சென்றனர், அங்கு 22ஆம் தேதி அவர்கள் மெஹர் பாபாவைப் பற்றிய மற்றொரு சொற்பொழிவை நிகழ்த்தினர்.

1941, ஏப்ரல் 1 முதல், மெஹர் பாபா நான்கு வாரங்களுக்கு மற்றுமோர் உபவாசத்தைத் தொடங்கினார்: முதல் பதினான்கு நாட்கள் பழங்கள் மட்டும்; அடுத்த ஏழு நாட்களுக்கு ஒரு கப் தேநீர் ஒரு நாளைக்கு மூன்று முறை; கடைசி ஏழு நாட்கள் தண்ணீர் மட்டுமே அருந்த வேண்டும்.

கராச்சியில் தங்குவதற்குப் பொருத்தமான இடம் கிடைக்காததால், பப்பா ஜெஸவாலா, ஸவக் கொத்வால் இருவரும் டெஹ்ரா டூன் (DEHRA DUN) சென்று, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஏப்ரல் 3ஆம் நாள் மெஹராபாத்திலிருந்து இருவரும் டெஹ்ரா டூன் வந்து, கேக்கி நலவாலாவைத் (KEKI NALAVALA) தொடர்பு கொண்டனர். கேக்கி இதுவரை மெஹர் பாபாவை சந்தித்ததில்லை, ஆனால் டெல்லியைச் சேர்ந்த கேக்கி தேசாய் வழியாக, பாபாவைப் பற்றி அவர் அறிந்திருந்தார். கேக்கி நலவாலாவின் உதவியோடு, பப்பா, ஸவக் இருவரும் ஒரு பங்களாவைத் தேர்ந்தெடுத்து, குவெட்டாவில் பாபாவிற்குத் தெரிவித்தனர்.

இதனால், கராச்சி செல்லும் திட்டத்தை ரத்து செய்து, டெஹ்ரா டூன் புறப்பட்டனர். லாஹூர் வரை ரயிலில் நீலப்பேருந்து மற்றும் எலிஸபெத்தின் கார் எடுத்துச் செல்லப்பட்டன. '**பப்பா, ஸவக் இருவரும் லாஹூரில் குழுவை சந்திக்கும்படியும், லாஹூருக்கு வந்ததும் ஒரு சிறுவனுடன் பாபா பணிபுரிய விரும்பியதால் அதற்கேற்ற சிறுவன் ஒருவனைக் கண்டுபிடித்து, தயாராக வைத்திருக்கும்படியும்**' பப்பாவிற்கு அறிவுறுத்தப்பட்டது.

1941 ஏப்ரல் 7ஆம் நாள், குவெட்டாவில் தனது பணியை நிறைவு செய்து, பாபா முழுக் குழுவுடன், முன்பதிவு செய்யப்பட்ட மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியில் லாஹூருக்குப் புறப்பட்டார். மிகவும் வெப்பமான இரண்டு இரவும்,

ஒரு பகலையும் ரயிலில் கழித்து 9 அன்று காலை பத்து மணிக்கு லாஹூர் வந்து சேர்ந்தார். மூன்று நாட்களுக்கு முன்னரே லாஹூருக்கு அனுப்பப்பட்ட பப்பா, நீலு இருவரும் அவர்களை எதிர்நோக்கி நின்றனர்.

பப்பா ஜெஸவாலா ஏறக்குறைய 60 சிறுவர்களை அழைத்து வந்து, ரயில் நிலைய நடை மேடையில் வரிசையில் நிற்கச் செய்தது பாபாவின் கவனத்தை ஈர்த்தது. பப்பா பெருமையுடன் பாபாவிடம், "நீங்கள் விரும்பும் சிறுவர்களைத் தேர்ந்தெடுங்கள். இதுபோன்ற நல்ல சிறுவர்களைக் கண்டுபிடிப்பது எவ்வளவு கடினம் என்று உங்களுக்குத் தெரியாது!" இது பாபாவை சிரிக்க வைத்தது, ஒவ்வொரு சிறுவனுக்கும் ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுத்து, அனைவரையும் திருப்பி அனுப்பி வைத்தார்.

"உங்களுக்கு ஒருவனைக் கூடப் பிடிக்கவில்லையா?" என்று பப்பா நம்பமுடியாமல் கேட்டார்.

"**விருப்பம் என்ற கேள்விக்கு இடமில்லை**" என்று பாபா கூறினார். "**எனது பணி முடிந்தது**."

"உங்கள் வேலை முடிந்துவிட்டதா? ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் செலுத்துவதன் மூலம் அது எப்படி முடியும்? நானும் அதைச் செய்திருக்க முடியும், மேலும் அவர்களைச் சுற்றி வளைத்து இங்குக் கொண்டு வரவேண்டிய சிரமம் எனக்கு ஏற்பட்டிருக்காது."

பாபா சிரித்தபடியே, "**இது எனது பணி; அதை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?**" என்று கேட்டார்.

"விசித்திரமானது... உண்மையில் மிகவும் விசித்திரமான பணி! இவ்வளவு முயற்சி செய்து, நான் பல சிறுவர்களைக் கண்டுபிடித்து இங்கு அழைத்து வந்தேன் - நீங்கள் அனைவரையும் திருப்பி அனுப்பிவிட்டீர்கள். இதுதான் நீங்கள் பணிபுரியும் முறையா?" பப்பா வினவினார்.

இது பாபாவை மேலும் சிரிக்க வைத்தது, அவர் பப்பாவை அமைதிப்படுத்தினார், "**கவலைப்படாதீர்கள், பப்பா. உங்கள் உழைப்பின் பலனை நீங்கள் அறுவடை செய்வீர்கள். உங்களை எனக்கு சேவை செய்ய அனுமதிக்கும் நோக்கத்தில் மட்டுமே இந்த வேலை உங்களுக்கு வழங்கப்பட்டது**."

பாபா லாஹூரில் தங்கவில்லை. ரயிலிலிருந்து இறங்கி, அவர் உடனடியாகக் காரில் டெஹ்ரா டூன் புறப்பட்டார், பிற அனைவரும் நீலப்பேருந்தில் பின்தொடர்ந்தனர். எரச் பெங்களூருக்குத் திரும்ப அனுப்பப்பட்டதால், இப்போது பப்பா தனது உதவியாளராக நீலுவுடன் நீலப்பேருந்தை ஓட்டிச் சென்றார், எலிஸபெத் காரை ஓட்டினார். இதர ஆண் மண்டலி, சட்டி பாபாவுடன் ரயிலில் டெஹ்ரா டூன் சென்றனர். வழியில், பாபா அமிர்தசரஸில் (AMRITSAR) ஒரு மஸ்தையும், கன்னாவில் (KHANNA) இரண்டு மஸ்துகளையும் தொடர்பு கொண்டார்.

பப்பா ஒரு சிறந்த ஓட்டுநர் அல்ல ('நான் சந்தித்த ஓட்டுநர்களில் இவர் மிக மோசம்', நீலு தனது நாட்குறிப்பில் பதிவுசெய்திருந்தார்), மேலும் அடிக்கடி

இயந்திரம் பழுதாகி பல சிக்கல்கள் எழுந்தன. லுதியானாவில் (LUDHIANA) அவர்கள் பேருந்தை சரிசெய்த பிறகு, வழியில் ஒரு கோரப்புயல் உருவாகி, ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தூசி மேகங்களை எழுப்பி, பார்வையைத் தடைசெய்தது. அதிர்ஷ்டவசமாக ஒரு சில மழைத்துளிகளால் விரைவில் தூசி அகன்றது.

பாபாவும் குழுவும் கன்னா பயணிகள் விடுதியில் இரவைக் கழித்து, மறுநாள் ஏப்ரல் 10 அன்று மதியம் டெஹ்ரா டூன் வந்து சேர்ந்தனர்.

இதற்கிடையில், 'லக்ஸர்' (LAKSAR) நகரில், ஆண் மண்டலி சட்டி பாபாவுடன் ரயில்களை மாற்ற வேண்டியிருந்த வேளையில், அவர் அதில் செல்ல மறுத்துவிட்டார். ரயில் புறப்படத் தயாராக இருந்த அந்த நேரத்தில், விஷ்ணு இந்தத் தந்திரத்தைக் கையாண்டார்: அவர் மஸ்திடம், "நாங்கள் உங்களை உங்கள் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்ல முயற்சிக்கிறோம், ஆனால் நீங்கள் ரயிலில் ஏறாவிட்டால் எங்களால் அதைச் செய்ய முடியாது" என்று கூறினார். தந்திரம் பலித்தது, சட்டி பாபா மகிழ்ச்சியுடன் ரயிலில் ஏறினார். அதைக் கேட்ட பாபா சிரித்துக் கொண்டே, "**விஷ்ணு குள்ளமாக இருந்தாலும் ஒன்றை விற்று விலையாக்குவதிலும், பயண ஏற்பாடுகளைச் செய்வதிலும் கெட்டிக்காரர். ஆனால் இப்போது நான் அவரை நெப்போலியனைப் போலவும், நெப்போலியனைப் போல் உழைப்பதையும் காண்கிறேன் - அவரது மூளை கூட நெப்போலியனைப் போல வேலை செய்கிறது!**"



மெஹர் **பாபா (**MEHER BABA**)- 1941**

# டெஹ்ரா டூன், அஜ்மீர்

**(Dehra Dun, Ajmer)**

டெஹ்ரா டூன் வந்து சேர்ந்ததும், பாபா மஸ்த் பணிகளில் தன்னை முழுவீச்சில் ஈடுபடுத்திக் கொண்டார். அவர் நகரில் சிலரைத் தொடர்பு கொண்டு, மஸ்துகளைக் கண்டுபிடித்து தாலான்வாலாவில் (DALANWALA) அமைந்த நம்பர் 1 லக்ஷ்மி சாலையில் 'சுஷீலா பவன்' (SUSHILA BHAWAN) என்று அழைக்கப்படும் தனது பங்களாவிற்கு அழைத்து வந்தார்.

உபவாசத்திற்கான கால அட்டவணையின்படி, ஏப்ரல் 15 அன்று, பழங்கள் உண்பதை நிறுத்திவிட்டு, தேநீர் மட்டும் அருந்தி உபவாசத்தைத் தொடங்கினார். ஏப்ரல் 22ஆம் நாள் முதல் பாபா ஒரு வாரம் கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொண்டு, மஸ்துகளுடன் பணிபுரிய ஒரு வாரத்திற்காக ஒரு தனி வீடு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நேரத்தில், மெஹர் பாபா பெண் மண்டலியைக் கூடப் பார்க்கவில்லை; தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருந்தார். அவர் சட்டி பாபாவுடனும், பைதூல் மற்றும் பப்பா அழைத்து வந்த மஸ்துகளுடனும் பணிபுரிந்தார்.

பாபா இதற்கு முன்பும் பல முறை உபவாசம் கடைப்பிடித்தார், ஆனால் இந்த ஒரு மாத கால உபவாசம் அவரது உடல்நிலையைப் பெருமளவில் பலவீனப்படுத்தியது. காக்கா சில நாட்களுக்காக வெளியே சென்று, ஏப்ரல் 26 அன்று திரும்பி வந்தார்; சாஞ்சி, தேஷ்முக், நோரினா ஆகியோர் அவர்களது சொற்பொழிவு பயணத்தை முடித்து 28ஆம் தேதி பாபாவைப் பார்க்க வந்தனர். சாஞ்சி சில மணிநேரங்கள் பாபாவுடன் பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதித்தார், பின்பு நதீனுடன் (சில வேலைகள் நிமித்தம்) பாபாவின் அறிவுறுத்தல்படி மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

அவர்களிடையே நடந்த உரையாடலின் போது, பாபா மிகவும் பலவீனமாகத் தோன்றினார்; ஏகாந்தவாசத்தில் அவரது பணி குறித்த கேள்விகளுக்கு பாபா "**ஆம்**" அல்லது "**இல்லை**" என்று பதில் கொடுக்கக் கூட அவர் தலையை அசைக்க முடியாத அளவிற்கு, பலவீனமாக இருந்தார். இவ்வளவு வலுவற்ற நிலையில் மண்டலி பாபாவை ஒருபோதும் பார்த்ததில்லை. 'இது மிகவும் வேதனைக்குரிய காட்சி' என்று சாஞ்சி அவரது நாளேட்டில் பதிவு செய்திருந்தார். 'கடந்த காலங்களில், ஸ்ரீ பெரும்பாலும் உபவாசம் கடைப்பிடித்தார், ஆனால் இதுபோன்ற பலவீனத்தை நாங்கள் ஒருபோதும் பார்த்ததில்லை. உலகின் நிலைமைகள், இக்கட்டான கட்டத்தில் இருப்பதால், 1941 ஆகஸ்ட் 9ஆம் தேதிக்குப் பின்னர், அவர் முழுமையான ஏகாந்தவாசத்தை மேற்கொள்ள விரும்புகிறார்.'

மினூ கராஸுக்கு எழுதிய கடிதத்தில் சாஞ்சி விரிவாகக் குறிப்பிட்டிருந்தார் (1941, ஏப்ரல் 30):

இந்த நேரத்தில், (பாபா) அவருடைய ‘தொழில் நிர்வாகம்’ என்று பொருள்படும் தொனியில் கூறுகிறார், இது போன்ற ஆச்சரியங்கள், பக்குவப்பட்ட சீடர்களாகிய எங்களுக்கு ஒரு பொருட்டல்ல; இருந்தும் பாபாவைப் பொறுத்தவரை எந்நாளிலும், எந்நேரத்திலும், இன்னும் ஒரு திடுக்கிடும் அதிர்ச்சியைக் கொடுப்பதானால் ஆச்சரியப்படுவதற்கில்லை. உலகெங்கிலும் உள்ள நிகழ்வுகளின் போக்கு மற்றும் பாபா தன்னைத்தானே ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் ஆன்மீக (உள்) பணி ஆகியவை, எதிர்காலத்தின் கடுமையான நிகழ்வுகளை முன்வைப்பதன் அறிகுறி என்றே கூறலாம். அனைத்தையும், குறிப்பாக, பல ஆண்டுகளாக ஆழமாகவும் கடினமாகவும் சிக்கியுள்ள விஷயங்களை அதன் அஸ்திவாரத்திலிருந்து தகர்த்தெறிவது போலத் தோன்றுகிறது. ஆழமாக வேரூன்றியதை அடியோடு அகற்ற ஒரு சிறிய அதிர்ச்சி மட்டும் போதுமானதாக இருக்காது. காத்திருந்து பார்ப்போம்.

இந்த நேரத்தில் விஷ்ணு, ஆதி சீனியருக்கு எழுதினார்:

பாபா உள்ளளவில் மிகவும் கடினமாகப் பணிபுரிந்து கொண்டிருக்க வேண்டும். அவரது முந்தைய உபவாசங்களில் அவர் இந்த அளவிற்கு பலவீனமாக இருந்ததை நான் பார்த்ததில்லை. இந்த முறை அவரது பலவீனம் போரின் நிமித்தம் பெரும் அழுத்தத்தின் காரணமாக இருக்க வேண்டும்…

டாக்டர் நீலுவும் இவ்வாறு விவரித்தார்:

பாபா, தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருந்த வேளையில், அவர் மிகவும் பலவீனமாக இருந்தார், ஆனால் தினமும் சட்டி பாபாவை நீராட்டி, உணவூட்டி இதர விஷயங்களில் கலந்துகொண்டார். மேலும், அவர் மேல்நிலை மஸ்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டுவர பைதூல், பப்பா ஜெஸவாலாவைத் தொலைதூரத்திற்கு அனுப்பி வைத்தார்; அவர்களைக் கொணர்ந்ததும் உணவளித்து திருப்பி அனுப்பினார்.

உபவாசத்தின் போது அவர் மேற்கொண்ட இந்தக் கடினமான பணி அவரது உடல்நிலையில் அதீத தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது கடினமான பணியைக் குறித்த எனது நிலையான, தொடர்ந்து முன்வைக்கும் எதிர்ப்புகளை அவர் ஒருபோதும் கண்டுகொள்வதில்லை. நான் ஒவ்வொரு நாளும் அவரது இதயத்தை அவ்வப்போது பரிசோதனை செய்ய வேண்டியிருந்தது, மேலும் அவரது உயர் இரத்த அழுத்தத்தின் காரணமாக, உபவாசத்தின் போது அவரது இதயத்தால் சிறிதளவு சிரமத்தைக் கூடத் தாங்க முடியவில்லை. ஆனால் அவர் ஒருபோதும் நான் சொல்வதைக் கேட்பதில்லை, எல்லா நேரத்திலும் என்னை கவலையுறச் செய்து, தனது பணியைத் தொடர்கிறார்.

1941 ஏப்ரல் 29, செவ்வாயன்று ஏகாந்தவாசம் நிறைவுற்றதும், பாபா, அவரது உபவாசத்தையும் முடித்துக் கொண்டார். ஏப்ரல் 28 நள்ளிரவு வரை பாபா, ஆண் மண்டலியுடன் அமர்ந்திருந்து, ஒவ்வொருவருக்கும் ஒரு கரண்டி ஆரஞ்சு பழரசம் கொடுத்து, பின்னர் அவரும் சிறிதளவு பருகினார். அடுத்த இரண்டு நாட்களுக்கு, பாபா, பழரசம் மட்டுமே அருந்தி, 30 அன்று சிறிதளவு

வேகவைத்த கீரை சூப் அருந்தினார். மே 1 அன்று பாபா ஒரு நாளைக்கு ஒரு முறை சாதமும் பருப்பும் உண்ணத் தொடங்கினார்.

டாக்டர் தவ்லத் ஸிங் (DR. DAULAT SINGH) இங்கிலாந்தில் மருத்துவம் பயின்று வந்தபோது, ஒரு நாள் அவர் கண்ட கனவில், பாபாவின் சீடர் (சுவாமி பபானந்தா), அவருக்குத் தனது குருநாதரை (மெஹர் பாபா) அறிமுகப்படுத்தினார். பபானந்தாவையோ அல்லது மெஹர் பாபாவையோ இதுவரை தவ்லத் ஸிங் சந்தித்ததில்லை. கனவில், குருநாதர், தவ்லத் ஸிங்கிடம் "**இங்கிலாந்தை விட்டு வெளியேறி இந்தியாவிற்குத் திரும்புங்கள். உங்களுடன் எனக்கு ஆழமான தொடர்புகள் உள்ளன**" என்று வலியுறுத்தினார். குருநாதர் யார் என்று அவருக்குத் தெரியாத போதிலும், தவ்லத் ஸிங் அந்த வழிகாட்டுதலைப் பின்பற்றினார்.

இந்தியாவில் தவ்லத் ஸிங் அவரது குடும்பத்தினருடன் ஸ்ரீநகரில் குடியேறி, பிரபலமான மருத்துவராகி, பின்பு மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வேளையில், அவர் தனது குருநாதரைத் தேடத் தொடங்கினார், ஆனால் கண்டுகொள்ள முடியவில்லை. ஒரு நாள், அவர் ரயிலில் பயணம் செய்யும் போது, அருகில் அமர்ந்திருந்த ஒருவர் புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார்; சிறிது நேரம் கழித்து, தவ்லத் ஸிங், சாதாரணமாக அந்தப் புத்தகத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். அந்தப் புத்தகத்தில் இருந்த சித்திரம் அவரது கனவில் தோன்றிய அதே மனிதர். அவர் அதைக் கேட்டு வாங்கி, பார்த்தபோது, 'மெஹர் பாபா, அஹமதுநகர்' என்ற பெயரைப் படிக்க நேர்ந்தது. அடுத்த ரயில் நிலையத்தில் அவர் இறங்கி, அஹமதுநகருக்குச் செல்லும் முதல் ரயிலில் பயணம் செய்தார்! அஹமதுநகர் வந்து விசாரித்த போது, ஒரு குதிரை வண்டி அவரை மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றது. இப்போது பல வருடங்களுக்குப் பின்னர், அவரது அனைத்து ஆசைகளும் நிறைவேறவிருந்த அந்தத் தருணத்தில், அவர் வந்ததும் பாபாவின் தரிசனத்திற்காக விரைந்தார். அந்த நேரத்தில் மெஹராபாத்தில் இருந்த பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது, ஆனால் பாபா, அவரைப் பார்க்க மறுத்துவிட்டார்.

தவ்லத் ஸிங் தன்னைக் கட்டுப்படுத்த முயன்றும், அவரது ஏமாற்றம் மறைக்க முடியாத அளவிற்கு இருந்தது. அவர் உரக்க தேம்பித் தேம்பி அழத் தொடங்கினார், "மெஹர் பாபா என்னைப் பார்க்காத அளவிற்கு நான் ஒரு பாவியா? அவர் மீதான என் அன்பு உண்மையில்லையா? நான் அவரை எந்த வகையிலாவது அதிருப்தியடையச் செய்திருக்கிறேனா?" எனக் கதறினார். சில நிமிடங்களுக்குப் பின்னர், அவர் தன் அமைதியைத் திரும்பப் பெற்று, மெஹர் பாபா அவருக்கு தரிசனம் வழங்குவது வரை சாலையோரத்தில் இருந்த ஒரு மரத்தின் கீழ் அமர தீர்மானித்தார். அவர் உணவு, தண்ணீர் எதுவும் இல்லாமல் பத்து நாட்கள் அங்கேயே இருந்தார்.

பத்து நாட்களுக்குப் பிறகு, டாக்டர் தவ்லத் ஸிங் காஷ்மீருக்குத் திரும்பிச் செல்லவும், லாஹூருக்குப் பயணம் செய்து, கராச்சியில் வாழும் பீலாமாயைத்

தொடர்பு கொள்ளவும் அறிவுறுத்தி பாபா, ஆதி சீனியரை அனுப்பி வைத்தார். தவ்லத் ஸிங், பாபா கூறியபடியே செய்தார்; நொறுங்கிய இதயத்துடன் மெஹராபாத்தை விட்டு வெளியேறினார்.

அவர் பீலாமாயைத் தொடர்பு கொண்டு, மெஹர் பாபா அந்தப் பகுதியில் இருக்கும் தருணத்தில் அவருக்குத் தெரிவிப்பதாக உறுதியளிக்குமாறு கேட்டுக்கொண்டார். கண்கள் குளமாக, அவர் தனது பல்லாண்டு கால தேடலையும், மெஹராபாத்தில் நடந்த சமீபத்திய அனுபவத்தையும் விவரித்தார்.

மெஹர் பாபா அருகாமையில் இருப்பதை அறிந்த தவ்லத் ஸிங் **1941**, ஏப்ரல் **29** அன்று மாலை பாபாவின் தரிசனத்திற்காக, காஷ்மீரிலிருந்து டெஹ்ரா டூன் வந்தார். இது இந்தியாவில் கோடைக்காலம், ஆனால் தவ்லத் ஸிங் பாபாவைப் பார்க்கும் ஏக்கத்தில் அமைதியற்றவராக இருந்தார்; அவர் நேரடியாக ஸ்ரீநகரிலிருந்து புறப்பட்டு, இந்தப் பயங்கரமான வெப்பத்திலும், ரயிலில் **850** மைல் தூரம் பயணம் செய்து, வெப்பம் தாங்க முடியாமல் இரண்டு முறை மயக்கமடைந்து இறுதியில் டெஹ்ரா டூன் வந்து சேர்ந்தார். நீலு அவரை அமைதிப்படுத்த முயன்றார், அவருடன் நீண்ட நேரம் பேசினார், பாபாவின் ஏகாந்தவாச காலத்தில் அவர் எவரையும் சந்திப்பதில்லை என்றும் விளக்கினார். ஆனால் தவ்லத் ஸிங் அதைக் கேட்க மறுத்து, "எனக்கு தரிசனம் கிடைக்காவிடில், நான் உயிரைத் துறந்துவிடுவேன்!" என்றார்.

நீலு, பாபாவிற்கு இந்தத் தகவலை வழங்கியபோது, பாபா, தவ்லத் ஸிங்கை தூரத்திலிருந்து பார்க்க அனுமதித்தார்; அவர் எந்த வகையிலும் அவரை வணங்கவோ, மரியாதை செலுத்தவோ கூடாது என்றும் குறிப்பிட்டார். தரையில் ஆறு ஆரஞ்சு பழங்களை வைத்து, தவ்லத் ஸிங், "நான் உங்களுக்கு வழங்குவதற்கு வேறு எதுவும் இல்லை" என்றார். தூரத்திலிருந்து, பாபா அவருக்கு ஒரு செய்தியை அனுப்பினார், "**நீங்கள் எனக்கு என்ன கொடுத்தீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது**! **நீங்கள் கொடுத்ததே மிக அதிகம்**! **மகிழ்ச்சியுடன் புறப்படுங்கள், திரும்பிப் பார்க்க வேண்டாம்**!" தவ்லத் ஸிங் பாபாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நோரினாவுடன் ஒரு மணி நேரம் பேசிய பிறகு வெளியேறினார். "அந்த அரிய தருணங்களில்," காலம் பறைசாற்றியது, "ஒரு சிறப்பு வகையான தெய்வீக மதுபானத்தை மருத்துவர் பெற்றுக்கொண்டார், இது அவரது வாழ்நாள் முழுவதும் அவரை இறை போதைக்கு உள்ளாக்கியது!"

இந்தக் காலகட்டத்தில், கேக்கி ருஸ்தம் நலவாலா (KEKI RUSTOM NALAVALA, **32**), முதன்முறையாக பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். ஆனால் பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக, அவரும் பாபாவை தூரத்திலிருந்து மட்டுமே பார்க்க அனுமதிக்கப்பட்டார். பாபா அவரது அறையில் இருந்தார்; கேக்கி அவரை வாழ்த்தி வணங்க வெளியே நின்றபோது, அவர் பாபாவின் கால்களை மட்டுமே பார்க்க முடிந்தது. அவர் மிகுந்த ஏமாற்றத்துடன் வெளியேறினார். ஆனால்

அவரது ஏமாற்றம் அவரை பாபாவின் நிலையான நினைவிற்கு ஆளாக்கி, குருநாதருடன் நெருக்கமாக வர வழிவகுத்தது. டெஹ்ரா டூனில் தங்கியிருந்த காலத்தில் ஒரு நாள், பாபா நிச்சயமாக அவரை அழைப்பார் என்று நினைத்தார், ஆனால் பாபா அழைக்கவில்லை. என்றாலும் , கேக்கியுடன் உருவாக்கிய அந்த இடைவெளி மூலமாக, பாபா அவரை உள்ளளவில் நெருங்கச் செய்தார்.

வெப்பமான கோடைகாலத்தில், பஜாரில் நல்ல காய்கறிகள் எதுவும் கிடைக்கவில்லை, மேலும், ரானோ இது குறித்து, பஜாருக்குச் செல்லும் விஷ்ணுவிடம் புகார் கூறினார். ஒரு முறை, விஷ்ணு உலர்ந்த பட்டாணியை வாங்கி வந்தார். பட்டாணியை வெளியே எடுத்து, ரானோ அவற்றை ஒரு பாட்டிலில் அடைத்து, 'வயிற்று வலிக்கு, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு மாத்திரையை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று குறிப்புச் சீட்டு ஒன்றை பாட்டிலில் பொருத்தியிருந்தார். அடுத்த நாள் விஷ்ணு, ரானோவிடம் பெண்களின் சாமான்கள் பட்டியலைக் கேட்டபோது, ரானோ அவரிடம் அந்தப் பாட்டிலைக் கொடுத்தார்.

அதிலிருந்த குறிப்புச் சீட்டைப் படித்து, விஷ்ணு அடக்கமுடியாமல் சிரித்தார். ஆனால், இந்த வேடிக்கையான நிகழ்வைக் கேள்விப்பட்ட பாபா, விஷ்ணுவிடம் ஒவ்வொரு மணி நேரமும் 'மாத்திரை' ஒன்றை எடுக்குமாறு கட்டளையிட்டார். இரவு நேரங்களிலும் கூட, விஷ்ணு தனது 'விசித்திர பட்டாணி' மாத்திரையை எடுக்க ஒவ்வொரு மணி நேரமும் எழுந்திருக்க வேண்டியிருந்தது.

கிருஷ்ணாவின் பொறுப்புகளில் ஒன்று, தினமும் அருகிலுள்ள கிராமத்திற்குச் சென்று பால் வாங்கி வருவது. ஒரு நாள் அவர் சாலையோரம் நடந்துசென்ற வேளையில் நழுவி நதியில் விழுந்தார்; விரைவான நீரோட்டம் அவரை அடித்துச் சென்றது. அவர் தன் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த அந்த நேரத்தில், டெஹ்ரா டூன் பங்களாவில் இருந்த பாபா, **"கவனமாக இருங்கள், நீங்கள் கீழே விழக்கூடும்"** என்று சைகையால் தெரிவித்து நீலுவின் கையைப் பற்றிக்கொண்டார். பாபா ஏன் அவரது கையைப் பற்றிப் பிடித்தார் என்று நீலுவிற்குப் புரியவில்லை; அந்த நேரத்தில் சில வழிப்போக்கர்களால் கிருஷ்ணா மீட்கப்பட்டார். அவர் டெஹ்ரா டூன் பங்களாவிற்குத் திரும்பி வந்து இந்த சம்பவத்தை விவரித்தபோது, பாபாவின் செயலின் முக்கியத்துவத்தை மண்டலி புரிந்து கொண்டனர்.

கடுமையான வெப்பம் மிகுந்த கோடையில், 1941 மே 2ஆம் நாள், காக்கா, பைதூல் மற்றும் குஸ்தாஜியுடன் டெஹ்ரா டூனிலிருந்து பாபா அஜ்மீருக்குப் புறப்பட்டுச் சென்றார். அஜ்மீரில், பாபா மீண்டும் மஜ்ஜூப் சாச்சா (MAJZOOB CHACHA), சிறப்பு மஸ்துகளான லக்கன் ஷா (LAKHAN SHAH), கப்ரிஸ்தான்வாலா (QABRISTANWALA - ஸாக்ரடீஸ், SOCRATES) மற்றும் பிற மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். அஜ்மீரில் (பாபா செல்ல முடிவு செய்த இடத்தில்), இந்த நேரத்தில் பங்களா ஒன்று

வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பாபா மண்டலியுடன் மே 9ஆம் தேதி டெஹ்ரா டூன் திரும்பி வந்தார்.

மே 12 திங்கள் அன்று, காலை 4:30 மணிக்கு, பாபா, இமயமலையின் அடிவாரத்தில் அமைந்த ரிஷிகேஷுக்கு (RISHIKESH) அழைத்துச் செல்லப்பட்டார்; இது புகழ்பெற்ற 'ரிஷிகளும், முனிவர்களும்' தங்குமிடம். அவர் ஒரு வாடகை பேருந்தில் அனைத்து பெண்மணிகள் மற்றும் நீலு, காக்கா, விஷ்ணு ஆகியோருடன் புறப்பட்டுச் சென்றார். அன்றிரவு டெஹ்ரா டூன் திரும்பிவந்த போது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: "**நீங்கள் ஆன்மீக மகத்துவம் வாய்ந்த இந்திய தேசத்தை, ஆன்மீக குருநாதருடன் பார்த்திருக்கிறீர்கள்! இந்தியாவில் மேற்கொண்ட அனைத்து புனித யாத்திரைகளிலும், நான் ரிஷிகேஷை மிகவும் விரும்புகிறேன், ஏனெனில், இந்தியாவின் அனைத்து பகுதிகளிலிருந்தும், பக்தர்கள், பார்வையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் கூட, கடவுளைத் தியானிப்பதற்கும் உலகைத் துறப்பதற்கும் இங்கு வருகிறார்கள். மேன்மையான ஆன்மீக சூழ்நிலைகளுக்கு இது உலகின் சிறந்த இடங்களில் ஒன்றாகும்**."

டெஹ்ரா டூனில் ஒரு மாதம் தங்கிய பின்பு, பெரும்பாலான குழு உறுப்பினர்கள் மற்றும் சட்டி பாபா, பைதூல், குஸ்தாஜி, கிருஷ்ணா, வெங்கோபா ராவ், விஷ்ணு ஆகியோருடன் 1941, மே 15 வியாழக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு பாபா ரயிலில் புறப்பட்டார். பப்பா ஜெஸவாலா மீண்டும் மெஹராபாத்திற்கு அனுப்பப்பட்டார். துக்காராம் இப்போது நீலப்பேருந்தையும், எலிஸபெத் வழக்கம் போல காரையும் ஓட்டிச் சென்றனர்; ஆனால் இந்த முறை காக்கா, நீலு இருவரும் பாபாவுடன் காரில் பயணம் செய்தனர்.

அஜ்மீர், டெஹ்ரா டூனிலிருந்து 560 மைல் தொலைவில் உள்ளது. இந்தக் குழு முதலில் காஸியாபாத்தில் (GHAZIABAD) இரண்டு மணி நேரம் மதிய உணவுக்காக நின்று, அன்று இரவில் குர்ஜாவிலும் (KHURJA), அடுத்த நாள் பரத்பூர் (BHARATPUR) பயணிகள் விடுதியிலும் தங்கினர். மே 17ஆம் தேதி அதிகாலை அஜ்மீருக்கு வருவதற்கு முன்பு, பாபா குர்ஜா, பரத்பூர் கிராமங்களில் மூன்று மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். பாபாவும் பெண்மணிகளும் தங்கியிருந்த வாடகை பங்களா 'பூர்ஃபிஸா மஹால்' (PURFIZA MAHAL - முழு அருள் நிறைந்த அரண்மனை) என்று அழைக்கப்பட்டது. வெகு சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த பங்களா, அனா ஸாகர் (ANA SAGAR) ஏரிக்கு மேலே ஒரு மலையில் கம்பீரமான தோற்றத்துடன் அமைந்துள்ளது. ஆண் மண்டலிக்கான தங்குமிடமும் மிகவும் வசதியாக இருந்தது.

51 வயதான ஐரீன் கோனிபியர் ஹார்வி (IRENE CONYBEARE HARVEY) என்று அழைக்கப்பட்ட ஆங்கிலப் பெண்மணி, குழந்தை பருவத்திலிருந்தே ஆன்மீகத்திலும் மதத்திலும் ஆர்வம் கொண்டிருந்தார். 1940 வசந்த காலத்தில்

அவர் லண்டனில் வில் பேக்கெட்டை சந்திக்க நேர்ந்தது; அவர் மூலமாக, குருநாதரைப் பற்றி அறிந்து கொண்டார். "மெஹர் பாபா உண்மையில் - இறைவனின் இரண்டாவது வருகைக்கான - அவதார புருஷராக இருக்க முடியுமா?" ஒரு பிரபலமான ஆக்ஸ்ஃபோர்டு பேராசிரியரின் இந்த உயர் கல்வி அறிவு பெற்ற புதல்வி தனக்குள்ளே நினைத்துக் கொண்டார்: "இது நம்பமுடியாததாகத் தெரிகிறது!" அடுத்த சில மாதங்களில், ஐரீன் கோனிபியர், மெஹர் பாபா, கடவுளின் மனித ரூபம் என்பதையும், அவரது வாழ்வில் மெஹர் பாபா தனிப்பட்ட வழிகாட்டுதலை வழங்குவதையும் திடமாக நம்பினார். அவரை நேரில் சந்திக்க வேண்டும் என்ற அளப்பரிய ஆசையில், போர்க்காலத்தில் பயணம் செய்வது கடினமாக இருந்ததால், 1941 வசந்த காலத்தில், அவர் இந்தியா வருவதற்கென முன்பதிவு செய்ய முடிந்தது.

இந்தியா வந்ததும், ஐரீன் கோனிபியர், ஆதி சீனியர் மூலமாக, பாபா அப்போது டெஹ்ரா டூனில் தங்கியிருப்பதை அறிந்து, ஏப்ரல் 29 அன்று அவர் ரயிலில் அங்குச் சென்றார். பாபாவிற்குத் தகவல் வழங்கப்பட்டதும், அவரை சந்திக்க நோரினா, எலிஸபெத் இருவரையும் அனுப்பி வைத்தார். அவர்கள் ஐரீன் கோனிபியரை ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று, அவரிடம், "பாபா ஏகாந்தவாசம் கடைப்பிடிக்கிறார், தற்போது உங்களைப் பார்க்க மாட்டார், ஆனால் நீங்கள் அமெரிக்கா செல்லத் தயாராக இருக்கிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்; உங்கள் செலவுகள் அனைத்தையும் பாபா ஏற்றுக்கொள்வதாகக் கூறுகிறார்" என்று கூறினர்.

"ஆனால், பாபா என்னை இதுவரைப் பார்க்கக்கூட இல்லை; அவருக்கு என்னைத் தெரியாது!" என்று ஐரீன் கோனிபியர் எதிர்ப்பைத் தெரிவித்தாலும், நிகழ்வுகளின் விசித்திரமான திருப்பத்தில் சற்றே திகைத்துப்போனார்.

"உங்களை அறிந்துகொள்ள பாபா உங்களைப் பார்க்க வேண்டியதில்லை" என்று நோரினா அவருக்கு நினைவுபடுத்தினார். ஐரீன் கோனிபியர், தொடர்ந்து சில நாட்கள் டெஹ்ரா டூனில் தங்கியிருந்து, கடைசியாக பாபாவின் விருப்பப்படி அமெரிக்கா செல்ல ஒப்புக்கொண்டார்; மேலும் அதற்கு வேண்டிய பயண ஆவணங்களையும் பெற்றுக்கொண்டார்.

கேக்கி நலவாலா, ஐரீன் கோனிபியரை சந்தித்து அவருடன் பாபாவைப் பற்றிப் பேசினார் (கேக்கியும் இதுவரை பாபாவை சந்திக்கவில்லை), எதுவாயினும் ஐரீன், பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கினார். இறுதியாக, பாபா அவரை அஜ்மீருக்கு அழைத்தார். ஐரீன், பாபாவுடனான தனது முதல் சந்திப்பை ஒரு முறை இவ்வாறு விவரித்தார்:

ஒரு சிறிய அறையில் நான் நுழைந்தபோது, இரண்டு நாற்காலிகள் தவிர வேறு எந்த தளபாடங்களும் இல்லை. ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த பாபாவை நான் பார்த்தேன்... சத்தியத்திற்கான எனது தேடலின் இறுதி இலக்கை வந்தடைந்ததாகவும், நான் ஒரு பெரிய ஆன்மீக ஜீவனின் முன்னிலையில் இருப்பதையும் உணர்ந்தேன்.

இது ஒரு வரையறுக்க முடியாத உணர்வு... நான் ஒரு சாதாரண மனிதனின் முன்னிலையில் இல்லை என்று எனக்குத் தெரியும்.

பாபா எழுத்துப்பலகையில் உச்சரித்தார், "**நான் உங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடனான உங்களுடைய ஆன்மீகத் தொடர்பு கடந்த வாழ்நாள் முழுவதும் நீண்டு செல்கிறது. விரைவில் நீங்கள் அதை அறிவது மட்டுமின்றி, அதில் உறுதியான நம்பிக்கையோடு இருப்பீர்கள். என்னிடம் நீங்கள் எதுவும் சொல்லத் தேவையில்லை. நான் உங்களை நன்கு அறிவேன்.**

"**நீங்கள் நோரினா, எலிஸபெத், நதீன் மூவருடன் அமெரிக்கா செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆன்மீக விஷயங்களில் நீங்கள் நோரினாவின் ஆலோசனையைப் பின்பற்றுங்கள். இதர விவகாரங்களில் நீங்கள் உங்கள் சொந்த தீர்ப்பை நாடலாம்.**"

அவரது சுருக்கமான, ஐந்து நிமிட நேர்காணலுக்குப் பின்னர், ஐரீன் கோனிபியர், டெஹ்ரா டூன் திரும்பி வந்து, பாபாவின் உத்தரவிற்கு இணங்க அமெரிக்காவிற்குப் புறப்படத் தயாரானார். அவர் சென்ற பிறகு, பாபா, "**அவர் எனக்காக அருமையான பணிகளை அமெரிக்காவில் செய்வார்**" என்று குறிப்பிட்டார்.

அஜ்மீருக்கு திரும்பி வந்ததும், பாபா இருமடங்கு ஆற்றலுடன் மஸ்த் பணியில் தன்னை ஈடுபடுத்தினார். மஸ்துகளைக் கண்டுபிடிக்க அவர் ஒவ்வொரு நாளும் காக்காவை அனுப்பினார். இருப்பினும், அமெரிக்கா செல்லவிருக்கும் மூன்று மேற்கத்திய பெண்களுக்கான பயண ஏற்பாடுகளைச் செய்யவிருந்த சாஞ்சிக்கு உதவியாக, சில அறிவுறுத்தல்களுடன் காக்கா 1941, மே 22 அன்று, மும்பைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். காக்கா, புறப்பட்டுச் சென்ற பிறகு, பாபா ஒவ்வொரு நாளும் பைதூலுடன் மஸ்த் வேட்டைக்குச் சென்றார்.

சட்டி பாபாவை நீராட்ட பாபாவிற்கு வாளி வாளியாகத் தண்ணீர் கொண்டு வந்த கிருஷ்ணா, பாபா விரும்பிய நேரத்திற்கு முன்னதாக எப்போதும் வந்ததில்லை; அவர் சில நேரங்களில், தூக்க நேரத்தையும் கடந்து தூங்கி விடுவதுண்டு, ஏனெனில் அவர் அதிகாலை வரை பாபாவின் இரவு கண்காணிப்பாளராகப் பணிபுரிய வேண்டியிருந்தது.

1941 மே மாதம் நடுப்பகுதியில், மெஹர் பாபா, உபாஸனி மஹாராஜ் இருவருக்கும் இடையேயான சந்திப்புக் குறித்து, ஸாக்கோரியில் மஹாராஜுக்கு ஒரு செய்தியை வழங்குமாறு, பாபா, பெங்களூரில் இருந்த ஆதி சீனியருக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். ஆதி, சத்குரு உபாஸனி மஹாராஜை சந்தித்து நீண்ட காலமாகிவிட்டது, ஆதி அவரைப் பார்த்ததும் கண்கலங்கி அழுதார். மஹாராஜ் அவரிடம், "ஒரு குருநாதருடன் துன்பப்படுவது ஆன்மீக பலனைக் கொடுக்கும், அதே நேரத்தில் உலக துன்பம் என்பது வெறும் துன்பம் தான், எந்த பலனையும் தராது" என்று கூறினார்.

மேலும் மஹாராஜ், “இப்போது, நான் உமி போன்றவன், ஒன்றுமில்லாத வெறும் உலர்ந்த புறத்தோல், உயிரற்றவன். எனது அனைத்து ஆன்மீகத்தையும் (ஆன்மீகப் பொறுப்பு அனைத்தையும்) நான் பாபாவிற்குக் கொடுத்துவிட்டேன்” என்று கூறினார்.

பாபாவின் அறிவுறுத்தல்கள் படி, நோரினா, எலிஸபெத், நதீன் ஆகியோர் 1941 மே 27 செவ்வாயன்று, அமெரிக்காவில் ஒரு மையத்தை நிறுவுவதற்குப் பொருத்தமான இடத்தைக் கண்டுபிடிக்கும் குருநாதரின் பணியைச் செய்ய அஜ்மீரிலிருந்துப் புறப்பட்டனர்.

எலிஸபெத், கிப்பி (KIPPY), ஃபவுண்டி (FOUNDY) இரண்டு நாய்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

மே 29 அன்று காலையில் மும்பைக்கு வந்த அவர்களை, காக்கா, சாஞ்சி இருவரும் சந்தித்தனர். ஐரீன் கோனிபியர் அவர்களுடன் ரீஜண்ட் ஹோட்டலில் (REGENT HOTEL) தங்கியிருந்தார். போர்க்கால கட்டுப்பாடுகள் காரணமாக, அவர்களின் அமெரிக்க கப்பல் தாமதமானதால், ஜூன் 11 வரை மும்பையில் காத்திருக்க வேண்டியதாயிற்று. நோரினா பாபாவிற்கு இவ்வாறு எழுதினார்:

நாங்கள் இறுதியாக இன்று புறப்படுகிறோம்... உங்கள் விருப்பத்திற்கிணங்க நாங்கள் இருக்க வேண்டிய அரைக்கோளத்தை நோக்கிச் செல்கிறோம்... நான், என் இதயம் மற்றும் மனதை உங்கள் காலடியில் வைத்துவிட்டு, உங்கள் பாதங்களை எனது கரங்களில் ஏந்தி, நீங்கள் என்னை அனுப்பும் இடத்திற்குச் செல்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன், உங்களை நேசிக்கிறேன், நேசிக்கிறேன், நேசிக்கிறேன்...

காலம் இதை இப்படிப் பார்த்தது, “நோரினா, எலிஸபெத், நதீன் ஆகியோர் கண்ணீருடன் பாபாவை உடனழைத்துச் சென்றனர். இந்தப் பிரிவு, அவர்களுக்கு உண்மையிலேயே தாங்கமுடியாதது; ஆனால், அன்பானவரின் விருப்பத்தையும், மகிழ்ச்சியையும் கருத்தில்கொண்டு, அவர்கள் இதயங்களை ஆழமாகத் துளைக்கும் இந்த வலிகள், வலிகளாக இல்லாமல், ஆழ் இதயங்களில் மறைக்கப்பட்ட மகிழ்ச்சியாக இருந்தன. இந்த ‘அன்பின் வாழ்க்கை’ எப்பொழுதுமே வலியால் நிறைந்த ஒன்று, சில சமயங்களில் கடுமையானதாக இருந்தாலும், அது இல்லாமல் வாழ்க்கையில் மகிழ்ச்சியே இல்லை! அன்பன் இந்தத் துன்பத்தால் அவதிப்படுகிறான், ஆனால் அவன் துன்பத்தை, வாழ்விலிருந்து பிரிக்க முடியாத ஓர் அங்கமாக அதை நேசிக்கிறான்.”

நோரினா எளிதில் உணர்ச்சிவசப்படும், மகிழ்ச்சியூட்டும், பிறரின் கவனத்தை ஈர்க்கும் திறன் படைத்த ஓர் இத்தாலிய பெண்மணி; அதேவேளையில், ஐரீன் கோனிபியர் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாத, அடக்கமுள்ள ஒரு பிரிட்டிஷ் புத்திஜீவி - ஒருவரின் கற்பனைக்கு எதிரான ஆளுமைகள். பாபாவைப் பற்றி எப்பொழுதும் மடை திறந்த வெள்ளம்போலப் பேசும் நோரினா, பாபாவுடனான சந்திப்பு குறித்து, ஐரீன் கோனிபியரின் உணர்ச்சியார்வம் கொண்டிராத தன்மையைக் கண்டு ஏமாற்றமடைந்தார்.

நோரினா, தொடர்ந்து அவரிடம், “குழந்தாய், உங்களில் எந்த மாற்றத்தையும் நீங்கள் உணரவில்லையா? குருநாதரிடமிருந்து உங்களுக்குள் ஊடுருவும் ஒளியூட்டத்தை நீங்கள் உணரவில்லையா?” என்ற கேள்விகளுக்கு, ஐரீன் கோனிபியர் வாடிய முகத்தோற்றத்துடன் “இல்லை, இல்லை, நான் அப்படி எதுவும் உணரவில்லை” என்று பதிலளித்தார்.

மும்பையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர், ஐரீன் கோனிபியர், நோரினாவின் தொந்தரவைத் தாங்கமுடியாமல், பாபாவிற்கு ஒரு குறிப்பை அனுப்பி வைத்தார்: “நோரினாவை அமைதியாக இருக்கச் செய்ய, தயவுசெய்து இம்மியளவேனும் ஒளியூட்டத்தை எனக்குத் தாருங்கள்!” சில நாட்களுக்குப் பிறகு, கப்பல் மேடையில் நின்று, கடலைப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அவர் விவரித்தபடி, கண்களில் ‘உள்ளளவில் பிரகாசம்’ நிறைந்து, ‘சிறிதளவு ஒளியூட்டம்’ கிடைத்ததாகத் தெரிவித்தார்; பாபா கூறியது போல், அவர் பாபாவை அறிந்ததோடு, அதன் மூலாதார பிறப்பிடத்தைத் திடமாக நம்பினார்!

தனது குடும்பத்தினருடன் பெங்களூரில் இருந்த எரச், ஏப்ரலில், ஒரு மாத கால உபவாசத்திற்குப் பிறகு, பாபாவின் உடல்நிலை குறித்து விசாரிக்க, பைதூலுக்கு ஒரு கடிதம் எழுதினார். மே 27 அன்று அஜ்மீரில் பாபா, மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தபோது, குஜராத்தியில், கவிதை வடிவில் நகைச்சுவையான கடிதம் ஒன்றை, பதிலாக அனுப்பிவைத்தார்:

**நாங்களும், நீங்களும் நன்றாக உள்ளோம்,**
**நன்றாக உள்ளது முழு உலகமும்!**
**காக்கா கன்யா (தானியம் விற்பவர்),**
**மாமா மார்வாடி (தொழிலதிபர்)**
**மற்றும் ஸவக் - கொத்வால் (அரசு அதிகாரி)**
**எரச் ஒரு பட்டான், பெண்டு ஒரு பிஸ்தா,**
**மாஸாஜி ஒரு முகலாயர் என்று கருதப்படுகிறார்கள்.**
**மீதமுள்ள அனைவரும்**
**அரிசி, பருப்பு, தனியா என்றழைக்கப்படுகிறார்கள்.**

1941, மே 26 முதல், பாபா மீண்டும் உபவாசத்தைத் தொடங்கி, (பைதூலுடனான அவரது மஸ்த் பணியில் எந்தத் தடங்கலுக்கும் இடந்தராமல்) பழங்கள், ஆரஞ்சு ரசம் மற்றும் தண்ணீர் மட்டுமே உட்கொண்டார். ஆறு நாட்களுக்குப் பிறகு, ஜூன் 1 அன்று, அவர் நீர் மட்டுமே அருந்தி, நள்ளிரவு கடந்த ஒரு நிமிடத்தில் ஒரு டம்ளர் தக்காளி ரசத்துடன் உபவாசத்தை நிறைவு செய்தார். பின்னர் அதே நாளில் (ஜூன் 2), அவர் சிறிது சாதமும் பருப்பும் உண்டார்.

ஜூன் 3ஆம் தேதி, பிரோஜா அஜ்மீரிலிருந்து மெஹரு, நாகு மற்றும் கொத்வால் சிறுமிகளுடன் புறப்பட்டுச் சென்றார்; சிறுமிகள் கோடை

விடுமுறையில் சில வாரங்கள் அஜ்மீரில் பாபா மற்றும் பெண்களுடன் தங்கியிருந்தனர். உடன் சென்ற ஸவக் கொத்வால் ஒரு நாள் மெஹராபாத்திற்குச் சென்று, ஜூன் 7ஆம் தேதி அஜ்மீருக்குத் திரும்பி வந்தார். அவ்வேளையில் பெங்களூரில் தங்கியிருந்த சுவாமிஜி, தென்னிந்தியாவின் விரிவுரை சுற்றுப்பயணத்திற்குப் பின்னர் உடல் நலமில்லாமல் இருந்து, ஜூன் 4 அன்று மதராஸில் வாழும் அவரது உறவினர் சம்பத் ஐயங்காரின் இல்லத்தில் காலமானார். பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும் அவர் இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: "**ராமானுஜம்** (சுவாமிஜி) **என்னிடம் வந்துவிட்டதால் எவரும் சோகமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, மாறாக மகிழ்ச்சியுடன் இருங்கள்**."

1941, ஜூன் 8ஆம் நாள், பைதூல், ஸவக் இருவருடன் மஸ்துகளைத் தொடர்புகொள்ள பாபா அஜ்மீரிலிருந்து புறப்பட்டார். பாபா, ஒரு வாடகைக் காருக்காக அரை மணி நேரம் காத்திருந்தும் வராததால், பங்களாவிலிருந்து சற்று தூரம் நடந்து சென்று, வேறொரு காரினுள் நுழைந்ததும், அடையாளம் கண்டுகொள்ளாமல் இருக்க முகத்தை மறைத்துக் கொண்டார். அவர்கள் 500 மைல்களுக்கு மேல் கார், ரயில் மற்றும் பேருந்தில் பயணம் செய்தனர்; ஆனால் இந்த 78 மணி நேர பயணத்தின் போது, அரை மணி நேரம் கூட ஓய்வெடுக்கவில்லை. பாபா நஸிராபாத்தில் (NASIRABAD) மூன்று மஸ்துகளைத் தொடர்பு கொண்டார், ஆனால் அவை குறித்த எந்த விபரங்களும் இல்லை.

பீவார் (BEAWAR) என்ற இடத்தில், பாபா ஒரு பழைய மஸ்தானியையும் அதைத் தொடர்ந்து 'நரைன் பாபா' (NARAIN BABA) என்ற இளம் நிர்வாண மஸ்தையும் தொடர்பு கொண்டார், அவர் தொடர்ந்து 'நரைன்! நரைன்' என்று கடவுளின் நாமத்தை உச்சரித்துக்கொண்டே இருந்தார்.

மெஹர் பாபா தொடர்பு கொண்ட மிக முக்கியமான மஸ்த் ஸோஜத் (SOJAT) எனும் இடத்தில் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட நூரு பாபா (NURU BABA) ஆவார். 80 வயதான முதியவர், அவர் ஒரு குறிப்பிட்ட வீட்டின் வராந்தாவில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட நாய்கள் சூழ, நிர்வாணமாக வாழ்ந்து வந்தார். இந்தத் துறவி பிறப்பிலிருந்தே ஒரு மஸ்தாக இருந்தார்; இதுபோன்ற மேம்பட்ட ஆத்மாக்கள் 'மதர்-ஸாத்' (MADAR-ZAD) என்று அழைக்கப்படுகிறார்கள்.

அபு ரோடு (ABU ROAD) பகுதியில், குதா பக்ஷ் (KHUDA BAKHSH) என்றழைக்கப்பட்ட, 75 வயதான மஸ்த், 40 ஆண்டுகளாக ஒரு முஹமதிய ஆலயத்தில், உயிருள்ள சிலை போல் அசையாமல் அமர்ந்திருந்தது மட்டுமின்றி, எவரோடும் பேசியதும் இல்லை. இருப்பினும், பாபா அவரைத் தொடர்பு கொண்டபோது, அவர் இருந்த இடத்திலிருந்து நகர்ந்து, உரையாடி, அவர் அணிந்திருந்த மோசமான கந்தல் உடையில் நகரத்தைச் சுற்றி அலைந்து கொண்டிருந்தார்.

பாபா, உனவா (UNAVA) குறுநகரிலும் சில மஸ்துகளைத் தொடர்பு கொண்டார், ஆனால் அவற்றைப் பற்றிய குறிப்புகள் எங்கும் பதிவு செய்யப்படவில்லை.

மெஹர் பாபாவும், மண்டலியும் உடன் எடுத்துச் சென்ற பருமனான படுக்கைச் சுருட்டுகளைப் பயன்படுத்தாமல், ஜூன் 11ஆம் தேதி அஜ்மீருக்குத் திரும்பி வந்தனர். சிறிது நேரம் கூட ஓய்வில்லாமல் 24 மணி நேரமும் மஸ்த் வேட்டையில் ஈடுபட்டிருந்ததால் அவர்கள் சவரம் செய்யவோ, நீராடவோ இல்லை.

1941, ஜூன் 13 அன்று அஜ்மீரில் பாபாவைப் பார்க்க ராம்ஜூ வந்தார்; இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா அவரை மீண்டும் நாசிக் அனுப்பினார். பெங்களூரில் அப்போது தங்கியிருந்த டாக்டர் கனியிடமிருந்து, அவரது சிரமங்களின் விபரங்களைப் பட்டியலிட்டு ஒரு கடிதம் வந்தது. 14ஆம் தேதி விஷ்ணு மூலமாக, பாபா பதிலளித்தார்:

**நலிந்துபோன, அதிகமாக விரும்பப்படாத, தனிமையில் வாடுகின்ற மற்றும் நினைவில் கொள்ளப்படாத பாபாவின் அன்பனாக, நீங்கள் எப்போதும் உங்களை சித்தரிக்கிறீர்கள். ஆனால் உண்மை நிலை இதற்கு நேர்மாறானது. பாபாவிற்குத் தெரியும், உலகிற்குத் தெரியும் - குறைந்தபட்சம் மண்டலி உலகத்திற்குத் தெரியும் - நீங்கள் பாபாவின் பிரியமான, நெருக்கமான சீடர் - அவரது குழந்தைப் பருவ நண்பர், அவரது வாழ்நாள் தோழர் என்று. உங்களின் புத்திசாலித்தனமும், குறும்புத்தனமும் அவருடைய நகைச்சுவை உணர்வை தொட்டது போல, வேறு எவரும் தொட்டதில்லை. ஃபிரான்ஸ் நாட்டின் மன்னர் லூயிஸ் ஹென்றி என்பவருக்கு சிகோ (சிகோட் - CHICOT) ஜெஸ்டர் (CHICO JESTER) என்னவாக இருந்தாரோ, அதுபோல நீங்களும் அவருக்கு இருக்கிறீர்கள். சிகோட், மன்னனைச் சிரிக்க வைத்து அவரது கவலைகளை மறக்கச் செய்தது மட்டுமின்றி, மன்னனுக்காக அவர் மிகப் பெரிய போரிலும் பங்கெடுத்தார். 'மெஹர் பாபா ஜர்னல்' மூலமாக நீங்கள் பாபாவின் பணியைச் செய்ய போராடவில்லையா?**

**...பாபா அவரது அன்பை இத்துடன் அனுப்புகிறார்; உங்கள் முகத்தை வானளவிற்கு உயர்த்தி, இதன் மூலம் நீங்கள் அதற்குத் தகுதியானவர் என்று நிரூபிக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில்:**

**"நான் பாபாவின் நபர் - நான் பாபாவின் நண்பன்,**
**நான் ஒருபோதும் கேட்டு வாங்கக் கூடாது -**
**நான் எப்போதும் தந்து உதவ வேண்டும்.**
**நான் எப்போதும் நிமிர்ந்து நிற்க வேண்டும் -**
**நான் ஒருபோதும் தலை குனிய கூடாது,**
**நான் ஒருபோதும் கேட்கக் கூடாது -**
**நான் எப்போதும் கேளாமல் தர வேண்டும்."**

பாபா ஜூன் 14 அன்று மற்றுமொரு மஸ்த் பயணத்தை மேற்கொண்டார். இந்த முறை அவர் குஸ்தாஜி, பைதூல், ஸவக் ஆகியோரை அழைத்துச் சென்றார். அவர்கள் ரயிலில் ரேவாரி (REVARI) என்ற ஊருக்குச் சென்று பட்டான் (PATHAN) என்றழைக்கப்பட்ட இளம் சாதுவைத் தொடர்பு கொண்டனர். ரேவாரியில், பாபா ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட 'வாலி பாபா' (WALI BABA) எனும் மிக உயர்ந்த மஸ்துடன் அன்னியோன்னியமாக இருந்தார். இந்த ஜமாலி மஸ்த் ரயில் நிலையத்திற்கு அருகிலமைந்த தலைமை ரயில் டிக்கெட் சேகரிப்பாளரின் வீட்டில் வசித்து வந்தார்; பாபா, அவருக்காக ஒரு புதிய மெத்தையை வாங்கினார்.

அங்கிருந்து, பாபா ரயிலில் கைர்த்தல் (KHAIRTAL) கிராமத்திற்கும், பின்பு மாட்டு வண்டியில் இஸ்மாயில்பூர் (ISMAILPUR) கிராமத்திற்கும் சென்றார். அதற்குள் பொழுது மறைந்தது; மழை காரணமாக, சாலை, சேறாகவும், மண் நிரம்பியும் இருந்தது. பாபா இஸ்மாயில்பூரில் புனித 'கோகலே பாபா'வுடன் (GOKHALE BABA) பணிபுரிந்தார் (அவரை கடந்த ஜனவரி மாதத்திலும் பாபா சந்தித்திருந்தார்); அதைத் தொடர்ந்து, கொட்டும் மழையில் கைர்த்தல் கிராமத்திற்குத் திரும்பி வந்தார். அனைவரும் நனைந்ததோடு, அவர்களின் படுக்கைச் சுருள்களும் நனைந்தன. சேறு நிறைந்திருந்ததால் மாட்டு வண்டி மிக மெதுவாகச் சென்றது; சில இடங்களில் கீழே இறங்கி, அதைத் தள்ளவும், பின்பு தங்கள் இருக்கைகளில் அமர்வதற்கு முன்னர், எப்படியேனும் கால்களை சுத்தம் செய்யவும் வேண்டியிருந்தது. அவர்கள் கைர்த்தல் கிராமத்தை வந்தடைந்தபோது ஏறக்குறைய நள்ளிரவாகிவிட்டது. அவர்களுடைய உடமைகள் அனைத்தும் நனைந்து ஈரமாக இருந்ததால், உடைகளை மாற்ற வேறு எதுவும் இல்லாத நிலை!

அந்த நிலையில், பாபாவும் குழுவும் நிமுச் (NIMUCH) கிராமத்திற்கு ரயிலில் பயணம் செய்தனர்; அங்கு, பாபா மூன்று மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். ஒருவர் கப்ரிஸ்தான்வாலா (QABRISTANWALA), அவருடைய உறைவிடம் ஒரு கல்லறை அருகில் இருந்தது. மற்றொருவர் ரூயிவாலா (RUIWALA), அவர் வெளிப்படையான எந்த நோக்கமும் இல்லாமல் நகரெங்கும் அலைந்து திரிந்தார். தகன மைதானங்களுக்கு இடையில் ஓர் அறையில் வசித்து வந்த மெல்லிய, வயதான 'ஸம்ஷான்வாலா சாது' (SAMSHANWALA SADHU), ஒரு சிறப்பான மஸ்த், இரவும் பகலும் கடவுளின் நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரித்துக்கொண்டே இருந்தார்.

மெஹர் பாபா நிமுச் கிராமத்திலிருந்து சித்தோர்கர் (CHITTORGHAR) என்ற ஊருக்குப் புறப்பட்டார், அங்கு அவர் பானிவாலா (PANIWALA) என்ற ஒரு மகத்தான மஸ்துடன் பணிபுரிந்தார், அவர் ஒரு வீதியில் அமர்ந்து, அவரைக் கடந்து செல்வோர்க்குத் தண்ணீர் (பானி) வழங்கி வந்தார்.

பாபாவும் குழுவும் ஜூன் 17 காலை அஜ்மீருக்குத் திரும்பி வந்தனர். 1941ஆம் ஆண்டில் மெஹர் பாபாவின் பரபரப்பான பயணங்கள், உலக

நிகழ்வுகளை துரிதப்படுத்துவதாகத் தோன்றியது. பாபா திரும்பி வந்த ஐந்தே நாட்களில், ஜெர்மனியின் இராணுவம் ரஷ்யா மீது படையெடுத்து மாஸ்கோவை நோக்கிப் பாய்ந்தது.

ஜூன் 26ஆம் நாள் அஜ்மீரில் பாபாவைப் பார்க்க பெண்டு வந்திருந்தார்; மெஹராபாத்தின் பொறுப்பாளராக இருந்ததால், அவருடன் நிதி நிலைமையை விவாதித்து, மண்டலிக்கு வேண்டிய உடை, உணவு மற்றும் இதர செலவுகளுக்கான பணத்தை விநியோகித்தார். பெண்டு ஜூன் 30 அன்று மெஹராபாத் திரும்பிச் சென்றார்.

இந்த நேரத்தில், பெண்மணிகளுடன் உரையாடும் வேளையில், பாபா ஒரு முறை அவர்களிடம், "**நீங்கள், உங்கள் இறப்பை சந்தித்து, எனது வாழ்க்கையை வாழுங்கள்**!" என்றார்.

1941, ஜூலை 3ஆம் நாள், பாபா மீண்டும் பைதூல், குஸ்தாஜி, ஸவக் ஆகியோருடன் அஜ்மீரிலிருந்து புறப்பட்டு, பரோடா மற்றும் அஹமதாபாத் நகரங்களில் மஸ்த் பணிக்காகச் சென்றார், அங்கு அவர் அப்பா ஜான் (ABBA JAN) என்ற மிகவும் மேல்நிலையை அடைந்த மஸ்துடன் பணிபுரிந்தார். மஸ்த் ஒரு களிமண் குழாய் மூலமாக புகை பிடித்து, அதை அருகிலிருந்த அனைவருடனும் பகிர்ந்து கொண்டார்.

தொடர்ந்து பாபா பாத்ஷா பாபு (BADSHAH BAPU) என்ற மஸ்தைத் தொடர்பு கொண்டார்; அவரை பாபா, 'டின் பாட் பாபா' (TINPOT BABA) என்றழைத்தார், காரணம் அவர் ஒரு வீதி ஓரத்தில் தகர பானையுடன் அமர்ந்திருந்தார். அஹமதாபாத்தில், ஹப்ஸி பாத்ஷா (HABSI BADSHAH) என்றழைக்கப்பட்ட மஸ்தை பாபா சந்தித்தார், அவர் அங்கு வாழும் சில குடியிருப்பாளர்களால் பராமரிக்கப்பட்டு வந்த ஒரு மகத்தான மஸ்த்.

கடும் பருவமழை காரணமாக, மும்பை, சூரத் நகரங்களுக்கு இடையில் போக்குவரத்து முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. பாபா நான்கு நாட்களுக்குப் பிறகு ஜூலை 7ஆம் நாள் அஜ்மீருக்குத் திரும்பி வந்தார், ஆனால் இரண்டே நாட்களில் இஸ்மாயில்பூர், ரேவாரி, டெல்லி மற்றும் அலிகார் போன்ற இடங்களில் தனது மஸ்த் பணியைத் தொடர்ந்து, மீண்டும் அவர் ஜூலை 12 அன்று அஜ்மீர் திரும்பி வந்தார்.

மெஹர் பாபாவின் அடுத்த ஆறு மாத காலம், முழுமையான ஏகாந்தவாசத்திற்குப் பொருத்தமான பங்களாக்களைத் தேடிக் கண்டு கொள்ள காக்காவை பரோடாவிற்கும், ஸவக் கொத்வாலை டெஹ்ரா டூன், டெல்லி, லாஹூர், ஆக்ரா, மற்றும் பெண்டுவை இந்தூருக்கும் அனுப்பி வைத்தார். ஒவ்வோர் இடத்திலும் வாழும் பாபாவின் நெருங்கிய அன்பர்கள் அவர்களுக்கு உதவுமாறு தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், பொருத்தமான இடம் எதுவும் கிடைக்காததால், அதற்கு பதிலாக மெஹராபாத்திற்குத் திரும்பி வர முடிவு

செய்யப்பட்டது. துக்காராம் நீலப்பேருந்தில் அனைத்து சாமான்களையும் எடுத்துச் செல்லும்படி கட்டளையிடப்பட்டார், டாக்டர் நீலுவும் அவருடன் சென்றார்.

அஜ்மீரிலிருந்து, பாபா, மெஹராபாத் மற்றும் பெங்களூரில் அப்போது வாழ்ந்து வந்த மண்டலிக்கும் அவரது நெருங்கிய அன்பர்களுக்கும், மெஹராபாத் மேல்மலையில் அமைந்த மஸ்த் ஆசிரமத்தில் இரண்டரை மாதங்கள் கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாகவும், அதைத் தொடர்ந்து நான்கு மாதங்கள் வேறு சில இடங்களில் தங்கப்போவதாகவும் தெரிவித்தார். அவர் அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கை மூலமாக இந்தத் தகவலை அனுப்பிவைத்தார்:

**ஆறு மாத காலத்திற்கு நான் எவரையும் பார்க்க மாட்டேன். மிகவும் அவசரமான காலங்களில் மட்டும், தொலைத்தந்தி தவிர, எந்தவொரு கடிதமும் அனுமதிக்கப்பட மாட்டாது...**

**கடைசி மூன்று மாத ஏகாந்தவாசம், முன்னெப்போதையும் விட கடுமையானதாக இருக்கும், அதாவது எவரையும் பார்க்காமல் இருப்பதைத் தவிர, நான் ஒரு மனித குரலைக் கூடக் கேட்க மாட்டேன்!**

பாபாவின் கடுமையான கட்டளைகளின்படி, மெஹரா ஒருபோதும் தனியாக இருக்க அனுமதிக்கப்படவில்லை. மணி, கோர்ஷெத், கர்மான் மாசி மூவரில் ஒருவரேனும் எந்நேரமும் அவருடன் இருக்க வேண்டும். மெஹரா முகத்தைக் கழுவச் சென்றாலும், அவர் சாப்பிட அல்லது அறைக்கு வெளியே ஏதேனும் காரணத்திற்காக அல்லது வேலைக்காகச் சென்றாலும், வேறொரு பெண்மணி அவருடன் இருக்கவேண்டியது அவசியம். அவர் குளியலறைக்குச் செல்லும்போதும், இந்த மூவரில் ஒருவர் வெளியே காவலில் நிற்க வேண்டியிருந்தது. பாபாவின் அனைத்து அறிவுறுத்தல்களையும் பின்பற்றும் வேளையில், நெரிசலான ரயில் நிலைய நடைமேடைகள், மற்றும் பேருந்துகளில் பயணம் செய்வதில் உள்ள சிரமங்களை நன்கு கற்பனை செய்ய முடியும்.


மெஹரா மட்டுமே அத்தகைய வாழ்க்கையை வாழ முடியும், இதனால்தான் அவர் அன்பிற்குரியவருக்கு அன்பானவர் (Beloved of THE BELOVED)! அவருடைய ஒரே சிந்தனை, பாபாவை மகிழ்விப்பதாக மட்டுமே இருந்தது!

இந்த நேரத்தில், மெஹரா, கோர்ஷெத் இருவரும் பாபாவின் உணவையும், நாஜா, கேட்டியுடன் பெண்களுக்கான உணவையும் தயார் செய்து வந்தனர். மன்ஸாரி, மெஹர் பாபா ஜர்னலில் (MEHER BABA JOURNAL) வெளியிடப்படும் கட்டுரைகளை, குஜராத்தியில் மொழிபெயர்ப்பதில் மும்முரமாக இருந்தார். மணி எழுத்து மற்றும் கடிதம் தொடர்பான பணிகளில் கலந்து கொண்டதோடு, கிட்டியிடமிருந்து சுருக்கெழுத்து, தட்டச்சு போன்றவற்றைக் கற்று வந்தார்.

1941, ஜூலை 14 அன்று அஜ்மீரிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, சட்டி பாபாவின் மனநிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டு சீற்றத்துடன் காணப்பட்டார். அவர் ஒரு துடைப்பத்தைக் கையிலெடுத்து அனைத்து பொருட்களையும் அங்கும் இங்கும் சிதறடித்து, பெரிய அளவில் சத்தத்தை உருவாக்கினார்; தொடர்ந்து முழு மூன்று மணிநேரங்களுக்கு முரட்டுத்தனமாக நடந்துகொண்டார். ஆனால், பின்னர் அமைதியாகி, பாபா வந்ததும் அவருடன் அமர்ந்து சிரித்துக் கொண்டிருந்தார்.

பாபா, மண்டலி மற்றும் பெண்மணிகளுடன், ரயிலில் ஜூலை 16ஆம் நாள் காலை 9:00 மணிக்கு மன்மாட் வந்தார்; அங்கு, சாஞ்சி அவரை சிறிது நேரம் சந்தித்தார். மன்மாடிலிருந்து பாபா வரும்போது அவரை எவரும் பார்க்க வேண்டாம் என்று தகவல் அனுப்பியிருந்ததால், அஹமதுநகர் ரயில் நிலையத்தில் காத்திருந்த அன்பர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். ஆனால் இந்த வகையான ஏமாற்றம் முற்றிலும் வேறுபட்டது; உள்ளளவில் வேதனையாக இருந்தாலும், இது இனிமையான நம்பிக்கையை உருவாக்கி மனம் அன்பிற்குரியவர் மீது முழு கவனத்தையும் செலுத்த உதவியது.

மெஹர் பாபா நள்ளிரவில் அஹமதுநகருக்கு வந்து, ஜூலை 18 அன்று அதிகாலை நான்கு மணி வரை ரயிலிலே அமர்ந்திருந்தார். பாபாவின் அடுத்த கட்ட பணி தொடர்பான அறிவுறுத்தல்களைப் பெற, அவரை சந்திக்க ஸரோஷிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. விடியற்காலையில் அவரை சந்தித்த பின்பு, பாபா குழுவுடன் பேருந்துகளிலும் காரிலும் மெஹராபாத் சென்றார்.



**மெஹராபாத் மேல்மலை - ஏகாந்தவாசம், 30 ஜூலை 1941.**

**(**UPPER MEHERABAD – SECLUSION, 30 JULY 1941**)**





மெஹர் பாபா - உபாஸனி மஹாராஜ்

இறுதி சந்திப்பு, அக்டோபர் **17, 1941**

**(**MEHER BABA – UPASANI MAHARAJ LAST MEETING, OCTOBER 17, 1941**)**

# மெஹராபாத், பஞ்ச்கணி ஏகாந்தவாசம்

**(Meherabad & Panchgani Seclusion)**

1941, ஆகஸ்ட் 1ஆம் நாள் முதல் அடுத்த ஆறு மாதங்களுக்கு, கடுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்ளப் போவதாக, பாபா ஏற்கனவே அறிவித்திருந்தார்; பெண்டு இதர மண்டலியுடன் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் மும்முரமாக இருந்தார். மெஹராபாத் மேல்மலையின் நான்கு மூலைகளிலும் நான்கு இரவு கண்காணிப்பாளர்களுக்குத் தேவையான நான்கு அறைகளை அமைக்க, பெண்டு, காளேமாமா இருவருக்கும் உத்தரவிடப்பட்டது, அவர்கள் மண்டலியைச் சேர்ந்தவர்கள் அல்லது கிராமவாசிகளை வேலைக்கு அமர்த்தலாம். மேல்மலை வரம்பிற்குள் எவரும் நுழைவதைத் தடுப்பதும், பாபாவிற்கு சிறிதளவும் இடையூறு விழையாமல் பார்த்துக் கொள்வதும் அவர்களின் பிரதான பணி.

பாபா, மெஹராபாத் திரும்பி வந்தபோது, நாக்பூரைச் சேர்ந்த பங்க்ராஜ் (PANKHRAJ) என்ற இளைஞர் அவருக்காகக் காத்திருந்தார். பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக, தரிசனம் சாத்தியமில்லை என்று அவருக்குத் தெரிந்திருந்தாலும், பாபா அவரைப் பார்ப்பார் என்ற நம்பிக்கையில், பங்க்ராஜ், அங்கேயே இருந்தார். நாக்பூரில் நோரினா நிகழ்த்திய உரைகள் அவரை மிகவும் உற்சாகப்படுத்தின, மேலும் குருநாதரை நேரில் சந்திக்கும் ஆவலுடன் வந்திருந்தார்.

பாபா வந்த பின்பு, பெண்டு, விஷ்ணு மற்றும் காக்குபாய் மூலம் பங்க்ராஜ் தரிசனத்திற்காகக் காத்திருக்கும் செய்தியை அவருக்கு அனுப்பினார். பாபாவின் பார்வை அவர் மீது இருப்பதாக உறுதியளித்து, பங்க்ராஜ் உடனடியாக நாக்பூருக்குத் திரும்பிச் செல்லுமாறு கூறி அனுப்பினார். ஏமாற்றமடைந்த அந்த இளைஞர், ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து அழத் தொடங்கினார்; நான்கு மணி நேரம் அழுதார். கடைசியில் பாபா, '**கேட்காவ்மில் வாழும் நாராயண் மஹாராஜிடம் செல்லுமாறு**' அவருக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். இதைக் கேட்ட பங்க்ராஜ், "நான் இப்போது மெஹர் பாபாவின் சர்வ ஞானத்தை நம்புகிறேன், அவர் ஏன் இந்தச் செய்தியை அனுப்பியுள்ளார் என்று எனக்குத் தெரியும்" என்று உணர்ச்சி பொங்க கூறினார்.

இதற்குப் பின்னால் அடங்கிய உண்மை என்னவெனில், மெஹர் பாபா, உபாஸனி மஹாராஜ் இருவருக்கும் இருந்த விரோத எதிர்ப்பு போலவே, பத்திரிகைகளில் நாராயண் மஹாராஜுக்கு எதிராக ஏராளமான பிரச்சாரங்களும் வெளியிடப்பட்டன, மேலும் ஒரு முறை இத்தகைய போலி விளம்பரங்களால் பங்க்ராஜ் தவறாக வழிநடத்தப்பட்டார். ஒரு சந்தர்ப்பத்தில், நாராயண் மஹாராஜ் நாக்பூருக்குச் சென்று, பக்தர்களுக்கு தரிசனம் வழங்கிய வேளையில், பங்க்ராஜ் வெளியே நின்று, உண்மையில் அவருக்கு எதிராகப் பேசினார். ஆனால் சார்லஸ் பர்டம் எழுதிய 'தி பெர்ஃபெக்ட் மாஸ்டர்' (THE PERFECT MASTER) புத்தகத்தில்

நாராயண் மஹாராஜைப் பற்றி படித்தபோது, அவர் தனது முட்டாள்தனத்தை நினைத்து மனம் வருந்தினார். இதனால், பாபா வழங்கிய செய்தி பங்க்ராஜை ஆழமாக பாதிக்கவே, மீண்டும் அவர் கண் கலங்கினார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பாபா, விஷ்ணு மூலமாக, பங்க்ராஜை அழைத்து 50 கெஜம் தொலைவில் நின்று தரிசனம் செய்ய அனுமதித்தார். பாபா அவரிடம், "**நான் உங்களை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன், நீங்கள் இப்போது திரும்பிச் செல்லலாம்**" என்று குறிப்பிட்டார்.

பங்க்ராஜ், பாபாவை, வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே பின்னோக்கி நகர்ந்தார்; அவர் சிறிது தூரம் சென்றதும், பாபா, விஷ்ணுவை அவருடன் பேச அனுப்பினார். பாபா மீண்டும் அவரை அழைத்து, "**நீங்கள் இப்போது என்ன செய்கிறீர்களோ** (படிப்பு அல்லது பணி) **அதைத் தொடர்ந்து செய்யுங்கள். ஒரு வருடம் கழித்து நான் உங்களை** (என்னுடன் தங்க) **அழைப்பேன்**" என்றார். பங்க்ராஜ் அங்கிருந்து வெளியேறி, எந்நேரமும் பாபாவை தன் இதயத்தில் உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டார், வாய்ப்பு வரும்போதெல்லாம் அவரைப் பார்த்தார்.

இந்தக் காலகட்டத்தில், நாராயண் மஹாராஜ் மும்பையின் புறநகர் பகுதியில் தனது பக்தர்களுக்கு தரிசனம் வழங்கினார். நரிமன், அர்னவாஸ், நர்கிஸ், ரோடா, பச்சாமாய் தாதாசாஞ்சி ஆகியோர் சத்குருவிற்கு மரியாதை செலுத்த முடிவு செய்து, அவரை சந்திக்கச் சென்றனர். வெள்ளை மேலாடை, பைஜாமா மற்றும் கையில்லா கோட்டுடன் மிகவும் எளிமையாக உடையணிந்து, நாற்காலியில் அமர்ந்து, பக்தர்கள் குழுவால் சூழப்பட்ட நாராயண் மஹாராஜின் முன்னிலையில் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சத்குரு, குஜராத்தியில் அவர்களிடம் பேசினார், அவர்கள் எங்கிருந்து வந்தனர் போன்ற மற்றும் பல கேள்விகளைக் கேட்டார்.

சில நிமிட உரையாடலுக்குப் பிறகு, நாராயண் மஹாராஜின் எதிர்வினை அல்லது மெஹர் பாபாவைப் பற்றிய கருத்துகளைக் கேட்டறிய விரும்பி, அர்னவாஸ் இவ்வாறு கேட்டார்: "நாராயண், உங்களுக்குத் தெரியும், என் தந்தை வழி மாமா (சாஞ்சி), மெஹர் பாபாவுடன் தங்கியிருக்கிறார்."

"**ஓ, அப்படியா?**" என்று அவர் கேட்டார்.

"அவர் அந்த ஆசிரமத்தில் கடந்த 20 ஆண்டுகளாக அவருடன் தங்கி வருகிறார்."

"**அவரது ஆசிரமம் எங்கே?**"

"அஹமதுநகர்."

சில கணங்களுக்குப் பிறகு, நாராயண், "**அவர் பேசுவதில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள்...**" என்றார்.

"ஆமாம், அது சரிதான்," அர்னவாஸ் பதிலளித்தார்.

"**ஏன் பேசக்கூடாது?**"

"அது உங்களுக்குத் தெரியும், மஹாராஜ்."

இன்னும் சில கணங்களுக்குப் பிறகு, நாராயண், "**நீங்கள்** (மெஹர் பாபாவின் பக்தர்கள்) **அவரைப் பேச வைக்க வேண்டும்! அவரை ஏன் பேச தூண்டக் கூடாது?**" என வினவினார்.

அர்னவாஸுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை, அதனால் அமைதியாக இருந்தார். அப்போது நாராயண், "**உங்கள் தீவிர அன்பின் மூலமாக அவரைப் பேசச் செய்யுங்கள்!**" என்றார்.

மெஹராபாத்தில், ஏகாந்தவாசத்தைத் தொடங்குவதற்கு முன்பு, பாபா, 1941 ஜூலை 20, 21 ஆகிய தேதிகளில், மண்டலியில் பலரை சந்திப்பதற்காக அழைத்தார். நாசிக் நகரிலிருந்து ராம்ஜூ; பெங்களூரில் வாழ்ந்து வந்த டாக்டர் கனி, ஆதி சீனியர், எரச் மற்றும் டான் (டாக்டர் டான், இராணுவ சேவை புரிந்தார்); பூனாவைச் சேர்ந்த ஜால்பாய், ஆதி ஜூனியர், பெஹராம் மற்றும் சதாஷிவ் பாட்டீல்; மேலும், மும்பை, பூனா, அஹமதுநகர் போன்ற இடங்களிலிருந்து ஸரோஷ், சாஞ்சி மற்றும் பிற நெருங்கிய மண்டலியை அழைத்தார். பாபா, தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரையும் சந்தித்தார், மேலும் ஒவ்வொருவருக்கும் தத்தமது பணி மற்றும் தனிப்பட்ட விவகாரங்கள் குறித்து அறிவுறுத்தினார்.

கூட்டத்தை அழைப்பதற்கான காரணத்தை, பாபா விளக்கினார்: "**ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் அடுத்த ஆறு மாத காலத்தில், நான் உயிரைத் துறக்கலாம். எனவே இப்போது உங்களை அழைப்பதன் மூலம், என்னைப் பார்க்கும் இறுதி வாய்ப்பை நான் உங்களுக்கு வழங்குகிறேன். நான் உயிரைத் துறந்தால், நீங்களும் விரைவில் மறைந்து விடுவீர்கள், ஏனெனில், அப்போது நீங்கள் வாழ்வதில் எந்த பயனும் இருக்காது. நான் உயிரோடு இருந்தால், பேசுவேன், உலகில் வெளிப்படுவேன்; அப்போது நீங்கள் 'உங்கள் தேர்வில் வெற்றிபெற வேண்டும்'** (அதாவது அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது).

"**என் உடல் ஆரோக்கியம் ஏற்கனவே பலவீனமடைய ஆரம்பித்துவிட்டது. நேற்று எனக்கு கடுமையான இதய வலி ஏற்பட்டது. மிகவும் மோசமாக இருந்ததால், என்னால் அரை மணி நேரத்திற்கு நகர முடியவில்லை; பெண்மணிகள் மிகவும் பயந்து போயினர்.**"

அப்போது அங்கிருந்த ஒவ்வொரு ஆண் மண்டலியின் மனதிலும் ஒரே மாதிரியான சிந்தனை அலைபாய்ந்தது: "பாபாவின் ஏகாந்தவாசம் இன்னும் ஆறு மாதங்கள் நீடித்தால் மக்களின் எதிர்வினை என்னவாக இருக்கும்? பாபா, அவரது மௌனத்தை, (ஆகஸ்ட் 1ஆம் தேதி) கைவிடுவதாக அறிவித்திருந்தார். இப்போது, அதைத் தள்ளிப் போடுவதானால் மக்கள் என்ன நினைக்கக் கூடும்?"

ஆனால் பாபாவிடம் இதைக் குறித்து எவரும் எதுவும் கூறவில்லை, ஜூலை 20 அன்று நடந்த தனிப்பட்ட நேர்காணல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்குப் பின்னர், அடுத்த நாள் பாபா அனைவரையும் ஒன்றாக

அழைத்து, ‘கடவுள்’ மற்றும் ‘மாயா’ குறித்து ஒரு விளக்கத்தை அளித்தார், அது அவர்களின் கேள்விக்கு பதிலளிப்பதாக அமைந்தது.

எவ்வாறாயினும், பாபா, அவரது மௌனம் மற்றும் ஏகாந்தவாசத்தின் காலத்தை மேலும் தள்ளிப்போடுவதன் மூலம், அவரைப் பற்றிய எல்லா வகையான போலி பிரச்சாரங்களையும் மக்களிடையே முன்வைப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்று சிலர் எடுத்துரைத்தனர். இதற்கு பாபா, பதிலளித்தார்:

**வட இந்தியாவில், ஒரு முக்கியமான ரயில் நிலையத்தில், ஒரு மஸ்த் தங்கியிருக்கிறார். சமூகம், அதிர்ச்சிக்குள்ளாகும் விதத்தில் அவர் நடந்து கொள்கிறார். தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் அவரைக் கடந்து செல்கிறார்கள், அவருடைய அருவருப்பான பழக்கங்களுக்கு சாட்சியாக இருக்கிறார்கள், ஆனால், எதுவும் சொல்வதில்லை. காவல்துறையினரும் இது விஷயத்தில் தலையிடுவதில்லை. ஒரு சாதாரண விவேகமுள்ள மனிதனின் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு, வழக்குத் தொடருவது மட்டுமின்றி, சட்டத்தால் கடுமையான தண்டனையும் வழங்கப்படும். இந்த மஸ்தின் விஷயத்தில், எவரும் அவரை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை, அவரைப் பற்றி கவலைப்படுவதுமில்லை. ஏன்? வெறுமனே அவர்கள் அனைவரும் அவரை, முற்றிலும் வெறித்தனம் பிடித்த பைத்தியக்காரன் என்று எடுத்துக்கொள்வதால், அவரது நடத்தைக்கு அவர் பொறுப்பல்ல எனக் கருதுகின்றனர்!**

**இதைப்போல், இறையுணர்வை அடையாத அனைவரையும் நான் பைத்தியம் என்று எடுத்துக்கொள்கிறேன்; அவர்கள் என்ன செய்கிறார்கள் அல்லது என்னைப் பற்றி அல்லது எனது பணியைப் பற்றி சாதகமாகவோ அல்லது வேறுவிதமாகவோ சொல்வதில் நான் கவனம் செலுத்துவதில்லை. மோசமான ஊழல்கள் அல்லது மோசமான துஷ்பிரயோகங்களின் விஷயத்தில் கூட, அவர்கள் பொறுப்பற்றவர்கள், ஆர்வமுள்ள தரப்பினரால் தூண்டப்படுபவர்கள் என்று எனக்குத் தெரியும்; குறும்புகளை உருவாக்குவது ஒன்றே அவர்களின் பிரதான தொழிலாகும். நீங்கள் அவற்றை சரிசெய்து, அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் விதத்தில் சந்தர்ப்பங்கள் அமைந்தால், கண்ணியம், பாசம் மற்றும் கருணையுடன் நீங்கள் அதைச் செய்யலாம்.**

மாயை மற்றும் உண்மைப்பொருளைப் பற்றியும், ஒரு சாதாரண மனிதனுக்கும் இறை-மனிதனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் பற்றியும் பாபா, மேலும் விளக்கிக் கூறுகிறார்:

**பிரபஞ்சத்தில், ஒருபுறம் யதார்த்தமும் (உண்மைப்பொருளும்) மறுபுறம் மாயையும் உள்ளன. உண்மைப்பொருள் எல்லையற்றது; எனவே உண்மைப்பொருளின் நிழலான மாயையும் எல்லையற்றது. இந்த மாயை, அதன் வெளிப்படையான அம்சங்களிலும், எண்ணற்ற வடிவங்களிலும் - வாழ்க்கை, ஒளி, அன்பு, சக்தி, மற்றும் பல - எல்லையற்றது. ஆனால் இந்த அம்சங்கள் அல்லது மாயையின் வடிவங்கள் அனைத்தும் மிகவும்**

வரையறுக்கப்பட்டவை, அவை மிகக்குறைவானவை, சொல்லப்போனால் அவற்றை பூஜ்ஜியம் என்று அழைக்கலாம். சுருக்கமாக, அனைவரிலும், அனைத்திலும் நிலைகொண்டிருக்கும் ஒன்றே உருவான ஏக இறைவன் எல்லையற்றவன், அதுபோல் ஏக இறைவனுள் இருக்கும் அனைவரும், அனைத்தும் எல்லையற்றவை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எண்ணற்ற வாழ்க்கை, பிரச்சினைகள், ஆர்வங்கள், அவற்றின் மாறுபட்ட அம்சங்கள் மற்றும் வடிவங்களில் உள்ள உணர்வுகள் அனைத்தும் எல்லையற்றவை.

இறை-மனிதனுக்குப் பின்னால் முடிவிலா நிலை இருக்கிறது, ஏனெனில் அவர் அத்துடன் ஒன்றானவர். ஆனால் ஒரு சாதாரண நபருக்குப் பின்னால் மனமும், அதன் வெளிப்படையான அம்சங்களில் அகந்தையும் உள்ளன. (எல்லையற்ற) இறை-மனிதன் மற்றும் (வரையறுக்கப்பட்ட) மனிதன் இருவரின் செயல்களும் வெளியளவில் ஒன்றுபோலத் தோன்றும், ஏனெனில் எல்லையற்றது வரையறுக்கப்பட்ட நிலைக்கு வந்துவிட்டது. ஆயினும்கூட, இந்த வெளியளவிலான ஒற்றுமை இருந்தபோதிலும், உள்ளளவிலும் யதார்த்தத்திலும், வித்தியாசமான உலகம் உள்ளது. எனது செயல்களின் பின்னால் முடிவிலா நிலை உள்ளது, இதில் எந்தவிதமான பிணைப்பும் இல்லாததால், எந்தவிதமான மனப்படிவங்களும் இல்லை, ஏனெனில், நான் மனதிற்கும், அகந்தைக்கும் அப்பாற்பட்டவன்; அதேவேளையில் ஒரு சராசரி மனிதனின் செயல்களின் பின்னால் மனம், அகந்தை இரண்டும் பிணைப்புகளைக் கொண்டுள்ளதால் மனப்படிவங்களை உருவாக்குகின்றன.

ஒருவர் எவரையேனும் அறைகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் மனம் மற்றும் அகந்தையின் காரணமாக, கோபத்தால் அவ்வாறு செய்கிறார். அவரது செயல் எதிர்வினையாற்றுவதால், அறை வாங்கிய நபர் மீது மோசமான மனப்படிவங்களை உருவாக்கி அவரையும் கோபமடையச் செய்கிறது. ஆனால் இறை-மனிதன் ஒருவரை அறைவது அதுபோன்ற மனப்படிவங்களை உருவாக்குவதில்லை, ஏனெனில் இறை-மனிதன் அவைகளுக்கு அப்பாற்பட்டவர். மாறாக, வரையறுக்கப்பட்ட ஒருவரின் மீது இதுபோன்ற எல்லையற்ற இறை சக்தியால் செய்யப்படும் இந்தச் செயலுக்குப் பின்னால், ஒரு திட்டவட்டமான நோக்கம் உள்ளது. இந்தச் செயல் அறை வாங்கிய நபரின் மனப்படிவங்களை விரயமாக்குகிறது, இதனால் அவர் ஆன்மீக ரீதியில் பெரிதும் பயனடைகிறார்.

பாபா பின்பு நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்:

**நீங்கள் அனைவரும் மாயையின் மனப்படிவங்களால் நிரம்பிய பாரத்துடன் என்னிடம் வந்து, உங்களின் எல்லா பிரச்சினைகளுடனும் என் மார்பில் அமர்ந்திருக்கிறீர்கள்! உங்களிடமிருந்து என்னை விடுவிக்கவும் முடியாது, என்னிடமிருந்து உங்களை விடுவிக்கவும் முடியாது! பிரபஞ்சத்தின் சுமைகளுடன் உங்கள் சுமைகளும் எனது தலைமேல் உள்ளன!**

**ஆனால் கவலைப்பட வேண்டாம். 1942 பிப்ரவரி முதல், நான்**

**என்னுடன் பேசத் தொடங்குவேன், பின்பு பொது ஜனங்களுடன் பேசுவேன். எனவே, நான் பேசுவதைக் கேட்கத் தயாராக இருங்கள்.**

1941, ஜூலை 21 திங்கள் மாலை, பாபா, அனைவரையும் தத்தமது இல்லங்களுக்குத் திருப்பி அனுப்பி, ஏகாந்தவாசத்தில் நுழைய ஆயத்தமானார். விஷ்ணு ஒரு வாரத்திற்காக மும்பைக்குச் சென்று, 27 அன்று மெஹராபாத் திரும்பி வந்தார். சாஞ்சியும் 28ஆம் நாள் காலை பாபாவை சிறிது நேரம் சந்தித்தார். 25ஆம் தேதி, பிரோஜா, மீண்டும் பெண்கள் குழுவில் இணைய அனுமதிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார்.

ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்பு, கூண்டு அறையின் பகிர்விலிருந்த மூங்கிலாலான தடுப்புச் சுவரில் செவ்வக வடிவில் ஒரு சிறிய மூங்கில் துண்டை வெட்டுமாறு பாபா, பாதிரிக்கு அறிவுறுத்தினார் (இது முதலில் மஸ்த் கரீம் பாபாவிற்காகக் கட்டப்பட்டது), இதனால் பாபா அவரை மறைத்து, எழுத்துப் பலகை வழியாக தொடர்பு கொள்ள முடியும். இந்த முறை அவரது ஏகாந்தவாசம் முன்பை விட மிகவும் கடுமையானதாக இருந்தது. 1941, ஆகஸ்ட் 1 வெள்ளிக்கிழமை, மெஹராபாத் மேல் மலையில் அமைந்த கூண்டு அறையில், இதற்கு முந்தைய ஏகாந்தவாசத்திலிருந்து சரியாக ஒரு வருடத்திற்குப் பிறகு, பாபா, இப்போதைய ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார். ஏகாந்தவாசம் தொடங்கிய பின்னரும், பாபா, மெஹராபாத்தில் வாழ்ந்த ஒரே மஸ்தான சட்டி பாபாவுடன் தொடர்ந்து தீவிரமாகப் பணியாற்றினார், ஆனால் வேறு எவரையும் பார்க்கவில்லை.

மெஹராபாத் மேல்மலையில் முழுமையான அமைதி வியாபித்திருந்தது. பெண்டு, பாதிரி, காளேமாமா, மாஸாஜி, சகன், விஷ்ணு, பைதூல் ஆகியோர் காவல் புரிந்தபோது, பாபாவிற்குச் சிறிதளவிலான தொந்தரவும் ஏற்படாத விதத்தில், மிகவும் எச்சரிக்கையாக இருந்தனர். அவர்கள், நாய்கள் குரைப்பதையும் சத்தமில்லாமல் தடுத்து, அருகிலுள்ள பறவைகள் எழுப்பும் சிறிய ஒலியைக் கூடக் கேட்காமல் அவற்றைத் துரத்தினர். மெஹராபாத் மேல் மலையில் வாழ்ந்த பெண் மண்டலியின் காலடி ஓசையும் கேட்காத அளவிற்கு லேசாக மிதிப்பதும், உதடுகளிலிருந்து சிறிதளவு சத்தமும் வராமல் பார்த்துக் கொள்வதும் சிறப்பு கடமையாக இருந்தது.

காலம் இதை இவ்வாறு வர்ணித்தது: "கல்லறை நிசப்தம் மேல்மலையை, மக்கள் வாழாதது போலத் தோற்றமளிக்கச் செய்தது! ஆனால் மாயா இத்தகைய நிசப்தத்தைப் பார்த்துக்கொண்டு இருக்காது; இது அங்கலாய்ப்பில், ஆதங்கத்தில் பழகிப்போனது! மெஹர் பாபாவின் ஆண், பெண் மண்டலி அவருடைய கட்டளைகளை உண்மையாகக் கடைப்பிடிப்பதைக் கண்டு அது எரிச்சலையும் பொறாமையையும் வளர்த்தது, எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாமல் தவித்தது!

ஆற்றொணா சீற்றத்தில், அது வேறு வழிகளை நாடியது: இரவும் பகலும் ஆரவாரமான சூறாவளி புயல், எங்கும் தூசி மயமாகத் தென்பட்டது!"

ஆகஸ்ட் மாதத்தில் இதுபோன்ற சூறாவளி காற்றுடன் கூடிய காலநிலையை, மண்டலி கண்டதில்லை. மெஹராபாத் மேல்மலையின் நான்கு மூலைகளில் அமைக்கப்பட்ட சிறிய அறைகளில் காவலாளிகள் அமர்ந்திருப்பது மிகவும் கடினம். மஸ்த் ஆசிரமத்தின் தகர கூரைகள் கூச்சலிட்டு, பீதியைக் கிளப்பும் சலசலப்பை உருவாக்கி, பாபாவை மிகவும் தொந்தரவு செய்தது. "**மாயா எனக்கு எதிராக செயல்படுகிறாள்**" என்று உறுதிப்படுத்தி அவர் மண்டலிக்கு ஒரு குறிப்பை அனுப்பி வைத்தார்.

இந்தக் காலகட்டத்தில், பாபா மண்டலி எவரையும் பார்க்கவில்லை. விஷ்ணு தினமும் காலையில் பதினைந்து நிமிடங்கள் அவரிடம் சென்று வந்தார்; மூங்கில் தடுப்புச் சுவரில் அமைந்த சிறிய, செவ்வக ஜன்னல் வழியாக, பாபா எழுத்துப்பலகையைப் பயன்படுத்தி, அவருக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். விஷ்ணுவால் பாபாவின் விரல்கள் பலகையில் குறுக்கும் நெடுக்கும் வேகமாக நகர்வதை மட்டுமே பார்க்க முடிந்தது; அவருடைய உடலின் வேறு எந்த பகுதியையும் பார்க்க முடியவில்லை. இருந்தும், பாபா அவரது முகத்தை முழுவதுமாக துணியால் மறைத்துக் கட்டியிருந்தார். கிருஷ்ணா, பாபாவின் அறையை சுத்தம் செய்ய வரும்போதும் அவர் பக்கத்து அறைக்குள் சென்றுவிடுவது வழக்கம் .

பாபா, அந்த நேரத்தில் ஒரு நாளைக்கு சிறிதளவு சாதமும் பருப்பும் மட்டுமே உட்கொண்டார். சில நாட்களுக்குப் பின்னர், உபவாசம், அவரது ஆன்மீக உள்பணி மற்றும் இரவும் பகலும் சூறாவளி காற்றினால் எழுந்த கூரையின் அலறல் ஓசையும் அவரது உடல்நிலையைப் பெரிய அளவில் பாதித்தது. எழுத்துப்பலகையில் உத்தரவுகளை எடுத்துரைத்தபடி பாபா ஒவ்வொரு நிமிடமும் பலவீனத்தால் களைப்பாற அமர்ந்து சிரமப்படுவதை விஷ்ணு நேரடியாகக் காண நேர்ந்தது.

பாபா, இந்தக் கூண்டு அறையில் ஒரு வாரம் தங்கியிருந்து, பின்னர், 1941 ஆகஸ்ட் 7 அன்று, அவரது எதிர்கால சமாதி அறைக்கு இருப்பிடத்தை மாற்றி, அங்கு அவரது உலகளாவிய பணிகளை ஐந்து நாட்கள் தொடர்ந்தார். பாபா, மஸ்த் ஆசிரமத்திலிருந்து சமாதி அறைக்குச் செல்லும் வேளையில் முகத்தைத் துணியால் முழுவதுமாக மூடி, அந்தப் பகுதியில் ஒருவரையும் அணுக விடாமல் ஏகாந்தவாசம் பராமரிக்கப்பட்டது.

சீரற்ற வானிலை தொடர்ந்தது. சிக்கல்களுக்கு ஆட்பட்ட மனநிலையில் பாபா, ஐந்து நாட்களுக்குப் பின்னர், ஆகஸ்ட் 12 அன்று, மேல்மலையின் அருகில் அமைந்த டின் கேபினுக்குச் சென்றார். ஆனால் இங்கேயும் தொந்தரவு அதிகமாக இருந்தது. மேலும், இந்த அமைதியின்மைக்கு காரணமாக, அதே நாளில் சட்டி பாபா தனது பொருட்களைக் கேபினுக்கு எடுத்து வந்து, அதை அவருடைய உடைமை என உரிமை கோரினார்! இந்த அசாதாரண நடத்தையால், பாபா,

இரவில் மற்றுமோர் அறைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம், மேலும் சிரமத்தை ஏற்படுத்தியது.

ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு முன்னர், அக்டோபர் நடுப்பகுதியில் மெஹராபாத்திலிருந்து வேறொரு பொருத்தமான இடத்திற்குச் செல்ல இருப்பதாகவும், அந்த நேரத்தில் ஏறக்குறைய பதினைந்து நாட்கள் ஏகாந்தவாசத்தின் நிபந்தனைகள் சற்று தளர்த்தப்படும் என்றும் பாபா சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் இப்போது, அவரது உடல் ஆரோக்கியம் பலவீனமடைந்த நிலையில், மாய சக்திகளின் துன்புறுத்தல் அதிகமாக இருந்ததால், பாபா உடனடியாக பஞ்ச்கணிக்குச் செல்ல முடிவு செய்தார். ஆண், பெண் மண்டலிக்குத் தேவையான பங்களாக்கள் மற்றும் பாபாவின் ஏகாந்தவாசத்திற்கான இருப்பிடம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாயா வெட்கத்தில் தலைகுனிந்தாள்! பாபா, அவரது புதிய திட்டத்தை அறிவித்த அடுத்த கணமே கோர புயல்களின் சீற்றம் தணிந்தது!

வானிலையில் ஏற்பட்ட மாற்றத்தை கவனித்த மண்டலி, ஏகாந்தவாசத்தை மெஹராபாத்திலேயே தொடருமாறு கேட்டுக்கொண்டனர், ஆனால் பாபா அதற்கு உடன்படாமல், பஞ்ச்கணிக்குப் புறப்படும் தேதியை நிர்ணயித்தார். செப்டம்பர் 1ஆம் நாள், பாபா, அவரது ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வந்து, பெண் மண்டலியை சந்திக்கச் சென்றார்.

1941, செப்டம்பர் 3 புதன்கிழமை காலை 7:00 மணிக்கு, பாபா, மெஹராபாத்திலிருந்து பஞ்ச்கணிக்கு எலிஸபெத்தின் கார் மற்றும் நீலப்பேருந்தில் ஆண், பெண் மண்டலியுடன் புறப்பட்டார்; பாபா காரில் நுழைவதை எவரும் பார்க்கவில்லை. காலை 10:45 மணிக்கு அவர்கள் பஞ்ச்கணிக்கு வந்ததும், பாபா, எவருடைய பார்வையிலும் படாமல், நேரடியாகத் தனது பங்களாவிற்குள் நுழைந்தார். சட்டி பாபா, பாபாவின் பங்களாவில் தங்கினார், பைதூல், கிருஷ்ணா இருவரும் தொடர்ந்து மஸ்தை கவனித்து வந்தனர். ஆண், பெண் மண்டலி, வழக்கம் போல, தனி வீடுகளை ஆக்கிரமித்தனர்.

பைதூல், காளேமாமா, கிருஷ்ணா, நீலு, விஷ்ணு, வெங்கோபா ராவ் ஆகியோர் பாபாவுடன் பஞ்ச்கணியில் இருந்தனர். பாபாவின் உத்தரவின் பேரில் பபானந்தா, குஸ்தாஜி, பிளீடர் மூவரும், தங்கள் ஏகாந்தவாசத்தைத் தொடர மஹாபலேஷ்வருக்கு அனுப்பப்பட்டனர். ஆதி ஜூனியர், முரளி, பாதிரி ஆகியோர் மெஹராபாத்தில் ஓர் இலவச மருத்துவ மருந்தகத்தை நடத்தி வந்தனர்; எஞ்சிய ஆண் மண்டலி - சகன், பெண்டு, ஸெயிலர், சிது, ஜங்க்ளே ஆகியோருக்கு இதர கடமைகள் வழங்கப்பட்டன. காக்கா மும்பையில் இருந்தார், ஆனால் செப்டம்பர் தொடக்கத்தில் சில நாட்களுக்காக, பஞ்ச்கணிக்கு வந்தார்.

பஞ்ச்கணியில், பாபா, சட்டி பாபாவுடன் தனது உள்பணியைத் தொடர்ந்தார். செப்டம்பர் 5ஆம் நாள், மஸ்த் மிகவும் மோசமான மனநிலையில் காணப்பட்டார்; இருப்பினும், அடுத்த நாள், அவர் மீண்டும் தனது வழக்கமான

இனிய நிலைக்குத் திரும்பினார்; ஆனால், சட்டி பாபா, அவரை, தென்னிந்தியாவில் தனது இருப்பிடத்திற்குத் திருப்பி அனுப்புமாறு கூற, கிருஷ்ணாவிடம் கோரிக்கை வைத்தார். பாபா இந்தத் தகவலை அறிந்ததும், "**அவரது நேரம் முடிந்துவிட்டது. அவர் மீண்டும் அந்தக் கோரிக்கையை முன்வைத்தால் நான் அவரை அனுப்பி விடுவேன், ஆனால் அப்போது எனது திட்டங்கள் அனைத்தும் மாற்றப்பட வேண்டும்**" என்று குறிப்பிட்டார்.

1941 ஆகஸ்ட் மாதத்தில், பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்ட வேளையில், 1930 ஆண்டுகளின் முற்பகுதியில், மஹாத்மா காந்தியுடனான சந்திப்புகள் சம்பந்தமாக சில தவறாகச் சித்தரிக்கப்பட்ட அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. காந்தியைப் பின்பற்றும் ஆங்கிலேய பெண்மணி மீராபென் (MIRABEHN) என்பவர், பத்திரிகை ஆசிரியரான ரோம் லாண்டவிடம் (ROM LANDAU) இவ்வாறு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது:

இருவருக்கும் இடையிலான தொடர்பு பற்றிய அனைத்து விவரங்களும் எனக்குத் தெரியும். எப்பொழுதும் ஸ்ரீ மெஹர் பாபாதான் காந்தியைப் பார்க்கச் சென்றாரே தவிர, காந்தி அவரைப் பார்க்கச் செல்லவில்லை. அவர்கள் முதலில் ராஜ்புத்னா கப்பலில் சந்தித்தனர், பாபா, காந்தியை சந்திக்க அவருக்கு நேரம் உள்ளதா என்று கேட்டறிய தனது நபரை அனுப்பினார். காந்தி, 'நிச்சயமாக' எனக் கூறி அதற்கு இணக்கம் தெரிவிக்க, பாபா, காந்தியை சந்தித்தார். அதன் பின்னர், ஸ்ரீ மெஹர் பாபா மீண்டும் லண்டனில் காந்தியின் இருப்பிடத்திற்கு விஜயம் செய்தார். ஆனால், காந்தி ஒருபோதும் மெஹர் பாபாவிடம் உதவி அல்லது ஆன்மீகம் தொடர்பான பிற ஆலோசனைகளைக் கேட்கவில்லை என்று உறுதியாகக் கூறலாம். அவர் மெஹர் பாபாவை விரும்பினார், மேலும் அவரைப் பார்க்க விரும்பும் அனைவரிடமும் பேசுவதால் காந்தி அவருடனும் பேசினார் - அவ்வளவுதான்.

லாண்டவ் எழுதிய 'காட் இஸ் மை அட்வெஞ்சர்' (GOD IS MY ADVENTURE) என்ற புத்தகத்தில் அவர் இந்த விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு பாபாவை நேர்காணலில் சந்தித்த லண்டன் பத்திரிகை ஆசிரியர் ஜேம்ஸ் டக்ளஸிடமிருந்து (JAMES DOUGLAS) அறிந்துகொண்ட விஷயங்களையும் அவர் பகிர்ந்து கொண்டார்.

லாண்டவின் அறிக்கைகள் குறித்து, பல செய்தித்தாள் ஆசிரியர்களால் விமர்சனமும், விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாபாவுடன் இந்த நிலைமையைப் பற்றி விவாதிக்க, சாஞ்சி ஆகஸ்ட் மாதம் நான்கு முறை மெஹராபாத்திற்கு வந்தார். இந்த விஷயத்தைத் தெளிவுபடுத்தும் நோக்கத்தில், செப்டம்பர் 4ஆம் நாள், ஸேகாவ்மில் (SEGAON) அமைந்த அவரது ஆசிரமத்தில் காந்தியை, சாஞ்சி சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. காந்தி, இதர பல விஷயங்களில் ஆர்வம் காட்டினார், ஆனால் சாஞ்சி, மீராபெனின் அறிக்கையைப் பற்றி விளக்கினார், தொடர்ந்து சாஞ்சி இது குறித்துக் காந்திக்குக் கடிதம்

எழுதினார். சாஞ்சி, செப்டம்பர் 8ஆம் நாள் பஞ்ச்கணிக்கு வந்து எல்லா விஷயத்தையும் பாபாவிடம் தெரிவித்தார்.

செப்டம்பர் 18, 19ஆம் தேதிகளில் சாஞ்சி மீண்டும் காந்தியை சந்தித்து, பின்பு பஞ்ச்கணிக்கு வந்தார். தவறாகச் சித்தரிக்கப்பட்டுள்ள அறிக்கைகளைப் பார்த்த பிறகு, காந்தி, சாஞ்சிக்கு எழுதினார்:

20 செப்டம்பர் 1941
ஸேகாவ்ம், வர்தா

அன்புள்ள தாதாசாஞ்சி,

மீராபெனுடனான நேர்காணல் மற்றும் ரோம் லாண்டவின் அறிக்கை குறித்து - எஸ்.எஸ்.ராஜ்புத்னாவில் என்னைத் தேடி வந்தது மெஹர் பாபா அல்ல, ஆனால் நான் அவரைத் தேடி அடிக்கடி அவரது அறைக்குச் சென்றதையும் உறுதிப்படுத்துகிறேன்; இதை, சம்பந்தப்பட்ட ஆர்வலர்களுக்கு நீங்கள் தெரிவிக்கலாம். ஸ்ரீ பாபா என்னுடன் பயணிக்கும் சக பயணி என்றும், நான் அவரை சந்தித்து, புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும் என்றும் எனக்குத் தொலைத்தந்தி அனுப்பிய பிரியமான ஜாம்ஷெட் மேத்தாவின் அன்பிற்காக நான் இதைச் செய்தேன். மேலும், பாபா, உலகத்தோடு உரையாட பயன்படுத்தும் எழுத்துப்பலகை வழியாக நீங்கள் மொழிபெயர்த்து எடுத்துரைத்ததால், எங்கள் உரையாடலின் ஆன்மீகத் தன்மையை நீங்கள் அறிவீர்கள்.

மேலும் நான் அங்கு இருந்தபோது, லண்டனில் என்னை சந்திக்க, பாபாவை அழைத்திருந்தேன்.

‘குருநாதர் - சீடர்’ பற்றிய கேள்விக்கு இடம் எதுவும் இல்லை. ஆன்மீக ரீதியில் எவருக்கும் (ஒரு) சீடராக இருப்பதை நான் ஒருபோதும் உணரவில்லை; இருந்தும் இன்னும் நான், எப்பொழுதும் போலவே ஒரு குருநாதரைத் தேடிக்கொண்டிருக்கிறேன்; கடவுளைத் தேடும் ஒவ்வொருவரும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
மோகன்தாஸ் காந்தி.

1941, செப்டம்பர் 9ஆம் நாள், தனது பணியின் ஒரு பகுதியாக ஸவக், ‘வாய்’ (WAI) கிராமத்திலிருந்து 15 ஏழை பிச்சைக்காரர்களை அழைத்து வந்தார்; அவர்களை, பாபா தனது பங்களாவில் நீராட்டி, உணவூட்டி, உடை அணிவித்தார்.

பாபா பஞ்ச்கணியில் இருந்த முதல் வாரத்தில், வானிலை வெப்பமாக இருந்தது, ஆனால் செப்டம்பர் 11ஆம் நாள் மழை பொழியத் தொடங்கியது. முதல் சில நாட்களுக்கு, பாபா, தினமும் மிகச் சிறிய அளவில் உணவு உண்டு, தொடர்ந்து உபவாசம் கடைப்பிடித்தார்; சில நாட்கள் அவர், அந்த நேரத்தில் தயார் செய்த ஆரஞ்சு ரசம் மட்டுமே அருந்தினார், சில சமயங்களில் தண்ணீர் அல்லது தேநீர் மட்டும் பருகினார். செப்டம்பர் 12ஆம் நாள், பாபா ஆரஞ்சு ரசம் அருந்தி உபவாசத்தோடு ஏகாந்தவாசத்தையும் தொடங்கினார். ஒன்பது நாட்கள்

கடந்தன. இந்த நேரத்தில் தொடர்ந்து மழை பெய்து, பஜாரில் பழம் எதுவும் கிடைக்காததால், பாபா, மூன்று நாட்கள் தண்ணீர் மற்றும் தேநீர் மட்டுமே அருந்தினார்.

1941, செப்டம்பர் 12 அன்று, சட்டி பாபாவின் மனநிலை மீண்டும் சீரில்லாமல் ஆயிற்று; எனவே 15ஆம் நாள், பைதூல் மற்றும் கிருஷ்ணாவுடன் நாகப்பட்டினத்தில் அவரது இல்லத்திற்கு அனுப்ப, பாபா முடிவு செய்தார். மஸ்த் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக, தொடர்ந்து பாபாவுடன் தங்கியிருந்தார். புறப்படும் நேரத்தில், சட்டி பாபா, மிகையாக அழுதார். பாபாவும் துக்கத்தால் நிரம்பி காணப்பட்டார். மார்கரெட் க்ராஸ்கே இவ்வாறு நினைவு கூர்ந்தார், “சட்டி பாபாவின் கார் புறப்பட்டுச் சென்ற போது, பாபாவின் முகத்திலிருந்த சோகத்தைப் போல நான் இதுவரைப் பார்த்ததில்லை.”

சட்டி பாபாவுடன் சென்ற பைதூல், பயணத்தின் போது குழாய் நீரை மட்டுமே அருந்துவதில் கவனமாக இருக்க வேண்டும் என்றும், நதி, ஊற்று அல்லது கிணற்று நீரை அருந்தக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டார். சட்டி பாபாவை நாகப்பட்டினத்திற்கு அழைத்துச் சென்று, திரும்பி வந்ததும், கடுமையான நச்சுக்காய்ச்சலால் பைதூல் அவதிப்பட்டார். பாபா அவரிடம் கேட்டார், **“நீங்கள் என் கட்டளையை மீறினீர்களா?”**

“நான் மிகவும் தாகமாக இருந்தேன், சுற்றிலும் மைல் தூரத்திற்குக் குழாய் நீர் கிடைக்கவில்லை ஆதலால் நான் ஊற்று நீரைக் குடிக்க வேண்டியதாயிற்று” என்று பைதூல் தன்னைப் பாதுகாக்கும் விதத்தில் பதிலளித்தார்.

**“எனது கட்டளைகளை ஏன் மீறினீர்கள்?”** பாபா காரணத்தைக் கோரினார். **“பல ஆண்டுகளாக எனது சேவையில் இருந்த நீங்கள், பெர்சியாவிலிருந்து சிறுவர்களை மெஹராபாத்திற்கு அழைத்து வருவது எவ்வளவு கடினம் - ஆனால் நீங்கள் அதைச் செய்தீர்கள்! இப்போது, இவ்வளவு சிறிய விஷயத்தில், நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாமல் என் எச்சரிக்கையைப் புறக்கணிக்கிறீர்கள்! நீங்கள் உயிரைத் துறந்திருக்க வேண்டும், ஆனால் எனக்காக நீங்கள் செய்ய வேண்டியது ஏராளமாக இருப்பதால், நீங்கள் இன்னும் வாழ்வீர்கள்”** என்ற கசப்பான வார்த்தைகளால் திட்டிய பிறகு, பாபா, பைதூலை மன்னித்து, நீலுவிடம் சிகிச்சையளிக்குமாறு அறிவுறுத்தினார். சில வாரங்களுக்குப் பிறகு பைதூல் குணமடைந்தார்.

மாயா, பஞ்ச்கணியில் வழக்கத்தை விட சுறுசுறுப்பாக இருப்பதாகத் தோன்றியது. எந்த எச்சரிக்கையும் இல்லாமல், 1941, செப்டம்பர் 10 அன்று, சுவாமி பபானந்தா மஹாபலேஷ்வரில் தற்கொலை செய்து கொண்டார். சில நாட்கள், அங்கு தங்கியிருந்த பாபாவின் இதர ஆண் மண்டலிக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்பந்தம் இருப்பதாக போலீஸ் அதிகாரிகள் கருதவில்லை.

குஸ்தாஜி, பிளீடர் இருவரும் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் தொடர்ந்து இருக்க தயக்கம் காட்டினர், எனவே பாபா அவர்களை, செப்டம்பர் 19 அன்று பஞ்ச்கணிக்கு அழைத்தார்.

பபானந்தா, பெங்களூரில் மெஹர் பாபா இருந்த வேளையில் வந்திணைந்து, பின்பு மெஹராபாத்தில் தங்கியிருந்தார். பாபாவை சந்திப்பதற்கு முன்னர், அவர் ஒருவரைக் கொலை செய்ததாகவும், அந்தக் குற்றம் அவரைத் தூக்கிலிட வழிவகுத்ததாகவும் ஆண் மண்டலி பின்னர் அறிந்து கொண்டனர். பபானந்தாவின் தற்கொலை பற்றி கேள்விப்பட்ட பாபா, "**அவர் உடனடியாக வேறொரு பிறவியை எடுத்து ஆன்மீக ரீதியில் முன்னேறுவார்**" என்று கருத்துத் தெரிவித்தார்.

மெஹர் பாபா 1941 செப்டம்பர் 21 அன்று உணவு உண்ணத் தொடங்கினார்; நான்கு நாட்களுக்குப் பிறகு தனது ஏகாந்தவாச பணியையும் நிறைவு செய்தார். 28ஆம் தேதி 'கிப்பி' அமெரிக்காவில் இறந்துவிட்டதாக ஒரு தொலைத்தந்தி வந்தது. 30 அன்று குஸ்தாஜி, காக்கா இருவருடன் மஸ்த் பயணமாக பாபா பஞ்ச்கணியிலிருந்துப் புறப்பட்டார். பாபா வேறு வேறு இடங்களுக்குச் சென்று, பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டு, இரண்டு வாரங்களில் ஏறக்குறைய 3,000 மைல்கள் ரயிலில் மூன்றாம் வகுப்பில் பயணித்தார். பாபாவின் அடையாளம் முற்றிலுமாக மறைக்கப்பட்டிருந்ததால், மறைமுகமாக பயணம் செய்து ஏகாந்தவாசத்தையும் தொடர முடிந்தது. அக்டோபர் 14 அன்று பஞ்ச்கணிக்குத் திரும்புவதற்கு முன்பு, பாபா, கோலாப்பூர் அருகே நர்ஸோபாவாடி (NARSOBAWADI), குருந்த்வாடி (KURUNDWADI), இடர்சி (ITARSI), அலஹாபாத் (ALLAHABAD), ஃபத்தேபூர் (FATEHPUR), கான்பூர் (KANPUR), இஸ்மாயில்பூர் (ISMAILPUR), அஜ்மீர் (AJMER), இந்தூர் (INDORE), கண்ட்வா (KHANDWA) போன்ற இடங்களுக்கு விஜயம் செய்தார். ஒவ்வொரு நகரிலும், பாபா சில குறிப்பிட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து, குறுகிய காலத்திற்கு ஏகாந்தவாசம் மேற்கொண்டு, உலகோடு தொடர்புடைய தனது ஆன்மீக உள் பணியில் ஈடுபட்டார்.

சாதுக்கள், வாலிகள், மஸ்துகள், யோகிகள் மற்றும் மேம்பட்ட யாத்ரீகர்களுடனான மெஹர் பாபாவின் தொடர்புகள் அனைத்தும் அவருக்கு, சிறப்புமிக்க, தனிப்பட்ட முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன; இருப்பினும் அவற்றைத் தெளிவுற வெளிப்படுத்தி, பதிவு செய்யப்படாததால், முழுமையாக அறிய முடியாத சூழ்நிலை. இந்தப் பயணத்தில் மெஹர் பாபாவின் குறிப்பிடத்தக்க தொடர்புகளில் அலஹாபாத் நகருக்கு ஆன்மீகப் பொறுப்பாளராக இருந்த பஷீர் மஸ்தான் (BASHIR MASTAN) ஆவார். பாபா குறிப்பிட்டது போல், '**அவர் ஓர் அசாதாரண மஸ்த், ஏனெனில் அவர் மஸ்துகளின் ஐந்து தனித்துவமான பண்புகளின் கலவையை உள்ளடக்கியவர்**'.

இஸ்மாயில்பூரில், மெஹர் பாபா மீண்டும் புனித கோகலே பாபாவைத் (GOKHALE BABA) தொடர்பு கொண்டதோடு, அஜ்மீரில், மஜ்ஜூப் சாச்சாவுடன் (MAJZOOB

CHACHA) மறுபடியும் உரையாடினார்; லக்கன் ஷா (LAKHAN SHAH), கப்ரிஸ்தான்வாலா – QABRISTANWALA (SOCRATES - சாக்ரடீஸ்) ஆகியோரையும் தொடர்பு கொண்டார்.

கண்ட்வாவில், மெஹர் பாபா, கோரப் ஷா (GORAB SHAH) என்ற மிகச் சிறந்த மேல்நிலை மஸ்தை சந்தித்தார். இந்த வயதான மஸ்த், எந்த வாகனங்களிலும் பயணம் செய்யாமல் தொலைதூர கிராமங்களுக்குச் செல்வது வழக்கம்.

கண்ட்வாவில், குரு துனிவாலா பாபாவின் (DHUNIWALA BABA) தலைமை பொறுப்பாளராக இருந்த ஹரிஹர் தாதாஜி (HARIHAR DADAJI) என்ற இந்து துறவியை பாபா சந்தித்தார். துனிவாலா பாபா எப்போதுமே கடைப்பிடித்த பழக்கத்தைப் பின்பற்றி, ஹரிஹர், இரவும் பகலும் ஒரு புனித நெருப்பை (துனி) தொடர்ந்து எரியவிட்டார். இந்தத் துறவி பல சீடர்களின் முறைசாரா ஆசிரமத்தின் தலைவராக இருந்தார்.

பாபாவின் இந்த ஆன்மீக உள்பணிகள், ஒருவேளை ஐரோப்பா மற்றும் உலகெங்கிலும் நடந்த போரின் முன்னேற்றங்களுடன் தொடர்புடையவை, ஏனெனில், பாபா பயணித்த இந்தக் காலகட்டத்தில் ஜெர்மனி, மாஸ்கோவைக் கடுமையாகத் தாக்கியது.

ஜெர்மன் இராணுவம் லெனின்கிராட் (LENINGRAD) நகரின் புறநகர் பகுதியை நெருங்கியபோது, ரஷ்ய அரசாங்கம் மாஸ்கோ தலைநகரைக் கைவிட்டு வெளியேறி, தலைமையகத்தை குய்பிஷேவிற்கு (QUIBYSHEV) மாற்றியது. எவ்வாறாயினும், ஜெர்மனியர்களுக்கு எதிரான ரஷ்ய துருப்புக்களை முன் நின்று வழிநடத்த ஸ்டாலின் மாஸ்கோவில் தங்கியிருந்தார். இதற்கிடையில், ஜப்பான் முழுச் செயல் முனைப்புடன் போரை அறிவிக்கத் தயாராகி, ஹாங்காங்கைக் (HONG KONG) கைப்பற்ற சதி செய்து, ஃபிலிப்பைன்ஸ் (PHILIPPINES) மீது படையெடுக்கவும், அமெரிக்கா மீது வான்வழித் தாக்குதலை நடத்தவும் திட்டமிட்டது.

1941 அக்டோபரில் பஞ்ச்கணியில், உலக நிலைமைகள் குறித்துத் கருத்துத் தெரிவிக்கையில், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**உலகம் உண்மையிலேயே ஒரு சுழலில் சிக்கியுள்ளது. அது பைத்தியமாகி விட்டது! இன்றைய உலக நிலைகளைப் பாருங்கள்: சட்டமும் வாழ்வும் இப்போதெல்லாம் கலக்கத்திற்குள்ளாகி அழிவின் வேதனையில் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன. எந்தவொரு மதிப்பு, மரியாதைக்கும் இடமில்லை. சிந்தனையற்ற முறையில் ஈவிரக்கமின்றி சட்டங்கள் உடைக்கப்பட்டு, உயிர்கள் அழிக்கப்படுகின்றன. சொற்களுக்கும் மரியாதை குறியீடுகளுக்கும் எந்த மதிப்பும் இல்லை. புனிதமான வாக்குறுதிகள் விரும்பத்தகாத முறையில் அங்கீகாரத்தை இழக்கச் செய்யப்படுகின்றன, மேலும் சுயநல நோக்கங்களுக்காகவும், காமம், பேராசை ஆகியவற்றின் திருப்திக்காகவும் ஆவணங்கள், கழிவு காகிதங்கள் போலத் தூக்கி வீசப்படுகின்றன. சுருக்கமாக, இப்போது, சட்டமும் வாழ்வும் உங்கள் கைகளில்தான் உள்ளன.**

மெஹர் பாபா, சமீபத்தில் மஸ்த் பயணத்தை மேற்கொண்ட வேளையில், கிழக்கு மற்றும் மேற்கத்திய பெண்மணிகளை, ஒன்றாக, குறுகிய சுற்றுலா அல்லது நடக்கச் செல்ல அனுமதித்தார்; ஆனால், குறிப்பாக, வழியில் காணும் காட்டு பழ வகைகளை சாப்பிட வேண்டாம் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். 1941, அக்டோபர் 13 அன்று, பதினாறு பெண்கள் ஒன்றிணைந்து பொழுது சாயும் நேரத்தில் வெளியே உலாவச் சென்றனர். அவர்களில் ஒருவர் கூவைக்கிழங்கு என்று நினைத்து, அதை நிலத்திலிருந்து தோண்டி எடுத்து, அனைவருக்கும் சுவைக்கக் கொடுத்தார். கர்மான் மாசி மட்டுமே அவற்றில் சிலவற்றை உண்டார்.

அன்று மாலை ஏழு மணியளவில், கர்மான் மாசி கடுமையான வயிற்று வலி, காய்ச்சல் மற்றும் சிவந்து வீங்கிய முகத்துடன் உடல் நலம் குன்றி காணப்பட்டார்... பாபாவின் கட்டளைப்படி, பெண்மணிகளின் நலனை கவனித்து வந்த டாக்டர் நீலு, அவரைப் பரிசோதித்தார்; ஆனால் அவரால் இன்னதென்று கண்டறிய முடியவில்லை. இரவு முழுவதும் கர்மான் மாசி படுக்கையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறம் புரண்டு புரண்டு மிகவும் சிரமப்பட்டார்; அவர் உயிரைத் துறந்து விடுவார் என எல்லோரும் நினைத்தனர்.

மறுநாள் காலையில், பாபா திரும்பி வந்து, அங்கு நிகழ்ந்த முழுக் கதையையும் கேட்டார். அவர் கர்மான் மாசியின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தார். இறுதியில் கர்மான் மாசி உண்டது கூவைக்கிழங்கு அல்ல, ஆனால் ஆபத்தான நோயால் பாதிக்கப்பட்ட எருமைகள் துயரமின்றி உயிரை விடுவதற்காகக் கொடுக்கப்படும் ஒரு நச்சு மருந்து என்று தெரிய வந்தது! மெஹர் பாபாவின் அருளால், அவரது கண்காணிப்பில் கர்மான் மாசி படிப்படியாக ஒரு வாரத்தில் குணமடைந்தார்.

பல ஆண்டுகளாக, உபாஸனி மஹாராஜ், குல்மாயிடம், "நான் மேர்வானைப் பார்க்க விரும்புகிறேன்!" என்று கூறிவந்தார். இந்தக் காலகட்டத்தில், குல்மாய் இதை, பாபாவிடம் மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தார், **"நான் மஹாராஜை ஒரு முறை பார்ப்பேன், ஆனால் தனியாக சந்திப்பேன்"** (அதாவது மஹாராஜ் மேலும் ஒரு சந்திப்பை எதிர்பார்க்கக் கூடாது) என்றார்.

மெஹர் பாபா, '**இருவரும் சந்திக்கும் இடம் மெஹராபாத் மற்றும் ஸாக்கோரியிலிருந்து விலகி இருக்க வேண்டும்**' என்ற நிபந்தனையை முன்வைத்தார், மேலும், "**நான் இன்னமும் மௌனம் கடைப்பிடிப்பதால், அவருடன் பேசமாட்டேன் என்ற நிபந்தனையின் பேரில் அவரை சந்திப்பேன்**" என்றும் கூறினார்.

குல்மாய், இதை மஹாராஜிடம் எடுத்துரைத்த போது, அவர் அனைத்து நிபந்தனைகளுக்கும் உடன்பட்டார். குல்மாயை ஸாக்கோரியிலிருந்து சில மைல் தொலைவில் அமைந்த தஹிகாவ்ம் (DAHIGAON) என்ற இடத்திற்கு அழைத்துச் சென்று, குடிசை ஒன்றை அவருக்குக் காட்டினார். குல்மாய், உடனே பஞ்ச்கணிக்குத் திரும்பி வந்து, பாபாவிற்குத் தெரிவித்ததும், அக்டோபர் 17ஆம்

தேதியை அவர்கள் சந்திக்கும் தினமாக நிர்ணயித்து, "**மஹாராஜை சந்திக்க, நான் ஒரு நாள் எனது ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வருவேன்**" என்று கூறினார்.

அக்டோபர் 16ஆம் நாள், அஹமதுநகரிலிருந்து பாபா, ஸரோஷை அவருடைய காரில் பஞ்ச்கணிக்கு வரவழைத்தார். அந்த இரவு முழுவதும், பாபா உடல்நலம் குன்றிய நிலையில் இருந்ததாகத் தோன்றியது; கடுமையான காய்ச்சல், மறுநாள் திட்டமிட்ட சந்திப்பு சாத்தியமில்லை என்று மண்டலி நினைத்தனர். ஆனால் அடுத்த நாள் காலையில், அழகான ரோஜா மலர்ந்தது போல, பாபா தனது வழக்கமான புன்னகை பொலிந்த முகத்துடன் தோன்றி, ஒவ்வொரு மண்டலியையும் கேட்டார், "**நான் ஏன் மஹாராஜைப் பார்க்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?**"

அனைவரும் வேறு வேறு பதிலைக் கொடுத்தனர், "**நான் எனது சித்திரம் பதித்த லாக்கெட்டை மஹாராஜுக்கு வழங்குவேன்**" என்று பாபா விளக்கினார்.

மெஹர் பாபா, பஞ்ச்கணியிலிருந்து ஸரோஷின் காரில் 1941, அக்டோபர் 17 அன்று காலை 7:15 மணிக்குப் புறப்பட்டார். அந்த நாள், தஸரா திருவிழா, இந்துக்களுக்கு மிக சிறப்பான நாள். ஸரோஷ் வாகனம் ஓட்டிக் கொண்டிருந்தார், ஸவக், ரானோ இருவரும் உடன் சென்றனர். அவர்கள் காலை 9:30 மணிக்கு பூனா வந்தடைந்த போது, மெமோ, குழுவிற்கு மதிய உணவு வழங்கினார். மதியம் 1:00 மணிக்கு மெஹராபாத்திற்கு வந்தனர். குல்மாய், காக்கா பாரியா இருவரையும் அழைத்து வர ஸரோஷ் அஹமதுநருக்குச் சென்றார். வேறு சில வேலைகளின் நிமித்தம் ரானோ மெஹராபாத்திலே இருந்தார். மேலும், பாதிரியும் பிற மண்டலியும் பாபாவுடன் செல்ல அனுமதிக்குமாறு வேண்டிய பின்பு, பாதிரி, ரானோவின் இடத்தில் அழைத்துச் செல்லப்பட்டார். (பாதிரி இரண்டு குருநாதர்களின் புகைப்படங்களை எடுக்கும் ஆர்வத்தில் இருந்தார்.)

தஹிகாவ்ம் மெஹராபாத்திலிருந்து 40 மைல் தொலைவில் உள்ளது. குழு பிற்பகல் 2:30 மணிக்குப் புறப்பட்டு நான்கு மணிக்கு வந்து சேர்ந்தனர். பாபா அந்த இடத்தைப் பார்வையிட்டு மிக்க திருப்தி அடைந்தார். அழகான தோட்டத்தால் சூழப்பட்ட ஒரு சிறிய ஓலைக் குடிசை இருந்தது. குடிசையை சுத்தம் செய்ய மஹாராஜ் ஏற்கனவே யஷ்வந்த்ராவை அனுப்பி வைத்ததால், அவர் மெஹர் பாபா மற்றும் குழுவுக்காகக் காத்திருந்தார்.

ஸாக்கோரியிலிருந்து மஹாராஜை அழைத்து வர ஸரோஷும் குல்மாயும் பிற்பகல் 4:30 மணிக்குப் புறப்பட்டுச் சென்றனர். மஹாராஜுடன் ஆசிரமத்திலிருந்து வேறு எவரையும் அழைத்து வரவேண்டாம் என பாபா, குல்மாய்க்கு அறிவுறுத்தினார்.

அவர்கள் ஸாக்கோரிக்குச் சென்று, மஹாராஜுடன் மாலை 5:30 மணிக்குத் திரும்பி வந்தனர்.

காரிலிருந்து இறங்கி, மஹாராஜ், மெஹர் பாபா ஏற்கனவே தனியாக அமர்ந்திருந்த குடிசையை நோக்கிச் சென்றார். பாபாவின் உத்தரவின்படி, மண்டலி

அனைவரும் காம்பவுண்டுக்கு வெளியே குடிசையைப் பார்க்காமல் நின்றனர்; பாபா, கைதட்டி அழைக்கும்போது மட்டுமே அவர்கள் அதன் எல்லைக்குள் நுழைய வேண்டும்.

அரை மணி நேரத்தில், பாபா கைகளைத் தட்டும் ஓசைக் கேட்டது. அப்போது மாலை 6:00 மணி; முதலில் மஹாராஜ், தொடர்ந்து மெஹர் பாபா குடிசையிலிருந்து வெளியே வந்ததைப் பார்த்தனர். பாபாவின் முகம் பளபளத்தது. குல்மாய் முன்னால் விரைந்து சென்று இருவருக்கும் மாலை அணிவித்தார், மண்டலி அனைவரும் வணங்கி மரியாதை செலுத்தினர். யஷ்வந்த் ராவ் பாபாவின் தரிசனத்திற்காக முன்னே சென்ற வேளையில், மஹாராஜ் அவரைத் தடுத்து, “மெஹர் பாபாவின் உத்தரவின் படி தரிசனம் செய்யக்கூடாது!” என்றதும் பாபா சிரித்தார்.

அந்தி மாலை வெளிச்சத்தில் புகைப்படம் எடுக்க பாதிரி முயற்சித்தார். ஆனால் குருநாதர்கள் இருவரும் அங்கும் இங்கும் நகர்ந்த வண்ணம் நின்றனர். மஹாராஜ் பாதிரியின் கையிலிருந்த கேமராவைப் பார்த்து, “அது என்ன?” என்று கேட்டார். மஹாராஜ் எரிச்சலடைந்து கேமராவை வீசி எறிந்து விடுவார் என்று பாதிரி அஞ்சினார், ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை, பாதிரி புகைப்படங்களை எடுத்தார் - காலத்தால் அழியாத முக்கியமான சந்திப்பின் ஆதாரங்கள்.

இறுதியாக விடைபெற்று ஸரோஷ், மஹாராஜை மீண்டும் ஸாக்கோரிக்கு அழைத்துச் சென்றார்; குல்மாய், பாதிரி, காக்கா மூவரும் உடன் சென்றனர். புறப்படுவதற்கு முன்பு, மஹாராஜ், “இந்த இடம் மிகவும் சிறப்பு வாய்ந்தது - தனித்துவம் மிக்கது, அதே நேரத்தில் மிகவும் அருகாமையில் உள்ளது” என்று குறிப்பிட்டார். அவர்கள் பஞ்ச்கணிக்கு எப்போது திரும்புவார்கள் என்று மஹாராஜ் கேட்டதற்கு, உடனடியாகத் திரும்பிச் செல்வதாக ஸரோஷ் தெரிவித்தார். மஹாராஜ் கவனமாக ஓட்டுமாறு கூறினார். குல்மாய் ஸாக்கோரியில் தங்கியிருந்தார்.

இந்த நேரத்தில் ஸவக், பாபாவுடன் தனியாக இருந்தார் (அவரது வாழ்க்கையில் முதல் மற்றும் ஒரே முறை பாபாவுடன் தனியாக இருந்த தருணம் இது, இரவு கண்காணிப்பாளராக இருப்பதைத் தவிர). பாபா, திடீரென அவரிடம் பாடச் சொன்ன போது, ஸவக் இந்தி, குஜராத்தி மற்றும் ஆங்கில ‘காதல் பாடல்களைப்’ பாடி பாபாவை மகிழ்வித்தார். ஸரோஷ் திரும்பி வந்ததும், பாபாவும் மண்டலியும் மெஹராபாத்திற்குப் புறப்பட்டனர். குஷ்ரு குவாட்டர்ஸில் காரை நிறுத்தி, ஸரோஷின் மனைவி விலூ தயார் செய்த இரவு உணவுடன் அஹமதுநகர் ரயில் நிலையத்திற்குச் சென்று, அதை உண்டனர். பாதிரி மெஹராபாத்திற்குச் செல்ல அங்கேயே இறங்கிக் கொண்டார். பின்பு ரானோவையும் அழைத்துக்கொண்டு பாபா, பஞ்ச்கணிக்குப் புறப்பட்டு நள்ளிரவில் 1:20 மணிக்கு சென்றடைந்தார்.

வழியில், மெஹர் பாபா மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தார், மேலும், மஹாராஜுடனான சந்திப்பைப்பற்றி மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்:

**நான் அவருடைய தரிசனத்தைப் பெற்றுக்கொண்டேன். (அவதார புருஷராக இருந்தாலும், இல்லையென்றாலும், அவர் எனது குருநாதர்!) அவர் எனது இரு கரங்களையும் பிடித்து எழச்செய்து, அன்புடன் தழுவி, ஒரு குழந்தையைப் போல் அழுதார். பின்னர் இருவரும் அமர்ந்தோம்; அவர் தற்போதைய போர், நான் மௌனத்தைக் கலைத்துப் பேசுவது குறித்து, என்னுடைய சிரமங்கள் மற்றும் பலவற்றைப் பற்றி அரை மணி நேரம் பேசினார்.**

அதைத் தொடர்ந்து, "**நான் புறப்பட வேண்டும்**" என்று சைகையால் தெரிவித்தேன், அவர், "**ஐந்து நிமிடங்கள் என்று கூறி, நாம் மீண்டும் சந்திக்க மாட்டோம். மேர்வான், இப்போது ஐந்து பெரிய சத் புருஷர்களின் அனைத்து பணிகளும் சக்திகளும் உங்களிடம் ஒன்றிணைந்து குவிந்துள்ளன. நான் எல்லாவற்றையும் உங்களிடம் விட்டுவிடுகிறேன்**" என்றார். "**அவ்வாறு கூறியதும், மஹாராஜ் கைகளைக் குவித்து வணங்கியது என்னை நெகிழச் செய்தது. நான், என்னுடைய சித்திரம் பதித்த லாக்கெட்டுகள் நிரம்பிய பெட்டகத்தை மஹாராஜிடம் அளித்தபோது, அவர் அதை ஆழ்ந்த சிந்தனையுடன் ஆய்வு செய்தார்.**"

பாபா, இவ்வாறு கூறி முடித்தார்:

**1942, பிப்ரவரி 15 முதல் 1943 பிப்ரவரி 15க்குள், எந்த நாளிலும் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் நான் பேசுவேன். உலகம் பேரழிவை சந்திக்கும் போது அது நிகழும்! மேலும் மஹாராஜ் அதே நேரத்தில் அவரது உடலைத் துறந்து விடுவார். இது தானாகவே நடக்கும். ஆனால் நான் எந்த அறிவிப்பும் இல்லாமல் பேசுவேன். ஒரு நாளிலா அல்லது ஒரு மணிநேரத்திலா என்பது கூட உங்களுக்குத் தெரியாது. எதிர்காலத்தில், உடல் ரீதியாகவும் எனக்கு எல்லையற்ற துன்பங்கள் வரும்.**

மண்டலியில் எவருக்கும் பாபாவிடம், மேலும் அதிகமாகக் கேட்கும் அளவிற்குத் துணிச்சல் இல்லை; ஆனால் அவர்கள் பஞ்சகணியைச் சென்றடைந்ததும், மண்டலி, விஷ்ணுவிடம் (இதுபோன்ற விஷயங்களில் நல்ல சாதுரியம் படைத்தவர்) அவரது சந்திப்பைப் பற்றி மேலும் கேட்கும்படி வற்புறுத்தினர்.

பாபா, மேலும் சற்று விரிவாகக் கூறுகையில், "**என்னால் நட்சத்திரங்களை வீழ்த்த முடியும்... எனக்கு இப்போது முழு அதிகாரங்கள் உள்ளன... மஹாராஜ் அவரது அனைத்து அதிகாரங்கள் மற்றும் சக்திகளை என்னிடம் ஒப்படைத்துள்ளார்**" என்றார்.

இந்த சந்திப்பின் முக்கியத்துவத்தை நினைத்து காலம் திகைத்துப் போய், ஆனந்தக் கண்ணீர் சிந்தியது. "மெஹர் பாபா அவரது குருநாதர் உபாஸனி மஹாராஜை (மன்ஸில்-இ-மீம் காலத்திலிருந்து, அதாவது 1922, அக்டோபர் 15) கடந்த பத்தொன்பது ஆண்டுகளில் முதல் முறையாக சந்தித்தார். அளவிறுதியற்ற பெருங்கடல் அதன் பிரதிபலிப்பை சந்தித்தது! - ஆனால் இது அவர்களின், இந்தப் பௌதீக உடல் வடிவில் இறுதி சந்திப்பாக இருந்தது."

1941, அக்டோபர் ஆரம்பத்தில், ஈரானில் தங்கியிருந்த மெஹர்ஜி கர்காரியாவிற்குக் (MEHERJEE KARKARIA) கடிதம் எழுதவும், நவம்பர் மாத இறுதியில் ஈரானுக்குப் பயணம் செய்ய, தனக்கும், ஆண், பெண் மண்டலிக்கும், தேவையான ஏற்பாடுகள் செய்யவும், பாபா, சாஞ்சிக்கு உத்தரவிட்டார். பாபா, பந்தர் அப்பாஸில் (BANDAR ABBAS) ஒரு மாதமும், குளிர்காலம் முடிந்த பின்பு, நாட்டின் உட்புறத்தில் எங்கேயேனும் இரண்டு மூன்று மாதங்கள் தங்கியிருக்கவும் விரும்பினார். அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக மெஹர்ஜி கடிதம் எழுதி, பாபாவை வருமாறு உற்சாகமாக வரவேற்றார். ஆனால், ஈரானில் அந்த ஆண்டின் கடுமையான குளிர் காலநிலை மற்றும் பந்தர் அப்பாஸின் தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லாததையும் கருத்தில் கொண்டு, பாபா தனது திட்டத்தை மாற்றி, மெஹர்ஜிக்குத் தெரிவிக்க சாஞ்சிக்கு (அக்டோபர் 19 அன்று சில நாட்களுக்கென, பஞ்ச்கணிக்கு வந்திருந்தார்) அறிவுறுத்தினார். திட்டங்கள் ரத்து செய்யப்பட்ட தகவல் தொலைத்தந்தி மூலமும் தெரிவிக்கப்பட்டது.

இது நிகழும் நேரத்தில், அமெரிக்காவிற்குச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து எலிஸபெத் பேட்டர்ஸனுக்குக் கடிதம் எழுதுமாறு பாபா, மார்கரெட்டிற்குக் கூறினார்.

மெஹர் பாபா அவரது பணியின் நிமித்தம் கடல் கடந்து செல்லவேண்டியது அவசியம் என்று சுட்டிக்காட்டினார். கடிதங்களும் தொலைத்தந்திகளும் முன்னும் பின்னுமாக வந்து போய் இருந்தன. உபாஸனி மஹாராஜுடனான சந்திப்புக்குப் பின்னர், இந்தத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது:

**தனிச் சிறப்பு வாய்ந்த ஆன்மீக முடிவுகள் காரணமாக 1942, பிப்ரவரி 15 மற்றும் 1943 பிப்ரவரி 15க்கு இடையில் எந்த நாளிலும் நான் பேசுவது அவசியம்; மேலும் டிசம்பர் நடுப்பகுதிக்கு முன்பு (1941) கடலைக் கடந்து செல்ல வேண்டும். நிதி போதுமானதாக இல்லாததால், அமெரிக்கா செல்லும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். எனவே, நிச்சயமாக ஹொனலுலு (HONOLULU), ஃபிலிப்பைன்ஸ் (PHILIPPINES) அல்லது பசிஃபிக் (PACIFIC) பகுதியில் குறைந்த கட்டணமாக இருக்கும் இடத்தை நான் விரும்புகிறேன்.**

ஆனால் இறுதியில், பாபா அந்தத் திட்டங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்து, இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்த கார்வார் (KARWAR) நகருக்குச் சென்று, பின்னர் மெஹராபாத் செல்ல முடிவு செய்தார். விஸ்வநாத் ஹல்தங்கரின் உதவியுடன் கார்வார், தார்வாட் அல்லது பெல்காவ்மில் பங்களாக்களை ஏற்பாடு செய்யுமாறு காளேமாமாவிற்கு அறிவுறுத்தப்பட்டது.

1941 டிசம்பர் மாதத்தில் நடந்த பசிஃபிக் போரில் ஜப்பான் தீவிரமாக ஈடுபட்ட போதுதான், அந்தப் பிராந்தியத்தைக் குறித்த பாபாவின் தொலைத்தந்திகளின் முக்கியத்துவத்தை மார்கரெட் உணர முடிந்தது.

பாபா பஞ்ச்கணிக்குத் திரும்பி வந்த பின்பு, பெங்களூரில் இருந்த, ஆதி சீனியர் பின்வரும் சுற்றறிக்கையை வெளியிட்டார் (ஆதி இத்தகைய விஷயங்களை கவனித்து வந்தார்):

23 அக்டோபர், 1941

**1941 அக்டோபர் 17ஆம் நாள், ஸ்ரீ உபாஸனி மஹாராஜுடனான முக்கியமான சந்திப்பின் போது, 1942 பிப்ரவரி 15 முதல் 1943 பிப்ரவரி 15 வரை, எந்த நாளிலும் ஸ்ரீ பாபா பேசுவார் என்று முடிவு செய்யப்பட்டது. 'பாபா அவர் பேசும் அந்த தேதியை முன்கூட்டியே அறிவிக்க மாட்டார்.'**

**1942 பிப்ரவரி 15ஆம் நாள் வரை, பாபா ஏகாந்தவாசம் கடைப்பிடிப்பார். 1941 நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளும் ஏகாந்தவாசம், கடற்கரையில் அமைந்த ஓர் இடத்தில் நிகழும்.**

**1942 ஜனவரி 1 முதல் 1942 பிப்ரவரி 15 வரை, ஒரு குறிப்பிட்ட வகையான உபவாசத்தைக் கடைப்பிடிக்க உத்தரவிடப்பட்ட அனைவரும், அதே ஒன்றரை மாத காலகட்டத்தில் பின்வரும் உத்தரவுகளையும் கடைப்பிடிக்க வேண்டும்:**

1. **தினமும் ஒரு முறை 'தியானம்' குறித்த பாபாவின் துண்டு பிரதியைப் புரிந்து படிக்க வேண்டும். படிக்க முடியாதவர்கள் அதை வேறு ஒருவர் வாசிக்கக் கேட்கலாம். இவ்வாறு வாசிக்கும் நபர் அதை, தனியாகப் படிக்க வேண்டிய தேவையில்லை.**
2. **பின்வரும் ஆறு வரிகளில் குறிப்பிடும் (கடவுளின்) நாமத்தில் ஏதேனும் ஒன்றை, தினமும் அரை மணி நேரம் மெதுவாக மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும்:**
    - **பரபிரம்ம பரமாத்மா**
    - **யா எஸ்தான் அஹுரமஸ்தா**
    - **நிராகார் பர்வர்திகார்**
    - **அல்லா ஹோ அக்பர் அல்லா ஹு**
    - **ஹரி நாராயண் பஹவான்**
    - **காட் அல்மைட்டி ஓம்னிபொட்டன்ட் (GOD ALMIGHTY OMNIPOTENT)**
3. **இந்த அரை மணி நேர தியானத்திற்குப் பின்னர், உங்கள் குருநாதரின் பெயரை ஐந்து நிமிடங்கள் உச்சரிக்கவும்.**
4. **மேலே குறிப்பிட்ட எண்கள் 1 மற்றும் 2 குறித்த உத்தரவுகளைக் கடைப்பிடிப்பதற்கான குறிப்பிட்ட நேரம் எதுவும் வலியுறுத்தப் படவில்லை. ஒருவரின் வசதிக்கு ஏற்ப அவை ஒரே நேரத்தில் அல்லது தனித்தனியாகச் செய்யப்படலாம்.**
5. **பாபா கூறுகிறார்:**

**"எனது அறிவுறுத்தல்கள், அவை எதுவாக இருந்தாலும் (அவை 1942 பிப்ரவரி 15 வரை) மிகுந்த நேர்மையுடனும் ஆர்வத்துடனும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.**

**ஏனெனில், 1942 பிப்ரவரி 15ஆம் தேதிக்குப் பிறகு, நான் பேசும் நாள் வரை - இது அறிவிக்கப்படாத நாளாக இருக்கும் - நான் ஏகாந்தவாசம் அல்லது உபவாசம் எதுவும் மேற்கொள்ள மாட்டேன். மேலும், அதன்**

**விளைவாக, என்னிடமிருந்து யார் ஒருவருக்கும் சிறப்பு உத்தரவுகள் வழங்கப்பட மாட்டாது.”**

1941 அக்டோபர் 26 அன்று, நாராயண் மஹாராஜ் எதிர்கொண்ட நீதிமன்ற வழக்குக் குறித்து, பாபா கருத்துத் தெரிவித்த வேளையில், நாராயண் மஹாராஜையும் சந்திக்க விரும்புவதாகச் சுட்டிக்காட்டினார். **‘ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, நாராயண் மஹாராஜின் பக்தர் ஒருவர் அவருக்கு ரூ. 5000 கொடுத்ததாகவும், பின்னர் அதைத் திரும்பக் கேட்டபோது, நாராயண் மறுத்து விட்டதாகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்’** என்றும் பாபா விளக்கினார்.

**நாராயண் மஹாராஜ் ஏன் அந்த நபரின் பணத்தைத் திருப்பித் தரக்கூடாது? அவருடைய பணக்கார சீடர்களைப் போலவே, (அதில் இளவரசர்களும் அடங்குவர்) அவரும் ஒரு பெரிய செல்வந்தர், அத்தகைய தொகையை ஒரே வார்த்தையில் அவரால் தூக்கி எறிய முடியும். ஏன் இந்தச் சிறிய தொகைக்கு இத்தனை மறுப்பு? எதிராளிகளிடையே சந்தேகத்தை உருவாக்கி அவருடைய பணியைச் செய்யும் நோக்கத்தில், எரிகிற நெருப்புக்கு எண்ணெய் வார்ப்பது போல், அவர் இப்படிச் செயல்படுவது நியாயமானது.**

**உதாரணமாக: நீங்கள் அசுத்தமும், கழிவும்** (மாயா மற்றும் மனப்படிவங்கள்) **நிறைந்த குழிக்குள் விழுந்துவிட்டால், என் கை கால்கள் அசுத்தமானால் கூட, அதிலிருந்து உங்களை வெளியே கொண்டு வர நான் உதவ வேண்டாமா? ‘நான் ஏன் எனது கைகளை அசுத்தமாக்க வேண்டும்’ அல்லது ‘உங்களுக்கு உதவுவதற்கான எனது பணியை’ யார் ஒருவர் தவறாகப் புரிந்துகொண்டு கேலி செய்தாலும், அதற்காக நான் உலகைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? உலகம் கத்தத்தான் செய்யும்! அது அவர்களின் அறியாமை; அதற்காகப் பரிதாபப்படுங்கள், ஏனெனில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது, ஆனால் குருநாதர்கள் அவர்கள் பணியைத் தொடர்ந்து செய்தாக வேண்டும்.**

**நான் பேசுவதற்கு முன்னதாக, எல்லா மஸ்துகளையும் சத்குருக்களையும் சந்தித்தாக வேண்டும். மஸ்த் பணியை, நான் பெரும்பாலும் முடித்துவிட்டேன். மஹாராஜையும் சந்தித்தேன். இப்போது நான் நாராயண் மஹாராஜ் மற்றும் பிறரை சந்திக்க வேண்டும். இந்தச் செய்தியை அவருக்கு வழங்க யார் செல்ல வேண்டும்? அவர் என்னிடம் வர வேண்டும். சில ஆன்மீகக் காரணங்களுக்காக நான் அவரிடம் செல்லக்கூடாது. எங்கள் இருவருக்கும் வசதியான இடம் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.**

இதற்கிடையில், பஞ்ச்கணியில், ஆண் மற்றும் பெண் மண்டலி அனைவருக்கும் பாபாவின் உத்தரவுப்படி தியானம் செய்ய அறிவுறுத்தப்பட்டது. இத்தனை ஆண்டுகளாக, பாபாவிற்கு சேவை செய்த போதிலும், அவர்கள் ஏன்

இன்னும் இறைநிலையை அடையவில்லை என்ற எண்ணம் சிலர் மனங்களில் அலைமோதின.

அவர்களால் கேட்கப்படாத இந்தக் கேள்விக்கு, ஒரு சத்குருவைப் பற்றிய கதையை, பாபா அவர்களிடம் விவரித்தார்:

**ஒரு சீடர் எப்போதுமே தனது குருநாதரிடம், அவர் இவ்வளவு காலமாக அவருக்கு நேர்மையாக சேவை செய்தார் என்ற உண்மையைக் கருத்தில்கொண்டு, ஏன் இன்னும் இறைநிலையை அடைய முடியவில்லை என்று கேட்டு வந்தார். குருநாதர் தொடர்ந்து பொறுமை காக்குமாறு கூறியும், சீடர், அவரது ஆர்வத்தில், தொடர்ந்து குருநாதரைத் தொந்தரவு செய்தார்.**

**ஒரு நாள் அருகிலுள்ள கிராமத்தில் ஒரு கண்காட்சி நடைபெற்றது. சத்குரு தனது சீடரிடம், "ஒரு கோப்பையில் பாலை நிரப்பி உங்கள் கையில் ஏந்தி, கண்காட்சிக்குச் சென்று, அதே நிரம்பிய கோப்பையுடன் திரும்பி வாருங்கள். அதற்குப் பிறகு நீங்கள் கடவுளுடன் ஒருவராக இருப்பீர்கள்!" என்றார்.**

**சீடர், இதை ஒரு சுலபமான காரியமாக நினைத்து, குருநாதர் சொன்னபடிச் செய்தார். ஆனால் அவர் கண்காட்சியைச் சென்றடைந்த போது, அவரைச் சுற்றியுள்ள கவர்ச்சியான காட்சிகளில் மூழ்கி, கடவுளை முற்றிலும் மறந்துவிட்டார். அனைத்து காட்சிகளையும் தவறவிடாமல் பார்க்கும் எண்ணத்தில், அவர் கூட்டத்தைத் தள்ளிவிட்டு நகர்ந்த வேளையில், பால் கொஞ்சம் கொஞ்சமாக ஆங்காங்கே சிந்தி சிதறியது. அவர் மீண்டும் குருநாதரின் இல்லத்திற்கு வந்தபோது, கோப்பையில் பால் எதுவும் மிஞ்சவில்லை.**

**சீடர் அவரை அணுகுவதைப் பார்த்து, குருநாதர், "இப்போது, நான் கூறியபடி உங்களுக்கு இறையுணர்வை அளிப்பேன்; ஆனால், அதற்கு முன்னதாக உங்கள் கோப்பையைப் பார்க்க வேண்டும்" என்றார். சீடர் வெட்கத்தில் தலைகுனிந்து, அற்புதமான திருவிழாவிற்கு மத்தியில் பால் அனைத்தையும் இழந்துவிட்டதாக ஒப்புக்கொண்டார்.**

**சத்குரு, "நான் இப்போது என்ன செய்ய முடியும்? நீங்கள், எனது கட்டளைகளை மறந்து உலக மாயங்களால், மயக்கங்களால் ஈர்க்கப்பட்டீர்கள். கடவுளை அடையும் உண்மையான ஏக்கம் உங்களுக்கு இருந்திருந்தால், நீங்கள் இப்படி இருந்திருக்க மாட்டீர்கள், பாலை எப்படியாவது சிந்தாமல் பாதுகாக்கும் எண்ணத்தில் உங்களால் முடிந்தவரை முயற்சித்திருப்பீர்கள். ஆனால், உலகோடு பிணைக்கும் இந்தக் கவர்ச்சிகளில் சிக்கிக்கொள்ளும் போது, கடவுளுக்காக நீங்கள் எப்படி ஏங்க முடியும்?" என்று கேட்டார்.**

**பல ஆண்டுகளாக, குருநாதருக்கு சேவை செய்தாலும், உலக பிணைப்புகள் நீடிக்கும் வரை, எந்த விமோச்சனமும் இல்லை என்பதை, சீடர் அப்போது உணர்ந்தார்!**

மெஹர் பாபாவின் மண்டலியும் இத்தகைய சிந்தனைகளை மனதில் வைத்து அசை போடுவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை எண்ணி தம்முள்ளே நகைத்தனர்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், 'தியானம்', 'பிரார்த்தனை' இவற்றைப் பற்றி விளக்கி, பாபா, இந்த உதாரணத்தை மேற்கோள் காட்டிக் கூறினார்:

**தானியங்கும் எந்திர முறையில் தியானிக்க வேண்டாம். அதை ஒரு பிரார்த்தனையின் வடிவத்தில் தியானிக்க வேண்டும், அதில் அப்படியே மூழ்கிவிட வேண்டும்.**

**அரபு நாட்டு நபர் ஒருவர், எப்போதும் விரலில் தங்க மோதிரம் அணிந்திருந்தார். அவர் கடவுளின் மிகச் சிறந்த பக்தர்; அவருடைய பிரார்த்தனை வேளையில் அனைத்தையும் மறந்துவிடுவது வழக்கம். ஒரு முறை அவர் பிரார்த்தனையில் மூழ்கியிருந்த போது, திருடன் ஒருவன் அவரது விரலை வெட்டி மோதிரத்தைத் திருடினான். ஆனால் அந்த நபர் பிரார்த்தனையில் ஆழ்ந்து மூழ்கியிருந்ததால் அவருக்கு சிறிதளவு வலியும் தெரியவில்லை.**

**இதுதான் பிரார்த்தனை என்று அழைக்கப்படுகிறது... இதுவே உண்மையான பிரார்த்தனை!**

மெஹர் பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்ட வேளையிலும், அவர் மஸ்துகளைத் தொடர்பு கொள்ள அல்லது பெண்மணிகளுடன் வெளியிடங்களைப் பார்வையிட செல்லும் போதும், எவரும் தன்னிடம் வருவதையும், தரிசனம் செய்வதையும் தவிர்க்கும் நோக்கத்தில், பயண வேளையில் கவனமாக இருக்க வேண்டியிருந்தது. 1941, அக்டோபர் 28 அன்று, பஞ்ச்கணியை விட்டு புறப்படும் நேரத்தில், நண்பகலில், உரத்த குரலில் பாடிக்கொண்டிருந்த ஜகந்நாத் (JAGANNATH) என்ற மஸ்த் ஒருவர் பாபாவை நோக்கி நடந்து வந்தார்.

சாஞ்சி அவரைத் தடுக்க முயன்றபோதும், பாபா, காரருகில் நின்று, அந்த நபரை அருகில் வர அனுமதித்தார். வந்தவர், "நீங்கள் விஷ்ணுவின் அவதாரம்! நான் உங்களைப் பிரார்த்திக்கிறேன், எனக்கு இறைவனின் வரத்தைக் கொடுங்கள்!" என வேண்டினார்.

பாபா புன்னகைத்து, "**நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி! விஷ்ணுவின் மீதான உங்கள் பக்தியில் நீங்கள் எவ்வளவு மூழ்கியிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்களுக்கு என் ஆசீர்வாதங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

அந்த நபர், "எனது பணி முடிந்தது!" என்று கதறினார்; ஒரு பிச்சைக்காரனைப் போல, பாபாவின் முன் நின்றார், அவரது கண்களில் நீர் வழிந்தது. வார்த்தைகள் வராமல், நடுங்கும் குரலில், "உங்களை இங்கு ஒருவருக்கும் தெரியாது! நான் உங்களைப் பார்த்த அந்த நேரத்தில் அடையாளம்

கண்டு கொண்டேன். நீங்கள் விஷ்ணுவின் அவதாரம்! நீங்கள் என்னை அறிவீர்கள்" என்று கூறினார்.

"**அனைத்தும் நான் அறிவேன். அதனால்தான் நான் உங்களிடம் இங்கு வந்துள்ளேன்**" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

அந்த நபர் மிக்க மகிழ்ச்சி அடைந்து, உரத்த குரலில், "எனது வாழ்வின் விருப்பம் நிறைவேறியது! ஜெய் அவதார் விஷ்ணு!... ஜெய் அவதார் விஷ்ணு!..." என முழங்கினார்.

அவர் பாபாவை வணங்கி திரும்பிச் சென்றார். அதே நபர் அவர்கள் மெஹராபாத்திலிருந்து வந்த நாளில் பாடிக்கொண்டே அவர்களது வீடுகளை கடந்து சென்றார்; பாபாவை, தூரத்திலிருந்து பார்த்தார். ஜகந்நாதரைப் பற்றிக் குறிப்பிடுகையில், பாபா, "**அவர் ஆன்மீகப் பாதையின் வாசலில் இருக்கிறார், கடவுளைக் காண தீவிரமாக ஏங்குகிறார்**" என்று கூறினார்.

பின்பு பாபா, அனைத்து ஆண், பெண் மண்டலியுடன் பஞ்ச்கணியிலிருந்து காரிலும், நீலப்பேருந்திலும் புறப்பட்டார். துக்காராம் பேருந்தை ஓட்டிச் செல்ல, நீலு அவருக்கு உதவியாக இருந்தார். சத்தாரா, பெல்காவ்ம், கோலாபூர் வழியாகப் பயணம் செய்து, அன்றிரவு பத்து மணியளவில் தார்வாட் பயணிகள் விடுதியை வந்தடைந்தனர். மண்டலியில் சிலர் ஊழியர்களுடன் தனிப் பேருந்தில் பயணம் செய்து பின்பு ரயிலில் கார்வார் சென்றனர்.

அடுத்த நாள், அக்டோபர் 29, மதியம் ஒரு மணியளவில் பாபா, கார்வார் வந்து சேர்ந்தார். கார்வாரில், சமையல் பொறுப்பை மீண்டும் விஷ்ணுவின் உறவினர்களான சுஷிலா, இந்து இருவரும் ஏற்றுக்கொண்டனர். இந்துவின் கணவர் விஸ்வநாத் ஹல்தங்கரும் ஆண் மண்டலிக்கு உதவியாக இருந்தார். விஷ்ணுவின் குறிப்புப்படி, பாபா முதலில் கார்வாரை 'அவ்வளவு பொருத்தமானதாகப்' பார்க்கவில்லை; காலநிலை இதமாக இல்லாததோடு, அவர்கள் தங்கியிருந்த வீடும் மிகவும் சிறியதாக இருந்தது. ஆனால் பெண் மண்டலி நன்றாக இருப்பதாக உறுதியளித்ததால், பாபாவும் அங்குத் தங்க ஒப்புக்கொண்டார்.

பாபா, பெண்மணிகளுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கும்படி மார்கரெட்டைக் கேட்டுக்கொண்டார்; அவரும் அதை உடனடியாகச் செய்யத் தொடங்கினார். மார்கரெட், ரானோ இருவரின் கண்காணிப்பில் மெஹராவும் நீச்சல் கற்றுக் கொண்டிருந்தார். பல நாட்கள் பயிற்சிக்குப் பிறகு, பாபா ஒவ்வொருவரையும் 15 வீச்சுகள் செய்யும்படி கட்டளையிட்டார். அவர்களில் பெரும்பாலோர் நீந்த முடிந்தது, ஆனால் மணி ஒரு கல் போலத் தண்ணீரில் மூழ்கிப்போனார்.

பெண்மணிகளில் வாலுவும் நீந்த முடியாமல், தண்ணீரில் தத்தளித்தார். பாபா, பெண்மணிகளுடன் அதிகாலையில் கடற்கரைக்குச் சென்று, கரையிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தார். பிற்பகல் வேளையில் பாபா ஓர் அறையில் இரண்டு மணி நேரம் ஏகாந்தவாசத்தில் அமர்ந்து, தனது உள்

பணியைச் செய்து வந்தார். மாலை நேரங்களில், பெண்மணிகளுடன் நடக்கவும் சென்றார்.

பாபா நீச்சல் வீராங்கனைகளை ஊக்குவிக்க மணலில் அமர்ந்திருந்தார். காலம் இதை இப்படி நினைவு கூர்ந்தது: "இது ஒரு மகிழ்ச்சிகரமான காட்சி; ஆனந்தம் பொங்கும் ஓர் அற்புதமான நேரம். இறை கீதத்தின் இனிமையான மெல்லிசை காற்றில் கலந்து, நீந்துவோரை ஆனந்தப் பெருங்கடலில் நீந்துவது போல் உணரவைத்தது! நிச்சயமாக அவர்கள் எல்லையில்லா பெருங்கடலின் நிலையான தோழர்கள்; ஆனால் அலைகள் உயரும்போது, ஒருவரின் வாழ்க்கை அதிசயமான மகிழ்ச்சியைப் பெறுகிறது, இறுதியில் உண்மையான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கிறது; இதற்கு எல்லையே இல்லை. தெய்வீக விளையாட்டில் அங்கம் வகிப்பது - மற்றும் பிரியமானவரின் நகைச்சுவை அம்புகளின் வலியைத் தாங்கிக் கொள்வது - உள்ளளவிலான மகிழ்ச்சியின் வெள்ள வாயில்களைத் திறந்து, ஒவ்வொரு துளியின் ஒளிர்விடும் மகிழ்ச்சியை அளவிறுதியற்ற ஆனந்தமாக மாற்றியது!

பாபா கார்வாரில் ஒரு வாரம் தங்கியிருந்தார். நவம்பர் 1ஆம் தேதி சாஞ்சி அங்கு வந்தபோது, உள்ளூர் ஆட்சியாளர் கடிதம் மூலம் ஒரு நேர்காணலைக் கோரினார். அதற்கு பதிலளித்த நீலு, அந்த ஆட்சியாளர் தூரத்திலிருந்து பாபாவின் தரிசனத்தைப் பெற அனுமதிக்கப்படும் என்றும், ஆனால் நேரடியாக சந்திப்பது சாத்தியமில்லை என்றும் தெரிவித்தார். அந்த நபர் நவம்பர் 3ஆம் தேதி மாலை தனது காரில் வந்தார். தவறுதலாக, அவர் முதலில் மண்டலியின் பங்களாவிற்குச் சென்று அங்கேயே நிறுத்தினார். அவர் பாபாவை, தூரத்திலிருந்து பார்த்த பிறகு, பாபாவின் ஆசீர்வாதங்களுடன் அவரது சித்திரம் பதித்த லாக்கெட் ஒன்று அவருக்கு வழங்கப்பட்டது, அதை அவர் மிகவும் பாராட்டினார்.

அந்த நபர் திரும்பிச் சென்ற போது, காரின் பேட்டரி முழுவதுமாக செயலிழந்துவிட்டது. இது ஏதோ ஒரு நோக்கத்திற்காக நடந்தது என்பதைக் குறிக்கும் சிறப்பு செய்தியாகத் தோன்றியது. ஒருவர் தரிசனத்திற்காக, குருநாதரை அணுகும்போது, காரில் செல்வதை விட காலால் நடந்து செல்வது நன்மை பயக்கும் என்று பாபா விளக்கினார். எனவே, ஆட்சியாளர் தனது இல்லத்திற்கு நடந்து செல்ல வேண்டிய கட்டாயம். பாபா கூறியதைப் புரிந்துகொண்டு அவர் அப்படியே செய்தார். பாபா மற்றும் மண்டலிக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்ற எண்ணத்தில், அந்த ஆட்சியாளர் தனது காரையும் பெரிய பங்களாவையும் பாபாவிற்குத் தருவதாகக் கூறினார், ஆனால் பாபா அந்த உதவியை ஏற்றுக் கொள்ளவில்லை.

1941, நவம்பர் 8ஆம் நாள் பாபாவும் குழுவும் பெல்காவ்மிற்குப் புறப்பட்டனர். பெல்காவ்மில், ஹிண்டல்கா (HINDALGA) எனும் புறநகர்ப் பகுதியில் அமைந்த ஸாவந்த்வாடி மஹாராணியின் பங்களாவில் தங்கினர். இதன் மூலம்,

பாபா, ஏகாந்தவாசம் இருந்த காலத்தில் மஹாராணி அவருக்கு சேவை புரியும் ஒரு வாய்ப்பை அளிப்பதாகக் குறிப்பிட்டார்.

மெஹர் பாபாவின் அறிவுறுத்தல்படி, மணி, கேட்டி இருவருக்கும் கிட்டி, தட்டச்சுப் பாடங்கள் மற்றும் பயிற்சியை வழங்கி வந்தார் (இது எதிர்காலத்தில் மணியை, கடிதங்கள் கையாளுவதில் முன்னோடியாக மாற்றியது).

குல்மாய் நவம்பர் 10ஆம் நாள் பாபாவைப் பார்க்க வந்தார், அதே நாளில் பாபா, பெல்காவ்மிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் அமைந்த, சாதுக்கள் கூடும் இடமான 'தரம்ஷாலா' (DHARAMSHALA) என்ற இடத்திற்கு விஜயம் செய்தார்.

நவம்பர் 12ஆம் தேதி காலை, பாபா, பதினொரு மணிக்கு பெல்காவ்மிலிருந்து தார்வாட் நகருக்கு புறப்பட்டு, மூன்று மணி நேரத்தில் அங்குச் சென்றார். சப்தாபூரில் (SAPTAPUR) வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மோக்காஷி (MOKASHI) என்பவரின் பங்களா மிகவும் விசாலமானதாக இருந்தாலும், தண்ணீர் பற்றாக்குறை ஒரு பிரச்சினையாக இருந்தது. கிருஷ்ணா, வெங்கோபா ராவ், காஷிநாத் (தார்வாடைச் சேர்ந்த ஒரு பணிக்கார சிறுவன்) மூவருக்கும் ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீரை இறைக்கும் பணி வழங்கப்பட்டது. ஆனால் வெங்கோபா பலவீனமாகவும், காஷிநாத்திற்கு, பஜார் செல்ல வேண்டி இருந்ததாலும் தண்ணீர் இறைக்கும் முழுப் பணியும், பொதுவாக கிருஷ்ணாவின் மீது விழுந்தது. ஏறக்குறைய 40 நபர்களுக்குப் போதுமான தண்ணீரைக் கொண்டுவருவது ஒரு சோர்வான பணியாக இருந்தது.

1941 நவம்பர் 14 வெள்ளிக்கிழமை, பைதூல், கிருஷ்ணா, குஸ்தாஜி, ஸவக், காக்கா ஆகியோருடன், பாபா, சட்டி பாபாவைப் பார்க்க, தார்வாடிலிருந்து ரயிலில் புறப்பட்டார். பெங்களூருக்குச் சென்று, மார்கரெட் சாலையில் அமைந்த ஸுலேகா (ZULEKHA) விடுதியில் இரவைக் கழித்து, அடுத்த நாள், அனைவரும் நாகப்பட்டிணம் (NAGAPATTINAM) சென்றனர். சட்டி பாபா தனது வழக்கமான இடத்திலிருந்து வெகு தொலைவில் அமைந்த வேறு ஓர் இடத்திற்குச் சென்றிருந்தார்; பாபா, அவரைக் கண்டுபிடிக்க பன்னிரண்டு மைல் கரடுமுரடான சாலைகளில் பயணிக்க வேண்டியிருந்தது. பலத்த மழை காரணமாக, பாபா சேறு மற்றும் முழங்கால் ஆழமான சேற்று நீரின் வழியாக நடந்து மகத்தான மஸ்த் அமர்ந்திருந்த இடத்தைச் சென்றடைந்தார்.

சட்டி பாபாவுடனான பாபாவின் தொடர்பு முடிந்ததும், அவர் மண்டலியுடன் 17ஆம் தேதி இரவு பெங்களூருக்கு வந்தார்; அங்கு, பாபா, ஜெஸவாலா குடும்பத்தினர், ஆதி சீனியர், டாக்டர் டான் ஆகியோரைப் பார்த்து, உபாஸனி மஹாராஜுடனான சந்திப்பை, அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். (டான் தனது நாட்குறிப்பில் இவ்வாறு பதிவு செய்திருந்தார்: 'பாபாவைப் பார்ப்பது வானுலக மதுபானத்தை ரசித்து, ருசித்து பருகுவதைப் போன்றது!') மறுநாள் காலையில் புறப்பட்டு பாபாவும் குழுவும் 19ஆம் தேதி

தார்வாடுக்குத் திரும்பி வந்தனர். வரும் வழியில், பாபா, பெல்லாரி (BELLARY) மற்றும் ஹூப்ளியில் (HUBLI) நிலைகொண்டுள்ள பல மஸ்துகளைத் தொடர்பு கொண்டார். 'சேலா' (CHELA) என்று அழைக்கப்பட்ட மஸ்த், மௌனம் அனுஷ்டிப்பதாக சபதம் எடுத்து, நீண்ட காலம் உபவாசம் இருந்தார். அந்த மஸ்த், பிரபலமான மாபெரும் யோகியான 'சுவாமி சித்தருத்' (SWAMI SIDHARUDH) என்பவரின் சீடராவார்.

'சோட்டா மஸ்தான்' (CHOTA MASTAN) என்பவர் ஆறாவது ஆன்மீகத் தளத்தின் மிக உயர்ந்த மஸ்த். அவர், 22 வயதான இளம் துறவி, ஒரு தெருவில், அனைத்து காலநிலையிலும், பொது தண்ணீர் குழாய்க்கு எதிரே அமைந்த கல் ஒன்றில் நிர்வாணமாக அமர்ந்திருந்தார். ஹூப்ளி நகரின் மக்கள் அவரை 'தேவ் புருஷ்' (DEV PURUSH) என்று அழைத்தனர், அதாவது தெய்வீக மனிதர். அவர் உண்மையிலேயே ஒரு குறிப்பிடத்தக்க இளம் துறவி.

அவர் பிறந்ததும் தாயால் கைவிடப்பட்ட அந்தக் குழந்தையை, ஒரு துப்புரவு பணியாளர், குப்பைத் தொட்டியில் இருந்ததைக் கண்டெடுத்து, குழந்தை இல்லாமல் ஏங்கித் தவித்த ஒரு பெண்மணியிடம் கொடுக்கவே, அந்தப் பெண்மணியோ அது கடவுளிடமிருந்து அடையப்பெற்ற குழந்தையாகக் கருதி, மனம் கனிந்து போற்றி வணங்கி, தனது சொந்த மகனாக கவனித்துக்கொண்டார். சோட்டா மஸ்தான் தனது பத்து வயது பருவத்தில் கடவுளின் அன்பால் மயங்கி மஸ்தாக மாறினார்; வீட்டை விட்டு வெளியேறி, இந்தியாவில் தெரியாத பல இடங்களில் நிர்வாணமாக அலைந்தார். ஒரு தொடர்பின் போது, மெஹர் பாபா அவரது மேல் கோட்டை சோட்டா மஸ்தானுக்கு அணிவித்தார். ஆனால் அடுத்த நாள் காலையில் அவர் அந்தக் கோட்டை வேறொருவருக்கு கொடுத்துவிட்டு மீண்டும் நிர்வாணமாக இருந்ததை அவர்கள் கண்டனர்.

பெல்லாரியில், மெஹர் பாபா 'ஷா மஸ்தான்' (SHAH MASTAN) என்றழைக்கப்பட்ட ஒரு மஸ்தைத் தொடர்பு கொண்டார். அவர், பரந்த காடுகளின் மத்தியில் அமைந்த கல்லறையைத் தனது உறைவிடமாக்கி, மறைந்து வாழ்ந்து வந்தார். ஓர் அமாவாசை இரவன்று, பாபாவும் மண்டலியும் அந்தக் கல்லறையில் அவரைத் தேடிச் சென்றனர்; வழக்கமான மூடநம்பிக்கையின் படி, இது மிகவும் ஆபத்தானது. அத்தகைய இரவில் ஒரு நபர் மயானத்தில் எளிதில் தொலைந்து போகக்கூடும் என்று மக்கள் அஞ்சுவது வழக்கம். கும்மிருட்டில் மணிக்கணக்கில் தேடியும், மஸ்தைக் குறித்த எந்தத் தடயமும் கிடைக்காமல் இறுதியில் அவர்கள் டோங்கா ஓட்டுநர் ஒருவரின் உதவியை நாடினர். அவர், அந்த மஸ்த் மறைந்திருக்கும் இடம் தனக்குத் தெரியும் என்று கூறி, கல்லறை வழியாக அவர்களை வழிநடத்தினார். இரவு முழுவதும் தேடியும், முழு நேரமும் அவர் கல்லறையில் இருந்தபோதும், காலை வரை அவர்கள் மஸ்தைக் கண்டுகொள்ள முடியவில்லை.

1941 நவம்பர் 24ஆம் தேதி, பாபா பிஜாப்பூர் (BIJAPUR) நகருக்குச் சென்று, 'குவான்வாலா பாபா' (QUANWALA BABA) என்றழைக்கப்பட்ட மஸ்தைத் தொடர்பு கொண்டார்; அவர் நகராட்சி குப்பைகளின் ஒரு பெரிய குவியலின் மேல் வாழ்ந்து வந்தார்.

ஜி.எஸ்.என். மூர்த்தி (G.S.N. MOORTHI) என்ற இளைஞர் ஒருவர் ஆச்சாரமான பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தையார் ஆங்கில மாத இதழ் ஒன்றின் ஆசிரியராக இருந்தார், மேலும் மூர்த்தி ஒரு முறை தனது தந்தையின் நூலகத்தில் 'மெஹர் மெஸேஜ்' (MEHER MESSAGE), 'மெஹர் பாபா ஜர்னல்' (MEHER BABA JOURNAL) போன்ற பழைய இதழ்களைப் பார்க்க நேர்ந்தது. அவர் மெஹர் பாபாவின் சொற்கள் மற்றும் புகைப்படங்களால் வெகுவாக ஈர்க்கப்பட்டார், ஆனால் அவர் அவதார புருஷர் என்று நம்பவில்லை. நவம்பர் 23ஆம் நாள், 'கீதா ஜெயந்தி'யை (GITA JAYANTI - அர்ஜுனனுக்கு பகவத் கீதை வழங்கப்பட்ட நாள்) முன்னிட்டு ஒரு கையேட்டிற்கு செய்தி கோரி, மூர்த்தியின் கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில், பாபா, கீழ்வரும் செய்தியை வழங்கினார்:

**இன்று மனிதகுலத்தின் மிகப் பெரிய இன்றியமையா தேவை அன்பு - தூய்மையான, தன்னலமற்ற, தெய்வீக அன்பு; இது வாழ்க்கையில் தனது உண்மையான கடமையைக் குறித்த சரியான உணர்விற்கும், புரிதலுக்கும் மனிதனை எழுச்சியுறச் செய்கிறது; அதாவது, உண்மையான மகிழ்ச்சி என்பது, அடையப் பெறுவதில் அல்ல அள்ளிவழங்குவதில்தான் உள்ளது; சேவையை ஏற்றுக்கொள்வதில் அல்ல, அதை வழங்குவதில்தான் உள்ளது; மற்றும் ஒருவரின் மகிழ்ச்சியைக் காட்டிலும் பிறரின் துன்பங்களில் விரும்பி பங்கேற்பதிலும்தான் உள்ளது.**

**அனைத்திலும் தெய்வீக அன்பின் தீப்பொறியைக் கிளறிவிட்டு, கொழுந்துவிட்டு எரியத் தூண்டுவதே வாழ்க்கையில் எனது நோக்கம்.**

ஜி.எஸ்.என். மூர்த்தி மெஹராபாத்தில் பாபாவை சந்திக்கும் வாய்ப்பை அடையப் பெறுவதற்கு பதினான்கு ஆண்டுகள் ஆயின; அதன் பின்னர் அவர் மெஹர் பாபாவின் உண்மையான அன்பர்களில் ஒருவரானார்.

சாஞ்சி நவம்பர் 25ஆம் தேதி தார்வாடில் பாபாவை சந்தித்தபோது, பாபா குழுவுடன் சத்தாராவில் தங்குவதற்குப் பொருத்தமான இடங்களைக் கண்டுகொள்ள வேண்டிய அறிவுறுத்தலைப் பெற்றார்.

ஒரு முறை தார்வாடில், கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டுவருவதில் பதினைந்து நிமிடங்கள் காலந்தாழ்த்தினார், ஏனெனில் அவர் களைப்பில் காலங்கடந்து நெடுநேரம் தூங்கிவிட்டார். பாபா அவருக்காக வாசலில் காத்திருந்தார்; கிருஷ்ணா வந்தபோது அவர் மீது சீற்றமடைந்து, "**நான் உங்கள் கருமூஞ்சியை மீண்டும் பார்க்க விரும்பவில்லை! உங்கள் கடமையில் நேர்மையாகவும் ஒழுங்காகவும் இருக்க வேண்டும் என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன், ஆனால் நீங்கள் எனது வார்த்தைகளுக்கு சிறிதளவும்**

**கவனம் செலுத்துவதில்லை. ஒருவர் கற்பாறையில் விதைகளுக்கு எவ்வளவுதான் நீர் வார்த்தாலும், அவை வேரூன்றும் என்ற நம்பிக்கை இல்லை. நீங்களும் ஒரு கற்பாறை போன்றவர்தான்!**" என்றார்.

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா பெண்மணிகளுடன் வெளியே சென்று வருவதாகக் கூறி, திரும்பி வரும் வரை, கிருஷ்ணாவிடம் வாசலில் கண்காணிக்கும்படியும், பெண்மணிகளின் பங்களாவிற்குள் நுழைய வேண்டாம் என்றும் கூறிச் சென்றார். பங்களாவில் மெஹராபாத்தைச் சேர்ந்த நான்கு பணிப்பெண்கள் இருந்தனர் - லட்சி, பாமி, ரக்மா மற்றும் டானி. ஒரு கட்டத்தில், திடீரென வீட்டில் ஒரு பாம்பு நுழைந்ததை அவர்கள் கண்டனர். ரக்மா, பாம்பைக் கொல்ல கிருஷ்ணாவை அழைத்தார், ஆனால் அவர் தனது பணியை விட்டு வர மறுத்து விட்டார்

திரும்பி வந்து, பாபா அதைப் பற்றி கேள்விப்பட்டதும் - பணிப்பெண்கள் கிருஷ்ணாவைப் பற்றி புகார் செய்தனர் - உடனே பாபா அவரிடம், "**நீங்கள் ஏன் பாம்பைக் கொல்லவில்லை?**" என வினவினார்.

அதற்கு கிருஷ்ணா, "உங்கள் உத்தரவுபடி நான் வாசலை விட்டு வெளியேறக்கூடாது எனும்போது எப்படி வீட்டிற்குள் செல்ல முடியும்?" என்று கேட்டார்.

அப்போது பாபா, "**வீட்டில் நெருப்பு பற்றிப் பிடித்திருந்தால், நீங்கள் உள்ளே சென்றிருப்பீர்களா** ?"என்று கேட்டதும்,

கிருஷ்ணா, "இல்லை" என்றார்.

பாபா அவரைத் திருத்தும் வகையில், "**நீங்கள் இந்த வழியைப் பின்பற்றி இருந்தால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். இருப்பினும், எனக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காக நீங்கள் கீழ்ப்படியவில்லை. மாறாக, வாசலிலிருந்து வெளியேற வேண்டாம் என்ற எனது உத்தரவு உங்களை எரிச்சலடையச் செய்ததால்தான், வெளியளவில் நீங்கள் கீழ்ப்படிந்தாலும், உண்மையில் நீங்கள் எனக்குக் கீழ்ப்படியாமல், மாறாக உங்கள் கோபத்திற்கு இடம் கொடுத்தீர்கள்**" என்று கூறினார்.

பாபா மேலும் கூறுகையில், "**நீங்கள் மோசமான மனநிலையில் இருந்ததால்தான் முதலில் பாம்பு அங்கே வந்தது. இப்போது நீங்கள் என்னை மகிழவைக்க விரும்பினால், பாம்பைக் கண்டுபிடித்துக் கொல்லுங்கள்**" என்றார்.

முதலில், கிருஷ்ணாவால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை, ஆனால் முக்கால் மணி நேரத்திற்கு பின்னர், அவர்கள் வீட்டின் ஜன்னலுக்கு வெளியே பாம்பு ஊர்ந்து செல்வதைக் கண்டனர். பாபாவை அழைத்து அவரிடம் கூறிய அந்த நேரத்தில் பாம்பு மறைந்துவிட்டது; சரி, அதை விடுங்கள் என்று பாபா சுட்டிக்காட்டினார். இது ஓர் அசாதாரணமான நிகழ்வு, ஏனெனில், மண்டலிக்கு பாபாவின் நிலையான கட்டளை என்னவெனில், ஒரு பாம்பைக் காணும்போதெல்லாம் அது கொல்லப்பட வேண்டும் என்பதாகும்.

ஒரு நாள் கிருஷ்ணா பெண்மணிகளின் பங்களா அருகே ஒரு நாகப்பாம்பைக் காண நேர்ந்தது. அவர் அதை ஒரு கல்லால் தாக்கிய பின்னரும் பாம்பு சாகவில்லை. காயமடைந்த பாம்பை ஒருபோதும் தப்பிக்க விடக்கூடாது என்று யாரோ ஒருவர் அவரிடம் கூறியிருந்தார், ஏனெனில் அது காயப்படுத்திய நபரைக் கடிக்கும் நோக்கத்தில் திரும்பி வரும். அன்று இரவு கண்காணிப்பாளராக, கிருஷ்ணா, பாபாவின் அருகிலிருந்த வேளையில், பாபா, ஏன் இவ்வளவு கவலையாக இருக்கிறீர்கள் என்று கேட்டார். காயமடைந்த பாம்பைப் பற்றி, கிருஷ்ணா அவரிடம் சொன்னதும், பாபா, "**அது ஒரு நாகப்பாம்பா?**" என்று கேட்டார்; கிருஷ்ணா ஆமாம் என்று பதிலளிக்க, பாபா, "**ஆம், அது கொல்லப்பட வேண்டும். இல்லையெனில் அது திரும்பி வந்து உங்களைக் கடிக்கும். நீங்கள் அஞ்சுகிறீர்களா?**" என வினவியதும், கிருஷ்ணா இல்லை என்று கூறினார்.

இரவு காவல் முடிந்ததும், காலை 5:00 மணிக்கு பாபா, கிருஷ்ணாவிடம் ஓய்வெடுக்கச் சொன்னார். அவர் புறப்படுவதற்கு முன்பு, பாபா அவரை மீண்டும் எச்சரித்தார், "**நீங்கள் படுக்கைக்குள் நுழைந்ததும் கொசு வலையை ஒழுங்காக படுக்கையின் உள்ளே சொருகுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்; இல்லையெனில், எறும்புகள் உள்ளே வரக்கூடும்.**" கிருஷ்ணாவின் கட்டில் ஒரு மாமரத்தின் கீழே இருந்தது. படுத்துத் தூங்க ஆயத்தமானதும், உலர்ந்த இலைகளின் சலசலப்பைக் கேட்ட கிருஷ்ணா, அதே நாகப்பாம்பு அவரை நோக்கி வருவதைக் கண்டார். அவரது குச்சியை எடுத்து வருமாறு நீலு, விஷ்ணு இருவருக்கும் குரல் கொடுத்தார். அவரது படுக்கையைச் சுற்றி இறுக்கமாக கொசு வலை இருந்ததால், பாம்பு உள்ளே நுழைய முடியவில்லை. கிருஷ்ணா அதை, கழியால் அடித்துக் கொன்றார். பாபாவின் எச்சரிக்கை அவரது உயிரைக் காப்பாற்றியது.

அவர் பாபாவுடன் இருந்த காலத்தில் 47 பாம்புகளைக் கொன்றதாக கிருஷ்ணா கூறினார்.

மெஹராபாத்திற்குத் திரும்பிச் செல்லும் பயணத்தை மேற்கொள்ள, மெஹர் பாபா, நீலப்பேருந்தை அஹமதுநகருக்கு ஓட்டிச்செல்ல ஸரோஷை தார்வாடுக்கு அழைத்தார். இந்தக் குழு 1941 நவம்பர் 27 வியாழக்கிழமை அன்று புறப்பட்டு, சத்தாராவில் பயணிகள் விடுதியில் இரவைக் கழித்தது. அங்கு, சாஞ்சி, நீலு, விஷ்ணு ஆகியோரின் முன்னிலையில் ஸரோஷிடம், மெஹர் பாபா, எழுத்துப்பலகையில் இவ்வாறு எடுத்துரைத்தார்:

**இது நீலப்பேருந்தின் இறுதி பயணம். இந்தப் பேருந்தில் என்னையும் மண்டலியையும் அதன் இறுதி பயணத்தில் ஓட்டிச் செல்வதால், நீங்கள் மிகப்பெரிய அதிர்ஷ்டசாலி. அதை நீங்கள் கட்டியெழுப்பி உருவாக்கினீர்கள், இப்போது அதன் இறுதி பயணத்தில் எங்களை அழைத்துச் செல்கிறீர்கள்.**

**இந்த நீலப்பேருந்து கிருஷ்ணரின் தேர் போன்றது, எனது வெளிப்பாட்டிற்குப் பிறகு மக்கள் அதை வணங்குவார்கள்! இந்தப் பேருந்து, நமக்கு நெருங்கியவர்களிடையே ஒரு குலுக்கல் முறையில் விற்கப்பட**

**வேண்டும், மேலும் அதன் வெற்றியாளர் அதை எந்தவொரு வணிக நன்மைக்காகவும், விற்பனை அல்லது வாடகைக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் பராமரிக்க வேண்டும்.**

**இந்தப் பேருந்து பெரிய அளவிலான முக்கியத்துவம் வாய்ந்தது, அதைப் பாதுகாப்பது அவசியம். இதன் மூலமாக நான் ஏராளமான பணிகளைச் செய்துள்ளேன், கடவுளை அதன் இறுதி சவாரியில் ஓட்டிச்செல்வது ஸரோஷின் மிகப்பெரிய அதிர்ஷ்டம்!**

சத்தாராவில் அன்று இரவு, தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பாபா-அன்பர்களுக்கு, குலுக்கல் குறித்த ஒரு சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டது.

மெஹர் பாபா மண்டலியுடன் மறுநாள், 1941 நவம்பர் 28 காலை 11:30 மணிக்கு மெஹராபாத்திற்குத் திரும்பி வந்தார். நீலப்பேருந்து குறித்த சுற்றறிக்கை, இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டது.

1941, நவம்பர் இறுதியில் மெஹராபாத் திரும்பிய பின்னர், பாபா அவரது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்தார்; ஆனால் இந்த முறை, அவர் வெவ்வேறு கடமைகள் வழங்கப்பட்ட மண்டலியை சந்திக்கத் தொடங்கினார். பெரும்பாலும் அவருடைய எதிர்கால சமாதி அறையிலேயே அமர்ந்து, அவரது ஆன்மீகப் பணிகளில் ஈடுபடுவதோடு, சில மணி நேரங்கள் ஏகாந்தவாசம் மேற்கொண்டார். ஆண்கள் அனைத்து பக்கங்களிலும் எவரும் சத்தமிடவோ அல்லது அனுமதியின்றி எல்லைக்குள் நுழையவோ முடியாமல் தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

சில நாட்களுக்காக, பூனாவிலிருந்து மெஹராபாத்திற்கு வந்திருந்த மெமோ, ஒரு கட்டத்தில் குல்மாயுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். 1941 டிசம்பர் 4 அன்று, பாபா மண்டலியிடம் கூறினார்: “**தந்தை ஷெரியார்ஜி இறைவனைத் தேடிய ஒரு சிறந்த ஆத்மா. அவர் மிகவும் நல்ல மனம் படைத்தவர், இயற்கையாக அமைதியை நாடியவர். ஆனால் ஷிரீன்மாயின் இயல்பு அதற்கு நேர் எதிரானது! நான் இரண்டு மனநிலையையும் சமப்படுத்திய ஒரு குணம் படைத்தவனாக இருக்க வேண்டும். நான் பொறுத்துக் கொள்ளும் தன்மை படைத்தவன், அதே வேளையில் தாயாரின் இயல்பு காரணமாக மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இருந்தும் ஷெரியார்ஜியைப் போலவே ஷிரீன்மாயும் விடுதலை பெற்று இரட்சிக்கப் படுவார்!**”

1941, டிசம்பர் 5ஆம் தேதி, மஹாத்மா காந்தியுடனான விஷயத்தை, சாஞ்சியுடன் விவாதித்த பாபா, பின்வரும் செய்தியை, காந்திக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தினார்:

**எந்தவிதமான சூழ்நிலையிலும், உங்கள் அரசியல் வாழ்க்கையை விட்டுக்கொடுக்க வேண்டி இருந்தாலும் கூட, ஏக இறைவனோடு ஒன்றி இருங்கள். விருப்பமின்றி பின்பற்றுபவர்கள் மீது அஹிம்சையை**

**கட்டாயப்படுத்த முயற்சிக்காதீர்கள், அல்லது அதை நிலைநாட்ட முயற்சி செய்யாதீர்கள், ஏனெனில் அது ஏற்கனவே நித்தியமாக நிறுவப்பட்டுள்ளது**.

டிசம்பர் 6ஆம் நாள், முழு மனதுடன் அவருக்குக் கீழ்ப்படியாத சிலரைப் பற்றி, பாபா குறிப்பிட்டார், "**அனைவரும் குழந்தைகளைப் போல, விளையாடி, குறும்புகள் செய்து, அழுது கண்ணீர் வடிக்கிறார்கள். பெற்றோர் அதையெல்லாம் பொறுத்துக் கொள்கிறார்கள்; அதனால் அவர்கள் குழந்தைகளை வீதிக்கு விரட்டுவதில்லை. அதுபோல நீங்கள் எல்லோரும் குழந்தைகள், ஒவ்வொருவரின் ஆயிரத்து ஒரு தற்போக்கு எண்ணங்களையும், பலவீனங்களையும் நான் பொறுத்துக்கொள்ள வேண்டும். உங்களை, குறிப்பாக எனது வட்டத்து சீடர்களை, நான் வெளியே தள்ள முடியாது**!"

அந்த நாளில் நாக்பூரிலிருந்து வந்த பப்பா ஜெஸவாலாவிற்கு மெஹராபாத் மேல்மலையில் கண்காணிப்பாளராகப் பணிபுரியும் கடமை வழங்கப்பட்டது. மஸ்துகளைத் தேடி அழைத்து வருவதற்காக, மாஸாஜி பண்டர்பூருக்கு அனுப்பப்பட்டார். சாஞ்சி அன்று மாலை புறப்பட்டுச் சென்றவர் மூன்று நாட்களுக்குப் பிறகு மெஹராபாத் திரும்பி வந்தார்.

பாபா, மெஹராபாத் திரும்பி வந்த பின்னர், 1941, டிசம்பர் 12 முதல் ஒவ்வொரு மாதமும் அதே தேதியில், துனியில் நெருப்பு வைக்குமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார். முன்பு, மழையை வரவழைக்கும் நோக்கத்தில் துனியில் நெருப்பேற்றப் பட்டது போல், இப்போதும் அதே காரணத்திற்காக இருக்கலாம் என மண்டலி நினைத்தனர். ஆனால் பாபாவின் விளக்கத்திற்கிணங்க, "**இம்முறை துனியில் நெருப்பு வைப்பது மழைக்காக அல்ல; இது எனது பணியின் ஒரு குறிப்பிட்ட சிறப்பு திட்டத்திற்கானது**" என்பது தெரியவந்தது.

வெகு விரைவில், இது போருடன் சம்பந்தப்பட்டது என்பதை அனைவரும் உணர்ந்தனர்; இது போரில் மிகவும் மோசமான ஒரு திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறது. உலகெங்கும் பரவி வரும் முறுகல் நிலையின் செய்திகளை, பாபா தொடர்ந்து கண்காணித்து வந்தார். 1941 டிசம்பர் மாதத்தில், உலகளவில் சூழ்நிலைகள் ஆபத்தானதாகவும் நம்பிக்கை அற்றதாகவும் தோன்றின. எல்லா நட்பு நாடுகளும் (ALLIES) - பிரிட்டன், ரஷ்யா மற்றும் சீனா - போரில் அடிவாங்கி தற்காப்புக்காக முயன்றன. எல்லா 'ஆக்ஸிஸ் மஹாசக்தி' (AXIS POWERS) நாடுகளும் - ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் - வெற்றிவாகை சூடின. மேற்கு ஐரோப்பா முழுவதையும் ஹிட்லர் எல்லாவிதத்திலும் கட்டுப்படுத்தினார்; மேலும் அவரது படைகள் நூற்றுக்கணக்கான மைல் தூரத்திற்கு ரஷ்யாவிற்குள் முன்னேறின; ரஷ்யா ஏறக்குறைய தோல்வியின் வாசலில் நின்றது. இத்தாலி, மத்தியதரைக் கடலில் ஆதிக்கம் செலுத்தியது, அதன் படைகள் வட ஆஃபிரிக்கா முழுவதும் திரண்டுச் சென்று, எகிப்து மற்றும்

ஸூயஸ் கால்வாயை (SUEZ CANAL) அச்சுறுத்தின. ஜப்பானியர்கள் சீனாவின் பெரும் பகுதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, இப்போது ஃபிலிப்பைன்ஸ் நாட்டைக் கடந்து, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் அலாஸ்காவை (ALASKA) நோக்கி முன்னேறத் தயாராகி வந்தன.

பிரிட்டன் சின்னாபின்னமாகத் தாக்கப்பட்டு இரத்தம் சிந்தியது; வானத்திலிருந்து இடைவிடாமல் குண்டு வீசப்பட்டு, அந்த நாடு பட்டினியால் அச்சுறுத்தப்பட்டது. ரஷ்யா முழங்கால்களில் தாக்கப்பட்டது, அதன் நகரங்களும் தொழிற்சாலைகளும் அழிக்கப்பட்டன, படைகளும் சிதைந்தன. ஆகவே, 1941 டிசம்பர் மாதத்திற்குள், பாபா முன்னறிவித்தபடி, ஜெர்மனியும் ஜப்பானும் உலகின் முக்கால் அளவு பகுதியை, தங்கள் கைவசம் வைத்துக் கொள்ளும் என்று தோன்றியது. அமெரிக்கா இன்னும் நடுநிலையாக இருந்தது - ஆனால் அதில் மாற்றம் ஏற்படும்.

1941, டிசம்பர் 7 அன்று, ‘பேர்ல் ஹார்பர்’ (PEARL HARBOR) தாக்கப்பட்டது; அமெரிக்கா, கிரேட் பிரிட்டன் இரு நாடுகளையும் எதிர்த்து ஜப்பான் போரை அறிவித்தது. நான்கு நாட்களுக்குப் பின்னர், 11ஆம் தேதி ஜெர்மனி, அமெரிக்கா மீது போரை அறிவித்தது. அதே நாளில், பாபா, ஒரு வாரம் தண்ணீர் மற்றும் லேசான தேநீர் மட்டும் அருந்தி உபவாசம் கடைப்பிடிக்கத் தொடங்கினார்; டிசம்பர் 12ஆம் தேதி ஒரு வேளை உணவு உண்டு உபவாசம் மேற்கொள்ளும்படி அனைத்து இடங்களிலும் வாழ்ந்த அன்பர்களுக்கு அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதற்கிடையில், டிசம்பர் 7ஆம் நாள், மாஸாஜி பண்டர்பூரிலிருந்து இரண்டு மஸ்துகளுடன் வந்தார்; மெமோ, பெரின் மற்றும் அவரது குழந்தைகள் அன்று பிற்பகலில் பூனாவிலிருந்து மெஹராபாத் வந்தனர். நான்கு நாட்களுக்குப் பின்னர் அர்னவாஸ், நர்கிஸ் மற்றும் எரச் அவரது குடும்பத்தினருடன் 12ஆம் தேதி பெங்களூரிலிருந்தும், மறுநாள் மெஹரு, நாகு ஆகியோரும் வந்தனர்.

12ஆம் தேதி, பாபா, மெஹராபாத் மேல் மலையிலிருந்து மாலை 6:45 மணிக்கு வந்து வேப்பமரத்தின் கீழே, துனி அருகே நின்றார். பாபாவின் முந்தைய ஏகாந்தவாசத்தின் போது பயன்படுத்திய மேசை அறையை அங்கு நகர்த்தி அவரது புகைப்படம் அதில் வைக்கப்பட்டிருந்தது.

பாபாவின் முன்னிலையில், குஸ்தாஜி முழங்கால்களில் நின்று, ஆரத்தி, பிரார்த்தனை எதுவும் இல்லாமல் துனியில் நெருப்பு ஏற்றினார். பாபா, மண்டலிக்கு அவரது தரிசனத்தை அனுமதிக்கவில்லை. அவர் ஐந்து நிமிடங்கள் மட்டுமே அங்கு இருந்தார், ஆனால் அப்போது சில அசாதாரண கருத்துக்களைத் தெரிவித்தார்.

பிளீடரைப் பார்த்து, “**நீங்கள் கடவுளைக் காண்பீர்கள்**!” என்றார்.

சிறிது நேரம் கழித்து பாபா எழுத்துப்பலகையில் “**கடவுள் கடவுளைக் காண்பார்**!” என்று சுட்டிக்காட்டினார்.



ஓர் ஏழை அல்லது ஒரு மஸ்துடன் பாபா
**(**BABA WITH A POOR PERSON OR A MAST**)**

பின்னர் அவர், "**நீங்கள், எனது மண்டலி அனைவரும் கடவுளைக் காண்பீர்கள்!**" எனக் கூறி "**ஆமென்**" என்று மீண்டும் கூறும்படி அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

துனியை ஏற்றியதும், பாபா உடனடியாக மெஹராபாத் மேல்மலைக்குத் திரும்பிச் சென்று, ஒரு வெள்ளைத் துணியால் உடல் முழுவதையும் மறைத்துக்கொண்டு மலையிலிருந்து மறுபடியும் இறங்கி வந்து துனியின் அருகே நின்றார். மண்டலியைத் தவிர, வேறு எவரும் அவரைப் பார்க்கவில்லை, மேலும், நிகழ்ச்சி நிறைவுற்றதும் பாபா வந்தது போலவே மேல்மலைக்குச் சென்றார்.

'**அன்று முதல், ஒவ்வொரு மாதமும் 12ஆம் தேதி, துனியை எரியவிட வேண்டும்**' என்று பாபா உத்தரவிட்டார்; அதற்கேற்ப இன்று வரை, துனியில் நெருப்பேற்றப்பட்டு வருகிறது, எதிர்காலத்திலும் இது தொடரும்.

பாபா, மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார்; இந்த சந்தர்ப்பத்தில் துனி எரிவதைக் குறித்து பாபா சுட்டிக்காட்டினார். கடந்த காலங்களைப் போல், இன்று, இது மழைக்காக அல்ல, ஆனால் சில திட்டவட்டமான நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, ஒருவேளை அவர் துனி வழியாக உலக நிகழ்வுகளுக்கு விரைவான ஓர் உந்துதலை அளிப்பதாக இருக்கும். பாபா, அவரது சுய விருப்பப்படி துனியை எரிய விடுமாறு பரிந்துரைத்தார்.

1941 டிசம்பர் 13 அன்று, மேலும் நல்ல மகிழ்ச்சியான மனநிலையில் இருந்த பாபா, தற்போதைய உலக நிலைமை மற்றும் வெவ்வேறு தலைவர்கள் ஆற்றிய அவரவர் பங்கை குறித்துக் கருத்துத் தெரிவித்தார்:

**அனைத்து தலைவர்களிலும் ஹிட்லர் மிகப் பெரிய பங்கை வகிக்கிறார். அவரது பெயர் பல நூற்றாண்டுகளுக்கு அழியாமல் இருக்கும். அவர் ஒரே நேரத்தில் வீரனாகவும், வில்லனாகவும் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்; இதில், இன்னும் அதிசயம் என்னவெனில், இது போன்ற சூழ்நிலைகள், கவலைகளின் சுமையைத் தாங்க முடியாமல் வேறு எவரையும் பைத்தியமாக்கி இருக்கும்; ஒவ்வொரு கணமும் அவரது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் எதிரிகளால்** (மற்றும் உளவு பார்ப்பவர்களால்) **சூழப்பட்டு இருப்பதால், அவர் ஏற்கனவே கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் கடவுளின் அன்புப் பார்வையின் கீழ், அவருக்கென நிர்ணயிக்கப்பட்ட பாகத்தை அவர் மிகவும் நம்பகத்தன்மையுடனும், வெகு சிறப்பாகவும் செய்கிறார்.**

**அவர் மீதான இந்த இறை அருளின் காரணமாக, அவர் ஒரு நேர்மையான, வலுவான நம்பிக்கை படைத்தவராக உருவாக்கப்பட்டிருக்கிறார், இதனால் அவர் என்ன செய்தாலும் அது மனிதகுலத்தின் மேம்பாட்டிற்கும், நன்மைக்கும் என்று அவர் கருதுகிறார், எனவே** (அது எவ்வளவு தவறாகக் கருதப்பட்டாலும்) **அது சரியானதாக**

இருக்கும். ஐரோப்பாவின் பிற நாடுகளுக்கு எதிராகவும், இப்போது ரஷ்யாவிற்கு எதிரான சூழ்ச்சிகளும், ராஜதந்திர நகர்வுகளும் கூட நியாயப்படுத்தப் படுவதாக அவர் கருதுகிறார். இல்லையெனில், கடவுளின் விளையாட்டு, திட்டமிட்டபடி எவ்வாறு தொடர முடியும்?

"அவர் ஆன்மீக வரிசையில் ஒரு முகவரா?" என்று ஒருவர் கேட்டதற்கு,

அவர் ஒரு முகவர் அல்ல, ஆனால் ஒரு நடிகர் - நியமிக்கப்பட்ட பாத்திரத்தில் சரியாக செயல்படுபவர். அவரிடத்தில் அனைத்து ஒழுங்கமைக்கும் அதிகாரங்களும் உள்ளன! அவரது சாதனைகளைப் பாருங்கள். பிரிட்டன், ரஷ்யா, இப்போது அமெரிக்கா போன்ற வலிமை மிக்க எதிரிகளுக்கு எதிராக, ஏன் முழு உலகத்திற்கும் எதிராக, தனியாகப் போராடுவது, உண்மையிலேயே மிகச் சிறந்தது!

ஆனால் அவர் ஒரு முட்டாள், பைத்தியம். அவரது சகாக்கள் - கோபல்ஸ் (GOEBBELS), கோயரிங் (GOERING) - மிகவும் நம்பிக்கையற்றவர்கள் (தீயவர்கள்). அவர் காலை வாரிவிட்டார்கள்.

வின்ஸ்டன் சர்ச்சிலைக் குறிப்பிட்டு, மெஹர் பாபா கருத்துரைத்தார்:

லாயிட் ஜார்ஜ் (LL0YD GEORGE) போன்ற ஒரு விரும்பத்தக்க அரசியல்வாதியாக இல்லாமல் இருந்தாலும், சர்ச்சில், இந்த நேரத்தில் அந்தப் பதவியை வகிப்பதற்கும், கடுமையான பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கும் தகுந்த மனிதர். ஆனால் அவர் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், இங்கிலாந்து ஏற்கனவே ஜெர்மனியிடம் சரணடைந்திருக்கும். சர்ச்சில் அவரது நாட்டில் எழுச்சியுற செய்த எதிர்க்கும் தைரியமும், தீரமும், தூண்டிவிட்ட துணிச்சலும் உண்மையிலேயே குறிப்பிடத்தக்க சாதனைகள்.

ஸ்டாலின் தனது பெரிய மீசையுடன் மிகவும் தந்திரமான மனிதர். இந்த மாபெரும் உலக நாடக மேடையில் அவர் ஒரு சரியான நடிகராக நிரூபிக்கப்பட்டுள்ளார்; தனது பங்கை மிகச் சிறப்பாக நடித்து, ஹிட்லருக்கு, மிகவும் வியக்கவைக்கும் நிலைப்பாட்டையும், ஜெர்மன் இராணுவத்தின் 2,000 மைல் முன் தாக்குதல்களுக்குத் தேவையான எதிர்ப்பையும் கொடுத்தார். இறுதி தீர்வில், ரஷ்யா முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது, மேலும் அமெரிக்கா அனைத்தையும் தீர்மானிக்கும் காரணியாக விளங்கும்.

ஆனால் ஏழை முஸோலினியின் நிலை பரிதாபகரமானது. உண்மையில் அனைத்தும் ஒழிக்கப்பட்டுவிட்டது! அவர் இப்போது ஹிட்லருக்குத் துணை நின்று, தப்பித்தால் போதும் என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

உலக குழப்ப நிலை முழுமையடைந்து, அனைத்தும் ஏடாகூடமாகவும், தலைகீழாகவும் மாறும், மேலும் எவருக்கும் என்ன செய்வது என்றே புரிந்து கொள்ள முடியாத நிலை உருவாகும். 'என்னதான் தீர்வு' என்ற கேள்விக்குறியை எங்கும் காணலாம். வடக்கிலிருந்து மக்கள் தெற்கேயும், மேற்கில் இருப்பவர்கள் கிழக்கு நோக்கியும் நகர்ந்து, எல்லோரும் கலந்து விடுவார்கள். நிலத்தில் அல்லது நீரில், நேரடியாக

**அல்லது மறைமுகமாக, போரின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாகவோ அல்லது சுதந்திரமாகவோ இருக்கும் அளவிற்கு எந்த இடமும் இருக்காது. அனைவரும் இதில் ஈடுபடுவார்கள், பாதிக்கப்படுவார்கள், துன்பப்படுவார்கள்.**

பாபா மேலும் கூறினார்:

**உலகில் தற்போது நிகழும் அனைத்து குழப்பங்களுக்குப் பின்னர், ஒரு முழுமையான மாற்றம் ஏற்படும். அனைவரையும் சமமாக பாவிக்கும் ஒரு புதிய உலக ஒழுங்கு நிலைநாட்டப்படும். இது பொருளுலகைச் சார்ந்த 'பொதுவுடைமை', 'சமூகவுடைமை', 'பொதுவுடைமை எதிர்ப்பு கொள்கை' போன்ற எந்த அமைப்பாகவும் இருக்காது. எனது திட்டம் ஆன்மீக அடிப்படையில் இருக்கும், அதில் ஏழை, பணக்காரர்கள் என்றில்லாமல் அனைவருக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும். இவ்வளவு காலமாக அதிகாரத்தின் ஆதிக்கத்தை அனுபவித்த வல்லரசு நாடுகள் இப்போது வீழ்ச்சியடைந்து பிற நாடுகளுடன் இணையாக இருக்கும்.**

அன்று பிற்பகல், மெஹர் பாபா அனைத்து பெண்மணிகளுடன் மூன்று பேருந்துகளில் அஹமதுநகருக்கு இரண்டு திரைப்படங்களைப் பார்க்கச் சென்றார். பாபா உபவாசம் மேற்கொண்டதால், அவர் சற்று கதகதப்பாகவும், சிரமமாகவும் உணர்ந்தார்; ஒரே ஒரு திரைப்படத்தைப் பார்த்துவிட்டு திரும்பிச் சென்றார்.

அதே நாளில், மும்பையிலிருந்த காக்கா, மருத்துவ கல்லூரியிலிருந்து கோஹெரையும் அவரது தோழியையும் மெஹராபாத் அழைத்து வந்தார். ராவ்ஸாஹேப் அவரது மனைவியுடன் வந்து, புறப்படுவதற்கு முன்பு பாபாவை சந்தித்து விடைபெற்றார்.

டிசம்பர் 19 அன்று, காக்கா, எரச், பைதூல், ஸவக் ஆகியோருடன் பாபா, பண்டர்பூர், மீரஜ், ஸாங்ளி போன்ற இடங்களுக்கு மஸ்துகளைத் தொடர்பு கொள்ளப் புறப்பட்டார். இந்தப் புனிதமான பண்டர்பூர் நகரத்தின் தகன மைதானத்தில் வசித்து வந்த பாப்பு மஹர் (BAPU MAHAR) என்றழைக்கப்பட்ட மஸ்த், பிறப்பால் ஹரிஜன், நிர்வாண நிலையில் இருந்த இவரை மட்டும் பாபா தொடர்பு கொண்டார்.

மெஹர் பாபா, நான்கு நாட்களுக்குப் பின்னர் 23ஆம் தேதி மெஹராபாத் திரும்பிச் சென்றார். பாபா இந்தப் பயணத்தில் புறப்பட்ட வேளையில், அவரை எவரும் பார்க்கவோ அல்லது அடையாளம் கண்டு கொள்ளவோ முடியாத வகையில் அவர் சென்றார்; இதனால் பாபாவின் ஏகாந்தவாசத்தில் எந்த இடையூறும் ஏற்படவில்லை.

மெஹர் பாபா அவரது மஸ்த் பயணத்திலிருந்து திரும்பி வந்த அதே நாளில், எலிஸபெத்தின் நாய் கிப்பியின் (KIPPY) அஸ்தி அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டது. அதை வாரியரின் (WARRIOR) சமாதிக்கு அருகில் புதைத்து, அதன் மேல் அடையாளக் கல் ஒன்று எழுப்பப்பட்டது.

அடுத்த நாள், 1941 டிசம்பர் 24 புதன்கிழமை, உபாஸனி மஹாராஜ் அவரது பௌதீக உடலைத் துறந்து விட்டதாகத் தொலைத்தந்தி வந்தது. ஸரோஷ் உடனடியாக மெஹராபாத்திற்கு, பிற்பகல் இரண்டு மணிக்கு வந்து மண்டலிக்குத் தகவல் தெரிவித்தார். விஷ்ணு, ஸரோஷ் இருவரும் பாபாவிற்குத் தெரிவிக்க மேல்மலைக்குச் சென்றனர். அவர்களைப் பார்த்ததும், பாபா வாசலிலிருந்து வெளியே வந்து, செய்தியை பாபாவிடம் தெரிவிக்கும் முன்னர், அவர் அமைதியாக, "**இப்படி நடந்ததா?**" என்று கேட்டது அவர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. அவர் செய்தியை எதிர்பார்த்து இருந்தது போலத் தோன்றியது.

அப்போது ஸரோஷ், "உபாஸனி மஹாராஜ் உடலைத் துறந்து விட்டார்" என்றார்.

சோகம் அல்லது ஆச்சரியத்தின் அறிகுறி எதையும் வெளிப்படுத்தாமல் பாபா, "**நானும் அதைத்தான் சொன்னேன்**" என்று பதிலளித்தார்.

பெண்டு, விஷ்ணு, காளேமாமா, சகன், ஸரோஷ், சாஞ்சி (அதே நாளில் மும்பையிலிருந்து கோஹெருடன் வந்திருந்தவர்), குல்மாய் ஆகியோரை டிசம்பர் 25ஆம் நாள் நடந்த இறுதி சடங்குகளில் பங்கேற்க ஸாக்கோரிக்கு அனுப்பி வைத்தார். மஹாராஜ் ஸாக்கோரியில் அடக்கம் செய்யப்பட்டார்; இறுதி சடங்கு முடிந்ததும் அனைவரும் அன்றிரவு பத்து மணிக்கு மெஹராபாத்திற்கு வந்தனர். அதே நாள் மெஹராபாத் வந்த டாக்டர் தேஷ்முக் காலதாமதமானதால் ஸாக்கோரிக்குச் செல்லாமல் பாபாவின் அருகில் இருந்தார்.

26ஆம் தேதி, பாபா மேல்மலையின் மஸ்த் ஆசிரமத்திற்கு மண்டலியை அழைத்து அண்மையில் நடந்த நிகழ்வு குறித்து விவாதித்தார். 1941 டிசம்பர் மற்றும் 1942 ஜனவரி, பிப்ரவரி இந்த மூன்று மாதங்களில், குறிப்பிட்ட தேதிகளில், எப்போது வேண்டுமானாலும் மஹாராஜ் 'உடலைத் துறப்பார்' என்று பாபா, குல்மாய்க்கு அறிவுறுத்தி இருந்தார். இந்த நேர இடைவெளிகளில் டிசம்பர் 19-24 என்பது முதல் கட்டமாகும்; அதன்படி குல்மாய் டிசம்பர் 19ஆம் நாள் ஸாக்கோரியில் தங்கியிருந்தார். ஆனால், டிசம்பர் 22ஆம் தேதி, மஹாராஜ் ஸத்தானா (SATANA) நகருக்குச் (அவரது பிறந்த இடம்) சென்று, அங்கு அவர் அந்த மாத இறுதி வரை தங்கப்போவதாகக் கூறியதால், குல்மாய், அஹமதுநகருக்குத் திரும்பி வந்தார்; இருப்பினும், மஹாராஜ் அடுத்த நாளே திரும்பி வந்து, மார்பு வலி எனப் புகார் செய்து, மறுநாள் உடலைத் துறந்தார்.

பாபா விரும்பியபடி, மஹாராஜின் கடைசி நேரத்தில் ஸாக்கோரியில் இல்லாததை எண்ணி குல்மாய் வருந்தியபோது, பாபா அவரை ஆறுதல் படுத்தினார், "**கவலைப்படாதீர்கள், அது அப்படியே நடக்க வேண்டியிருந்தது.**"

பின்பு பாபா கருத்துத் தெரிவித்தார்:

**நான், எனது மௌனத்தைக் கலைப்பதும், உபாஸனி மஹாராஜ் காலமானதைப் போலத் திடீரென, எதிர்பாராததாக இருக்கும். இருப்பினும், இரண்டிற்கும் இடையேயான வேறுபாடு பொதுவான 'உணர்வில்' இருக்கும்;**

**நான் பேசும்போது இது மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். அனைவரும் அதை உணருவார்கள்.**

**இது பூகம்பம் போல் உலகை உலுக்கும். உலகின் பல்வேறு பகுதிகளில் மக்கள் வெவ்வேறு அளவுகளில் அந்த அதிர்ச்சியை உணருவார்கள். இவ்வாறு அவர்கள் அதை வேறு வேறு வழிகளில் அனுபவிப்பார்கள்.**

**மஹாராஜின் மரணம் குறித்த இந்தச் செய்தியில் நான் கவலை அடையாமல், மாறாக மகிழ்ச்சியாக உணர்கிறேன், ஏனெனில் அவருடைய பணி முடிந்த பின்னும் அவரது உடலைத் தக்க வைத்துக் கொள்வதற்கான சுமையிலிருந்து அவர் இப்போது விடுபடுகிறார் என்பதையும், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட என்னுடனான சந்திப்பு தஹிகாவ்மில் நடந்ததையும் நான் அறிவேன்.**

உபாஸனி மஹாராஜின் நினைவாக, அனைத்து இடங்களிலும் வாழும் ஆண், பெண் மண்டலி மற்றும் அவரது அன்பர்கள், 1942, ஜனவரி 13 அன்று, இரண்டு முறை தேநீர் மட்டும் அருந்தி, முழுமையாக உபவாசம் மேற்கொள்ளவும், 14ஆம் தேதி பொது விருந்து அளிக்கவும் பாபா அறிவுறுத்தினார். மஹாராஜின் நினைவாக ஜனவரி 12ஆம் நாள் துனியில் நெருப்பை ஏற்றி அதை 48 மணி நேரம் எரிய விட வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

மினூ பரூச்சா (MINOO BARUCHA) என்ற பார்சி அவரது முப்பது வயதுகளில் நாசிக்கில் தங்கியிருந்தபோது பாபாவின் தொடர்பில் வந்தார். இதற்குப் பிறகு, மினூ ஸாக்கோரிக்குச் சென்று, உபாஸனி மஹாராஜின் தரிசனத்தைப் பெற்றார்; மஹாராஜுடன் மிகுந்த அர்ப்பணிப்புடன் இருந்தார்; மஹாராஜ் நாசிக் வரும்போது சில நேரங்களில் மினூ இல்லத்திற்கு விஜயம் செய்து வந்தார். ராம்ஜூ, மினூ இருவரும் இறுதி சடங்கிற்காக ஸாக்கோரிக்குச் சென்றிருந்தனர். சில நாட்களுக்குப் பிறகு மினூ அவரது மனைவி ஐமாயுடன் (AIMAI - ஒரு காலத்தில் ஸாக்கோரியில் கன்யாவாக இருந்தவர்) மெஹராபாத்தில் பாபாவை சந்திக்க அழைக்கப்பட்டனர்.

பாபா, மெஹராபாத் மேல்மலையில் அவரது அறை வாயிலுக்கு வெளியே அமர்ந்து, "**மஹாராஜுக்கும் எனக்கும் சிறிதளவும் வித்தியாசம் இல்லை**" என்று மினூவிற்கு பாபா உறுதியளித்தார்.

இதனால் ஆறுதல் அடைந்த மினூ, "மஹாராஜின் இடத்தை (ஐந்து சத்குருக்களில் ஒருவராக) ஏற்றுக்கொள்ளப் போவது யார்?" என்று கேட்டார்.

"**திபெத்திற்கு அருகில் வாழும் ஒரு நபர்**" என்று பாபா பதிலளித்தார்.

மானேக் தர்ஷா மேத்தா (MANEK DARASHA MEHTA) என்பவர், மும்பையில், 'ஆன்மீக ஆர்வலர்கள் குழு' (GROUP OF SPIRITUAL SEEKERS) ஒன்றின் தலைவராக இருந்தார்; இது 'ஜப் மண்டல் குழு' (JAP MANDAL) என்று அழைக்கப்பட்டது. மெஹர்

பாபாவின் ஐந்து சத்குருக்களின் தலைமையகங்களுக்கும் இந்தக் குழு யாத்திரை செல்லத் திட்டமிட்டிருந்தது. காக்கா பாரியா, மேத்தா உட்பட குழுவில் நான்கு பேரை 1941 டிசம்பர் 28 ஞாயிற்றுக்கிழமை மெஹராபாத்திற்கு அழைத்து வந்து, இந்த விஷயத்தை அவர்கள் (இதற்கு முன்பு சந்திக்காத) பாபாவுடன் விவாதித்தனர். இந்த யோசனை சிறப்பான ஒன்றாகக் கருதப்படவில்லை. பாபாவும் முதலில் முழுக் குழுவையும் மெஹராபாத்திற்கு வர அனுமதிக்க மறுத்துவிட்டார், ஆனால் பின்னர், அவர்கள் மும்பையிலிருந்து நேரடியாக மெஹராபாத்திற்கு வந்து அதுபோலவே அங்குத் திரும்பிச் செல்வதாக இருந்தால், அவர்கள் வந்து, தூரத்திலிருந்து தரிசனம் செய்யலாம் என்று கூறினார்.

பாபாவை சந்தித்த பிறகு, மானேக் மேத்தா, சாஞ்சியிடம், மெஹர் பாபா, இக்காலகட்டத்தின் அவதார புருஷர் என்று தான் திடமாக நம்புவதாகக் கூறினார். “அவரது கூற்றுக்கள் தொடர்பாக எனது மனம் முன்னர் எதிர்கொண்ட அனைத்து சந்தேகமும் முற்றிலும் அகற்றப்பட்டு விட்டது” என்று அவர் கூறினார்.

அந்த நாள் நீலப்பேருந்திற்கான குலுக்கல் முறையில் லாட்டரி எடுப்பதற்கான தினமாக நிர்ணயிக்கப்பட்டது. பாபாவின் நெருங்கிய அன்பர்கள் நூறு பேர் தலா ரூ 50 நன்கொடைகளை அனுப்பியிருந்தனர். அன்று பாபா, மண்டலிக்கு “**இந்தப் பேருந்து, மெஹராபாத்தில் இருந்து தொலை தூரத்தில் வாழும் மண்டலிக்கு வெளியே உள்ள ஒருவரிடம் செல்லும்**” என்று சுட்டிக்காட்டினார்.

அன்று பிற்பகல் ஐந்து மணியளவில் மெஹர் பாபா, மஸ்த் ஆசிரமத்தில் லாட்டரி குலுக்கல் சீட்டை அவரே எடுத்தார்; அவருடைய வார்த்தைகள் உண்மையாகி, டெல்லியைச் சேர்ந்த கேக்கி தேசாய் அதை வென்றார். கேக்கிக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், அவர் நீலப்பேருந்தை அவரது ஆழ் இதயத்திலிருந்து பாபாவிற்கு வழங்கி. தனது மரியாதையை வெளிப்படுத்தினார். பாபா இந்த மனோபாவ செயலை ஏற்றுக்கொண்டார்; நீலப்பேருந்து இறுதியாக அஹமதுநகரில் ஸரோஷிடம் ஒப்படைக்கப்பட்ட போது, அவர் அதை மாற்றியமைத்தார்.



**ஏக இறைவனுள்**

**இருக்கும்**

**பலரை நேசிப்பதை**

**விட்டு**

**ஏக இறைவனான**

**என்னை**

**மட்டும் நாடு.**



-அவதார் மெஹர் பாபா